# நாம் அறிந்த கி.வா.ஜ.

'அனந்தன்'
ஓய்வு பெற்ற - துணைச் செயலாளர் -
விவாதப் பதிப்பாளர் -
சட்டப்பேரவை

**அல்லயன்ஸ் கம்பெனி**
244, ராமகிருஷ்ணா மடம் சாலை
தபாற் பெட்டி எண் 617
மயிலாப்பூர் :: சென்னை - 600 004

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✱✱✱

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✱✱✱

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

## BIBLIOGRAPHICAL DATA

| | | |
|---|---|---|
| Title of the Book | : | Naam Arintha Ki. Va. Ja. |
| Author | : | 'Ananthan'<br>G.S. Ananthanarayanan M.A.<br>Retd - Deputy Secretary<br>(Editor) Tamilnadu<br>Legislative Assembly |
| Language | : | Tamil |
| Edition | : | First Edition |
| Date of Publication | : | December 1990 |
| Copy Right Holder | : | Publisher |
| Paper used | : | 10·9kg.D/Cr.white printing |
| Size of the book | : | 18.5 cms × 12.5 cms |
| Printing point used | : | 10 point |
| Number of pages | : | 480 Pages |
| Number of Copies | : | 1,100 Copies |
| Artist | : | Latha |
| Printer | : | Bismi Printers, Madras - 5. |
| Binding | : | Card Board Binding |
| Price | : | Rs. 50 - 00 |
| Publisher (with full address) | : | The Alliance Company<br>Post Box No. 617<br>244, R. K. Mutt Road<br>Mylapore, Madras-600 004<br>Phone - 7 1 3 1 4 |
| Subject | : | Biography |

## நூற்றாண்டை நோக்கி...

"தமிழில் நல்ல நூல்களை வெளியிட்டு வரும் அல்லயன்ஸ் ஸ்தாபகர் ஸ்ரீ.வி.குப்புஸ்வாமி ஐயரை நான் பாராட்டுகின்றேன்."

—மகாத்மா காந்தி

"நீதிகளைக் கற்பிக்கும் சிறு கதைகளையும், பல விஷயங்களையும் எளிய அழகிய நடையில் வெளியிட்டு வரும் அல்லயன்ஸாரை நான் பாராட்டுகிறேன்."

—மஹா மஹோபாத்தியாய Dr. உ. வே. சாமிநாத ஐயர்

"Books published by Alliance Company are highly Popular Books."

Rt. Hon' ble V. S. Srinivasa Sastri

"தமிழில் பல அழகிய புத்தகங்களை வெளியிட்டு வரும் அல்லயன்ஸாருக்கு நன்றி செலுத்தி அவர்களைத் தமிழ் மக்கள் ஆதரிக்க வேண்டும் என விரும்புகிறேன்."

—சக்கரவர்த்தி ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார்

"அல்லயன்ஸ் கம்பெனியார் நல்ல நூல்களை வெளியிடுவதில் தேர்ந்தவர்கள். அவர்களுக்குத் தமிழ் நாட்டார் தக்க ஊக்கம் தர வேண்டும் என விரும்புகிறேன்."

—தியாகி சத்தியமூர்த்தி

"மயிலை அல்லயன்ஸ் கம்பெனியாரின் வெளியீட்டுத் திறத்தை ஈண்டு விரித்துக் கூற வேண்டியதில்லை. அதை நாடறியும். அல்லயன்ஸ் கம்பெனியாரால் வெளியிடப் பெற்ற நூல்கள் யாவும் தமிழ் நாட்டுக்குப் பல வழிகளிலும் பயன் விளைத்து வருதல் கண்கூடு. நாட்டு நலங் கருதி ஒழுங்கு முறையில் உழைக்கும் அவர்களுக்கு நாடு கடமைப் படுவதாக."

—திரு. வி. க.

# பண்பின் உருவம்

முயற்சி என்பது இன்றியமையாத ஒன்றுதான் என்றாலும் இயல்பாகவே ஆற்றல் படைத்தவர்களுக்கு அதைவிடப் பெருமை தருவது திடமான தெய்வபக்திதான். இதற்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர், என் போன்றோர்க்குத் தமிழ் ஆசானாகவும், அதே சமயத்தில் 'கலைமகள்' பத்திரிகை ஆசிரியராகவும் திகழ்ந்த கி.வா.ஜ. அவர்களே. இது வெறும் புகழ்ச்சி இல்லை; அவருடன் ஐம்பது ஆண்டுகள் உதவி ஆசிரியனாகவும், அதே நிறுவனத்தின் மாதக் சதம்பமான 'மஞ்சரி'யின் துணை ஆசிரியனாகவும் தலைமை ஆசிரியனாகவும் இருந்து பழகியதால் அறிந்த உண்மை.

தனித்தமிழ் வித்துவான் தேர்வுக்காக அவரிடம் சங்க இலக்கிய-இலக்கணங்களை எங்கள் அலுவலக இடைவேளை ஓய்வு நேரத்தில் பாடங் கேட்கும்போது மிகத் தெளிவாக எனக்கு எடுத்துரைப்பார். கலைமகளைத் தொடங்கிய பெரியவரான ரா. நாராயண சாமி ஐயர் மிக்க ஆர்வமுடன் இதைக் கவனித்து மென்னகை புரிவார். அந்த நாளில் தெய்வ வழிபாடு பற்றி அக்கறை கொள்ளாத வாலிப நிலையில் இருந்தேன். ஒரு சமயம் 'கந்த புராணம்' பாடஞ் சொல்லும்போது கி.வா.ஜ., அவர்களின் கண்களினின்று நீர் தாரைதாரை யாக வழிவதைக் கண்டு திகைத்துவிட்டேன்; ''ஏன், ஐயா அழுகிறீர்கள்?'' என்று கேட்டேன். அவர் தம் கண்களைத் துடைத்துக்கொண்டு சற்றே சிரித்தபடி, ''முருகனது திருவுருவத் தோற்றத்தைக் கச்சியப்பர் வர்ணிப்பதைக் கேட்டாயே; அதன் விளைவு தான் இது'' என்னும்போதுதான், எந்தவித உணர்ச்சியு மற்ற மரக்கட்டை போன்ற என் நிலையை உணர்ந்து

வெட்கினேன். "அநுபவம் ஏற்பட ஏற்பட உனக்கும் இந்த உணர்வு பிறக்கும்; அதற்கு இன்னும் காலம் வரவில்லை" என்றார். இன்று முதுமைப் பருவத்தில் அவர் சொன்னதன் உண்மையை நன்கு உணர்கிறேன். தேவார - திருவாசக - திவ்வியப் பிரபந்தப் பாடல்களும் சரி, சங்கீத மும்மணிகள் போன்றோரின் கீர்த்தனங்களும் சரி, என்னை மெய்ம் மறக்கச் செய்கின்றன; 'அருட்பெருஞ்சோதி தனிப்பெருங் கருணை' எனும் வாசகத்தின் உட்பொருளைக் கார்டினல் ந்யூமனின் 'Lead Kindly Light' என்ற ஆங்கிலப் பாடலில் கண்டு பேருவகை கொள்கிறேன். இதற்காகவெல்லாம் நான் என்றென்றும் கி.வா.ஜ-அவர்களுக்குக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அவருடைய குடும்பத்தில் ஒருவனாக நான் பழக நேர்ந்தபோது, ஆஸ்த்மாவினால் துன்புற்ற எனக்கும் அவருடைய சகதர்மிணி, சகோதரனாகவே என்னைக் கருதி எளிதில் ஜீரணிக்கக்கூடிய உணவு வகைகளை ஆக்கித் தந்து உதவியதையும், கி.வா.ஜ-அவர்களின் பெற்றோரும் தம்பியும் தங்கையும், புதல்வர்களான சாமிநாதன், குமார நாதன், முருகன் யாவரும் என்னைத் தம்மில் ஒருவனாகவே எண்ணி நடத்தியதையும் என்றென்றும் மறவேன்.

எம். ஏ., பட்டம் எனக்குக் கிடைப்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டதே கி.வா.ஜ-அவர்களால்தான். அந்தத் தேர்வில் அவர் யாரிடம் ஆங்கிலப் பாடம் கேட்டாரோ, அதே மாநிலக் கல்லூரித் துணைப் பேராசிரியர் ரா. ஸ்ரீ. தேசி கனிடம் நானும் நாலைந்து ஆண்டுகளுக்குப் பின்பு பயில நேர்ந்தது என் பாக்கியமே. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களையும், டாக்டர் சாமிநாதையரவர்களையும் வாகீசகலாநிதி கி.வா.ஜ-அவர்களையும் உள்ளிட்ட மூன்று தலைமுறை ஆசிரிய—மாணக்கர் பரம்பரையானது தமிழை வளர்த்த பாங்கை இந்தச் சுவையான வரலாற்றின் மூலம் நமக்கு அளித்த அன்பர் திரு. அனந்தனும் கி.வா.ஜ-அவர்களிடம்

தமிழ் பயின்று, பின்பு எம். ஏ., தேறியவர்தாம் என்பதை அறிந்து மகிழ்கிறேன்.

இங்கே முக்கியமாக ஒன்றைக் குறிப்பிட வேண்டும்: ஒரு காலத்தில் 'விவேக போதினி' என்ற சிறந்த தமிழ்ப் பத்திரிகையை நடத்தி வந்தவர் அமரர் அல்லயன்ஸ் வி. குப்புசாமி ஐயர்; 'கலைமகள்' தொடங்கிய சமயம் அதன் வளர்ச்சிக்காகப் பல ஊர்களுக்குச் சென்று சந்தாதாரர்களைச் சேர்த்தவர் அவர். 1938-முதல் அவர், தம் திருவனவெளியீடுகளின் மூலம் எங்களைப் போன்ற தமிழ் எழுத்தாளர்களின் சிறுகதை, நாவல், மொழி பெயர்ப்பு நூல்களை மலிவுவிலையில், நல்லதாளில் அச்சிட்டுப் பிரசுரித்ததால்தான் எங்கள் பெயர்கள் தமிழர்களுக்கு அறிமுகமாயின. இதற்காக அந்தப் பெரியவருக்கு நாங்கள் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறோம். விருந்தோம்பும் அவரது அரிய பண்பை வெறும் வாய்ச் சொல்லால் பாராட்டினால் போதாது; மனமார நினைவு கூர்ந்தே யாகவேண்டும். அமரர் குப்புசாமி ஐயர் தொடங்கி வைத்த வெளியீட்டுப் பணியை இன்றும் பேரார்வத்துடன் நடத்தி எங்களுக்கு ஊக்கம் அளித்து வருபவர் அவருடைய புதல்வர் கே. வேங்கடசுப்பிரமணியமும், பேரரும் இளைஞர் திலகமுமான திரு. ஸ்ரீநிவாஸனுமே ஆவர். இவர்கள் நற்பணி சிறக்கவேண்டி இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

135/136—A-2, (Easwari Flats)
M. K. Amman Koil Street,
Mylapore, Madras-4.

த. நா. சேனாபதி
31—12—1990

# மன்னித்து மீண்டுமந்த மாமணியைத் தந்து விடு

## [அமரர் கி வா.ஜ., 1901 — 1988]

### திருமதி சௌந்தரா கைலாசம் இயற்றியது

திசையெட்டும் புகழ்பரப்பித் திகழ்ந்திருந்த
செந்தமிழ்த்தாய்
அசைவின்றி இருட்டறைக்குள் அடங்கிக் கிடந்ததையும்
புனலுக்கும் நெருப்புக்கும் பூமிக்கும் புழுவிற்கும்
தினம்உண்ணும் சுவைமிக்க தீனியாய் இருந்ததையும்
கண்ணுற்று நெஞ்சம் கலங்கி மிகத்தவித்து
'வண்ணத் தமிழிங்கு வாழத்தான் வேண்டும்' எனும்
எண்ணக் கதிர்வீசி எழுந்துவந்த செங்கதிர்போல்
அண்ணல் சுவாமிநாத அய்யர் அவர்வந்தார்;
அல்லும் பகலும் அயராத நல்உழைப்பால்,
செல்லுக் கிரையான தீந்தமிழைக் காப்பாற்றிப்
பார்முழுதும் ஆயிரமாய்ப் பயனை நிறைத்தபடி
ஊர்கோலம் போகவைத்த உ.வே.சா. போலிந்த
மண்ணுக்கும் தாய்மொழிக்கும் மங்காத தொண்டுசெய்த
புண்ணியரைப் பார்ப்பதிந்தப் புவியில் மிகஅரிது!
அத்தகைய உ.வே.சா., அகம்கவர்ந்த மாணவராய்
நித்தம் அருகிருந்த நிறைமனிதர் கி.வா.ஜ.!
வாய்த்தபெரும் பேற்றைவர மென்றுளம் கருதித்
தாய்த்தமிழை நன்கறியும் தலைமைபெற்ற செல்வரவர்!
அருந்தமிழின் இலக்கியங்கள் ஆசான் பதிப்பதற்குப்
பெருந்துணையாய் எப்பொழுதும் பின்னிருந்த
நல்லறிஞர்!

ஆய கலைகள் அனைத்துக்கும் பிறப்பிடமாய்
நேயமுடன் இவ்வுலகு நிதம்போற்றும் 'கலைமகட்'கே
ஆசிரியர் என்னுமோர் அரும்பதவி தாங்கியவர் !
நேசம் சுரக்குமொரு நெஞ்சத்தால் ஓங்கியவர் !
மாசுடைய செயலேதும் மனத்திலெண்ணக் கூசியவர் !
பேசுகிற நல்லுரையில் பிறங்குமொளி வீசியவர் !
எழுதுகிற எழுத்தினிலே இன்சுவையை வழங்கியவர் !
பழுதுபடா வகைஉலகம் பயனடைய முழங்கியவர் !
உடலில் கதராடை ; உள்ளத்தில் நம்தேயம் !
படர்ந்த திருநுதலில் பனிச்சென்னும் வெண்ணீறு !
பழமை ஒளியதனைப் பாய்ச்சும் தனிப்பாங்கு !
விழைந்து புதுமையினை விதைக்குமொரு பேராற்றல் !—
இவற்றைத் தனதுரிமை எனக்கொண்டு வாழ்க்கையெனும்
சுவரில் சுடர்காட்டும் ஓவியத்தைத் தீட்டியவர் !
சாந்த மலைபோலே கவினுலகை ஈர்த்திருந்த
காந்த மலைஎன்னும் தனிப்பெருமை ஏந்தியவர் !
வள்ளல் திருமுருகன் மலரடியின் நிழலுக்கே
உள்ளம் பறிகொடுத்த ஒப்பற்ற மாமனிதர்
வான்கதிராம் உ.வே.சா., வழங்கியநல் ஒளிவாங்கித்
தேனொளியாய் மண்முற்றும் தெளித்தமதி கி.வா.ஜ !
வண்ணச் சிறுபறவை வாகாய்ச் சிறகெடுத்து
விண்ணில் பறப்பதற்கு விரைந்தோடிப் போவதுபோல்
இன்றைக்கு நம்மை விட்டு, எங்கோ அவர்பறந்தார்,
துன்பச் சுமையை நாம் தூக்குதற்கு வைத்தபின்னர்.
தாங்கும் திறனற்றுத் தடுமாறிப் பூதலமே
ஏங்கி அழுவதனை இறைவா நீ காண்கிலையோ ?
என்னபிழை செய்துவிட்டோம் ? ஏன்செய்தாய்
இக்கொடுமை ?
மன்னித்து மீண்டுமந்த மாமணியைத் தந்துவிடு !

நன்றி : 'கலைமகள்'

# நாம் அறிந்த கி.வா.ஜ.

திரு கி.வா.ஜகந்நாதன் அவர்களது தமிழ் இலக்கியப் பணி குமரிமுதல் இமயம்வரையிலும், கடல் கடந்த இலங்கை, பர்மா, மலேசியா, பாரிஸ், லண்டன் போன்ற இடங்களிலும் தமிழ் கூறும் நல்லுலகமெங்கும் பரவி யிருக்கிறது.

தம் பன்னிரண்டாம் வயதிலேயே கவி பாடும் ஆற்றலும், கட்டுரை எழுதும் திறமையும் பெற்ற இவர், தம் இறுதிக் காலம்வரை தமிழுக்கும், தமிழருக்கும் தம் கட்டுரைகளால், கதைகளால், கவிதைகளால் இலக்கிய, சமயச் சொற்பொழிவுகளால் பெருந்தொண்டாற்றி வந்திருக்கிறார்.

டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களுடைய தலைமாணாக்கராக இருந்து தமிழ் பயின்று, அவர்களது அருந்தமிழ்ப் பணிக்கும் துணை நின்று, 'கலைமகள்' மாதப் பத்திரிகையின் நிர்வாக ஆசிரியராக ஐம்பதாண்டுகளுக்குமேல் பணியாற்றியுள்ளார்.

தமிழ் ஆராய்ச்சி, இலக்கியம், பக்தி இலக்கியங்கள், கவிதைகள், நாடோடிப் பாடல்கள், பழமொழிகள் என இவரே எழுதியும், தொகுத்தும் அளித்துள்ள நூல்கள் இருநூற்றுக்கும் மேற்பட்டனவாகும்.

குறிப்பாக, இலக்கணத்துக்கு விளக்கம் தருவதில் வல்லவர். சாதாரணமாக உரையாடும்போதே இரு பொருள்படப் பேசுவதில் இவருக்கு நிகர் இவரே. ஹாஸ்யத்துக்கு ஹாஸ்யமும், விளக்கத்திற்கு விளக்கமும் கிடைக்கும். அதே சமயம் யாருடைய மனமும் சிறிதளவும் புண்படா வண்ணம் பேசுவதில் சமர்த்தர்.

எந்த இலக்கிய நூலிலே சந்தேகம் ஏற்படினும் உடனடியாக விளக்கம் கி.வா.ஜ. அவர்களிடமிருந்து கிடைக்கும் என்பதைத் தமிழறிஞர்கள் பலரும் அறிவர். அவ்வளவு அபார ஞாபக சக்தி படைத்தவர்.

பிறர் உதவியை நாடாமல், ''நானே எழுதுவேன்'' என்கிற மன உறுதியோடு, நோய்வாய்ப்பட்டிருந்த தம் இறுதிக் காலத்திலுங்கூட இவர் தம் கையினாலேயே எழுதியெழுதி, தலைப்புகளுடன் கட்டுக்கட்டாக வைத்துள்ள, இன்னமும் அச்சேறாத தமிழ் நூல்களைப் பார்க்கும்போது தமிழன்பர்களின் கண்களில் நீர் துளும்பும்.

தாமே முயன்று தம்மை உயர்நிலைக்கு உயர்த்திக் கொண்டவர் திரு. கி.வா. ஜகந்நாதன்.

# 1. சத்குருவைத் தேடி

**தோற்றம்:**

இவர் விசுவாவசு வருடம், பங்குனி மாதம், சனிக்கிழமை 29-ஆம் தேதி (11-4-1906) இரவு கும்ப லக்கினத்தில் பிறந்தார். அநுஷம் இவரது ஜன்ம நட்சத்திரமாக அமைந்தது. ஸ்மார்த்தப் பிராம்மணர்களுள் கௌசிக கோத்திர வடம வகுப்பினராவார்.

இவருடைய தகப்பனார் பெயர் திரு வாசுதேவ ஐயர்; தாயார் பெயர் திருமதி பார்வதி அம்மாள்.

**கறுப்பு மச்சம்:**

பிள்ளைப்பேறு மருத்துவ மனைகள் அந்தக் காலத்தில் இருக்கவில்லை. வீட்டிலேயே பிரசவத்திற்கு வைத்துக்கொள்வார்கள். பிரசவ அறையில் பெண்களைத் தவிர யாரும் போகமாட்டார்கள்.

பிறந்த குழந்தை அழவில்லையென்றால் குழந்தையைச் சுற்றி ஓலையைப் போட்டுப் பொசுக்குவார்கள். கணப்புப் போடுவார்கள். குழந்தைக்கு வியாதி எதுவும் வரக்கூடாது என்பதற்காக, பழுக்கப் பழுக்கக் காய்ச்சிய ஊசியினால் குழந்தையின் வயிற்றிலும், கையிலும் சூடு போடுவார்கள்.

இவர் பார்வதியம்மாளுக்குத் தலைப் பிரசவக் குழந்தையாதலால் எல்லோரும் மிகுந்த கவலையுடன் இருந்தார்களாம்.

இவர் பிறந்தவுடன் அழவில்லையாம். எனவே பிரசவ அறையில் இருந்த பெண்கள் இவரைச் சுற்றி நெருப்பு மூட்டினார்களாம். அதனால் இவரது வலது

கை கருகிவிட்டது என்று இவரது வீட்டார் சொன்னதுண்டு. உண்மை அதுவன்று:

பிறக்கும்பொழுதே இவரது இடது கை மணிக்கட்டுக்கு மேலே புஜ மூட்டுவரை ஒருகறுப்பு மச்சம் படர்ந்திருந்தது. மணிக்கட்டுக்கு மேலே முழங்கை வரை படர்ந்திருந்த கறுப்பு, நடுவில் ஊசி குத்தியது போன்ற கறுப்புப் புள்ளி மச்சமே தவிர, நெருப்புச் சுட்டதாலோ, பழுக்கக் காய்ச்சிய ஊசிகுத்தியதாலோ ஏற்பட்டதன்று.

**முந்திரிக் கொல்லைச் சுப்பராயர்**

இவருடைய பாட்டனாரின் பெயர் சுப்பராயர். அவர் குட்டையாக, சற்றுக் கருவலாக இருப்பார். அவருக்கு ஏழு ஆண் பிள்ளைகள். பெண் குழந்தையே இல்லை. அந்த ஏழு ஆண் பிள்ளைகளில் இவருடைய தகப்பனார் நான்காமவர்.

சுப்பராயர் சிவபக்தர்; கடுமையான உழைப்பாளியுங்கூட. விவசாயத்தில் மிகுந்த ஈடுபாடு உடையவர். எங்காவது உயர்ந்த ரகச் செடிஒன்று முளைத்திருக்கிறது என்றால், உடனே கையில் கடப்பாரையை எடுத்துக் கொண்டு போய்விடுவாராம். வேர் அறுந்து விடாமல் அதை மெள்ளத் தோண்டி, அந்த இடத்திலிருந்து எடுத்து வந்து, நல்ல பாதுகாப்பான இடத்தில் அதைத் திரும்பவும் நட்டு, உயிர்த் தண்ணீர் விட்டுவரும் வரை அவர் வேறு எதிலும் கவனம் செலுத்தமாட்டாராம்.

அவர் முந்திரித் தோட்டம் போட்டிருந்தார். பெரும்பாலும் அங்கேயே இருப்பார். முந்திரிப் பழங்களை எடுத்து வந்து விற்பார். இதனால் அவருக்கு 'முந்திரிக் கொல்லை சுப்பராயர்' என்றே பெயர். அவர் தம் கடைசிக் காலத்தில் பஞ்சநதீசுவர க்ஷேத்திரமாகிய திருவையாற்றில் இருந்த தம் மூத்த பிள்ளையுடன் வசித்தார். அங்கேதான் இறைவனடி சேர்ந்தார்.

இவருடைய பாட்டியின் பெயர் சுப்புலட்சுமி; சற்றுப் பருமனாக இரட்டை நாடியாக இருப்பாராம்.

இவருடைய தாயாரின் தகப்பனார் பெயர் சுப்பிரமணியன். பாட்டி பெயர் சீதாலட்சுமி; வீட்டிலுள்ளவர்கள் அவரைக் 'குஞ்சம்மா' என்று அழைப்பார்கள்.

குஞ்சம்மா தம் பேரக் குழந்தையாகிய இவரை "என் தர்மராஜா" என்றே செல்லமாகக் கொஞ்சுவாராம்.

**உயிர் தப்பியது**

பால் குடிக்கும் பருவத்தில் ஒரு நாள் இவர் மெல்லத் தவழ்ந்து தளர்நடையிட்டு, விளையாடக் கிருஷ்ணராய புரம் வீதிக்கு வந்துவிட்டார். வீதியில் மண் தோண்டப்பட்ட சிறு குழி ஒன்று இருந்தது. அதன் அருகே சென்று உட்கார்ந்து அந்தக் குழிக்குள் மண்ணைக் கொஞ்சங் கொஞ்சமாக வேடிக்கையாகத் தள்ளிக் கொண்டே இருந்தாராம்.

அப்போது வீதியில் வேகமாக ஒரு ரேக்ளா வண்டி வந்திருக்கிறது. இவர் சட்டென்று அந்தக் குழியில் தம் மார்பையும் வயிற்றையும் அமிழ்த்திக்கொண்டு குப்புறப் படுத்துவிட்டாராம். ரேக்ளா வண்டிச் சக்கரம் இவர் முதுகின்மேல் ஏறிச்சென்றதாம்.

இவர் அழவில்லை. தெருவில் இருந்தவர்கள் எல்லோ ரும் அலறிக்கொண்டு ஓடிவந்து இவரைத் தூக்கினார் களாம்.

"நல்ல வேளை, அடி ஏதும் படவில்லை, முருகா!" என இவருடைய தாய், இவரது முதுகைத் தடவிவிட்டுக் கொண்டே உள்ளே தூக்கிச் சென்றாராம்.

**பிடித்த தின்பண்டம்**

குழந்தைகளுக்கென அந்தக் காலத்தில் சீடை, முறுக்கு, பொரிவிளங்காய் (பொருள் விளங்கா) உருண்டை போன்ற தின்பண்டங்களை வீட்டில் செய்து

தருவார்கள். பச்சைப் பயற்றம் மாவு, வெல்லப்பாகு ஆகியவற்றைக் கொண்டு சுக்குத் தட்டிப்போட்டு லாடு போல் உருண்டையாகத் தயார் செய்யும் தின்பண்டத் திற்கு தான் பொருள்விளங்கா உருண்டை என்று பெயர்.

இது இவருக்கு மிகவும் பிடிக்கும். ஆனால் இதன் பெயரைச் சொல்லத்தான் வராது. 'புடலங்காய் உருண்டை கொடு' என்று கேட்பாராம். அதனால் அந்தக் காலத்தில் இவரைப் 'புடலங்காய், இங்கே வா' என்று பெரியவர்கள் அழைத்துப் பரிகசிப்பார்களாம்.

### மோகனூர் வந்தது

இவருக்கு ஆறு வயதாகும்போது இவருடைய மூத்த தங்கை மதுகரவேணி என்பவர் கிருஷ்ணராயபுரத்தில் பிறந்தார். அந்த ஊரில் எழுந்தருளியிருக்கும் அம்பிகை யின் நாமம் 'மதுகரவேணி' என்பதாகும் (மதுகரம் என்றால் வண்டுகள். வேணி-கூந்தல்; வண்டுகள் மொய்க் கின்ற கூந்தலையுடையவள். இதைத் தமிழில் தேனார் குழலி என்பர்). அந்த அம்பிகையின் பெயரையே இவ ருடைய மூத்த தங்கைக்குச் சூட்டினார்கள்.

இவருடைய தந்தையார் முறையாக எதையும் படித் தவர் அல்லர். உத்தியோகம் என்று எதுவும் இல்லை. ஏழு பிள்ளைகளுக்கிடையே பிறந்தவர். தகப்பனாரின் ஆஸ்தி யும் சொற்பமே. வாசுதேவ ஐயர் இரண்டு குழந்தை களுக்குத் தந்தையானதும் குடும்பத்தில் சில சச்சரவுகள் எழுந்தன. கொஞ்சம் முன்கோபக்காரராக இருந்ததால் மிகுந்த பொருள் நஷ்டம் எதிர்பாராச் சம்பவங்களினால் ஏற்பட்டது. இதனால் கிருஷ்ணராயபுரத்தில் அவர்களால் தொடர்ந்து இருக்க முடியவில்லை. ஏதாவது ஒரு தொழி லில் ஈடுபட வேண்டுமென்ற நிலை ஏற்பட்டது. காவேரிக்கு அக்கரையில், சேலம் மாவட்டம் நாமக்கல் வட்டத்திலிருக்கும் மோகனூருக்குத் தம் குடும்பத்துடன் வந்து குடியேறினார்.

### தட்சிணவாகினி

மோகனூரின் பழையபெயர் முகவனூர் என்பதாகும். முகவன் என்றால் நாட்டாண்மைக்காரன் என்று பெயர். மதுரையில் திருமலைநாயகர் ஆண்ட காலத்தில் அவருடைய பிரதிநிதியாக ஒருவர் இங்கே இருந்தார் என்று தெரிகிறது. அவர் மண்ணாலே ஒரு கோட்டை கட்டி அதில் வாழ்ந்து வந்தார். நாளடைவில் அந்தக் கோட்டை சிதைந்துவிட்டது. இப்போதும் அது ஒரு பெரிய மேடாக இருக்கிறது. அதைக் கோட்டைமேடு என்று சொல்லுகிறார்கள்.

அந்த ஊரில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுக்கு 'அசல தீபேசுவரர்' என்று பெயர். அங்கே காவேரி வடக்கிலிருந்து தெற்கே போகிறது. அதனைத் தட்சிண வாகினி என்றும் சொல்வார்கள். அங்கிருந்து காற்று அடித்தால் சிவலிங்கப் பெருமானுக்கு அருகிலுள்ள விளக்கு சிறிதுகூட அசையாது. ஆகையினால் இறைவனுக்கு 'அசல தீபேசுவரர்' என்று பெயர். 'மிச்ர தீபேசுவரர்' என்ற பெயரும் வழங்கும்,

### காந்த மலை

மோகனூரில் காந்த மலை என்ற ஒரு சிறு குன்று இருக்கிறது. அங்கே முருகன் தண்டபாணி திருக்கோலத்தில் எழுந்தருளியிருக்கிறான். கோவிலைக் கட்டும்போது அங்கே மண்ணைத் தோண்டினார்களாம்; காந்தம் பிடித்துக்கொண்டதாம்; அதனால் காந்த மலை என்ற பெயர் அதற்கு உண்டாயிற்று.

### நாவலடியான் கோவில்

அந்த ஊரில் இரண்டு நாவல் மரங்களுக்கு நடுவில் சிறிய பள்ளத்தில் சதுரக் கல்லுடைய ஒரு மூர்த்தி எழுந்தருளி இருக்கிறார். அதனால் அவருக்கு 'நாவலடியான்' என்று பெயர். அந்த இரண்டு நாவல் மரங்களும் இன்று

வாடிப்போன நிலையில் இருக்கின்றன. அங்கே பெரிய கோவிலைக் கட்ட வேண்டுமென்று தொடங்கி, சில தூண்களை எழுப்பினார்கள். ஆனால் அந்த மூர்த்தி, தமக்கு அது வேண்டாமென்று கனவில் சொல்லிவிட்டாராம். ஆகையால் பழைய இடத்திலேயே அவரது திருவுருவம் உள்ளது.

கடன் கொடுத்தவர்கள் அந்தப் பணம் திரும்ப வில்லை என்றால் அந்த முறையீட்டை ஓலையில் எழுதி நாவலடியான் கோவிலில் கட்டுவார்கள்; பழங்காலம் முதல் இது வழக்கத்தில் இருந்து வருகிறது. அந்தக் காலத்தில் எழுதிய பனையோலைகளும், இந்தக் காலத்தில் எழுதிய காகிதங்களும் அங்கே தொங்குகின்றன. இந்த முறையீட்டைக் கேட்டு அந்தப் பெருமானுடைய திருவருளால் கொடுத்த கடன் மீண்டும் திரும்பும் என்ற நம்பிக்கை பலருக்கு இருக்கிறது. அது பலித்தும் வருகிறது.

பழைய காலத்தில் அந்தக் கோவிலில் ஆடுகளைப் பலியிடுவார்கள் என்றும் சொல்கிறார்கள். இப்போது எல்லாப் பலியும் நின்றுவிட்டன.

நாமக்கல்லில் ராமையர் என்ற வக்கீல் ஒருவர் இருந்தார். அவர் இறக்கும் தறுவாயில் அந்தக் கடவுளை வேண்டிக் கொண்டதால் பிழைத்தெழுந்தாராம். அதனால் அவருக்கு நாவலடி ராமையர் என்ற பெயர் வந்தது. அவருடைய பிள்ளைகளும் அந்தப் பெயரைச் சேர்த்தே வைத்துக்கொள்கிறார்கள்.

## அவரவர் கொடுத்து வைத்தது

அங்கே எழுந்தருளியிருக்கும் சிவபெருமானைக் 'குமரீசுவரர்' என்றும் சொல்வதுண்டு. முருகப் பெருமானைக் கண்டவுடன் அம்பிகையின் தனங்களில் பால் வழிந்ததாம். அப்படி வழிந்தது இப்போதும் சிறு தூம்பாகக் காவேரியில் கலக்கிறது என்பதாக ஐதிகம். அந்தத் துறைத் தண்ணீரில் பால் வாசனை மணக்கும்;

ஆடிப் பதினெட்டாம் பெருக்கன்று சுற்று வட்டாரத்திலுள்ள மக்கள் எல்லாரும் அங்கே வந்து காவேரியில் நீராடி இறைவனை வழிபடுவார்கள். அப்போது பெருங் கூட்டம் சேர்ந்திருக்கும். புதிய புதிய கடைகள் எல்லாம் வைத்திருப்பார்கள். அவர்களுக்கு நல்ல வியாபாரம் நடக்கும்.

அப்பர் சுவாமிகள் தேவாரத்தில் 'கொங்குதன் குமரித் துறையாடியன்' என்ற ஓரடி வருகிறது. அங்கே வருகிற கொங்குதன் குமரி என்பது இந்தத் தலத்தைக் குறிப்பதாகச் சிலர் சொல்வதுண்டு.

காவேரிக்கு அக்கரையில் நெரூர் என்ற ஊர் இருக்கிறது. அதற்கு ஒரு திருப்புகழ்ப் பாடலும் உண்டு. மோகனூர்க்கோவிலில் உற்சவங்களும் கொட்டு மேளமும் மிகச் சிறப்பாக இருக்கும். அக்கரையில் இருக்கும் நெரூரிலுள்ள சுவாமி, ''குமாரீசுவரரே, உமக்குக் கொட்டும் மேளமும் எவ்வளவு சிறப்பாக இருக்கின்றது'' என்று சொல்லி ஆச்சரியப்படுவார் என்பார்கள். அதற்கு இங்கிருந்து, ''அவரவர்கள் கொடுத்து வைத்தது'' என்று பதில் வருமாம். இப்படி ஒரு வழக்கு அங்கே நிலவி வருகிறது.

நெரூரில் சதாசிவப் பிரம்மேந்திர சுவாமிகளுடைய சமாதி இருக்கிறது. அவருடைய குருநாதரின் சமாதி மோகனூரில் காவேரிக் கரையில் அமைந்திருக்கிறது. ஆனால் பாதுகாப்பு இல்லாமையினால் அது சிதைந்து கிடக்கிறது.

மோகன் என்பவன் இருந்ததால் இந்த ஊருக்கு மோகனூர் என்று பெயர் வந்ததாகவும் சிலர் சொல்வார்கள். அது சரியன்று; முகவன் ஊர் என்பதே அதன் பழைய பெயர்.

**பரிசல் துறைச் சேஷையர்**

அப்போது மோகனூரில் சேஷையர் என்ற மிராசுதார் இருந்தார். அவருக்குக் கொஞ்சம் நிலம் இருந்தது.

அதைச் சாகுபடி செய்து வந்தார். அதோடு காவேரிப் பரிசல் துறை குத்தகையும் அவரிடந்தான் இருந்தது. பரிசல் தள்ள ஆட்களை வைத்திருந்தார். பரிசல் துறையி லேயே உட்கார்ந்துகொண்டு பரிசலில் போவோர் வருவோரிடம் கட்டணம் வசூலித்துக் கொண்டிருப்பார். நல்ல செல்வாக்குள்ள மனிதர். பிறருக்கு உபகாரம் செய்ய வேண்டுமென்ற ஈர நெஞ்சத்தினராகவும் இருந்தார். அவர்தாம் மோகனூர் அக்கிரகாரத்தின் ஓரமாக முதன்முதலில் ஒரு சிறிய ஓலைவீட்டைக் கட்டிக் கொடுத்து அங்கே இவருடைய (கி.வா.ஜ) தந்தையாரைத் தம் குடும்பத்துடன் இருக்கச் செய்தார்.

மேலும் அந்தக் காலத்தில் காப்பி ஓட்டல்கள் இல்லை. எனவே, அந்த ஊரில் இவருடைய தந்தையார் காலை நேரத்தில் இட்டிலி காபி விற்கும் சிறுகடை ஒன்றை நடத்த ஆரம்பித்தார்.

கொஞ்சம் காசுபணம் சேர ஆரம்பித்ததும் மோகனூரில் ஒரு மச்சு வீட்டைச் சொந்தமாகக் கட்டிக் கொண்டார் இவருடைய தந்தை.

மோகனூரில்தான் இவருடைய மற்ற இரு தங்கைகளாகிய மங்களமும், மீனாட்சியும், தம்பி பாலசுப்பிரமணியமும் பிறந்தார்கள். இவர் சிறுபிள்ளையாக இருந்து விளையாடி, வளர்ந்த இடம் மோகனூர்தான். அதுவே இவரது ஊர் ஆயிற்று.

பிற்காலத்திலும் இவருடைய ஆசிரியப்பிரான் ஸ்ரீமத் ஐயர் தம் பதிப்புகளில், அதற்கு மிகவும் உதவியவர்கள் யார் யாரென முகவுரையில் குறிப்பிடும்போது, 'மோகனூர்த் தமிழ்ப் பண்டிதர் கி. வா. ஜகந்நாதன்' என இவரை உலகுக்கு அறிமுகப்படுத்தினார்.

அதனால் தம் குடும்பத்திற்குப் புகலளித்த மோகனூருக்கு நிலைத்த பெருமையை இவர் தேடித் தந்தவராகி விட்டார்.

## இணைபிரியா நண்பர்கள்

மோகனூர்ச் சேஷையருக்கு ஒரே ஒரு மகள். அவளுக்குச் சிறப்பாகத் திருமணத்தை நடத்தினார். மாப்பிள்ளை பம்பாயில் நிர்ணயசாகர் அச்சகத்தில் வேலையாக இருந்தார். மகளுக்கு ஒரு பிள்ளை பிறந்தது. குழந்தை பிறந்த ஆறு மாதத்தில் சேஷையரின் மகள் இறந்துவிட்டாள். மாப்பிள்ளை இரண்டாவது திருமணம் செய்துகொண்டார். சேஷையர் தம் பெண் வயிற்றுப் பேரனைத் தம்மிடமே வைத்துக்கொண்டு வளர்த்தார். அந்தப் பையனின் பெயர்தான் செல்லம்.

கி.வா.ஜ. மோகனூருக்கு வந்தபின் செல்லத்துடன் நெருங்கிப் பழக ஆரம்பித்தார். இவரைவிடச் செல்லம் ஆறு, ஏழு மாதமே பெரியவர்.

சேஷையருக்கும் தம் பேரன் செல்லம் இவருடன் பழக ஆரம்பித்தது மிகவும் பிடித்துவிட்டது. 'ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்' என்பதை நினைத்தோ என்னவோ இவரிடமும் அவர் அதிகமான பரிவு காட்டத் தொடங்கினார்.

பெரும்பாலும் இவர்கள் இரண்டு பேரும் சேர்ந்தே இருப்பார்கள். மோகனூர்க் காவேரிக் கரையிலிருந்த சிவன் கோயில் மண்டபத்தில் ஏறி விளையாடுவார்கள்.

மோகனூரில் ஆரம்பப் பள்ளி ஒன்றுதான் இருந்தது. இவர்கள் இரண்டு பேரும் அந்தப் பள்ளியில்தான் நான்காவது வகுப்புவரை சேர்ந்து படித்தார்கள்.

## கந்தர்வக்கோட்டை வாசம்

மேலே அந்த ஊரில் படிப்பதற்கு அப்போது வசதியில்லை. மோகனூரண்டையில் காவேரிக்கு அக்கரையிலிருந்த 'வாங்கல்' என்ற ஊருக்குச் சென்று படிக்க வேண்டும்.

இவருடைய சிறிய தாயார் அப்போது கந்தர்வக் கோட்டையில் இருந்தார். ஒரு முறை அவர் மோகனூர்

வந்திருந்தபோது, ''குழந்தை தினமும் காவேரி தாண்டிப் போய்ப் படிப்பதாவது! என்னிடம் வைத்துக் கொள்கிறேன். எங்கள் ஊர்ப் பள்ளிக்கூடஆசிரியர் ஒருவர் நம் வீட்டில்தான் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார். அவரே இவனைக் கொண்டுபோய்த் தம் பள்ளிக்கூடத்தில் சேர்த்துவிடுவார். இவனும் அவருடன் தினமும் பாதுகாப்பாகப் பள்ளிக்குப் போய்வர முடியும்'' என்றார்.

அது நல்ல யோசனையாக இவருடைய பெற்றோர்களுக்கும் தோன்றியது.

இவருக்கு என்னவோ தம் நண்பர் செல்லத்தைவிட்டுப் பிரிய மனமில்லை. என்றாலும், அந்த ஆண்டு இவரை அழைத்துப் போய்க் கந்தர்வக்கோட்டைப் பள்ளிக்கூடத்தில் ஐந்தாம் வகுப்பில் சேர்த்துவிட்டார்கள்.

**வெங்கட்டராமையரின் அன்பு**

கந்தர்வக்கோட்டைப் பள்ளிக்கூட ஆசிரியர் வெங்கட்டராமையர் இவருடைய சிறிய தகப்பனாரின் வீட்டில் சாப்பிட்டுக்கொண்டிருந்தார். அங்கு இவர் போனவுடனே இவரிடம் அவருக்கு ஒரு தனி அபிமானம் ஏற்பட்டுவிட்டது. தினமும் நிறையக் கதைப் புத்தகங்களை எடுத்து வருவார்; இவரை உரக்கப் படிக்கச் சொல்வார்; உணர்ச்சியோடு இவர் படிப்பதைக் கேட்பதில் அவருக்குப் பிரியம் அதிகம்.

கதைகளை அவருக்குப் படித்துக் காட்டும்போது, சில சமயம் இவர் அப்படியே மவுனமாகி அந்தக் கதையில் ஆழ்ந்துவிடுவார். சோக உணர்ச்சி மிகும் இடங்களில் வார்த்தைகளை விம்மலோடு படிப்பார். ஹாஸ்யமான இடங்கள் வரும்போது சிரித்து எழுந்து குதித்து உட்கார்ந்து படிப்பார். இவர் படிப்பதைப் பார்க்கும் போது வெங்கட்டராமையருக்கும் மகிழ்ச்சி உண்டாகும். ''உம்...உம்... மேலே படி'' எனக் குரல் கொடுத்துக் கொண்டே இருப்பார்.

ஒரு முறை அந்த ஆசிரியர், 'பத்மாவதி சரித்திரம்' என்கிற நாவலை எடுத்து வந்தார். அதை அவருக்கு இவர் படித்துக் காட்டினார். அவர் மிகவும் சுவாரஸ்ய மாகக் கேட்டார்.

அந்த நாவலை இவர் படித்துக் காட்டிக் கொண்டிருந்தபோது பள்ளிக்கூடத்திற்குப் பல நாள் நேரம் கழித்தே இவர்கள் இரண்டு பேரும் போவதுண்டு.

ஒரு நாள் தலைமையாசிரியர் சுப்பராவிற்கு அந்த ஆசிரியரிடத்தில் கோபம் வந்துவிட்டது. "ஐந்தாம் வகுப்புப் படிக்கிற பிள்ளையை நாவல் படிக்கச் சொன்னால் அவன் படிப்பில் எப்படி நன்றாக முன்னேறுவான்?" என அவரைப் பார்த்து உறுமினார். அவரை அடிக்க முடியுமா? இவரை *'அறுந்த தந்தி' ஆக்க முயன்றார்.

இவரை இழுத்து, முதுகில் அடித்து, "பத்மாவதி யைத் தேடிக்கொண்டு ஓடு" என்று திட்டினார். அந்த ஆசிரியருக்கு மிகவும் மனவேதனையாகிவிட்டது.

பலரும் கேட்டு இன்புறும்வண்ணம் இவரது குரலொலி 'யாழ்' ஆகவேண்டும், யாவரும் படித்து மகிழ்ச்சி கொள்ளும்வண்ணம் இவரது சொந்த வளமான கற்பனை தூண்டப்பட்டு, *'கவிஞன் காதல்', *'பவழ மல்லிகை' மலர்களாக வேண்டுமென அந்த ஆசிரியப் பெருந்தகையின் உள்ளம் விழைந்ததோ என்னவோ?

அதற்குப் பிறகும் வெங்கட்டராமையர் கதைப் புத்தகங்கள் எடுத்து வருவதை நிறுத்தவில்லை; இவரை விட்டுக் கதைகளைத் தொடர்ந்து படிக்கச் சொல்லிக் கேட்பதையும் நிறுத்திக்கொள்ளவில்லை.

கதைகளை அவருக்குப் படித்துக் காட்டும்போதே இவருக்கும் தாம் சொந்தமாகக் கதை எழுதவேண்டும்,

---

* ஸ்ரீமான் கி. வா. ஜ. அவர்களுடைய சிறுகதைகளின் தொகுப்புகள்.

கவிதை எழுதவேண்டுமென்ற உணர்ச்சி பிஞ்சு நெஞ்சிலே தளிர்விடத் தொடங்கிவிட்டது.

இவர் கந்தர்வக்கோட்டையில் ஓராண்டு தங்கி, 5-ஆம் வகுப்புப் படித்தார். இவரைப் பிரிந்திருக்க இவருடைய தாயாரால் முடியவில்லை. தந்தையார் கந்தர்வக்கோட்டையில் இருந்த இவரைத் திரும்பவும் மோகனூருக்கே அடுத்த ஆண்டு அழைத்து வந்து விட்டார்.

**பிரிந்தவர் கூடினர்**

வாங்கலில் இருந்த உயர்நிலைப் பள்ளிக்கூடத்தில் இவரை 6-ஆம் வகுப்பில் சேர்த்தார்; நண்பர் செல்லமும் அந்தப் பள்ளியில்தான் சேர்ந்திருந்தார். திரும்பவும் இவர்கள் இரண்டுபேரும்சேர்ந்தே பள்ளிக்குப் போகத் தொடங்கினார்கள்.

இவர்களுக்கென்றே செல்லத்தின் பாட்டனார் காலையில் தனியாகப் பரிசல் விடச் சொல்வார்; அதில் மற்றச் சாதாரணப் பயணிகள் ஏற அநுமதிக்கமாட்டார். மோகனூரிலிருந்து வாங்கல் போய்ப் படித்து வந்த குழந்தைகள் அனைவரும் அதில் ஏறிப்போவார்கள். பள்ளிக்கூடம் விட்டு வீடு திரும்பும் நேரத்தில் இவர்களுக்காகவே பரிசல் காத்துக்கொண்டிருக்கும். அதில் இவர்கள் திரும்பி வருவார்கள்.

இவர் கொஞ்சங் கொஞ்சமாகப் பரிசல் தள்ளவும், ஆற்றில் நன்றாக நீந்தவும் கற்றுக்கொண்டார்.

இவரால் ஒரு நாழிகை சும்மா வீட்டில் இருக்க முடியாது. நிறையக் கதைப் புத்தகங்கள் படிக்கக் கந்தர்வக்கோட்டையில் பழகிவிட்டதால் இங்கும் கதைப் புத்தகங்களைத் தேடிப் போய் வாங்கி வந்து படிப்பது, கந்தரலங்காரம், விவேக சிந்தாமணி போன்ற தமிழ்ப் பாடல்களை எல்லாம் வாய்விட்டுப் படித்து, மனப்பாடம் செய்வது என்றே பொழுதைக் கழிப்பார்.

இடையிடையே இவராகவே சில பாடல்களைப் புனைந்து செல்லத்திடம் படித்துக் காட்டுவார். "ஏய், கவிதை எழுதும் திறமை உன்னிடம் நிறைய இருக்குடா" என இவர் எழுதும் பாடல்களைக் கேட்டுச் செல்லம் பாராட்டுவார். இவருக்கு அப்பொழுதே, தாம் ஒரு பெரிய தமிழ்க் கவிஞனாக வரவேண்டுமென்ற ஆர்வம் தோன்றியது.

இவர்கள் இப்படிச் சதா பாடிக்கொண்டும் பேசிக் கொண்டுமே அவ்வூர்ச் சிவன் கோவிலைச் சுற்றி விளையாடுவார்கள்.

இவருடைய பாட்டனார் சுப்பராயர் அடிக்கடி மோகனூர் வருவார். மோகனூரிலுங்கூட அவர் முந்திரிச் செடிகளைக்கொண்டுவந்து பயிரிட்டார். அவர் ஒரு முறை வந்திருந்தபோது, இவருக்குப் பூணூல் போட்டுவிட வேண்டும் என்றார்கள். அதன்பேரில் இவருக்கு உபநயனம் செய்துவைக்க ஏற்பாடுகள் நடந்தன. தாத்தா பாட்டி உறவினர்கள் எல்லாரும் வந்திருந்தார்கள்.

உபநயன முகூர்த்த தினத்திற்கு முதல் நாள் இவருடைய தாயார் வீட்டில் இல்லை. எனவே, பாட்டனார் சுப்பராயரும், பாட்டி சுப்புலட்சுமியும் மணையில் உட்கார்ந்து இவருக்குப் பூணூல் போட்டு வைத்தார்கள். பாட்டனார் சுப்பராயர்தாம் இவருக்குப் பிரம்மோபதேசம் செய்தார்.

**குரு தட்சிணாமூர்த்தி**

அந்தக் காலத்தில் பலரும் காவேரிக்குச் சென்று நீராடுவார்கள்; குடத்தில் நீர் முகந்து வந்து சுவாமிக்கு அபிஷேகம் செய்யக் கொடுப்பார்கள். ஆற்றங்கரையில் இருந்து ஜபம் செய்வார்கள்.

இவரும் செல்லமும், இதுபோலவே ஆற்றில் நீராடிச் செம்பில் காவேரி தீர்த்தம் எடுத்து வருவார்கள். சிவன் கோவிலுக்குள் நுழையும் வாசலில் வலம், இடமாக

இரண்டு பிள்ளையார்கள் உண்டு. ஆளுக்கொரு பிள்ளையார் என்று இவர்களே அபிஷேகம் செய்வார்கள். அருகம்புல், கொன்றை, தும்பை மலர்கொண்டு பிள்ளையாருக்கு அலங்காரமும் செய்வார்கள்.

ஒரு நாள், செல்லம் துண்டுக் காகிதம் ஒன்றில், ''ஓம் கணேசாய நம:'' என்று எழுதிக்கொண்டார். இவர் பஞ்சாட்சரத்தை எழுதிக்கொண்டார்.

இரண்டுபேரும் அவரவர்கள் எழுதிய தாளை ஆற்றங் கரையில் இருக்கும் சிவன் கோவிலில் இருந்த தட்சிணா மூர்த்தி கையில் கொடுத்து அதைத் திரும்ப எடுத்துக் கொண்டார்கள். தட்சிணாமூர்த்தியே அந்த மந்திரத்தை இவர்களுக்கு உபதேசித்ததாகப் பாவித்து ஜபம் செய்ய வும் ஆரம்பித்தார்கள்.

இவருடைய குரு 'எல்லாமாய், அல்லதுமாய் இருந்த தனை இருந்தபடி இருந்து காட்டிச் சொல்லாமல் சொன்ன துரை' தட்சிணாமூர்த்திதான்.

**'பாம்பு! பாம்பு'**

ஒரு சமயம் செல்லமும் இவரும் ஒரு தோப்பு வழி யாகப் போய்க்கொண்டிருந்தார்களாம். அப்போது இவர் ஒரு பாம்பை மிதித்துவிட்டார்.

செல்லம், ''பாம்பு! பாம்பு!'' என்று கத்தினார். பாம்பு வேறு எங்கோ இருக்கிறது என்று நினைத்து இவர் சுற்றும் முற்றும் பார்த்துக்கொண்டு அப்படியே அசையாமல் நின்றாராம்.

''ஏய், உன் காலடியில்தாண்டா பாம்பு'' எனச் செல்லம் குரல் கொடுத்தவுடன்தான் கீழே இவர் காலடி யில் பாம்பு கிடந்ததைப் பார்த்தார்.

சட்டென்று ஓடிப்போய் வெகு தூரம் தள்ளி நின்று கொண்டு இவரும், ''பாம்பு! பாம்பு!'' எனக் கத்தினாராம்.

---

* 'திருவிளையாடற் புராணம்'—பரஞ்சோதி முனிவர்

**சமரசப் பண்பு**

மோகனூரில் ஒரு பிராம்மணர் கடை வைத்திருந்தார். அவருக்கு இரண்டு புதல்வர்கள். அவர்கள் இரண்டு பேரும் அடிக்கடி சண்டையிட்டுக்கொண்டார்கள். ஒரு நாள் அவர்களது சண்டையைத் தீர்த்து வைக்க இவர் அவர்களுக்கிடையே போய்விட்டார். சண்டையைத் தீர்க்கப் போன இவரை ஒருவன் அடித்துவிட்டான். அடியையும் வாங்கிக்கொண்டு அவர்களது சண்டையை இவர் தீர்த்து வைத்தவுடன் அந்தப் பிள்ளைகளின் தகப்பனார் இவரிடம் வந்து தம் வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டாராம்.

**'சந்திரமதி வந்தாள்'**

ஒரு நாள் இவர் தம் நண்பர்களுடன் ஒரு கடையில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார். அப்போது அதே ஊரிலுள்ள அழகுசுந்தரம் என்பவரைப்பற்றிப் பேச்சு வந்தபோது இவர் சொன்னார்: "அழகு என்றாலும் ஒன்றுதான், சுந்தரம் என்றாலும் ஒன்றுதான். அழகு சுந்தரம் என்று பெயர் வைத்துக்கொள்கிறார்களே!"

"இதுபோல இன்னும் ஒரு பெயர் சொல்லேன்" எனச் செல்லம் கேட்டாராம்.

இவர் சட்டென்று, "சந்திரன் என்றாலும், மதி என்றாலும் ஒன்றுதான். இரண்டையும் சேர்த்துச் சந்திரமதி எனப் பெயர் வைத்துக்கொள்கிறார்கள்" என்றார். நண்பர்கள் எல்லோரும் சிரித்தார்களாம்.

இப்படித் தமிழ்ப் பெயர்களைத் தனித்தனியே பிரித்தும் சேர்த்தும் பொருள் நயம் காட்டிப் பிறரை மகிழ்விப்பது இவருக்கு ஒரு விளையாட்டு.

இவரது ஊரிலேயே சந்திரமதி என்கிற பெயருடன் கிழவி ஒருத்தி இருந்தாள். அந்த நேரம் அவள் அந்தக் கடைப் பக்கமாக வரவே, அவளது காதிலும் இவர்

சொன்னது அரைகுறையாக விழுந்து விட்டது. எல்லாரும் சேர்ந்து சிரிக்கவே தன்னைத்தான் ஏதோ அவர்கள் கேலி செய்வதாக அவள் நினைத்துவிட்டாள்.

அவளது கோபத்தைக் கண்டவுடன் இவருடைய நண்பர்கள் எல்லோரும் தலைக்கொரு பக்கமாக ஓடி விட்டார்களாம். கிழவி இவருடன் சண்டைக்கு வந்து விட்டாள். அன்று என்னவோ இவரது விளையாட்டு இப்படி விபரீதமாகப் போய்விட்டது.

**சீட்டாட்டம்-பொழுதுபோக்கு**

வாங்கலில் இவரும் செல்லமும் படித்துக்கொண் டிருந்தபோது இவர்களோடு சங்கரன் என்ற பையனும் படித்துக் கொண்டிருந்தான். அவன்தான் இவருக்கும் செல்லத்திற்கும் சீட்டாடக் கற்றுக்கொடுத்தான்.

ஒரு நாள் யாரும் அறியாமல் இவரது வீட்டில் சீட்டாடிக் கொண்டிருந்தார்கள்; அப்பொழுது ஒரு பெரியவர் பார்த்துவிட்டார். இவர்களுக்கெல்லாம் மிகவும் அவமானமாகப் போய்விட்டது.

அன்றுமுதல் சீட்டாடக் கற்றுக்கொடுத்த சங்கரனை இவர்கள் வெறுத்து ஒதுக்கினார்கள். வெளியிலும் சரி, பள்ளிக்கூடத்திலும் சரி அவனோடு பேசுவதில்லை எனத் தீர்மானித்துக்கொண்டார்கள்.

ஒரு நாள் வகுப்பில் ஆசிரியர் இவர்களை அடித்து, "ஏன் அவனோடு நீங்கள் பேசுவதில்லை?" என்று கேட்டார். பல முறை அடித்தமையினால், "அவன் சீட்டாடக் கற்றுக்கொடுத்தான்" என்று சொன்னார்கள்.

"சீட்டாடப் பழகுவது தப்புத்தான். பழகிவிட்டால் வேறு வேலை எதிலும் கவனம் போகாது" என்று ஆசிரியரும் சொன்னாராம். அதுமுதல் இவர் சீட்டாடு வதை நிறுத்திவிட்டார்.

பிற்காலத்திலும், "நன்றாக உழைக்க வேண்டிய பொன்னான நேரம் சீட்டாட உட்கார்ந்தால் வீணாகப்

போய்விடுகிறது. அதனால் சீட்டுமட்டும் ஆட வேண்டாம்'' என இவர் தம் நண்பர்களிடம் சொல்வதுண்டு.

ஆயினும் இவர் தமது வயது முதிர்ந்த காலத்தில் அபூர்வமாகச் சில சமயங்களில் தம் குடும்பத்தினருடன் சீட்டு விளையாடுவார். தம் குடும்பத்தினருடன் வேடிக்கையாக அளவளாவுவதற்காக இதைக் கைக்கொண்டார் போலும்.

**நண்பரை மீட்டது**

'கல்கி' அவர்கள் 'அலையோசை' என்ற புதினத்தை எழுதினார்கள். அதில் சீதா படகிலிருந்து விழுகிறாள்.

''தண்ணீருக்குள் கீழேகீழே போய்க்கொண்டிருந்தாள். பிறகு தன்னுடைய பிரயாசையின்றியே மேலே வருவதை உணர்ந்தாள். முகம் தண்ணீருக்கு மேலே வந்தது.''

அதைப் படித்துக்கொண்டே வந்தபோது, ''ஏதேது கல்கியே தண்ணீரில் மூழ்கிவிட்ட அநுபவத்தை அடைந்திருப்பார் என்று எனக்குத் தோன்றுகிறது'' என அன்பர் கி. வா. ஜ, சொன்னார்.

'கல்கி' வரலாற்றை எழுதிய சுந்தாகூட, ''கி.வா.ஜ-வின் ஊகம் சரியானதே'' எனக் குறிப்பிட்டுள்ளார். கி.வா.ஜ., கல்கியின் கதையைப் படித்து வரும் போது அப்படிச் சொன்னதற்குக் காரணம் சிறுவயதில் அத்தகைய அநுபவத்தை இவர் காண நேர்ந்ததேயாகும்.

வாங்கலில் இவரும் செல்லமும் அப்போது எட்டாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தார்கள். ஒரு நாள் இருவரும் காவேரிக்கு நீராடச் சென்றார்கள். ஆற்றில் நீராடிக்கொண்டிருந்த இவர்கள் அக்கரையை நோக்கி நீந்த ஆரம்பித்தார்கள். முன்னால் செல்லமும், பின்னால் இவரும் நீந்திப் போனார்கள். அந்த இடம் நல்ல ஆழம்; நீர் வேகமும்கூட.

கொஞ்ச தூரம் போவதற்குள்ளேயே இவர் கை சளைத்தது. "செல்லம் திரும்பி வாடா, கரைக்குப் போகலாம்" என இவர் திரும்பிக் கரையை நோக்கி நீந்த ஆரம்பித்தார்.

கரைக்குச் சென்று திரும்பிப் பார்த்த இவருக்கு ஒரே பயமாகப் போய்விட்டது. செல்லத்தைக் காணவில்லை. "செல்லம், செல்லம்" என்று கத்தினார்.

இவர் கரையை நோக்கி நீந்த ஆரம்பித்ததைப் பார்த்துங்கூடச் செல்லம் திரும்பவில்லை. மேலே நீந்திக் கொண்டே போனார். கொஞ்ச தூரத்தில் அவர் கையும் சளைத்துவிட்டது. காலை ஊன்றிப் பார்த்தார். நிலை கொள்ளவில்லை.

தண்ணீருக்குள் அவர் தலை மூழ்கிப் போகிறது, திரும்பவும் மேலே தெரிகிறது. இப்படித் தண்ணீரில் மூழ்கி எழுந்துகொண்டே அவர் ஆற்றோடு போவதை இவர் கண்டார்.

அந்தப் பயங்கரக் காட்சி இவர் உடலை உலுப்பிற்று. பரிசல் துறையில் அமர்திருந்தார் செல்லத்தின் தாத்தா. அவரிடம் அலறிக்கொண்டே ஓடி வந்து, "தாத்தா, செல்லத்தைக் காப்பாற்றுங்கள்! அவன் ஆற்றில் மூழ்கிப் போகிறான்" என இவர் சொன்னார்.

பரிசல் துறையிலுள்ள பெரிய பரிசல்கள் பயணிகளை ஏற்றிக்கொண்டு இக்கரைக்கும் அக்கரைக்கும் போய்க் கொண்டிருக்கும். ஆனால் புல்கட்டுகள் ஏற்றுவதற்கும், மீன் பிடிப்பதற்கும் பயன்படுத்தும் ஆறடி விட்டமே யுள்ள சிறிய வேட்டைப் பரிசல் எப்பொழுதும் கரையில் கட்டப்பட்டிருக்கும்.

"செல்லம் ஆற்றோடு போகிறான். அவனைக் காப் பாற்றுங்கள்" என இவர் கத்திய சத்தத்தைக் கேட்ட வுடனேயே கரையிலிருந்த இரண்டு ஆட்கள் வேட்டைப் பரிசலை அவிழ்த்துவிட்டுக்கொண்டு மிக வேகமாகச்

சென்றார்கள். ஆற்றின் கரையோரமாக மற்றவர்கள் ஓடி வந்தார்கள்.

செல்லத்திற்குக் கை சளைத்தாலும், நீந்தத் தெரிந்தவர் ஆதலால் காலை ஊன்றிஊன்றித் தண்ணீரில் மூழ்கிப் போகும்போது நல்ல வேளையாக ஓரிடத்தில் அவர் கால் தரையில் தட்டுப்பட்டது. காலை ஊன்றி நின்றார். என்றாலும் தண்ணீர் அவர் மோவாய்க்கட்டை வரை இருந்தது, நீரின் வேகத்தினால் அவரால் அந்த இடத்தில் நிலைகொள்ள முடியவில்லை. ''கணேசா, கணேசா'' எனக் கத்தினார்.

வேட்டைப் பரிசலில் சென்ற ஆட்கள் அவரைப் பிடித்துத் தூக்கிப் பரிசலில் போட்டுக்கொண்டு கரைக்குக் கொணர்ந்தார்கள். செல்லம் உயிர் தப்பினார்.

'பெண்ணைத்தான் இழந்தோம்; அவள் செல்வத்தையுமா இழக்கப் போகிறோம்' எனப் பதைபதைத்துப் போன சேஷையருக்கு அப்புறம்தான் மூச்சே வந்தது.

மிகுந்த நன்றியுணர்வோடு இவரது முதுகைத் தடவிக் கொடுத்து, ''பயப்படாதே! நீதான் உன் நண்பனைக் காப்பாற்றிவிட்டாயே! ஏன் அழுகிறாய்?'' என இவருக்குத் தைரியமும், ஆறுதலும் சொன்னாராம்.

**கிருஷ்ணராயபுரத்தில்**

வாங்கல் பள்ளியில் எட்டாவது வகுப்புக்குமேல் அப்போது இல்லை. எனவே, மேலே படிப்பைத் தொடர்வதற்குச் சேஷையர் தம் பேரன் செல்லத்தைச் சேலத்திற்கு அனுப்பிவிட்டார்.

இவரை இவருடைய பெற்றோர் கிருஷ்ணராயபுரத்திற்கு அனுப்பிவைத்தார்கள். அங்கே இவருடைய மாமா நாராயண கனபாடிகள் இருந்தார். அவரது வீட்டில் இருந்துகொண்டுதான் இவர் தம் மேல்படிப்பைத் தொடர்ந்தார்.

## அஞ்சா நெஞ்சம்

கிருஷ்ணராயபுரத்தில் செல்லியம்மன் கோவில் ஒன்று உண்டு. அந்தக் கோவிலுக்கு, குழந்தைகளாக இருந்த இவர்கள் யாரையும் போகக் கூடாது என்று சொல்லுவார்கள்; அந்த இடத்தைப்பற்றி ஒருவிதமான பயம் இவர்களுக்கு இருந்தது.

தம் பயத்தைப் போக்கிக்கொள்ள இவர் கையாண்ட முறை என்ன தெரியுமா?

ஒரு நாள் யாரும் இல்லாத சமயம் அந்தக் கோவிலுக்குச் சென்றார். அங்கே ஒரு செங்கல்தான் நடப்பட்டிருந்தது. செல்லியம்மன் என்பதாக மஞ்சள், குங்குமம் எல்லாம் பூசப்பட்டிருக்கும் அந்தக் கல்லைத் தொட்டுத் தம் கண்ணில் ஒற்றிக்கொண்டார். உடனேயே திரும்பி வந்துவிட்டார். இவருக்கு ஒன்றும் ஆகவில்லை. அப்புறம், "செல்லியம்மன் கோயிலில் என்ன இருக்கிறது? அங்கே ஒரு செங்கல்தானே புதைக்கப்பட்டிருக்கிறது? அது நம்மை என்ன செய்யும்?' என நினைத்துக்கொண்டு அங்கே போய்வரத் தொடங்கினார். இவருக்குப் பயம் ஏற்பட்டதே இல்லை.

இவர் தாம் எதற்கும், எங்கும், எப்பொழுதும் அஞ்சாதிருக்கும் மனத் திண்மையைத் தம்மிடம் தாமே வளர்த்துக்கொள்ளத் தொடங்கிவிட்டாரே!

## குளித்தலையில் படித்தது

கிருஷ்ணராயபுரத்தில் மேல்நிலைப் பள்ளி ஏதும் இல்லை. எனினும் ரெயில் வசதி இருந்ததால், அவ்வூர்ப் பிள்ளைகள் ரெயிலில் குளித்தலை சென்று படித்து வந்தார்கள்.

கர்நாடக மாநிலத்தில் கிருஷ்ணராஜபுரம் என்பதாக ஓரிடம் இருப்பதால் இந்தக்கிருஷ்ணராயபுரம் ரெயில்வே ஸ்டேஷனுக்குச் 'சித்தலவாய்' என்று பெயர் வைத்தார்

கள். திருச்சி-கரூர்-ஈரோடு மார்க்கத்தில் இது உள்ளது. கிருஷ்ணராயபுரம் கடைத்தெருதான் சித்தலவாய்.

சித்தலவாய் ஸ்டேஷனிலிருந்து குளித்தலை 12 மைல்கள் இருக்கும். இவரும் தம் மாமா வீட்டில் இருந்து கொண்டு தினமும் ரெயிலில் குளித்தலை சென்று படித்தார். இவர் 4, 5, 6-ஆம் பாரங்கள் படித்தது குளித்தலையில்தான். ஐந்தாவது பாரத்தில் அப்போது இரண்டு பாடங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும். விருப்பப்பாடமாகத் தமிழை எடுத்துக்கொள்ளும்படி சிலர் சொன்னார்கள். 'பள்ளிக்கூடத்தில் படிக்கிற தமிழில் பாடல்கள் அவ்வளவு அதிகமாக இல்லையே. அதற்காக வேறு பாடத்தைப் படிக்கிற வாய்ப்பை வீணாக்குவானேன்' என்ற எண்ணம் இவருக்கு வந்தது.

இவருக்குக் கணிதம் என்றால் மிகவும் பிரியம். ஆகவே, 'பள்ளிக்கூடத்தில் படிக்கிற தமிழை நாமே படித்துக்கொள்ளலாம். பள்ளிக்கூடத்தில் உருப்படியாக ஏதேனும் படிக்க வேண்டும்,' என்று தம் விருப்பப் பாடமாகக் கணிதம், பௌதிகம் இரண்டையும் எடுத்துக் கொண்டார். அவற்றில் முதல் மார்க் வாங்குவார்.

## தமிழ் இலக்கியத்தில் ஆர்வம்

'தனிப்பாடல் திரட்டுப்போல, 'விவேக சிந்தாமணி' என்ற ஒரு நூல் உண்டு. அதிலுள்ள பாடல்கள் எல்லாம் இவருக்கு மனப்பாடம்.

சித்தலவாய் என்ற ஊரிலிருந்து குளித்தலை என்ற ஊருக்கு ரெயில் போகிறபோதெல்லாம் இவர் சும்மா கதை அளக்கிற வழக்கம் இல்லை. 'விவேக சிந்தாமணி' பாட்டைச் சொல்லி அர்த்தம் சொல்லிக்கொண்டிருப்பார். இவரோடு படிக்கிறவர்கள் எல்லாம் இவரைச் சுற்றிக்கொள்வார்கள். அதில் பெண்களுடைய வர்ணனை எல்லாம் வரும். அதை இவர்சொல்லும்போது இவருடைய நண்பர்களுக்கெல்லாம் கிளுகிளுப்பாய் இருக்கும்.

தம் பள்ளியின் பிற வகுப்பு மாணவர்களிடமிருந்து தமிழ்ப் புத்தகங்களை வாங்கி அவற்றிலுள்ள பாடல்களை எல்லாம் மனப்பாடம் செய்வார். கம்ப ராமாயணத்தில் வரும் ஆற்றுப்படலம், குகப்படலம், மந்திரை சூழ்ச்சிப் படலம் போன்றவற்றில் வரும் பல பாடல்களை இவர் மனப்பாடம் செய்துகொண்டது அப்படித்தான்.

இவருக்கு அந்தப் பிராயத்திலேயே இலக்கியம் படிக்க வேண்டுமென்ற ஆசை. இவரது கையிலே தகப்பனார் கொஞ்சம் பணம் கொடுத்திருப்பார் - மத்தியான்ன நேரத்திலே இவர் சிற்றுண்டி வாங்கிச் சாப்பிட வேண்டும் என்பதற்காகத்தான்.

இவருடைய மாமாவுக்கும், அந்தப் பணத்தை வைத்துக்கொண்டு இவர் பிற்பகலில் தம் வயிற்றுக்கு ஏதாவது வாங்கிச் சாப்பிட வேண்டுமென்றே விருப்பம்; வேறு வழியில் செலவழிக்கக் கூடாது என்று எண்ணம்.

இவர் என்ன பண்ணுவார்? ஏதாவது புத்தகக் கடைக்குப் போய், நல்ல புத்தகமாக இருந்தால் வாங்கிக் கொண்டுவிடுவார். நாவல் வாங்கமாட்டார்; தமிழ் இலக்கியமாக இருந்தால் வாங்குவார்.

ஒரு முறை 'அருணாசலப் புராணம்' ஒன்றை வாங்கிக் கொண்டு வீட்டிற்கு வந்தார். மாமாவுக்குக் கோபம் வந்துவிட்டது.

''ஏண்டா, இது உனக்குப் பாடமா?'' என்று கேட்டார்.

''பாடமில்லை, படிப்பதற்காக வாங்கினேன்'' என்றார்.

''பாடமில்லாததை எதற்காகப் படிப்பது?'' என்று செம்மையாக மாமா இவரை அடித்தார்.

**கவிதை புனையும் ஆற்றல்**

இப்படி மாமாவிடம் அடி வாங்கியும் இவருக்குத் தமிழ் இலக்கியமீதுள்ள ஆர்வம் நீங்கவில்லை. ஏதோ ஒரு

வகையில் இவருக்குப் பாட்டுப் பாடும் ஆற்றலும் இருந்து வந்ததால் தினமும் ரெயிலில் போய்வரும்போது ரெயில் ஓட்டத்தின் கதியோசைக்கேற்ப இவர் ஏதாவது பாடிக் கொண்டிருப்பார். மகிழ்ச்சி, துயரம் இரண்டிலும் இவரது உணர்ச்சி பாட்டு வடிவில்தான் வெளிப்படும்.

இவருடைய நண்பர்களும் தங்களுக்குத் தோன்றுகிற கருத்துக்களைச் சொல்லி, பாட்டு எழுதித் தரும்படி கேட்பார்களாம். இவரும் எழுதித் தருவாராம். அவர்கள் அதைப் பலரிடமும் காட்டி, தாங்களே எழுதியதாகக் கும்மாளம் போடுவார்களாம்.

இதனாலெல்லாம் எதையும் தம்மால் எழுத முடியும் என்னும் நம்பிக்கை இயல்பாக இவரிடம் உரம் பெற்று வந்தது: தமிழில் எழுதுகிற ஆர்வம் பெருகிற்று; பிறர் சுவைக்கப் பலவும் சொல்ல வேண்டுமென்ற வேட்கை மிகுந்து வந்தது.

தாமே உட்கார்ந்து திருப்புகழ், திருவாசகப் பாடல்களை உருப்போடலானார், 'விநோத ரச மஞ்சரி' படித்தார். அதிலுள்ள செய்யுட்களைப் போல் தாமே எழுத முயன்றார்.

இவரது கன்னி முயற்சியில் உருவானது 'போற்றிப் பத்து' என்னும் பதிகம். நடராஜரைப்பற்றி அமைந்தது அது. அதனை அப்போது வெளிவந்துகொண்டிருந்த 'ஒற்றுமை' என்னும் பத்திரிகைக்கு அனுப்பி வைத்தார்.

பிரபல நாவலாசிரியர் வடுவூர் துரைசாமி ஐயங்கார் நடத்தி வந்த பத்திரிகை அது. அவரும் அதைத் தம் பத்திரிகையில் வெளியிட்டார்.

தமது முதல் பாட்டை அச்சில் கண்டபோது இவர் அடைந்த ஆனந்தம் இன்னது என்று சொல்லி முடியாது.

**கொங்கணாம்பட்டி நரசிம்மையர்**

குளித்தலைப் பள்ளிக்கூடத்தில் 'ஏ' க்ரூப் (விடிசி) என்று சொல்வார்கள்-வெர்னாகுலர் (தாய்மொழியில்)

காம்போசிஷன் - டிரான்ஸ்லேஷன் (கட்டுரை எழுதுவது, மொழிபெயர்ப்பது) - இந்த அளவுக்குத்தான் தமிழ் வகுப்புக்கும் இவருக்கும் தொடர்பு இருந்தது. வாரத்திற்கு இரண்டு நாள் - ஒரு 'பீரியட்' - தமிழாசிரியர் வருவார். அன்று அந்தத் தமிழ் வகுப்பில் இவருடைய நண்பர்கள் ஒருவர் மாற்றி ஒருவர் 'ஒற்றுமை' பத்திரிகையை இவரிடமிருந்து பிடுங்கிக்கொண்டு படிக்கலானார்கள். இதில் முதலில் 'நான், நீ' எனப் போட்டி. தமிழாசிரியர் வகுப்பறைக்குள் நுழைந்ததைக்கூடக் கவனிக்கவில்லை.

''என்னது, ஒரே கலாட்டா! எல்லோரும் அவர் அவர்கள் இடத்தில் போய் உட்காருங்கள்'' என்று ஆசிரியர் அதட்டிக்கொண்டே தம் நாற்காலியில் போய் அமர்ந்தார்.

திடீரென்று ஒரு பையன் எழுந்திருந்து, ''ஜகந்நாதன் சொந்தமாகப் பாட்டு எழுதியிருக்கிறான், சார். இந்தப் பத்திரிகையில் வந்திருக்கிறது'' என அந்த 'ஒற்றுமை' இதழைக் கொண்டுபோய் ஆசிரியரிடம் கொடுத்தான்.

அவர் இவரை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்துவிட்டு அந்தக் கவிதையைப் படிக்கத் தொடங்கினார்.

தப்பு எதையேனும் எடுத்துக் காட்டப் போகிறாரோ என இவருக்கு நெஞ்சு திக்திக்கென அடித்துக்கொண்டது. ஆசிரியர் அந்தப் பாடலை முழுவதும் படித்தவுடன் இவரை வியப்புடன் நோக்கினார்.

''ஜகந்நாதா, இதை நீயா எழுதினாய்? உன் பெயர் போட்டிருக்கே! எங்கே நீ எழுதிய பாட்டைச் சொல், பார்ப்போம்'' என்று கேட்டார்.

இவர் அந்தப் பாடலைச் சொன்னவுடன் கேட்டு மகிழ்ந்ததோடு இவரது அருகில் வந்து இவரைத் தட்டிக் கொடுத்தார். ''மிக நன்றாகப் பாடியிருக்கிறாய். இதற்கு முன் குறைந்தது முந்நூறு பாடல்களாவது நீ எழுதியிருக்க வேண்டுமே'' எனப் பாராட்டினார்.

''நான் அவ்வளவு எழுதவில்லை'' எனத் தயங்கிக் கொண்டே இவர் சொன்னார். ''விநாயகர்மேல் ஒரு பாட்டுச் சொல்லலாமே'' என்றார் ஆசிரியர். உடனே இவரும் ஒரு பாட்டுச் சொன்னார். ஆசிரியருக்கு ஒரே மகிழ்ச்சி.

இப்படி இவரைத் தட்டிக் கொடுத்துப் பாராட்டிய தமிழாசிரியரின் பெயர் கொங்கணாம்பட்டி நரசிம்மையர் தமது ஆற்றலைப் பாராட்டிய அந்தத் தமிழ்ப் பண்டி தரை இவர் மறந்ததேயில்லை.

**'இளம்பூரணன்'**

தமிழாசிரியரே இவ்வரைப் பாராட்டியவுடன் இவரது வகுப்பு மாணவன் ஒருவன் இவரை 'இளம்பூரணன்' என்று அழைக்க ஆரம்பித்தான். அதுமுதல் பள்ளி நண்பர்கள் அனைவருமே இவரை 'இளம்பூரணன்' என்றே அழைக்க லானார்கள்.

இப்படிப் பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருந்த போது இவரது பன்னிரண்டாம் பிராயத்திலேயே கவிதை எழுத வேண்டுமென்ற ஆர்வம் முளைத்துவிட்டது. இவருக்கு இலக்கணம் தெரியாது. கவிதை இலக்கணம் தெரியாததற்கு முன்பே கவியின் ஓசை ஒருவாறு இவரது மனத்துக்குத் தட்டுப்பட்டது. பாட்டின் ஓசையை ஒருவாறு கண்டுபிடித்துப் பாடுவது இவரது வழக்கம். ஸ்வர ஞானம் உண்டாவதற்கு முன்பு இசைஞானமும், ராக ஞானமும் உண்டாவது எப்படி இயல்போ அது போலத்தான் இதுவும் இயல்பு போலும்!

'இளம்பூரணன்' என்கிற பட்டப் பெயர் பெற்ற உற்சாகத்தில் இவர் தொடர்ந்து தனிப் பாடல்கள் பலவற்றை எழுதினார்.

புதுச்சேரியிலிருந்து வெளியான 'கற்பகம்', 'ஆத்ம சக்தி' போன்ற பத்திரிகைகளுக்கு அவ்வப்போது அவற்றை அனுப்பினார். பாவேந்தர் பாரதிதாசனின்

கவிதைகள் இப்பத்திரிகைகளில் வரும். இவருடைய கவிதைகளும் இவற்றில் வர ஆரம்பித்தன. 'பராசக்தி', 'லட்சுமி' போன்ற வேறு பத்திரிகைகளும் இவருடைய கவிதைகளை வெளியிட்டன.

**'புலவர் பெருமான்'**

இவருடைய கவிதைகளை வெளியிட்ட பத்திரிகை ஆசிரியர்கள் இவரை நேரில் பார்த்ததில்லை. இவருடைய பாடல்களின் சொல்லமைப்பு, பொருள், மரபு இலக்கியங்களை யொட்டிய யாப்பு அமைப்பு இவற்றைக்கொண்டு இவரை மிகவும் வயதான முதிர்ந்த தமிழ்ப் பெரும் புலவராகக் கருதிக்கொண்டோ என்னவோ இவருக்குக் கடிதம் எழுதும்போது, ''புலவர் பெருமானே'' என விளித்து எழுதுவார்கள்.

**'வைதிகப் பிச்சு'**

தூத்துக்குடி வ. உ. சி., கல்லூரியில் முதல்வராக இருந்த அமரர் திரு அ. சீனிவாசராகவன், அன்பர் கி.வா.ஜ-வைப்பற்றி இவ்வாறு எழுதியிருக்கிறார்:

''கி.வா.ஜ-வின் சொற்பொழிவு முற்றும் இலக்கிய மணம் கமழ்வதாக இருந்தது. பழமையும், புதுமையும் இணைய முடியாது என்ற எங்கள் கருத்தைப் பொய்யாக்கும்வண்ணம் அவ்விரண்டையும் மிகவும் நன்றாக இணைத்துப் பேசினார். நான் மெய்ம்மறந்து கேட்டுக்கொண்டிருந்தேன். அன்றைய பேச்சு எனக்கு மறக்க முடியாத அநுபவம்.''

அன்றுவரை அவர் கி. வா. ஜ-வை நேரில் பார்த்ததில்லை. 'கி.வா.ஜ., மகாவித்துவான் சாமிநாதையரிடம் அளவற்ற பக்தி கொண்ட மாணாக்கர், சிறந்த கல்விமான், என்ற அளவுக்குமட்டுமே இவரைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்தார், அன்பர் சீனிவாசராகவன்.

---

* நூல்: 'வளரும் தமிழ்':- அ. சீ. ரா., கட்டுரை: 'நடமாடும் இலக்கியக் களஞ்சியம்.'

ஓராண்டு காரைக்குடி கம்பர் விழாவில் ஒருவர் உரையாற்றுவதற்காக மேடையை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார். மெலிந்த உடல்; குள்ள வடிவம்; கட்டுக் குடுமி; நெற்றி நிறையத் திருநீறு; கழுத்தில் கறுப்புக் கயிறு ஒன்றில் சேர்த்துக் கட்டிக்கொண்டிருந்த ஒற்றை ருத்திராட்சம் - அசப்பில் அவரைப் பார்த்தவுடன் இலக்கிய மணம் கமழ வேண்டிய மேடையில், சமய நெடியா கமறப்போகிறது என நினைந்து திரு அ. சீ. ரா., அருவருப்புக் கொண்டார்.

''இந்தப் பௌராணிகரை இங்கே பேச அழைத்தது யார்?'' எனச் செயலாளரிடம் கோபம் கொண்டார். ''யார் சார், இந்த இளைஞர், வைதிகப் பிச்சு?'' எனத் தம் அண்டையில் இருந்தவரைக் கேட்டுவிட்டார்.

''இவரைத் தெரியாதா? இவர்தாம் கி. வா. ஜ.'' என்றார் அவர். அன்பர் சீனிவாசராகவனுக்கு வெட்க மாகிவிட்டதாம்.

## பள்ளிப்படிப்புக்கு ஏற்பட்ட தடை

இப்படித்தான் இவரைப் பார்க்காமல், நேரில் இவருடன் உரையாடாமல் இவரைப்பற்றிப் பலபேர் தம் கற்பனையில் வரைந்துகொண்ட தோற்றம் பல சமயம் பொய்யானது உண்டு.

பத்திரிகை ஆசிரியர்கள், ''புலவர் பெருமானே'', ''வணக்கம் பல''எனத் தொடங்கி எழுதும் கடிதத்தைப் படிக்கும்போதே இவருக்குக் 'குபுக்' எனச் சிரிப்பு வந்துவிடும்.

''என்னடா சிரிக்கிறாய்?'' என்று வீட்டில் கேட்டால், ''நான் புலவர் பெருமான்; இதோ பார்'' என அவர்களிடம் அந்தக் கடிதத்தைக் காட்டி மகிழ்வார்.

தந்தையாரைப் போலவே இவருடைய மாமாவும் மிகுந்த முன்கோபக்காரர். படிக்கும் பாடத்தில் கவனம் செலுத்தாமல், 'கவிதை எழுதுகிறேன், கட்டுரை எழுது

கிறேன், என்று இவர் சதா நண்பர்களுடன் ஊரைச் சுற்றுவது அவருக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை.

''போச்சு! புலவர் பெருமான் என்று வேறே குடுமியில் பூச் சூட்டிவிட்டார்களா? இவன் இனி எங்கே படித்து உருப்படப் போகிறான்?'' என அடிக்கடி கத்த ஆரம்பித்தார் மாமா.

அந்த ஆண்டு எஸ்.எஸ்.எல்.ஸி. தேர்வு எழுத இவருக்குச் 'செலக்ஷன்' ஆகவில்லை. இதுதான் சாக்கு என வட்டியும் முதலுமாக இவருடைய மாமா இவரை அன்று நன்றாக அடித்துவிட்டார்.

''என்னை அடித்தால் நான் என்ன செய்வேன்? நன்றாகத்தான் படித்தேன். 'அண்டர் ஏஜ்'-வயது குறைவு என்று சொல்லி 'செலக்ஷன்' செய்யவில்லை'' என இவர் எவ்வளவோ சொன்னார். உண்மையும் அதுதான். கோபத்தில் உண்மையை யார் பார்க்கிறார்கள்? இவர் சொன்னதை இவ்ருடைய மாமா காது கொடுத்துக் கேட்கவில்லை.

அடுத்த ஆண்டு தேர்வு எழுதத் தொடர்ந்து படித்தார். நடுவில் முடக்குவாத நோய் (ருமாட்டிஸம்) வந்தது. மூன்று நான்கு மாதங்கள் பள்ளிக்கூடத்திற்கே போக முடியாமல் போய்விட்டது. இந்த ஆண்டு 'டேர்ம் டேஸ்' (பள்ளிக்கு வரவேண்டிய நாட்கள்) போதவில்லையென்று சொல்லிவிட்டார்கள். அப்போதும் இவரால் உயர்நிலைப் பள்ளி இறுதித் தேர்வு எழுத முடியாமல் போய்விட்டது.

இவ்வாறு இவரது பள்ளிப் படிப்பு தடைப்பட்டுப் போனது இவருக்கு மிகவும் வருத்தம் அளித்தது.

**விரக்தி மனப்பான்மை**

மேலே என்ன செய்வது என்று இவருக்குத் தெரியவில்லை. மோகனூருக்கே திரும்பி வந்துவிட்டார்.

தேர்வில் உட்காரக்கூடத் தகுதியில்லாதவராக ஊருக்குத் திரும்பி வந்த தம் பிள்ளையைப் பார்த்த பெற்றோர்களுக்குத் துக்கம் தாங்கவில்லை.

'பிள்ளை நன்றாகப் படித்து, நல்ல வேலைக்குப் போவான். பிறகு நம் கஷ்டங்கள் தீராமலா போகும்?' எனக் கனவு கண்டு வந்த பெற்றோர், 'நம் துன்பம் இவனால் தீராது போல் இருக்கிறதே' என மனம் வெதும்பினார்கள்.

இவருடைய இளமைக் கால நண்பராகிய செல்லமும் அப்போது மோகனூரில் இல்லை. தமக்கு ஆறுதல் அளிக்க யாருமே இல்லாததுபோல முதன்முதலாக அப்போது தான் இவர் உணர்ந்தார். துணை ஏதுமின்றித் தாவிப் படரக் கொழுகொம்பில்லாத தனிக்கொடிபோல் இவரது மனமும் தள்ளாடியது. தம் உள்ளத் துயரை மாற்றிக் கொள்ள, துணைநாடிக் காந்தமலை முருகன் கோவிலுக்கு அடிக்கடி போய்வரத் தொடங்கினார்.

மற்றவர்கள் போகும் வழியிலேயே போய்க் கொண்டிருப்பது, அதனைத் தம்மால் தொடர முடியாத போது உள்ளம் குமைந்துபோய்ச் சாவது -சீ! இது என்ன வாழ்க்கை என எண்ணும்போது இவரது உள்ளம் கசந்தது.

'வாழ்க்கையில் முன்னேற ஒரு வழி அடைபட்டு விட்டது, என்றால் அதைத் தவிர வேறு வழிகளே இல்லையா?' என்னும் ஆராய்ச்சியில் இவரது உள்ளம் குதி போட்டது.

'நாமே நமக்கென்று சில பல வேலைகளை ஏற்படுத்திக்கொண்டால் என்ன?' எனச் சிந்திக்கத் தொடங்கினார். அப்போது இவரது உள்ளத்தில் நம்பிக்கை பிறந்தது.

காவேரி நதி பாயும் கிராமச் சூழ்நிலையிலே வளர்ந்து வந்த காரணத்தால் இவரது மனம் லேசாகக் காற்றோடு

பறந்து, காவேரியோடு துள்ளைந்து, மலரோடு மகிழ்ந்து உலாவியது. எத்தனையோ பிஞ்சுக் கற்பனைகள் இவருக்குத் தோன்றிக் கவிகளாக மலர்ந்தன.

'குருவிகள் தம் இச்சைபோல் கூடுகள் கட்டி மகிழ்வோடு வாழ்கின்றனவே! மரங்களில் உட்கார்ந்து கிளிகள் பேசி மகிழ்கின்றனவே! விலங்குகள் இரவு பகல் எனப் பாராமல் தம் தம் விருப்பம்போல் வனங்களில் சுற்றித் திரிகின்றனவே! இவற்றைப்போல் மனிதன் ஏன் சுதந்திரமாக வாழக் கூடாது? இவன் ஏன் அடிமையாக, மனம் புண்பட்டுச் சாகவேண்டும்?' என்னும் கற்பனையில் இவரது உள்ளம் ஆத்ம விடுதலைக் கீதத்தை இசைக்கத் தொடங்கியது.

இந்தக் கருத்தை வைத்தே ஒரு கவிதை எழுதினார்:

**குருவிகள் தம்மிச் சைபோல்**
**கூடுகள் கட்டி வாழ,**
**மரங்களில் கிளிகள் பேசி**
**மகிழ்வுற, வனவி லங்கோ**
**இரவினில் பகலில் தந்தம்**
**இச்சைபோல் உழல, யாமோ**
**புரைசெறி அடிமை யாகிப்**
**புண்பட்டோம் கண்கெட் டோமே.**

இப்படி எழுதிய பாடலை ஒரு பத்திரிகைக்கு அனுப்பினார். 'விடுதலை' என்ற தலைப்பில் அந்தப் பாடல் வெளியாயிற்று.

**காந்தி இயக்கத்தில் ஈடுபாடு**

தேச விடுதலைக்காகப் பலர் போராடிக் கொண்டிருந்த காலம் அது. காந்தியடிகள் என்னும் கதிரவன் உதயமாகி அரசியல் வானில் நிகரற்ற ஒளியை வீசத் தொடங்கிய நேரம் அது.

இவரும் காந்தி இயக்கத்தின் ஈர்ப்புக்கு உட்பட்ட இளைஞர் பலரோடு உறவாடத் தொடங்கினார்.

சர்க்காவில் நூல் நூற்க ஆரம்பித்தார். அந்த நூலால் நெய்யப்படுகின்ற கதர்த் துணிகளையே உடுக்கத் தொடங்கினார்.

அன்றுமுதல் தம் இறுதிநாள் வரை இவர் கதர்த் துணியைத் தவிர வேறு எதையும் அணிந்ததில்லை.

மோகனூரில் திலகர் வாசகசாலை போன்ற சங்க நடவடிக்கைகளிலும் ஈடுபட்டார்.

வாசகசாலைக்கு வரும் பத்திரிகைகள் அனைத்தையும் படிக்கும் பழக்கத்தை வளர்த்துக்கொண்டார். பத்திரிகைகளில் வரும் கவிதைகளைப் படிப்பார். அப்போது பெரும்பாலும் தேசபக்திக் கவிதைகளே வெளிவந்தன. இவரும் 'சுதந்திர தேவி திருப்பள்ளியெழுச்சி', 'திருக்கோயில்' போன்ற பாடல்களை எழுதினார்.

சேலத்திலிருந்து 'தமிழ் நாடு' என்னும் பத்திரிகை அப்போது வெளிவந்துகொண்டிருந்தது. பழம்பெருந் தேசபக்தர் டாக்டர் வரதராஜுலு நாயுடு அதனை நடத்தி வந்தார். அவரது பேச்சில் நெருப்புப் பொறி பறக்கும் என்பார்கள். அவரது 'தமிழ் நாடு' பத்திரிகைக்கும் இவர் ஒன்றிரண்டு கவிதைகளை எழுதி அனுப்பினார்.

சேலத்திற்கே போய்விட வேண்டுமென்ற ஆசையும் இவருக்குத் தோன்றியது. சேலத்தில் அப்போது செல்லம் இருந்தார். தமக்கு வேலை ஏதுமின்றி அங்கே போக இவருக்குத் துணிவு ஏற்படவில்லை. அதனால் சேலம் மாவட்டக் காங்கிரஸ் கமிட்டிக்கு ஒரு கடிதம் எழுதினார்: "என்னாலான வேலையைச் செய்கிறேன். எனக்குச் சாப்பாட்டுக்கு வேண்டிய சம்பளம் கொடுத்தால் போதும்" என்று அதில் தெரிவித்தார்.

"எங்களுக்கு அந்த மாதிரி இப்போது யாரும் தேவையில்லை. எங்களுக்கு வேண்டிய பணிகளைச் செய்ய

இப்பொழுதே பலர் இருக்கிறார்கள்'' என்று அவர்களிடமிருந்து இவருக்குப் பதில் வந்தது. இதனால் இவர் மிகவும் ஏமாற்றம் அடைந்தார்.

இதுபோல் ஏமாற்றமும் சோர்வும் தலை தூக்கும் போது மோகனூர்க் காவேரிக் கரையை நோக்கி இவர் சென்றுவிடுவார். ஆற்றில் ஓடும் நீரையும், அதில் கரையோரமாக மிதந்துவரும் மஞ்சள்நிற மலர்களையும் பார்த்துக்கொண்டிருப்பதால் இவருக்குப் புத்துணர்ச்சி பிறக்கும்.

**ஞான வாள்!**

மோகனூர்க் காவேரிக்கரையில் சுடுகாடு இருக்கிறது. அங்கே பேய் பிசாசு உலவும் என்று சொல்வார்கள்.

ஒரு நாள் ஒரு பெரியவர், ''டேய் அசடு! நேரம் காலம் இல்லாமல் ஆற்றங்கரைப் பக்கம் போகாதே! ஏதாவது பேய் பிசாசு அடிச்சுடும்'' என இவரை எச்சரித்தார்.

**தண்டா யுதமும் திரிசூலமும் விழத் தாக்கியுன்னைத்**
**திண்டாட வெட்டி விழவிடு வேன்செந்தில் வேலனுக்குத்**
**தொண்டா கியஎன் அவிரோத ஞானச் சுடர்வடிவாள்**
**கண்டாயடா அந்தகா! வந்துபார் சற்றென்**
**[கைக்கெட்டவே ***

என்கிற பாடலை இவர் படிக்கும்போது, யமன் அருகில் வர, அருணகிரிநாதர், அவன் கை சூலமும் தண்டமும் கீழே விழ, தம் கை வாளினால் ஓங்கி அவனை வெட்டி வீழ்த்துவதுபோல் தம் மனத்தில் உருவம் தோன்றுமாறு கொஞ்சம் கற்பனை செய்து பார்ப்பாராம். உடனே சிரிப்பு வந்துவிடுமாம்.

அதுபோல அந்தப் பெரியவர் பேய்பிசாசு என்று சொல்லி இவரது நெஞ்சத்தில் ஊட்டிய பய உணர்வைப் போக்கிக்கொள்ள முயன்றார். வேண்டுமென்றே உச்சி

* கந்தரலங்காரம்—25

வேளையில் காவேரிக் கரையிலுள்ள சுடுகாட்டிற்கு அருகில் போவார்.

முதலில் பேய் என்ற உணர்வினால் இவரது உடம்பு நடுங்கும். பின்பு கண்ணை மூடிக்கொண்டு தம் கையில் வாள் இருப்பதாகவும், அந்த வாளை வீசிப் பேயை வெட்டித் தள்ளியது போலவும் பாவனை பண்ணுவார். கண்ணைத் திறந்துகொண்டும் அந்தப் பாவனையைத் திரும்பவும் செய்வார். இவருக்கே சிரிப்பு வந்துவிடும்.

இந்தப் பாவனைப் பழக்கத்தினால் பேய் பிசாசு என்கிற பயமே இவருக்கு நீங்கிவிட்டது.

**'சந்திர விலாஸ்'**

தமிழில் வரும் துப்பறியும் கதைகளையெல்லாம் படிப்பார். அ. மாதவையா, வ.வே.சு. ஐயர் போன்றவர்களுடைய கதைகளிலும் இவருக்கு ஈடுபாடு அதிகம். திரு.வி.க., அவர்களது வசன நடையை அடிக்கடி படித்து, அதுபோல எழுத வேண்டுமென்று ஆசைப்பட்டு முயன்றும் இருக்கிறார்.

அக்காலத்தில் வெளிவந்த தமிழ்ப் புத்தகங்கள், பத்திரிகைகள் பலவற்றைப் படிப்பதோடு, அவற்றைச் சொந்தமாக வாங்கிச் சேர்த்துக்கொள்ளவும் ஆரம்பித்தார். பழைய புத்தகங்கள், பத்திரிகைகள் எங்குக் கிடைத்தாலும் வாங்கிவிடுவார்.

கிழிந்த புத்தகங்களை ஒட்டித் தைத்து, அட்டை போட்டு, மேலே பெயர் ஒட்டி அவற்றைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்வதில் இவர் மிகுந்த கவனம் செலுத்தினார்.

தம்மிடமுள்ள புத்தகங்களை இவர், தாம் படித்ததோடு பிறருக்கும் படிக்கக் கொடுப்பார். இவரது நூலகத்திற்கு இவர் சூட்டியிருந்த பெயர் 'ஃபுல் மூன் லைப்ரரி' ஆகும்.

**சொல்லையும் கள்ளையு நெஞ்சையுஞ் சேர்த்திங்கு**
**வெண்ணிலாவே—நின்றன்**
**சோதிமயக்கும் வகையது தானென்சொல்**
**வெண்ணிலாவே**

எனப் பாடிய பாரதியைப் போலவே இவரது உள்ளமும் நிலவைப் பார்த்துப் பரவசம் அடையும்.

இரவு நேரங்களில் நீல வானில் நட்சத்திரக் கூட்டத்தினிடையே பவனி வரும் பூரண சந்திரனைப் பார்த்துக்கொண்டே இருப்பார். ஓடும் மேகத்திரைக்குள் அது ஒளிந்து ஒளிந்து இவருடன் விளையாடும். இவர் தம்மையே இழந்த இன்ப வெள்ளத்தில், கற்பனையில் மிதப்பார்.

இவருக்கு முழுமதியினிடத்தே அவ்வளவு ஈடுபாடு. இவரது வீட்டிற்கு 'முருக நிலையம்' என்று சுவரிலே கையால் எழுதப்பட்டிருக்கும். 'சந்திர விலாஸ்' என்ற பெயரையும் ஓர் அட்டையில் எழுதித் தம்முடைய அறை முகப்பில் தொங்கவிட்டிருந்தார்.

**சிலேடைப் பாடல்கள்**

புகழ்வதுபோல இகழ்வது, இகழ்வது போலப் புகழ்வது, சிலேடையாகச் சொல்வது போன்ற தனிப் பாடல்கள் இவருக்கு மிகவும் பிடிக்கும். இவர் அவற்றைப் படித்து ரசிப்பதோடு சொல்லிக் காட்டியும் பிறரை மகிழச் செய்வார்.

ஒரு சமயம் பலரும் கூடிப் பேசிக்கொண்டிருக்கும் போது,

**வாதக்கா லாம்தமக்கு மைத்துனர்க்கு நீரிழிவாம்**
**போதப்பெரு வயிறாம் பிள்ளைதனக்(கு)- ஓதக்கேள்**
**வந்தவினை தீர்க்க வகையறியார் வேளூரார்**
**எந்தவினை தீர்ப்பார் இவர்**

எனக் காளமேகப் புலவர் வைத்தீசுவரரை வஞ்சப் புகழ்ச்சியாகப் பாடியுள்ள பாட்டைச் சொல்லி விளக்கினார்.

(வாதக் கால்—வாதநோயை உடைய கால்; காளியோடு வாதம் செய்த கால். நீரிழிவு - நீரிழிவு வியாதி; பாற்கடலில் இருப்பவர். பெருவயிறு-மகோதரம்; இது ஒரு வியாதி, பெரிய வயிறு. வேளூரார்-வைத்தீசுவரன் கோவிலில் உள்ள சிவபெருமான்)

ஒரு வைணவர் அந்தக் கூட்டத்தில் இருந்தார்; அவருக்கு மிகவும் சந்தோஷம் ஏற்பட்டது. "நல்ல வேளை, எங்கள் சுவாமியைப்பற்றி இதுபோல யாரும் பாடவில்லை" என்று பெருமையாகச் சொல்லிக் கொண்டார்.

"ஏன் பாடவில்லை?" என்றார் இவர். அவரோ, "யார் பாடியிருக்கிறார்? இருந்தால் எங்கே ஒரு பாட்டுச் சொல்லுங்கள்" எனச் சவால் விட்டார். "இந்தப் பாட்டைக் கேளுங்கள்" என்று இவர் தொடங்கினார்:

**நீரிழிவு தானுள்ளான் நீண்டகழ லுடையான்**
**சீரிலகு மார்பிடைச் சீக்கொண்டான்— போரின்**
**வலிப்புமிக் குள்ளே புகுந்தமா லானான்**
**பிறவிநோய் தீர்ப்பான் தெரிந்து**

(நீரிழிவு—ஒருநோய். பாற்கடலில் சயனித்திருத்தல்; நெடுங்கழல் — நீண்ட கால், உலகத்தை அளப்பதற்காக நீண்ட கால். சீக்கொண்டான்— சிழ் கொண்டான், ஸ்ரீ ஆகியமகாலட்சுமியைக்கொண்டான். வலிப்பு மிக்குள்ளே —வலிப்பு நோய், வன்மையுடைய பாம்பு. மாலானான் மயக்கம் உடையவன் ஆனான், திருமாலானான்)

இந்தப் பாடலைக் கேட்டவுடன், "எங்கள் சுவாமி பேரிலும் இவை போன்ற பாடல்கள் இருக்கின்றனவா?" எனச் சொல்லி, அந்த வைணவர் மௌனமானார்.

ஒரு கணத்திற்குள், இவரால் இயற்றப்பட்ட பாடல் தான் அது என்பது எவருக்கும் அப்பொழுது தெரியாது.

**துறவு மனப்பான்மை தோன்றல்**

இப்படித் தமிழ்ப் பாடல்களை இயற்றுவது, தமிழ்ப் புத்தகங்களைச் சேர்ப்பது, படிப்பது ஆகியவற்றில் இவருக்குள்ள ஆர்வத்தைக் கண்ட அவ்வூர்ப் பெரியவர் ஒருவர், ஒரு நாள் இவரை அழைத்து. "தமிழ், தமிழ் என்கிறாயே! தமிழ்ப் புத்தகங்களில் அப்படி என்ன இருக்கிறது?" என்று கேட்டார். அவர் ஆங்கில நூல் களைமட்டுமே படிக்கிற பழக்கமுடைய கனவான். மேலும், "நீங்கள் எல்லாம் எங்கே ஆங்கில நூல்களைப் படிக்கிறீர்கள்? இன்னொன்றைப் படிக்காததனால் உங்களுக்குத் தமிழ்தான் உயர்வாகத் தோன்றும். என்ன செய்வது?" என மனம் நொந்தாற் போலப் பேசினார்.

இவருக்கு ஒன்றும் புரியவில்லை. உடனே அவர் ஓர் ஆங்கிலப் புத்தகத்தை எடுத்துக் காட்டி, "இதை நான் படித்துக்கொண்டிருக்கிறேன். படிக்கப் படிக்க எவ்வளவு சுவாரஸ்யமாக இருக்கிறது தெரியுமா? நான் படித்து முடித்தவுடன் தருகிறேன். இதை நீ எடுத்துப்போய்ப் படித்துப் பார். அப்புறம் ஆங்கிலத்தில் உள்ளதைப் போல் தமிழில் எதுவுமே இல்லையென்பதை நீயே வந்து சொல்லுவாய்" என்று ஆசை காட்டி இவரை அனுப்பிவிட்டார்.

இவருக்கும் அந்த ஆங்கில நூலைப் படித்துப் பார்க்க வேண்டுமென்ற அவா எழுந்தது. அவரிடமிருந்து அந்தப் புத்தகத்தை வாங்கி வந்து படிக்க, ஒவ்வொரு நாளும் அவரது வீட்டிற்குச் சென்றார். அவர் கொஞ்சம் கொஞ்ச மாக அந்த நூலைப் படித்துக்கொண்டிருந்தார். அதனால் ஒவ்வொரு தடவையும், "நாளைக்கு முடித்து விடுவேன், தருகிறேன்" எனச் சொல்லி வந்தார்.

கடைசியில் அவர் அந்தப் புத்தகத்தைப் படித்து முடித்தவுடன், வேறு யாரிடமோ கொடுத்துவிட்டார். இவரிடம் கொடுக்கவில்லை.

கேட்டதற்கு, ''மெட்ரிக்குலேஷன்கூடப் பாஸ் பண்ணவில்லை. உன்னால் எல்லாம் அதைப் படித்துப் புரிந்துகொள்ள முடியாது. அதனால்தான் கொடுத்து விட்டேன்'' என அவர் சர்வசாதாரணமாகச் சொல்லி விட்டார்.

இப்படி இவரை அழவிடுவதற்கு அவர் ஆசை காட்டி இருக்க வேண்டாம். இவரது நெஞ்சில் ஆறிவரும் புண்ணைக் கிளறிவிட்டாற்போல அவருடைய வார்த்தைகள் இவருக்கு எரிச்சலூட்டின.

தம்மையே நொந்துகொண்டு தனிமையை நாடிக் காவேரிக் கரைக்கு வந்துவிட்டார். குமுறிக்கொண்டு வந்த அழுகையை இவரால் அடக்க முடியவில்லை.

ஓடுகிறநீரோட்டத்தில் மிதந்து வரும் புதுமலர்போல அழுகைக்கிடை இவருக்கு ஓர் எண்ணம் உதயமாயிற்று.

'சீ! இதற்குப் போய் அழுதுகொண்டிருக்கிறாயே! அந்த ஆங்கிலப் புத்தகம் ஒன்றைப் படித்தால் போதுமா? பிரெஞ்சில் நூல்கள் இல்லையா! தெலுங்கில், கன்னடத்தில், மராட்டியில், சம்ஸ்கிருதத்தில் நூல்கள் இல்லையா? எல்லாமொழி நூல்களையும் உன்னால் படிக்க முடியுமா? கிடைக்காததற்குப் போய் அழுகிறாயே! கிடைக்கிற நல்ல பல நூல்களையெல்லாம் படி. மகிழ்ச்சியாக மனத்தை வைத்துக்கொள்' என இவரது உள்ளுணர்வில் ஒரு குரல் எழுந்தது.

அடுத்த கணமே தம் உள்ளத் துயரைத் துடைத்துக் கொண்டு எழுந்தார். தமக்குத் தெரிந்த அலங்காரப் பாடல் ஒன்றைச் சொல்லிக்கொண்டு வீடு திரும்பினார். அதற்குப் பின்னரே துறவு மனப்பான்மை கொண்டார்.

திருவாசகம் படிக்கிறது; திருப்புகழ் படிக்கிறது; அதற்கு மேல் எதையும் படிக்கிறதில்லை.

சேலத்தில் படித்துக்கொண்டிருந்த செல்லம் விடுமுறைக்கு அவ்வப்போது மோகனூர் வருவார்; மோகனூர் வந்துவிட்டால் திரும்பச் சேலம் போகும் வரை இவருடனேயே இருப்பார்.

**சிருங்கேரி ஆசார்யரைத் தரிசித்தல்**

ஒருமுறை இவர் மோகனூர் வந்திருந்தசமயம் ஸ்ரீமத் சந்திரசேகர பாரதி சுவாமிகள் கொடுமுடிக்கு விஜயம் செய்திருந்தார். அவர் சிருங்கேரி சங்கர மடத்துப் பீடாதிபதி.

அவரைத் தரிசித்து வரவேண்டுமென்னும் அவா இவருக்கு உண்டாயிற்று. செல்லம் தாமும் உடன் வருவதாகச் சொன்னார்.

அங்கே போய்வர இவரிடம் போதுமான பணம் இல்லை. தந்தையாரிடம் கேட்டார்; "கையில் பணமும் இல்லை; காசுமில்லை" என்று அவர் கோபத்தோடு சொல்லிவிட்டார். 'சுவாமிகளோடு இவனும் அவர் போகும் இடங்களுக்கெல்லாம் போய்விடப் போகிறான்' என்கிற பயம் தந்தைக்கு இருந்திருக்கக் கூடும்.

இவருக்கோ, 'நடக்கக் கூடியதை நினைக்கவேண்டும்; நினைத்ததைச் செய்ய வேண்டும்' என்கிற மனவுறுதி மிகுதியாக இருந்தது.

'தகப்பனார் காசு இல்லை என்றால் என்ன? நடந்தே போவது' எனத் தம் கையிலுள்ள கொஞ்சம் பணத்தோடு ஒரு நாள் காலையில் கொடுமுடி நோக்கிக் கால்நடையாகக் கிளம்பிவிட்டார். செல்லமும் உடன் சென்றார்.

மோகனூரிலிருந்து காவேரியின் வடகரை வழியாக (சேலம்) வேலூர் சென்றார்கள். பசித்தது; ஓட்டலில் சாப்பிட்டார்கள்.

வேலூரிலிருந்து இவர்கள் புலிக்கல்பாளையம் போய்ச் சேரும்போது மாலை ஆறு மணி ஆகிவிட்டது. அதற்குப் பிறகு அங்கிருந்து பரிசலில் கொடுமுடி சென்றார்கள்.

கையில் பணம் இருந்திருந்தால், இவர்கள் மோகனூரி லிருந்து பரிசலில் காவேரியைத் தாண்டி வாங்கல் போயிருக்கலாம். அங்கிருந்து ஜட்காவில் கரூர் போய், ரெயிலேறிச் சிரமமின்றிக் கொடுமுடி போயிருக்கமுடியும்.

பணம் இல்லையென்றால் என்ன? மனசில் உறுதி இருந்தது. கால்நடையாகவே இரவு கொடுமுடி வந்து விட்டார்கள். ஆசார்ய சுவாமிகளைத் தரிசனம் செய்ய வேண்டி அவர் தங்கியிருக்கும் இடம் சென்றார்கள்.

பணத்தையே பெரிதாக மதிக்கும் உலகம், பணம் இல்லாதவர்களைச் சட்டை செய்யுமா? முன்வேலி போல் சுவாமிகளைச் சூழ்ந்திருந்த பணக்காரப் பெரிய மனிதர்கள் இவர்களை உள்ளே விடாமல் தடுத்து நிறுத்தி விட்டார்கள்.

இவர்கள் உள்ளம் மறுகியது. சில நொடிகளில், ஆசார்ய சுவாமிகளே பூஜை செய்வதற்கு, வெளித் திண்ணைக்கு வந்துவிட்டார்கள்.

இவர்களுக்கு, முருகன் திருவருளால் ஆசார்ய சுவாமி களின் தரிசனம் நன்றாகக் கிடைத்தது. இரவு அந்த ஊரிலேயே தங்கி மறு நாள் மோகனூர் வந்து விட்டார்கள்.

இதே சிருங்கேரி ஆசார்ய சுவாமிகள் ஒரு முறை கரூருக்கு எழுந்தருளியிருந்தபோது திருமாநிலையூரில் முகாமிட்டிருந்தார்கள். அப்போது இவரைப் பேச அழைத்து, இவர் பாடிய பாடல்களைக் கேட்டு மகிழ்ந்து 2—4—59-இல் இவருக்குத் 'தமிழ்க் கவிபூஷணம்' என்ற பட்டத்தை அளித்து, சால்வை போர்த்துக் கௌரவித் தார்கள்.

**சேதுராமலிங்க ஜோசியர்**

தமது படிப்பைத் தொடர்வதற்குச் செல்லும் சேலத்திற்குத் திரும்பிப் போனபோது இவர் மனம் மிகவும் துடித்தது.

'நம்மால் படிப்பையும் தொடர முடியவில்லையே, தாய் தந்தையருடைய சிரமத்தைக் குறைக்க எந்த வேலைக்கும் போக முடியவில்லையே' என்கிற வருத்தம் கொஞ்சங் கொஞ்சமாக இவரை வாட்டத்தொடங்கியது.

குடும்பத்தின் சிரமத்தை உணர்ந்தார். அதனால் இவர் மோகனூரில் இருந்த சேதுராமலிங்க ஜோசியரின் வீட்டுக்குப் போக ஆரம்பித்தார். அவர் ஜோசியத்தில் நல்ல நிபுணர். வெளியூர்களிலிருந்து பலர் அவரிடம் நேரில் வந்து ஜோசியம் பார்த்துப் போனார்கள். பலர் கடிதம்மூலம் தகவல் கேட்பார்கள். வெளியூருக்கு எழுதும் கடிதங்களை அவர் சொல்லுவார். இவர் எழுதித் தருவார்.

அதற்காகத் தம் வருமானத்தில் ரூபாய்க்கு ஓரணா இவருக்கு அவர் கொடுப்பார். இவர் அதன்மூலம் கிடைக்கும் பணத்தைத் தம் தாயாரிடம் கொண்டுபோய்க் கொடுப்பார். 'இது என்ன பிழைப்பு? மேலே படிப்பைத் தொடர முடியாமல் நம் பிள்ளையின் நிலை இப்படி ஆகி விட்டதே' என்கிற வருத்தம் பெற்றோர்களைவிட்டு நீங்கவில்லை.

ஜோசியர் சேதுராமலிங்கத்தின் வீட்டிற்கு இவர் போய்வந்த காரணத்தினால் இவருக்கு மாதம் நான்கு ஐந்து ரூபாய் கிடைக்கத் தொடங்கியது. அதுமட்டுமல்ல...

ஜோசியர் தெலுங்கர். அவருக்குப் பல பாஷைகள் தெரியும். அவரோடு இருந்தபொழுதுதான் அவரிடமிருந்து இவர் தெலுங்கு கற்றுக்கொண்டார்; கன்னடம் கற்றுக்கொண்டார்; கிரந்தம் எழுதப் படிக்கக் கற்றுக்

கொண்டார்; மலையாளமும் படிக்கக் கற்றுக் கொண்டார். மலையாளத்தில் வந்துகொண்டிருந்த 'மனோரமா' பத்திரிகையைப் படிப்பார். மலையாளம் பேசினால் புரியும்.

**'மயூர பவனம்'**

ஒரு நாள் இவர் காவேரியில் குளித்துக்கொண்டிருந்த போது காலில் ஏதோ தட்டுப்பட்டாற்போல இருந்தது. நீரில் மூழ்கி அதனை எடுத்தார். அது முருகன் சிலை!

கரையில் அப்போது ஜோசியர் சேதுராமலிங்கத்தின் தமையனார் சங்கரையர் நீராடிவிட்டு ஜபம் செய்து கொண்டிருந்தார்.

இவர் ஆற்றிலிருந்து எடுத்துவரும் சிலையைக் கண்ட வுடன், "ஜகந்நாதா, அதை இப்படி என்னிடம் கொடு" என்று வாங்கிக்கொண்டு நன்றாகப் பார்த்தார்.

"இவரும் அரசமரத்தடிப் பிள்ளையார் பக்கத்தி லேயே இருக்கட்டும்" என அந்தச் சிலையைக் கொண்டு போய் ஆற்றங்கரை அரசமரத்தடியில் வைத்துவிட்டார்.

மறு நாள் காலையில் சங்கரையர் இவரைத் தேடிக் கொண்டு இவரது வீட்டிற்கு வந்தார்ராம்.

"என்னை அவரது கையிலிருந்து வாங்கி அரச மரத் தடியில் வைப்பதற்கு நீ யார்? எனக்குத் தனியாக ஒரு கோவில் கட்டு" என முருகன் அவரது கனவில் வந்து சொன்னதாக மிகவும் பயத்தோடு சொன்னார்.

அன்றுமுதல் இவரை அழைத்துக்கொண்டு முனைந்து முருகனுக்குக் கோவில் கட்டப் பண வசூல் செய்தார். போதுமான தொகை வசூலானவுடன், தெரு வாய்க்கால் கரையோரம் இருந்த பிள்ளையார் கோவில் அருகே முருகனுக்கும் ஒரு கோவில் எழுப்பினார்கள்.

இவர் முருகனது சிலையை எடுத்துப்போய் அந்தக் கோவிலில் வைத்தார். கும்பாபிஷேகம் சிறப்பாக நடந்

தது. 'மயூர பவனம்' என அந்தக் கோவிலுக்குப் பெயர் வைத்தார்.*

**அபயானந்தர்**

காந்தமலை அடிவாரத்தில் ஒரு மடம் உண்டு. அங்கே அப்போது அபயானந்தர் என்கிற துறவி இருந்தார்; பூர்வாசிரமத்தில் அவருக்குத் தியாகராஜ பிள்ளை என்று பெயர்; முதலில் வெள்ளை வேட்டியுடன் இருந்தார். பின்னர்க் காவி உடுக்கலானார்.

அவரது சொந்த ஊர் ஸ்ரீரங்கம்; அங்கே வியாபாரம் செய்து வந்தார். ஒரு முறை சேந்தமங்கலம் அவதூத சுவாமிகள் ஸ்ரீரங்கம் போயிருந்தபோது தியாகராஜ பிள்ளை அவரிடம் உபதேசம் பெற்றார். சுவாமிகளின் ஆக்ஞைப்படி சில காலம் காந்தமலை அடிவாரத்தில் தங்கிக்கொண்டு சேந்தமங்கலம் சுவாமிகளைப் போய் அடிக்கடி பார்த்து வந்தார்.

தியாகராஜ பிள்ளையின் வைராக்கிய உணர்ச்சியை உணர்ந்து சேந்தமங்கலம் சுவாமிகள் அவருக்குத் துறவு கொடுத்து அபயானந்தர் என்னும் பெயரும் சூட்டினார்.

ஒவ்வொரு நாளும் மாலையில் இவர் 'மயூர பவனம்' போய் விநாயகரையும், முருகனையும் வழிபட்டுவிட்டுக் காந்தமலைக்குப் போவார். அங்கே அபயானந்தரையும் பார்த்து அவருடன் சிறிது நேரமாவது அளவளாவி வருவார். இவர் ஒரு நாள் போகவில்லை என்றால், இவரைத் தேடிக்கொண்டு அவரே இவரது வீட்டிற்கு வந்துவிடுவார்.

**இன்னாததையும் இனியதாக்கல்**

இவர் பிற்காலத்தில் பிரபல எழுத்தாளரும், 'கலைமகள்' பத்திரிகை ஆசிரியருமாக இருந்தபோது...

---

*இவருடைய சகோதரி மதுகரம்மாள் சொன்னது.

ஆண்டுதோறும் தீபாவளி அன்று இவரது வீட்டுக் கூடத்தில் ரத்தினக் கம்பளம் விரித்திருக்கும். 'கல்கி', 'கலைமகள்', 'விகடன்', 'அமுதசுரபி' எனப் பல பத்திரிகைகளின் தீபாவளி மலர்கள் அங்குமிங்குமாகச் சிதறிக் கிடக்கும். அவற்றின் மத்தியில் இவர் உட்கார்ந்திருப்பார்.

இவரது ஆசியைப் பெறப் பல எழுத்தாளர்கள், அன்பர்கள் தனித்தனியாகவும் சேர்ந்தும் இவரது வீட்டிற்கு வருவார்கள். எல்லோருக்கும் இவர் சந்தனம், சர்க்கரை. பழம், தாம்பூலம் கொடுத்து ஆசிவழங்குவார்.

உள்ளேயிருந்து தீபாவளித்தின் பண்டங்களை, வருவோர்க்கெல்லாம் இவருடைய துணைவியாரே எடுத்து வந்து வழங்குவார்.

வருபவர்கள் அவற்றைச் சுவைத்துக்கொண்டே, தீபாவளி மலர்களையும் புரட்டிப் பார்ப்பார்கள். ஒரு சமயம் ஒருவர், பத்திரிகையில் இவர் எழுதியிருந்த 'துணுக்கு' ஒன்றைப் பாராட்டினார்.

''என்ன சார், நான் ஒரு பொறுக்கி. என்னைப் போய்ப் பாராட்டுகிறீரே'' என்றார் இவர். எல்லோர் முகமும் ஏதோ போல் ஆகிவிட்டன.

''ஏன், அப்படிப் பார்க்கிறீர்கள்? என்ன தவறாகச் சொன்னேன்? பத்திரிகைத் துறையில் இருந்தால் உங்களுக்கும் தெரியும்: ஒரு கதை, கட்டுரையை அச்சிடும்போது அது ஒரு பக்கத்தின் பாதியோடு, முக்காலோடு முடிந்துவிடுகிறது. பாக்கி இடத்தை நிரப்ப, 'அவர் சொன்னது, இவர் சொன்னது' என எங்கெங்கோ இருந்து பொறுக்கிப் பொறுக்கித்தானே நாங்கள் போடுகிறோம்? நாங்கள் பொறுக்கிகள்தாமே!'' எனச் சொன்னவுடன் எல்லோரும் சிரித்தார்கள்.

இதுபோலப் பேசும் பழக்கம் இவரிடம் இவரது இளமைமுதலே இருந்திருக்கிறது.

இவர் எங்காவது போய்விட்டு, அன்று அபயானந்தரைப் பார்க்காமல் வீட்டிற்கு வந்தால், "அபயானந்தர் வீட்டிற்கு வந்தாரா?" என்று கேட்க மாட்டார்.

தம் வீட்டிற்குள் நுழையும்போதே, "ஏம்மா, கட்டேலே போறவர் வந்தாரா?" எனக் கேட்டுக் கொண்டே வருவாராம். "சுவாமிகளை அப்படிச் சொல்லாதே!" என இவருடைய தாயார் இவரைக் கடிந்துகொள்வார்.

"நான் இப்போது தப்பாக என்ன சொன்னேன்? வெளியில் போகும்போது அவர் பாதரட்சைக்கட்டை அணிந்து போவதால் 'கட்டேலே போறவர்' என்று சொன்னேன்" என்பாராம் இவர்.

அதைக் கேட்டு இவருடைய சகோதரிமார் சிரிப்பார்களாம்.*

**அவதூத சுவாமிகள்**

'ஸ்ரீ சுயம்பிரகாச பிரம்மேந்திர சரஸ்வதி' என்பது சேந்தமங்கலத்தில் அப்போது இருந்த அவதூத சுவாமிகளின் பெயர். பலவித அற்புத லீலைகளைச் செய்த வண்ணம் சேந்தமங்கலத்திலுள்ள ஒரு சிறு குன்றில் அவர் தங்கி வாழ்ந்தார்.

அவருடைய குருநாதர் ஸ்ரீசதாசிவ பிரம்மேந்திர சரஸ்வதி சுவாமிகள் புதுக்கோட்டையில் ஜட்ஜாக இருந்து பிறகு துறவு பூண்டார்; அதனால் அவரை 'ஜட்ஜ் சுவாமிகள்' என்றும் சொல்வார்கள்; அவருடைய அதிஷ்டானம் புதுக்கோட்டையில் இருக்கிறது.

ஸ்ரீ சுயம்பிரகாச பிரம்மேந்திர சரஸ்வதி சுவாமிகளுக்குத் தம் சிறு வயதுமுதல் பணிவிடை செய்து வந்தவர் சங்கரானந்தர். சுவாமிகள் திடீரென்று

---

* சகோதரி மதுகரம்மாள் சொன்னது.

யாருக்கும் தெரியாமல் எங்கேனும் போய்விடுவார். இப்படிச் சுவாமிகள் வெளியேறிவிடும் காலத்தில் அவரைத் தேடிக் கண்டுபிடித்துச் சங்கரானந்தர் ஆகாரம் கொடுப்பார். சில சமயம் சுவாமிகள், சங்கரானந்தரைத் தம்மிடம் நெருங்கவொட்டாமல் செய்ததுண்டு. அதற்கு அஞ்சாமல் சுவாமிகளுக்குப் பணிவிடை புரிவதையே, சங்கரானந்தர் தம் லட்சியமாகக் கொண்டு சுவாமிகளை அடுத்து உபசரணை புரிவார். இதனால் சுவாமிகளுடைய பரிபூரண அநுக்கிரகத்திற்குச் சங்கரானந்தர் பாத்திரரானார்; சுவாமிகள் அவருக்கு வேதாந்த ஞானம் அருளி, சந்நியாசமும் கொடுத்தார்.

அன்பர் கி. வா. ஜ., அபயானந்தரின்மூலம் சேந்தமங்கலம் அவதூத சுவாமிகளைப்பற்றியும், சங்கரானந்தரைப்பற்றியும் நிறையத் தெரிந்து கொண்டிருந்தார்.

அவதூத சுவாமிகளின் சீடர்களில் ஒருவராகவும், ஆசிரமநிர்வாகியாகவும் இருந்த சங்கரானந்தர் ஒருமுறை மோகனூருக்கு வந்திருந்தார். இவர் சங்கரானந்தரைப் போய்ப் பார்த்தார். இவருக்கும் துறவு பூண வேண்டுமென்ற ஆசை எழுந்தது.

அவதூத சுவாமிகளைத் தரிசித்துக்கொண்டு அவரிடம் உபதேசம் பெற்றுச் சந்நியாசம் வாங்கிக் கொள்ளத் தாம் விரும்புவதாகச் சங்கரானந்தரிடம் இவர் தெரிவித்தார்.

இவரைப்பற்றி அபயானந்தரின்மூலம் நிறையத் தெரிந்துகொண்டவர் சங்கரானந்தர். எனவே, ''ஒரு முறை சேந்தமங்கலம் வாருங்கள். அப்படியே செய்யலாம்'' என்றார்.

### துறவு பூணும் வேட்கை

சங்கரானந்தரைப் பார்த்ததிலிருந்து இவருக்குச் சேந்தமங்கலம் போக வேண்டுமென்ற எண்ணம் எழுந்தது. தாய் தந்தையரிடம் அநுமதி வேண்டினார்.

"அங்கே உனக்கு என்ன வேலை?" எனத் தந்தை கேட்டார். "அங்கே சுவாமிகள் இருக்கிறார்கள். அவர்களிடம் போய்ச் சில காலம் கைங்கர்யம் பண்ணி நல்ல பல நூல்களை வாசித்துவிட்டு வருகிறேன்" என இவர் சொன்னார்.

இவருடைய தாயாருக்கு உள்ளுக்குள் திகில் ஏற்பட்டது. 'எங்கே இவன் சந்நியாசி யாகிவிடுவானோ?' என இவர் இருக்கும் கோலம் கண்டு பயந்தார்.

அதனால், "எங்கும் போக வேண்டாம்" எனத் தாய் தந்தையர் இவரைத் தடுத்துவிட்டார்கள்.

அப்போதைக்கு இவர் சமாதானம் அடைந்தார்.

தாய்தந்தையரின் வார்த்தையை மீறவும் துணிவு ஏற்படவில்லை. என்றாலும், சேந்தமங்கலம் போக வேண்டுமென்ற ஆர்வம் கணத்துக்குக் கணம் அதிகமாகிக் கொண்டு வந்தது. உயிரிலே தோற்றிய பசியாகிவிட்ட அந்த ஆசை வேறு எதனாலும் தீராது போல் இருந்தது.

ஒரு நாள் சேந்தமங்கலம் போகலாமா வேண்டாமா என்பதற்குத் 'திருவாசக'த்தில் கயிறு சார்த்திப் பார்த்தார். "போவோம், காலம் வந்தது காண், புயங்கப் பெருமான் கழல் புகவே" என்ற பகுதி வந்தது. கடவுளே சேந்தமங்கலம் போக உத்தரவு கொடுத்து விட்டதைப்போல் இவர் மனம் மகிழ்ந்தார்.

அன்று இரவு கதர் வேட்டி ஒன்றையும், துண்டு ஒன்றையும் எடுத்துக்கொண்டு வீதித் திண்ணையில் வந்து வழக்கம்போலப் படுத்துவிட்டார். யாரும் கவனிக்க வில்லை.

விடியற்காலம் மற்றவர்கள் எழுந்திருப்பதற்கு முன் எழுந்து, சேந்தமங்கலம் நோக்கித் தம் யாத்திரையைத் தொடங்கினார்.

மோகனூரிலிருந்து சேந்தமங்கலம் 20 மைல் தூரம் இருக்கும். அவ்வூருக்கு நாமக்கல் வழியாகத்தான் செல்ல

வேண்டும். நாமக்கல் இவரது ஊரிலிருந்து 12 மைல்கள் இருக்கும்.

மோகனூரிலிருந்து கால்நடையாகக் கிளம்பிய இவர், நாமக்கல் சென்று அங்கிருந்து சேந்தமங்கலம் நோக்கி நடந்தார். ஆனால் நடந்ததே தெரியவில்லை; உடம்போடே சென்றார்; ஆனால் உடம்பு இருப்பதே தெரியவில்லை. கால் வலி, பசி, தாகம் எதையும் உணரவில்லை. நடுவில் எங்கும் தங்கவில்லை. சேந்தமங்கலம் அடைந்தபோது பிற்பகல் ஒன்றாகிவிட்டது. அங்கே சின்னஞ்சிறு குன்று ஒன்றில் சுவாமிகள் இருந்தார். அவர் இருக்குமிடம் தேடிச் சென்று, அவருடைய காலில் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்தார். தாரை தாரையாகக் கண்ணீர் வழியப் பேசமுடியாது விம்மினார்.

சுவாமிகள் புன்முறுவலுடன் இவரை ஆசீர்வதித்து இவரது குடும்பத்தைப்பற்றியெல்லாம் கொஞ்சங் கொஞ்சமாக விசாரித்துத் தெரிந்துகொண்டார்.

"சுவாமிகள் அடியேனைச் சீடனாக ஏற்றுக்கொண்டு சந்நியாசம் வழங்க வேண்டும்" என இவர் விண்ணப்பித்துக்கொண்டார்.

"குழந்தாய், உன் தாய் தந்தையரின் அநுமதியின்றி நான் ஒன்றும் செய்ய முடியாது. இப்போதைக்கு நீ ஒருவன்தானே அவர்களுக்குப் பிள்ளை! இது ஏகபுத்ர விஷயம். உனக்கு என்னால் துறவு அளிப்பதற்கில்லை" என்று சொன்னார்.

அப்போது இவருக்குத் தம்பி பிறந்திருக்கவில்லை. இவருடைய இருபதாவது பிராயத்தில்தான் தம்பி, கி. வா. பாலசுப்பிரமணியன் பிறந்தார்.

"சுவாமி, எனக்குச் சந்நியாசம் தராவிட்டாலும் தங்களிடம் இருந்துகொண்டு தங்களுக்குப் பணிவிடை செய்யும் பாக்கியத்தையாவது தந்தருள வேண்டும்" என மன்றாடிக் கெஞ்சினார்.

'தமிழ்த் தெய்வத்திற்கே தொண்டு செய்யப் பிறந்தவரைத் தமக்குத் தொண்டனாக ஆக்கிக் கொள்வதா!' என்று சுவாமிகள் உணர்ந்துகொண்டார் போலும்!

"எனக்குத் தொண்டு செய்துகொண்டு நீ இங்கிருப்பதா? அது இயலாது, அப்பா. உன் கையில் ஒரு கறுப்பு மச்சம் இருக்கிறது பார், அதைக் காணும் போதெல்லாம் எனக்கு அருவருப்பாக இருக்கும். நீ இங்கே இருக்கக் கூடாது" எனச் சொல்லிவிட்டார்.

தமது இடது முழங்கைமுதல் கணுக்கைவரை நீளமாகப் படர்ந்திருந்த கறுப்பு மச்சத்தை இவர் ஒரு முறை பரிதாபமாகப் பார்த்துக்கொண்டார். இவரை அறியாமலேயே இவரது வலது கை அந்த மச்சத்தைத் தடவிக்கொண்டது.

சுவாமிகள் மந்தஹாஸமாகச் சிரித்தார்; "ஊருக்குத் திரும்பிப்போ! உன்னைக் காணாமல் உன் தாய்தந்தையர் வருந்துவார்கள். தினமும் உபாசனை செய்துகொண்டிரு. எல்லாம் இறைவன் ஆணைப்படி நடக்கும்" என அருளாசி வழங்கினார்.

மோகனூரில் இவருடைய தாயாரோ, காலையில் இவரைக் காணாமல் மனம் பதறிப் போனார்; "எங்கே போனானோ தெரியவில்லையே!" என்று அழுது, ஆகாரம் சாப்பிடாமல், தெய்வத்தையெல்லாம் வேண்டிக்கொண்டிருந்தார்.

இவர் மோகனூருக்குத் திரும்பி வரலானார்; சேந்தமங்கலத்தில் தங்க முடியவில்லையே என்ற ஏக்கத்தால் உள்ளம் சோர்ந்தது; கால்கள் தள்ளாடின. இவரால் நடக்க முடியவில்லை.

நாமக்கல் வந்து, அங்கிருந்து மூன்று மைல் தூரத்தில் 'வல்லிபுரம்' என்ற ஊரிலுள்ள நண்பர் கைலாசத்தின் இல்லத்திற்குப் போனார்.

பளபளவென இவருடைய பாதங்கள் ரத்தம் கட்டிச் சிவந்திருந்தன. கைலாசத்தின் பெரிய சகோதரி வேதம், இவருடைய காலுக்கு விளக்கெண்ணெய் தடவி வெந்நீர் விட்டு நீவினார். கையில் பணம் கொடுத்து, ''மோகனூருக்கு வண்டியில் போ! நடந்து போகாதே'' எனச் சொல்லி அனுப்பினார். நண்பர் கைலாசம் இவருடன் நாமக்கல் வந்து, இவரை வண்டியேற்றி, மோகனூருக்கு அனுப்பி வைத்தார்.

**காந்தமலை முருகனிடம் காதல்**

ஸ்ரீமத் சுயம்பிரகாச பிரம்மேந்திர சரஸ்வதி அவதூத சுவாமிகளைத் தரிசித்து வந்ததுமுதல் முருகனைத் தீவிரமாக இவர் உபாசனை செய்யத் தொடங்கினார். ஆன்மிக வளர்ச்சியில் இவரது மனம் நாட்டம் கொண்டது.

மோகனூர்க் காவேரிக் கரையில் இருக்கும் சிவாலயத்தில் முருகனின் சந்நிதானத்திற்கு எதிரில் ஓரிடம் உண்டு. காலையிலும், மாலையிலும் நீராடிவிட்டு இவர் அங்கே உட்கார்ந்து ஜபம் செய்வார். காயத்திரி மந்திரத்தை மட்டும் இருபத்துநான்கு லட்சம் ஜபித்திருப்பார். ஜபம் செய்யும்போது இவருடைய விழிகளிலிருந்து கண்ணீர் வந்துகொண்டே இருக்கும். சில நேரம் விசித்து விசித்து அழுவார்; சில நேரம் சிரித்துக்கொண்டே இருப்பார். நேரம் போவதே இவருக்குத் தெரியாது.

காந்தமலை முருகன் கோவிலில், ராமசாமி குருக்கள் என்பவர் இருந்தார். மிகவும் பக்திமான், தினமும் காவேரியில் நீராடிவிட்டு அபிஷேகத்திற்குக் காவேரித் தீர்த்தம் எடுத்துச் செல்வார். இவரும் அவருடன் காந்தமலையானின் அபிஷேகத்திற்குக் குடத்தில் காவேரி நீரை முகந்து, தலையில் சுமந்து போவார்.

இவர்கள் இருவரும் யாரையும் எதிர்பார்க்க மாட்டார்கள். இவர்களே வடை தட்டி, பாயசம் வைத்துக்கொண்டு முருகனுக்குச் சகஸ்ரநாம அர்ச்சனை

செய்வார்கள்; இவர் நாமாவளியைப் படிப்பார்; குருக்கள் அர்ச்சனை செய்வார்.

பாம்புக்கடி மந்திரமெல்லாம் கற்று, கிரகண காலத்தில் உருப் போடலானார். மோகனூர்ச் சிவன் கோவிலில் இவரே பூஜை பண்ண ஆரம்பித்தார். பிரம்பு, தண்டத்தை வைத்து அவற்றில் முருகனை ஆவாஹனம்பண்ணிப் பூஜை செய்வார். அங்கிருந்து பிரம்பை எடுத்துவந்து, "முருகா! முருகா!" என்று தம்மைத் தாமே அடித்துக்கொள்வார்; அந்த வலியே இவருக்கு இன்பமாகத் தோன்றும்.

அந்தக் காலத்தில் காந்தமலையில் கோவில் கர்ப்பக்கிருகம் மாத்திரந்தான் இருந்தது. முருகனின் சந்நிதானத்தில் போய் நின்றால் இவருக்கு அவன்மேல் கவிதைகள் பாட வேண்டுமென்று தோன்றும். அந்த நேரம் தம் மனத்தில் தோன்றுகிற பாடல்களையெல்லாம் அக்கோவில் சுவர்களில் பைத்தியம் பிடித்தாற்போல் கரியால் எழுதிவைப்பார்;

ராமசாமி குருக்கள் தாம் பார்த்த பல வண்ண மலர்களை எல்லாம் பறித்துக் காந்தமலை முருகனுக்கு அலங்காரம் செய்தார் என்றால் இவரோ தாம் படித்த தமிழ்ப்பாக்கள், பாவினங்கள் போலவே அசை, ஓசை, சீரமையப் பாடல்கள் பலவும் புனைந்து காந்தமலை முருகனுக்கு அணிவித்தார்.

காந்தமலை முருகன் இவருடைய கவிதைகள் யாவையும் தனக்கெனக் கொண்டு கேட்டு மகிழ்ந்தான்.

**பாடுவார் பாட்டிற்கே மகிழ்வான் தன்னைப்**
**பணிவார்தம் பணிவிற்கே பரிவான் தன்னை**
**ஆடுவார் ஆட்டத்திற் கருள்வான் தன்னை**
**அன்பர்தம் அன்பிற்கே அணைவான் தன்னை,**
**சூடுவார் சென்னிக்கோர் சூட்டா னானைத்**
**துதிப்பவர்தம் துதிகளுக்கே துணையா வானைக்**
**காடுவாழ் மயிலின்மேற் கொண்டான் தன்னைக்**
**காந்தமலைக் கோவிலிலே கண்டேன் நானே**

என்பதாக இப்படி ஈற்றடியில் 'காந்தமலைக் கோவிலிலே கண்டேன் நானே' என்பதாகவும், 'காந்தமலை வீற்றிருக்கும் கந்தன்தானே' என்பதாகவும் தேவாரத் திருப்பதிகங்கள் போல இவர் பாடியுள்ள பாடல்கள் பலவாகும்.

காந்தமலை முருகனிடம் காதல் கொண்ட தன் பெண்ணின் நிலையைச் சொல்லி வருந்தும் தாய்போல,

**காந்தமலை மீதமரும் கண்ணாளாஉன்**
**கட்டழகைக் கண்டமுதற் கொண்டுநெஞ்சம்**
**வீந்ததென்பாள் வெள்வளையைத் தாராயென்பாள்**
**விளையாடா தேஉயிரைக் கவர்வாய் என்பாள்**
**கூந்தலவிழ்ந் தசைந்திடத்தன் கூர்வேல் கண்கள்**
**குமுகுமெனநீர் சொரியுங் கோலமாகி,**
**சேந்தா, என்உயிரே, என்உயிருண் கள்வா**
**என்கின்றாள் என்மகளின் செயல்தான்**
**[என்னே**

என ஆழ்வார்போல் இவர் வேசாறிப் பாடிய பாடல்களும் உண்டு.

காந்தமலை முருகனிடத்தே இவர் கொண்ட காதல் வெறி, இரவு நேரங்களில் இவரைத் தூங்கவிடாது. பாதி ராத்திரியாக இருந்தாலும் தம் படுக்கையில் தலையணையைப் போட்டு, போர்வையால் மூடிவிட்டு, காந்தமலைக்குப் போய்விடுவார். அது சின்னக்குன்று; தனியாக இருக்கும். இப்போது அதைச் சுற்றி மாளிகைகள் வந்துவிட்டன. அங்கே இவர் போகும் நேரத்தில் யாரும் இருக்க மாட்டார்கள். மலைப் பிராகாரத்தில் விழுந்து புரளுவார். பரலைக் கற்கள் உறுத்தும். உடம்பிலே காயம் வரும்; அந்தக் காயம் இவருக்கு மிகவும் இன்பமாக இருக்கும். "முருகா, முருகா" என இறைந்து கத்துவார். அங்கேயே பல மணி நேரம் உட்கார்ந்து ஜபம் செய்வார்.

இரவில் ஜபத்தை முடித்துக்கொண்டு, மலை இறங்கி வரும்போது சுற்றி ஒரே ஒளிமயமாகத் தெரியும். பேரொளி தெரியுமே தவிர அந்த ஒளியில் பிற பொருள் எதுவும் தெரியாது.

மோகனூரில் இருந்த ஸ்ரீபதி ஐயர் இவரிடம் இதைப் பற்றியெல்லாம் கேட்டுக் கேட்டு இவரை இன்னமும் உற்சாகப்படுத்தினார்.

''இது ரொம்ப நல்லது. இதைத்தான் தாரணை என்பார்கள். இது ஆண்டவன் திருவருளால் ஏற்படுவது'' எனப் பெரிதும் வியந்துகூறி இவரிடம் தெய்விக மரியாதை காட்டத் தொடங்கினார்.

இவரிடம் கொஞ்சம் நெருங்கிப் பழகியவர்கள் இவரை ''முருகன் அருள்பெற்ற முனிவர்'' எனப் பிறரிடம் குறிப்பிடத் தொடங்கினார்கள்.

அதே சமயம் மோகனூரில் இருந்த சிலர், ''இவன் எங்கே உருப்படப் போகிறான்? இப்படியே சுற்றிக் கொண்டிருந்துவிட்டு ஒரு நாள் சாமியாராகப் போகிறான்'' என்று இவர் இல்லாத இடங்களில் எல்லாம் இவரைப்பற்றிச் சொல்லிப் பரிகசிப்பதும் உண்டு.

இந்தச் சொற்கள் இவருடைய தாயாரின் காதில் விழும்போதெல்லாம் அவர் பெரிதும் வருந்துவார்; ''ஊரில் உன்னைப்பற்றி இப்படியெல்லாம் பரிகாசம் செய்கிறார்களே'' என இவரிடம் சொல்லிக் கண்ணீர் விடுவார் தாயார்.

''ஊரிலே உள்ளவர்கள் நாலுபேர் நாலுவிதமாகத் தான் சொல்லுவார்கள். மற்றவர்கள் சொல்வதைப்பற்றி நாம் ஏன் கவலைப்பட வேண்டும்?'' என்று இவர் தம் தாயாரைத் தேற்றுவார்.

**ஸ்ரீ அருணகிரிநாதர் ஜயந்தி**

காந்தமலை முருகனுக்கு ஆண்டுதோறும் விசேஷமான நாட்களில் சிறப்பாக வழிபாடுகள் நடைபெறும். ஆனி

மாதம் அருணகிரிநாதர் ஜயந்தி அன்று பாற்குடங்கள் எடுப்பார்கள்.

அன்று காவேரிக்கரைக்குப் பசுமாடுகள் அனைத்தையும் ஓட்டிச்சென்று அவற்றைக் குளிப்பாட்டி, சந்தனம், குங்குமமிட்டு, அவற்றின் பாலைக்கறந்து குடம் குடமாகச் சிவன் கோவிலில் வைப்பார்கள்.

காந்தமலை முருகனின் அபிஷேகத்திற்கு மேள வாத்தியத்துடன் அங்கிருந்து பாற்குடங்களை எடுத்துச் செல்வார்கள். 'முருகன் திருவருள் பெற்ற முனிவர்' எனப் பலராலும் மதிக்கப்பெற்ற இவர், எப்போதும் பாற்குடங்கள் எடுப்பவரின் முன்னணியில் இருப்பார்.

கொட்டு மேளத்துடன் ஓரே கோலாகலமாக இவர்கள் பாற்குடங்களை எடுத்துப் போகும்போது, வழியெல்லாம் அங்கங்கே வீட்டிலுள்ள மக்கள் தண்ணீர்விட்டு இவருடைய கால்களைக் கழுவுவார்கள்.

நடுநடுவே இவர் திருப்புகழ்ப் பாடல்களைப் பாடுவார். நாகசுரக்காரர்கள் அதையே திருப்பி வாசிப்பார்கள். அந்த நாதம் எல்லோரையும் மெய்ம்மறக்கச் செய்யும். கண்களிலிருந்து தாரை தாரையாக ஆனந்தக் கண்ணீர் பெருகும். மெய்ம்மறந்த ஆவேச நிலைக்கே இவர் போய்விடுவார். இவரை முருகனாகவே நினைந்து எல்லாரும் இவருடைய காலில் வீழ்ந்து வணங்குவார்கள்.

பால், பழம் எல்லாம் கொடுத்துக் கர்ப்பூர ஆரத்தி எடுப்பார்கள். வழியில் எதையும் இவர் சாப்பிடுவதில்லை. கூட வருபவர்கள் அவற்றையெல்லாம் வாங்கி வைத்துக் கொண்டு கோவிலுக்கு எடுத்து வருவார்கள். காந்தமலை முருகனுக்கு அபிஷேகமும், தீபாரதனையும்ா ஆன பிறகு அவற்றை எல்லோருக்கும் விநியோகிப்பது வழக்கம்.

**கன்னிப் பேச்சு**

அந்த வருஷம் அருணகிரி ஜயந்திக்குக் கோவிலில் ஏராளமான கூட்டம். பக்கத்து ஊர்களிலிருந்தெல்லாம்

பலர் தம் நண்பர்களுடனும், குடும்பத்துடனும் வந்திருந்தார்கள்.

பாற்குடங்கள் கோவிலுக்கு வந்து சேர்ந்தவுடன், காந்தமலை தண்டபாணிக்கு அபிஷேகம் நடைபெற்றது. அலங்காரமானவுடன் தீபாராதனை ஆயிற்று.

பிறகு காந்தமலையான் சந்நிதியில் பொதுகூட்டம் ஒன்று நடைபெற்றது. பலரும் பேசினார்கள். இவரையும் பேசச் சொன்னார்கள்.

இவர் 'அன்பு' என்ற தலைப்பில் முருகனைப்பற்றிப் பேசினார். இதுதான் இவரது கன்னிப் பேச்சு—பொதுக் கூட்டத்தில் பேசிய முதற் சொற்பொழிவு!

அன்று இவர் தம் பேச்சைத் தொடங்கியவுடன் அங்குமிங்குமாகக் கூட்டத்தில் இருந்த சலசலப்பு அடங்கியது. வெளியூர்களிலிருந்து வந்தவர்கள் சீக்கிரமாக ஊர் திரும்பவேண்டுமென்று கூட்டத்தின் பின்னால் நின்றுகொண்டிருந்தார்கள். அவர்களுங்கூட முன்னால் இடம் தேடி வந்து உட்கார்ந்தார்கள்.

கூட்டத்தில் இருந்தவர்கள் எவ்விதமான முயற்சியுமின்றி, பெருகி வந்த உள்ளப் பூரிப்புடன் தங்களை மறந்து இவரது சொற்பொழிவில் ஆழ்ந்துவிட்டார்கள்.

இவரிடமிருந்து மந்திரம் போல் ஒலிக்கும் தன்மை கொண்ட சொற்கள் மணிமணியாக அடுக்கியவைபோல் இசை நயத்துடன் துள்ளி வந்தன. எடுத்துக்கொண்ட பொருளைப் படிப்படியாக இவர் எடுத்துச் சொன்ன முறை புதுமையாக இருந்தது. இலக்கிய மணமும், நயமும் இணைந்த அற்புதமான பாணியில் இவரது பேச்சு யாவரையும் அன்பு வலையில் பிணைத்தது.

கூட்டம் முடிந்தவுடன் முன்பின் தெரியாதவர்கள் பலரும் இவரை நெருங்கி வந்து சூழ்ந்துகொண்டார்கள். பேச்சு நன்றாக இருந்ததாகச் சொல்லிப் பாராட்டினார்கள்.

### கிச்சு உடையார் அணிவித்த ருத்திராட்சம்

சேந்தமங்கலத்திலிருந்து வந்திருந்தவர்களில் ஒருவர் கிச்சு உடையார். இறைவன்பால் மிக்க அன்பு கொண்டவர். அவரைக் கிச்சு சுவாமிகள் என்றே மற்றவர்கள் அழைப்பார்கள். அவர், தம் அன்பர்களுக்கெல்லாம் ஓர் ஒற்றை ருத்திராட்சத்தைக் கறுப்புக் கயிற்றில் கோத்துத் தம் கையால் அவர்களின் கழுத்தில் கட்டிவிடுவார். இவருடைய கழுத்திலும் அவர் தாம் ஓர் ஒற்றை ருத்திராட்சத்தைக் கட்டிவிட்டார்; அன்று இவரது பேச்சையும் வெகுவாகப் புகழ்ந்தார்.

"தாங்கள் சேந்தமங்கலம் வந்து, எங்களுடன் தங்க வேண்டும்" எனக் கேட்டுக்கொண்டார் அவர்.

சேந்தமங்கலத்தின் பெயரைத் திரும்பக்கேட்டவுடன் இவருக்கு உள்ளம் புல்லரித்தது. அங்கே போய்த் தங்க வேண்டுமென்ற ஆசையுடன் அவ்வூருக்குக் கால்நடையாகவே நடந்து போனவராயிற்றே!

தம் உள்ளத்தில் மீதூர்ந்த இன்பத்தால், "அங்கு வந்து நான் என்ன செய்வது?" எனச் சற்றுக் குழப்பத்துடன் கேட்டார்.

"எங்களிடையே நீங்கள் கொஞ்சகாலம் தங்கியிருந்தாலே போதும். சும்மா இருக்கக்கூடாது என்றால், எங்கள் பிள்ளைகளுக்குத் தமிழும், ஆங்கிலமும் நீங்கள் கற்பிக்கலாம். உங்களுக்கு வேண்டிய வசதிகளை எல்லாம் அங்கே நாங்கள் செய்து தருகிறோம்" என்றார் கிச்சு உடையார்.

அவரது அன்புப் பேச்சு இவரை மிகவும் நெகிழச் செய்தது. "எல்லாம் காந்தமலை முருகன் திருவருள்; அவன்தான் நமக்கு இப்படி ஒரு வழியைக் காட்டுகிறான்" என்று உள்ளூற நம்பினார் இவர்.

அதனால் இவர் கிச்சுஉடையாரின் வேண்டுகோளுக்கு உடனே இணங்கினார். இவர் ஒருபணியை மேற்கொண்டு

சேந்தமங்கலம் செல்வதற்குத் தாய் தந்தையரும்மறுப்புக் கூறவில்லை.

**சேந்தமங்கலம் ஜமீன்தாருடன் நட்பு**

1925-ஆம் ஆண்டு ஒரு நாள் இவர் சேந்தமங்கலம் போய்ச் சேர்ந்தார்.

கிச்சு உடையாரைப் போய்ப் பார்த்தார். தங்கள் வேண்டுகோளுக்கிணங்க இவர் அந்த ஊருக்கு வந்ததில் அவருக்கு மிகவும் மகிழ்ச்சி. ஊரிலுள்ள பெரியவர்களிடமெல்லாம் இவரை அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தினார் உடையார்.

மிட்டாதார் பூமாலை உடையாரைச் சந்தித்தார். ஜமீன்தார் ஐராவத உடையாரைச் சந்தித்தார். முத்து வீரம் பிள்ளை, தலைக்கணக்கு ராமசாமி பிள்ளை, வரதராஜுலு செட்டியார், நெற்குப்பை சாமியார், வரதராஜையர், ராமையர், துரைசாமி ஆசாரி*போன்ற எல்லோரும் இவரிடம் மரியாதையாகவும், அன்பாகவும் நடந்துகொண்டார்கள்.

சேந்தமங்கலம் ஜமீன்தார் ஐராவத உடையார் நல்ல சொத்துக்காரர்; மிக்க செல்வாக்கு உடையவர். அவர் அவ்வூரில் மல்லிகைச் செடிகள் சூழ்ந்த தம் நந்தவனத்துக்கு நடுவில் ஓர் ஆசிரமத்தை அமைத்திருந்தார். அங்கே ஒரு புத்தகசாலையும் இருந்தது. அந்த ஊருக்கு யாரேனும் துறவியோ, பெரியவரோ வந்தால் அந்த இடத்தில் தங்கச் செய்வார். அதற்குத் 'தெய்விக ஆசிரமம்' என்றுபெயர்.

சேந்தமங்கலம் ஜமீன்தார் ஐராவத உடையார் இவரைத் தம் 'தெய்விக ஆசிரம'த்தில் தங்கியிருக்கும்படி சொன்னார்.

---

*'தெய்விக ஆசிரம' நிர்வாகக் குழுவில் இவருடன் பணியாற்றியவர்கள் இவர்கள்.

'தெய்விக ஆசிரம'த்தின் தலைவராக இருந்தார் பூமாலை உடையார். அதன் செயலாளராக இவரையும், கிருஷ்ணமூர்த்தி என்பவரையும் இருக்கச் சொன்னார்.

**'தெய்விக ஆசிரம வாசம்'**

மாதந்தோறும் இவர் 'தெய்விக ஆசிரம' உறுப்பினர் களிடமிருந்து சந்தா வசூலிப்பார். அரிக்கேன் விளக்கு, மண்ணெண்ணெய், தீபத்தெண்ணெய், நெருப்புப்பெட்டி என்று சந்தாப் பணத்திற்குப் பதிலாகச் சிலர் பொருள் களாகவும் கொடுப்பார்கள். ஆசிரமத்திற்குத் தினசரித் தமிழ்ப் பத்திரிகை, வாரப் பத்திரிகைகள் வரும்.

வாரந்தோறும் வெள்ளிக்கிழமை மாலை பஜனை நடைபெறும். இவர் அக்கூட்டத்தில் திருப்புகழ்பற்றிப் பேசுவார்; படிப்பார்: அலங்கார, அநுபூதிப் பாடல் களைச் சொல்வார். அவற்றுக்குப் பொருள் விளக்கம் தருவார். 'சின்னப்பையன் இவ்வளவு நன்றாகச் சொற் பொழிவாற்றுகிறானே, என்று அவர்களுக்கெல்லாம் ஒரே ஆனந்தம்.

சாப்பிடுவதற்காக இவர் வெளியில் எங்கும் போன தில்லை. தமக்கு வேண்டிய உணவுப் பொருட்களை இவர் தாமே சமைத்துக்கொண்டார்.

அவ்வூர்க்காரர்களும் இவர் தமது உணவைத் தயா ரித்துக்கொள்வதற்கு வேண்டிய அரிசி, கம்பு, கேழ்வரகு, பருப்பு, காய்கறி, விறகு, பால், நெய் எனத் தங்களால் ஆனவற்றைக் கொடுத்து உதவினார்கள். எல்லாவற்றை யும் விட மேலாகத் தம் பிள்ளைகளையும் இவரிடம் பாடம் கற்றுக்கொள்வதற்கு அனுப்பி வைத்தார்கள்.

காலையில் தம்மிடம் படிக்க வரும் குழந்தைகளைக் கண்டவுடன் இவருக்குப் பெருமகிழ்ச்சி உண்டாகும். அவர்களுக்கு அவர்களது பள்ளித்தமிழ், ஆங்கிலப் பாடங் களைச் சொல்லிக் கொடுத்தார்.

**எழுத்துப் பிழையறக் கற்பித்தல்**

இவர் முறையாக ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் பயின்றவர் இல்லை. என்றாலும், இவர் சொல்லித் தந்த முறை பிள்ளைகளுக்கு மிகவும் பிடித்தது; படிப்பில் அவர்களது ஆர்வத்தைத் தூண்டிவிடுவதாகவும் அமைந்தது.

தம்மிடம் வரும் குழந்தைகள் எவரிடமேனும், ஏதேனும் குறைபாடு கண்டால், இவர் உடனே அதனைப் பலரும் அறியச் சுட்டிக்காட்ட மாட்டார். அந்தக் குறைபாட்டை நீக்குவது எப்படி என்று தாமே யோசிப்பார்.

அக்குழந்தைகளுக்கு இவர் தமிழ்ப் பாடல் சொல்லித் தரும்போது இரண்டொருவருக்கு 'ழ' கர 'ள' கரங்களின் உச்சரிப்புச் சரியாக வரவில்லை.

தமிழுக்கே சிறப்பான எழுத்து என்கிற 'ழ'கரத்தை இன்னும் பல பெரியவர்களால்கூடச் சரியாக உச்சரிக்க முடியாததைப் பார்க்கிறோம். குழந்தைகள் என்ன செய்வார்கள்!

இவர் அவர்களுக்கு எழுத்துப் பிழையற உச்சரிக்கக் கற்றுத் தர வேண்டுமென விரும்பினார். அதற்காக முதலில் கந்தர் அலங்காரப் பாடல் ஒன்றைச் சொல்லிக் கொடுத்தார்:

> **அழித்துப் பிறக்கவொட்டா அயில்வேலன் கவியை [அன்பால்**
> **எழுத்துப் பிழையறக் கற்கின்றிலீர் எரிமூண்டதென்ன**
> **விழித்துப் புகையெழப் பொங்குவெங் கூற்றன் விடும் [கயிற்றால்**
> **கழுத்தில் சுருக்கிட்டு இழுக்குமன்றோ கவி [கற்கின்றதே.**

இந்தப் பாடலில் 'ழ'கரங்கள்மட்டும் ஏழு இருக்கின்றன. முதலில் இந்தப் பாடலை அவர்களுக்குச் சொல்லிக்கொடுத்தார். திரும்பத் திரும்பக் குழந்தைகள்

இதனைச் சொல்வதால் அவர்களால் 'ழ'.கரத்தைச் சரியாகச் உச்சரிக்க முடிந்தது.

இதுபோலவே, தினமும் பாடல் ஆரம்பிக்கும்முன் கடவுள் வாழ்த்தாக எல்லோரும் சொல்வதற்கு ஒரு பாடலைத் தேர்ந்தெடுத்தார்.

**காரொழுகும் குழலாளை கருணை வழிந்தொழுமிரு [கடைக்கண்ணாளை**
**முரலிளநிலவொழுகப் புழுகொழுக அழகொழுகும் [முகத்தினாளை**
**வாரொழுகும் தனத்தாளை வடிவொழுகித் தெரியாத [மருங்குலாளை**
**சீரொழுகும் பதத்தாளை அருணை உண்ணாமுலை [யாளைச் சிந்தை செய்வாம்**

என்கிற பாடல்தான் அது. அதில் நிறைய லகர, ளகர, ழகரங்கள் வருகின்றன. அந்தப் பாடலை இவருடன் சேர்ந்து குழந்தைகள் சொல்ல ஆரம்பித்தனர். சில தினங்களிலேயே சரியாகச் சொல்லத் தெரிந்துகொண்டனர். அப்புறம் லகர, ளகர, ழகர பேதங்கள் நன்றாக விளங்கும்படி அவர்களால் உச்சரிக்க முடிந்தது.

குழந்தைகளுக்கு இவர் பாடம் சொல்லித் தருவதை ஒன்றிரண்டு சமயம் அருகில் இருந்து கவனித்தவர்கள் வெளியில் போய் இவரைப் பெரிதும் புகழத் தொடங்கினார்கள்.

**குமாஸ்தாவாகப் பணியாற்றியது**

சேந்தமங்கலம் ஜமீன்தார் ஐராவத உடையார் இவற்றையெல்லாம் கேட்டு மகிழ்வார். அவருக்கு இவரிடம் தனிப்பட்ட அன்பு பிறந்தது; பொழுது போகாமல்,பிற்பகலில் இவர் அடிக்கடி தத்தகிரி சென்று, சேந்தமங்கலம் அவதூத சுவாமிகளைப் போய்ப் பார்த்துப் பேசிக்கொண்டிருந்துவிட்டு வருவதையும் அறிந்தார்; எங்கே இவர் சாமியாராகித் தம் ஊரை

விட்டுப் போய்விடுவாரோ என்றும் கலக்கம் உண்டா யிற்று, உடையாருக்கு. இவரைத் தம் ஊரிலேயே தங்க வைத்துக்கொள்ள யோசனை செய்தார்.

ஜமீன்தார் ஐராவத உடையார்தாம் சேந்தமங்கலம் பஞ்சாயத்து ஒன்றியத் தலைவர். எனவே, தமது பஞ்சாயத்து ஒன்றியத்தில் இவருக்குக் குமாஸ்தா வேலை போட்டுக் கொடுத்தார். மாதச்சம்பளம் இருபது ரூபாய். இது இவருக்கு மிகவும் உபயோகமாக இருந்தது.

இப்படிப் பஞ்சாயத்து ஒன்றியத்தில் கணக்கர் பதவி யில் சேர்ந்தவுடன் இவரால் தாமே சமைத்துச் சாப்பிடுவது சிரமமாக இருந்தது. தம் பெரிய பாட்டி பார்வதி அம்மாளைத் தமக்குச் சமைத்துப் போட அழைத்து வந்து தம்மிடம் வைத்துக்கொண்டார். தம் வருமானத்தில் தம் பெற்றோருக்குப் பணமாகவும் பொருள்களாகவும் இவரால் ஓரளவு உதவி செய்ய முடிந்தது, இவருக்கு மன ஆறுதலை ஏற்படுத்தியது.

''முருகனின் ஆசியினாலும் பெரியோர்களின், சத் சங்கத்தினரின் கூட்டுறவினாலும், நோயற்ற வாழ்வும், குறைவில்லாச் செல்வமும், நீண்ட ஆயுளும், விடாமுயற்சி யும், தளரா நெஞ்சமும், எல்லா மேன்மையும் மேன் மேலும் அபிவிருத்தியாக வேணும்'' என இப்படி ஓர் ஆசீர்வாதத்தைத் தந்தையார் வாசுதேவையர் தம் குழந்தைகளுக்குக் கடிதம் எழுதும்போது முதலில் எழுதிய பின்னரே விஷயத்தைத் தொடங்குவார். அப்படி அவருக்கு ஒரு பழக்கம்.

'நம் தந்தையாரின் ஆசீர்வாதப் பலனாகத்தான் முருகனின் கடைக்கண் அருள், பல பெரியோர்களின் நல்லுறவு யாவும் நமக்குக் கிடைத்து வருகின்றன. ஒன்றன் பின் ஒன்றாகப் பல அநுகூலங்கள் விளைகின்றன' என இவர் அடிக்கடி நினைந்து மனம் உருகுவார்.

**சகோதரிகள் திருமணம்**

இவரைப்பற்றிய கவலை தாயாருக்கு ஓரளவு நீங்கியது. அவர் அப்போது கருவுற்றிருந்தார். மாசம் அதிகம் ஆவதற்குள் தம் பெண்கள் மூவரில் இரண்டு பேருக்காவது உடனடியாகத் திருமணம் செய்யவேண்டுமெனக் கவலைப்பட்டார்.

அந்தக் காலத்தில் பெண் குழந்தைகளுக்குச் சிறு வயதிலேயே திருமணம் செய்துவிடுகிற பழக்கம் இருந்தது. அதுவும் இவர்களது மாவட்டத்தில் பெரியவர்கள் ஐந்தாறு திருமணங்களை ஒன்றாகச் சேர்த்துக் 'கம்யூனிட்டி மாரியேஜ்' என்பதாக ஓரிடத்தில் ஒரே நாளில் நடத்தி வைப்பார்கள். உபநயனங்களையும் இப்படி ஒன்றாகச் சேர்ந்து நடத்துவதும் உண்டு இந்தக் கூட்டுத் திருமண முறை பல ஏழை-நடுத்தரக் குடும்பங்களுக்கு உதவும் நல்ல திட்டமாக இருந்து வந்தது.

பெண் வீட்டார் தங்கள் பெண்களை யார் யாருக்குத் திருமணம் செய்துகொடுப்பது என்பதை அவர்களே தீர்மானம் செய்துகொள்ள வேண்டும். மற்றும் எதிர் ஜாமீன் கொடுப்பது, சேலை, நகைநட்டு வாங்குதல் போன்ற செலவுகளையும் அவரவர்கள் தகுதிக்கேற்ப அவரவர்களே செய்துகொள்ளவேண்டும்.

திருமணத்தன்று ஆகும் செலவுகளைமட்டும் இப்படிக் 'கம்யூனிட்டி மாரியேஜ்' நடத்தி வைப்பவர்கள் ஏற்றுக் கொள்வார்கள்.

தகப்பனார் தம் பெண்களின் கல்யாணத்திற்காகத் தமக்குப் பூர்விகமாக இருந்த கொஞ்சம் நிலத்தையும் விற்றார். அந்தப் பணத்தைக் கொண்டு இவருடைய சகோதரியர் மதுகரத்திற்கும் மங்களத்திற்கும், சேலை நகைநட்டு முதலியவற்றை வாங்கியதுடன் கொஞ்சம் எதிர் ஜாமீனும் கொடுத்து மாப்பிள்ளைகளையும் நிச்சயித்தார்.

சமுதாயத் திருமண அமைப்பின்கீழ் இவருடைய சகோதரிகளின் திருமணம் திருநாகேசுவரம் ஒப்பிலியப்பன் கோவிலில் நடைபெற்றது.

**கலங்காத சித்தம்**

திருமணத்திற்கு முதல் நாள் இவர் தம்முடன் இருந்த பெரிய பாட்டியாரையும் அழைத்துக்கொண்டு நேரே ஒப்பிலியப்பன் கோவில் சென்றார். இவரது சேந்தமங்கலம். வாழ்க்கையைப்பற்றி இவரிடம் எல்லோரும் விசாரித்து மகிழ்ந்துகொண்டிருந்தார்கள். அந்த நேரம் ஒரு சப் இன்ஸ்பெக்டர், இரண்டு போலீசாருடன் வந்தார். "யார் சார், வாசு தேவையர்?" என்று விசாரித்தார். எல்லாருக்கும் நெஞ்சம் 'பக்'கென்றது.

"ஏன், நான்தான்" என்று இவருடைய தகப்பனார் சொன்னார்.

"உங்கள் பெண்ணைக் கிருஷ்ணமூர்த்திக்குத் திருமணம் செய்து கொடுக்க நிச்சயித்திருக்கிறீர்களா? எங்கே அந்தக் கிருஷ்ணமூர்த்தி?" என்றார்.

கிருஷ்ணமூர்த்தி என்பவர்தான் இவருடைய சகோதரி மதுகரத்திற்கு நிச்சயம் செய்திருந்த மாப்பிள்ளை. தம் குடும்பத்திற்கு வேண்டிய சாமான் வாங்கி வருவதாகச் சொல்லி அவர் கும்பகோணம் போயிருந்தார்.

"அவர் கும்பகோணம் போயிருக்கிறார். வந்துவிடுவார்" என இவருடைய தந்தையார் கூறினார்.

"அவருக்குப் போய் உங்கள் பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்க நிச்சயித்திருக்கிறீர்களே! அவர் ஒரு பெரிய 'ஃப்ராட்'. இதுபோல் பலரை ஏமாற்றி அவர்களுடைய பெண்களை ஏற்கனவே திருமணம் செய்துகொண்டிருக்கிறார்" என்று சப் இன்ஸ்பெக்டர் சொன்னதைக் கேட்டவுடன் வீட்டுப் பெண்கள் அதிர்ந்துவிட்டார்கள்.

"எங்களுக்கு அவரைப்பற்றிப் புகார் வந்துள்ளதால் அவரைக் கைது செய்ய வந்திருக்கிறோம்" எனத் தாங்கள் வந்த காரணத்தையும் காவலர்கள் சொன்னவுடன், "இந்தக் கல்யாணம் நடந்தாற் போலத்தான்!" எனப் பலரும் இடிந்து போனார்கள். தமக்கு நெருங்கிய உறவுக்காரர் என்று யாருமே இல்லையென அவர் முன்பு சொல்லிக்கொண்டதற்கு இதுதான் காரணம் போலும் எனவும் நினைக்கத் தொடங்கினார்கள். யார் முகத்திலும் ஈயாடவில்லை.

இவரோ, "இப்போது என்ன, கல்யாணமா ஆகிவிட்டது? ஏன் கவலைப்படுகிறீர்கள்? கும்பகோணம் போயிருப்பவர் வரட்டுமே. வந்தவுடன் விசாரிக்கலாம்" எனக் கொஞ்சங்கூடப் பதற்றம் இல்லாமல், கலங்காத சித்தத் திடத்துடன் ஒரு மூலையில் போய் உட்கார்ந்து முருகனைத் தியானிக்க ஆரம்பித்துவிட்டார்.

"என்னடி, இவன் கொஞ்சங்கூடக் கவலைப்படாமல் இப்படி இருக்கிறான்?" என இவருடைய பெரிய பாட்டியார் மனம் வருந்தினார்.

அதற்கு, "அவனது சுபாவம் அதுதான். உங்களுக்குத் தெரியாதா, அவனது குணம்?" என இவருடைய தாயார் மனவேதனையுடன் சொன்னார்.

கும்பகோணத்திலிருந்து மாப்பிள்ளை திரும்பிவர நேரமாக ஆக, 'இன்ஸ்பெக்டர் சொன்னதுதான் உண்மையாக இருக்கும். விஷயம் வெளிப்பட்டது தெரிந்து எங்காவது ஓடியிருப்பான். அவன் எங்கே இனி வரப்போகிறான்?' என நம்பிக்கை இழந்து பெண்கள் பேசத் தொடங்கினார்கள்.

அப்போது இவர் அவர்களது பேச்சில் கலந்து கொள்ளவில்லை. இரவு வெகுநேரம் கழித்து அந்தக் கிருஷ்ணமூர்த்தி வந்தார்; குடும்பத்திற்காக வாங்கிய

சாமான்கள் பலவற்றையும் உடன் கொண்டு வந்திருந்தார்.

இன்ஸ்பெக்டர் விசாரித்தபோது தாம் தேடி வந்த கிருஷ்ணமூர்த்தி அவர் அல்ல எனத் தெரிந்தது.

பிறகுதான் எல்லோர்முகத்திலும் பழைய கல்யாணக் களையே வந்தது. மறு நாள் இவருடைய இரு சகோதரி களின் திருமணமும் இனிதே நடைபெற்றது.

தாம் சேமித்து வைத்திருந்த சிறு தொகையிலிருந்து தம் சகோதரிகளுக்காக இவர் வாங்கி வந்திருந்த காதுத் தோடுகளை அவர்கள் அணிந்திருந்தார்கள். அதைப் பார்த்து இவர் மிகவும் மகிழ்ந்தார்.

## ஆங்கிலேயருக்குத் தமிழ் கற்பித்தல்

சேந்தமங்கலத்தில் கிறிஸ்துவச் சபை ஒன்றும் இருந் தது. அதற்கு எஸ்.பி.மிஷன் (Strict Baptist Mission) என்று பெயர்; ப்ராடெஸ்டென்ட் பிரிவைச் சேர்ந்தது. அதன் மத குருவாக பூஜ்யர் த்ரோவர் துரை (Rev. Thrower) என்பவர் இருந்தார். அவருக்கு அப்போதுதான் திருமணமாகியிருந்தது. அந்தத் தம்பதியர் ஆங்கிலேயர்; தமிழ் கற்றுக்கொள்ள வேண்டுமென்று அவர்களுக்கு ஆசை.

''சொல்லித் தருவதற்குத் தகுதியானவர் யாரேனும் இந்த ஊரில் இருக்கிறாரா?'' என விசாரித்தார் துரை யவர்கள்.

பலரும் இவரது பெயரை அப்போது சிபார்சு செய் திருக்கிறார்கள். அதனால் இவரை அழைத்துவர ஆள் அனுப்பினார் துரையவர்கள்.

அப்போது இவர் மோகனூர் போயிருந்தார்; இவருக்குத் தம்பிக்குழந்தை(பாலசுப்பிரமணியன்)பிறந்த சமயம். பெண்களின் கல்யாணத்திற்காக ஆறு தாண்டி ஒப்பிலியப்பன் கோவில் போய்வந்து அங்கு

ஏற்பட்ட அதிர்ச்சி, அலைச்சல் காரணமாக நிறைமாதம் ஆவதற்குள்ளேயே இவருடைய தாயாருக்குப் பிரசவம் ஆகிவிட்டது. இதனால் அவரது உயிருக்கே ஆபத்தாயிற்று. தம் மூத்த மகனைப் பார்க்க அவர் விரும்பினார். அதனால் மாப்பிள்ளை கிருஷ்ணமூர்த்தியே அவசரம் அவசரமாகச் சேந்தமங்கலம் வந்து, தம்முடன் இவரையும், இவருடைய பெரிய பாட்டியையும் மோகனூர் அழைத்துப் போயிருந்தார். இவர் சில நாட்கள் அப்போது மோகனூரிலேயே தங்க நேரிட்டது. இவர் அங்கே போன வேளை தாயாரும், தம்பியும் உயிர் பிழைத்துக்கொண்டார்கள்.

'இதுவும் நல்ல காலம்; முருகன் திருவருள்' என மகிழ்ந்து மோகனூரிலேயே தம் பெரியபாட்டியை விட்டுவிட்டுத் தனியே சேந்தமங்கலம் திரும்பினார்.

இவர் திரும்பி வந்ததை அறிந்தவுடன் கிறிஸ்துவ சபையிலிருந்து அந்த ஆள் மீண்டும் வந்தார்.

''எங்கள் மதகுருவும், அவருடைய மனைவியும் தங்களிடம் தமிழ் கற்க விரும்புகிறார்கள். இது சம்பந்தமாகத் தங்களைப் பார்க்க வேண்டுமாம். தாங்கள் வர வேண்டும்'' என்று சொன்னார்.

இரண்டு நாட்கள் கழித்து வருவதாக இவர் அவரிடம் சொல்லி அனுப்பினார்; ஊரிலிருந்து வந்த அசதி; 'கிறிஸ்துவ சபைக்குப் போகலாமா?' என்கிற தயக்கம்; மேலும் இதற்கு முன் ஆங்கிலேயர்களுடன் பழகியதும் இல்லை.

இவரைத் தமக்குத் தமிழ் சொல்லிக் கொடுக்க ஓர் ஆங்கிலேயரே அழைக்கிறார் என்பதில் இவருடைய நண்பர்கள் பெருமை கொண்டார்கள்.

''போங்கள்; போய் அவர்களுக்குத் தமிழ் சொல்லித் தாருங்கள்; சம்பளம் மாதம் 25 ரூபாய் கேளுங்கள், அந்து, பத்துக்கு ஒப்புக்கொள்ளாதீர்கள்'' என்றார் ஒரு நண்பர்.

பெரும்பாலும் இவர் சட்டை போடாமல் இருந்த காலம் அது. ''பூஜ்யர் த்ரோவர் துரையைப் பார்க்கப் போகும்போது சட்டை போட்டுக்கொண்டு போங்கள்'' என நண்பர்கள் வற்புறுத்தினார்கள். முதன்முதலாக அப்போதுதான் இவர் கதர் ஜிப்பா ஒன்று தைத்துக் கொண்டார்.

குறிப்பிட்ட நாளன்று இவர் எஸ். பி. மிஷன் போய்ப் பார்த்தார். இவரைக் கண்டதும் அவர்களுக்கு மிக்க மகிழ்ச்சி ஏற்பட்டது.

''எங்கள் கிறிஸ்துவ சபையின் பரீட்சைக்காக நாங்கள் திருக்குறளைப் படிக்கவேண்டும். நீங்கள் சொல்லித் தர முடியுமா?'' என்று கேட்டார் துரையவர்கள்.

இவர் அதற்கு ஒப்புக்கொண்டார்; வாரத்திற்கு நான்கு நாட்கள் சொல்லித் தரவேண்டும் என்றும், அவர்கள் வெளியூர் போகும்போது வரவேண்டாமென்றும் கூறி, மாதம் இருபத்தைந்து ரூபாய் சம்பளம் தரவும் அவர்கள் சம்மதித்தார்கள்.

இதன்படி மறு நாள்முதல் அவர்களுக்கு இவர் தமிழ் சொல்லித் தரத் தொடங்கினார். முதலில் அந்தப் பாதிரியாரின் மனைவிக்குப் பாடம் சொல்வார். பின்பு பாதிரியாருக்குத் திருக்குறள் பாடம் நடத்துவார். வீட்டிற்குத் திரும்பி வரும்போது மதகுரு தமக்கு வந்துகொண்டிருந்த ஆங்கிலத் தினசரிப் பத்திரிகையை இவரிடம் படிப்பதற்குக் கொடுத்தனுப்புவார்.

பெரும்பாலும் தமிழ்ப் பத்திரிகைகளையே படித்துக் கொண்டிருந்த இவருக்கு ஆங்கிலப் பத்திரிகையைப் படிக்கச் சந்தர்ப்பம் கிடைத்தது. அதனால் ஆங்கிலத்தில் எழுதிப் பழக வேண்டுமென்ற ஆசையும் எழுந்தது.

உள்ளூர் நிருபர் போல், சேந்தமங்கலம்பற்றிய செய்திகளை அவ்வப்போது ஆங்கிலத்தில் இவரே எழுதி

அந்தப் பத்திரிகைக்கு அனுப்புவார்; அவை வெளியான போது தம் நண்பர்களிடமும், பூஜ்யர் த்ரோவர் துரையிடமும் தாமே கொண்டுபோய்க் காட்டுவார்.

பூஜ்யர் த்ரோவருக்கு இவரை மிகவும் பிடித்து விட்டது. இவர் சொல்லித் தரும் முறை மிக விளக்கமாக இருக்கிறது என அடிக்கடி பாராட்டுவார்.

**அமிழ்தினும் ஆற்ற இனிதே தம்மக்கள்**
**சிறுகை அளாவிய கூழ்**

என்ற திருக்குறளுக்கு இவர் ஒரு நாள் விளக்கம் சொன்ன போது மிகவும் மகிழ்ந்து போனார் துரையவர்கள். அப்போது அவர்களுக்குக் குழந்தையில்லை; ''எவ்வளவு அருமையான பாட்டு!'' என உணர்ச்சியோடு சொன்னார் துரையவர்கள்.

''உங்களிடம் பாடம் கேட்பதை வைத்துக்கொண்டு திருக்குறளுக்கு நானே ஓர் ஆங்கில மொழிபெயர்ப்பை எழுதிவிடலாம்'' என அவர் சொன்னபோது இவர் மிகவும் பூரிப்படைந்தார்.

## ச. கு. க-வின் சிறப்புப் பாயிரம்

மோகனூருக்குப் பத்துக் கல் தொலைவில் (சேலம் மாவட்டத்து) வேலூர் என்கிற ஊர் இருக்கிறது. அந்த வேலூர் இந்து பாடசாலையில் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றிக்கொண்டிருந்தார், ச.கு. கணபதி ஐயர்.* அவர் ஒரு சமயம் சேந்தமங்கலம் வந்தார். சேந்தமங்கலம் அவருடைய தாய்வழிப் பாட்டனாரின் ஊர்.

அவரிடம் சிலர் இவரைப்பற்றிப் பெருமையாகச் சொன்னபோது, ''அப்படியா? அந்த இளைஞரை நான் பார்க்க வேண்டுமே!'' என்றாராம்.

---

* பிற்காலத்தில் அவர் சில ஆண்டுகள் 'கலைமகள்' பத்திரிகையில் பணியாற்றினார்.

அதை இவருடைய நண்பர் ஒருவர் இவரிடம் வந்து சொன்னார். உடன் இவர் தமிழ்ப் பண்டிதர் கணபதி ஐயரைப் போய்ப் பார்த்தார்.

அவர் இவரிடம் சில பல விவரங்களைக் கேட்டார். இவர் முறையாகத் தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பயிலாதவர் என்பதைத் தெரிந்துகொண்டார். உடனே தம்மிடமிருந்த 'சிற்றிலக்கணம்-சொற்றொடர் ஆக்கம்" என்னும் சிறிய புத்தகத்தை எடுத்து, அதில் ஒரு குறள் வெண்பாவை எழுதி, தம் அன்பளிப்பாக இவரிடம் கொடுத்தார்.

இவர் அதை வாங்கிக்கொண்டார். அவர் எழுதி யிருந்த பாடலைப் படித்துவிட்டு, பதிலுக்குத் தாமும் ஒரு வெண்பா எழுதி அவரிடம் கொடுத்தார்:

**பள்ளிச் சிறார்பயிலும் பாங்காய் இலக்கணத்தைக்**
**கொள்ளத் தகுவ(து) என்று கூர்ந்தளித்தான்**
**— கொள்ளையொடு**
**நற்கணப திக்குநிகர் அன்பே நிறைந்த**
**சுவைச்சொல் கணபதி ஈங்கு.**

(கூர்ந்து-அன்புகூர்ந்து; கொள்ளையொடு-மிகுதியான அன்போடு.)

அதைக் கண்டவுடன் கணபதி ஐயருக்கு மிகவும் வியப்பு உண்டாகிவிட்டது. "இந்த வட்டாரத்தில் உன்னைப் பலரும் புகழ்ந்து கூறுவது நியாயந்தான்; முருகன் திருவருளால்தான் நீ இத்தகைய கவியாற்றலைப் பெற்றிருக்கிறாய்" எனப் பாராட்டினார்.

"வேறு பாடல்கள் எவையேனும் பாடியிருக்கி றாயா?" என்று கேட்டார் கணபதி ஐயர்.

காந்தமலை ஆண்டவன்மேல் ஏற்கனவே 'பதிற்றுப் பத்தந்தாதி' பாடியிருப்பதாகச் சொன்னார் இவர்.

கணபதி ஐயருக்குப் பின்னும் வியப்பு அதிக மாயிற்று. இவருடன் இவர் இருக்குமிடம் வந்து, அந்த

நூலையும் வாங்கிப் போய்ப் படித்தார்; தாமே அந்நூலுக்கு ஒரு சிறப்புப் பாயிரமும் எழுதித் தந்தார்.

..................
**காவிரி காவிரி கவினுறச் செல்லும்**
**தாவெழில் மிக்க மோகையின் மறைபயில்**
**கோசிக மரபினன் வாசுதேவற்குப்**
**பேசிடும் குமரனாய் வந்தவ தரித்தோன்**
**பாவெழிற் பயிலும் பான்மை அனைத்தியல்**
**ஓதா துணர்ந்த உறுநல மிக்கோன்**
**குகன்றிரு வடிக்கே அகம்படித் தொண்டன்**
**சகம்புகழ் திருவளர் சீர்த்திச்**
**சகநாத னெனும் தகைமை யோனே**

என, 'வேலூர் இந்து பாடசாலைத் தமிழாசிரியர் திரு ச.கு. கணபதி ஐயர் அவர்கள் வழங்கிய சிறப்புப் பாயிரம்' என எழுதிக், கையொப்பமிட்டுக் கொடுத்தார்.

## தமிழ் இலக்கியத்தில் பேரார்வம்

(அன்பர் கி.வா.ஜ-வின் நண்பர்கள் திரும்பத் திரும்ப இவருடைய கவிதைகளைப் படித்து இவரைப் பெரிதும் பாராட்டினார்கள். இவருக்கு என்னவோ கண்ணில் தூசி விழுந்தாற்போல, ஒரு மன உறுத்தல் உண்டாயிற்று.

"தமிழாசிரியர் கணபதி ஐயர் நன்றாகப் படித்திருக்கிறார்; கவிதை எழுதுகிறார். நாம் எதையும் முறையாகப் படிக்கவில்லை. ஓதாது உணர்ந்து கவிதை எழுதினாலும், அதில் ஏதேனும் இலக்கணப் பிழை இருக்கிறதா இல்லையா என்பதை நம்மால் அறிந்துகொள்ள முடியவில்லை. இலக்கண இலக்கியங்களை முறையாகப் படிக்காதவன் எனத் தெரிந்துதான் சிற்றிலக்கண நூல் ஒன்றை நமக்கு வழங்கினாரோ?' எனத் தம்முள் நினைந்து வெட்கப்படலானார்.

பழந்தமிழ் இலக்கிய இலக்கணங்களை நன்றாகப் படித்த யாரிடமேனும் தாமும் அவற்றை முழுமையாகக் கற்க வேண்டுமென்ற ஆசை இவரது உள்ளத்தில் மூண்டது.

ஒரு சமயம் திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் ஒரு விழாவுக்குச் சேந்தமங்கலம் வந்திருந்தார்.

அவர் வடமொழி, தென்மொழிகளில் நல்ல புலமை வாய்ந்தவர். கடல்மடை திறந்ததுபோல மணிக்கணக் காகக் கேட்போர் சிறிதும் சலிப்படையாவண்ணம் பிரசங்கம் செய்வார்.

அவருடைய சொற்பொழிவுகளால் தமிழினிமையை நுகரும் ஆசை பெற்றவர்களும், சைவ சீலத்தை மேற் கொண்டவர்களும், பாதகச் செயல்களிலிருந்து நீங்கினவர் களும் பலப்பல பேர் உண்டு.

அவரை யாவரும் திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமிகள் என்றே அழைப்பர். 'பழந்தமிழ் இலக்கண இலக்கியத்தைப் பலர் இந்த ஞானியார் சுவாமிகளிடம் முறையாகப் பயின்று வருகிறார்கள்' என்பதை இவர் தெரிந்துகொண்டார். சுவாமிகள் என்று யார் வந்தாலும் அவரைப் போய்ப் பார்ப்பதும் இவரது இயல்பாயிற்றே! அந்த விழாவிற்கு இவர் சென்றிருந்தார்.

அவரை நேரில் பார்த்த பின்பு, அவருடைய பேச்சைக் கேட்ட பின்பு முருகன் திருவருளால்தான் இத்தகைய தோர் அரிய வாய்ப்புத் தமக்குக் கிடைத்துள்ளதாக இவர் மகிழ்ந்தார்.

ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகளிடம் சென்று முறை யாகத் தமிழ் படிக்க வேண்டுமென்ற ஆர்வம் கரைகடந்து விட்டது.

இவருடைய நண்பர்களில் சிலர், "நீங்கள் முதலில் ஜமீன்தார் ஐராவத உடையாரிடம் சொல்லுங்கள்; கிச்சு

சுவாமிகளிடமும் சொல்லுங்கள். இதில் அவர்களுக்கு ஆட்சேபம் இல்லையென்றால், நாங்களே உங்களை ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகளிடம் அனுப்பிவைக்க முயலு கிறோம்'' என்று தெரிவித்தார்கள்.

தம்முடைய விருப்பத்திற்கு மாறாகச் சேந்தமங்கலம் ஜமீன்தாரோ, கிச்சு உடையாரோ எதுவும் சொல்ல மாட்டார்கள் என்ற நம்பிக்கை இவருக்கு உண்டு. அவர் களிடம் சென்று தம் விருப்பத்தைத் தெரிவித்தார்.

இந்த யோசனைக்கு அவர்கள் இணங்கவில்லை. அது இவருக்கு ஒரு பெரிய ஏமாற்றமே. அப்போதைக்குத் தம் ஆசையை இவர் தாமே கட்டுப்படுத்திக்கொள்ள நேரிட்டது.

மேற்கொண்டு அந்த நேரம் ஜமீன்தாரை வற்புறுத்து வது உசிதமாக இவருக்குத் தோன்றவில்லை. காரணம், அவர் அப்போது வேறு ஒரு கவலையில் ஆழ்ந்திருந்தார்.

**வரவேற்புக் கவிதை எழுதியது**

சேந்தமங்கலத்தில் எப்போதும் கொஞ்சம் தண்ணீர்த் தட்டுப்பாடு உண்டு. வீட்டுக் கிணறுகளில்கூட, பத்துப் பன்னிரண்டடி கீழே இறங்கித்தான் தண்ணீர் முகந்து வர வேண்டும்.

அந்த ஊரில் ஒரு குளம் உண்டு. அதற்குத் தண்ணீர் விட வேண்டுமென்றால் நாமக்கல் ஜமீன்தார் ரெட்டியார் அதற்கு இணங்கவேண்டும். அவரை எப்படி இணங்க வைப்பது என ஜமீன்தார் ஐராவத உடையார் யோசித்துக் கொண்டிருந்தார்.

முடிவில், ஒரு விழா ஏற்பாடாயிற்று. அதற்கு நாமக்கல் ஜமீன்தாரை வரவழைத்தார்கள்.

இவர் நாமக்கல் ஜமீன்தார் ரெட்டியாருக்கு ஒரு வரவேற்பு வாசித்தளித்தார். அந்த வரவேற்புக் கவிதை

யைப் பாராட்டி நாமக்கல் ஜமீன்தார், ''உங்களுக்கு யார் இதையெல்லாம் சொல்லிக் கொடுத்தது?'' என்றார்.

அந்த அறையின் சுவரில் பல படங்களுக்கிடையே முருகன் படம் இருந்தது. அந்தப் படத்தை இவர் தொட்டுக் காட்டி, ''இவன் சொல்லிக் கொடுத்ததுதான்'' என்று சொன்னார். எல்லோருக்கும் பிரமிப்பாய்ப் போய்விட்டது.

வீடு வந்தவுடன் இவருக்குத் தொண்டை கட்டிக் கொண்டது. பேசக்கூட முடியாமல் இவர் சில நாட்கள் துன்புற்றார்.

''யார் கண் மோ பட்டுவிட்டது'' எனக் கிச்சு உடையாரின் பாட்டியார் இவரை உட்கார வைத்துச் சுற்றிப் போட்டார்.

**பாம்பின் கால் பாம்பு அறியாதா?**

கிறிஸ்துவ சமயத் தேர்வுக்காக, குறிப்பிடப்பெற்ற புத்தகங்கள் சில இருந்தன. அவை யாவும் பெரிய எழுத்துக்களில் அச்சிடப்பெற்றவை.

அந்தத் தமிழ் நூல்களைப் பூஜ்யர் த்ரோவருடைய மனைவியார் தாமே கொஞ்சங் கொஞ்சமாக எழுத்துக் கூட்டிப் படிக்கும் நிலையை அடைந்தார். அதனை அவர் படிக்கும்போது நடுநடுவே சரியாக எழுத்துக்களை உச்சரிக்கவும் இவர் சொல்லிக் கொடுப்பார்.

அந்தக் கிறிஸ்துவ சமய போதனா நூல்கள் பெரும் பாலானவற்றில் இந்து சமய ஆசாரங்களைப் பழித்தும், புராணக் கதைகள், கடவுளர்களை இழித்தும் எழுதப் பட்டிருந்த பாடங்கள் இருந்தன.

இவரோ இளமையும் பக்தியும் ஒருங்கே சேர்ந்த உள்ளம் கொண்டவர். அந்தப் புத்தகத்தைப் பாடம் சொல்லி வந்தபோது இவரது மனம் வருந்தியது உண்டு. என்றாலும், தமிழ் கற்க வேண்டுமென்ற ஆர்வமும், தூய அன்பு உள்ளமும் கொண்டவர்களாக அவர்கள் இருந்த

தால், இவர் தம் உணர்ச்சியை வெளிப்படுத்திக் கொள்ளாமல் இருந்தார். இந்து புராணக் கதைகளைப் பற்றிய அவதூறுகளைக் கண்டுகொள்ளாமல் பாடம் சொல்லி வந்தார்.

ஒரு நாள் இவர் சொல்லித் தந்துகொண்டிருந்த பாடத்தில் இவர் வழிபடும் முருகனைப்பற்றிக் குறைவாக எழுதப்பட்டிருந்த பகுதி வந்தது.

''இவை எல்லாம் சுத்த அபத்தம் (These are sheer (nonsense)'' எனச் சொன்னதோடு அந்தப் புத்தகத்தையே மூடி வைத்துவிட்டு வந்துவிட்டார். அதுகாறும் அடங்கி இருந்த கோபமும் தாபமும் திடீரென வெளிப்பட்டுவிட்டன.

''இனிமேல் உங்களுக்கு அந்த வேலை இல்லை'' என்று இவருடைய நண்பர் ஒருவர் சொன்னார்.

''முருகனைப்பற்றி இழிவாகச் சொல்லித் தரும் வேலை எனக்கும் வேண்டாம்'' என இவரும் சொல்லி விட்டார்.

ஏதோ ஒரு வேகத்தில் எதையும் சொல்லி விடுபவர்கள் பின்னால் ஏன் அப்படிச் சொன்னோம் என வருந்துவார்கள். அப்படி வருந்தும் நிலை இவருக்கு ஏற்படவில்லை.

இவர் சமயப் பற்றுள்ள இந்து என்றால், பூஜ்யர் த்ரோவரும் சமயப் பற்றுள்ள தூய கிறிஸ்துவராக இருந்தார். பாம்பின் கால் பாம்பு அறியாதா?

அவரே அடுத்த நாள் இவரைக் கூப்பிட்டு அனுப்பினார். ''ஜகந்நாதன், நான் படித்தால் போதுமா? பிறருக்குப் பாடம் சொல்லித் தரப் பழகவும் வேண்டாமா? கிறிஸ்துவ மத சம்பந்தமான புத்தகங்களைமாத்திரம் என் மனைவிக்கு இனி நானே பாடம் சொல்லித் தருகிறேன். நீங்கள் வழக்கம்போல் வந்து

எங்களுக்கு மற்றப் பாடங்களைச் சொல்லித் தர வேண்டும்; உங்களால் எத்தனையோ விஷயங்களை நாங்கள் தெரிந்துகொண்டுள்ளோம். உங்களிடம் பாடம் கேட்கும் பாக்கியத்தை நாங்கள் இழக்கக் கூடாது'' என்று கேட்டுக்கொண்டார்.

பூஜ்யர் த்ரோவர் துரையினுடைய பெருந்தன்மை இவரை உவகைக் கடலில் ஆழ்த்தியது.

**அவிரோத ஞானச் செல்வர்**

ஒரு நாள் இவருடைய நண்பர்கள் சிலர் இவரைத் தேடி வந்தார்கள்.

''எப்போதும் திருப்புகழ், அலங்காரம் என்றே பேசிக் கொண்டிருக்கிறீர்களே, இன்று எங்களுடன் வாருங்கள். உங்களை ஓரிடத்திற்கு அழைத்துப் போகப் போகிறோம்'' எனக் கூப்பிட்டார்கள்.

''எங்கே போகிறோம்?'' என்று இவர் கேட்டார்.

''போகும்போது பேசிக்கொண்டே போகலாம். கிளம்புங்கள்'' என இவரை அவர்கள் அவசரப் படுத்தினார்கள். இவர் அவர்களுடன் சென்றார்.

போகும் வழியில், ''அன்றைக்கு நம் விழாவில் ஒரு பெண் வந்து பாடினாளே, பாட்டு எப்படி?'' என்று ஒருவர் பேச்சை ஆரம்பித்தார்.

''ஏன், அன்றைக்கு அவள் பாடி முடித்தவுடன் நான் தான் அவளது பாட்டையும், அவளையும் புகழ்ந்து பேசினேனே! பாட்டு நன்றாக இருந்தது'' என இவர் சொன்னார்.

எல்லோரும் சிரித்தார்கள். ''அதனால் தான் அவள் இவரைத் தம் வீட்டிற்கு அழைத்து வரும்படி, நம்மை வற்புறுத்தினாளா?'' என்று ஒன்றும் அறியாதவர்போல ஒருவர் கேட்டார்.

"இவர் அவளுடைய பரம ரசிகராயிற்றே, ஆசை இருக்காதா?" என்று மற்றொருவர் சொன்னார். அவர்களது பேச்சில் இருந்த குறும்புத்தனத்தை இவர் உணர்ந்தார். அதிலிருந்தே அவர்கள் தம்மை எங்கே அழைத்துப் போகிறார்கள் என்பதையும் ஓரளவு உணர்ந்தார். ஆயினும், அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் ஒன்றும் தெரியாதவர்போல் அவர்களுடன் சென்றார்.

அவர்கள் இவரை அன்று விழாவில் வந்து பாடிய குப்பி என்பவளது வீட்டிற்கு அழைத்துச் சென்றார்கள். இவரைக் கண்டவுடன் அவளுக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டது.

"தங்கள் பேச்சைத் திரும்பத் திரும்பக் கேட்க வேண்டும்போல் உள்ளது. அதனால்தான் நான் இவர்களிடம் தங்களை நம் வீட்டிற்கு அழைத்துவரச் சொன்னேன்" என்று மிகுந்த உபசாரத்துடன் தெரிவித்தாள்.

"சூ! பிடி" என்று இவருடைய நண்பர்களும் அவளுடன் சேர்ந்துகொண்டார்கள். "எங்களுக்கு அலங்காரம், திருப்புகழ் வேண்டாம். இந்த இடத்திற் கேற்பச் சிருங்காரமான பாடல் ஒன்றைச் சொல்லி விளக்கம் தரவேண்டும்" என வற்புறுத்தினார்கள்.

இவர் 'நள வெண்பா'விலிருந்து ஒரு பாட்டைச் சொன்னார்:

**கொங்கை இளநீரால் குளிர்ந்த இளஞ்சொற் கரும்பால்**
**பொங்குசுழி என்னும் பூந்தடத்தில் மங்கைநறுங்**
**கொய்தாம வாசக்குழல் நிழற்கீழ் ஆறேனோ**
**வெய்துஆம் அக்காமவிடாய் வெப்பு**

என்ற பாட்டு அது. அதை இவர் மிகவும் விளக்கமாக எடுத்துச் சொன்னார்.

"பெண்களைக் கண்டால் ஒருவனுக்கு முதலில் அவர்களுடைய தனத்தைப் பார்க்க ஆசை தோன்றும்; அது பூரிப்பாக இருந்தால் அவனுடைய மனத்தில் மோகம் மிகுதியாக உண்டாகும். அதனால்,

**கொங்கை இளநீரால்**

என்று சொன்னார் கவி.

"பின்பு அந்தப் பெண்ணோடு பேச்சுக் கொடுக்கத் தோன்றும். பேசும்போது அவளுடைய இனிய சொல் அவனது உள்ளத்தில் குளிர்ச்சியை உண்டாக்கிக் கரும்பு போல் இனிக்கும். எனவே,

**குளிர்ந்த இளஞ்சொற் கரும்பு**

என்றார் கவி.

"அதன்பின் பெண் மோகம் என்ற தடாகத்தில் மூழ்குவான். பிறகு காமம் என்னும் தாபம் தீர அவளது கூந்தல் நிழலில் தன்னுடைய வெப்பத்தை ஆற்றிக்கொள்வான்.

**பொங்குசுழி என்னும் பூந்தடத்தில் மங்கைநறுங்**
**கொய்தாம வாசக்குழல் நிழற்கீழ் ஆறேனோ**
**வெய்து ஆம்அக்காம விடாய் வெப்பு.**

இப்படி இன்னும் விளக்கமாகச், சுமார் ஒரு மணி நேரம் இவர் பேசினார். இவரை அங்கு அழைத்துச் சென்ற உடையார் நண்பர்கள் எல்லாரும் இவரது பேச்சைக் கேட்டு வியந்தார்கள். ஆனால், இவர் சிறிதும் சலனமின்றி வெட்கமும் இன்றி அவிரோத ஞானச் செல்வராக நின்று பேசியதைக் கேட்ட அவர்கள் பிரமித்துப் போய்விட்டார்கள். இந்த மனிதரை எந்த விதத்திலும் மயக்க முடியாது என்ற தீர்மானத்திற்கு வந்தார்கள்.

ஆசிரமத்திற்குத் திரும்பிய பின், "ஐயா, எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். தாங்கள் சிறுபிராயத்தினராக இருப்பதால் தங்களுக்கு உலகியல் ஆசையில்

ஈடுபாடு ஏற்படச் செய்ய நினைத்தோம். தாங்கள் இதற்கெல்லாம் சலனம் அடைபவராக இல்லை. குமரகுருபர சுவாமிகள், சிவப்பிரகாச சுவாமிகளைப்போல் தாங்கள் வாழவேண்டும்; தங்கள் துறவினால் எல்லோருக்கும் நன்மை உண்டாகும்'' என்றும் சொன்னார்கள்.

**காசி சுவாமிகள்**

சேந்தமங்கலத்தில் 'நிஜானந்த சரஸ்வதி' என்னும் துறவியார் இருந்தார். அவர் காசியில் வாழ்ந்துகொண்டிருந்தவர். ஸ்ரீமத் சுயம்பிரகாச பிரம்மேந்திர சரஸ்வதி அவதூத சுவாமிகள் பூப் பிரதட்சிணம் செய்து வந்தபோது காசிக்கும் சென்றார்கள். அப்போது அவரைத் தரிசித்து உபதேசம் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு நிஜானந்தருக்குக் கிடைத்தது.

தம் குருநாதர் சஞ்சரித்துக்கொண்டிருந்த சேந்தமங்கலத்திற்கே அவரும் வந்துவிட்டார். அவரை எல்லோரும் காசி சுவாமிகள் என்றே அழைப்பார்கள். அம்பிகையை உபாசனை செய்து சுவாமிகளின் திருவருளைப் பெற்றவர்.

சிவ, விஷ்ணு, பிரம்ம சொரூபியாகிய தத்தாத்ரேயர் அவதூத பரம்பரைக்கே ஆதி குரு. தத்தாத்ரேயருக்கு இவருடைய குருநாதர் சேந்தமங்கலத்தில் தாம் தங்கியிருந்த சிறு குன்றில் கோவில் எடுத்தார். அதுமுதல் தான் அந்தக் குன்றுக்கு தத்தகிரி என்று பெயர் வந்தது.

அந்தத் தத்தாத்ரேயர் கோவில் திருப்பணிக்குக் காசி சுவாமிகள் பல இடங்களுக்கும் சென்று உபந்நியாசம் செய்து பொருள் தொகுத்துக் கொடுத்தார். பாஷ்யங்கள் எல்லாம் படித்தவர், வடமொழியிலே மட்டுமின்றித் தமிழிலும் சிறந்த பயிற்சி உள்ளவர்; அருமையாகச் செய்யுள் இயற்றுபவர்; 'அவதூத வெண்பா மாலை' என்னும் பிரபந்தம் ஒன்றை அவரே தம் குருநாதரைப் பற்றி இயற்றியுள்ளார்.

மோகனூரில் இருந்தபோது அபயானந்தரிடம் நெருக்கமாகப் பழகியது போலவே, சேந்தமங்கலத்தில் காசி சுவாமிகளிடமும் நெருங்கிப் பழகும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது.

இவர் தமிழ் நூல்கள் பலவற்றைக் கற்றதில்லை. பள்ளிக்கூடத்தில் பாடமாக இருந்த சில "கம்ப ராமாயணச்" செய்யுட்களையும், பிறவற்றையுமே கூர்ந்து படித்திருந்தார், 'திருப்புகழ்' 'கந்தர் அலங்காரம்' ஆகியவற்றைப் பற்றி எல்லாம் பேசுவார். காந்தமலை முருகனின்மேல் செய்யுட்கள் இயற்றுவார். இவற்றை யெல்லாம் கண்டு காசி சுவாமிகள் இவரிடம் மிக்க அன்பு கொண்டிருந்தார்.

தம் குருநாதர் இவருக்கு சந்நியாசம் கொடுக்க மறுத்ததும் அவருக்குத் தெரியும். திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமிகளிடம் சென்று முறையாகத் தமிழ் படிக்க இவர் விரும்பியதையும் அறிவார்.

சேந்தமங்கலம் ஜமீன்தார் ஐராவத உடையார் அதற்கு இணங்கவில்லை என இவர் சொன்னபோது, "உமக்குத் தம்பி பிறந்து விட்டான். ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகளிடம் தமிழ் படிக்கப் போய் நீங்கள் துறவியாகி விடலாம். அதனால்தான் உம்மை அங்கே போக வேண்டாம் எனத் தடுத்திருக்கிறார்" எனச் சிரித்துக் கொண்டே சொன்னார்.

ஒரு நாள் காசி சுவாமிகள் இவரது தமிழார்வத்தை வியந்து "நீங்கள் ஸ்ரீமத் ஐயரிடம் இருக்க வேண்டியவர்" என்று சொன்னார்.

**மகாமகோபாத்தியாய சாமிநாதய்யரைப் பற்றி அறிதல்**

ஸ்ரீமத் ஐயரவர்களுடைய ஊர் தஞ்சை மாவட்டத்தி லுள்ள உத்தமதானபுரம் ஆகும்.

சங்கீத வித்துவானாகிய ஸ்ரீ வேங்கடசுப்பையருக்கும் ஸ்ரீமதி சரஸ்வதி அம்மாளுக்கும் மூத்த குமாரராக அவர் 1855-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19-ஆம் தேதி பிறந்தார்.

தம் இளம் வயதில் அவர் தம் தந்தையாரிடமும், திண்ணைப் பள்ளிக்கூடத்து ஆசிரியரிடமும் கல்வி பயின்றார்.

அவரது தமிழார்வத்தைக் கண்ட அவருடைய தந்தையார் அவருக்கு அரியலூர்ச் சடகோபையங்கார், செங்கணம் விருத்தாசல ரெட்டியார் ஆகியோரிடம் தமிழ் படிக்க வாய்ப்பு அளித்தார்.

அவரது தமிழ்ப் பசி அதிகமானதே தவிரத் தணிய வில்லை. அந்தக் காலத்தில் தமிழுக்கென்றே கல்லூரி ஏதும் இல்லை.

'திருவாவடுதுறை ஆதீனத்தில் சிறந்த தமிழ்ப் புலவ ராகவும், பெருங்கவிஞராகவும் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் இருக்கிறார்கள். அவர் பல பிள்ளைகளைத் தம்மிடம் வைத்துக்கொண்டு தமிழ் சொல்லித் தருகிறார்கள்' என்ற செய்தி ஸ்ரீமத் ஐயரின் தந்தையாருடைய காதில் விழுந்தது. உடனே தம் மகனை அழைத்துக்கொண்டு போய், பிள்ளையவர்களிடம் 1871-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஒப்படைத்தார்.

பிள்ளையவர்கள் அப்போது மாயவரத்தில் இருந் தார்கள். ஸ்ரீமத் ஐயரின் பெயர் அப்போது வேங்கட ராமன். அது அவருடைய முன்னோர் பெயராதலால் வீட்டிலுள்ளவர்கள் அவரைச் 'சாமா' என்றே கூப்பிடு வார்கள். அது 'சாமிநாதன்' என்பதன் சிதைவு.

அதை அறிந்த பிள்ளையவர்கள் ஸ்ரீமத் ஐயருக்குச் 'சாமிநாதன்' என்ற முழுப்பெயரைச் சூட்டி, தம்மிடம் வைத்துக்கொண்டு தமிழ் கற்பிக்கத் தொடங்கினார்கள்.

ஸ்ரீமத் ஐயர், பிள்ளையவர்களின் மறைவு வரை (1—2—1876) அவரிடமிருந்து தமிழ் கற்றார். பின்னரும் திருவாவடுதுறையில் இருந்துகொண்டு அங்குள்ளவர்களுக்குத் தமிழ்ப் பாடம் சொல்லும் பணியை மேற்கொண்டார்.

தியாகராச செட்டியார் பிள்ளையவர்களிடம் பாடம் கேட்டவர். அவர் அப்போது கும்பகோணம் அரசினர் கல்லூரியில் தமிழாசிரியராக இருந்தார். 1880-ஆம் ஆண்டு தாம் ஓய்வுபெறும்போது, தம் வேலையை ஸ்ரீமத் ஐயருக்குக் கிடைக்கச் செய்தார்.

அதிலிருந்து 1903-ஆம் ஆண்டுவரை கும்பகோணம் அரசினர் கல்லூரியிலே தமிழாசிரியராக ஸ்ரீமத் ஐயர் பணியாற்றினார். 1903-ஆம் ஆண்டு சென்னை மாநிலக் கல்லூரியிலே தமிழாசிரியராக மாற்றம் பெற்றார்.

அவருடைய ஆசிரியர் கவிஞர் கோமான், 'பிள்ளையவர்கள்' தமிழ்ப்பாடம் சொல்வதையும், பல புராணங்களைப் பாடுவதையுமே தம் உயிர் மூச்சாகக் கொண்டு வாழ்ந்தார்கள்.

அவரிடம் பாடம் கேட்ட ஸ்ரீமத் ஐயர் தம் ஆசிரியரைப்போலவே அதிகமாகத் தமிழ்ப் புலமை பெற்றார். கல்லூரியில் படிக்கும் மாணவர்களுக்கும், தம் வீட்டிற்கு வரும் மாணவர்களுக்கும் தமிழ்ப்பாடம் சொன்னார். அதோடு கல்லூரி விடுமுறை நாட்களில் தமிழ்நாடு முழுவதும் மூலை முடுக்குகள் எல்லாம் சென்று பனையோலைச் சுவடிகளாக இருந்த பழைய தமிழ் நூல்கள், அவற்றின் உரைகள் ஆகியவற்றைத் திரட்டி வந்தார். அவருடைய ஆசிரியரான பிள்ளையவர்களே தெரிந்து, படித்திருக்க வாய்ப்பில்லாத அந்தப் பழந்தமிழ் இலக்கியங்களையெல்லாம் தெளிவாக ஆராய்ந்து படித்து நல்ல முறையில் பதிப்பித்து உலகுக்கு அளித்த சிறந்த 'பதிப்பாசிரியர்' ஆகவும் விளங்கினார். ஸ்ரீமத் ஐயர்.

இப்படித் தம் வாழ்வின் நோக்கத்தையெல்லாம் பெரும்பாலும் தமிழ்த் தொடர்பு உடையதாக ஆக்கிக் கொண்ட ஸ்ரீமத் ஐயரைப் பாராட்டும் வகையில் அவருக்கு மகாமகோபாத்தியாயப் பட்டத்தை 1906-ஆம் ஆண்டு அரசு வழங்கிக் கௌரவித்தது.

**அன்னியர்கள் தமிழ்ச்செவ்வி யறியாதார்**
**இன்றெம்மை ஆள்வோ ரேனும்**
**பன்னியசீர் மகாமகோ பாத்தியா**
**யப்பதவி பரிவின் ஈந்து**
**பொன்னிலவு குடந்தைநகர்ச் சாமிநாதன்**
**தனக்குப் புகழ் செய்வாரேல்**
**முன்னிவனப் பாண்டியர்நாள் இருந்திருப்பின்**
**இவன்பெருமை மொழிய லாமோ?**

மகாகவி பாரதியார் ஸ்ரீமத் ஐயரது பெருமையை அப்போது இப்படி வியந்து பாடினார்.

1919-ஆம் ஆண்டு கல்லூரிப் பணியிலிருந்து ஸ்ரீமத் ஐயர் ஓய்வு பெற்றார்.

பின்பும் தமிழ்ப்பாடம் சொல்லும் பணியிலும், தமிழ் நூல்களைப் பதிப்பிக்கும் பணியிலும் ஈடுபட்டு வந்தார்.

ராஜா அண்ணாமலைச் செட்டியார் 1924-ஆம் ஆண்டு சிதம்பரத்தில் கலைக் கல்லூரி ஒன்றையும் வடமொழிக் கல்லூரி ஒன்றையும், தமிழ்க் கல்லூரி ஒன்றையும் ஏற்படுத்தினார்.

இதுதான் தமிழுக்கென்று தனியாக ஏற்படுத்தப் பட்ட முதல் தமிழ்க் கல்லூரி.

இந்தத் தமிழ்க் கல்லூரியின் முதல்வர் பொறுப்பை ஏற்க வேண்டுமெனச் செட்டியார் கேட்டுக்கொண்ட போது ஸ்ரீமத் ஐயர் அதற்கு இணங்கினார். 'மீனாட்சி தமிழ்க் கல்லூரி'யின் முதல்வர் பொறுப்பை 1924-இல் ஏற்ற ஸ்ரீமத் ஐயர் அப்போது சிதம்பரத்தில் இருந்தார்.

**"என்னை ஏற்றுக் கொள்வாரா?"**

காசி சுவாமிகளுக்கு மகாமகோபாத்தியாய உ.வே. சாமிநாதையரைத் தெரியும்; ஸ்ரீமத் ஐயரது தமிழ்த் தொண்டைப்பற்றியும், அவர் பதிப்பித்து வரும் சங்க கால நூல்களின் சிறப்புப்பற்றியும் இவரிடம் விரிவாக வியந்து கூறினார்.

தம்மிடம் பாடம் கேட்டுக்கொண்டிருந்த ஒரு பிள்ளை, சிதம்பரம் சென்று மீனாட்சி தமிழ்க் கல்லூரியில் ஸ்ரீமத் ஐயரிடம் படித்துக்கொண்டிருக்கும் செய்தியையும் சொன்னார்.

"நீங்கள் அவரிடம் சென்றால்தான் முறையாகத் தமிழ் படிக்க உங்களுக்கு வாய்ப்பு ஏற்படும்; உங்களது தமிழ் அறிவும் பெருகும்" என்றார் காசி சுவாமிகள்.

"நான் போனால் அவர் என்னை ஏற்றுக் கொள்வாரா?" என இவர் ஏக்கத்துடன் கேட்டார்.

"நீங்கள் அவரிடம் சென்றால், நிச்சயம் அவர் உங்களை அன்புடன் ஏற்றுக்கொள்வார்" எனச் சுவாமிகள் உறுதியாகக் கூறினார்.

இந்தத் தகவலை உடனே ஐராவத உடையாரிடம் சொல்ல வேண்டுமென்ற ஆசை இவருக்கு எழுந்தது. அவர் ஏதேனும் சொல்லி மறுத்துவிட்டால் என்ன செய்வது என்ற கவலையும் கூடவே தோன்றியது.

நல்ல வேளையாக அந்தச் சமயம் வேலூர் இந்துப் பாடசாலைத் தமிழாசிரியர் கணபதி ஐயர் சேந்தமங்கலம் வந்திருந்தார். அவரிடம் சென்று இவர் காசி சுவாமிகள் கூறியதைச் சொன்னார்.

ஸ்ரீமத் ஐயரைப்பற்றி அவரும் நிறையக் கேள்விப் பட்டிருந்தார். எனவே, "ஆகா! இது நல்ல யோசனை: அவ்விடம் சென்று நீங்கள் தமிழ் கற்றால்தான் உலகூட்டும் வற்றாத ஊற்றாகத் திகழ்வீர்கள். உங்களது

எழுத்தாண்மை உரம் பெறும்" என்று உற்சாக மூட்டினார்.

மேலும், "சமயம் பார்த்து ஐராவத உடையாரிடம் சொல்லுங்கள்; அவரும் இதற்கு உடன்படக்கூடும்" எனத் தைரியம் அளித்தார்.

ஒரு நாள் ஐராவத உடையார் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தபோது இவர் அவரிடம் இந்தத் தகவலைச் சொன்னார்.

ஐராவத உடையார் இவர்பால் மிக்க அன்பு உடையவர். தம் உறவினராகிய கிச்சு உடையார் இவர் பால் வைத்திருந்த பெருமதிப்பை நன்கு அறிவார். இவர் மேலும் மேலும் பல தமிழ் நூல்களைக் கற்றுப் பெரும் புலவராக வரவேண்டுமென்ற ஆசை அவருக்கும் உண்டாயிற்று. காசி சுவாமிகளையும் அவர் அறிவார். அவர் சொன்னார் என்றவுடன், "சரி; கவலையை விடுங்கள்! நானே உங்களை அழைத்துக்கொண்டு போய் ஸ்ரீமத் ஐயரிடம் விடுவதற்கு முயற்சி செய்கிறேன்" என்றார்.

இவருக்கு ஒரே மகிழ்ச்சி. 'சிதம்பரம் போகாமல் இருப்பேனோ, ஸ்ரீமத் ஐயரைக் காணாமல் இருப்பேனோ' என அதுமுதல் இவரது மனம் நந்தனைப்போல கிண்ணாரங்கொட்டி குதிக்கத் தொடங்கிவிட்டது.

**ஜோதி தரிசனம் காணுதல்**

இவருடைய நண்பர்களில் சிலர் ஆண்டுதோறும் தைப்பூச விழாவிற்கு வடலூர் சென்று வருவது வழக்கம். அந்த ஆண்டு தைப்பூசத்திற்கு வடலூர் போகும்போது ஸ்ரீமத் ஐயரையும் பார்த்துவரலாம் எனச் சேந்தமங்கலம் ஜமீன்தார் கருதினார்.

1927-ஆம் ஆண்டில் தைப்பூசம் பிப்ரவரி மாதம் வந்தது. ஒரு காரை அமர்த்திக்கொண்டு சேந்தமங்கலம்

ஜமீன்தார், இவரையும் கிச்சு உடையாரையும் வேறு சிலரையும் அழைத்துக்கொண்டு வடலூர் வந்தார்.

வடலூரில் தைப்பூச விழாவில் ஸ்ரீமத் ராமலிங்க சுவாமிகளின் ஜோதி தரிசனம் செய்துகொண்டார்கள். பின்னர் அங்கிருந்து சிதம்பரம் போனார்கள்.

ஸ்ரீமத் ஐயர் அப்போது சிதம்பரத்தில் தங்கியிருந்த வீடு இவர்களுக்குத் தெரியாது. எனினும், மீனாட்சி தமிழ்க் கல்லூரியில் பயின்றுகொண்டிருந்த நடேச முதலியார், ஆறுமுக முதலியார் ஆகிய இருவரையும் கிச்சு உடையாருக்கு நன்கு தெரியும். எனவே, கிச்சு உடையார் அவர்களிடம் சென்று ஸ்ரீமத் ஐயர் தங்கியிருக்கும் இல்லத்தை அறிந்து வந்தார்.

இவர்கள் எல்லோரும் ஸ்ரீமத் ஐயரது வீட்டிற்குச் சென்றார்கள். அப்போது அந்த வீட்டுத் திண்ணையில் ஒருவர் உட்கார்ந்திருந்தார். இவர்களைக் கண்டவுடன் அவர் எழுந்திருந்தார். 'அவர்தாம் ஸ்ரீமத் ஐயர் போலும்' என நினைத்து அவரிடம் இவர் மிக்க அடக்கத்துடன் நெருங்கினார். இவர்தாம் ஸ்ரீமத் ஐயரை இதற்குமுன் பார்த்ததில்லையே!

இவர்கள் யாரைத் தேடி வந்திருக்கிறார்கள் என்பதை அவர் ஊகித்துக்கொண்டு, "நான் நாகப்பச் செட்டியார். ஸ்ரீமத் ஐயர் உள்ளே இருக்கிறார்கள். நீங்கள் உள்ளே போங்கள்" எனச் சொல்லிவிட்டு அப்பால் நகர்ந்தவுடன் இவர் பெரிதும் ஏமாற்றம் அடைந்தார்.

"இவரது அவசரத்தைப் பாரும்" எனக் கிச்சு உடையார் தம் பக்கத்தில் இருந்த ஜமீன்தாரிடம் கிசுகிசுத்ததைத் திரும்பிப் பார்த்தவுடன் இவருக்கே வெட்கம் உண்டாகிவிட்டது.

முதலில் கிச்சு உடையார் உள்ளே போனார். அவரைத் தொடர்ந்து இவர்களும் சென்றார்கள்.

ஐந்தாறு பேராக உள்ளே போனவுடன் ஸ்ரீமத் ஐயர் எல்லோரையும் அன்புடன் வரவேற்று, ''எங்கே இவ்வளவு பேரும் வந்திருக்கிறீர்கள்?'' என்று விசாரித்தார்.

''இந்தப் பையன் யார்?'' என முதலில் தெரிந்து கொள்ள விரும்பினவர்போல் அவரது பார்வை ஒரு கணம் இவர்மீது சென்றது.

கிச்சு உடையார் சேந்தமங்கலம் ஜமீன்தாரை அறிமுகப்படுத்தினார். தாங்கள் சேந்தமங்கலத்திலிருந்து தைப்பூச விழாவிற்கு வடலூர் வந்து தரிசனம் செய்து கொண்டதைச் சொன்னார். கடைசியாக இவரைப் பற்றியும், ''இவர் தங்களிடம் முறையாகத் தமிழ் படிக்க விரும்புகிறார். அதனால் இவரையும் அழைத்துக் கொண்டு தங்களைப் பார்க்க வந்தோம்'' என்று சொன்னார்.

**ஸ்ரீமத் ஐயரது மனத்தைக் கவர்ந்தது**

உடம்பில் சட்டை இல்லாமல், கழுத்தில் ஒற்றை ருத்திராட்சத்துடன், நெற்றி நிறைய விபூதியைப் பூசிக் கொண்டிருந்த இவரை ஸ்ரீமத் ஐயர் திரும்பவும் சிறிது நேரம் உற்றுப் பார்த்தார்.

இவரது தோற்றத்தைப் பார்த்தவுடன் அவருக்கே இவர்பால் ஒரு வகை அன்பு சுரந்திருக்க வேண்டும். அடுத்த கணம் அவரது முகத்தில் வெறிச்சோடிய புன்னகை நிழலாடியது.

''உம்.. அதெல்லாம் சரி. படிக்கவேண்டுமென்றுதான் பலரும் ஆசைப்பட்டு வருகிறார்கள். படிப்பு முடியும் வரை எங்கே தங்கியிருந்து படிக்கிறார்கள்?'' என அவர் சொல்லும்போது அவரது குரலில் அநுபவத்தின் சலிப்புத் தெரிந்தது.

அவர் என்ன சொல்லப் போகிறாரோ என்கிற கலக்கம் இவர்களுக்கு உண்டாயிற்று.

''நான் என் ஆசிரியப்பிரான் பிள்ளை அவர்களிடம் சென்றபோது அவர்கள் இப்படிச் சொன்னார்கள். 'படிக்க வரும்போது மிகவும் பணிவாக நடந்துகொள் கிறார்கள். படிப்பு முடியும்வரை இருப்பதில்லை. நடுவி லேயே சொல்லிக்கொள்ளாமல் ஓடிவிடுகிறார்கள். ஊர் போய் வருவதாகச் சொல்லிப் போகிறவர்களும் திரும்ப வருவதில்லை. இப்படி என்னிடம் படித்ததாகப் பாவனை காட்டிவிட்டுப் போய்விடுகிறார்கள். எதையும் முழுக்கப் படிக்காமல் என்னிடம் படித்ததாக ஊரில் சொல்லிக் கொண்டும் திரிகிறார்கள். இதனால் படிக்க யார் வந் தாலும், அவரை ஏற்றுக்கொள்ளக் கொஞ்சம் யோசிக்க வேண்டியதாக இருக்கிறது. அப்போது, என்னடா இப்படிச் சொல்கிறாரே!' என யோசித்தேன். அது முழுக்க முழுக்க உண்மை என்பதை நானும் என் அநுபவத்தில் கண்டு விட்டேன்'' என்றார் ஸ்ரீமத் ஐயர்.

சட்டென்று இவர், ''நான் அப்படி நடந்துகொள்ள மாட்டேன். எவ்வளவு காலம் இருக்க வேண்டுமானாலும் தங்களிடம் இருந்து பாடம் கேட்க விடும்புகிறேன்'' என உணர்ச்சி மீதுரச் சொன்னார்.

ஸ்ரீமத் ஐயர் கிச்சு உடையாரைப் பார்த்துச் சொன் னார்: ''தொடர்ந்து இருந்து பாடம் கேட்கிறவர்களிடந் தான் எனக்கும் அபிமானம் உண்டாகிறது'' என்றார்.

கிச்சு உடையார், மோகனூரிலிருந்து இவர் தம் பெற்றோர்களைப் பிரிந்து தம் அழைப்பையேற்றுச் சேந்தமங்கலம் வந்து தங்கியிப்பதையும், தம் ஊர்க் குழந்தைகளுக்கும், பாதிரியாருக்கும் தமிழ் சொல்லித் தருகிறார் என்ற விவரத்தையும் குறிப்பிட்டு, ''இவர் மிக்க மனத் திண்மை உடையவர். தங்கள் விருப்பப் படியே நடந்துகொள்வார்'' என மிக்க உறுதியோடு சொன்னார்.

ஸ்ரீமத் ஐயர் இவரிடம் ஏதேனும் தமிழ்ப்பாடல் ஒன்றைச் சொல்லும்படியாகக் கேட்டார்.

அந்தக் காலத்தில்'கம்பராமாயண'ப் பாட்டுத்தெரிந்தவன்தான் உயர்ந்த புலவன் என்ற எண்ணம் இருந்து வந்தது. இவரிடம் 'கம்பராமாயணம்' முழுமையும் ஏது? 'அருணாசலப் புராணம்' வாங்கியிருந்தார். படித்தார். பள்ளிக்கூடப் புத்தகத்தில் படித்த கம்பராமாயணப் பாடல்களில் இரண்டு பாட்டை வைத்துக்கொண்டு இரண்டு மணி நேரம் பேசச் சொன்னால் பேசுவார். இப்படிச் சொற்பொழிவாற்றத் தெரியுமே தவிர, அதிகம் படித்ததில்லை.

இவரை ஸ்ரீமத் ஐயர் தமிழ்ப் பாடல் ஒன்றைச் சொல்லும்படியாகப் பணித்தவுடன் தமக்குத் தெரிந்த மந்திரை சூழ்ச்சிப் படலத்திலிருந்து ஒரு பாடலை இவர் சொன்னார்.

கூனி இராமனுக்குப் பட்டாபிஷேகம் நடக்கப்போகிற தென்று கைகேயியிடம் சொல்லும் பாடல் அது. அவனிடம் அவளுக்குக் கோபம். அவன் முடிசூடுவது அவளுக்குப் பிடிக்கவில்லை. எனவே, 'ஆண்கள் சிரிக்க ஆண்மை மாசுபடப் பெண் ஒருத்தியைக் கொன்றவன் (தாடகை வதம்) நாளை ராஜாவாகப் போகிறான்' என இராமனை இழித்து ஏளனம் செய்வதுபோன்ற பொருள் தொனிக்கும் படி சொல்கிறாள்.

> **''ஆடவர் நகையுற ஆண்மை மாசுறத்**
> **தாடகை எனும்பெயர்த் தைய லாள்படக்**
> **கோடிய வரிசிலை இராமன் கோமுடி**
> **சூடுவன் நாளை வாழ்விதெனச் சொல்லினாள்''**

என்ற இந்தப் பாடலைச் சொல்லிப் பொருளையும் பொதுவாக விளக்கினார்.

''இதில் ஏதாவது நயம் சொல்ல முடியுமா?'' என்று ஸ்ரீமத் ஐயர் கேட்டார்.

''இராமனைப்பற்றி இப்படி ஏளனமாகச் சொல்கிறோமே, நாளைக்கு ராஜாங்கத்திலிருந்து யாரேனும்

தன்னைப் பிடித்துக்கொண்டு போய்த் தண்டனை கொடுத்துவிட்டால் என்ன செய்வது என்கிற பயமும் கூனிக்கு இருந்தது.

''கோள் சொல்லுகிறாள். அகப்பட்டுக்கொண்டால் 'நான் அப்படியா சொன்னேன்? இல்லையே! இப்படியல்லவா சொன்னேன்' என அவனை ரொம்பப் பெரியவன் என்று பொருள் கொள்ளும்படியாகவும் சொன்ன நயம் இருக்கிறது.

''ஆடவர் என்பதை ஆள் தவர் என்று பிரித்து, 'ஆடவர் நகையுற' என்பதற்குப் பொறிகளை அடக்கியாண்ட தவசிகள் மகிழ்ச்சி கொள்ள என்று பொருள் சொல்லலாம். 'ஆண்மை மாசுறத் தாடகையெனும் பெயர்த் தையலாள்' எனச் சேர்ந்து, ஆண் மக்களுடைய வீரம் குறைபடுவதற்குக் காரணமான அந்தத் தாடகையைக் கொன்றான் என்றும் பொருள் கொள்ளலாம்'' என்று இவர் சொன்னார்.

அன்றியும், ''கோடிய வரிசிலை இராமன் என்பதை கோடிய இராமன், வரிசிலை இராமன் என்று பிரித்துக் காட்டி இராமனை இகழ்ந்ததாகவும் கொள்ளலாம்'' என்றார் இவர். அதைக் கேட்டு ஸ்ரீமத் ஐயர் மிகவும் உவகை அடைந்தார்.

இவரை அழைத்து வந்தவர்களிடம், ''கம்பசூத்திரம் என்பது இதுதான். கூனி கைகேயியினிடம் இராமனை 'பெண் கொலை புரிந்த பேடி' என்று இழித்துச் சொன்ன சொற்களையே கொண்டு எவ்வளவு உயர்வான பொருளைச் சொன்னார் பார்த்தீர்களா? மகாராஜாக்கள் வாழ்ந்த காலத்தில் இப்படிப் பொருள்சொல்பவர்களைக் கண்டால் அட்சரலட்சமன்றோ இவருக்கு அளிப்பார்கள்'' என்றார் ஸ்ரீமத் ஐயர்.

இவரைப் பார்த்து, ''தாடகையெனும் பெயர்த் தையலாள் என்பதிலே 'தையலாள்' என்பது இளம்பெண் என்னும் பொருளுடையது. ஓர் இளம்பெண்ணைக்

கொலை செய்தான் என்ற பொருளைத் தையல் என்பது குறிக்கும்.வைத்தீசுவரன் கோவிலில் உள்ள பாலாம்பிகையைத் தையல்நாயகி என்று சொல்வதனால் தையல் என்றால் இளம்பெண் என்பதை உணர்ந்துகொள்ளலாம்'' என்பதாக ஸ்ரீமத் ஐயர் சொன்னார்.

இப்படி யாரைப் பார்த்தாலும் அவரவர்கள் நிலைக்கேற்பத் தமக்குத் தெரிந்த பயனுடைய கருத்தை எடுத்து சொல்வது ஸ்ரீமத் ஐயரது இயல்பு.

ஒரு முறை ஸ்ரீமத் ஐயர் ஒரு சிறுவனைப் பார்த்தார். அவனுக்கு வயது பன்னிரண்டு இருக்கும். பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருந்தான். சிறு பையன்தானே என நினைக்காமல் அவனிடமும் பேச்சுக் கொடுத்தார்.

''நீ என்ன படித்திருக்கிறாய்? உன் தமிழ்ப் பாடப் புத்தகங்கள் என்ன?'' எனக் கேட்டார்; ஏதோ ஒரு நூலைக் குறிப்பிட்டு, ''இதைப் படித்திருக்கிறாயா?'' என வினவினார்.

''அதை எனக்குப் பள்ளிக்கூடத்தில் கற்றுக் கொடுக்கிறது இல்லை'' என அந்தப் பையன் கொஞ்சம் இலக்கணமாகச் சொன்னான்.

''தமிழில் இலக்கணமாகப் பேசுகிறாயே?'' என அவனது திறமையைப் பாராட்டினார். அடுத்து, ''கற்றுக் கொடுக்கிறதில்லை'' என இரண்டு பதங்கள் உபயோகித்தாயே; அதை ஒரு பதமாகச் சொல் பார்ப்போம்'' என்றார்.

அதற்குப் பதில் உரைக்கத் தெரியாமல் அந்தச் சிறுவன் திகைத்தான். அப்போது ஸ்ரீமத் ஐயர், ''கற்பிக்கிறதில்லை என்று சொல்லலாமல்லவா?'' என்றாராம்.

அந்தச் சிறுவன் வேறு யாரும் இல்லை; தமிழில் அறுபதுக்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதித் தமிழ் நாடகாசிரியர் எனப் புகழ்பெற்ற திரு பம்மல் சம்பந்த முதலியார்தாம்!

"அன்றுமுதல் இன்றுவரை எனக்கு ஒரு வார்த்தை கற்பித்த ஐயரவர்களை என் ஆசிரியராகக் கொண்டு தொழுது வருகிறேன்" எனப் பம்மல் சம்பந்த முதலியார் அவர்கள் ஸ்ரீமத் ஐயரது சதாபிஷேகத்தின்போது குறிப்பிட்டார்கள்.

இவரும் 'தையல்' என்ற ஒரு வார்த்தையில் எவ்வளவு நுட்பமான கருத்தை ஸ்ரீமத் ஐயர் எடுத்து விளக்குகிறார் என வியந்து நின்றார்.

ஸ்ரீமத் ஐயர் அப்பொழுதே தம்மை மாணவனாக ஏற்றுக்கொண்டு விட்டதைப் போன்ற உணர்ச்சி கொண்டார். தாம் தம் ஆசிரியர் பெருமானிடம் பாடம் கேட்கத் தொடங்கிவிட்டதைப் போன்ற மகிழ்ச்சியில் மிதந்தார்.

இவரைப் பார்த்து ஸ்ரீமத் ஐயர், "எனக்குக் கொஞ்சம் உடம்பு சரியில்லை. வயிற்றில் அடிக்கடி வலி உண்டாகிறது. உணவு சரியாகச் சீரணம் ஆவதில்லை. அதனால் கல்லூரி முதல்வர் பதவியிலிருந்து விலகிச் சென்னைக்குப் போகலாம் என்று இருக்கிறேன். உனக்கு மீனாட்சி தமிழ்க் கல்லூரியில் சேர்ந்து படிப்பதற்கு விருப்பமா? அல்லது என்னிடமிருந்து பாடம் கேட்பதற்கு விருப்பமா?" என்று கேட்டார்.

"தங்களிடம் இருந்துகொண்டே பாடம் கேட்பதற்கு நான் விரும்புகிறேன்" என்று இவர் சொன்னார்.

இவரது பதில் ஸ்ரீமத் ஐயருக்கு மிகவும் திருப்தியைக் கொடுத்தது. "நீங்கள் இப்போது இவரைத் தங்களுடன் சேந்தமங்கலம் அழைத்துச் செல்லுங்கள். நான் சென்னைக்குப் போனவுடன் எழுதுகிறேன். இவருடைய பெற்றோர்களிடம் ஆசீர்வாதம் வாங்கிக்கொண்டு, ஒரு நல்ல நாள் பார்த்துச் சென்னைக்கு அனுப்பி வையுங்கள். சென்னையில் ஆகாரச்செலவிற்கு வேண்டிய ஏற்பாட்டை மட்டும் இவர் செய்துகொண்டு வந்தால் போதும்"

எனப் பரிவோடு சொல்லி இவர்களுக்கு உத்தரவு கொடுத்தார்.

இவர்கள் வந்த காரியம் முடிந்த பெருமகிழ்ச்சியோடு சேந்தமங்கலம் திரும்பினார்கள்.

**ஸ்ரீமத் ஐயரவர்களுக்கு எழுதிய முதல் கடிதம்**

சேந்தமங்கலம் வந்தபின் இவர் தம் நண்பர்களை யெல்லாம் பார்த்து ஸ்ரீமத் ஐயரைச் சிதம்பரத்தில் தரிசித்து உரையாடி வந்ததைச் சொன்னார்.

சென்னைக்கு வந்தால் தம்மிடம் இருந்து தமிழ் படிக்கலாம் என்பதாக ஐயரவர்கள் சொன்னதை நினைந்து நினைந்து மகிழ்வுற்றார்.

என்றாலும், சென்னைக்குப் போனால் தம் செலவுக்கு என்ன செய்வது என்ற எண்ணம் அவ்வப்போது இவரது மனத்தை அரிக்கத் தொடங்கியது. பண உதவி கோரிப் பெற்றோரிடமோ, பிறரிடமோ நின்றால் சென்னைக்குச் செல்ல முடியாமற் போகலாம் என அஞ்சினார்.

அதனால், ஸ்ரீமத் ஐயரிடமிருந்து கடிதம் வருவதற்குள், தாமே கொஞ்சம் பணம் சேமித்துக்கொள்ள வேண்டுமென்ற உறுதி இவருக்குப் பிறந்தது. தாம் பார்த்துக்கொண்டிருந்த பணிகளில் உற்சாகத்துடன் ஈடுபடலானார்.

சென்னை போகுமுன் பூஜ்யர் த்ரோவர் தம்பதிகளின் பாடங்களைச் சொல்லி முடித்துவிட வேகம் காட்டினார். தமக்குக் கிடைத்த சம்பளத்தைச் சிக்கனமாகச் செலவு செய்து, மீதியைச் சேமித்து வைத்துக்கொள்ளத் தொடங்கினார்.

இடையில் ஸ்ரீமத் ஐயருக்கு (9-3-1927 இல்) ஒரு கடிதம் எழுதினார்.

நாமும் எத்தனையோ அறிஞர் பெருமக்களைச் சந்திக்கிறோம். நம்மை நாமே பெரியவர்களாக வியந்து

கொள்வதாலோ என்னவோ மற்றவர்களது பெருமையை பற்றித் தெரிந்துகொள்ள நாம் ஆர்வம் காட்டுவதில்லை; ஏன், பல அறிஞர்களுடைய பெயரைக்கூட நினைவிற் கொள்வதில்லை.

இவரோ சிறு வயதுமுதலே யாருடன் பழகினாலும் அவர்களிடமுள்ள குணங்களைப் பார்த்துப் பாராட்டப் பழகினார். யாரை ஒரு முறை சந்தித்தாலும் அவரது பெயர், முகவரி முதலியவற்றைக் குறித்துக்கொண்டு அவர்களோடு கடிதத் தொடர்பு கொண்டு, அவர்களை நினைவிற் கொள்ளக் கூடிய அபார ஞாபகசக்தியைத் தம்மிடம் வளர்த்துக்கொண்டு வந்தார்.

இவர் ஸ்ரீமத் ஐயருக்கு எழுதிய தம் முதல் கடிதத்திலேயே,

> **''தண்தமிழ்த் தாயின் தொண்டினை வாழ்க்கையாக்**
> **கொண்ட......நற்றவப் புலமையீர்''**

என அவரைப் பலப்படியாக விளித்து

> **''ஓரிரு திங்களின் முன்னர்ப் பங்கமில் சேந்தமங்கல**
> **ஜமீன்தார்**
> **இங்குறை நண்பர்களாதியோடும் காதலால்**
> **தம்பால் போந்தவன் சிறியேன்**
> **எளியேன், சகநாதனெனும் புகனா மத்தன்**
> **தங்கள் இருசுடர் பங்கய அடிகளிற், பற்பல**
> **வணக்கம்''**

எனத் தம்மை அறிமுகப்படுத்திக்கொண்டு, அவருக்கு வணக்கம் கூறி,

> **''பெருமதியாள, தங்கள் நல்லாசியை விழைகிறேன்,**
> **பெரும் புலவ! சென்னைக்கு ஏகுதல் எந்நிலை**
> **யாயதோ?''**

என விசாரித்து,

---

* திருவான்மியூர் டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையத்தில் காண்க.

''மிடியுளேன், மதிபெற்று அடிமை யாகும்
அடியேன் விருப்பம் அருளுக''

என நீண்டதொரு கவிதைமூலமே துணிச்சலாக விண்ணப்பித்துக் கொண்டிருக்கும் பாங்கு படித்து மகிழத் தக்கதாக உள்ளது.*

ஸ்ரீமத் ஐயருக்கு, தாம் இப்படிக் கவிதைமூலம் கடிதம் எழுதலாமா எனக் கூசவில்லை. முருகன் திருவருளால், நாணமும், அச்சமும் கழல, தன்னம்பிக்கை மிகுதியும், உடைய கவிஞனாக இவர் விளங்கியதை இவரது, இச்செயல் வெளிப்படுத்துகிறது.

**சேந்தமங்கலத்தில் இருப்புக் கொள்ளாமை**

ஸ்ரீமத் ஐயர் இவர்களிடம் குறிப்பிட்டதுபோல (11-3-27-இல்மீனாட்சி கல்லூரி முதல்வர் பதவியிலிருந்து தம்மை விடுவித்துக்கொண்டு சென்னை திரும்பினார். சிதம்பரத்தில் இருந்த நண்பர்கள் பெரிய கூட்டம் கூட்டி அவருக்குப் பிரியாவிடை அளித்தார்கள்.

சென்னை திரும்பியவுடன் அவரால் தம் பணிகளை உடனே தொடர முடியவில்லை. இரண்டொரு மாதம் சிகிச்சை எடுத்துக்கொண்டார்.

அதற்குள் சென்னைப் பல்கலைக் கழகத்தினர் சங்க இலக்கியங்கள்பற்றிப் பத்து நாட்கள் தொடர்ந்து சொற்பொழிவு ஆற்றவேண்டுமென்று அவரைக் கேட்டுக் கொண்டார்கள்.

தம் உடல்நலம் சரியில்லாததால் அப்பணியை ஏற்க அவர் தயங்கினார். என்றாலும், 'சிண்டிகேட்' உறுப்பினராக அப்போது இருந்த திரு கே.வி. கிருஷ்ணசாமி ஐயர் அன்போடு வற்புறுத்தவே அவரது வார்த்தையைத் தட்ட முடியாது இசைந்தார்.

---

* முழுக் கடிதமும் இணைப்பில் சேர்க்கப் பட்டுள்ளது.

அதுகுறித்து ஸ்ரீமத் ஐயர் சிந்தித்துக்கொண்டிருந்தார்.

''வேண்டிய சௌகரியம் செய்துகொண்டு வரலாம்'' என ஸ்ரீமத் ஐயரிடமிருந்து தமக்குக் கடிதம் வந்ததுமுதல் இவருக்குச் சேந்தமங்கலத்தில் இருப்பே கொள்ளவில்லை.

இவரிடம் கொஞ்சங் கொஞ்சமாக ஐந்தாறு மாதங்களில் நூறு ரூபாய்க்கும் அதிகமாகச் சேர்ந்துவிட்டது. சென்னை போக வேண்டுமென்ற பரபரப்பும் அதிகமாயிற்று.

இதைச் சேந்தமங்கலம் ஜமீன்தார் உணராமலில்லை. இவரது மன உளைச்சலைப் போக்க ஒரு நாள், ஜமீன்தார் இவரிடம் சொன்னார், ''ஐயா, அகில இந்தியக் காங்கிரஸ் மகாநாடு சென்னையில் டிசம்பர் மாதம் நடக்க இருக்கிறது; அப்போது நாம் எல்லோரும் சென்னை போகலாம். அதற்குள் ஒரு முறை மோகனூர் போய் உங்கள் தாய்தந்தையரிடம் சொல்லிக்கொண்டு வந்துவிடுங்கள்'' என்றார்.

அதைக் கேட்டவுடன் இவருக்கு மிக்க மகிழ்ச்சி உண்டாயிற்று. அந்த மாதக் கடைசியில் மோகனூர் சென்றார்.

தாய் தந்தையர்களுடன் சேர்ந்தாற்போல் சில நாட்கள் தங்கினார். காவேரியில் நீராடிக் காந்தமலை முருகனைத் தரிசனம் செய்துகொண்டார்.

**''கண்ணின் ஒளியாய்க் கருத்தில் அறிவாகி**
**விண்ணில் இரவியாய் மேலோங்கும் அண்ணலைக்**
**காந்த மலைக்கோயில் கந்தபிரான் தன்னையன்றிப்**
**போந்தஎனக் குண்டோ புகல்?''**

என அவன்மீது பல பாடல்களைப் பாடி மனம் கசிந்தார்.

உபாசனா காலத்தில், தாம் பயன்படுத்திய பிரம்பையும், தண்டத்தையும் கோவிலில் சமர்ப்பித்தார்.

# 2. ஆசானின் இல்லத்தில்

## மகாமகோபாத்தியாயரிடம் வந்து சேர்ந்தது

1927-ஆம் ஆண்டு டிசம்பர் மாத இறுதியில் சென்னையில் அகில இந்தியக் காங்கிரஸ் மகாநாடு நடைபெற்றது. அந்த மகாநாட்டிற்குச் செல்லும்போது சேந்தமங்கலம் ஜமீன்தார் 'கி. வா. ஜ-வை மகாமகோபாத்தியாய ஐயரவர்களிடம் தமிழ் பயிலும் நிமித்தம் அழைத்துப் போகிறார்' என்ற செய்தி இவருடைய தாயாருக்குப் பெருமகிழ்ச்சி தந்தது என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

சென்னையில் திருவேட்டீசுவரன்பேட்டையில், பிள்ளையார் கோவில் தெருவில் இருந்தது ஸ்ரீமத் ஐயரின் இல்லம். கும்பகோணம் கல்லூரியில் பார்த்த வேலையைத் தமக்கு வாங்கித் தந்த தியாகராச செட்டியாரின் ஞாபகார்த்தமாக அந்த இல்லத்திற்குத் 'தியாகராச விலாசம்' எனப் பெயரிட்டிருந்தார் ஐயரவர்கள்.

'தியாகராச விலாச'த்திற்கு அன்பர் கி. வா. ஜ-வுடன் ஜமீன்தார் சென்றபோது சற்று ஓய்வு எடுத்துக்கொண்டிருந்த ஸ்ரீமத் ஐயர் இவர்களைக் கண்டவுடன் தமது சாய்வு நாற்காலியிலிருந்து மெல்ல நிமிர்ந்து எழுந்தார்.

இவர் சட்டென்று ஒரு கரத்தால் அவரது முதுகைத் தாங்கிக்கொண்டார்; மற்றொரு கரத்தால் அவரது வலது கையைப் பிடித்துக்கொண்டார்.

ஸ்ரீமத் ஐயருக்கு அப்போது வயது எழுபத்திரண்டு; ஓடியாடி முதிர்ந்து தளர்ந்த உடல். இவருக்கோ வயது இருபத்திரண்டு; கட்டைக் கருங்காளை; பழந்தமிழ்

இலக்கியச் செல்வங்களைத் திரட்டி நமக்கெல்லாம் வழங்கியதோடு தினமும் தேவார பாராயணம் செய்யும் சிவனடியாராகவும் விளங்கினார் டாக்டர் ஐயரவர்கள். இவரோ தினமும் திருப்புகழ் பாராயணம் செய்யும் முருகனடியாராகக் காட்சியளித்தார்.

இவர்களுடைய பிணைப்பு இவருடன் வந்தவர்களுக்குப் புல்லரிப்பை உண்டாக்கியது.

தமக்கு வேண்டிய எதையும் வாய்விட்டுச் சொல்லும் வழக்கம் ஐயரவர்களிடம் இல்லை. அவரது குறிப்பறிந்து நடந்துகொள்பவர்களை அவருக்கு நிரம்பப் பிடிக்கும்.

ஐயரவர்களுக்கு இவரை, மிகவும் பிடித்துவிட்டது என்பதை இவருடன் வந்தவர்கள் உணர்ந்து கொண்டார்கள்.

கிச்சு உடையார், "உங்கள் அருளால் இவருக்கு எல்லா நன்மைகளும் உண்டாக வேண்டும்" என்று சொன்னார்.

"யாரை யாரிடம் கொண்டு வந்து சேர்க்க வேண்டுமோ அந்தப் பணியை நாங்கள் செய்து விட்டோம்" என ஆராவத உடையார் சொன்னார். அப்போது அவருடைய கண்கள் கலங்கின. வாய் குழறிற்று. அதே நேரம் இவருக்கும் கண்களில் நீர் வந்து விட்டது.

"இவரைப்பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். இவருக்கு ஒரு குறையும் ஏற்படாது; நான் பார்த்துக் கொள்கிறேன்" என ஐயரவர்கள் இவருடன் வந்தவர்களுக்கு ஆறுதல் சொன்னார்.

இவருடன் வந்தவர்கள் இவரைச் சென்னையில் விட்டு விட்டுச் சேந்தமங்கலம் திரும்பிச் சென்றார்கள்.

**ஆசிரியப்பிரானின் குடும்பம்**

ஸ்ரீமத் ஐயரின் மனைவியார் அப்போது இல்லை.* ஒரே குமாரரான கல்யாணசுந்தரமையரும், மருமகளுமே ஸ்ரீமத் ஐயருக்குப் பெருந்துணையாக அந்த வீட்டில் இருந்தார்கள்.

கல்யாணசுந்தரமையருக்கு ஐந்து பெண்கள். ஒரே ஒரு புதல்வர் — அவரது ஐந்தாம் குழந்தை; பெயர் திரு க. சுப்பிரமணியம்.

ஐயரவர்களின் வீட்டிற்கு இவர் வந்தபோது திரு சுப்பிரமணியத்திற்கு வயது 12 இருக்கும். பள்ளியில் படித்துக்கொண்டிருந்தார். அவருடைய தமக்கைகள் சுப்பிரமணியத்தை, 'தம்பி, தம்பி' என அழைப்பதைக் கேட்டு இவரும் அவரைத் தம்பி என்றே அழைக்கலானார்.

திரு கல்யாணசுந்தரமையரின் சிறிய தகப்பனார் வே. சுந்தரேசையருக்கு வயது அப்போது 56 இருக்கும்; தபால்-தந்தி இலாகாவில் பணியாற்றிவந்தார். அவர் தம் மனைவி குழந்தைகளுடன் திருவல்லிக்கேணியில் தனியாக வசித்து வந்தார். என்றாலும், அவரும் அடிக்கடி வந்து பதிப்புப் பணியில் தம் தமையனாருக்கு உதவி வந்தார். அவருடைய மனைவியாரும் தம் மைத்துனரின் குடும்பத்தினரிடம் வந்து போய்க்கொண்டிருந்தார்கள். இவர்களுடைய குழந்தைகள் கல்யாணசுந்தரமையரை 'அண்ணா! அண்ணா' என்று அழைப்பதைக் கேட்டு இவரும் ஸ்ரீமத் ஐயருடைய மகனாரை 'அண்ணா' என்றே அழைக்கலானார்.

கல்யாணசுந்தரமையருக்கு அப்போது வயது 47 இருக்கும். சென்னை உயர்நீதி மன்றத்தில் மொழி பெயர்ப்பாளர் பணி புரிந்துவந்தார்.

---

* 8.5.1917-இல் காலமானார்கள்.

மேலை நாடுகளில் ஓர் எழுத்தாளர் என்றால் அவரது வேலை, எழுதிக்கொண்டே இருப்பதுதான். அவருடைய மற்ற வேலைகளைக் கவனித்துக்கொள்ள அவருக்குத் தனிச் செயலாளர் (Private Secretary) இருப்பார்.

**ஆசானின் பொறுப்புள்ள புதல்வர்**

அதுபோன்றே ஐயரவர்களுக்குப் பழந்தமிழ் நூல்களை ஆராய்வது, குறிப்பெடுப்பது, பதிப்பிப்பது, மாணவர் களுக்குப் பாடம் சொல்வது ஆகியவையே வேலை; மற்ற வேலைகளையெல்லாம் அவருடைய புதல்வர் கல்யாண சுந்தரமையரே கவனித்து வந்தார்.

"அன்றாடம் வரும் கடிதங்களைப் பிரிப்பது, ஐய ரவர்களிடம் காட்டி அவர் சொன்னபடி பதில் எழுதுவது, அச்சகத்தோடு தொடர்பு கொண்டு நூல்களை அச்சிடுவது, நூல்களின் விற்பனையைக் கவனிப்பது, ஐயரவர்களிடமுள்ள மாணவர்களுக்கு வசதி செய்து தருவது போன்ற பற்பல பணிகளைக் கல்யாண சுந்தரமையரே கவனித்து வந்தார்.

குடும்பத்தில் நடைபெறும் உரிய காரியங்கள் அனைத்தையும் புதல்வரே தம் தலைமேற் கொண்டு செய்வார். ஐயரவர்களுக்கு எதுவும் தெரியாது; யாரேனும் தம்மிடம் வந்து ஏதேனும் கேட்டால், "கல்யாணசுந்தரத்திடம் கேள்" எனச் சொல்லி ஒதுங்கி விடுவார்; லெளகிக விஷயங்களில் என்றும் ஐயரவர்கள் தம்மை ஈடுபடுத்திக்கொண்டதில்லை.

கல்யாணசுந்தரமையர் மிகவும் நல்லவர்; நேர்மை யானவர். மேலும் அவரைக் கொஞ்சம் புகழ்ந்தாலும் போதும்; எந்தக் காரியத்தையும் சாதித்துக் கொள்ளலாம்.

பொய் பேசுபவர்களைக் கண்டால் அவருக்குப் பிடிக்காது; அவருக்குத் தெரியாமல் யாரும் எதையும்

செய்யக்கூடாது; தம்மிடம் கூறாமல் யாரும் எதையும் ஸ்ரீமத் ஐயரிடம் நேரில் சொல்வதையும் அவர் விரும்பிய தில்லை; ஆங்கில அரசாங்கப் பணியில் ராஜ விசுவாசத் துடன் ஈடுபட்டவர் என்பதால் கதர்ப்பக்தி, காங்கிரஸ் பற்று ஆகியவற்றில் ஈடுபாடில்லாதவர். குடும்பச் சூழ்நிலையைத் தகர்த்துக்கொண்டு பலதரப்பட்ட மக்களின் உதவிகொண்டு தாமே வளர்ந்தவர்.

கதர் அன்பர் கி.வா.ஜ.; அக்காலத்தில் 21 வயது ஆகியும் திருமணமாகாதவர். கல்யாணசுந்தரமை யர் மிக மென்மையான மான்செஸ்டர் மல்வேட்டி கட்டி வந்தவர்; தம் தந்தையாருக்கு உதவியாக இருக்கும் மாணவர்களுக்கும் ஆண்டுதோறும் அந்தக் காலத்தில் ஏழெட்டு ரூபாயில் நல்ல மில் வேட்டி எட்டு முழம் வாங்கிக் கொடுப்பவர். தந்தையாரின் பெருமை மிக்க குடும்பக் கலாசார நிழலில், ஒதுங்கியே வாழப் பழகியவர். ஐந்து பெண் குழந்தைகளுக்குத் தந்தை; அரசியல் எதிர்ப்புக் கிளர்ச்சிகளினின்று ஒதுங்கி வாழ்ந்து வருபவர். தம் தந்தையாரின் வாக்கைத் தேவ வாக்காக மதித்து நடக்கும் பண்பாளராதலால் பிரம்மசாரியாக வும் கதர்ப்பக்தராகவும் இருந்த அன்பர் கி.வா.ஜ.விடம் அவருக்குப் பற்றுதல் இராவிட்டாலும், தம் உணர்ச்சியை வெளிப்படுத்திக் கொண்டதில்லை.

அன்பர் கி.வா.ஜ., இந்த நிலைமையை உணர்ந்து கொண்டு கல்யாணசுந்தரமையரின் அன்பையும் மதிப்பையும் பெறும் வகையில் தாம் நடந்துகொள்ள வேண்டும், ஸ்ரீமத் ஐயரிடம் படிக்க வரும் நேரம் போக, மற்றச் சமயம் தாம் வெளியில் தங்கியிருக்க உடனே ஜாகை பார்க்க வேண்டும் என முடிவு செய்தார்.

### ஆசானின் சகோதரர் கண்ட புதிய மாணவர்

அடுத்தநாள் ஸ்ரீமத் ஐயருடைய தம்பி சுந்தரேசையர் அங்கு வந்தார். தம் தமையனாரின் அருகில் இவர் இருப்பதைப் பார்த்தவுடன் அவருக்கு வியப்பு

ஏற்பட்டது. ஸ்ரீமத் ஐயரின் இயல்பை அவர் அறிந்தவர் தாம்.

ஒரு முறை ஸ்ரீமத் ஐயர் (1920) மதுரை சென்றிருந்தார். மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் படித்துக்கொண்டிருந்த கோதண்டராமன்* என்கிற மாணவரைப் பார்த்தார். அவருக்கு வயது 12 இருக்கும். தாய் தகப்பனார் இல்லை; பிரம்மசாரி. அவன்பால் ஸ்ரீமத் ஐயருக்கு அன்பு சுரந்தது. "எனக்கு உதவியாக நீ என்னுடன் வருகிறாயா? உனக்குத் தமிழ் சொல்லித் தருகிறேன். படித்து, நீயும் முன்னுக்கு வரலாம்" என அவரிடம் பரிவோடு பேசினார். அம்மாணவரும் சம்மதிக்கவே, ஐயரவர்கள் அவரைத் தம்முடன் சென்னைக்கு அழைத்து வந்துவிட்டார். தம் வீட்டிலேயே தம்முடன் தங்க வைத்துக்கொண்டு பாடம் சொல்லித் தந்தார். அவருக்கும், அவரது வீட்டாருக்கும் கோதண்டராமன் மிக்க உதவியாக இருந்தார்.

ஸ்ரீமத் ஐயர் சிதம்பரம் போகும்போது அவரையும் தம்முடன் அழைத்துச் சென்றிருந்தார்; அவரை மீனாட்சி தமிழ்க் கல்லூரியிலும் சேர்த்துவிட்டார்.

சிதம்பரத்திலிருந்து வந்தபோதுதான் அவரது படிப்பு கெடக்கூடாது என அவரைச் சிதம்பரத்திலேயே தங்கியிருந்து படிக்கச் சொல்லிவிட்டுத் தனியே சென்னைக்கு வந்தார், ஸ்ரீமத் ஐயரவர்கள்.

'இப்போது இங்கே தமக்கு உதவி செய்யத் துறவி போல் காட்சியளிக்கும் இந்தப் பையனை அண்ணா எங்கிருந்து தேடிப் பிடித்தார்?' என அறிய ஸ்ரீமத் சுந்தரேசையருக்கு ஆவல் ஏற்பட்டது போலும்!

"யார் அண்ணா, இந்தப் பையன்?" என அவர் கேட்டார்.

---

* பிற்காலத்தில் சென்னை விமன்ஸ் கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப் பண்டிதராய்ப் பணியாற்றினார்.

"இந்தப் பையன் தமிழ் படிப்பதற்காக மோகனூரி லிருந்து வந்திருக்கிறான். எல்லாம் இறைவன் திருவருள். வேறொன்றும் வேண்டாம்; இவனிடம் சுமுகமாக இருந் தால் போதும்" என ஐயரவர்கள் நிதானமாகச் சொன்னார்.

"என்ன அண்ணா, இடைவெட்டாகப் பேசு கிறீர்கள்?" என அவர் ஐயரவர்களிடம் கேட்டார்.

இவர் சென்னைக்கு வந்தவுடன் ஸ்ரீமத் ஐயரது வீட்டில் தங்கியிருந்த இரண்டு மூன்று நாட்களில் அவ ருடைய குடும்பச் சூழ்நிலையைப் புரிந்துகொண்டு அதற் கேற்ப நடந்துகொண்டார்.

**தனி ஜாகை**

பின்னர் அதே தெருவில் ஒரு வீட்டில் ஓர் அறையை மாதம் 4 ரூபாய் வாடகைக்கு அமர்த்திக்கொண்டு அங்கே தங்கினார்.

அந்தக் காலத்தில் மாதத்திற்கு 9 ரூபாயில் உணவுச் சாலைகளில் உணவு அளித்தார்கள்.

இவர் காலையில் சிற்றுண்டி அருந்துவார்; பகல் இரவு உணவு சாப்பிடுவார். பிற்பகல் சிற்றுண்டி அருந்துவ தில்லை; காப்பி பருகும் பழக்கமும் இல்லை.

தினந்தோறும் காலையில் எழுந்தவுடன் நீராடியபின் ஜபம் செய்வார்; சிற்றுண்டி அருந்திவிட்டு ஸ்ரீமத் ஐயரது வீட்டிற்குக் காலை 8 மணிக்கெல்லாம் வந்துவிடுவார்.

பிற்பகல் 11 மணிக்கு அங்கிருந்து திரும்பும்போது உணவு விடுதி சென்று பகல் உணவு அருந்தித் தம் விடுதிக்கு வருவார்.

திரும்பவும் மாலை 4 மணிக்கு ஸ்ரீமத் ஐயரது வீட்டிற்குச் சென்றால் இரவு திரும்ப ஒரொரு நாள் பத்து பத்தரை மணி ஆகிவிடும்; வரும்போதே உணவுவிடுதி சென்று சாப்பிட்டுவிட்டுத் தம் விடுதிக்குத் திரும்புவார்.

இப்படி 1927-ஆம் ஆண்டின் இறுதியில் ஸ்ரீமத் ஐயருடைய திருவடியின் கீழிருந்து பாடம் கேட்கும் மாணவ வாழ்க்கை இவருக்குத் தொடங்கியது.

**ஒரு நாள் நிகழ்ச்சிகள்**

ஸ்ரீமத் ஐயர் விடியற்காலையில் நான்கு மணிக்கு விழித்துக்கொள்வார். வழக்கம்போலச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்த பின் ஜபம் செய்வார். அவருக்குச் சிவபக்தி அதிகம். ''எப்போதும் சிவபக்தி பண்ணிக் கொண்டிரு'' என்பதுதான் அவருடைய தந்தையார் அவருக்குக் கடைசியில் கூறிய உபதேசம். அதை அவர் இறுதிவரை மறக்கவில்லை. நடக்கும்போதுகூடச் சிவநாமம் சொல்லிக்கொண்டிருப்பது அவரது வழக்கம். காலை 6 மணிவரை ஜபம் செய்வார். பின்பு தேவாரப் பாராயணம் செய்வார். பிறகு (உலகத்தார் பண்ணி வைத்த வழக்கம்)வெறுங் காப்பி ஆகாரம். அப்பொழுது மாணவர்கள் வந்துவிடுவார்கள். அந்தக் காப்பியில் சிறிது சிறிது உடன் இருப்பவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கா விட்டால் அவருக்கு இறங்காது.

தமிழ்ப் பணி தொடங்கும். ஏட்டுச் சுவடிகளைப் பார்ப்பதோ, பிரதி செய்வதோ, பிரதி செய்ததை ஒப்பிட்டுப் பார்ப்பதோ, குறிப்புரை எழுதுவதோ இவற்றுள் ஏதேனும் ஒன்று நடைபெறும். நடுவில் சிறிது தளர்வு தோன்றினால் பாடஞ்சொல்லத் தொடங்குவார்.

பத்தரை அல்லது பதினொரு மணிக்குத் தமிழ்ச் சுவடிக் குவியலிலிருந்து எழுவார்; அப்புறம்தான் நீராடச் செல்வார். நியமமாகச் சிவபூஜை, ஜபம் முதலியன செய்தபின் உணவு கொள்வார். தமிழ் நூல்களின் சுவையை அநுபவிப்பது போலவே உணவிலும் சுவை யறிந்து உண்பார். உண்ட பிறகு இளைப்பாறுவார்; சிறிது நேரம் கண்ணயர்வார்.

படுத்த உடனே தூக்கம் வராது. யாரேனும் உட னிருந்து பாடம் கேட்கவேண்டும். அல்லது எதையாவது வாசிக்க வேண்டும். அவருக்கு உறக்கம் உண்டுபண் ணும் மருந்து இது.

ஒரு மணிக்கு எழுந்து சுவடிகளை வகைப்படுத்துவார். செய்தித் தாள்களிலுள்ள முக்கியச் செய்திகளைப் பார்ப் பார்; அல்லது படிக்கச் சொல்லிக் கேட்பார்.

மறுபடியும் தமிழாராய்ச்சி. இரவு 9 மணி வரையில் ஏடு பார்ப்பது, ஒப்பிடுவது முதலிய தமிழ்ப் பணிகள் நடைபெறும். சாயங்காலம் 'ப்ரூஃப்' வரும். அதை ஒப்பு நோக்குதல் முதலியன நடைபெறும். 9 மணிக்குப் பிறகு சாப்பாடு. அதற்கப்பால் உடனிருக்கும் மாணாக்கருக்குப் பாடம் சொல்லுவார். சில தினங்களில் இரவு 11 மணி, 12 மணி வரையில்கூடப் பாடம் சொல்லுவார். படுத்துக் கொண்ட பிறகு கடவுளுக்குப் பாமாலை சூட்டுவார்.

"அது என்ன?" என்று நீங்கள் கேட்பீர்கள். கவிச் சக்கரவர்த்தியாகிய ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர் களுடைய தலைமாணாக்கர் ஐயர் என்பதைச் சற்றே ஞாபகப்படுத்திக்கொள்ளுங்கள். "ஐயர் செய்யுள் இயற்றுவாரா? ஏதேனும் இயற்றி நூலாக வெளியிட்டிருக் கிறாரா?" என்று பலர் கேட்டதுண்டு.

"பழைய செய்யுளைத் திருத்தமுற அறிந்தால் போதாதா? நம்முடைய செய்யுள் இல்லாமல் என்ன குறை நேர்ந்துவிட்டது?" என்று ஸ்ரீமத் ஐயர் சொல்லும் அடக்கமான விடையைக் கேட்டவர்கள், அவர் செய்யுளே இயற்றியதில்லை என்றுகூட நினைக்கக் கூடும்.

இரவு படுக்கையில் படுத்துக்கொண்ட பிறகுதான் அவருக்குத் தனிமை ஓய்வு கிடைக்கும். சிவபெருமானை மனத்தில் தியானித்துக்கொண்டு நூற்றுக்கணக்கான பாடல்களை அப்போது பாடுவார். ஈசுவரத் தியானத்தில் ஒன்றிய மனத்தோடு அப்படியே கண்ணயர்ந்துவிடுவார்.

விடியற்காலையில் எழுவதற்குள் சிலமுறை விழித்துக் கொள்வார். சில நாட்களில் நடுநிசியில் எழுந்து விளக்கை ஏற்றிக்கொண்டு நூல் எதையாவது பார்ப்பார்; பாக்கள் புனைவார். அவருடைய ஒரு நாள் நிகழ்ச்சிகள் இவை.

**பாடம் கேட்கத் தொடங்கியது**

ஸ்ரீமத் ஐயரிடம் அன்பர் கி.வா.ஜ., அவர்கள் போய்ச் சேர்ந்த சமயம் ஐயரவர்கள் பதிப்பு வேலை ஒன்றையும் தொடங்கவில்லை. ஆதலால் பாடம் சொல்வதையன்றி வேறு காரியம் அவருக்கு இல்லை.

இவர் முதலில் அவரிடம் திருவிளையாடற் புராணம் பாடம் கேட்டார். நாள்தோறும் முந்நூறு, நானூறு பாடல்கள் பாடம் கேட்பார். எத்தனை பாடல்களைப் படித்துப் பாடம் கேட்டாலும் இவருக்கு அலுக்காது.

ஸ்ரீமத் ஐயரும் இவருக்குப் பாடம் சொல்லுவதில் சிறிதுகூடச் சளைக்கவில்லை. நடுநடுவே, 'பிள்ளையவர்களைப் போலப் பாடம் சொல்ல இனி யார் பிறக்கப் போகிறார்கள்?' எனத் தம் ஆசிரியரை நினைந்து ஏங்குவார். அப்போது அவர் குரல் தழுதழுக்கும்.

படிப்பவர்களுக்கு இன்பம் உண்டோ, இல்லையோ பாடம் சொல்வதில் பிள்ளையவர்களுக்கு ஒரு தனி இன்பம் இருந்ததாம். அந்த இன்பம் பிள்ளையவர்களின் மாணாக்கராகிய ஸ்ரீமத் ஐயரிடத்தும் இருந்தது.

பாடல்களைப் படித்துக்கொண்டே வரும்போது இன்ன இடத்தில்தான் இவருக்குச் சந்தேகம் என்பதை எப்படியோ தெரிந்துகொண்டு அந்த இடத்தைமட்டும் விளக்கும் பேராற்றலும் ஸ்ரீமத் ஐயரிடம் இருந்தது.

---

* ஆசானின் மேற்பார்வையில் இவர் தொகுத்த ஸ்ரீமத் ஐயருடைய பாடல்கள்: தமிழ்ப்பா மஞ்சரி (1,2); கயற்கண்ணிமாலை - உ.வே.சாமிநாதையர் நூல் நிலையத்தில் காண்க.

பாடல்களை இவர் படிக்கும்போது உணர்ச்சியோடு பொருள் விளங்கப் படிப்பது வழக்கம். சுவையும் உணர்ச்சியும் மிகுந்த பாடல்களை ஸ்ரீமத் ஐயர் ஒரு முறைக்கு இருமுறை படிக்கச் சொல்வார்.

அதனைப் படிக்கும்போது இவருடைய கண்களில் நீர் பெருகும்; எழுத்துக்கள் தெரியா; தம் கண்களைத் துடைத்துக்கொண்டு மேலே படிப்பார்.

**சுவை உணர்ந்து பயிலும் மாணவர்**

ஒரு நாள் இவர் 'பழியஞ்சின படல'த்தில் சில பாடல்களைப் படித்து வரும்போது இவருக்கு மட்டுமல்ல, ஸ்ரீமத் ஐயருடைய கண்களிலும் நீர் வழிந்தது. அங்கவஸ்திரத்தால் அவர் தம் கண்களைத் துடைத்துக்கொண்டபோது, இவர் அவரது முகத்தை நிமிர்ந்து பார்த்தார்; அப்போது ஸ்ரீமத் ஐயர் சற்றே சிரித்துக்கொண்டே சொன்னார்:

''நீ பாடல்களைப் பொருளறிந்து, சுவை உணர்ந்து நன்கு படிக்கிறாய். இது எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது'' எனப் பாராட்டினார்.

''இப்படி ஆழ்ந்துணர்ந்து படிக்கிறபோதுதான் கல்விமான்களின் மனம் உருகும்; ஒரு சமயம் பிள்ளையவர்கள் திரிசிரபுரத்தில் இருந்தபோது அவரைக் காண வெளியூரிலிருந்து ஒரு பிரபு வந்தார். பிள்ளையவர்கள் சிதம்பரம் பிள்ளையின் வீட்டு மாடியில் அப்போது இருந்தார்கள்.

''அந்தப் பிரபு, பிள்ளையவர்களோடு பேசிக்கொண்டிருந்தார். இரவு உணவு அருந்தியபின் பக்கத்து அறையில் போய்ப் படுத்துக்கொண்டார்; பிள்ளையவர்களும் படுத்துக்கொண்டார்கள்.

''நடு இரவில் விழிப்பு ஏற்படும்போது, எழுந்து உட்கார்ந்துகொண்டு படிப்பது பிள்ளையவர்களின் வழக்கம். அதுபோல அன்றும் எழுந்திருந்து ஒரு புராணத்தை எடுத்துப் படித்தார்.

"சொற்சுவை, பொருட்சுவை மிக்க பாடல்கள் வந்த போது மனமுருகினார். அவருடைய கண்களில் நீர் தாரைதாரையாக வழிந்தது. தம் ஆடையால் கண் களைத் துடைத்துக்கொண்டார்.

"அயலூரிலிருந்து வந்த அந்தப் பிரபு ஜன்னல் வழியாக வெளிச்சம் படவே விழித்துக்கொண்டார் போலும். ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்திருக்கிறார்.

"பிள்ளையவர்கள் அழுது கொண்டிருப்பதுதான் அவருக்குத் தெரிந்தது. பரபரப்புடன் பிள்ளையவர்கள் இருந்த இடத்திற்கு வந்தார். அவரது கையில் இருந்த புத்தகத்தை வெடுக்கெனப் பிடுங்கி அப்பால் எறிந்தார்.

"ஐயா, நடு இரவில் படிப்பதுபோல் கையில் புத்தகத்தைப் பிரித்து வைத்துக்கொண்டு ஏன் அழுகிறீர் கள்? நாங்கள் எல்லாம் எதற்கு இருக்கிறோம்? உங்கள் மனத்தை வருத்தும் துன்பம் என்ன? எங்களிடம் சொல்லுங்கள். எதுவாக இருந்தாலும் தீர்த்து வைக்கிறோம்' என்றாராம்! பிள்ளையவர்களுக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

"அருமையான தமிழ்ப் பாடல்களை வாய்விட்டுப் படித்து இன்புறப் பழகாதவர்களுக்கு இதெல்லாம் எங்கே புரியப் போகிறது?" எனச் சொல்லி, "உம்... மேலே படிக்கணும்" என்றார் ஸ்ரீமத் ஐயர்.

இப்படிப் பாடம் சொல்லி வரும்போதே தம் ஆசிரியரான பிள்ளையவர்களைப்பற்றி அடிக்கடி நினைத்துப் பல நிகழ்ச்சிகளை ஸ்ரீமத் ஐயர் சொல்லி வந்தார்.

அப்படிச் சொல்லி வந்த சுவையான நிகழ்ச்சிகளைத் தனியே குறித்து வரவேண்டும் என்கிற எண்ணம் இவருக்கு உண்டாயிற்று.

தம் ஜாகைக்குத் திரும்பியவுடன் ஸ்ரீமத் ஐயர் சொன்னவற்றை அப்படியே எழுதி வைத்துக்கொள்ளத் தொடங்கினார்.*

இதனால் முறையாக அன்றாடம் 'நாள் குறிப்பு' எழுதும் பழக்கம் இவ்ரிடம் ஏற்பட்டது.

**ஆசானின் பழைய மாணவருடன் நெருங்கிய நட்பு**

ஸ்ரீமத் ஐயருடைய குமாரர் இவரிடம் ஒரு நாள் ஏதோ பேசிக்கொண்டிருந்தபோது, ''கிறிஸ்துமஸ் விடுமுறைக்குக் கோதண்டராமன் நாளை இங்கு வருகிறார்'' என்று சொன்னார்.

தம் வீட்டோடு இருந்து, வீட்டிற்கு வேண்டிய சிறுசிறு உதவிகளையும் செய்து வந்ததோடு, ஸ்ரீமத் ஐயருக்கும் பல பணிவிடைகளை அவர் செய்திருப்பதால் கோதண்டராமனிடத்தில் ஐயருக்கு இருந்த பிரியத்தை இவரால் உணர முடிந்தது.

கோதண்டராமன் வரும் செய்தி இவருக்கும் இனிப்பாக இருந்தது. 'அவர் வந்தவுடன் அவரோடு நெருங்கிப் பழகவேண்டும். ஸ்ரீமத் ஐயருடைய இயல்புகளையெல்லாம் தெரிந்துகொள்ள வேண்டும்' என்ற ஆசை இவருக்கு ஏற்பட்டது.

அவர் வந்தவுடன் தம் விருப்பத்தை வெளிப்படுத்தும் வகையில் ஒரு பாட்டு எழுதி அவரிடம் கொடுத்தார்:

**''மீதண்டரா மன்னும் மாகங்கை திங்கள்**
**விலுவத்தொடும் கொன்றை மேவும்சிரக்கை**
**வேதண்டராம் அன்பொடே போற்றின் இன்பம்**
**விளைக்கும் பரன்தாளை உன்னும் குணத்தான்**

---

* மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம்— உ.வே.சாமிநாதையர்.

"தண்டர் ஆமன்றல் இன்தீஞ் சுவைப்பால்
என்னும்சொல் அன்பிற் குழைத்துப் பகர்வோன்
கோதண்ட ராமன் சலாபம் விழைந்தேன்
குலாவித் தமிழ்நூல் குறிக்கொள்வதற்கே"

என்ற இவரது பாட்டைப் படித்தவுடன் அவருக்கு மிகவும் வியப்பாகிவிட்டது. "எனக்கு இன்னமும் சொந்தமாகப் பாடல் எழுத வருவதில்லை. நீர் நன்றாக எழுதுகிறீரே! ஸ்ரீமத் ஐயருக்குத் தெரிந்தால் உம்மைப் பெரிதும் கொண்டாடுவார்" எனப் பெரிதும் புகழ்ந்தார்.

அன்றிலிருந்து அவர் இவருடன் மிகவும் மனம்விட்டுப் பழகினார். "நீர் செய்த தவத்தினால்தான் ஸ்ரீமத் ஐயரிடம் தமிழ் படிக்கக் கூடிய பாக்கியம் உமக்குக் கிடைத்திருக்கிறது" என இவரைப் பாராட்டினார்.

"தமிழ் நூல்களை ஆழ்ந்து பயிலவேண்டும். முதலில் கடினமாகத் தோன்றினாலும் பலகால் பயின்றால் வரவரத் தெளிவு உண்டாகும். படித்ததை எளிய நடையில் சொல்லவும், எழுதவும் வேண்டும்" என ஸ்ரீமத் ஐயர் அடிக்கடி மாணவர்களுக்குச் சொல்வார் என்பதை அவரிடமிருந்து இவர் அறிந்தார்.

### ஆசானின் மனக்குறை தீர்ந்தது

"எத்தனையோ பேர் என்னை வந்துபார்க்கிறார்கள், பேசுகிறார்கள்; 'இன்னது படித்தேன், அதில் இன்னது சந்தேகம், விளக்க வேண்டும்' என்று கேட்பவர்கள் அரியராயிருக்கிறார்களே!' என ஸ்ரீமத் ஐயர் அங்கலாய்த்துக்கொள்வார். தமிழ் நூல்களில் சந்தேகம் கேட்பவர்களைக் கண்டால் அவருக்கு மிகவும் பிடிக்கும்; அதை அவர் விளக்கும்போதுதான் அவரது ஆராய்ச்சியின் ஆழம் புலப்படும். உமக்குச் சந்தேகமான இடங்களை நீர் பயம் இல்லாமல் அவரிடம் எப்போது வேண்டுமானாலும் கேட்கலாம்; அப்போதுதான் அந்தத்

தமிழ்ப் பெருங் கடலிலிருந்து நீங்களும் நிறையக் கொள்ளை கொள்ளலாம்'' என இவருக்கு அம்மாணவர் ஊக்கம் ஊட்டினார்.

அவர் கிறிஸ்துமஸ்விடுமுறையின்போது சென்னையில் இருந்த நாட்கள் இவருக்கு மிக இன்பமாகக் கழிந்தன. அவரிடம் நெருங்கிப் பழகி ஸ்ரீமத் ஐயரின் இயல்புகள் சில வற்றைத் தெரிந்துகொண்டார்.

கோதண்டராமன் திரும்பச் சிதம்பரம் போகும் போது எச்சரிக்கையாக இவருக்குச் சில அறிவுரை வழங்கிச் சென்றார்.

முதலாவதாக, ''பிறரிடம் குற்றங்கள் ஏதேனும் கண்டால் அதைப் போய் ஸ்ரீமத் ஐயரிடம் சொல்லி விடாதீர். பிறரைப்பற்றிக் குற்றங்குறை கூறிப் பேசுவதை அவர் விரும்பமாட்டார்'' என்பதாகும்.

நல்ல வேளையாக அந்தக் குணம் சிறு வயதுமுதலே இவரிடம் இருந்ததில்லை. பல இடங்களில் தங்கியிருந்து இவர் படிக்க நேரிட்டதால், ஓரிடத்துச் செய்தியை மற்றோர் இடத்தில் பெருமையாகச் சொன்னதை யன்றிச் சிறுமையாகச் சொன்னவர் இல்லை.

காவேரி தீரத்தில் வளர்ந்தவர்; ஆற்றங்கரை யோரங்களில் மலம் உருட்டும் கரிய வண்டுகளைப் பார்த்திருக்கிறார்; மணமுள்ள மலர்களின் தேனை உண்ணும் வண்டுகளையும் பார்த்திருக்கிறார்.

''முதல்ரக வண்டுகளைப் போலல்லாமல், முருகா, உன் தாமரையடி ஆனந்தத் தேனை உண்டு உன்னையே பாடிக்கொண்டும், உன்னையே பேசிக் கொண்டும் இருப்பவனாக என்னை ஆக்குக'', எனக் காந்த மலைக் கோனை நாள்தோறும் வழிபட்டவராயிற்றே!

அதோடு இவரிடம் மற்றொரு சிறந்த குணம், சிறு வயதுமுதலே இருந்து வந்தது. இவர் பலரிடமும், ''அது என்ன? இது என்ன?'' எனப் பல விவரங்களைக் கேட்டு

அறிந்துகொள்வதில் மிகவும் நாட்டம் உடையவராக இருந்தார்.

தமக்குத் தெரிந்தவற்றைக்கூடத் தாமே அதனை வெளிப்படுத்திக்கொண்டதில்லை. தவிர, தெரியாதவற்றை அறிந்தவராக எந்தச் சமயத்திலும் இவர் காட்டிக்கொள்ள முற்பட்டதும் இல்லை.

**கி.வா.ஜ., பற்றி ஓர் அன்பர்**

சமீபத்தில் ஓர் அன்பர், அமரர் கி.வா.ஜ., தமக்கு எழுதிய கடிதம் ஒன்றை அனுப்பினார். அதோடு அவர் எழுதியிருந்தார்.

"அமரர் கி.வா.ஜ., தமிழ் உலகில் மலைபோல் இருந்து அடக்கமாக வாழ்ந்து மறைந்தவர். அவரே ஒரு தமிழ். அவருடைய எழுத்தை, பேச்சை, தமிழுலகம் மறக்க முடியாது. எனக்கு அவரோடு நேரிடையாகத் தொடர்பு ஏதும் இல்லையென்றாலும் பள்ளிக்கூடத்தில் படிக்கும்போதே மாணவர் மன்றக் கூட்டங்களிலும், பின்னர் இலக்கிய மேடைகளிலும், தமிழரசுக் கழக இலக்கிய, ம.பொ.சி. பிறந்த நாள் விழாக்களிலும், எழுத்தாளர் கூட்டங்களிலும் அவரைப் பலமுறை பார்த்துப் பேச்சுக்களைக் கேட்டதுண்டு.

"ராமாயணத்தில் ராமனை 14 ஆண்டுகள் என்று குறிப்பிட்டு, காட்டுக்குப் போகச் சொன்னதேன் என்று 19-8-63-இல் அவரிடம் நான் கேட்ட வினாவிற்கு, அவரிடமிருந்து 25-11-63-இல் ஒரு கடிதம் வந்தது:

கலைமகள்,
25-11-63

'அன்புடையீர், வணக்கம்.

தெரியவில்லை என்று உங்களுக்கு விடை சொல்ல வேண்டாமென்று பலரை விசாரித்தேன். பதினான்கு

வருஷங்களுக்குக் காரணம் தெரியவில்லை. இன்னும் விசாரிக்கிறேன். தெரிந்தால் எழுதுகிறேன்.

அன்பன்
கி.வா. ஜகந்நாதன்.

''இது அவரது பொறுப்புணர்ச்சியையும், பெருந் தன்மையையும் காட்டியது கண்டு வியந்தேன்'' என அவ்வன்பர் தம் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.*

ஸ்ரீமத் ஐயரும் இதே குணம் உடையவர்தாம். அன்று கோதண்டராமன் இவரிடம் இரண்டாவதாகச் சொன்ன புத்திமதி, ''தெரியாதவற்றைத் தெரிந்தனவாக எந்தச் சமயத்திலும் ஸ்ரீமத் ஐயரிடம் காட்டிக்கொண்டு விடாதீர்! அது அவருக்குக் கொஞ்சமும் பிடிக்காது'' என்பதேயாகும்.

தம்முடைய இயல்புகளுடன் ஸ்ரீமத் ஐயரின் இயல்புகளும் ஒத்திருப்பது அறிந்து இவர் பெரிதும் மகிழ்ந்தார்.

**'சாகித்தியம் வருமா?'**

திருவிளையாடல் புராணம் பாடம் கேட்டு வரும் போது ஒரு நாள் ஐயரவர்கள் இவரிடம், ''உமக்குச் சாகித்தியம் வருமா?'' என்று கேட்டார்.

அவர் சில சமயம் தேவாரப் பாடல்களை மிகவும் இனிமையாக ராகத்தோடு தணிந்த குரலில் பாடுவதை இவர் கேட்டிருக்கிறார்; புத்தகம் எதையேனும் தேடும் போது கோபாலகிருஷ்ண பாரதியாரின் பாடல்களை மெல்லப் பாடிக்கொண்டிருந்ததையும் அறிவார்.

ஸ்ரீமத் ஐயருக்கு தமது குடும்பச் சொத்தான சங்கீதத்தில் இயல்பாகவே பிரியம் இருந்தது.

---

* சி. ஞானமணி, பி. லிட்., எம். ஏ. (அரசியல்), 11, சஞ்சீவிராயன் கோவில் தெரு, சென்னை—600021; 6-3-89.

இவருக்குச் சங்கீதம் வராது. எங்கே நம்மைப் பாடச் சொல்வாரோ என்கிற பயம் இவரைப் பற்றிக் கொண்டது.

கொஞ்சம் வெட்கத்துடன், ''எனக்குச் சங்கீதம் வராது'' எனச் சொல்லிப் புத்தகத்தில் தலையைக் கவிழ்த்துக்கொண்டார்.

ஐயரவர்கள் ஏதும் சொல்லவில்லை; மேலே தொடர்ந்து பாடம் கேட்டுவிட்டு, ''தப்பித்தோம், பிழைத்தோம்'' என்கிற ரீதியில் அன்றைக்குத் தம் ஜாகைக்கு இவர் வந்துவிட்டார்.

**ஆசான் பாடம் சொல்லும் பாங்கு**

பிள்ளையவர்கள் பாடம் சொல்லும்போது நூலுக்குப் பொருளுரைப்பதோடு நூலாசிரியர் சம்பந்தமான வரலாறுகளையும் சொல்வாராம். பல தனிப் பாடல்களையும் சொல்வார். இன்னும் சந்தர்ப்பத்திற்கேற்ற பல செய்திகளை எடுத்துரைப்பார்.

தம்மிடம் படிக்கும் மாணவர்களுக்குத் தமிழில் செய்யுள் இயற்றும் பழக்கமும் ஏற்பட வேண்டுமென நினைந்து அவ்வப்போது ஏதாவது ஓர் அடியைக் கொடுத்துச் செய்யுள் இயற்றச் சொல்வார்.*

ஒரு நாள் ஐயரவர்களுக்கு, ''கந்தா கடம்பா குகா'' என்கிற வெண்பாவுக்குரிய ஈற்றடியைக் கொடுத்து ஒரு செய்யுள் இயற்றச் சொன்னார். ஐயரவர்கள் ஒரு பாடல் இயற்றினார்:

''நானும் ஒரு பாடல் இயற்றியிருக்கிறேன். கேள்'' என

---

* இதனைச் சமஸ்யை, சமுத்தி என்பர்- மீ. சு. பிள்ளையவர்கள் சரித்திரம்.

''பாடப் படிக்கப் பயனா நினக்கன்பு
கூடக் கருணை கொழித்தருள்வாய்—தேடவரும்
மந்தா நிலந்தவழு மாயூர மாநகர்வாழ்
கந்தா கடம்பாகு கா''

என்கிற வெண்பாவைப் பிள்ளையவர்கள் சொன்னார்கள்.

இப்படிப் பிள்ளையவர்கள் தமிழை இன்பம் தரும் விளையாட்டாகக் கருதி வாழ்ந்ததோடு, தம்மிடம் படிக்கும் மாணவர்களுக்கும் தமிழ்க் கல்வியை விளையாட்டாகவே போதித்து வந்தார்.

இவ்வாறு தாம் தம் ஆசிரியரிடம் கற்ற முறைப்படியே ஸ்ரீமத் ஐயரும் இவருக்குத் தமிழைக் கற்பித்து வந்தார். செய்யுள் இயற்றவும் இவருக்குக் கற்றுக்கொடுக்க எண்ணினார் போலும்!

அடுத்த நாள் இவர் பாடம் கேட்க வரும்போது ஒரு பாடலை எடுத்துக்கொண்டு அதில் அமைந்துள்ள எதுகை மோனைபற்றி எடுத்து விளக்கினார் ஐயரவர்கள்.

செய்யுளில் பொருள் எவ்வாறு ஒவ்வோர் அடியிலும் ஒழுங்குபடுத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதைச் சொன்னார். எந்தச் சொல்லை எதுகையில் வைத்துப் பாட்டைத் துவங்கினால் மற்ற அடிகளின் எதுகையில் மோனையும் எளிதில் அமையும் என்பதையும் விளக்கினார்.

முருகனின் திருவருளால் கவிபாடும் ஆற்றல், சிறுவயது முதலே இவரிடம் இருந்தது. என்றாலும், யாப்பிலக்கணத்தை இவர் முறையாகப் படித்ததில்லை. அதனை ஐயரவர்கள் விளக்கியபோது இவர் மிகவும் மகிழ்ச்சி கொண்டார்.

## ஆசான் தந்த ஊக்கத்தின் விளைவு

அன்று இரவு பாடம் முடிந்துவிட்டது. படுத்துக் கொள்ளப் போகும் நேரம் அது. இவர் தம் ஜாகைக்குக்

கிளம்பினார். அந்தச் சமயம் ஸ்ரீமத் ஐயர், 'தரனை நினைக நெஞ்சம்' என்பதாக ஒரு வெண்பாவுக்குரிய ஈற்றடியைக் கொடுத்து அதை வைத்துக்கொண்டு மற்ற வற்றைப் பூர்த்தி செய்யும்படி இவரிடம் சொன்னார்.

இவர் உடனே காகிதத்தையும், பேனாவையும் எடுத்துக்கொண்டார். "இப்பொழுதே வேண்டுமென்ப தில்லை. இரவு நன்றாக யோசித்து எழுதிக் காலையில் கொண்டு வாருங்கள், போதும்" என்றார் ஆசான்.

"இப்போதே எழுதிவிடுகிறேன்" என்றார் இவர்.

"ஏன் இவ்வளவு அவசரம்? வெண்பாவில் தளை பார்த்து நிதானமாக எழுதலாமே" என ஐயரவர்கள் சொன்னார். இவருக்கோ உடனே எழுதிக் காட்டிவிட வேண்டுமென்ற வேகம் உண்டாயிற்று. சரசரவென்று ஒரு வெண்பாவை எழுதினார். "பாட்டு எழுதிவிட்டேன்" என்றார்.

"அதற்குள்ளேயா? தப்புந் தவறுமாகப் பாடுவதில் பயனில்லை. மனம் போனபடி பாட்டைத் தொடங்கி விட்டு, அப்புறம் சரிப்படுத்தக் கூடாது. பாட்டு நன்றாக இருக்க வேண்டும்" என்றார். இவரிடம் அவருக்கு நம்பிக்கை இல்லை.

"இதோ பாட்டைப் படிக்கிறேன்" என்று சொல்லி, இவர் படித்தார்:

**"கொன்றை மலர்மறைத்துக் கோடுயர்ந்த வேம்பலரைத்**
**துன்றமுடித்த துரையை வெள்ளி—மன்றிற்**
**பரனையங்க யற்கண்ணி பங்கனைக் கூடற்கூந்**
**தரனை நினைகநெஞ் சம்"**

என்பதே இவர் எழுதிய பாட்டு.

ஸ்ரீமத் ஐயர், "எங்கே, இன்னும் ஒரு முறை சொல்லனும்" என்றார். இவர் மறுபடியும் பாட்டைப் படித்தார்.

''இப்போதே பாடினதா?'' என அவர் கேட்டார். ''ஆம்'' என்று இவர் சொன்னவுடன் வியப்பால் அவரது முகம் மலர்ந்தது.

''பேஷ்! நன்றாகப் பாடியிருக்கிறாயே! திருவிளையாடற் புராணம் படித்துக்கொண்டிருக்கிறாய். அந்த நினைவு இருக்கிறதா என்று பார்க்கத்தான் ஈற்றடியைக் கொடுத்தேன். தரனை என்ற அரை வார்த்தையை முன் அடியோடு ஒட்டி வரும்படி நன்றாகப் பாடியிருக்கிறாய்'' எனப் பாராட்டினார்.

''உனக்கு, முன்பே செய்யுள் இயற்றும் பழக்கம் உண்டா?'' என்றும் கேட்டார்.

''உண்டு'' என இவர் தம் தலையை அசைத்தார். தமக்குப் பாடல் இயற்றத் தெரியும் என்பதை முன்பே ஸ்ரீமத் ஐயரிடம் சொல்ல இவருக்கு வாய்ப்பு ஏற்படவில்லை.

''நேற்று நான் உமக்குச் சாகித்தியம் வருமா என்று கேட்டதற்கு, 'தெரியாது' என்று சொன்னீரே!'' என ஸ்ரீமத் ஐயர் கேட்டார்.

''எனக்குப் பாட வராது. அதனால் நீங்கள் சாகித்தியம் வருமா என்று கேட்டபோது 'சாகித்தியம்' என்றால் 'சங்கீதம்' எனக் கருதிக்கொண்டு சொல்லிவிட்டேன்'' என இவர் சொன்னார்.

''அப்படியா?'' என ஸ்ரீமத் ஐயர் சொல்லிச் சிரித்துக்கொண்டார்.

''சங்கீத உருப்படிகளைச் சாகித்தியம் என்றும், சிந்தனைகளை இயற்றும் ஆசிரியர்களைச் சாகித்திய கர்த்தா என்றும் சொல்லும் வழக்கு வந்துவிட்டது. சாகித்தியம் என்பது கவிதைக்குப் பெயர். சாகித்திய சக்தி என்றால் 'கவிதா சக்தி' என்று பொருள்'' என விளக்கினார் ஐயரவர்கள்.

ஸ்ரீமத் ஐயரது உற்சாகத்தைக் கண்டு இவர் மேலும் ஊக்கம் கொண்டவராகத் தாம் ஏற்கனவே சொந்தமாக எழுதியிருந்த சில பாடல்களைச் சொன்னார்.

ஸ்ரீமத் ஐயர் அவற்றையும் கேட்டு மகிழ்ந்ததோடு, ''தெய்வபக்தி இல்லாவிட்டால் கவிதை வராது. உமக்குச் சரஸ்வதி கடாட்சம் பூரணமாக அமைந்திருக்கிறது; நிறைய எழுதும்'' என்று இவரைப் பாராட்டி ஆசீர் வதித்தார்.

### தக்க வாய்ப்பும் எதிர்காலமும்

''சந்தர்ப்பம் என்பது கடவுளுக்கு ஒரு புனைபெயர்'' என்பதாகத் தற்கால அறிஞர் ஒருவர் கூறியிருக்கிறார். கடவுள் தாம் செய்யும் காரியத்தைத் தாம் செய்தது என்று, காட்டிக்கொள்ள விரும்பாதபோது சந்தர்ப்பம் என்ற புனைபெயரைச் சூட்டிக்கொள்கிறாராம். உலக வரலாற்றில் மிகப் பிரசித்தி பெற்ற வீரர்கள், அரும் பெருங் காரியங்களைச் சாதித்த மகான்கள் இவர் களுடைய வாழ்க்கை நிகழ்ச்சிகளைப் பார்க்கும்போது சந்தர்ப்பம் அவர்களுக்கு மிக்க உதவி செய்திருக்கிறது என்பதை அறியலாம். அவர்களிடம் கடவுள் தனியொரு கருணை காட்டி, அத்தகைய சந்தர்ப்பங்களை அமைப்ப தாகச் சிலர் கூறுவர். அவரவர்கள் பிறந்த வேளையின் மகிமை, ஜாதகத்தின் பலன், பிரம்மா எழுதிய எழுத்து, பூர்வஜன்ம சுகிர்தம் என்றெல்லாம் வாழ்க்கையில் ஏற்படும் அநுகூலமான சந்தர்ப்பங்களுக்குக் காரணங்கள் கற்பிப்போரும் உண்டு.

நம் காலத்தில் காந்தி மகான் தென்னாப்பிரிக்கா போவதற்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்படாதிருந்தால் அவர் மனித குல சிரேஷ்டர் என்றும், அவதார புருஷர் என்றும் மக்களால் போற்றப்படும் நிலையை அடைந்திருக்க முடியுமா?

சந்திரகுப்தன், விக்கிரமாதித்தன், ஜூலியஸ் சீஸர், நெப்போலியன், ட்யூக் அஃப் வெல்லிங்டன் (Wellington)

ஜார்ஜ் வாஷிங்டன், ஜோசஃப் ஸ்டாலின் போன்ற மகா வீரர்களின் வாழ்க்கையில் சந்தர்ப்பங்கள் எவ்வளவோ உதவி செய்திருக்கின்றன என்பதை அறிந்திருக்கிறோம். இதிலிருந்து ஆண்டவன் அவ்வளவு பாரபட்சமுள்ளவர் என்று முடிவு கட்டுதல் தவறாகும். சரித்திரத்தில் புகழ் பெற்ற மகான்களையும், வீரர்களையும் தவிர இன்னும் எத்தனையோ பேருக்கும் ஆண்டவன் சந்தர்ப்பங்களைத் தந்துகொண்டுதான் இருக்கிறார்.

ஆனால் அந்தச் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொள்வது மனிதனுடைய சமயோசித அறிவையும், சரியான சமயத்தில் சரியான முடிவு செய்யும் ஆற்றலையும் பொறுத்தது. சந்தர்ப்பங்களைக் கைநழுவ விடுகிறவர் கோடானுகோடிப் பேர்; பெயரும் புகழும் இல்லாமல் சாதாரண வாழ்க்கை வாழ்ந்து உலகைவிட்டுச் செல்கிறார்கள். சந்தர்ப்பங்களைச் சரிவரப் பயன்படுத்திக் கொள்கிறவர்கள் வரலாற்றில் தங்கள் பெயரை நிலை நாட்டிவிட்டுச் செல்கிறார்கள்.*

ஐயரவர்கள் 'தரனை நினைக்க நெஞ்சம்' என்பதாக ஈற்றடி கொடுத்து இவரைப் பாடச் சொன்ன சந்தர்ப்பம் இவருக்குக் கிடைத்த பெரும் பேறாகும். இவர் அந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் பற்றிக்கொண்டார்.

இவரது கவிதா சக்தி ஐயரவர்களுக்கு இவர்பால் பேரன்பை ஏற்படுத்தியது. இவர்துணைகொண்டு மேலும் பல தமிழ் நூல்களைத் தம்மால் பதிப்பிக்க முடியும் என்கிற நம்பிக்கையும் அவருக்குப் பிறந்தது. இந்தச் சந்தர்ப்பத்தை அவர் நழுவவிடத் தயாராயில்லை.

ஐயரவர்கள் இவருக்குத் திருவிளையாடற் புராணத்தைத் தொடர்ந்து வேறு சில புராணங்கள் பாடம் சொன்னார். பிள்ளைத் தமிழ், உலாக்கள் போன்றவற்றைப் பாடம் சொன்னார்; நன்னூல், இறையனார்

* பொன்னியின் செல்வன்—கல்கி.

அகப்பொருள் போன்ற இலக்கண நூல்களைப் பாடம் சொன்னார்.

அப்போது திரு வி. மு. சுப்பிரமணிய ஐயர் நம் ஆசானின் இல்லத்திற்கு அடிக்கடி வந்து உதவி வந்தார். அவர் திருமணமானவர்.* வித்துவான் தேர்வுக்காக நம் ஆசானிடம் பாடம் கேட்டு வந்தார்.

ஐயரவர்கள், வி. மு. சு-வுக்குப் பாடம் சொல்லும் போது இவரும் அவருடன் சேர்ந்து பாடம் கேட்டு வந்தார்.

''காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்'' என்பதற்கேற்ப நம் ஆசானிடம் பாடம் கேட்கக் கிடைத்த சந்தர்ப்பம் அனைத்தையும் இவர் நன்கு பயன்படுத்திக் கொண்டார்.

**'தக்கயாகப்பரணி' பதிப்பில் நாட்டம்**

'தக்கயாகப் பரணி' ஒட்டக்கூத்தரால் இயற்றப் பெற்றது. அம்பிகை சம்பந்தமாகப் பல செய்திகள் அந்த நூலில் உள்ளன. நம் ஆசான் ஏற்கனவே சென்னையில் இருந்த சீனிவாசநல்லூர் ராமசந்திர சாஸ்திரிகள் போன்ற வடமொழிப் புலவர்களிடம் சென்று அவற்றுக்கெல்லாம் விளக்கம் பெற்றிருந்தார். எனினும் அவருக்கு முழுத் திருப்தி ஏற்படவில்லை.

இப்போது திரும்பவும் அந்த நூலை ஆராய்ந்து அச்சுக்குக் கொடுக்கலாம் என அவர் நினைந்தார்.

இவருக்குத் தினமும் பாடம் சொன்னவுடன் 'தக்க யாகப் பரணி'யை எடுத்துக்கொள்வார். நூல் சிறியது தான்; இருந்தாலும் ஆராய்ச்சிக் குறிப்பு ஒன்றைச் சிறப்பாக எழுத எண்ணினார். அதுபற்றிய குறிப்புகளை ஒவ்வொன்றாக அவர் சொல்வார். இவர் அதனை

* 23-5-27 வி.மு.சு-வின் திருமணம் விஷ்ணம் பேட்டையில் நடந்தது.

அப்படியே எழுதி வருவார். நேரம் போவதே இரண்டு பேருக்கும் தெரியாது.

"சீரும் சிறப்பும் உடையோய், இருமொழிச் செல்வ நின்றன், பேரும் தெரிந்திலன் என்செய்குவேன், இந்தப் பேதையேனே" என்று ஆசான் சொல்லும்போது, அவர் 'தக்கயாகப்பரணி'யை எடுத்துக்கொள்ளச் சொல்கிறார் என்கிற குறிப்பினை இவர் புரிந்துகொள்ளலானார். உடனே ஆசானிடம் 'தக்கயாகப்பரணி' நூலையும் அது சம்பந்தமான குறிப்புகளையும் எடுத்துக் கொடுப்பார்.

அந்நூலுக்குப் பழைய உரை ஒன்று இருந்தது. உரையாசிரியரைப்பற்றிய விவரம் ஏதும் தெரியவில்லை.

அந்த உரையின் சிறப்பையும், அதில் தெரிவிக்கப் பெற்றிருந்த பல நுட்பமான செய்திகளையும் கவனிக்கும் போதெல்லாம் உரையாசிரியரைப் பாராட்டுவார். 'அவர் தமிழ், வடமொழி ஆகிய இரண்டிலும் நல்ல புலமையுடையவராக இருந்திருக்க வேண்டும்' என எண்ணினார். 'அவர் இன்னார்' என்று தெரியாத மனவேதனையில் நம் ஆசான் பாடிய பாடல்தான் அது.

இவர்கள் 'தக்கயாகப்பரணி' நூல் ஆராய்ச்சியை எடுத்துக்கொண்ட நேரம் ஆசானுக்குப் பங்களூர் போக வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. அவர் மைசூர்ப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பாடக் குழுவில் ஓர் உறுப்பினராக இருந்தார். அக்குழுவின் கூட்டம் பங்களூரில் நடைபெறும். அதற்கு அவர் யாரையேனும் உடன் அழைத்துக் கொண்டு போய்வருவது வழக்கம்.

**ஆராய்ச்சியில் தெளிவை நாட்டிய ஆசான்**

பங்களூர் போனால் தமக்கு வேண்டிய சுப்பிரமணிய சர்மா என்பவரது வீட்டில் தங்குவார். சுப்பிரமணிய சர்மா தேவி உபாசகர். அவருடைய குருவின் பெயர்

ராமதாச சாஸ்திரிகள். ராமதாசர் வடமொழியிலும், மந்திர சாஸ்திரத்திலும் வல்லவர் என்று சர்மா பல சந்தர்ப்பங்களில் சொல்லியிருக்கிறார். எனினும், ராமதாசரை நம் ஆசான் பார்த்ததில்லை.

ஒரு முறை பங்களூரில் இருக்கும்போது ராமதாசரை ஒரு நாள் சந்தித்துப் பேசவேண்டும், 'தக்கயாகப்பரணி' யில் தமக்குத் தெளிவு ஏற்படாத இடத்தை அவரிடம் சொல்லி அவரது விளக்கத்தைக்கேட்டு வரவேண்டுமென நினைத்தார் நம் ஆசான்.

அதனால் பங்களூர் போனபோது 'தக்கயாகப்பரணி' கையெழுத்துப் பிரதியைத் தம்முடன் எடுத்துக்கொண்டு இவரையும் அழைத்துச் சென்றார்.

ஒரு நாள் இவர்கள் ராமதாசரின் வீட்டிற்குச் சென்றார்கள். ராமதாசரைக் கண்டவுடன் நம் ஆசான் கீழே விழுந்து அவரை வணங்கினார். இவரும் அவருக்குச் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்துகொண்டார்.

எல்லோரும் அமர்ந்தார்கள். ஒருவரை ஒருவர் அறிமுகம் செய்துகொண்டனர்.

நம் ஆசான், ராமதாசரிடம் தாம் வந்த காரியத்தைத் தெரிவித்தார்; 'தக்கயாகப்பரணி'யில் தேவியைப்பற்றி வரும் செய்திகளை எடுத்துச் சொன்னார்.

''தமிழில்கூட ஸ்ரீவித்யா சம்பந்தமான செய்திகள் உள்ளனவா!'' எனச் சாஸ்திரிகள் வியந்தார்.

''உங்களுக்கு எந்த இடம் விளங்கவில்லை, சொல்லுங்கள்'' என்றார்.

நம் ஆசான் இவரிடம் இரண்டோர் இடத்தைச் சுட்டிக் காட்டி அவற்றைப் படிக்கச் சொன்னார். அவற்றில் தமக்குள்ள சந்தேகங்களை ராமதாசரிடம் கேட்டார்;

ஆசான் கேட்டது சம்பந்தமாக ராமதாசர் எதுவும் சொல்லவில்லை. அவர் தமக்குத் தெரிந்தவற்றையெல்லாம் ஏதேதோ சொன்னார்; அவர் சொல்வதையெல்லாம் இவர் குறித்துக்கொண்டே போனார்.

நம் ஆசான் எளிதில் விளங்கக் கூடிய ஒரு பகுதியைக் கேட்டபோதுகூட அதற்கு ராமதாசர் நேராக விளக்கம் சொல்லவில்லை. தமக்குத் தெரிந்த தந்திர சாஸ்திரங்களிலிருந்து பலவற்றைச் சொல்லி அதற்கும் இதற்கும் முடிச்சுப் போட்டார், இவருடைய உள்ளத்தில் கோபம் புழுங்கியது.

'தக்கயாகப்பரணி'யில், ''உதர சோபிதா நாபி கமல வாயினால் மீள உமிழும் நீலி'' என ஓரிடம் வருகிறது.

''தேவி அகில உலகங்களையும் தன் வயிற்றுக்குள் இட்டு மீட்டும் நாபி கமலவாயினால் உமிழ்கிறாள்' எனப் பொருள். இப்பாட்டு இடக்கரடக்கல் என உரையாசிரியர் எழுதியிருக்கிறார்.

சொன்னால் பச்சையாக இருப்பவற்றை 'இடக்கர்' என்பார்கள். அவற்றை மறைத்துப் பேசும் இடத்தை 'இடக்கரடக்கல்' என்று இலக்கணக்காரர் கூறுவர்.

இந்தப் பாட்டிலுள்ள ரகசியக் குறிப்பு என்னவென்று நம் ஆசான் ராமதாசரிடம் கேட்டார்.

இதற்குக் கொஞ்சங்கூடச் சம்பந்தமில்லாமல் ராமதாசர் எதையோ சொல்லிக்கொண்டு போனார். நம் ஆசானோ, ''அப்படியா? அப்படியா?'' என்று ராமதாசர் சொல்வதைக் கேட்டுக்கொண்டே இருந்தார். நடுநடுவே 'மிக நன்றாக இருக்கிறதே!' என நம் ஆசான் சொல்வதைக் கேட்டு ராமதாசர் பின்னும் உற்சாகத்துடன் தொடர்ந்து சொல்லிக்கொண்டே போனார்.

ஆசானிடம் கி.வா.ஜ வந்து சேர்ந்து சிலமாதங்களே ஆகியிருந்தன. ஆசானின் இயல்பை இவர் முற்றும் அறிந்திருக்கவில்லை.

ஆசானுக்கு ஒன்றும் தெரியாது என்று நினைத்தவரைப்போல் ராமதாசர் தொடர்ந்து பேசிக்கொண்டே போனது இவருக்குப் பிடிக்கவில்லை. மிக எரிச்சலாக இருந்தது. அதனால் சட்டென்று ராமதாசரின் பேச்சை இடைமறித்து,

''அருணகிரிநாதர் திருப்புகழில் இதேபோல

**'ஒன்றஅும் பொன்றுவிழி — கன்றஅங் கம்குழைய**
**உந்தியென் கின்றமடு விழுவேனை'**

எனப் பாடியிருக்கிறார். உந்தி- நாபி என்பதுதான் இடக்கரடக்கல் போலும்'' எனச் சொன்னார். இவரது பேச்சில் அவசரமும், படபடப்பும் இருந்தன.

'தக்கயாகப்பரணி'யின் பாடலுக்கு ஒற்றுமையுள்ள ஒரு பாடலை இவர் அந்தச் சமயம் எடுத்துச் சொன்னது குறித்து, ஆசான் இவரது நினைவாற்றலைப் பாராட்டக் கூடும் என்றும் இவர் நினைத்தார்.

மாறாக, நம்ஆசானுக்குச் சட்டென்று கோபம் வந்து விட்டது. இவர் சொன்ன கருத்தை அவர் காதில் வாங்கிக் கொண்டதாகத் தெரியவில்லை.

''நீர் என்னுடன்தானே வந்திருக்கிறீர்? உம்மை நான் எதுவும் கேட்டேனா? கொஞ்சம் நீர் எதுவும் பேசாமல் அவர் சொல்வதைக் குறித்துக்கொண்டு வாரும்'' எனக் கடிந்துகொண்டார்.

ஆசானின் கோபத்தைக் கண்டவுடன் இவர் வெலவெலத்துப் போனார். இவரது முகம் வாட்ட முற்றது. அப்புறம் எதுவும் பேசாமல் ராமதாசர் சொன்னவற்றையெல்லாம் குறித்துக்கொண்டே இருந்தார்.

ஏதாவது ஒரு துறையில் பயிற்சி உள்ளவர்களிடம் பேச ஆரம்பித்தால் திருப்பித்திருப்பித் தமக்குத் தெரிந்தவற்றையே அவர்கள் சொல்லிக்கொண்டிருப்பார்கள்;

ராமதாசரிடம் இந்த இயல்பு அளவுக்கு அதிகமாக இருந்தது.

நம் ஆசான் கேட்ட சந்தேகத்திற்குப் பொருத்தமோ, பொருத்தமில்லையோ ராமதாசர் சரமாரியாகத் தமக்குத் தெரிந்தவற்றையெல்லாம் சொன்னார்.

ஒருவாறு 'சந்தேகம் தெளியும் படலம்' முடிந்தது. நம் ஆசான், ராமதாசரிடம் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டார்.

வீட்டிற்குப் போனவுடன், "வாருங்கள். கைகால் களை அலம்பிக்கொண்டு சாப்பிடப் போகலாம்" என்று சர்மா அழைத்தார்.

ராமதாசரின் வீட்டில் நடந்த நிகழ்ச்சியால் இவருக்குச் சாப்பாடு வேண்டும்போல் தோன்றவில்லை.

"சிறிது நேரம் போகட்டுமே" என ஸ்ரீமத் ஐயரும் சொன்னபோது அவருக்கும் சாப்பாட்டில் விருப்பம் இல்லாமை தெரிந்தது.

சர்மா இவர்களைத் தனியாகவிட்டுவிட்டு, கொஞ்சம் உள்ளே போனார். இதுதான் சமயம் என்பதுபோல ஸ்ரீமத் ஐயர் இவரைத் தம் அருகில் அழைத்தார்.

**ஆசானின் இளகிய நெஞ்சம்**

"ராமதாசர் சொன்னது அனைத்தையும் குறித்துக் கொண்டீரா?" என்று கேட்டார்.

இவர், "குறித்துக்கொண்டேன்" என்று சொன்னார்.

"அவரது வீட்டில் நான் உம்மைக் கோபித்துக் கொண்டதால் உமக்கு வருத்தம் உண்டாகியிருக்கணும்" என்றார்.

"தங்களுக்குக் கோபம் ஏற்படும்வண்ணம் நான் அவ்விடத்தில் நடந்துகொண்டது தவறுதான். சற்றே அதிகப் பிரசங்கித்தனமாக நடந்துகொண்டுவிட்டோமே

என்று வருத்தமாக இருக்கிறது. என்னைத் தாங்கள் மன்னிக்க வேண்டும்'' என்று இவர் சொன்னார்.

''நீர் ஏதும் தவறாக நடந்துகொள்ளவில்லை. அவ்விடத்திற்குப் பொருத்தமான செய்தியைத்தான் சொன்னீர்'' என ஸ்ரீமத் ஐயர் சொன்னபோது, 'தாம் சொன்னதை அவர் கவனித்திருக்கிறார்' என்கிற திருப்தி இவருக்கு உண்டாயிற்று.

''நீர் என்னுடன்தானே இருக்கிறீர்? உம்மிடம் கேட்டுக்கொள்ள எனக்கு நிறையச் சந்தர்ப்பம் இருக்கிறது. அங்கு நாம் ராமதாசரிடம் இருக்கும் விஷயங்களைத் தெரிந்துகொள்ளத்தானே போனோம்? மறுபடியும் அவரைப் பார்க்க நமக்குச் சந்தர்ப்பம் கிடைக்குமா? கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் அவர் சொல்லும் செய்திகளை எல்லாம் பொறுமையாக இருந்து கேட்டுக்கொள்ள விரும்பினேன்'' என்றார் ஆசான்.

''தாங்கள் கேட்டது எதற்கும் அவர் பொருத்தமாக எதுவும் சொல்லவில்லையே! தாங்கள் ஒன்றும் தெரியாதவர் போலல்லவா நினைத்து அவர் பேசிக்கொண்டே போனார்'' என்றார் இவர்.

**கல உமியில் ஓர் அவல்**

ஸ்ரீமத் ஐயரின் முகத்தில் ஒரு மலர்ச்சி பிறந்தது. ''உமக்கு இன்னும் அநுபவம் போதவில்லை; சிறு வயசு இல்லையா? நானோ கல உமி தின்றால் ஓர் அவல் கிடைக்காதா என்று பார்க்கிறவன். என்னுடைய அநுபவத்தில் மணிக்கணக்காகப் பொறுமையோடு கேட்டுக்கொண்டிருந்தும் ஒன்றும் கிடைக்காமல் போன பல இடங்கள் உண்டு. ஆனால் ராமதாசரிடமிருந்து இன்று பல விஷயங்களைத் தெரிந்துகொண்டேன்'' என ஸ்ரீமத் ஐயர் சொன்னபோது இவருக்குப் பேச நாவெழவில்லை.

''நமக்குப் பயன்படக்கூடியது எதையும் அவர் சொன்னதாகத் தெரியவில்லையே?'' என இவர் மென்று விழுங்கினார்.

"இருக்கலாம். நமக்கு இப்போது இன்னதுதான்வேணு மென்று அவருக்கு எப்படித் தெரியும்? தெரிந்தாலும் அவர் அதை நமக்குச் சொல்லவேண்டுமென்ற கட்டாயம் என்ன?"

இவரால் மேற்கொண்டு எதுவும் பேச முடியவில்லை.

"யாருமே தாம் சொல்வதை மற்றவர் ஆசையோடு கேட்டுக்கொள்கிறார் என்று உணர்கிறபோதுதான், மேலும் மேலும் தமக்குத் தெரிந்தவற்றையெல்லாம் ஆசையோடு சொல்லிக்கொண்டே போவார். அப்போது தான் அவரிடமுள்ள சரக்குகள் வெளிப்படும். வேண்டியது, வேண்டாதது, சரியானது, தவறானது எல்லாவற்றை யும் நாம் வாரிக்கொண்டால் பிறகு நன்றாக ஆராய்ந்து வேண்டியதை எடுத்துக்கொள்கிறோம், வேண்டாததை ஒதுக்கிவிடலாம். இப்போது தேவைப்படாத செய்தி களுங்கூடப் பிறிதொரு காலத்தில் வேறொரு நூலுக்குத் தேவைப்படக் கூடும். சாஸ்திரிகளிடம் பேசிக்கொண் டிருக்கையில் உம்மால் அவரது உற்சாகம் தடைப்படக் கூடாது என்றுதான் கடிந்துகொண்டேன். இப்போது ஏன் அப்படிச் சொன்னோம் என்று எனக்கே வருத்தமாக இருக்கிறது" என ஐயரவர்கள் சொன்னபோது அவரது வேதனையை இவரால் தாங்க முடியவில்லை.

ஆசானின் கொள்கை எவ்வளவு அநுபவபூர்வ மானது என்பதைச் சிந்திக்கத் தொடங்கியபோது அதன் அருமை இவருக்குப் புலப்பட்டது. கூடவே இவரது முகத்தில் பழைய களையும் உற்சாகமும் திரும்ப வந்தன.

உள்ளேயிருந்து, "சாப்பிடலாமா?" என்று சர்மா கேட்டுக்கொண்டே வந்தபோது. 'உம்' என ஐயரவர்கள் எழுந்தார்.

தமிழ் அமுதத்தையும், தம் வாழ்வின் அநுபவத்தை யும் ஒருங்கே கூட்டித் தமக்கு விருந்தாகப்படைத்தளிக்கும் ஆசானுடன் இவரும் உண்ணச் சென்றார்.

**அன்று அறிந்த விஷயங்கள்**

இவருக்குப் பாடம் சொல்லி வரும்போது ஐயரவர்கள் தமக்குநினைவுவரும் அரியகருத்துக்களை நடு நடுவே சொல்வது உண்டு. இவரும் அன்றாடம் தம் நாட்குறிப்பில், 'இன்று அறிந்த விஷயங்கள்' எனத் தலைப்பிட்டு அவற்றைக் குறித்துக்கொண்டு வந்தார்.

பங்களூரிலிருந்து திரும்பி வந்தபின் ஸ்ரீமத் ஐயர் இவருக்குச் சில அறிவுரைகள் வழங்கினார்:

''ஒரு கைரேகை நிபுணர் கிரேக்கநாட்டில் இருந்தார். ஒருவருடைய கைரேகையையும், முகக் குறிப்பையும் அவர் பார்த்தால் போதும். அந்த ரேகைக்குரியவர் இன்ன குணங்கள் உடையவராக இருப்பார் என்று சொல்லிவிடுவார்.

''தம் சீடர்கள் புடைசூழ உட்கார்ந்து பேசிக்கொண் டிருந்த கிரேக்க நாட்டு மாமுனி சாக்ரடீஸின் கையைப் பார்க்கும் சந்தர்ப்பம் அவருக்கு ஏற்பட்டது. சாக்ரடீஸ் சிறந்த பகுத்தறிவாளர்; தத்துவஞானி.

''அவரது கைரேகையைப் பார்த்தவுடன், 'சாக்ரடீஸ் பொய் பேசுபவராகவும், கொலை பாதகராகவும், வஞ்சகம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்' என நினைப்பதற்குரிய குறிகளைக் கண்டவுடன் அவரது மனம் குழம்பியது.

''உலகில் சிறந்த மெய்யறிவாளராகிய சாக்ரடீஸ் அவ்வாறு நினைத்தற்குரியவர் அல்லரே என்று கவன்று, 'இம்முரண்பாட்டினால் ஒன்று, நீவிர் மறைந்தொழுதல் வேண்டும். அன்றெனின் சாத்திரம் பொய்யாதல் வேண்டும்' என்றாராம்.

''அதனைக் கேட்ட பெரியார் சாக்ரடீஸ், ''நான் கொலைத் தொழில் முதலியன உள்ளவனே; சாத்திரமும் பொய்யல்ல' என்றாராம்.

கைரேகை நிபுணருக்கு வியப்பாகி விட்டது. "தாங்கள் சொல்வது எனக்குப் புரியவில்லை. விளக்க வேண்டும்" என்று சாக்ரடீஸிடம் கேட்டுக்கொண்டார்.

"நான் முன்பு இக்குற்றங்கள் அனைத்தையும் செய்த துண்டு. பின்பு பையப்பைய ஒவ்வொன்றாக அக்குற்றங்களை ஒழித்துவிட்டேன்" என்றாராம் சாக்ரடீஸ்.

குற்றம் மனிதனிடம் இருந்தாலும், ஒவ்வொன்றாக நீக்கிக்கொள்ள வேண்டும்.

ஓர் அரசர் தம்மிடமுள்ள பல குற்றங்களில் ஒரு குற்றத்தைமட்டும் ஒரு நாள்முதல் செய்யாதிருப்பதாக உறுதி கொண்டார். ஒரு வாரத்தில் அக்குற்றத்திலிருந்து நீங்கினார். அடுத்த வாரத்தில் இன்னொரு குற்றத்தை விலக்கினார். இப்படியே ஒவ்வொன்றாக விலக்கி, வழக்கப்பட்டுக் குற்றங்கள் அனைத்தையும் நீத்தார்.

"நான் எப்போதும் பிறர் குணத்தையன்றிக் குற்றங்களை எடுத்துக் கூறுவதில்லை. குற்றம் மனித இயற்கை. பிறரைத் திருத்துவதைவிட நாம் திருந்துவது மேல். சுபாவமான கெட்ட குணங்களை நீக்கிக்கொள்ள முடியாது என்பதில்லை. நமது முயற்சியினால் நம்மை நாமே திருத்திக்கொள்ளலாம் என்று தெரிகிறது" என் ஐயரவர்கள் சொன்னார்.

இவர் உடனே பங்களூர்ச் சம்பவத்தை நினைவு கூர்ந்தார். 'இனி ஒருபோதும் அதுபோல் நடந்து கொள்ளக் கூடாது' என உறுதி பூண்டார்.

இவருடைய தந்தையாருக்கு முன்கோபம் அதிகம். கிருஷ்ணராயபுரத்தில் இருந்த இவருடைய மாமாவும் மிகவும் கோபக்காரர். தம் தந்தையாரின் கோப குணமும் அம்மானின் கோப குணமும் இவரைப் பற்றிக்கொள்ள வில்லை. நல்ல வேளையாக இவர் ஐயரிடம் வந்து சேர்ந்துவிட்டார்!

ஸ்ரீமத் ஐயரின் கடுமையான உழைப்பும், அளவிட்டுச் சொல்ல முடியாத பொறுமையும் இவருக்கு வழிகாட்டியாக அமைய நேர்ந்ததும் நல்ல வாய்ப்புத்தானே?

ஐயரவர்கள் ஒரு பாடலில் உள்ள ஒரு சொல்லுக்குப் பொருள் விளங்கவில்லையென்றால் அதனை அறியும் வரையில் திருப்பித் திருப்பிப் படித்துச் சிந்திப்பதை பொறுமையோடு இருந்து இவர் கவனித்தார்; புதிய அரிய கருத்தொன்று புலப்பட்டு விட்டால் ஐயர் தம்முடைய தோளைத் தாமே மகிழ்ச்சியில் தட்டிக்கொண்டு காலை அசைப்பதைக் கண்டு இவரும் மகிழ்ந்தார்.

ஐயரவர்களின் பொறுமை எல்லையற்றதாக இருப்பதை அறிந்து இவரும் அதனையே மேற்கொள்ளத் தொடங்கினார். காலம் போவதை உணராமல், ஐயரவர்கள் சொல்வனவற்றை எழுதிக்கொண்டே இருப்பதன்மூலம் பொறுமை தானாகவே வந்து இவரிடம் குடிகொண்டுவிட்டது.

## ஆசானின் ஆசிரியப்பிரானைப்பற்றிய குறிப்புகள்

ஐயரவர்களின் குமாரர் உயர்நீதி மன்றத்தில் வேலையில் இருந்ததால் அவர் காலையில் அலுவலகம் போனால் மாலையில்தான் திரும்பி வருவார்; அந்த நேரத்தில் இவர் அநேகமாக எப்போதும் ஐயருடன் இருந்து வந்தார்.

ஐயரவர்களுக்குத் தம்முடைய ஆசிரியர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் சரித்திரத்தை எழுதி முடித்துவிட வேண்டுமென்ற மன உளைச்சல் இருந்தது.

இதற்காக அவர் கடந்த நாற்பத்தைந்து ஆண்டுகளாகப் பிள்ளையவர்களைப்பற்றித் திரட்டிவைத்திருந்த குறிப்புகள் ஒரு பீரோ நிறைய இருந்தன; பல பேர் சொன்ன தகவல்கள், கடிதங்கள் கட்டுக்கட்டாக இருந்தன.

அவ்வளவையும் ஒழுங்குபடுத்தி, ஒருமுகப்பட்ட சிந்தையோடு ஐயரவர்கள் பார்த்து வந்தார்; இவரையும் பார்க்கச் செய்தார்.

இவருக்குப் பாடம் சொன்னவுடன், அந்தக் குறிப்புகளை வைத்துக்கொண்டு கொஞ்சங் கொஞ்சமாகப் பிள்ளையவர்களின் வரலாற்றைச் சொல்வார். ஐயரவர்கள் சொல்வதை இவர் அப்படியே எழுதுவார்; இவர் எழுதியதைத் திரும்பப் படிக்கச் சொல்வார் அவர். நடுநடுவே சிலவற்றை நீக்கிவிடச் சொல்வார்; சிலவற்றைச் சேர்த்துக்கொள்ளச் சொல்வதும் உண்டு. இவர் வேறு வேலையாக இருக்கும்போது மற்றவர்களிடம் சொல்லியும் எழுதுவிப்பார்.

ஐயரவர்கள் தம் 16-ஆம் பிராயத்தில் (1870-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில்) பிள்ளையவர்களிடம் மாணவராகச் சேர்ந்தார்; அதுமுதல் அந்தக் கவிஞர்கோமானின் இறுதிக் காலம்வரையில் கூடவே இருந்து பாடம் கேட்டு வந்தார்.

தமிழ்ப் பாடம் சொல்வதற்கேற்ற தமிழறிவையும், பாடம் சொல்லும் திறமையையும், கவி பாடும் ஆற்றலையும் ஐயரவர்கள் பிள்ளையவர்களிடமே கற்றுக் கொண்டார்.

மகாவித்துவான் பிள்ளையவர்கள் 1815-ஆம் ஆண்டு முதல் 1876-ஆம் ஆண்டு வரையில் இவ்வுலகில் வாழ்ந்திருந்தார்கள்.

பிள்ளையவர்களின் இளமைக் கால வரலாற்றை எழுதும்போது, "மீனாட்சிசுந்தரம் பிள்ளைக்கு ஐந்து பிராயமானவுடன் சிதம்பரம் பிள்ளை தம் குமாரனுக்கு வித்தியாரம்பம் செய்வித்துத் தம் பள்ளிக்கூடத்திலேயே கல்வி பயிற்றத் தொடங்கினார்" என்று எழுதினார்.

பிள்ளையவர்களின் பெயரை எழுதியவுடன் ஏதோ தாம் பெரிய தவறு ஒன்றை அந்த இடத்தில் தவிர்க்க

முடியாமல் செய்துவிட்டதைப்போல வருந்தினார் ஐயரவர்கள்; உடனே, "பிள்ளையவர்களை இவ்வாறு பெயர் குறித்து எழுதுவதற்கு அஞ்சுகிறேன்" என அப்பக்கத்தின் அடியில் குறிப்பு ஒன்றை எழுதச் சொன்னார். ஐயரவர்கள் தம் ஆசிரியரைப்பற்றி ஓர் அடையுமின்றி மீனாட்சிசுந்தரம் பிள்ளை என்று எழுதியது அந்த ஒரே முறைதான்.

பிள்ளையவர்களிடம் ஐயரவர்கள் கல்வி பயின்றது ஆறே ஆண்டுக்காலந்தான் என்றாலும் தம் ஆசிரியப் பிரானிடம் ஐயரவர்கள் கொண்டிருந்த குருபக்தி இவரால் ஆழம் காண முடியாததாக இருந்தது.

ஐயரவர்கள் பிள்ளையவர்களை, "மகாவித்துவான், கவிஞர்பிரான், கவிஞர் சிகாமணி, புலவர் பெருமான்" என்று அடைமொழி கொடுத்துச் சொல்லும்போது இவருக்குச் சிலிர்ப்பு உண்டாகும். அவர், 'பிள்ளையவர்கள்' என்பதைத் தவிர, தம் ஆசிரியப்பிரானின் பெயரைச் சொல்லி இவர் கேட்டதில்லை.

**திருவாவடுதுறை ஆதீனம்பற்றிய நினைவுகள்**

ஒரு நாள் பிற்பகல் பிள்ளையவர்களின் வரலாற்றை இவர்கள் எழுதிக்கொண்டிருந்தபோது ஆவடுதுறையிலிருந்து ஒரு கடிதம் வந்தது.

திருக்கயிலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீனத்தின் குரு மகாசந்நிதானமாக அப்போது ஸ்ரீலஸ்ரீ வைத்தியலிங்க தேசிகர் இருந்தார்.

'மாயூரநாதர் கோவில் குடமுழுக்கு அழைப்பிதழைத் தங்களைக் கலந்துகொண்டு சிறப்பாக எழுத விரும்புகிறோம்' என அவர் ஐயரவர்களுக்கு எழுதியிருந்தார்.

தேசிகரிடமிருந்து வந்த கடிதத்தைப் பார்த்தவுடன் ஐயரவர்களுக்குத் தம் இளமைக்கால நினைவுகள் வந்துவிட்டன; அவரது முகம் பிரகாசம் அடைந்தது. திருவாவடுதுறை போய்வரத் தீர்மானித்தார்.

"நீர் திருவாவடுதுறைக்குப் போனதில்லை அல்லவா? இப்போது என்னுடன் வரவேண்டும். நீர் எனக்கு உதவியாக இருந்துகொண்டு, தமிழ் படித்து வருவதை அறிந்தால் தேசிகர் உம்மிடம் மிகவும் மகிழ்ச்சி கொள்வார். நான் அந்த மடத்தில் தங்கியிருந்துகொண்டு பிள்ளையவர்களிடம் பாடம் கேட்ட இடங்களை எல்லாம் நீரும் பார்க்கலாம்" என ஐயரவர்கள் மகிழ்ச்சியோடு சொன்னபோது இவருக்கும் அளவிட முடியாத மகிழ்ச்சி ஏற்பட்டது.

திருவாவடுதுறை பாடல்பெற்ற தலம். மாயூரத்திற்கு மேற்கே பத்துமைல் தூரத்திலுள்ள நரசிங்கன்பேட்டை ரெயில்வே ஸ்டேஷனில் இறங்கிக் கிழக்கே ஒன்றரை மைல் தூரம் சென்றால் அத்தலத்தை அடையலாம்.

அத்தலத்தில் தங்கித்தான் திருமூலர் சிவயோகம் புரிந்து 'திருமந்திரம்' என்னும் அருமையான நூலைச் செய்தருளினார்.

'ஆயிரம் கொடுப்பர் போலும் ஆவடுதுறை அரசனே' என வாகீசர் பாடிய ஸ்ரீகோமுத்தீசுவரர் ஆலயம் அத்தலத்தில் உள்ளது. இப்படி நாவுக்கரசர் பாடியதற்குக் காரணமும் உண்டு.

சோழநாட்டுத் தலங்களையெல்லாம் தரிசனம் செய்துகொண்டு வந்த ஞானசம்பந்தப் பெருமான் திருவாவடுதுறைக்கு வந்தார். நவகோடி சித்தர்கள் வாழ்ந்த அத்திருப்பதியில் சில காலம் தங்கினார்.

இறைவனது அருளைத் தவிரப் பொருள் ஏதும் இறைவனிடம் வேண்டத் தெரியாத சம்பந்தரிடம் அவருடைய தந்தையார், "எனக்குப் பணம் வேண்டும்" என்று கேட்டார்; அவருக்கு வேள்வி புரியவேண்டுமென்ற ஆசை எழுந்ததே காரணம்.

"இடரினும் தளரினும் எனதுறுநோய் தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்" என நெஞ்சுருக இறைவன்

முன் பாடத் தொடங்கி, ''இதுவோ எமை ஆளுமாறு ஈவது ஒன்று எமக்கில்லையேல், அதுவோ உனது இன்னருள், ஆவடுதுறை அரசனே' என்கிற குறிப்போடு சம்பந்தர் பதிகம் இயற்றினார்.

இறைவன், எடுக்க எடுக்கக் குறையாத ஆயிரம் பொன்னுள்ள கிழியைச் சம்பந்தருக்கு இத்தலத்தில்தான் வழங்கியருளினார்.

இத்தலத்திலே சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்னர் அருளாளர் ஸ்ரீ நமச்சிவாயமூர்த்திகளால் நிறுவப்பெற்ற சைவ மடந்தான் திருவாவடுதுறை ஆதீனம்.

ஐயரவர்களுடன் இத்தலத்திற்குத் தாமும் போய் வந்தால் தம் தாய் தந்தையரின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற இறைவனது அருள் கிடைக்கக்கூடும் என இவரும் நினைந்து மகிழ்ந்திருந்தார்.

இவர்கள் அந்த மாதக் கடைசியில் ஆவ்டுதுறை போவதாக இருந்தது. அதற்கு இரண்டு நாட்கள் முன்னதாக ஐயரவர்களுடைய தம்பியின் துணைவியார் காலமானார். அதனால் ஐயரவர்களுக்குக் கடைசி நேரத்தில் மடத்திற்குப் போக முடியாத நிலை ஏற்பட்டது.

மடத்திற்குத் தாம் வருவதாக முன்கூட்டியே தகவல் தந்துவிட்டதால் யாருமே போகாமல் இருப்பது சரியல்ல, தேசிகரின் கருத்துகளை அறிந்துவர இவரைமட்டுமேனும் அனுப்பலாம் என ஐயரவர்கள் எண்ணினார்.

**ஆசானின் அறிவுரை**

'பெரிய இடத்தில் பழகும்போது அவ்விடத்துப் பழக்க வழக்கங்களை அநுசரித்து நடந்துகொள்ள வேண்டும். அவ்விடத்தில் இவர் சரியாக நடந்து கொள்ளாவிட்டால் ஏதேனும் கெட்ட பெயர் நமக்குத்தான் வந்துசேரும்' என ஐயரவர்களின் புதல்வர் அஞ்சினார்.

தம் புதல்வர் சொல்வது ஒரு வகையில் நியாய மாகவே ஐயரவர்களுக்குத் தோன்றியது. எதிர்பாராத வகையில் ஒரு சமயம், தமக்கு அவ்வூரில் ஏற்பட்ட சங்கடம் ஒன்று அவர் நினைவுக்கு வந்தது:-

ஐயரவர்கள் தமிழ் படிக்கப் பிள்ளையவர்களிடம் போய்ச் சேர்ந்தபோது பிள்ளைவர்கள் மாயூரத்தில் இருந்தார்கள்.

ஆவடுதுறை மடத்தில் இருந்த தம்பிரான்களுக்கும் பிள்ளையவர்களிடம் பாடம் கேட்கவேண்டுமென்ற ஆசை இருந்து வந்தது.

அதனால் பிள்ளையவர்களை திருவாவடுதுறை மடத் திற்கே வந்திருந்து பாடம் சொல்லுமாறு சந்நிதானம் கட்டளையிட்டது. அதன்படி பிள்ளையவர்கள் திருவா வடுதுறைக்குச் சென்றார். கூடவே ஐயரையும் அழைத்துச் சென்றார்.

அங்கே போன பின் ஐயரவர்கள் சில மாதங்கள் குமாரசாமித் தம்பிரானும், பன்னிருகைத் தம்பிரானும் தங்கியிருந்த சவுக்கண்டியில் தங்க நேரிட்டது.

**காணாமற் போன கண்டிகை**

ஒரு நாள் பன்னிருகைத் தம்பிரானது ஏறுமுக ருத்தி ராட்சக் கண்டிகை காணவில்லை. தங்க முகப்புகளுடன் கல் இழைத்த விலை உயர்ந்த கண்டிகை அது. அன்று அனைவரும் அதைத் தேடினார்கள். அகப்படவில்லை.

அன்று இரவு வழக்கம்போல் தம்பிரான்கள் இருந்த சவுக்கண்டியில் ஐயரவர்கள் சற்றுக் கண்ணயர்ந்திருப் பார்; அப்போது, மடத்தில் நடந்த களவைப்பற்றித் தம்பிரான்களோடு யாரோ இப்படிப் பேசுவது காதில் விழுந்தது: ''மடத்திலேயே களவு நடந்ததென்றால் ஆதீனத்திற்கே கெட்ட பெயர்!''

''ஆமாம். சந்நிதானத்திற்கும் தெரிந்துவிட்டது. அது கிடைக்கவில்லையென்றால் அவமானந்தான்.''

''அது எங்கே போகும்? இங்குள்ள பழம்பெருச்சாளி கள் வேலையாகத்தான் இருக்கும், எல்லோரையும் கட்டி வைத்து உதைத்து விசாரித்தால் கிடைக்காமலா போகும்?''

''அப்படி விசாரிப்பது என்றால் இங்கே வந்திருக்கும் புதிய மனிதர்களையும் விசாரிக்கத்தான் வேண்டும்.''

''யாரையா புதிய மனிதர்?''

''பிள்ளையோடு வந்திருக்கும் ஐயர் வீட்டுப் பிள்ளை புதிய மனிதர்தானே? அவர் எடுத்திருக்கக் கூடாதா?''- இந்தக் குரல் யாருடையது என்று ஐயரவர்களுக்குத் தெரியவில்லை.

'சொரேல்' என ஐயரின் நெஞ்சில் ஈட்டி பாய்ச்சி னாற்போல இருந்தது. அவரது உடம்பெல்லாம் நடுங்கி யது. 'திருட்டுப் பட்டம் வாங்கிக்கொள்ளவா படிப்பதற் காக என்று இங்கு வந்தோம்' என ஒரு கணம் துடி துடித்துப் போனார்.

''அந்த வார்த்தையை மறுபடியும் சொல்லாதே! பாவி'' என ஏறுமுகக் ருத்திராட்சக் கண்டிகையைத் தொலையவிட்ட தம்பிரானே கத்தினார்.

ஐயர்மீது ஐயமுற்று பரம சாதுவாகிய அவரைச் சொன்னால் உமது நாக்கு அழுகித்தான் போகும்'' என ஓதுவார் சபித்ததும் காதில் விழுந்தது.

தம்மீது குற்றம் சாட்டினால் அதை நம்பாதவர்களும் இருக்கிறார்கள் என்பதை அறிந்து ஐயரவர்கள் கொஞ்சம் ஆறுதல் பெற்றார். என்றாலும், அப்புறம் அன்று இரவு அவருக்குத் தூக்கமே வரவில்லை.

''விநாயகப் பெருமானே, நீதான் என்மீது ஏற்பட்ட அபவாதத்தை முற்றும் நீக்க வேண்டும்'' என வேண்டிக் கொண்டிருந்தார்.

மறு நாள் குளத்துப் படித்துறை விநாயகருக்குப் பின் இருந்த மாடம் ஒன்றில் கண்டிகை அகப்பட்டது!

பன்னிருகைத் தம்பிரான் குளிக்கப் போனபோது அவரே அங்கு அதை யார் கண்ணிலும் படக்கூடாது என்று வைத்திருக்கிறார்; வைத்த இடத்தை அவர் மறந்ததால் இந்தச் சங்கடம் உண்டாயிற்று.

அந்தச் செய்தியை ஐயரவர்கள் கேட்டவுடனே குளக்கரை விநாயகர் சந்நிதிக்குப் போய்த் தோப்புக் கரணம் போட்டு வந்தார்.

★ ★ ★

ஐயரவர்கள் அந்த நிகழ்ச்சியை இவரிடம் சொன்னதோடு, ''அங்கே போனால் நீங்கள் அங்குமிங்கும் அலையக் கூடாது. அவர்கள் தங்கச் சொன்ன இடத்தில் இருக்க வேண்டும். கூப்பிட்டு அனுப்பும் போதுதான் தேசிகரைப் பார்க்க உள்ளே போகவேண்டும்'' என்றார்.

''ஸ்ரீலஸ்ரீ ஞானாசிரியரிடம் பேசும்போது அவர் வார்த்தையை மறிக்கக் கூடாது. அவர் ஏதாவது கேட்டால் அவரது நோக்கத்தை அறிந்து கணீரெனப் பதில் சொல்ல வேண்டும். மனத்தில் தோன்றுவனவற்றை எல்லாம் சொல்லிவிடக் கூடாது. இங்கிதம் அறிந்து பேசி அவரது கருத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும். அவரது கருத்தை அப்போதைக்கப்போது குறித்துக்கொள்ள வேண்டும்'' என்றெல்லாம் பல அறிவுரை சொல்லி இவரைத் தனியே மடத்திற்கு அனுப்பி வைத்தார். இவரிடம் என்னவோ அவருக்கு அவ்வளவு நம்பிக்கை இருந்தது.

இவரும் தனியே திருவாவடுதுறை சென்று, தேசிகரது கருத்துக்களைத் தெரிந்துகொண்டு மறு நாளே வந்து விட்டார்.

வந்தவுடன் ஐயரவர்களிடம், ''இவ்விடத்து உடல் நலத்தைப்பற்றித் தேசிகர் மிகவும் பரிவோடு விசாரித்

தார். மாயூரநாதர் கோவில் கும்பாபிஷேகப் பத்திரிகையை இன்னவாறு எழுத வேண்டுமெனத் தேசிகர் இவ்விடத்தில் தெரிவிக்கச் சொன்னார். அவரோடு பேசும்போது அவரது தமிழார்வம் நன்கு வெளிப்பட்டது. அவர் இவ்விடத்தில் கொண்டுள்ள மதிப்பும், மரியாதையும் அளவிடற் கரியவை'' என அங்கு நடந்தவற்றைச் சொன்னபோது ஐயரவர்கள் பெரிய சங்கடம் ஒன்றிலிருந்து விடுபட்டவரைப்போல மிகவும் மகிழ்ந்து போனார்.

## ஆசான் மாணவரிடம் கொண்ட பேரன்பு

''எனக்குத் தள்ளாமை வந்துவிட்ட நேரத்தில் எனக்குத் துணையாக இருக்க இறைவன்தான் உம்மை என்பால் அனுப்பியிருக்கிறான். நீர் நன்றாகஇருப்பீராக தேசிகர் சொன்னபடி நீரே மாயூரநாதர் கோவில் கும்பாபிஷேகப் பத்திரிகையை எழுதவேண்டும். நான் பார்த்துத் திருத்தித் தருகிறேன்'' என ஐயரவர்கள் சொன்னார். அவருடைய கண்களில் நீர் துளித்தது.

அப்பணியை ஐயரவர்கள் தமக்கு வழங்கிய பெரும் பேறாக இவர் கருதினார்.

இவரிடத்தில் ஐயரவர்களுக்கு நாளுக்கு நாள் அன்பு பெருகி வந்தது.

தாம் தினமும் தேவார பாராயணம் செய்யும்போது கூட இடையிடையே அத்திருப்பாடல்களின் நயத்தை இவருக்கு எடுத்துச் சொல்வார்; தலங்களின் பெருமையை விளக்குவார். மற்ற நூல்களைப் பாடம் சொல்லி வரும்போது திருமுறைகளிலிருந்தும் ஒப்புமை காட்டுவார்.

திருமுறைகளில் ஈடுபட்டு உருகும் அன்பும், அவற்றிலுள்ள பாட்டின் நயங்களையும் நுட்பங்களையும் கண்டு இன்புறும் புலமையும் அவரிடமிருந்தே இவர் பெற்றார்.

இவர் ஒரு நாள் சிறிது தாமதமாக ஐயரவர்களின் வீட்டுக்குப் போனாலும், '' இன்னும் ஜகந்நாதன்

வரவில்லையா?'' என வீட்டில் உள்ளவர்களை ஐயர் அடிக்கடி கேட்கத் தொடங்கிவிடுவார். இவரை அழைத்து வர யாரையாவது அனுப்பிவைப்பார் ஐயரவர்கள்.

**தமிழறிஞர்களை அறிமுகப்படுத்திய ஆசான்**

தம்மைப் பார்க்க வருகிற தமிழ் அறிஞர்களிடம் எல்லாம் இவரை அறிமுகப்படுத்தி வைத்தார் ஐயரவர்கள். வந்தவர்களிடம் ''நீங்கள் ஏதாவது ஓர் அடியை சொல்லுங்கள்; இவர் உடனே அதை வைத்து ஒரு பாட்டுப் பாடிவிடுவார்'' என்பார்.

ஐயரவர்களது வேண்டுகோளின்பேரில் அவர்களும் ஏதாவது ஓர் அடியைச் சொல்வார்கள். இவர் அதை வைத்து ஒரு பாட்டு இயற்றிவிடுவார். அவர்கள் பெரிதும் வியப்படைவார்கள்.

இப்படி மகாவித்துவான் ராகவையங்கார், வேங்கடந் சாமி நாட்டார், டி.ஸி. ஸ்ரீநிவாசையங்கார் முதலிய தமிழறிஞர்களிடம் எல்லாம் இவரை ஆசுகவியாக அறிமுகப்படுத்தினார் ஐயரவர்கள்.

ரசிகமணி டி.கே.சிதம்பரநாத முதலியாரை அறியாதவர்கள் யாரும் இருக்க முடியாது. 'கவியின் ஆழ்ந்த உள்ளம் கண்டு படித்தின்புறத் தமிழ் ஒன்றின் மூலமாகத் தான் முடியும்' என்பதை அநுபவ வாயிலாகப் பலருக்கும் உணர்த்தியவர் அவர்.

ரசிகமணி டி.கே.சி., திருச்சியில் நாலாவது ஃபாரம் படித்துக்கொண்டிருந்தபோது ஐயரவர்கள் திருச்சிக்கு ஒரு முறை போனார். திருச்சி எஸ்.பி.ஜி. கல்லூரியினர் ஐயரவர்களைத் தமிழின் அருமைபற்றியும், வளம் பற்றியும் பேச அழைத்திருந்தார்கள். ரசிகமணியும் சிறு பையனாக இருந்ததால், தம் நண்பர்களுடன் கும்பகோணம் சாமிநாதையரைப் பார்க்க அக்கூட்டத்திற்குப் போயிருந்தாராம்.

பிற்காலத்தில் டி.கே.சி. சொன்னார்கள்: "ஐயரவர்கள் தமிழ் மகளின் நகை ஜாபிதாவை எடுத்துக்காட்டிய போது, அதாவது தலைக்குச் சூளாமணி, மார்புக்குச் சிந்தாமணி, காதுக்குக் குண்டலகேசி, கைக்கு வளையாபதி, இடைக்கு மணிமேகலை, கடைசியாகக் காலுக்குச் சிலப்பதிகாரம் என்று முடித்தார்களோ இல்லையோ, அப்படியே மயங்கிப் போய்விட்டேன்; அன்று இரவெல்லாம் ஒரே சொப்பனம்—தமிழ் அணங்கு வருவதும் தன் அபூர்வ அணிகலங்களை இப்படியும் அப்படியுமாகத் திருப்பித் திருப்பிக் காட்டுவதுமாய் இருந்தது."

ரசிகமணி பி.ஏ.,பி.எல்., பட்டமும் பெற்றவர்கள் என்றாலும், அன்றைக்கு ஐயரவர்கள் தம் பேச்சின் இறுதியில், "மாணவர்களுக்கும், கனவான்களுக்கும் ஒரு வார்த்தை. ஆங்கிலத்தைப் படிக்க வேண்டாமென்று நான் சொல்லவில்லை. எவ்வளவு வேண்டுமானாலும் படியுங்கள். ஆனால் தமிழுக்குத் தினம் அரைமணி நேரம் ஒதுக்கிவையுங்கள். கால்மணி நேரம் படித்தாலும் போதும்; பெரிய காரியம்" எனத் தம் ஆர்வத்தையெல்லாம் சேர்த்து ஒருமுனைப்படுத்திச் சொன்ன அறிவுரையை ரசிகமணி மறக்கவே இல்லை.

ஐயரவர்கள் தமிழ் மக்களைப் பார்க்கும்போதெல்லாம் தமிழ் படிக்கும்படி சதா தூண்டிக்கொண்டிருப்பார். தமிழ் படிக்கிறவர்களைக் கண்டுவிட்டால் கூத்தாடுவார்.

இப்படி, "தமிழுக்குத் தமிழர்தான் கதி; தமிழர்க்கும் தமிழே கதி" என்ற உண்மை ரசிகமணி டி.கே.சி., உள்ளத்தில் பதிந்துவிட்டது.

**ரசிகமணியின் அழைப்பு**

திருநெல்வேலியில் 'தமிழ் இலக்கியச் சங்கம்' என்ற சங்கம் ஒன்று இருந்தது. ரசிகமணியும் வேறு பல ரசிகர்களும் சேர்ந்து அதை நடத்தி வந்தார்கள்.

1928-இல் நடைபெற்ற அதன் ஆண்டு விழாவுக்கு ஐயரவர்களைத் தலைமை தாங்கும்படி ரசிகமணி டி.கே.சி., அழைத்திருந்தார். அவர் அடிக்கடி ஐயரவர்களை வந்து பார்ப்பதும் வழக்கம்.

அந்த வேண்டுகோளுக்கு இணங்கி ஐயரவர்கள் திருநெல்வேலி சென்றார்கள்.

இவருக்கும் அவரோடு திருநெல்வேலி செல்லும் பாக்கியம் கிடைத்தது.

'திருநெல்வேலி' தமிழ் இலக்கியச் சங்கத்தின் சார்பில் கம்பன் விழா 1928 ஏப்ரல் நாலு, ஐந்து தேதிகளில் நடைபெற்றது. அங்கிருந்து அழைப்பு வந்தவுடன், "நீரும் என்னுடன் வாரும். அப்படியே திருச்செந்தூரும் போய்வரலாம்" என ஐயரவர்கள் இவரிடம் சொன்னார். இவர் முருகனை நினைந்து வாழ்பவர் என்பதை உணர்ந்தே அப்படிச் சொன்னார்.

"திருநெல்வேலியில் பல வித்துவான்கள் இருக்கிறார்கள். என்னிடம் கல்லூரியில் பாடம் கேட்ட கனவான்கள் இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் பார்க்கலாம்" என ஐயரவர்கள் சொன்னபோது இவருக்கு உற்சாகம் அதிகமாயிற்று.

'பல தலங்களையும், காட்சிகளையும், நல்லவர்களையும் காணப்போகிறோம்' என்ற காரணத்தால் இவரது உள்ளம் துள்ளியது.

திருநெல்வேலியில் ஐயரவர்களின் பேத்தியும், அவளுடைய கணவரும் இருந்தார்கள். அவர்களது வீட்டில் இவர்கள் தங்கினார்கள்.

### இலக்கியச் சங்கத்தில் இவர் பாடிய அரிய வாழ்த்து

திருநெல்வேலி தமிழ் இலக்கியச் சங்கத்தாரின் விழா மிகவும் சிறப்பாக நடந்தது.

அந்தச் சங்கத்தின் ஆண்டு நிறைவு விழாவில் ஒரு வாழ்த்து எழுதி வாசிக்கும்படி ஐயரவர்களே இவரிடம்

சொன்னது இவருக்கு மிகவும் உற்சாகம் அளித்தது. ஐயரவர்களிடம் பல பிரபந்தங்களை இவர் பாடங் கேட்டுக்கொண்டிருந்த காலமாதலால் இவருக்கு யமகம், திரிபு என்பவற்றில் கவனம் சென்றது.

எதையாவது படித்தால் அதேமாதிரி பாட வேண்டு மென்று இவர் எண்ணுவார்; பாடியும் விடுவார். அந்தப் பாட்டு இவருக்குச் சர்வசாதாரணமாக இருக்கும். ஆனால் ஐயரவர்களோ அதைக் கேட்டு அடையும் ஆனந் தத்திற்கு அளவே இல்லை. வாயார இவரது முயற்சியைப் பாராட்டுவார். ஐயரவர்களைப்போல் மாணவர்களைத் தட்டிக்கொடுத்து ஊக்கம் அளிக்கும் மகாபுருஷர்களை இனி எங்கே பார்க்கப் போகிறோம் என இவரது மனம் பிற்காலத்தில் ஏங்கியது இயல்புதானே!

**யமகமும் திரிபும் அமையப் பாடும் ஆற்றல்**

ஐயரவர்களின் கட்டளைப்படியே திருநெல்வேலி தமிழ் இலக்கியச் சங்கத்தின் ஆண்டு விழாவில் அந்தச் சங்கத்தை வாழ்த்தி ஐந்து பாடல்களை இவர் பாடினார்.

முதற்பாட்டு யமகம்; இரண்டாவது பாட்டு திரிபு; மற்றப் பாடல்கள் இயல்பானவை.

யமகம், திரிபு என்பவை எதுகையின் வகையில் அமைந்த பெயர்கள். பாட்டில் ஒவ்வோர் அடியிலும் முதல்சீரும் மற்றும்எல்லா எழுத்துக்களும் ஒரேமாதிரியாக இருந்தால் அதற்கு 'யமகம்' என்று பெயர். முதலெழுத்து மாத்திரம் வேறாகவும், மற்றவை ஒன்றாகவும் இருந்தால் 'திரிபு' என்று சொல்வார்கள். 'யமகம்' என்பது வட சொல். 'மடக்கு' என்பது 'யமகம்' என்பதற்குரிய தமிழ் சொல். இப்போது 'யமகம்' என்பது ஒவ்வோர் அடியிலும் சொல்லோ, தொடரோ வெவ்வேறு பொருள் தருவதாக அமைவதையே குறிக்க வழங்கப்படுகிறது. ஓரடிக்குள்ளே அவ்வாறு வருவதை 'மடக்கு' என்கிறார்கள்.

இவர் பாடிய முதற்பாட்டு 'யமக'மாக இருந்தது. அந்தப் பாட்டின் ஒவ்வோர் அடியிலும் முதலில் 'காவியங்

கம்'* என்று அமையுமாறு இவர் பாடினார். பாட்டின் கருத்து இதுதான்.

''குவளை மலரைப் போன்ற நிறம் பெற்ற திருமேனியை உடைய கருணைக் கடலாகிய இராமனுடைய திருவிளையாடலைச் சுவை விளங்கும்படி அமைத்து ஓர் ஒப்பற்ற காவியத்தைக் கம்பனைப்போல் செய்தவர் யார்? அவனுடைய பெருமையை உணர்ந்து காதல் கொண்டார்கள்'' என்று பாட்டின் முற்பகுதியில் சொன்னார்.

திருநெல்வேலி இலக்கியச் சங்கத்தார் கம்பன் விழாக் கொண்டாடுவதைப் பாராட்டிப் பாடிய பாடல் அல்லவா அது?

அதனால் அடுத்த இரண்டடியில் திருநெல்வேலியின் இயற்கை வளத்தை வருணித்தார்:

''சோலைகளில் நடமாடுகின்ற அழகிய மயில்கள் ஆடவும், கரிய குயில்கள் பாடவும், தேனை உண்டு களிகொண்ட வண்டினங்கள் சிறிதும் மங்காத சுருதிக் கருவிபோல முழங்கும் பொழில்களையுடைய திருநெல்வேலி'' என்றார்.

**காவியங்கம் பொலிகருணைக் கடல்விளையாட்**
**டினைச்சுவைகள் கவினப் பெய்தோர்**
**காவியங்கம் பனைப்போல யாரளித்தார்?**
**அக்கவியைக் காதல் செய்தார்**
**காவியங்கம் மயில் ஆடக் கருங்குயில்கள்**
**இசைபாடக் களிவண் டர்மங்**
**காவியங்கம் பலைசெய்யும் பொழில் நெல்லை**
**இலக்கியச் சங்கத்தார் அம்மா.**

(காவி-நீலோத்பலம். அங்கம்-உடம்பு. கவின-விளங்க. கா-சோலை. களி-களிப்பு. வண்டர்-வண்டு. இயம்-இசைக் கருவி)

---

* வினாக்கள் — விடைகள் எண் 41- கி.வா.ஜ.

அந்தப் பாடல்களை இவர் அந்த விழாவில் படித்த போது திருநெல்வேலித் தமிழன்பர்கள் பலரும் இவரை வாயாரப் புகழ்ந்து பாராட்டினார்கள். பாட்டில் கடின மான சொல்லோ, வலிந்து பிரிக்க வேண்டிய தொடரோ இல்லையெனச் சொல்லிப் பலரும் புகழ்ந்தார்கள்.

அந்தப் பாராட்டுதல்களைக் கேட்ட இவருக்கு உண்டான மகிழ்ச்சியைவிட ஐயரவர்களுக்கு உண்டான மகிழ்ச்சிதான் அதிகம் என்று சொல்லவேண்டும்.

**செந்திலாண்டவன் தரிசனம்**

திருநெல்வேலியில் கம்பன் விழா முடிந்தவுடன் இவர் கள் திருச்செந்தூர் சென்றார்கள். இவர் அதுவரைக்கும் திருச்செந்தூரைப் பார்த்ததில்லை.

திருச்செந்தூரில் முருகன் ஆறுமுகங்களோடும், பன்னிரு கரங்களோடும் தங்கியுள்ளான். சூரசங்காரம் ஆனவுடன் வெற்றிக் கோலத்துடன் அவன் வந்து தங்கிய இடமாதலின் அதற்கு 'ஜயந்தி' என்ற திருநாமம் வந்தது; அதுவே செந்தி, செந்தில், செந்தூர் என மாறி வழங்கும் என்பர்.

முருகனின் திருக்கோவில், கடல் அலைகள் மோதும் இடத்திலே அமைந்திருத்தலின் திருச்செந்தூருக்கு 'அலை வாய்' என்பது பழைய பெயர்.

**''உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர்**
**அலைவாய்ச் சேறலும் நிலைஇய பண்பே''**

எனத் திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் கூறுவார்.*

சங்ககாலத்து நூல்களைப் 'பத்துப்பாட்டு', 'எட்டுத் தொகை' என்றும், 'பதினெண் கீழ்க்கணக்கு' என்னும் நூல்களைச் சங்க மருவியன என்றும் சொல்லுவார்கள். பத்துப்பாட்டின் முதற் பாட்டாக இருப்பது 'திருமுருகாற்றுப்படை'.

---

* வழிகாட்டி—திருமுருகாற்றுப்படை விளக்கம்—கி.வா.ஜ.

சங்க நூல்களுள் பத்துப்பாட்டைத் தாம் காணவும், பதிப்பிக்கவும் கிடைத்த வாய்ப்பை ஐயரவர்கள் அன்று இவருக்கு எடுத்துச் சொன்னார்.

## ஆசானின் ஆராய்ச்சித் திறமை

ஐயரவர்கள் 1887-இல் 'சீவக சிந்தாமணி'யைப் பதிப்பித்து வந்தபோது அதன் உரையில் காட்டப்பெற்ற மேற்கோள்கள் எந்த எந்த நூல்களில் இருக்கின்றன என்கிற ஆராய்ச்சியில் ஈடுபட்டார். பழைய உரையாசிரியரான நச்சினார்க்கினியர், 'என்றார் பிறரும்' என்றே சுட்டிக் காட்டிப் போயிருந்தார்.

ஐயரவர்கள் 'சிந்தாமணியை'ப் பதிப்பிக்கையில் உரையில் வரும் மேற்கோள்களுக்குரிய ஆதாரங்களை அடிக்குறிப்பில் காட்டி வந்தார். எல்லா மேற்கோள்களுக்கும் அப்படிக் காட்டிட இயலவில்லை.

ஒரு நாள் இரவு தூக்கம் வராமல் தம்மிடம் இருந்த பழைய ஏட்டுச் சுவடிகளை எல்லாம் புரட்டிப் பார்த்தார். ஆரம்பமும், முடிவும் இல்லாத ஏடு ஒன்று அகப்பட்டது. அதையும் பொறுமையாகப் படித்துப் பார்க்கையில் 'சிந்தாமணி'யில் காட்டப்பெற்றிருக்கும் பல மேற்கோள்களுக்கு ஆதாரம் தெரிந்தது. அந்த ஏடு பிள்ளையவர்களுடையது.

'அடடா! இதுகாறும் இதனை நாம் ஊன்றிக் கவனிக்கவில்லையே' என வருந்தி மேலும் அதைப் படித்தார் ஐயரவர்கள். 'பொருநராற்றுப்படை', 'சிறுபாணாற்றுப்படை', 'முல்லைப் பாட்டு', 'மதுரைக் காஞ்சி' என ஒவ்வொன்றாகப் புலப்பட்டது.

## ஐயரவர்களுக்குப் 'பத்துப்பாட்டு' ஏட்டுச்சுவடி கிடைத்தமை

ஒன்றைத் தேட மற்றொன்று அகப்பட்டாற்போல், இப்படித்தான் ஐயரவர்கள் சங்கத்தமிழ்ப் 'பத்துப் பாட்டை'க் கண்டுகொண்டார்.

'சீவகசிந்தாமணி' அச்சாகி வந்தது. ஐயரவர்கள் அதன் இறுதிப் பகுதிகளின் 'ப்ரூஃப்'பைத் திருத்திக் கொடுத்த அன்று மிக்க மனநிறைவு கொண்டார். இது காறும் வந்திராத சோர்வும் தூக்கமும் அவரை அழுத்தின; அச்சகத்திலேயே, இருந்த இடத்தில் அப்படியே படுத்து உறங்கிவிட்டார்.

தூங்கி விழித்தபோது ஐயரவர்களைப் பார்க்க முன்பே வந்து காத்திருந்த ஒருவர், "இந்தாருங்கள், பத்துப்பாட்டு" என முழுமையான ஓர் ஏட்டுச்சுவடியை ஐயரவர்களிடம் அளித்தார்.

தமிழ்த் தாய் அவர் மூலமாக, "தூங்காதே, எழுந்து என்னைப் பார்" என்று சொன்னாற்போல ஐயரவர் களுக்கு இருந்ததாம்.

"தாயே, நீ சிந்தாமணியை இந்த ஏழைமுகமாக மீட்டும் அணிந்துகொண்டாய்; உன் மற்ற ஆபரணங் களை நான் காணவும், அவற்றைத் துலக்கி உனக்கு அணிவிக்கவும் நீதான் எனக்கு அருள் புரிய வேண்டும்" என ஐயரவர்கள் தமிழ்த்தாயை வேண்டிக்கொண்டாராம்

அன்றுமுதல் பத்துப்பாட்டில் முதலாவதாக உள்ள 'திருமுருகாற்றுப்படை'யைப் படிக்கலானார்.

பத்துப்பாட்டைப் பதிப்பிக்க, மூலத்தையும் உரை யையும் பிரித்து எப்படி எழுதவேண்டுமோ அப்படி எழுதினார். அப்போது ஐயரவர்களுக்கு மிகவும் உதவி யாக உடன் இருந்தவர் திருமானூர் கிருஷ்ணையர் என்பவர்.

**'திருமுருகாற்றுப்படை' பதிப்பிப்பதற்குரிய நற்சகுனம்**

ஒரு நாள் காலையில் 'திருமுருகாற்றுப்படை'யை அவர்கள் எழுதி முடித்தார்கள்; அந்தச் சமயம் வீதியில்

நாகஸ்வர இசை கேட்கவே, அவர்கள் வாயிற்புறம் வந்தார்கள்.

முருகபக்தர் ஒருவர் காவிரியில் நீராடி, விபூதியைப் பூசிக்கொண்டு உடம்பெல்லாம் அலகுடன் பாற்காவடி எடுத்து வந்தார். அவர் முருகனது திருப்புகழைப் பாட, அவரது பாட்டுக்கும் ஆட்டத்திற்கும் ஏற்ப நாகஸ்வரக்காரர், நாகஸ்வரம் வாசித்து வந்தார். 'நல்ல சகுன'மாக அமைந்த அந்தக் காட்சி, ஐயரவர்களை மெய்சிலிர்க்க வைத்ததாம்...

இந்தச் செய்தியை ஐயரவர்கள் சொல்ல, இதனைக் கேட்டு வந்த அன்பர் கி.வா.ஜ-வுக்கும் கண்களில் நீர் துளித்தது. தாம் காந்தமலையானுக்குப் பாற்குடம் எடுக்கும் காட்சி இவரது நினைவுக்கு வந்தது.

'திருச்செந்தூர் முருகனை நம் வாழ்வில் முதன் முதலாகத் தரிசிக்கப் போகிறோம்' என்ற எண்ணத்தில் இவருக்கு ஒரு புதிய கிளுகிளுப்பு உண்டாயிற்று.

கோவிலுக்குப் போகும் வழியில் இப்போது பாதை போட்டு மேலே கொட்டகை போட்டிருக்கிறார்கள்; அப்போது கொட்டகை இல்லை; மணலில்தான் நடந்து போக வேண்டும்.

அப்படி மணலில் நடந்துபோகும்போது ஐயரவர்கள், "நீரும் செந்திலாண்டவன்மீது ஏதாவது செய்யுள் சொல்லும்" எனக் கட்டளையிட்டார்.

இவர் சேந்தமங்கலத்திலிருந்து சிதம்பரத்திற்கு முதன்முதலாக ஐயரவர்களைப் பார்க்க வந்தபோது கையுறையாக எதுவும் கொண்டு வரவில்லை.

அவரிடம் பாடம் கேட்பதற்காகச் சென்னையில் அவரது வீட்டிற்குச் சென்ற சமயத்திலும் ஒன்றும் வாங்கிப் போகவில்லை. இவரை அழைத்துக்கொண்டு வந்த மற்றவர்களுக்கும் அந்த எண்ணம் தோன்றவில்லை.

இவர் ஐயரவர்களோடு இருந்த சில மாதங்களில் அவரைக் காண வருகிறவர்கள் எல்லோரும் மலர், பழம், கற்கண்டு முதலிய பண்டங்களைக் கொண்டு வந்து கொடுப்பதைப் பார்த்தபின் இவரது மனத்தில் மிக்க வருத்தம் உண்டாயிற்று.

மனத்தை ஏதேனும் ஒன்று வருத்தும்போது, தம் அறிவினால் அதற்கு வேறு ஒரு சமாதானம் கண்டு, தம் துயரத்தைத் தாமே துடைத்துக்கொள்வது சிறு வயது முதலே இவருக்கு வழக்கம். எனவே, 'ஐயரவர்களிடம் நான் என்னையே காணிக்கையாக ஆக்கிக்கொண்ட பிறகு பழம் முதலியவை எதற்கு?' என்று ஒருவாறு தம் வருத்தத்தை மாற்றிக்கொண்டார்.

**செந்திலாண்டவனின் சந்நிதியில்**

அன்று செந்திலாண்டவனைத் தரிசனம் செய்து கொண்ட பிறகு இவரும் சில பாடல்களை அவனது சந்நிதானத்தில் பாடவேண்டுமென்று நினைந்தே வந்தார்.

இறைவனுடைய தரிசனத்திற்குப் போகும்போதே ஐயரவர்கள், ''முருகன் மீது பாடும்'' என்று சொன்னவுடன், இவரது உடம்பு புல்லரித்தது. ''பாடலைக் காணிக்கையாகக் கொண்டுபோக வேண்டும்'' என்று தம் ஆசிரியப்பிரான் உணர்த்துவதுபோல இவருக்குத் தோன்றியது.

ஆசான் இட்ட கட்டளை, அவரது பேரன்பு, முருகன் பால் இவருக்குள்ள ஈடுபாடு மூன்றும் துணை செய்ய, மூன்று வெண்பாக்களை உடனே பாடினார். மூன்றும் திரிபு, யமகம் கலந்த பாடல்களேயாகும்.

முதற் பாடலில், ''முருகன் எல்லாம் அறிந்தவன். சர்வஜ்ஞன். ஆனாலும் அவன் அறியாதது ஒன்று உண்டு. முருகன் அறியாதது என்ன? அதுதான் பிறவித் துயர். அவன் அறியாததை நான் நன்கு அறிவேன். என்னைப்

போல் பலரும் அறிவார்கள். அப்படி அறிந்தவர் கூட்டத்தில் நான்தான் முதல்வனாக இருப்பேன். என்ன என்ன பிறவி எடுத்தாய் என்று கேட்டாலோ எளிதில் தெரியாத சிறிய உயிர்களான புழு, பூச்சி, ஊர்வன இப்படிப் பல பிறவிகள் எடுத்திருக்கிறேன். இந்த விஷயத்தில் முருகன் அறியாததை நான் அறிந்தாலும் அதனால் பெருமை அடையவில்லை. இப்படிச் செனித்தது போதும். இனிமேல் செந்தூர் முருகனது அருள்தான் வேண்டும்" என்ற கருத்து அமைந்தது முதற் பாட்டு. முருகனையே பார்த்துச் சொல்வதாக இது அமைந்தது:

**''சுற்றும் பிறவிப் பிணியறியாய் நீ; அதனை**
**முற்றும் உணர்ந்தவரில் முன்னவன்யான்-சிற்றுயிர்கொள்**
**செந்தூர் வனமுதலாய்ச் சென்மித் ததுபோதும்;**
**செந்தூர் முருகஅருள் செய்.''**

(மூன்றாம் அடியின் முதலிலுள்ள செந்தூர் என்பதை செந்து ஊர் எனப் பிரிக்கவேண்டும்)

இப்படியே மற்ற இரு பாடல்களும் இருந்தன:

**''காலமெல்லாம் கைப்பொருளில் கண்ணாய்க் கழித்துவிட்டால்**
**காலன்கைப் பாசத்தில் கட்டுண்டு—மேலிவர்போ(து)**
**அங்கந்த மாதனத்தால் ஆம்பயன்என் போற்றிடுக**
**அங்கந்த மாதனத்தா னை.''**

**''அஞ்சுமலர் மாலை அலரா தவன்கடம்பு**
**விஞ்சமலர் மாலைபெற்று மேவுவாய்-நெஞ்சமே**
**செந்தினக ரன்போல் செழுஞ்சுடர்வீ சுங்கதிர்வேல்**
**செந்தினகர் அன்பால்நீ சென்று.''**

இந்தப் பாடல்களைக் கேட்டவுடன் ஐயரவர்கள், "திரிபு யமகத்தோடு பாடினாலும் பொருள் விளங்காத படி இல்லை. எளிதில் விளங்கும்படி நன்றாக இருக்

கின்றன'' என மதிப்புரை கொடுத்தபின் இவர் அடைந்த மகிழ்ச்சியைச் சொல்லவா வேண்டும்?

திருநெல்வேலி, திருச்செந்தூர் இங்கெல்லாம் சென்று சென்னை திரும்பிய தினமே ஐயரவர்கள் வழக்கம்போல் அந்த அந்த நேரப்படி தம் பணிகளில் ஈடுபடத் தொடங்கினார்.

திரு வி. மு. சுப்பிரமணிய ஐயருக்கும்* இவருக்கும் ஏற்கனவே சொல்லி வந்த பிரபந்தங்களைச் சோர்வோ அயர்வோ இன்றிப் பாடம் சொன்னார்; பிள்ளையவர்களின் வரலாற்றையும் சொல்லி வந்தார் ஐயரவர்கள்.

இவருக்கு ஐயரவர்களின் செயலெல்லாம் மிகவும் வியப்பாக இருந்தன.

அந்த முதுபெரும் பேராசிரியருக்குத் தங்களால் ஈடு கொடுக்க முடியாதது கண்டு இவர்களுக்கே வெட்கமாயிற்று. இவரும் திரு வி. மு. சு-வும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள்.

இவருக்கோ திருச்செந்தூர் போய்வந்த பிற்பாடு சங்க இலக்கியப் பாடம் கேட்கவேண்டுமென்று ஆசை. ஐயரவர்கள் மகிழ்ச்சியாக இருக்கும் சமயம் பார்த்துக் கேட்க வேண்டுமென்று இருந்தார்.

**வீட்டுப் பழக்கத்தால் நேர்ந்தது!**

ஒரு நாள் இவரது உடல்நிலை சற்றுச் சரியில்லை. ஊர்களுக்கெல்லாம் போய்வந்த அசதி, பெற்றோர்கள்-நண்பர்களின் ஞாபகம், படிக்க வந்துள்ள இடத்தில் தமக்குள்ள பொருள் முட்டுப்பாடு இவையெல்லாம் இடையிடையே நினைவுக்கு வர, உடல்மட்டும் அல்ல, நாவும் சோர்ந்திருந்தார்.

---

* திருப்பனந்தாள் ஆதீன அறக்கட்டளைப் பரிசினைக் கி. வா. ஜ-வுக்கு முன் பெற்றவர்.

ஐயரவர்களுடன் பேசி வருகையில் தம் வீட்டுப் பழக்கத்தால் அவரை, "நீ" என்று சொல்லிவிட்டார்.

ஐயரவர்கள் எப்போதும் ஒன்று நன்றாக இல்லையென்றால் 'அது நன்றாக இல்லை' எனச் சொன்னதில்லை. 'இப்படி இருந்தால் நன்றாக இருக்கும்' என அறிவுறுத்துவதே வழக்கம்.

தம்மைவிட வயதில் சிறியவர்களைக்கூட 'டா, டீ, நீ' போட்டு அழைக்கும் வழக்கம் அவரிடம் இருந்ததே இல்லை.

இவர் அவரை 'நீ' எனச் சொன்னவுடன் 'ஆமாண்டா' என்று அவரும் மெல்லத் தலைநிமிர்ந்து சொன்னார்.

சட்டென்று இவர் தம் பிழையை உணர்ந்தார். கீழே விழுந்து ஐயரவர்களை வணங்கி, "வீட்டில் உறவினர்களுடன் பேசிவந்த பழக்கத்தால் நாத் தவறித் தங்களிடமும் 'நீ' என்று சொல்லிவிட்டேன். மன்னிக்கவேண்டும்" என்று கண்ணீர் மல்கச் சொன்னார்.

ஐயரவர்களோ, "எழுந்திரும், உம்மைக்கூட நான் உறவாக நினைத்துத்தான் சொன்னேன். அதனால் என்ன? உட்கார வேண்டும்" என்றார்.

இந்தச் சம்பவம் நடந்தவுடன், ஐயரவர்களுடன் தாமாக எதையும் கேட்கும் துணிவே இவருக்கு இல்லாமற் போய்விட்டது.

ஒரு நாள் பேராசிரியர் சுந்தரமையர்*ஐயரவர்களிடம் வந்தார். அவர் ஐயரவர்களிடம் தாம் பாடம் கேட்க விரும்புவதாகச் சொன்னார்.

ஐயரவர்களுக்கோ பாடம் சொல்வது என்பது மிகவும் விருப்பமான செயல்; அந்தப் பேராசிரியரிடம், "பாடம் கேட்கலாமே; அப்படியே சொல்கிறேன்" என்று சொன்னார்.

---

* 5—5—1928; உ.வே.சாமிநாதையர் குறிப்பு.

அந்தப் பேராசிரியர் வித்துவான் தேர்வில் தேறியவர். தமிழாசிரியராகவும், பணியாற்றி வந்தவர். அவருக்குப் பாடம் சொல்லும்போது ஐயரவர்கள் சங்க இலக்கியத்தில் பத்துப்பாட்டையோ, நற்றிணையையோ, குறுந்தொகையையோ பாடம் சொல்லக்கூடும். நாமும் அப்போது சங்க இலக்கியத்தைப் பாடம் கேட்கலாம்" என்கிற நைப்பாசை இவருக்கும் எழுந்தது.

அந்தப் பேராசிரியரும், 'நமக்குப் பாடம் சொல்வது என்றால் ஐயரவர்கள் தாம் அலைந்து தேடி ஆராய்ந்து பதிப்பித்த சங்க நூல்களைத்தான் பாடம் சொல்வார். அவரிடம் பாடம் கேட்டால் ஐயரவர்களிடமே சங்க நூல்களைப் பாடம் கேட்டவன் என்று சொல்லிக் கொள்ளலாம்' என நினைந்து வந்தாரோ, என்னவோ?

**'திருவரங்கத்து அந்தாதி' பாடம் கேட்டது**

ஐயரவர்கள் அப்போது 'திருவரங்கத்து அந்தாதி'யை இவர்களுக்குப் பாடம் சொல்லி வந்தார். அதையே அன்று பேராசிரியரும் இவர்களுடன் சேர்ந்து பாடம் கேட்டார்.

பேராசிரியர் போகும்போது அவரிடம், 'நாளை நீங்கள் அஷ்டப்பிரபந்தம் இருந்தால் எடுத்து வாருங்கள். அதை உங்களுக்குப் பாடம் சொல்கிறேன்'' என ஐயரவர்கள் சொன்னார். ''சரி'' எனச் சொல்லிச் சென்ற அந்தப் பேராசிரியர் அதற்குப் பிறகு பாடம் கேட்க வரவே இல்லை!

இளமை மிடுக்கோடு சங்க இலக்கியம் பாடம் கேட்க ஆசைப்பட்ட இவருக்குப் பெரிய ஏமாற்றம்.

'சங்க நூல்களை நன்கு ஆராய்ந்து பதிப்பித்துச் சுவைத்த பின்னர் ஐயரவர்கள் புராணங்களையும் பிரபந்தங்களையும் எவ்வாறு ரசிக்க முடிகிறது?' என்று இவருக்குத் தோன்றியது.

''தமிழ் வித்துவான், தமிழ் எம்.ஏ.படித்தவர்களால் கூட, ஒரு பாடலைத் தந்து பொருள் சொல் என்றால்,

சொல்லத் தெரிவதில்லை. மரம் சாய்ந்தது; இரண்டும் சேர்ந்தால் 'மரஞ்சாய்ந்தது' என்று ஏன் வரவேண்டு மென்று கேட்டால் மயங்கி நிற்கிறார்கள். காரணம், தேர்வில் வினாவாக வரக்கூடியதைமட்டும் படிப்பது, எதிலாவது சுவை கண்டால் அதைமட்டுமே படிப்பது என்பதுதான். சாதம் சாப்பிடாமல் இனிப்பான தின் பண்டங்களையே தின்னும் குழந்தைக்கு எப்படி உடம்பு தேறும்? சாப்பாடு என்றால் அன்னம், காய்கறி, குழம்பு, ரசம், தயிர் என்று எல்லாமே வேண்டும். உணவு தெவிட் டாதிருக்க ஊறுகாய்கூட வேண்டித்தான் இருக்கிறது. படிப்பது என்றால் சிறிய நூல், பெரிய நூல், சங்க நூல், பிற்காலத்து நூல், காவியங்கள், புராணங்கள் என்கிற வேறுபாடு இல்லாமல் எல்லாமே தண்டமிழ்த் தாயின் அணிகலன்கள் என்கிற உணர்வோடு படித்துச் சுவைத்து இன்புற வேண்டும். அப்போதுதான் தமிழில் நல்ல புலமையும், பழக்கமில்லாத எந்தப் புதுப்பாட்டையும் பிரித்துப் பொருள் கூறும் ஆற்றலும், பல சொற்களின் பொருளும் தெரியும். நல்ல தமிழ் இலக்கண இலக்கிய வன்மை பெறவேண்டுமென்றால் சில்லறைப் பிரபந்தங் கள் பலவற்றையும் படிக்க வேண்டும். இந்த அறிவுதான் காவியச் சுவையை முற்றும் நாமே உணர்ந்து அநுபவிக்க அநுகூலமாக இருக்கும்'' என ஐயரவர்கள் சொன்னார்.

அதன் பிறகுதான் இவருக்கும் உண்மை விளங்கியது; ஒவ்வொரு தமிழ்ப் புலவரும் கற்க வேண்டிய கருவி நூல்*

---

* பண்டைக்காலம் தொடங்கித் தமிழ் பயிலும் மாணவர்கள் முதலில் சிறு நூல்களைக் கற்றல் வழக்க மாக இருந்தது. அந்தாதி, சிலேடை வெண்பா, மாலை, கலம்பகம், கோவை, மடல், பரணி என்பனவற்றை ஒன்றன்பின் ஒன்றாகப் படித்து வருவார்கள். தமிழில் அடிப்படை உணர்ச்சி வருவதற்குப் பிரபந்தங்கள் உதவி யாக இருத்தலின் அவற்றை வித்துவான்கள் 'கருவி நூல்கள்' என்று வழங்குவர்.

களாகிய சிறு சிறு பிரபந்தங்களை ஐயரவர்கள் பாடம் சொன்னபோது இவர் அவற்றையெல்லாம் மிகவும் விருப் போடு கற்கத் தொடங்கினார்.

**சென்னையில் சிக்கன வாழ்வு**

சென்னையில் இவர் மிகவும் சிக்கனமாகத்தான் இருந் தார். என்றாலும் கையில் கொண்டுவந்த பணம் இந்த நான்கைந்து மாதங்களில் கொஞ்சங் கொஞ்சமாகச் செலவாகிவிட்டது. கடிதங்கள் எழுதுவது, பழைய புத்தகங்களை வாங்குவது போன்றவற்றுக்கே அதிகப் பணம் செலவாயிற்று.

சேந்தமங்கலத்தில் இருந்தபோது தம் பெற்றோர் களுக்கு இவரால் ஓரளவு உதவ முடிந்தது. சென்னை வந்த பிறகு தம் குடும்பத்திற்கு இவரால் பணம் ஏதும் அனுப்ப முடியவில்லை. அது ஒரு பக்கம் வேதனையாக இருந்தது. இந்த நிலையில் தம் செலவுக்குப் பணம்கேட்டு ஊருக்குக் கடிதம் எழுத விரும்பவில்லை.

சேந்தமங்கலம் ஜமீன்தார் ஐராவத உடையாரும் இந்த நான்கைந்து மாதமாக மாதந்தோறும் 20 ரூபாய் அனுப்பி வந்தார். இவருக்குப் பணமுடை இருந்தபோதும் தொடர்ந்து சேந்தமங்கலம் ஜமீன்தாரது உதவியைப் பெற்றுவர இவரது நெஞ்சம் நாணுற்றது.

தந்தையைக் காட்டிலும் தம்மிடம் மிக்க அன்பு காட்டி வரும் ஐராவத உடையாருக்கு அதற்கு முந்திய மாதம் கடிதம் எழுதியபோது, "இதுகாறும் தாங்கள் எனக்குச் செய்து வந்துள்ள உதவிகளே அதிகம். இனி மேலும் தாங்கள் எனக்குப் பணம் அனுப்ப வேண்டாம். தேவைப்படின் நானே தங்களுக்கு எழுதுகிறேன்; ஐயரவர் கள் எனக்கு எல்லா உதவிகளும் செய்கிறார்; அவரது வாழ்வு நெடுந்தமிழ் வாழ்வு. அவருக்குச் செய்யும் தொண்டே நிலைத்த தமிழ்த் தொண்டு; நீங்கள் என்னை

அவரது அணுக்கத் தொண்டனாக ஆக்கிய பேருபகாரம் ஒன்றே போதும். என் ஆயுள் முழுதும் தங்களுக்கு நன்றிக் கடமைப்பட்டவனாக இருப்பேன்'' எனத் தம் கையால் கண்களில் வழியும் நீரைத் துடைத்துக்கொண்டே கடிதம் எழுதினார்; கிச்சு சுவாமிகளுக்கும் எழுதினார்.

**பழகியவர்களுடன் கடிதப் போக்குவரத்து**

தமக்குப் பழக்கமான செல்லமும், கணபதி ஐயரும் தம்முடன் சென்னையில் இருந்தால், தாம் பெறும் பயனை அவர்களும் பெறக்கூடுமே என்கிற ஏக்கம் இவருக்கு அடிக்கடி வரத்தொடங்கியது. அவர்களுக்குக் கடிதம் எழுதும்போதெல்லாம்,

> **''நிலம்புகழ்ந்த தமிழரசி தனதுண்மை அணிகளெலாம்**
> **நிமிர்ப்பார் இன்றிச்**
> **சிலம்பிழந்து பொலிந்தமணிமேகலையும்இழந்துகுலை**
> **திருமே னிக்கண்**
> **கலந்தசிந்தா மணியிழந்து பாட்டிழந்து கதையிழந்து**
> **கவினும் சோர**
> **அலந்திருந்தாள்; அவள்பழைய நிலையடைந்து**
> **[நடஞ்செய்ய**
> **அமைத்தான் ஐயன்''***

என ஐயரவர்களின் பெருமையைப் பாடல்களாக்கி எழுதுவார்.

ஈரோடு பக்கத்தில் கணபதிபாளையம் என்ற ஊரில் சன்மார்க்க சங்கம் ஒன்று இருந்தது. அங்கிருந்த இவருடைய அன்பர் ஒருவர் இவருக்கு ஒரு கடிதம் எழுதினார்.

''இந்தப் பக்கத்தில் தாங்கள் இருந்துகொண்டு, எப்போதும் கலகலவெனப் பேசிப் பழகி எங்களை

---

* க. சு. நவநீதகிருஷ்ண பாரதி தெரிவித்தது.

மகிழ்வித்தீர்கள். சென்னைக்குத் தாங்கள் சென்ற பிறகு தங்களைக் கண்டு பழக முடியாதது, எங்களுக்குத் துன்பமாக உள்ளது. மீண்டும் இந்தப் பக்கம் தாங்கள் வந்துவிடுங்கள். தாங்கள் என்ன சம்பளம் கேட்டாலும் எங்கள் சங்கத்திலிருந்தே கொடுக்கிறோம்'' என எழுதினார்.*

அதைப் படித்தபோது இவருக்கும் ஊர் ஞாபகம், அன்பர்களின் நினைவு எல்லாம் வந்தன. சிட்டுவண்டாக எங்கும் சுற்றித் திரிந்து கொண்டிருந்துவிட்டு, சென்னையில் ஒரு தனி அறையில் சிறைப்பட்ட மாதிரி இருப்பது என்னவோ போலத்தான் இருந்தது.

அடுத்த நிமிடமே ஐயரவர்களின் நினைவு வந்தது. அவரைவிட்டுப் போவதற்கு இவருக்கு மனம் வரவில்லை. எனவே, கணபதிபாளையம் வருவதற்கு இயலாதுள்ள நிலையை விளக்கிக் கடிதம் எழுதிவிட்டார்.

## ஆசானின் அரவணைப்பு

ஐயரவர்களும் இவரைச் சிறிது நேரங்கூடப் பிரிந்திருக்க விரும்பவில்லை.

சில நாட்களில், பெரும்பாலும் காலை நேரங்களில் ஐயரவர்கள் உலாவிவிட்டு வருவது வழக்கம்.

'உலாவி வர' என்று வேறு எங்கும் போக மாட்டார். அவரது இல்லம், திருவேட்டீசுவரன் பேட்டையில் கோவிலுக்குத் தெற்கு வீதியில் அமைந்திருந்தது. அந்தத் தெருவின் மேற்கு மூலையில் ரிக்ஷாக்கள் இருக்கும். அந்த 'ரிக்ஷா ஸ்டாண்டு' அருகில் ஒரு கிழவி இட்டிலி விற்றுக்கொண்டிருப்பாள்.

ஐயரவர்கள் காலை நேரத்தில் உலாவக் கிளம்பி வருகையில் முதலில் அந்த இடத்திற்கு வருவார்

---

* நவநீதகிருஷ்ண பாரதி.

அவரைக் கண்டவுடன் கிழவியே, "இன்னிக்கு எவ்வளவுக்கு இட்டிலி வேண்டும்?" என்று கேட்பாள்.

ஐயரவர்கள் ஒரு முறை தம்மைச் சுற்றிப் பார்த்து விட்டு, "இன்றைக்கு நாலணாவுக்குத் தா" என்பார்.

அந்தக் காலத்தில் ஓர் இட்டிலி காலணா. கிழவி, கூடையிலிருந்து பதினாறு இட்டிலியை எடுத்துத் தட்டில் வைப்பாள்.

உடனே ஐயரவர்கள் ரிக்ஷாக்காரர்களின் பக்கம் திரும்புவார். குழந்தை குட்டிகளுடன் அவர்கள் ஓடிவரும் போது ஆளுக்கொரு இட்டிலியாகக் கொடுக்கும்படி ஐயரவர்கள் கிழவியிடம் சொல்லுவார். அந்த இட்டிலி விநியோகம் ஆனவுடன் கிழவியிடம் சில்லறையைக் கொடுத்துவிட்டு அந்த இடத்திலிருந்து கிளம்புவார்.

இட்டிலி விற்கும் கிழவியும் சரி, அந்தத் தெரு மூலை யில் குடியிருந்த ரிக்ஷாக்காரர்களின் குடும்பமும் சரி அவரை ஒரு தெய்வத்தைப் பார்ப்பதுபோல் பார்ப்பார்கள்.

காலை நேரத்தில், அந்த மக்கள் இட்டிலியை வாங்கி உண்பதைப் பார்க்கும்போது அன்பர் கி.வா.ஜ-வுக்கு ஐயரவர்களின் செயல் கண்களில் நீர் துளிக்கச் செய்யும்.

அப்படியே மேற்கு வீதி, வடக்கு வீதி, கிழக்கு வீதி எனச் சிவாலயத்தை ஒரு முறை வலம் வந்துவிடுவார், ஐயரவர்கள். அந்தச் சமயத்திலும், தம்முடன் வருபவர் களுக்குச் சுவையான சில தனிப்பாடல்களைச் சொல்லி நயம் விளக்கி வருவார். இரண்டொரு வீட்டில் தெரு வோரமாகப் பூத்திருக்கும் அரளி, பவழமல்லிகை, பன்னீர்ப் புஷ்பம் போன்றவற்றையும் தம் பூஜைக்காக எடுத்து வருவார்.

அன்று ஆசானுடன் அன்பர் கி.வா.ஜ., உலாவப் போகவில்லை. ஒரு வாரமாகவே இவருக்கு உடம்பு சரி யில்லை. அதோடு முதல் நாள் இரவுதான் தாம் எழுதிய

மாயூரநாதர் கோவில் கும்பாபிஷேகப் பத்திரிகையை ஆசானிடம் காட்டி, அவர் செய்த சில திருத்தங்களோடு நல்ல தாளில் வேறு பிரதி எழுதிக் கொடுத்துவிட்டு வந்தார். ஜாகைக்கு வரும்போதே நேரமாகிவிட்டது.

காலையில் வழக்கம்போல் இவரால் எழுந்திருக்க முடியவில்லை. உடம்பு அனலாகக் காய்ந்தது. கைகால்களில் மூட்டுக்கு மூட்டு ஒரே வலி. ஆசானுக்கு தெரிவித்து அவரைக் கவலைக்குள்ளாக்கவேண்டாமென்று பேசாமலிருந்துவிட்டார். அன்று முழுதும் ஆசானின் வீட்டுக்கு இவரால் போக முடியவில்லை.

ஆசானான ஐயரவர்களே மறுநாட் காலையில் 'டொக் டொக்' என்று பூண்போட்டதம் கைத்தடியை ஊன்றிக்கொண்டு, இவரைத் தேடி இவரது ஜாகைக்கு வந்துவிட்டார்.

நெடிய உருவம்; சாந்தமான பார்வை; சிறிய தொந்தி; தூய பஞ்சக்கச்ச வேஷ்டி; இடுப்பைச் சுற்றிக் கட்டிய அங்கவஸ்திரம்; திருநீறு பூசிய செம்மேனி. ''ஜகந்நாதா'' என்கிற அவரது கணீரென்ற குரலைக் கேட்டவுடன் இவர் வாரிச் சுருட்டிக்கொண்டு, பாய் படுக்கையை அப்பால் தள்ளிவிட்டு மெல்ல எழுந்தார்.

''உடம்பு சரியில்லையா? சொல்லி அனுப்பினால் என்ன?'' என்று கேட்டுக்கொண்டே ஐயரவர்கள் உள்ளே வந்தார். தம் இடுப்பு வேஷ்டியில் செருகியிருந்த பளபளவெனத் தங்கம்போல் மின்னும் விபூதிச் சம்புடத்தை எடுத்து இவரது நெற்றியில் விபூதியைப் பூசினார். கையில் கொடுத்த அந்தத் திருநீற்றை இவர் தம் வாயிலே கொஞ்சம் போட்டுக்கொண்டு, தம் மார்பிலும் பூசிக் கொண்டார்.

இவரது நெற்றியை ஐயரவர்கள் தொட்டபோது நெருப்பாய்க் கொதிப்பதை உணர்ந்தவுடன், ''நல்ல ஜுரம் அடிக்கிறது. அதோடு இந்த அறையில் நீ தனியே

படுத்திருக்கிறாயே! அண்ணாவை அனுப்புகிறேன். அவனோடு நம் வீட்டிற்கு வா'' எனக் கட்டளையிட்டு விட்டு, விரைவாகத் தம் வீட்டிற்குச், சென்றார்; மேற்கொண்டு உலாவப் போகவில்லை.

சிறிது நேரத்தில் ஐயரவர்களுடைய குமாரர் வந்து இவரைத் 'தியாகராஜ விலாச'த்திற்கே அழைத்துச் சென்றார்.

சிறு வயதில் இவரது படிப்புக்குப் பெருந்தடையாக வந்த முடக்குவாத நோய் (ருமாட்டிஸம்) இப்போதும் வந்துவிட்டது!

சில நாட்கள் தம் வீட்டிலேயே இவரைத் தங்க வைத்துக்கொண்டு மருந்துகள் கொடுத்துப் பார்த்தார் ஐயரவர்கள்; தம் கையினாலேயே இவருக்கு உரிய வேளைக்குக் கஞ்சி ஆற்றிக் கொடுத்தார்.

வந்த நோய் உடனே குணம் ஆகவில்லை. தம்மால் தம் ஆசான் அடைகிற மன வருத்தத்தை இவ ரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. தம் தந்தையா ருக்குத் தம் உடல்நிலைபற்றி ஒரு கார்டு எழுதிப் போட் டார்.

தந்தையாரும் இவரது கடிதம் கிடைத்த அன்றே இளம்பி மறு நாள் மாலை 4-30 மணிக்கெல்லாம் சென்னை வந்து சேர்ந்தார். தந்தையாரைப் பார்த்த வுடன் இவருக்கு ஒரு புதுத் தெம்பே வந்ததுபோல் இருந்தது.

ஆசானின் அநுமதியுடன் தந்தையார் இவர் குடி யிருந்த ஜாகைக்கே இவரை அழைத்துச் சென்றார்; சென்னையில் இரண்டு மூன்று நாட்கள் தங்கி இவரைக் கவனித்துக்கொண்டார்.

இவரது உடம்பு சற்றுக் குணமாகத் தொடங்கியது.

''சென்னையில் நான் அதிக நாட்கள் தங்குவதற் கில்லை. இவனுடைய தாயும் மிக்க கவலையாக இருப்

பாள்; எனவே இவனை இப்போது நான் என்னுடன் ஊருக்கு அழைத்துப் போகிறேன். உடம்பு பூரண குண மானவுடன் திரும்பச் சென்னைக்கு அனுப்பிவைக்கிறேன்' என்று இவருடைய தந்தையார் ஐயரவர்களிடம் சொன்னார்.

இது நல்ல யோசனையாக ஆசானவர்களுக்குத் தோன்றியது.

இவர் தமக்குப் பணம் அனுப்ப வேண்டாம் எனச் சேந்தமங்கலம் ஜமீன்தாருக்குக் கடிதம் எழுதியதால், அவர் அந்த மாதம் ஐயரவர்களுக்கே பணம் அனுப்பி யிருந்தார் போலும்!

ஆசானின் குமாரர் இவரிடம் உடையார் அனுப்பிய ரூபாய் பதினைந்தோடு மேலும் பதினேழு ரூபாய் சேர்த்துக் கொடுத்தார்.

1928-மே 16-ஆம் தேதி இரவு மேட்டுப்பாளையம் மெயிலில் தந்தையாருடன் இவர் கிளம்பி, மறு நாள் காலை மோகனூருக்கே வந்து சேர்ந்தார்.

**நோய்வாய்ப்பட்டதால் நேர்ந்த பிரிவு**

நோய்வாய்ப்பட்டு மோகனூருக்கு வந்தபின் 18—5—1928-இல் இவர் தம் ஆசானுக்கு எழுதிய கடிதம் இதுதான்:

**"அன்னையொப்பா யெனக் கத்தனொப் பாயென வரும் பொருளே."**

ஸ்ரீபாத கமலங்களில் அடியேன் ஜகந்நாதன் அநேக ஸாஷ்டாங்க நமஸ்காரங்கள்.

உபயகுசலோபரி.

புதன்கிழமை இரவு அவ்விடத்தில் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டபின் நேற்றுக் காலை 11 மணிக்கு

இங்கே சௌக்கியமாக வந்து சேர்ந்தோம். வைத்தியர் கொடுத்த மருந்தைச் சாப்பிட்டு வருகிறேன். அவ்விடத்து உபதேச மொழிகளும், செவியுணவும் பெறா வறுமையும் தம்பி* முதலியவர்களுடைய பிரிவும் எப்போதும் என் நெஞ்சத்திற்கு வருத்தம் ஈந்துகொண்டே இருக்கின்றன. எனினும் அவ்விடத்து ஆசீர்வாத வன்மையினாலும், முருகன் திருவருளாலும் விரைவில் எனது உடம்பு சீர்ப் பட்டு அங்கு வந்து சேரக்கூடும் என்ற நம்பிக்கை இருக் கிறது. கேட்ட பாடங்களைச் சிந்தித்தலும், உடம்பு நன்னிலைக்கு வருவதற்குரிய காரியங்களைச் செய்தலுமே என்னுடைய பொழுதுபோக்கு. என்னுடைய நமஸ்காரங் களை அண்ணாவுக்கும், சிற்றப்பாவிற்கும் என்னுடைய ஞாபகத்தைக் கோதண்டராமையர், சி.தம்பி, நாயகர் முதலியவர்களுக்கும் சொல்லும்படி பிரார்த்திக்கிறேன்.

சதா அவ்விடத்து ஞாபகமாகவே இருக்கிறேன்.

"வழங்கு கின்றாய்க்கு நின்னரு ளாரமுதத்தை வாரிக்கொண்டு விழுங்கினேன், விக்கினேன் வினையே னென்விதி யின்மையால், தழங்கருந்தேனன்ன தண்ணீர் பருகத் தந்துய்யக் கொள்வாய், அழுங்குகின்றே னுடையாயடியேன் உன்னடைக்கலமே."

விலாசம் இங்ஙனம்

கி. வா. ஜகந்நாதன் திருவடிதாஸன்

மோகனூர் கி. வா. ஜகந்நாதன்

கரூர் மார்க்கம்.

இவரது ஆசிரியப்பிரானுக்கு உவப்பளிக்கும் பல சிறப்பியல்புகள் கொண்டதாக இக்கடிதம் அமைந் துள்ளதைக் காணலாம்.

"இங்கே சௌகரியமாக வந்து சேர்ந்தோம், வைத்தியர் கொடுத்த மருந்தைச் சாப்பிட்டு வரு

* ஐயரவர்களின் பேரர் திரு க. சுப்பிரமணியம்.

கிறேன்'' என அவர் கவலையைப்போக்கி, ஆறுதல் அளிப்பதும், ''கேட்ட பாடங்களைச் சிந்தித்தலும்'' என அவருக்கு மனநிறைவு அளிப்பதும், ''என்னுடைய நமஸ்காரங்களை அண்ணாவுக்கும், சிற்றப்பாவிற்கும், என்னுடைய ஞாபகத்தைக் கோதண்டராமையர், சிறு தம்பி, நாயகர் முதலியவர்களுக்கும் சொல்லும்படி பிரார்த்திக்கிறேன்'' என அவரது உறவில் இவரும் இறுக்கம் காட்டி மகிழ்விப்பதும், கடிதத்தின் எடுப்பில், ''அன்னை யொப்பாய் என் அத்தன் ஒப்பாய்'' என்கிற உணர்ச்சியைக் காட்டி முடிப்பில் தம் நிலைக்கொப்ப மணிவாசகரின் மணிவாக்கைப் பொறித்து ஐயரவர்களது உள்ளத்தைத் தம்பால் ஒரேயடியாக ஈர்த்துக்கொள்கிற இலக்கியச் சுவையை உணர்த்துவதும் இவரது அரும் பண்பைக் காட்டும்.

''உடம்பு நன்னிலை அடைவதற்கு என் குருவாகிய தங்களையும், முருகப்பெருமானையுமே தியானம் செய்து வருகிறேன்'' என வெளிப்படையாகச் சொல்லவில்லையே தவிர, தம் பொழுதுபோக்காக அவர் சொல்லும் செய்தியிலேயே அக்கருத்து உய்த்துணரக் கிடைக்கிறது.

''சதா அவ்விடத்து ஞாபகமாகவே இருக்கிறேன்'' என் வெளிப்படுத்தும் இடத்து சதா இவ்விடத்து—இவரது தியானமாகவே ஐயரவர்களை இருக்குமாறு செய்துவிடுகிற மந்திரசக்தி உடையதாக அக்கடிதம் அமைந்துள்ளது.

இவர் சேந்தமங்கலம் ஐராவத உடையாருக்கும் கடிதம் எழுதினார். மேட்டுப்பாளையத்தில் இவரது பால்ய நண்பர் செல்லமையர் இருந்தார்; அப்போது அவரும் மோகனூருக்கு வந்திருந்ததால் இவரிடம் பேசிக் கொண்டிருந்தார்; தமக்குத் திருமணம் செய்துவைக்கத் தம்முடைய பாட்டனார் முயன்றுகொண்டிருக்கும் செய்தியையும் சொன்னார்.

காந்தமலையான் கோவில் குருக்கள் அடிக்கடி இவரை வந்து பார்த்து இறைவனது பிரசாதத்தைக் கொடுத்துப் போனார். அபயானந்தர் வந்து பேசிக் கொண்டிருந்தார்.

ஊரில் அப்போது கோவில் திருவிழா நடந்துகொண்டிருந்தது. வீட்டில் இருந்தவண்ணமே தினமும் இவர் சுவாமி தரிசனம் செய்துகொண்டார்.

தேர்விழா அன்று சுற்றுப்புறக் கிராமங்களிலிருந்து வந்திருந்த அன்பர்கள் பலரும் இவரையும் வந்து பார்த்து பேசிப் போனார்கள்; தங்கள் தங்கள் ஊர்களுக்கு வருமாறும் இவரை அழைத்தார்கள். தம்பி, தங்கையர் தாயார் ஆகியோர் இவர்மீது அன்பைப்பொழிந்தார்கள் இவரது உடம்பு படிப்படியாக நன்கு குணமாகியது; பின்பு இவர் சேந்தமங்கலம் சென்றார்; தம் உடையார் நண்பர்களையும், காசி சுவாமிகளையும் பார்த்தார். ஸ்ரீமத் சுயம்பிரகாச பிரம்மேந்திர சரஸ்வதி அவதூத சுவாமிகளையும் தரிசனம் செய்துகொண்டார்.

சேந்தமங்கலம் ஜமீன்தார் ஐராவத உடையார் இவருக்காக ஒரு விருந்துக்கு ஏற்பாடு செய்தார். இவர் அந்த ஊரில் இரண்டொரு நாள் தங்கித் திருப்புகழ் பற்றியும், முருகன் அருள்பற்றியும் பேசினார்.

## பக்திச் சொற்பொழிவுகள்

பின்னர்க் குமாரபாளையம் சென்றார். அங்கே 'குகப்படலம்' பற்றிப் பேசினார். அடுத்து பாளைப் பட்டி சென்று போர்டு ஸ்கூலில் அயோத்தியா காண்டம் பற்றிப் பேசினார். அன்பர்கள் பலரும் இவரைப் பலஇடங்களுக்கு அழைத்துச் சென்று பேசச் சொன்னார்கள்.

'உடம்பு சரியில்லையென வந்த பிள்ளை, வீட்டில் தங்கிஉரிய வேளைக்குச் சாப்பிட்டுக்கொண்டு, உடம்பைக் கவனித்துக்கொள்ளாமல் இப்படி ஊர் ஊராகத் திரும்பவும் சுற்ற ஆரம்பித்துவிட்டானே!' என்று தாயார் வருந்தினார்.

"கிருஷ்ணராயபுரத்தில் படித்துக்கொண்டிருந்த போது இப்படித்தான் உடம்பு சரியில்லையென்று வந்தான். அந்த வருஷத்தோடு படிப்புத் தடைப்பட்டுப் போச்சு. நாமக்கல்லில் கொண்டுபோய்ச் சேர்க்க முயன்ற போது அங்கே சாப்பாட்டுக்கு வசதியில்லையென்று வந்து விட்டான். இப்போது சென்னையில் படித்துக் கொண்டிருக்கிறானேயென்று மகிழ்ந்தேன். இப்போதும் அரைகுறையாக வந்துவிட்டானே" என்று தாயார் புலம்பத் தொடங்கினார்.

கிருஷ்ணராயபுரத்துத் தாய்மாமாவோ இவருக்குத் தம் மகளை இந்த நேரம் திருமணம் செய்துவைக்கப் பல வகையிலும் முயற்சி செய்தார். எதற்கும் பிடிகொடுக்காமல், இவர் வீட்டிலேயே தங்காமல் இருக்கலானார்.

(சேலம் மாவட்ட) வேலூர் போயிருந்தார். கணபதி ஐயரைச் சந்தித்தார். சாரணர் கூட்டம் ஒன்றில் பேசினார். கணபதி ஐயர் அப்போது 'இளையான்குடி மாறனார்' புராணம்பற்றி எழுதிப் படித்தார்.

மறு நாள் மாணவர் மன்றத்தில் 'தாய்மொழிப் பற்று' என்பதுகுறித்து இவர் பேசினார். கணபதி ஐயரை அழைத்துக்கொண்டு கொடுமுடி சென்றார். அங்கிருந்து திரும்ப இரவு ஒன்பது மணிக்கு மோகனூர் வந்தார்.

**ஆசானின் அன்புக் கடிதம்**

படிக்க எல்லாப் பிள்ளைகளுந்தான் போகிறார்கள். நன்றாகப் படிக்கும் பிள்ளை ஏதோ காரணத்தால் சில பல நாட்கள் தொடர்ந்து வரவில்லையென்றால் 'என்ன காரணத்தால் அவன் வரவில்லை?' எனத் தெரிந்து கொள்ள எந்த ஆசிரியர் துடிக்கிறார்? அவனைத் தேடிச் சென்று திரும்பவும் படிக்க வரும்படியாக அவனுக்கு எவர் உற்சாகமூட்டுகிறார்? அவனுடைய பெற்றோர்களைச் சந்தித்துப் பேசி. பிள்ளையைப் படிக்க அனுப்பி வைக்கும்படி எவர் தூண்டுகிறார்?

ஐயரவர்களோ தாம் போகும் இடங்களிலிருந்தெல்லாம் இவரது உடம்பைப்பற்றி விசாரித்து, 'படிக்கச் சென்னைக்கு எப்போது வர இருக்கிறீர்கள்?' எனக் கேட்டுக் கடிதம் எழுதினார்.

ஒரு நாள் காலையில் அபயானந்தரைப் பார்க்கப் போன இவர், மாலையிலேதான் வந்தார். அபயானந்தர் அப்போது (சேலம் மாவட்ட) வேலூருக்குப் பக்கத்தில் இருந்த ஓர் ஊரில் இருந்தார்.

அன்று இவர் வீடு திரும்பியவுடன் ஐயரவர்களிடமிருந்து வந்த கடிதத்தை இவருடைய தாயார் இவரிடம் கொடுத்தார்; இவர் அதனைப் படித்தவுடன், "ஏண்டா, பெரியவருக்கு என்ன கடிதம் எழுதப் போறே? எப்போது சென்னைக்குப் போக உத்தேசம்?" என்று சர்வசாதாரணமாகத்தான் கேட்டார் தாயார்.

இவருக்கு என்னவோ கோபம் வந்துவிட்டது.

"சென்னைக்குப் போனால் சாப்பாட்டுக்கு என்ன செய்வது? ஒவ்வொரு மாசமும் அப்பா பணம் அனுப்புவாரா? இல்லை, நான் அங்கே இருந்த இந்த நான்கைந்து மாதங்களில் பணம் வேண்டுமா என்று கேட்டாவது ஒரு கடிதம் எழுதினாரா? சொல்லுங்கள்" என மிக்க எரிச்சலோடு கேட்டவுடன், இவருடைய தந்தையாரே அதிர்ந்து போனார்.

தம்மால் முடியாத ஒன்றை முடியும் எனத் தந்தையரால் சொல்ல முடியவில்லை.

"அவராலே ஒவ்வொரு மாசமும் பணம் அனுப்பமுடியாது. சென்னையிலிருந்து உன்னை அழைத்து வந்துவிட்டாரே தவிரச் சென்னைக்கு உன்னைப் படிக்க அனுப்ப அவரால் முடியாது. நாளுக்கு நாள் இந்த ஊரில் நாங்கள் குடும்பம் நடத்துவதே திண்டாட்டமாக இருக்கிறது. அவர் எங்கே உன்னைப் 'படிக்கப் போ' என்று சொல்லப் போகிறார்? உனக்கும் போகிற உத்தேசம் இல்லை

நன்றாகக் கோவில், குளம், சந்நியாசிகள் என்று அங்கங்கே போய்ச் சுற்றிப் பார்த்துக் கொண்டிரு:'' எனப் படபடப் பாகத் தாயார் சொன்னார்.

இவர் தம் தாயாரின் முகத்தை அந்த நேரம் நிமிர்ந்து பார்த்தார். அவருடைய கண்களில் நீர் முட்டி நின்றது. தாம் முன்னுக்கு வரவேண்டும் என்ற ஆதங்கத்துடன் துடிக்கிற தாயின் மனம் புண்படும்படி பேசிவிட்டதை நினைத்து இவர் மிகவும் வருந்தினார்.

''சென்னைக்குப் போகப் பணத்திற்குத்தான் ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறேன், அபயானந்தர் சென்னை யில் தமக்கு வேண்டிய அன்பர்கள் சிலர் இருப்பதாகச் சொன்னார். 'நான் அவர்களுக்குக் கடிதம் தருகிறேன். அதைக் கொண்டுபோய்க் கொடுத்து அவர்களைப் பார். ஒவ்வொரு மாசமும் அவர்கள் உனக்குப் படிக்கப் பண உதவி செய்வார்கள்' என்றார். அவரிடமிருந்து கடிதம் வாங்கி வரத்தான் அவரைப் பார்க்கப் போயிருந்தேன்'' என் இவர் சொன்னவுடன், ''அதை முன்பே சொல்லுவதற்கென்ன?'' எனச் சொல்லி அன்று இவருடைய தாயார் சமாதானம் அடைந்தார்.

இதற்குள் இவர் மோகனூர் வந்து மூன்று மாதங் களுக்குமேல் ஆகிவிட்டன. விடுமுறை முடிந்தவுடன் பள்ளிக்குப் போக மனம் வராமல் சிணுங்கும் சிறு குழந்தையை அதன் தாய் பார்ப்பதுபோல் இவருடைய தாயாரும் இவரை வெறுப்போடு பார்த்து வந்தார். உடனடியாக இவரைச் சென்னைக்கு அனுப்பிவைக்க அவருக்கு வழி தெரியவில்லை.

**மாயவரத்தில் ஆசான் கண்ட சிறுமி**

இதன் நடுவில் ஐயரவர்கள் திருப்பனந்தாள், திருவா வடுதுறை சென்றுவிட்டு மாயவரம் வந்து தங்கியிருந் தார்.

மாயவரத்தில் அவர் தினமும் காலையில் உலாவப் போகும்போது ஒரு வீட்டில் பூத்திருந்த பூக்களைக்

கொஞ்சம் பூஜைக்குப் பறித்து வருவார். இதை அந்த வீட்டில் இருந்த ஒரு சின்னப் பெண் பார்த்து வந்தாள்.

'தினமும் இந்தத் தாத்தா எல்லாப் பூக்களையும் பறித்துக்கொண்டு போய்விடுகிறாரே' என நினைத்தாள் போலும்!

மறு நாள் ஐயரவர்கள் வருவதற்குள் எல்லாப் பூக்களையும் பறித்து உள்ளே கொண்டுபோய் வைத்து விட்டாள். ஐயரவர்கள் அந்த வீட்டிற்கு வந்தபோது செடியில் ஒரு பூக்கூட இல்லை; அவருக்கே ஆச்சரியமாக இருந்தது!

அந்தப் பெண்ணின் தாயார் அந்தச் சமயம் தம் பெண்ணிடம் என்ன சொன்னாளோ தெரியாது, அந்தப் பெண், தான் பறித்து வைத்திருந்த பூக்களில் கொஞ்சம் எடுத்து வந்து, "இந்தாங்க தாத்தா, பூ" என இவரிடம் கொடுத்தாள்.

மறு நாளும், அதற்கு அடுத்த நாளும் இதேபோல அந்தப் பெண் செய்ததை ஐயரவர்கள் கவனித்தார்.

"நாலணா கிடைத்தால், ஓரணாவைத் தானே பிறருக்குக கொடுத்துவிட்டு மற்றதை மிச்சம் செய்து கொள்கிற சாமர்த்தியம் உடைய பெண்ணாக இருக்கிறாளே!" என வியந்தார்.

அடுத்த நாள் அந்தப் பெண்ணிடமே, "பேஷ், நீ மகா கெட்டிக்காரியாக இருக்கிறாயே! எனக்கு ஒரு பேரன் இருக்கிறான். அவன் மகா அசடு. அவனை நீ கல்யாணம் பண்ணிக்கொள்கிறாயா?" என வேடிக்கை யாகக் கேட்டவுடன், அந்தப் பெண் வெட்கப்பட்டுக் கொண்டு தன் வீட்டிற்குள் ஓடிவிட்டாள்.

ஐயரவர்கள் அந்தப் பெண்ணை விடுவதாக இல்லை. மறு நாள் அவரே அவளது வீட்டிற்குள் சென்றார். அவர் இன்னவர் என்று தெரிந்தபோது அந்தப் பெண்ணின் பெற்றோர்களுக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டது. அவர்

களும் ஐயரவர்களது வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள்.

தமக்கு ஒரு பேரன் இருப்பதையும், அவன் மிக அழகாக இருப்பான் என்பதையும், அவன் படித்துக் கொண்டிருப்பதையும் சொல்லி, அவர்களின் பெண்ணைத் தம் பேரனுக்குத் திருமணம் செய்துகொள்ள விரும்புவதாகத் தெரிவித்தார். அவர்களும் உடனே சென்னை வந்து பிள்ளையைப் பார்ப்பதாகச் சொன்னார்கள்.

ஐயரவர்கள் அந்தப் பெண்ணைப் பாடச் சொல்லிக் கேட்டார். அவள் சில சுலோகங்களையும், தியாகராஜ கீர்த்தனை ஒன்றையும் இனிமையாகப்பாடினாள். தமிழ்ப் பாடல் எதுவும் பாடவில்லை.

"குழந்தே, உனக்குத் திருக்குறள் தெரியுமோ?" எனக் கேட்டார். 'தெரியாது' என அந்தப் பெண் தன் தலையை அசைத்தாள்.

"திருக்குறள் தெரியாத ஒரு பெண் என் வீட்டுக்கு மருமகளாக வரமுடியாதே!" என ஐயரவர்கள் கொஞ்சம் வருந்துவதுபோலச் சொன்னார்.

"அதைப் படிக்கச் சொல்லாதது எங்கள் தப்புத் தான். நாளைக்கே இவளுக்கு ஒரு திருக்குறள் புத்தகம் வாங்கித் தருகிறேன். சீக்கிரமே அதை மனப்பாடம் செய்துவிடுவாள்" என வீட்டிலிருந்தவர் சொன்னார்.

"ஆமாம். தினமும் நீயும் கொஞ்சம் கொஞ்சம் திருக் குறளையும் படித்து வரணும்" என ஐயரவர்கள் அன்பு இழையோட அந்தப்பெண்ணிடம் கூறினார்.

ஐயரவர்கள் மாயவரத்தில் இருந்தபோது பந்தல் பாடப் பூமியில் அடித்திருந்த முளைக் கொம்பு ஒன்று இடர, கால் இசகுபிசகாகச் சுளுக்கிக்கொண்டது. மிகுந்த சிரமத்துடன், சென்னை 'தியாகராஜ விலாசம்' வந்தார். டாக்டர் வந்து அவரது காலுக்குப் பிளாஸ்திரி போட்டுச் சென்றார்.

அன்பர் கி.வா.ஜ.வையும் தம் குடும்பத்தில் ஒருவ ராகவே பாவிக்கத் தொடங்கிவிட்ட ஐயரவர்கள் இந்த விவரங்களை இவருக்குத் தம் கடிதத்தில் எழுதினார்.

ஆசானின் உடம்பு சுகவீனம்பற்றிய கடிதம் கண்ட வுடன் இவரது மனம் துடித்தது.

தம் உடம்பு பூரண குணமாகிவிட்டது என்பதைத் தெரிவித்ததோடு ஐயரவர்களின் உடல் நலம்பற்றி உடனே தெரிவிக்கும்படி அவருக்குக் கடிதம் எழுதினார்.

## ஆசானின் அன்புக் குமாரர் செய்து கொடுத்த வசதி

ஐயரவர்களின் குமாரரிடமிருந்து 7-8-1928-ஆம் தேதியிடப்பெற்ற கடிதம் ஒன்று இவருக்கு வந்தது:

''இந்த மாதம் 3-ஆம் தேதி ஸ்ரீமத் ஐயரவர்களுக்கு அனுப்பிய கார்டு வந்தது. அவர்களுடைய தேகஸ்திதி முற்றும் அநுகூலமாயிற்றென்றே சொல்லலாம். ஆயினும் சிறிது அசௌகரியம் இன்னும் இருந்து வருகிறது. தேகஸ்திதி குணமாய்விட்டது: சந்தோஷம் அடைந்தோம்.

''ஆகாரம் முதலியவற்றுக்கு இங்கே பார்த்துக் கொள்ளலாமென்றும், அங்கே குடும்பத்திற்கு வேண்டிய மட்டும் ஏற்பாடு செய்துவிட்டு வரலாமென்றும், ஒரு நல்ல தினம் பார்த்துக்கொண்டு இங்கே புறப்பட்டு வந்து விடலாமென்றும் ஸ்ரீமத் ஐயரவர்கள் தெரிவிக்கச் சொன்னார்கள்.''

அதைப் பார்த்தவுடன் இவருடைய தாயார் அடைந்த மகிழ்ச்சி கொஞ்சநஞ்சமன்று.

''முருகனே உன் சாப்பாட்டுக்கு ஐயரவர்கள்மூலம் அருள் செய்துவிட்டான். எங்களைப்பற்றி நீ கவலைப் படாதே! நீ படித்து முன்னுக்கு வருவதைப் பார். உடனே சென்னைக்குக் கிளம்பு'' என்று அவசரப்படுத்தினார்.

காந்தமலையானைத் தரிசனம் செய்துகொண்டு இவர் 1928 ஆகஸ்ட் 19-ஆம் தேதி சென்னைக்குக் கிளம்பினார்.

தாயார் தாம் சேர்த்து வைத்திருந்த பதினேழு ரூபாயை ரெயில் செலவுக்காக இவரிடம் கொடுத்து ஆசி வழங்கி அனுப்பினார்.

இவர் மோகனூரிலிருந்து சேலம் போய், அங்கிருந்து சென்னைக்கு 20-ஆம் தேதி காலையில் வந்துசேர்ந்தார்.

இவரைக் கண்டவுடன் ஐயரவர்களுக்குத் தம் உயிரே திரும்பி வந்தது போல இனித்தது. அன்றைய தினமே இவருக்குச் சிவஞானபாலைய தேசிகர் பிள்ளைத் தமிழைப் பாடம் சொல்லத்தொடங்கினார். சங்கத்தமிழ் ஐங்குறுநூற்றிலிருந்து 20பாடல்கள் பாடம் சொன்னார்.

மிகவும் வெப்பமான காலத்தில் குளிர்ந்த தென்றல் வீசினால் நமக்கு எவ்வளவு ஆனந்தம் உண்டாகிறது; அப்படியே இவரும் இசையோடு தமிழ்ப் பாடல்களைப் படிக்கும்போது ஐயரவர்களுக்கு உண்டாகும் ஊக்கத்திற்கு அளவிராது. "ஆகா, என்ன வாக்கு, என்ன வாக்கு, ஜிலுஜிலென்று காதில் விழுகிறது" என்பார். அவ்வளவு இனிமையாக அநுபவிப்பவர்களை வேறு எங்கும் காண முடியாது!

அவரும் பாடம் சொல்லும்போது தமிழ்ச் செய்யுட்களை இசையுடன் சொல்லிக் காட்டுவார்.

இப்படி ஐயரவர்கள் இவருடைய செவிக்கு உணவு அளித்ததோடு. மாதந்தோறும் இவரது சாப்பாட்டுக்கு ஆகும் உணவு விடுதிச் செலவை, அந்த மாதம்முதல் ஏற்கத் தொடங்கினார்.

இதனைப் பிற்காலத்தில் இவர் சொல்லும்போது மாணிக்கவாசகரைப் போல், "நான் யார்? என்னுள்ளம் ஆர்? ஞானங்கள் ஆர்? என்னை யார் அறிவார், ஸ்ரீமத்

ஐயர்பிரான் என்னை ஆண்டிலனேல்?'' என மிக்க நன்றியுணர்வோடு, தம் கண்ணீரை முத்தாக்கி உகுப்பார்.

ஐயரவர்களிடம் இவர், தமிழ்ப் பெருமலையின் சாரலிலே அகத்திய முனிவரைப்போல அமர்ந்து தமிழ் கற்றுத் தமிழின்பம் பெற்று ஆராய்ச்சி செய்யவும் பயிற்சி பெறத் தொடங்கினார்.

ஐயரவர்களின் அன்புகனிந்த திருவுள்ளமும், மென்மை நயம் கொழிக்கும் இன்சொல்லும் இவரைப் பிணைத்தன. அவர் யாவரையும் அன்போடு வரவேற்றுப் பேசி இன்புறுத்தும் சாதுர்யம், இவரது உள்ளத்தில் பதியத் தொடங்கியது. அவரோடு இருந்து வந்த இவருக்குச் சைவ மடங்களோடும், குரு மகாசந்நிதானங்களோடும் பழகுகிற வாய்ப்பு அவ்வப்போது கிடைக்கலாயிற்று.

### 'தமிழ் விடு தூது' பதிப்புப் பணியில் ஈடுபாடு

மாயூரநாதர் கோவில் கும்பாபிஷேகத்திற்கு ஐயரவர்கள் போகும்போது இவரையும் தம்முடன் அழைத்துச் சென்றார்; புறப்படும்போது 'தமிழ்விடு தூது' ஏட்டுப் பிரதியையும் எடுத்து வைக்கும்படி சொன்னார்.

'தமிழ் விடு தூது' நூலின் சுவடி ஒன்றே ஒன்றுதான் ஐயரவர்களுக்குக் கிடைத்தது; வேறு பிரதி எங்கேனும் கிடைக்குமா என்று அவரும் பலகாலம் தேடிப் பார்த்தாராம். கிடைக்கவில்லை. இந்த மூலப் பிரதியை வைத்துக்கொண்டே நூலினைப் படித்து ஆராய்ந்து பதிப்பிக்க ஐயரவர்கள் எண்ணினார்.

'தமிழ் விடு தூது' 268 கண்ணிகளே அமைந்த சிறு நூல். மதுரைப் புழுகுநெய்ச் சொக்கரிடம் தன் மனத்தைச் சொக்கவிட்ட பெண் ஒருத்தி அவரது அருளைப் பெறும்

பொருட்டுத் தமிழையே தூதாக அனுப்புவதாக ஒரு புலவர் பாடியிருக்கிறார்.

2-9-1928 அன்று மாயூரநாதர் கோவில் கும்பாபிஷேகம் சிறப்பாக நடந்தது. நல்ல கூட்டம். திருவாவடுதுறை ஆதீன ஞானாசிரியர் முன்நின்று அந்தக் குடமுழக்கு விழாவை நடத்தி வைத்தார். இவர்கள் மாயூரத்தில் இரண்டு மூன்று நாட்கள் தங்கியிருந்தார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில், "தமிழ்விடு தூதை நான் ஒரு முறை பாடம் கேட்கிறேனே?" என இவர் ஐயரவர்களிடம் விண்ணப்பித்துக்கொண்டார். "அப்படியே செய்யலாம்" என அவரும், இவருக்குப் பாடம் சொல்லி வந்தார்.

இடையில் கும்பாபிஷேகத்திற்கு வந்திருந்த சிவாசார்யர்கள் சிலர், ஐயரவர்களைக் காண வந்தார்கள். அவர்களோடு பேசும்போது 'தமிழ் விடு தூது' நூலின் 231-ஆம் கண்ணிமுதல் சில கண்ணிகளைப் படிக்கும்படி ஐயரவர்கள் இவரிடம் சொன்னார். அவற்றில் அடுக்குத் தீபம், தங்கத் தீபம், முத்துத் தீபம், ரிஷப தீபம், புருஷம்ருக தீபம், தட்டு, அக்ஷர தீபம், கும்ப தீபம், ஆரத்தி ஆகிய பல தீப வரிசைகளின் பெயர்கள் வருகின்றன. திருக்கோவில்களில் உள்ள தீபங்கள் அவை.

அவற்றைப்பற்றிச் சிவாசார்யர்களிடம் ஐயரவர்கள் கேட்டார். அவர்கள் அந்தத் தீபங்களைப்பற்றியெல்லாம் விளக்கிச் சொன்னபோது எல்லாவற்றையும் குறித்துக் கொள்ளும்படி ஐயரவர்கள் இவரிடம் சொன்னார்.

சிவாசார்யர்கள் போனவுடன், இவர், "இவ்வளவு அழகான நூலை இயற்றிய கவிஞர் பெயர் இன்னதென்று தெரியவில்லையே!" என ஐயரவர்களிடம் சொன்னார்.

"இந்நூலை இயற்றிய கவிஞர் பெயர்மட்டுமா தெரியவில்லை! இந்நூலை எனக்கு அளித்த கனவான் பெயரையுங்கூட அல்லவா என்னால் தெரிந்துகொள்ள

முடியாமல் போய்விட்டது!'' என ஐயரவர்கள் கூறினார். பின் அது கிடைத்ததுபற்றி அவர் சொன்னவிவரம் இது:-

பரம்பரைச் செல்வர்களாக வாழ்ந்து வந்த ஒரு குடும்பத்தில் பிறந்த ஒருவர், வறிய நிலையை அடைந்தார். அவரது சொத்தெல்லாம் போயிற்று. எல்லாவற்றையும் இழந்த நிலையில் அவரிடம் சில பழஞ்சுவடிகள் மாத்திரம் மிஞ்சி இருந்தன. அவற்றை என்ன செய்யலாம் என்று யோசித்தார். தாம் வளர்த்து வந்த குழந்தைகளைத் தக்கபடி பாதுகாக்கும் இயல்புள்ள ஒருவரிடம் ஒப்படைக்க எண்ணுபவரைப்போல் எண்ணிப் பார்த்தார். அப்போது ஐயரவர்களது நினைப்பு அவருக்கு வந்தது. அந்தக் கனவான் தம்மிடம் இருந்த ஓலைச் சுவடிகளை எல்லாம் ஒரு மூட்டையாகக் கட்டி, கும்பகோணம் எடுத்து வந்தார், கும்பகோணம் அரசுக் கல்லூரியில் படித்து வரும் மாணவர் ஒருவரது விடுதிக்குச் சென்றார்.

ஐயரவர்கள் அப்போது (1900) அந்த மாணவர் படித்து வந்த கல்லூரியில்தான் தமிழாசிரியராக இருந்தார்.

அந்தக் கனவான் அந்த மாணவரின்மூலம் ''அயலூரிலிருந்து ஒருவர் சில ஏட்டுச் சுவடிகளுடன் வந்திருப்பதாகக் கூறி, 'உங்களைப் பார்த்து அவற்றைக் கொடுக்க அவர் விரும்புகிறார்' என்று தெரிவி'' என்று ஐயரவர்களுக்குச் சொல்லி அனுப்பினார்.

ஐயரவர்களுக்கு ஏட்டுச் சுவடி என்றால் போதுமே; கிடைத்தற்கரிய நிதி கிடைக்கப்போகிறதென்று ஆவல் கொண்டவரைப் போல், அன்றே அந்த மாணவரது விடுதிக்குப் போனார்.

ஏட்டுச் சுவடிகள் இருந்தன. ஆனால் அவற்றைக் கொண்டுவந்த கனவானைக் காணவில்லை.

ஐயரவர்கள் அந்தச் சுவடிகளையெல்லாம் பார்த்தார். அவற்றுள் பெரும்பாலன அச்சிட்ட நூல்களாகவே

இருந்தன; ஏதோ ஒரு பழஞ்சுவடியின் இறுதியில் இந்தத் 'தமிழ்விடு தூது' நூல் இருந்தது.

பஞ்சகாலத்தில் தம் பிள்ளையை ஒருவர் தக்க இடத்தில் ஒப்படைத்துவிட்டுச் செல்வாரைப்போல், அந்தக் கனவான் தம் சுவடிகள் எல்லாம் இவரிடம் கிடைக்கும்படி செய்துவிட்டுப் போய்விட்டார்! அந்தக் கனவானின் பெயரைத் தெரிந்துகொள்ளக்கூட ஐயரவர்களுக்கு வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது;

இப்படி இந்த நூல் கிடைத்த வரலாற்றை ஐயரவர்கள் சொன்னபோது இவருக்கு வியப்பு மேலிட்டது.

ஐயரவர்கள் அந்த ஒரு சிறு நூலை எந்த வகையில் எல்லாம் ஆராய்ந்து வருகிறார், எந்த எந்தச் செய்திகளை யார் யார் வாயிலாகக் கேட்டுத் தெரிந்துகொள்கிறார் என்பவற்றை இவரும் மிக்க பொறுமையுடன் இருந்து கவனித்து வரத் தொடங்கினார்;

அங்கு நடைபெற்ற விழாவில், ஆவடுதுறை ஆதீன கர்த்தரான தேசிகரின்பேரில் இவர் ஆறு பாடல்களை எழுதி வாசித்தார்; ஆதீனகர்த்தருக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டது.

தேசிகர், ஐயரவர்களைக் கவுரவித்ததோடு இவருக்கும் ஒரு பட்டாடை வழங்கி ஊக்கம் அளித்தார். ஓர் அவலுக்காகக் கல உமியையும், ஐயரவர்களுடன் சேர்ந்து இவரும் சலித்து வருபவராயிற்றே!

மாயவரத்திலிருந்து சென்னை வந்தவுடன் ஆசானவர்கள் வழக்கம்போல் இவருக்குப் 'பிரபுலிங்க லீலை' 'காசிக் கலம்பகம்', 'தஞ்சைப் பெருவுடையார் உலா' ஆகியவற்றைப் பாடம் சொல்லத் தொடங்கினார்; நடுவில் ஒரு நாள் இவரிடம், "பனசைப் பின்னவர்* சென்னை வந்திருக்கிறார். சேத்துப்பட்டில் தங்கியுள்ளா

* திருப்பனந்தாள் இளவரசுத் தம்பிரான்.

இருந்தன்; ஏதோ ஒரு பழஞ்சுவடியின் இறுதியில் இந்தத் 'தமிழ்விடு தூது' நூல் இருந்தது.

பஞ்சகாலத்தில் தம் பிள்ளையை ஒருவர் தக்க இடத்தில் ஒப்படைத்துவிட்டுச் செல்வாரைப்போல், அந்தக் கனவான் தம் சுவடிகள் எல்லாம் இவரிடம் கிடைக்கும்படி செய்துவிட்டுப் போய்விட்டார்! அந்தக் கனவானின் பெயரைத் தெரிந்துகொள்ளக்கூட ஐயரவர்களுக்கு வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது.

இப்படி இந்த நூல் கிடைத்த வரலாற்றை ஐயரவர்கள் சொன்னபோது இவருக்கு வியப்பு மேலிட்டது.

ஐயரவர்கள் அந்த ஒரு சிறு நூலை எந்த வகையில் எல்லாம் ஆராய்ந்து வருகிறார், எந்த எந்தச் செய்திகளை யார் யார் வாயிலாகக் கேட்டுத் தெரிந்துகொள்கிறார் என்பவற்றை இவரும் மிக்க பொறுமையுடன் இருந்து கவனித்து வரத் தொடங்கினார்.

அங்கு நடைபெற்ற விழாவில், ஆவடுதுறை ஆதீன கர்த்தரான தேசிகரின்பேரில் இவர் ஆறு பாடல்களை எழுதி வாசித்தார். ஆதீனகர்த்தருக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டது.

தேசிகர், ஐயரவர்களைக் கவுரவித்ததோடு இவருக்கும் ஒரு பட்டாடை வழங்கி ஊக்கம் அளித்தார். ஓர் அவலுக்காகக் கல உமியையும், ஐயரவர்களுடன் சேர்ந்து இவரும் சலித்து வருபவராயிற்றே!

மாயவரத்திலிருந்து சென்னை வந்தவுடன் ஆசானவர்கள் வழக்கம்போல் இவருக்குப் 'பிரபுலிங்க லீலை' 'காசிக் கலம்பகம்', 'தஞ்சைப் பெருவுடையார் உலா' ஆகியவற்றைப் பாடம் சொல்லத் தொடங்கினார்; நடுவில் ஒரு நாள் இவரிடம், "பனசைப் பின்னவர்* சென்னை வந்திருக்கிறார். சேத்துப்பட்டில் தங்கியுள்ளா

* திருப்பனந்தாள் இளவரசுத் தம்பிரான்.

அவர் 'கோடீசுவரக்கோவை', 'தஞ்சைப் பெருவுடையார் உலா', 'சரபோஜி குறவஞ்சி' போன்ற பல நூல்களை இயற்றியிருக்கிறார். திருவாசகத்தை முதன்முதலில் அச்சிட்டவர் அவர்தான்.

## திருப்பனந்தாள் தம்பிரானின் பரிசுத்திட்டம்

திருப்பனந்தாள் மடத்து இளவல் சாமிநாதத் தம்பிரான், இந்தக் கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகர் பரம்பரையில் வந்தவர். மிக்க தமிழார்வம் உடையவர். ஐயரவர்களிடம் பெருமதிப்புக் கொண்டவர்.

அந்தக் காலத்தில் ஆங்கிலம் படித்தவர்களுக்கு இருந்த மதிப்பு தமிழ் படித்தவர்களுக்கு இருந்ததில்லை.

"மிக்க ஆர்வத்தோடு தமிழ் படிக்கிறவர்களுக்கு நாம் ஏதாவது ஊக்கம் அளிக்க வேண்டும். அப்போது தான் பலரும் தமிழைப் படிக்க விரும்பி வருவார்கள்" என் ஐயரவர்கள் சொன்னதைக் கேட்டுத் தாம் இதற்கு ஏதாவது செய்ய வேண்டுமெனப் பனசை இளவல் நினைத்தார்.

ஆண்டுதோறும் தனித்தமிழ் வித்துவான் பட்டத்துக்குரிய முடிவுத்தேர்வில் முதல் வகுப்பில் முதல்வராகத் தேறுகிறவருக்கு ஆயிரம் ரூபாய் பரிசாக அளித்தற் பொருட்டு அறக்கட்டளை ஒன்றை அறிவித்தார். இதற்காக 1928-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் அமெரிக்கக் கண்டத்தின் டாரன்டோ என்னும் நகரத்திலுள்ள 'தி மானுஃபாக்சரர்ஸ் லைஃப் இன்ஷூரன்ஸ் கம்பெனியில் (The Manufactures' Life Insurance Company) ரூபாய் நாற்பதாயிரத்துக்குத் தம் ஆயுளை இன்ஷ்யூர் செய்து கொண்டார். இந்த மூலதனம் நிறைவடையப் பத்தாண்டு ஆகலாம். அதன்பின்னர் அந்தத் தொகையைச் சென்னை பல்கலைக்கழகத்தினரிடம் செலுத்தி அவர்களைக் கொண்டே அவ்வாண்டு முதல் பரிசு அளித்துவர நினைத்தார்.

"அது வரை, பத்தாண்டுக் காலம், இந்த ஆண்டு முதலே சென்னைப் பல்கலைக் கழகத் தேர்வில் முதல் வகுப்பில், முதலாவதாக வரும் மாணவருக்குப் பரிசுத் தொகை ஆயிரத்தை, மடத்தின் வேறு வருமானத்திலிருந்து அளித்து வரலாமே" என ஐயரவர்கள் யோசனை சொன்னார்; அதைத் தம்பிரான் அவர்களும் ஏற்றுக் கொண்டார்.

x x x

தமிழ் வளர்ச்சியில் அவ்வளவு ஆர்வமுடைய பனசைப் பின்னவரை ஐயரவர்கள் காணச் சென்றபோது இவரும் உடன் சென்றார்.

ஆசானிடமிருந்து தமிழ் படித்துவரும் இளைஞராகிய இவரைக் கண்டவுடன், இளைஞராகிய அந்தத் தம்பிரான் அவர்களுக்கும் உற்சாகம் உண்டாயிற்று. வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். சிவக்கொழுந்து தேசிகரின் பாடல்களைப்பற்றியும் பேச்சு எடுத்தார்.

ஐயரவர்கள் அவற்றின் நயங்களை எடுத்துச் சொன்ன போது இரண்டு பேரும் கேட்டு ரசித்தார்கள். "கோடீசுவரக் கோவையைத் தங்களிடம் ஒருமுறை முழுதும் கேட்க வேண்டுமென்ற விருப்பம் எனக்கு இருக்கிறது. எனக்கோ நிர்வாகத் தொல்லை அதிகம். தங்களுக்கோ தமிழ்த் தொண்டு மிகுதி. இந்த நிலையில் நான் தங்களிடம் எப்படி என் விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்வதென்று யோசித்தேன்" என்றார் தம்பிரான் அவர்கள்.

"யோசிப்பானேன்? இதுவும் ஒரு தமிழ்த் தொண்டு தானே? நான் புதியதாக ஒன்றும் சொல்லப் போவதில்லை. முன்னமே அவ்விடத்தில் எல்லாவற்றையும் ஆராய்ந்து வைத்திருக்கக் கூடும். பரம்பரைச் சொத்தல்லவா?" என்று ஸ்ரீமத் ஐயர் சொன்னார்.

"என்னதான் படித்திருந்தாலும் தங்களிடம் கேட்பது போல் ஆகுமா? கோடீசுவரக் கோவையை ஜகந்நாதன்

பாடம் கேட்டிருக்கிறானா?'' என்று தம்பிரான் கேட்டார்.

''கேட்டிருக்கிறான்.''

''இன்னும் ஒரு முறை எனக்காக அவனுக்குச் சொல்லுங்கள். அவன் வந்து எனக்குச் சொல்லிவிடுவான். அதனால் தங்களுக்கும் அதிகச்சிரமம் இல்லை; அவனுக்கும் பழக்கம் ஏற்படும்'' என்று காசிவாசி சாமிநாதத் தம்பிரான் சொன்னார்.

''அப்படியா? சந்தோஷம்! ஜகந்நாதனுக்கு அந்தப் பாக்கியம் கிடைப்பதில் எனக்கு அளவில்லாத திருப்தி'' என்றார் ஸ்ரீமத் ஐயர்.

''இன்னும் ஓர் ஆசை: பிரபந்தத்தைத் தாங்கள் குறிப்புரையுடன் பதிப்பிக்க வேண்டும்'' என்று ஐயரவர்களிடம் பணசை இளவல் கேட்டுக்கொண்டார்.

''இது விஷயத்தில் நீர்தாம் அவருக்கும் உதவி செய்ய வேண்டும்'' என்று இவரிடமும் தெரிவித்தார்.

''ஐயர் திருப்பனந்தாள் வரும்போது நீங்களும் அவருடன் வரவேண்டும்'' என இவருக்கு அழைப்பு விடுத்தார், தம்பிரான் சுவாமிகள்.

x x x

மோகனூரிலிருந்து இவர் வந்து ஐந்தாறு மாதங்கள் ஆகிவிட்டன. நண்பர்கள் அவ்வப்போது அவ்விடத்திய செய்திகளை எழுதி வந்தார்கள்.

மோகனூர்க் கோபாலகிருஷ்ண செட்டியார் கிருத்திகைக்குக் கிருத்திகை காந்தமலை முருகன் விபூதிப் பிரசாதம் அனுப்பிவைப்பார்.

இவருக்குத் தம் பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்க ஒருவர் திருவாரூரிலிருந்து அடிக்கடி இவருடைய தந்தையைப் போய்ப் பார்த்து வந்தார். அதுபற்றித் தந்தையார் எழுதிய கடிதத்திற்குக்கூட, ''கல்யாணப் பேச்சை இப்போது எடுக்காதீர்கள்; எனக்குத் திருமணம்

செய்துகொள்வதில் விருப்பமில்லை'' என இவர் எழுதி விட்டார்.

கிருஷ்ணராயபுரத்தில் இருந்த இவருடைய மாமா நாராயண கனபாடிகள், ஐயரவர்களுக்கே நேரடியாக 9-3-1929-இல் ஒரு கடிதம் எழுதினார்: "அந்தப் பெண்ணை இவர் திருமணம் செய்துகொள்ளும்படி தாங்கள்தாம் வற்புறுத்த வேண்டும். இல்லாவிட்டால் இப்படியே இருந்து சந்நியாசி ஆகிவிடுவான். இவனும் மற்றவர்களைப்போலத் திருமணமாகி ஒரு வேலையில் ஈடுபட்டுக் குடும்பம் நடத்தத் தொடங்கினால்தான் இவனுடைய குடும்பக் கஷ்டம் நீங்கும்'' எனவும் குறிப்பிட்டிருந்தார்.

அந்தக் கடிதத்தைப் படித்துவிட்டு, ஐயரவர்கள் இவரிடமே கொடுத்துவிட்டார்; ஏதும் சொல்லவில்லை.

அன்று இவருக்குச் சற்று மனச்சங்கடம் ஏற்பட்டது. உடனே தம் தகப்பனாருக்கு ஒரு கடிதமும், மாமாவுக்கு ஒரு கடிதமும் எழுதினார்.

பெண் குழந்தைகள் அறிவும், பண்பும் பெறுவதற்கு முன்னால் அவர்களுடைய பெற்றோர்கள் அவர்களுக்குக் கல்யாணம் செய்துவைக்க அலைவது இவருக்கு வெறுப்பாக இருந்தது. பெண்களுக்கு ஆண்களைப் போலப் படிக்கவும், தங்கள் திறமையை வளர்த்துக்கொண்டு, அதனை வெளிப்படுத்த வாய்ப்பும் கொடுக்கப்பட வேண்டுமென்பது இவரது கருத்து.

## பேராசிரியர் சோமசுந்தர பாரதியார் சொற்பொழிவினிமை

அதற்கேற்றாற்போல் முதல் நாள் மாலையில், பச்சையப்பர் கல்லூரியில், மதுரைப் பேராசிரியர் சோமசுந்தர பாரதியார், 'பெண்மையும் தமிழ் இலக்கியமும்,' என்பதுபற்றி ஆற்றிய சொற்பொழிவை ஐயரவர்களுடன் இவரும் சென்று கேட்டு வந்திருந்தார்.

"சோமசுந்தர பாரதியாரின் சொல்வன்மை நன்றாயிருந்தது. தம் கருத்துக்குரிய சான்றுகளை இசைவுபடக் கூறித் தெளிவுறுத்துதலும், பிறவும் அவர் ஒரு வழக்காளர் என்பதை நன்கு தெரிவிக்கின்றன. 'பெண் இல்லிறைமையுடையாள்' என்றும் 'பெண்ணின் காதல் புனிதம் உடையது' என்றும், பெண்கள்பால் குறைகள் உள, 'என்று பண்டை இலக்கியங்கள் கூறா' எனவும் கூறியுள்ளார்" என்று அப்பேராசிரியர் சொன்ன கருத்துக்கள் பலவற்றையும் தொகுத்துத் தம் நாட் குறிப்பில் இவர் குறித்து வைத்துக்கொண்டார்.

இப்படித் தேனினும் இனிய அமுதக் கருத்துக்களைத் தமிழில் தம் நாட்குறிப்பில் எழுதியபோது, ஆத்திரம், கோபம், துன்பம் தலை தூக்கும்போது தம் நாட்குறிப்பை ஆங்கிலத்திலும் வரைவார்.

## மனத்தை வருத்திய ஒரு நிகழ்ச்சி

இவர் பள்ளி இறுதிவரை படித்தது ஆங்கிலம்; பூஜ்யர் த்ரோவர் துரையின் பழக்கத்தால் அந்த மொழியறிவை மேலும் விருத்தி செய்துகொண்டார். ஆங்கிலத்தை அடியோடு மறந்துவிடுதல் கூடாது என இப்படி ஆங்கிலமும் தமிழுமாக இவரது நாட்குறிப்பு உள்ளதுபோலும்!

தந்தையாரிடமிருந்து ஒரு நாள் இவருக்குக் கடிதம் வந்தது. சிறுவயதில் இவர் கந்தர்வக்கோட்டையில் தம் சிறிய தாயாரின் வீட்டில் தங்கிப் படித்தார். இவருடைய சிறிய தாயாருக்கு இரண்டு குழந்தைகள். ஓர் ஆண்; ஒரு பெண். இரண்டு பேரையும் சரியாகப் படிக்க வைக்கவில்லை. அந்தப் பெண் வாலாம்பாளை ஒருவருக்குத் திருமணம் செய்துகொடுத்துவிட்டு அவர்களும் காலமாகி விட்டார்கள். சிறிய தாயாரின் பெண் வாலாம்பாள் இறந்துபோன செய்தியை இவருடைய தகப்பனார் குறிப்பிட்டிருந்தார். அச்செய்தி இவரை நிலைகுலைய வைத்தது. தம் நாட்குறிப்பில் எழுதினார்:

"Received a card from father stating that Valambal breathed her last on 27th Masi (10th March 1929 leaving the child) on account of asthma, at Krishnarayapuram.

"Valambal had no help, She was married to a man, who was immoral and cruel. She was shunned by her husband and mother - in - law.

With great difficulties she went to her husband's house. She was treated cruelly. But for the past six months or so, her husband had changed and was kind to her. As the fruit of their love, she brought forth a son before six months. In the days of her prosperous life and happy course, she has been separated by God from her husband and child. I did not believe the fact, that she died of asthma.

Is it possible that she ended her life on account of domestic quarrel? However she has gone and no beloved heart to mourn for her. She has joined her dear parents. Her child should be caressed with paternal love. May God treat the innocent soul as a Pure one.

She is gone when
blossoming befell
Leaving her darling
Child to cry,
Only for milk and not
for mother.

x x x

அவரது நாட்குறிப்பில் இருந்த இந்தச் செய்தி அவருடைய இயல்புகள் சிலவற்றை மனம் கொள்ளத் தக்கதாக உள்ளது.

தமிழ் மொழியினிடத்து அளவற்ற பற்றுக் கொண்டிருந்த அவரிடம் பிற மொழிகளிடத்து, குறிப்பாக ஆங்கிலத்திடம் வெறுப்பு இருந்ததில்லை.

ஆங்கிலத்தை நேரான, எளிய இனிய நடையில் அவரால் எழுத முடிந்திருக்கிறது.

'அவள் ஆஸ்த்மா நோயினால் உண்மையாக இறந்திருக்கக்கூடும் என்பதை நான் நம்பவில்லை' எனக் கூறுமிடத்து, சமூகத்தில் பெண்களுக்கு இழைக்கப்படும் இறுமை கண்டு பொங்கித் துடிக்கும் உள்ளத்தை இனம் கண்டுகொள்ள முடிகிறது.

'அவளது பிரிவுக்காக யாரும் வருந்தப் போவதில்லை' என ஏங்குமிடத்து, 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்ற வள்ளலாரின் உள்ளமென அந்தப் பேதைக்காக வாடித் துயருற்றதை உணர முடிகிறது.

தாயற்ற அந்தக் குழந்தைக்காக வேண்டிக்கொள்ளும் போது, இவரது மென்மையான பரந்த கருணை இதயம் புலப்படுகிறது.

இந்த ஒரு சிறு விஷயத்தைப் படிப்படியாக உரைநடையில் சொல்லி வந்து, இறுதியில் மூன்றடிக் கவிதை வடிவில் முத்தாய்ப்பு வைத்தாற்போல முடித்திருப்பது அப்போதே இவரிடமிருந்த கட்டுரை எழுதும் ஆற்றலை வெளிப்படுத்துகிறது.

எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போல, ''விட்டுச் சென்றாள் குழந்தையை, அழுவதற்கு; பாலுக்காக—தாய்க்காக அல்ல'' என்னும் கவிதையின் ஓரடி ஓர் ஆத்மஞானியின் வாக்காகவே மிளிர்கிறது.

''நாமெல்லாம் அன்றாடம் சோற்றுக்குத்தானே அழுகிறோம்? உண்மையில் நம்மைப் பெற்ற தாய் யார் என்பதை உணர்ந்தோமா? அவளது அருளுக்காக ஏங்கி அழுகிறோமா? அவளது பெருங்கருணையை நினைந்தால் மணிவாசகப் பெருமானைப் போல், 'உள்ளந்தாள் நின்று உச்சி அளவும் நெஞ்சம் உருகாதால்; உடம்பு எல்லாம்

கண்ணாய் வெள்ளந்தான் பாயாதால்" எனக் கேட்போருடைய கண்கள் நீர் சொரியப் பிற்காலத்தில் இவர் ஆற்றிய பொழிவுகளின் கரு அதிலே புதைந்துள்ளதைக் காணலாம்.

x x x

சிறு வயதுமுதலே இவர் எந்த வேறுபாடும் அறியாதவர். காந்தமலை முருகன்பால் கொண்ட காதல் பொங்கிப் பெருகி, அவனுடைய அடியார் அனைவரையும் தழுவிச் செல்லும் நிலைக்கு உயர்ந்துவிட்டவர்.

தமக்கு உபகாரம் செய்தவர்கள் பலரையும் மறவாமல் நன்றியோடு பலபடியாகப் பாராட்டுவது இவரது இயல்பாகவே இருந்தது. ஐயரவர்களின் மாணவராகவும் போய்ச் சேர்ந்துவிட்டார். அந்த ஆசானது குணமும் இதுவேதானே!

x x x

முன் ஒரு சமயம் ஏடுகள் தேடி ஊர்ஊராகப் போன ஐயரவர்கள் ஒரு முறை ஊற்றுமலைக்குச் சென்றிருந்தார். அவ்வூர் ஜமீன்தார் இருதயாலய மருதப்பத் தேவர் தமிழ்ப் பற்று மிகவும் உடையவர்.

ஐயரவர்களிடம் அந்த ஜமீன்தார் பேரன்பு கொண்டவர். சில நாட்கள் தம்முடனே தங்க வைத்துக்கொள்வார். நல்ல ரசிகர் கிடைத்து விட்டால் உண்டாகும் உற்சாகத்துக்கு அளவேது? பழைய நூல்களைப்பற்றியும், பிற்காலத்து நூல்களைப்பற்றியும் ஊக்கத்தோடு பேசிவருவார்; அப்போது நடந்த நிகழ்ச்சி ஒன்று இது.

ஐயரவர்களுக்கு 'லீவு' இல்லை. ஏடுதேடப் பிற இடங்களுக்குப் போகும் சொந்த வேலையும் இருந்தது. ஒரு நாள் அங்கிருந்து புறப்பட விடை தரவேண்டுமென்று ஜமீன்தாரிடம் கேட்டார். செல்வதற்கு மாலையில் விடை பெற்றுக்கொண்டார். மறு நாள் விடியற்காலையில்

இருட்டோடு புறப்படவேண்டும்; தம் ஜாகைக்குச் சென்றார்.

**ஆசானிடம் ஊற்றுமலைத் தேவரின் பரிவு**

அன்றிரவு பத்து மணிக்கு ஒருவர் வந்து அவரை எழுப்பி, "ஜமீன்தார், பால் கொடுத்து வரச் சொன்னார்" என்பதாக வழக்கம்போல் சூடாகக் குங்குமப்பூ போட்டுக் காய்ச்சிய பால் தந்து போனார்.

அதைப் பருகும்போது இருதயாலய மருதப்பத் தேவரின் அன்பை ஐயரவர்கள் நினைந்து மனம் நெகிழ்ந்தார். திரும்பவும் காலையில் ஜமீன்தாரைப் பார்த்து அவரது அன்பைப் பாராட்டிப் போகவேண்டுமென்று அவரது உள்ளம் விழைந்தது.

திட்டமிட்டபடி மறு நாள் விடியற்காலையில் ஐயரவர்கள் கிளம்பவில்லை. காலையில் ஜமீன்தாரைப் பார்க்கும் நேரம்வரை காத்திருந்து அவரைப் பார்த்தார்.

"இரவு பால் அருந்தும்போது தங்களது தாயன்பு என்னை உருக வைத்தது. திரும்பவும் தங்களைப் பார்த்துப் பாராட்டி, என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு விடை பெற எண்ணினதால் விடியற்காலையிலே பயணத்தை மேற்கொள்ளவில்லை. இப்போது விடை பெறுகிறேன்" எனத் தம் இருதயத்தை இருதயாலய மருதப்பத் தேவரிடம் வைத்துவிட்டுச் சென்றாராம்.

x x x

இந்தச் செய்தியை ஐயரவர்கள் சொன்னபோது, "இதுவன்றோ மனிதப் பண்பு! இந்தப் பண்பு இல்லாமல் சிறந்த அறிஞராக இருந்துதான் என்ன பயன்?" என இவரது உள்ளம் விம்மிதமுற்றது.

## 'சீவகசிந்தாமணி' முதற் பதிப்பு: ஆசான் அநுபவம்

""உங்களுக்கு நான் 'சீவக சிந்தாமணிப் புத்தகம் தருகிறேன். நீர் அதைப் படித்து எனக்குப் பாடம் சொல்வீரா?'' எனச் சேலம் ராமசாமி முதலியார் சொன்னபோது, ''உம்'' எனத் தன்னம்பிக்கையோடு ஐயரவர்கள் சொல்லிவிட்டராம். முதலியாரும் 'சீவகசிந்தா மணி' ஏட்டுச் சுவடியை ஐயரவர்களிடம் கொடுத்தார்.

அந்த ஏட்டுச் சுவடியை வாங்கிக்கொண்டு, வீட்டுக்கு வந்து பிரித்துப் பார்த்தார் ஐயரவர்கள். ஒன்றும் புரிய வில்லை. "இவற்றை எப்படிப் படித்துப் பாடம் சொல்லப் போகிறோம்?' என ஒரு கணம் திகைத்துப் போனாராம்.

'இத்துணைப் பாடல்களையும் நம்மைப் போன்ற ஒரு மனிதர்தாமே எழுதினார்? அவர் எழுதி வைத்துள்ளதை நம்மால் ஒரு முறை படித்துப் பார்க்கக்கூடவா முடியாது?" என இறைவனின் அருளால் அவருக்கு ஒரு நினைப்பு வந்ததாம்...அவருடைய திகைப்பு எங்கோ போய்விட்டது!

அதனை அச்சிட அவர் சென்னை வந்தபோது ஒரு நாள் புரசைப்பாக்கம் அஷ்டாவதானம் சபாபதி முதலி யாரைப் பார்த்தாராம். அவர் சிறந்த தமிழறிஞர்.

'சீவகசிந்தாமணி'யை உரையுடன் பதிப்பிக்க ஐயரவர்கள் சென்னை வந்திருப்பது அறிந்து, "அதை நீங்கள் பதிப்பிக்கிறதாவது! பலரும் முயன்று கைவிட்ட காரியம் ஆயிற்றே! யார் தொட்டாலும் நிறைவேறாத இந்த நூலை, சிறுபிள்ளையாகிய நீங்கள் பதிப்பிக்கத் துணிந்தீர்களே என அஞ்சுகிறேன்'' என்று இவர்பால் உள்ள அன்பால் சொன்னார்களாம்.

ஆயினும் பின்னால் 'சிந்தாமணி'யை ஐயரவர்கள் பதிப்பித்து வெளியிட்டவுடன், பலரோடு அஷ்டாவதானம் சபாபதி முதலியாரும் ஐயரைப் பாராட்டினார்.

இப்படிப் பலருடைய பாராட்டுகளைப் பெற்ற போதெல்லாம், 'சீவகசிந்தாமணி நூலை எழுதிய திருத்

தக்க தேவரின் கற்பனா சக்தி, உழைப்பு எங்கே, நாம் எங்கே? நாம் சொந்தமாக எதுவும் எழுதவில்லையே! அவர் எழுதியவற்றைத்தானே பதிப்பித்தோம்!' என ஐயரவர்கள் நினைத்தாராம். இதனாலேதான் கல்விச் செருக்கு என்பது அவரிடம் ஒட்டவே இல்லை! மாறாக நாணம், அடக்கம், அன்பே உருவமாக அந்த அண்ணல் தமிழகத்தில் நடமாட முடிந்தது.

இப்படிக் கி.வா.ஜ-வுக்குத் தமிழ் அறிவை ஊட்டிய தோடு, தம் அநுபவ வாயிலாக இவருக்குமனிதப் பண் பாடும் உணர்த்தி, இவரது அறிவும் உணர்ச்சியும் சீராக, சமமாக ஒருங்கிணைந்து பண்படச் செய்தார் இவருடைய ஆசிரியப்பிரான்.

**ஆசான் திருவடியா? அரசுப் பணியா?**

தம்மிடமுள்ள சுவடிகளோடு ஒப்பிட்டுப் பார்ப்பதற் காக ஐயரவர்கள், அரசுக் கையெழுத்து நூலகத்திலிருந்து சில சுவடிகளை வாங்கி வந்திருந்தார். அந்த வேலை முடிவுறாமல் இருந்தது. எனவே, அந்தச் சுவடிகளை மேலும் ஒரு மாதம் தம்மிடம் வைத்துக்கொள்ள நூலகருக்கு ஒரு கடிதம் எழுதினார். அதை நேரில் கொண்டு போய்க் கொடுத்து வரும்படி இவரை அனுப்பினார்.

இவர் அந்தக் கடிதத்தை நூலகரிடம் கொண்டு போய்க் கொடுத்தார். அவருக்கு இவரைத் தெரியும்; இவரைக் கண்டவுடன், அந்த நூலகத்தில் 'கவனிப்பாளர்' பதவி ஒன்று இருப்பதாகக் கூறி, அதில் சேர விருப்பம் உண்டா எனவும் கேட்டார்.

''ஐயரவர்களை விட்டு வருவதற்கில்லை'' என்று இவர் சொன்னார். நூலகரோ, ''எதற்கும் அவரைக் கேட்டுக்கொண்டு வா. இந்த வேலைக்குப் போக வேண்டாம் என்று அவர் சொல்லமாட்டார். இது நல்ல

வேலை. உன்னைப் போன்ற ஒருவர் இங்கிருப்பது இந்த நூலகத்திற்கே மிகவும் உதவியாக இருக்கும்'' என்றார்.

அதோடு, 'நூலகத்தில் தமிழ்சம்பந்தமான பணிகளைச் செய்ய இவர் மிகவும் தகுதியுடையவர்' என்பதாக நூலக க்யூரேட்டருக்கும் ஒரு குறிப்பு எழுதி இவரிடமே கொடுத்து அவரைப் போய் பார்க்கச் சொன்னார்.

இவர் வீட்டிற்கு வந்தவுடன் ஐயரவர்களிடம் இந்தச் செய்தியைச் சொன்னார்.

''அது நல்ல வேலைதான். முதலில் உம் கருத்தைச் சொல்லும்'' என்றார் ஐயரவர்கள்.

''தங்களிடம் இருந்து தமிழ் படிப்பது ஒன்றுதான் இப்போது எனது லட்சியம்'' என இவர் சொன்னபோது, ஆசான் மகிழ்ந்து போனார்; ''நானும் அப்படித்தான் கருதுகிறேன். அந்த வேலை உமக்கு வேண்டாம்'' என்று சொன்னதோடு, ''ஆத்ம விடுதலைக்காகச் சிலர் சந்நியாசம் வாங்கிக்கொண்டு போகிறார்கள். சிலர் தேச விடுதலைக் காகத் தம்மையே அர்ப்பணித்துக்கொண்டு போராடு கிறார்கள். தமிழ் வளர்ச்சிக்காகப் பாடுபடுவது ஒன்றைத் தான் நான் எனது லட்சியமாகக் கொண்டிருக்கிறேன். இதனால் நான் வீட்டிலே தங்கின நாட்களைவிட ஊர் ஊராக அலைந்து திரிந்த நாட்கள் பலவாகும். சில ஊர் களில் பகல் சாப்பாட்டிற்கு வசதி இருந்ததில்லை. அங்கெல்லாம் போகும்போது ஒரு நாள் பகல், பசியைப் பொறுக்க முடியாமல் புளியங்கொழுந்தை உருவித் தின்றிருக்கிறேன். எதைக் கேட்டாலும் கொடுப்பார்கள், தண்ணீர் கேட்டால் கொடுக்கக் கொஞ்சம் தயங்கும்படி தண்ணீர்க் கஷ்டம் கிராமங்களில் அதிகம் இருந்தது. சில இடங்களில் படுக்க வசதியின்றி மரத்தடியில் உறங்கியிருக் கிறேன். இப்படிப் பசி, தாகம், தூக்கம், உடல் வருத்தம் பாராமல் ஓடியோடி அலைந்து செய்த வேலை போதாதா? சிவ சிவ என்று வீட்டிலே தங்கி ஜபம் செய்தால் போகிற வழிக்காவது புண்ணியம் உண்டு' என்று இங்குள்ளவர்களே

எனக்குச் சொன்னதுண்டு. அது என்னால் முடியாது. என் மூச்சு உள்ளவரை தமிழ்ப்பணி ஒன்றில்தான் என்னால் ஈடுபட முடியும். தமிழ் ஆராய்ச்சிப் பணி ஒன்றுதான் எனக்கு உயர்ந்த மோட்ச சாதனம்'' என மிகுந்த உணர்ச்சியோடு தமிழ்த் தாயின் தவப் புதல்வர் தம் உள்ளத்தைத் திறந்து காட்டினார்.

துறவறம் பூண வேண்டும் என்றிருந்த அன்பர் கி.வா.ஜ., அவர்களின் பழைய பைத்தியம் படீரெனத் தெளிந்தது.

அடுத்து அன்று, ''படிக்க வேண்டும்'' என ஐயரவர்கள் சொல்வதற்குள் இவர், தாம் பாடம் கேட்டுவந்த நூலைப் படிக்கத் தொடங்கினார்.

x x x

**தமிழ்த் தொண்டா, தேசத் தொண்டா?**

இவருடைய நண்பர் செல்லமையரிடமிருந்து இவருக்கு ஒரு நாள் ஒரு கடிதம் வந்தது. அவர் அப்போது மேட்டுப் பாளையம் மகாஜன உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராக இருந்தார். அவருக்குத் திருமணமாகிவிட்டது. தேசத் தொண்டர்கள் கள்ளுக்கடைகளின்முன் தமிழ் நாட்டில் ஆங்காங்கு மறியல் போராட்டம் நடத்திக்கொண்டிருந்த காலம் அது. தாமும், தம் மனைவி சீதாவும் மேட்டுப் பாளையம் கள்ளுக்கடை முன் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு வருவதாக அவர் இவருக்கு எழுதியிருந்தார்.

இவர் உடனே அவருக்குக் கடிதம் எழுதினார்:

''பலரையும்போல நீங்களும் இந்தக் காரியத்தில் ஈடுபட்டிருப்பது எனக்குப் பெருமையாக உள்ளது. என்றாலும், தமக்கென்று ஒரு லட்சியம் உடையவர்கள் அந்த லட்சியத்திற்காகவே உழைக்க வேண்டும். நாமோ தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபட வேண்டுமென்ற நோக்கம் உடையவர்கள். தேசபக்தி சிறந்ததுதான்; எனினும் அதை வளர்க்க நாட்டில் பல பேர் இருக்கிறார்கள். தமிழ்ப் பக்தி

கொண்டுள்ள நாம், தேசபக்தி உணர்வோடு தமிழ்ப் பயிற்சியிலே ஊன்றி நிற்பதுதான் சிறந்தது.

"எல்லாச் செயல்களும் உயர்ந்தவைதாம் என்றாலும் எல்லாவற்றையும் நம்மால் மேற்கொள்ள முடியுமா? நாம் கொண்ட லட்சியத்தில் ஊன்றி நின்று நாம் செய்யும் பணி உயர்ந்ததாக இருந்தால் அதுவே சிறப்பை அளிக்கும்; சமுதாயமும் நலம் பெறும், இதுவும் ஒருவகைத் தொண்டு, ஒரு வகைத் துறவு நிலையே என ஐயரவர்களும் கருதுகிறார்.

"ஆகவே, கள்ளுக்கடை மறியலில் நீங்கள் ஈடுபடுவதை விடுத்து தமிழ் படிப்பதிலேயே ஊக்கம் காட்டுங்கள். எப்படியாவது உங்களையும் சென்னைக்கு வரவழைத்துக் கொண்டு விடுவேன். இங்கே ஸ்ரீமத் ஐயரிடம் தொண்டு செய்யும் வாய்ப்பு உங்களுக்கும் கிடைக்கும்" என எழுதினார் இவர்.

**திருவாசகமா? ராமாயணமா?**

"சுவாமி என்ன பண்ணுகிறார்?" எனக் கேட்டுக் கொண்டே அந்த வீட்டுக்காரராகிய கிழவர் மெள்ள வெளித் திண்ணைக்கு வந்து உட்கார்ந்துகொண்டார்.

அவரது வீட்டில் மற்றொரு திண்ணையில்தான் திருவிடைமருதூரில் 9 - 4 - 1929 - இல் நடந்த மகாலிங்க சுவாமி திருக்கோவில் கும்பாபிஷேகத்திற்காகச் சென்றிருந்த ஐயரவர்கள் உட்கார்ந்திருந்தார். அப்போது இவரும், சந்தானமையங்காரும் ஐயரவர்களுக்கு எதிரில் உட்கார்ந்திருந்தார்கள். ஐயரவர்கள் திருவிடைமருதூர் வருவது தெரிந்து அந்த ஊருக்கு ஐயங்கார் வந்திருந்தார்; திருவையாறு அரசர் கல்லூரியில் அவர் அப்போது தமிழ்ப் பண்டிதராக இருந்தார். நன்றாகப் பாடுவார். எனவே, ஐயரவர்கள் அவரைத் 'திருவாசக'த்தை எடுத்துப் படிக்கச் சொன்னார். இசையுடன் அதைப்

படித்தார். ஐயங்கார்; வீட்டுக்குள் இருந்தவர்கள் திண்ணையில் அவர் வாசித்த இன்னிசையால் கவரப்பட்டு இடைகழிக்கு வந்து இருந்துகொண்டு கேட்டு வந்தனர். இடையிடையே ஐயரவர்களும் சில கருத்துக்களை விளக்கி வந்தார். வெளியூர் போகும்போது இப்படி ஓய்ந்த நேரங்களில் ஏதேனும் ஒரு தமிழ் நூலை வாசிக்கச் சொல்லிக் கேட்பது அவரது வழக்கம்.

"ராமாயணந்தானே இது? அடடா, என்ன அழகு! என்ன அழகு!" எனச் சொல்லிக்கொண்டு வீட்டுக்காரக் கிழவரும் மிகவும் சிரத்தையோடு கேட்கலானார்.

"இது ராமயணம் இல்லை; திருவாசகம்" என ஐயரவர்கள் அந்தக் கிழவருக்குப் பதில் சொல்லியிருக்கலாம். அந்தக் கிழவரோ ஐயங்காரின் இசையொலியில் சாட்சாத் ராமபிரானையே காணும்போது அவரது நினைப்பைக் கலைக்க ஐயரவர்கள் விரும்பவில்லை போலும்! "ராமாயணந்தான். எப்படி இருக்கிறது?" என்று கிழவரைப் பார்த்துக் கேட்டார்.

"வெகு பேஷாயிருக்கிறது! இப்போது எந்தக் கட்டம் படிக்கப்படுகிறது?" என்றார் கிழவர்.

"ராமர் அயோத்தியை விட்டுப் புறப்படப் போகிறார்" என்றார் ஐயரவர்கள், கொஞ்சங்கூடச் சிரிக்காமல்.

"அப்படியா?"

திருவாசகத்தில் மிகவும் உருக்கமான இடம் ஒன்று வந்தது. ஐயரவர்கள் உருகிக் கண்ணீர் விட்டார்.

"சுவாமி இப்போது புறப்பட்டு விட்டார் போல் இருக்கிறது..." என்று சொல்லிக்கொண்டே கிழவரும் கண்ணீர் விட்டார்.

சிறிது நேரம் சென்றது.

"இப்போது சுவாமி என்ன பண்ணுகிறார்?"

"சீதையைத் தேடிக்கொண்டு புறப்படுகிறார்."

கிழவருக்கு இவ்வளவு சீக்கிரம் சீதை எப்படிப் பிரிந்தாள் என்பதை ஆலோசிக்கும் சக்தி இல்லை. இருந்தால், தாம் கேட்பது ராமாயணம் அன்றென்பதை முன்பே அறிந்துகொண்டிருப்பார் அல்லவா? சிறிது நேரம்சென்றது.

படிக்கப்படும் 'திருவாசக'த்தில் சில பதிகங்கள் முடிந்தன. சந்தானமையங்கார் படிப்பதை நிறுத்தினார்.

"இப்போது சுவாமி என்ன பண்ணுகிறார்?" என்று கிழவரிடமிருந்து மீண்டும் கேள்வி பிறந்தது.

"தூங்கப் போகிறார்" என்று ஐயரவர்கள் சொன்னார். "தூங்கட்டும்" என்று சொல்லிக்கொண்டே கிழவரும் எழுந்து உள்ளே போனார்.

ஐயரவர்களின் நகைச்சுவை உணர்ச்சி, இதுவரை உள்ளுக்குள்ளேயே சிரிப்பைச் சிறைப்படுத்தி வைத்திருந்த இவர்களை வெளியே சென்று வயிறு வலிக்கச் சிரிக்க வைத்தது.

ஐயரவர்கள் திருவிடைமருதூரிலிருந்து திருநெல்வேலி சென்றார். அங்கிருந்து விக்கிரமசிங்கபுரம் போனார். 'சிவஞான போத'த்திற்குத் திராவிட மகாபாஷ்யம் இயற்றியவர் திருவாவடுதுறை ஸ்ரீ சிவஞான முனிவர்; அவரது ஊர் விக்கிரமசிங்கபுரம். அவர் பிறந்த வீடு அங்கே இருக்கிறது. சிவஞான சுவாமிகளின் 145 - ஆம் குருபூஜை உற்சவம் 18 - 4 - 29 - இல் அங்கே நடந்தது. அந்த விழாவுக்குத் தலைமை வகித்தார் ஐயரவர்கள்.

திருவிடைமருதூர்ச் சம்பவம் அவர் நெஞ்சைவிட்டு அகலவேயில்லை. விழா முடிந்து சென்னை திரும்பும் போது ஐயரவர்கள் சொன்னார்: "ராமாயணம் படிப்பதாக நான் சொன்னது வேடிக்கையாக, ஏன் தப்பாகக்கூட இருக்கலாம். ஆனால் தாம் கேட்டது ராமாயணம் என்ற அளவில் அந்தக் கிழவருக்கு உண்டான உருக்கத்தைக் கவனித்தீர்களா?...அடடா! என்ன உருக்கம்!

**'கேட்கும் ஒலியிலெல்லாம் நந்தலாலா—நின்றன்**
**கீதம் இசைக்குதடா நந்தலாலா!'**

எனப் பாரதியார் பாடவில்லையா? நாமும் நல்லதையே கேட்டுக் கேட்டு நினைவுகொள்ளவும் பழகிவிட்டால் வயது முதிர்ந்த காலத்தில் பிறர் நம்மைத் திட்டுவதையுங்கூட நல்லதாகவே எண்ணி மகிழலாம்போல் உள்ளது. அப்போது நமக்குத்தான் எதுவும் காதில் விழாதே!'" இப்படித் தம் ஆசான் சொன்னபோது இவருக்கு மறுபடியும் சிரிப்பு வந்துவிட்டது. ஆயினும் உள்ளம் என்னவோ நெகிழ்ந்து போயிற்று.*

x x x

ஐயரவர்களிடம் படித்த திரு. கோதண்டராமனும், திரு. வி. மு. சு-வும் வித்துவான் தேர்வில் வெற்றி பெற்றார்கள். அவர்களுள் வி.மு.சு. அவர்கள் மாநிலத்தில் முதல் வகுப்பில், முதல்வராகத் தேர்வு பெற்றது ஐயரவர்களுக்கும் அவருடைய மைந்தருக்கும் மிக்க பெருமையாக இருந்தது.

சென்னைக் கிறிஸ்துவப் பெண்கள் கல்லூரித் தமிழ்ப் பண்டிதராகக் கோதண்டராமையரும், (ஆண்கள்) கிறிஸ்துவக் கல்லூரித் தமிழ்ப் பண்டிதராக வி. மு. சு - வும் பணியில் சேர்ந்தார்கள்.

பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர், ஐயரவர்களின் தமிழாராய்ச்சிக்குச் சில காலம் துணையாக இருந்திருக்கிறார். 'நற்றிணை'யை அவர் பதிப்பித்தார். அவருடைய தம்பி சுப்பிரமணிய ஐயரின் குமாரியைக் கோதண்டராமனுக்குத் திருமணம் செய்துவைக்க ஐயரவர்கள் ஏற்பாடு செய்தார். தாமே முன்னின்று அதனை நடத்தியும் வைத்தார்.

கோதண்டராமையரின் மாமனார் சுப்பிரமணிய ஐயரும் தமிழ் நூல்களில் நல்ல பயிற்சி உடையவர்.

---

* கி. வா. ஜ., 1—3—35—'பாரத ஜோதி'யில் குறிப்பிட்டது.

'கம்பராமாயண'த்திலும், 'பெரியபுராண'த்திலும் ஆயிரக் கணக்கான பாடல்கள் அவருக்கு மனப்பாடம். அடிக்கடி அவர் ஐயரவர்களைப் பார்க்க வருவதுண்டு.

ஒரு முறை கோதண்டராமையரின் மாமனார் ஐயரவர்களின் வீட்டிற்கு வந்திருந்தார்; அவர்கள் வீட்டிலேயே தங்கி உணவு உண்டார்.

## பெரியவர் ஒருவர் தந்த ஊக்கம்

அன்று இவருடன் அவர் தனியே பேசிக்கொண்டிருந்த போது, "ஐயரவர்கள் சொன்னார்களே, நீ விரைவி சாகித்தியம் செய்வாயாமே! நான் சமஸ்யை கொடுத்தால் உடனே பாடுவாயா?" என்று கேட்டார்.

இவர், "சொல்லுங்கள், முயன்று பார்க்கிறேன்" என்றார்.

"சண்பகம் என்று முடிய வேண்டும். முல்லை என ஆரம்பித்துப் பல பூக்களின் பெயர்களாக வர வேண்டும். எங்கே, பாடு" என்று சொன்னார்.

இவர் உடனே ஒரு பாடலை எழுதிக் கொடுத்தார்:

**"முல்லை முறுவல் முளரி திருவதனம்**
**அல்லில் அலரும் அருங்குவளை—நல்லவிழி**
**நாடற் கரிய நலத்தாள் இவட்குடலம்**
**பாடற் பெருசண் பகம்."**

(முறுவல்—சிரிப்பு; முளரி—தாமரை; அல்லில்—இரவில்; நலம்—அழகு)

இப்படி ஒரு பெண்ணின் அவயவங்களை வருணிப்பதாக, அப்பாடல் பல பூக்களின் பெயர் வர, முல்லை என எடுத்துச் சண்பகம் என முடிவதாக அமைந்தது.

பாட்டைக் கேட்டவுடன் சுப்பிரமணிய ஐயருக்கு மிக்க மகிழ்ச்சி உண்டாகிவிட்டது. "இப்படி எத்தனை பாடல்கள் எழுதி இருக்கிறாய்?" என்று கேட்டார்.

"அப்போதைக்கப்போது பாடுவதுதானே! கணக்குத் தெரியாது" என்றார் இவர்.

"அவற்றை எல்லாம் எழுதி வைத்துக்கொள்வது இல்லையா?"

"இல்லை."

"அட அசடே! இவை இன்று இல்லாவிட்டாலும் பிறிதொரு காலம் உனக்கே பயன்படக்கூடும். நான் உனக்கு ஒரு நோட்டுப் புத்தகம் தருகிறேன். அதில் உன் பாடல்களையெல்லாம் எழுதி வைத்துக்கொள்" என்றார்.

மரவேலை செய்வது, பைண்டு செய்வது முதலிய கைத்தொழில்களிலும் அவர் வல்லவர். எனவே, 'ரூல்' போட்ட தாள்களை எடுத்து, ஒரு நோட்டாகத் தைத்து, பைண்டு செய்து இவரிடம் கொடுத்தார்.

அதோடு, இந்த நிகழ்ச்சியை ஐயரவர்களிடம் சுப்பிரமணிய ஐயரே சொல்லியும்விட்டார்.

மறு நாள் ஐயரவர்கள் இவரிடம் பேசும்போது, "சுப்பிரமணிய ஐயர் வைத்த பரீட்சையில் வென்று, என் வார்த்தையைக் காப்பாற்றிவிட்டாய்" எனச் சொல்லிப் பரவசம் அடைந்தார்.

அந்த நேரம் தம் ஆசானிடம் காணப்பட்ட மன நிறைவை இவரது உள்ளந்தான் அறியும்!

x x x

ஒரு நாள் ஐயரவர்களுடைய குமாரர், பிற்பகலிலேயே அலுவலகத்திலிருந்து வந்துவிட்டார். அவருக்கு உடம்பு சரியில்லை. இரண்டு மூன்று நாட்கள் சேர்ந்தாற்போல் காய்ச்சல்.

பிறகு அவருக்கு உடம்பு சற்றே குணமான கையோடு அவருடைய குமாரரான சுப்பிரமணியம் டைஃபாய்டு ஜுரத்தில் படுத்துவிட்டார்.

வீட்டில் உள்ளவர்கள் மிகவும் கவலை அடைந்தார்கள்; ஐயரவர்களும் கவலைப்பட்டார். 'படிக்காத நாள் எல்லாம் பிறவாத நாளே' என்பதுதான் இந்தத் தமிழ்த் தொண்டரின் கவலை.

அந்த நேரம் வீட்டில் பாடம் சொல்லித் தருவதும், பார்க்க வருகிறவர்களோடு பேசுவதும், வீட்டில் உள்ளவர்களுக்குத் தொந்தரவாக இருக்கக் கூடுமோ என அஞ்சினார் போலும்! ஐயர்தாம் மிகவும் இங்கிதம் தெரிந்தவராயிற்றே! சுவாமி தரிசனத்திற்கு இவரை அழைத்துக் கொண்டு பிற்பகலில் திருவான்மியூர் போய்விடுவார்.

x x x

சென்னைக்குத் தெற்கே கடற்கரையோரத்தில் அமைந்துள்ள தலம் திருவான்மியூர். இங்குள்ள பால் நிறமான சுயம்பூமூர்த்தி மருந்தீச்வரரைப் பூசித்து வான்மீக முனிவர் பேறு பெற்றதால் இத்தலம் அப்பெயர் பெற்றதாக ஐதிகம்.

''செஞ்சொலாளர்கள் தாம் பயிலும் திருவான்மியூர்'' என ஞானசம்பந்தர் பாடியிருக்கிறார். அதனாலோ என்னவோ முதுபெருந் தமிழறிஞராகிய ஐயரவர்கள் அத்தலத்தில் ஈடுபாடு கொண்டார். அங்கே கடற்காற்று ஜிலுஜிலுவென்று வீசும்.*

''வாட்டம் தீர்த்திடும் வான்மியூர் ஈசன்'' சந்நிதானத்தில் இவருக்குப் பாடம் சொல்வார். 'குறுந்தொகை' ஆராய்ச்சியும் நடக்கும். மாலையில் சுவாமி தரிசனமும் செய்துகொண்டு வீடு வந்து விடுவார்கள்.

x x x

**ஆசான் தம் பேரருக்குப் பெண் பார்த்தபோது :**

ஒரு நாள் காலை மாயூரத்திலிருந்து ஐயரவர்களின் பேரரான சுப்பிரமணியத்தைப் பார்க்க ராமசந்திரையர் -

---

* பிற்காலத்தில் பல ஆராய்ச்சியாளருக்குப் பயன் பட்டு வரும் டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம் திருவான்மியூரிலேயே அமைந்திருப்பது பொருத்தமே.

முன்பு அங்கே பூவைச் சிக்கனமாகக் கொடுத்த பெண்ணின் உறவினர் - வந்தார்.

அவரைக் கண்டவுடன் ஐயரவர்களுக்கு மிக்க மகிழ்ச்சி உண்டாயிற்று. ஐயர்தாமே முன்பு ராமசந்திரையரை வரச் சொல்லியிருந்தார்?

ஐயரவர்களின் பேரரைப் பார்த்தவுடன், "என்ன, பையன், ஒரே இளைப்பாக இருக்கிறானே?" என்றார் வந்தவர்.

"டைஃபாய்டு காய்ச்சலினால் இப்படி ஆகிவிட்டான். கொஞ்சம் உடம்பு தேறட்டும். திருமணத்தைச் சில மாதங்கள் தள்ளியே வைத்துக்கொள்ளலாம்" என ஐயரவர்களின் வீட்டார் சொன்னார்கள். வந்தவருக்கும் திருப்தியாக இருந்தது.

வந்தவரைத் தம்முடைய புத்தகங்கள் இருக்கும் அறைக்கு அழைத்துச் சென்று காட்டினார், ஐயரவர்கள். மேலே எல்லாம் ஏட்டுச் சுவடிகள் அடுக்கப் பட்டிருந்தன. சுவர்களின் பக்கத்தில் எல்லாம் ஏட்டுச் சுவடிகள் இருந்தன. நிலைச் சட்டங்களில் பல மூட்டைகள் காணப்பட்டன.

அருகில் இருந்த இவரிடம், "இந்த மூட்டைகளில் என்ன இருக்கின்றன?" என்று கேட்டார் ராமசந்திரையர்.

"எல்லாம் கையெழுத்துப் பிரதிகள்; தமிழுலகம் இன்னும் காணாத நூல்கள்" என இவர் சொன்னார். தாம் பதிப்பித்திருந்த சில நூல்களையும் அவரிடம் காட்டினார், ஐயரவர்கள். பின்னர் மூவரும் ஆராய்ச்சி செய்யும் இடத்திற்கு வந்து அமர்ந்துகொண்டார்கள்.

"இந்தப் பிள்ளை எனக்கு மிக உதவியாக இருக்கிறான். என்னிடம் தமிழ் படித்து வருகிறான். இவனை உதவிக்கு வைத்துக்கொண்டு இன்னும் சிறப்பான பல நூல்களைப் பதிப்பித்தாக வேண்டும்" என ஐயரவர்கள் சொன்னார்.

"அருமையான நூல்கள் பலவற்றையுந்தான் நீங்கள் வெளியிட்டு விட்டீர்களே! இன்னுமா சிறப்பான நூல்கள்

இருக்கின்றன?'' என அவர் கேட்டபோது, இவருக்குச் சிரிப்பு வந்தது.

''நான் செய்தது ஒரு பகுதிதான். சருகரித்தேன். குளிர் காய நேரமில்லை. நான் தேடித் தொகுத்து ஆராய்ந்து வைத்திருக்கும் நூல்கள் இன்னும் பல மடங்கு உள்ளன. ஒவ்வொன்றாகச் செய்துகொண்டு வருகிறேன். எனக்கும் வயசாகிக்கொண்டு வருகிறது. முதுமையின் தளர்ச்சி அதிகமாக இருக்கிறது'' என்றார் ஐயரவர்கள்.

''இன்னும் பல வருஷங்கள் இருப்பீர்கள். கொள்ளுப் பேரனைப் பார்க்கவேண்டாமா? அவன் கையால் கனகாபிஷேகம்* பண்ணிக்கொள்ள வேண்டாமா?'' எனச் சொன்னதோடு திருமணத்தைச் சில மாதங்கள் தள்ளி வைத்துக்கொள்ளவும் சம்மதித்தார். வந்தவர்

அவர் விடை பெற்றுச் சென்றபின் ஐயரவர்கள் இவரிடம் சொன்னார் :

''கொள்ளுப் பேரனைப் பார்க்கவும், கனகாபிஷேகம் செய்துகொள்ளவும் இன்னும் பல வருஷங்கள் நான் இருக்க வேண்டுமென்று அவர் வாழ்த்துகிறார். இருப்பதில் எனக்கும் பிரியந்தான்; அவர் சொல்லும் காரணத்திற்காக நான் வாழ விரும்பவில்லை.

''இதுகாறும் அச்சில் வராத நூல்களைக் குறிப்புரையோடும், நல்ல முகவுரையோடும் அச்சிட்டுப் பார்க்க வேண்டுமென்ற ஆசை எனக்கு இருக்கிறது. அச்சிட்ட நூல்களுக்குப் பரம்பரைக் கேள்வியாலும், ஆராய்ச்சியாலும் நான் அறிந்து வைத்த குறிப்புகளைத் தொகுத்துத் தனித்தனியே வெளிப்படுத்த விரும்புகிறேன். இதற்காகவாவது வாழ வேண்டுமென்று நான் நினைப்பது உண்டு. ஆனால், இப்படி இருக்கக் கூடாது! நினைத்த காரியத்தை நினைத்தபடி முடிப்பதற்கு வேண்டிய அநுகூலங்கள் இருக்க வேண்டும். திடீரென்று உலகத்தை விட்டுப் பிரிய

---

* 7-12-41-இல் கொள்ளுப் பேரர் வேங்கட கிருஷ்ணனால் கனகாபிஷேகம் நடைபெற்றது.

நேர்ந்தால் என்ன செய்வது என்ற கவலை சில சமயம் உண்டாகிறது'' எனச் சொல்லி ஐயரவர்கள் சிறிது மௌனமாக இருந்தார்.

**'குழந்தை'களுக்காக ஆசான்பட்ட ஏக்கம் :**

அவரது உள்ளம் எதையோ நினைந்து மறுகியது. இவர் அவரது முகத்தைப் பார்த்தவுடன், ''என்ன அப்படிப் பார்க்கிறீர்? நான் சாவதற்கு அஞ்சுகிறேனோ என்று பார்க்கிறீர்களா? சாவைப்பற்றி நான் துளிக்கூடக் கவலைப்படவில்லை. இந்தக் குழந்தைகளைவிட்டுப் போக வேண்டுமேயென்றுதான் கவலைப்படுகிறேன்'' என்றார்.

ஐயரவர்களுக்கு ஒரே ஒரு புதல்வர்தாம். அவரும் தம் தகப்பனாருக்குக் குடும்பக் கவலை ஏதும் கொடுக்காமல், தாமே எல்லாவற்றையும் முறையாகக் கவனித்துக் கொண்டு வந்தார்.

எனவே, ''குழந்தைகள்'' என ஐயர் குறிப்பிட்டது, அவர் சேகரித்து வைத்திருந்த தமிழ் நூல்களே ஆகும். அவர் மேலும் சொன்னார்: ''அப்படியே ஒரு நாள் நான் இறந்து போனாலும் தமிழ்த் தாய்க்குத் தொண்டு செய்யத் தமிழ்நாட்டில் வந்துதான் பிறப்பேன். என் கவலையெல்லாம் அடுத்த பிறப்பெடுத்து வரும்போது என் இந்தப் புத்தகங்கள், சுவடிகள், நானே எழுதி வைத்துள்ள குறிப்புகள் எனக்குக் கிடைக்குமா என்பதுதான். இவர்கள் தான் அப்போது என்னை உள்ளே விடுவார்களா?'' எனத் தம் வீட்டாரைச் சுட்டி நகைச்சுவை ததும்பக் கூறினார்.

காரணம், ஐயரவர்களுடைய கையில் பட்ட ஒவ்வொன்றிலும், ஒவ்வொரு பக்கத்திலும் அடையாளங்கள் இருக்கும்; குறிப்புகள் இருக்கும். ஒரு புத்தகத்தை அவர் நூறு முறை படித்துக் குறிப்பு எடுத்திருப்பார். நூற்றோராம் முறை படிக்கும்போது, புதிதாக ஒரு விஷயத்தைக் கண்டுபிடித்துக் குறிப்பு

எழுதுவார். எந்தப் புத்தகத்தை எப்போது படித்தாலும் பென்ஸிலும் குறிப்புப் புத்தகமும் இல்லாமல் படிப்பது அவரது வழக்கமன்று. பாடம் செய்ய வேண்டிய சிறப்பான பாட்டு என்றால், அதன்முன் சுழி இருக்கும். ஐயத்துக்கு உரிய இடங்கள் என்றால் ஒரு சிறு கோடு இருக்கும். நயமுள்ள இடங்களில் புள்ளிகள் வைக்கப் பட்டிருக்கும்.

x x x

ஆசானைப் போலவே இவரும் தாம் படிக்கும் நூல் களில் இந்தக் குறியீடுகளை வைக்கத் தொடங்கினார்.

**'தக்கயாகப்பரணி' பதிப்பின்போது நேர்ந்த அநுபவம் :**

என்றைக்குமே, 'தக்கயாகப் பரணி' என்ற நூலிடத்து இவருக்கு ஒரு தனி அபிமானம் உண்டு. காரணம், அப்போது ஐயரவர்கள் அந்தப் பரணி நூல் சம்பந்தமான கையெழுத்துப் பிரதியை அச்சிட அச்சகத்திற்கு அனுப்பி யிருந்தார். முதல் ஃபாரம் 'ப்ரூஃப்' வந்தது.* அதனை அவர் பார்ப்பதற்கு முன் இவரிடம் கொடுத்துப் பார்க்கச் சொன்னார். இவர் ஃப்ரூப் பார்த்துத் தவறுகளைத் திருத்திவிட்டுச் சிற்சில இடங்களில் தம் ஆசானைப் போன்றே சில குறியீடுகள் வைத்திருந்தார்.

---

* 'ப்ரூஃப்' பார்ப்பதென்றால் எவ்வளவு சிரமமான காரியம் என்பதை எல்லோரும் அறியமாட்டார்கள். முதல் 'காலி'யிலிருந்து கடைசியில் அச்சிடும்படி உத்தரவு கொடுக்கும் வரையில் ஒவ்வொரு முறையும் கூர்ந்து கவனிப்பது ஸ்ரீமத் ஐயரது வழக்கம். எவ்வளவு பேர் பார்த்தாலும் இறுதியில் ஒரு முறை அவர் பார்க்க வேண்டும். அவரது கண்ணுக்குத்தான் 'முடிபுப் பிழை, விளங் காத குறிப்பு' இவை தெரியும்.

அந்த ப்ரூஃபை ஐயரவர்கள் தாம் பார்த்தவுடன், ''இன்னும் கொஞ்சம் பழக வேண்டும். மொத்தத்தில் நன்றாகவே பார்த்திருக்கிறாய்'' என்றார்.

பின்னர், ''இதெல்லாம் என்ன புள்ளி வைத்திருக்கிறாய்?'' எனக் கேட்டார். அங்கெல்லாம் இவர் தமக்கு ஏற்பட்ட ஐயங்களைச் சொன்னார்.

ஆசானுக்கு மிகவும் மகிழ்ச்சியாகிவிட்டது. இவரிடம், ''நீயும் இனி ப்ரூஃப் பார்க்கணும்'' என்றார்.

'தக்கயாகப்பரணி'யைவிடச் சிறந்த நூல்கள் வேறு இருக்கலாம்; என்றாலும், இவருக்குத் தம் ஆசானிடத்தில் பெருமதிப்பை வாங்கித் தந்த நூல் அந்தப் பரணிதான்.

x z x

**'குறுந்தொகை' - ஆசான் கண்ட உரை :**

கடைச்சங்க நூல்களுள் சிறந்த இலக்கியங்களாக விளங்குவன 'எட்டுத் தொகை' நூல்களாகும். அந்தத் தொகை நூல்களுள் ஒன்று 'குறுந்தொகை.' அதற்குப் பழைய உரை ஏதும் கிடைக்காமையால் புதிய உரை எழுதி ஐயரவர்கள் பதிப்பிக்க வேண்டுமென்று பல தமிழன்பர்கள் வேண்டிக்கொண்டார்கள்.

பல ஆண்டுகளாக ஐயரவர்களும் 'குறுந்தொகை' பற்றி ஆராய்ந்தும், தொகுத்தும் பலவகையான குறிப்புகளை எழுதி வைத்திருந்தார். அவரது கருத்திற்கிணங்க, அவற்றை முறைப்படுத்தி, நல்ல வடிவத்தில் அழகு பெற அமைக்க ஒருவரது துணை வேண்டியிருந்தது. அது பெரிய வேலை. அச்சிட்டால் 700 பக்கங்களுக்குமேல் வரக்கூடும்.

'ஐயரவர்கள் கூட்டொருவரையும் வேண்டாக் கொற்றவனாக'ச் செயல்பட்டவர்தாம் என்றாலும், வயது முதிர்ச்சியாலும், உடல் தளர்ச்சியாலும் அவரால் முன்

போல் தம் விருப்பப்படி எந்தக் காரியத்தையும் தொடர்ந்து தனியாகச் செய்ய முடியவில்லை.

இவருடைய பேராற்றலும், எழுத்து வன்மையும், தமிழன்பும் அவரைப் பெரிதும் கவர்ந்திருந்தன. இவரது உதவிகொண்டு 'குறுந்தொகை'யைப் பதிப்பித்து விட வேண்டுமென்ற மனவெழுச்சி அவருக்கு உண்டாயிற்று.

'குறுந்தொகை' அகத்திணையைச் சார்ந்த நூல். கருவிநூலாக ஒரு கோவையைப் பாடம் கேட்டால் 'குறுந்தொகை'ப் பாடல் நன்றாக விளங்குமென ஐயரவர்கள் இவருக்குத் 'தஞ்சைவாணன் கோவை'யைப் பாடம் சொன்னார். பின்னர்த் தம்மிடம் இருந்த 'குறுந்தொகை'க் காகிதப் பிரதியை இவரிடம் கொடுத்துப் பாடம் சொல்லத் தொடங்கினார்.

ஒரு நாள் பிற்பகலில் இவர்கள் 'ஆனந்த ருத்திரேசர் வண்டு விடுதூது' என்ற நூலை ஆராய்ந்து, குறிப்புரை எழுதத் தொடங்கினார்கள்.

அதனை இயற்றியவர் கச்சியப்ப முனிவர் ஆவர். அவர் திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவானாக விளங்கியவர்; சங்க நூல்களையும் அவற்றின் பிரயோகங்களையும் நன்கு அறிந்தவர். பல பிரபந்தங்களையும் இயற்றியிருக்கிறார்.

## தமிழ்ப்பண்டிதராகப் பள்ளியில் பெற்ற அநுபவம் :

அந்தச் சமயம் ஐயரவர்களைப் பார்க்கத் திருவல்லிக்கேணி இந்து உயர்நிலைப்பள்ளியின் கரஸ்பாண்டென்ட், வந்தார். தமது பள்ளித் தமிழ்ப் பண்டிதர் 'லீவு' போட்டிருப்பதால், தாற்காலிகமாக ஒரு தமிழ்ப் பண்டிதரை அனுப்பி வைக்க வேண்டுமென்று ஐயரவர்களிடம் கேட்டுக்கொண்டார்.

உடனே ஐயரவர்கள் இவரைக் காட்டி, "நான் இந்தப் பையனை அனுப்பி வைக்கிறேன். நன்றாகப் பாடம்

சொல்லுவான். கவலைப்படாதீர்கள்!'' என்று சொல்லி அவரை அனுப்பி வைத்தார்.

இவர் என்னவோ சற்றுத் தயங்கினார். ஆசான் சொன்னார்: ''என் குருநாதரான பிள்ளையவர்களுக்குப் பாடம் சொல்லுவதில் இயல்பாகவே விருப்பம் அதிகம். அவரது கல்வி வளர்ச்சிக்கும், கவித்துவத்துக்கும் காரணம் அவர் பாடம் சொல்லி வந்ததேயாகும்.

''அந்தக் கவிஞர்கோமானிடம் படித்த ஸ்ரீலஸ்ரீ நவச்சிவாய தேசிகர், 'ஒரு முறை பாடம் சொல்வது ஆயிரம் தரம் படிப்பதற்குச் சமானம்' என்று சொல்லிக் கொண்டு இடைவிடாமல் பாடம் சொல்வார்.

''என்னைக் கும்பகோணம் கல்லூரிக்குத் தமிழ்ப் பண்டித பதவிக்குப் அமர்த்திய தியாகராச செட்டியார், பிள்ளையவர்களைப் பார்த்து, 'நீங்கள் இடைவிடாமல் பாடம் சொல்லுவதாகப் பேர் வைத்துக்கொண்டு நன்றாகப் படித்து வருகிறீர்கள்' எனச் சொன்னதை நானே கேட்டதுண்டு.

''கவலைப்படாமல் போய்ப் பாடம் சொல்ல வேண்டும். அப்போதுதான் உமது ஞாபக சக்தியும், கவிதா சக்தியும் நன்றாக வளரும்'' என ஆசீர்வதித்து இவருக்கு உற்சாகமூட்டினார்.

இவர் பாடம் சொல்லுவதுபற்றிக் கவலைப்பட வில்லை. இவர் கதர் நாலுமுழ வேட்டிதாள் கட்டுவார். உயர்நிலைப் பள்ளிக்கு ஆசிரியராகப் போக வேண்டு மானால் மூலக்கச்சம் கட்டிக்கொண்டு போக வேண்டுமே யெனத்தான் கவலைப்பட்டார்.

முதல் நாள், வகுப்புக்குள் இவர் போகும்போதே, ''ஏய்! ஆசிரியரும் பையன்தாண்டா'' என்று ஒரு பையன் சொல்லிச் சிரித்தான். அதைக் காதில் வாங்காமல் இவர் பாடம் சொல்லத் தொடங்கினார்.

நடுவில் ஒரு நாள் கரும்பலகையில் எழுதிக் காட்டத் திரும்பியபோது இவர் கவலைப்பட்டபடியே ஆகிவிட்டது.

பாழாய்ப்போன மூலக்கச்சம் அவிழ்ந்துவிட்டது. மாணவர்கள் குப்பெனச் சிரித்துத் தம்மைப் பரிகசிப்பார்களோ எனப் பயந்து திரும்பினார்.

யாரும் அதைக் கவனித்துச் சிரித்ததாகத் தெரியவில்லை. தாம் பாடம் சொல்லிக் கொடுக்கும் தன்மையில் தங்களையே மறந்து அவர்கள் ஒன்றியிருந்த நிலையைக் கண்டார்.

இவரும் மகிழ்ச்சியோடு அவர்களுக்குத் தொடர்ந்து பாடம் சொல்லி வரலானார். இப்படி 22 - 7 - 29 முதல் ஒன்றரை மாதம் இந்து உயர்நிலைப்பள்ளியில் தமிழ்ப் பண்டிதராய்ப் பணியாற்றினார்.

**முதல் தமிழ் வித்துவான் பரிசு பெற்ற ஆருயிர் அன்பர் :**

1929 - ஆம் ஆண்டு வித்துவான் முதல் வகுப்பில், முதல்வராக, முதல் முயற்சியிலேயே தேர்ச்சி பெற்ற இவருடைய நண்பர் வி. மு. சுப்பிரமணிய ஐயருக்குத் திருப்பனந்தாள் மடத்து ஆயிரம் ரூபாய் பரிசை வழங்குவது என முடிவாயிற்று.

முதல் முதலாகத் தொடங்கப்பெறும் இந்தப் பரிசுத் திட்டத்தைப் பலரும் தெரிந்துகொள்வதற்கு வசதியாகப் பரிசு அளிக்கும் விழாவைச் சிறப்பாக அமைக்கக் காசி மடத்துத் தலைவர் விரும்பினார். எனவே, கும்பகோணம் போர்ட்டர் டவுன் ஹாலில் அந்த விழாவை நடத்த ஏற்பாடாயிற்று.

அதற்கு ஐயரவர்கள் போகும்போது இவரையும் தம்முடன் அழைத்துச் சென்றார். இவர்கள் முதலில் திருப்பனந்தாள் காசி மடத்திற்குச் சென்றார்கள்.

பனைசைக் காசிமடத்தில் தலைவராக அப்போது ஸ்ரீலஸ்ரீ சொக்கலிங்கத் தம்பிரான் இருந்தார். இளவல் சாமிநாதத் தம்பிரானும் அவருடன் இருந்தார்.

ஐயரவர்கள் காசி மடத்து அதிபருக்கு இவரை அறிமுகம் செய்து வைத்தார். "இளவரசு சாமிநாத

சுவாமிகளும் இவரைப்பற்றிச் சொன்னார். மிக்க தமிழார்வம் உடையவராமே! தங்களிடமிருந்தும் நிரம்பக் கற்றுக்கொண்டிருக்கக் கூடும்'' என முன்பே அறிந்தவர் போல் இவருடன் பழகலானார் அதிபர்.

''நல்ல சாகித்தியத் திறமை உடையவராகவும் இருக்கிறார். எந்தக் கருத்தைச் சொன்னாலும் உடனே சாகித்தியம் செய்துவிடுவார்'' என ஐயரவர்கள் இவரைப் பற்றி மேலும் சொன்னார்.

உடனே இளவல் சாமிநாதத் தம்பிரான், ''உமியார் செய்த செயல்'' என ஈற்றடி கொடுத்து இவரைப் பாடச் சொன்னார். இவர் பாடிய பாடலைக் கேட்டவுடன் தம்பிரான்மாருக்கு மிகவும் மகிழ்ச்சி உண்டாயிற்று. மேலும் உரையாடியபோது அவர்கள் யாவரும் மகிழும்படி இவர் சுவைபடப் பேசினார்.

x x x

''ஒரு மனிதரைப் பார்க்கப்போகும்போது நாம் இருந்ததைவிடத் திரும்பி வரும்போது அறிவாற்றலிலும், இதயப் பண்பிலும் நம்மை அறியாமலே நாம் ஒரு படி உயர்ந்துவிட்டிருந்தோமானால் அந்த மனிதரைப் 'பெரிய மனிதர்' எனலாம். அத்தகைய அபூர்வமான ஒருவர் கி. வா. ஜ.'' என்பதாகக் 'கல்கி' ஆசிரியர் கி. ராஜேந்திரன் எழுதினார்.*

x x x

இந்த உண்மையை இவரோடு பழகியவர்கள் அனைவருமே உணர்வார்கள். ரசமாகப் பேசுவது என்பதே ஒரு கலை; மேடையில் மட்டுமல்லாமல் பலருடன் உரையாடும் போதும் கேட்போர் இன்புறும்படியாகப் பேசுவது எல்லோருக்கும் வராது. பொழுது போவதே தெரியாமல் மணிக்கணக்கில் வம்பளப்பவர்கள் இருக்கிறார்கள். அந்த

* 'கல்கி'—20 - 11 - 1988.

அரட்டை அவர்களுக்கும் சரி, மற்றவர்களுக்கும் சரி எதற்கும் பயன்படாத வீண்பேச்சாகப் போய்விடும். பிறருடைய மனம் அறிந்து பேச வேண்டுமானால் அது லேசான காரியம் அன்று. ஏங்கிப் போனவர்களுக்கு ஆறுதல் உண்டாகும்படி உற்சாகம் ஊட்டுவது ஒரு வகை. துக்கம் உள்ளவர்களிடம் அவர்களுக்கு ஆறுதல் உண்டாகும்படி பேசுவது வேறு வகை. கோபம் உள்ளவர்களிடம் அவர்களது கோபத்தைத் தணிப்பதற்கு ஒரு விதமாகப் பேசவேண்டும். பெண்களிடத்தும், குழந்தைகளிடத்தும் இயல்பாகக் காணப்படும் திறமையறிந்து அவர்களது திறமை வளர்ச்சியுறும்படி பரிவோடு பாராட்டிப் பேசுவது ஒரு வகை.

இவை யாவற்றிலும் இவர் வல்லவரானதற்குக் காரணம் ஐயரவர்களே.

x x x

**ஆசானிடம் கற்ற பண்பு :**

ஐயரவர்கள் தனி அறிவாற்றலும், நல்ல உலக அநுபவமும் நிரம்பப் பெற்றவராக விளங்கினார். குழந்தை முதல் கிழவர்வரை யாவரும் இன்புறும்படி உரையாட அவருக்குத் தெரியும்.

ஒரு மன்னரிடம் சுவாரஸ்யமாகப் பேசவும் அவர் அறிவார். அதே கையோடு மன்னரது வேலைக்காரனிடமும் அன்பாகப் பேசி அவனை மகிழ்விக்க அவரால் முடியும்.

ராமநாதபுரம் ஸ்ரீராஜராஜேசுவர சேதுபதி மன்னர் ஐயரவர்களிடம் மிக்க மதிப்புடையவர். சென்னை மாநிலத்தில் புதிய மந்திரிசபை அமைய இருந்தபோது மன்னர் சென்னைக்கு வந்திருந்தார். அப்போது 'சேதுபதிக்கும் மந்திரி பதவி கிடைக்கும்' எனப் பலரும் பேசி வந்தார்கள்.

இவரை அழைத்துக்கொண்டு, ஐயரவர்கள் அவர் தங்கியிருந்த இடத்திற்கு அவரைப் பார்க்கச் சென்றார்.

அங்கிருந்தவர்கள் வருத்தத்தோடு கூடிக் கூடிப் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்களை ஐயரவர்கள் விசாரித்த போது சேதுபதிக்கு மந்திரி பதவி கிடைக்கவில்லை யென்று தெரிந்தது. இதனால் மன்னருக்கு ஏமாற்றமும், சிறிது மன வருத்தமும் இருக்குமென்று ஐயரவர்கள் உணர்ந்தார்.

மன்னரோடு பேசும்போது, "மகாராஜாவுக்கு மந்திரி பதவி கொடுக்க இருந்த ஏற்பாடு கடைசி நிமிஷத்தில் மாறி விட்டதை அறிந்தேன். இதில் தாங்கள் வருத்தப்பட வேண்டியது ஒன்றும் இல்லை. மகாராஜா மகாராஜா வாகவே இருக்க வேண்டுமேயன்றி மந்திரியாவதாவது? மகாராஜா பதவிக்கு மந்திரி பதவி ஈடாகுமா?" எனச் சொன்னபோது ராமநாதபுரம் மன்னரது மனவாட்டம் பறந்தோடிவிட்டது!

இப்படிப் பிறரது உள்ளம் அறிந்து உவக்கும்படி ஐயரவர்கள் பேசுவார். அந்த அந்தச் சந்தர்ப்பங்களுக்குப் பொருத்தமான சிலேடைகளும் அவரது பேச்சில் வந்து அமையும்.

முன்னர் ஒரு முறை இதே சேதுபதி மன்னரைப் பார்க்க வுட்லண்ட்ஸ் ஓட்டலுக்கு ஐயரவர்கள் இவரை அழைத்துக் கொண்டு சென்றார்.

ஐயரவர்களைக் கண்டவுடன் சேதுபதி மன்னர் மகிழ்ந்து அவரைத் தம் அருகில் சோஃபாவில் உட்கார வைத்துக்கொண்டார்.

அப்போது ஐயரவர்கள், "ம கா ரா ஜா எதை யெதையோ கொடுத்துப் பலரை ஆதரிப்பதைக் கண்டிருக் கிறேன். இப்போது எனக்குச் சமஸ்தானத்தையே (சமமான இடத்தையே) தந்துவிட்டீர்கள்" எனச் சொன்னபோது ஐயரவர்களது சிலேடை நயம் அனைவரையும் மகிழ் வித்ததாம்.

x x x

**தம்பிரானின் தமிழன்பு :**

பின்பு ஒரு நாள் ஸ்ரீலஸ்ரீ சொக்கலிங்கத் தம்பிரான் இவருடன் உரையாடும்போது, "சென்னையில் நீங்கள் எங்கே தங்கி இருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

இவர், தாம் தங்கியிருக்கும் இடத்தையும், வாடகையையும் சொன்னார்.

உடனே அவர் இவரிடம் 120 ரூபாயைக் கொடுத்து, "மாசம் பத்தாகச் செலவுக்கு வைத்துக்கொள்ளுங்கள்" என்றார்.

இவர் அதை மிக்க மரியாதையோடு வாங்கித் தம் கண்களில் ஒற்றிக்கொண்டு, "இது எனக்கு மா சம்பத்து (பெரிய சம்பத்து) அல்லவா?" என நயம்படச் சொன்னதைக் கேட்டு அனைவருமே நெகிழ்ந்து போனார்கள்.

"தமிழ்ப் புலமை உடையவர்களால்தான் இப்படிச் சிலேடையாகப் பேச முடியும். ஐயரவர்களிடமிருந்து அப்படிப் பேசவும் கற்றுக்கொண்டு விட்டீர்களே! தொடர்ந்து அவருக்கு உதவியாக இருந்து வாரும்" என ஸ்ரீலஸ்ரீ சொக்கலிங்கத் தம்பிரான் இவரை வாழ்த்தினார்.

"அது காந்தகிரி முருகனைப் பரவும் நாவாச்சே! சொல்லியும் தர வேண்டுமா?" என ஐயரவர்கள் மெல்லச் சொல்லும்போது அவருடைய கண்களில் ஆனந்தம் நடனமாடிற்று.

**பரிசு பெற்ற அன்பரின் பாராட்டுவிழாவின்போது...**

கும்பகோணம் போர்ட்டர் டவுன் ஹாலில் வித்துவான் வி.மு.சு. அவர்களுக்குப் பரிசளிப்பு விழா 15—9—1929-இல் நடைபெற்றது. ஐயரவர்களின் பெயரிலேயே அழைப்பிதழ் அச்சிடப்பெற்று அறிஞர்கள் பலருக்கும் அனுப்பப்பட்டது.

"சென்னைப் பல்கலைக்கழக வித்துவான தேர்வில் முதலாவதாகத் தேறுபவர்களுக்குத் திருப்பனந்தாள் அதிபர் ஆயிரம் ரூபாய் பரிசளிக்கும் திட்டம் முதல் முறையாகத் தொடங்கப்படுவதால் அந்தச் செயலைப் பாராட்டி

ஐயரவர்கள் இவரையும் அக்கூட்டத்தில், திருப்பனந்தாள் மடாதிபதியின் அறச்செயலைப் பாராட்டிச் சில பாடல்களைப் பாடச் சொல்லியிருந்தார்.

தருமிக்குப் பொழில்சிறக்கும் திருப்பனசைச்
சொக்கலிங்கத் தவரா சன்சீர்த்
தருமிக்கு மதுரேசர் பொற்கிழிதந்(து)
அளித்ததுபோற் றமிழ்வல் லோர்க்குத்
தருமிக்கு வலயத்தில் ஆயிரம்பொன்
எனக்கேட்டார் தரணி யின்மாந்
தருமிக்கு மொழிப்புலவோர் தாமுமிகக்
களித்தனர்தண் டமிழ்ச்சீர் ஓர்ந்தே !*

என இவரும் இப்படி விருத்தம், சந்தம், வெண்பா ஆகியவற்றில் நான்கு பாடல்களை அக்கூட்டத்தில் பாடி யாவரையும் மகிழ்வித்தார்.

× × ×

இவர் மோகனூரிலிருந்து சென்னைக்கு வந்து ஓர் ஆண்டு ஆகிவிட்டது. இந்த ஓராண்டுக் காலமும் ஐயரவர்களுடனேயே இருந்து வந்தார். அவரிடம் பல தமிழ் நூல்களைப் படித்து, அவரது ஆராய்ச்சிப் பணிகளிலும் ஈடுபட்டார்.

இவருடைய குடும்பத்தினர் அனைவரும் மோகனூரில் இருந்தார்கள். அப்போது இவருடைய முதல் சகோதரி தலைச்சன் பிரசவத்திற்காகப் பங்களூரிலிருந்து மோகனூர் வந்திருந்தாள். ஒரு நடை வந்துபோகும்படி தாயார் கடிதம் எழுதினார்.

---

* அடி 1. தருமிக்கு — மரங்கள் மிகுந்து; அடி 2. — தருமி என்பவனுக்கு; அடி 3. தரும் இக்குவலயத்தில் — தருகின்ற இந்த உலகில்; அடி 4. தரணியின் மாந்தரும் இக்கு (கரும்பு) மொழிப் புலவோர் தாமும்.

இவர் ஐயரவர்களிடம், மோகனூர் சென்று பெற்றோர்களைப் பார்த்துவிட்டு விரைவில் வந்துவிடுவதாகச் சொல்லி விடைபெற்றுக்கொண்டு 11—10—29 - இல் தம் ஊருக்குச் சென்றார்; 29—11—29 - இலேதான் இவரால் சென்னைக்குத் திரும்பி வர முடிந்தது.

இந்த இடையிட்ட (11-10-29—29-11-29) காலத்தில் மோகனூரிலிருந்து துத்திகுளம், புதுப்பாளையம், மணப்பள்ளி, வாங்கல், கிருஷ்ணராயபுரம் முதலிய பல ஊர்களுக்குச் சென்றிருந்தார். அங்கங்கே சில இடங்களில் பேசினார். சேந்தமங்கலம் சென்று தம் உடையார் நண்பர்களுடன் அளவளாவி வந்தார். காசி சுவாமிகளையும், அவதூத மகாமுனிவரையும் தரிசனம் செய்துகொண்டார். (சேலம் மாவட்ட) வேலூர் சென்று பண்டிதர் கணபதி ஐயரோடு அளவளாவினார்.

முதல் சகோதரி மதுகரம்மாள் 11-11-29 அன்று ஓர் ஆண் குழந்தையைக் கருவுயிர்த்தாள். ராமசுப்பிரமணியன்* என்பது குழந்தையின் பெயர்.

மோகையில், 'காந்தமலை முருகன் புத்தகசாலை' என ஒன்று நிறுவப்பெற்றது.

தீபாவளி அன்று விடியற்காலை காந்தமலை அடிவாரத்தில் சுவாமி அபயானந்தரும், சுப்பு செட்டியாரும், இவரும் அமைந்த ஒரு குழுவினரின் படம் எடுக்கப்பட்டது.

இவர் ஐயரவர்களைப் பிரிந்திருந்த இந்த ஒன்றரை மாத காலத்தில் இவர்கள் ஒருவருக்கொருவர் சில கடிதங்களை எழுதிக்கொண்டார்கள். அவை அனைத்தும் கிடைக்கவில்லை. என்றாலும், கிடைத்தவை இவர்களது வாழ்வியலின் இன்ப துன்பங்களை நாமும் அறிந்து கொள்ளத் தக்கனவாக உள்ளன.

---

* 'கி.வா.ஜா.வின் சிலேடைகள்' என்ற நூலைத் தொகுத்தவர்; 'தினமணி'யில் பணியாற்றினார்.

17-10-29இல் தமக்கு உதவியாக, திரு. வி.மு.சு-விடம் சொல்லி இவருக்கு எழுதுவித்த இக்கடிதத்தில் ஐயரவர்கள் கையொப்பமிட்டுள்ளார்:

**ஆசான் - மாணவரிடையே கடிதப் போக்குவரத்து**

உ

சிவமயம்

வி. சாமிநாதையர்
சென்னை

'தியாகராஜ விலாஸ்'
திருவேட்டீசுவரன்பேட்டை
17-10-29

அநேக ஆசீர்வாதம்.

உபய க்ஷேமோபரி.

தாம் 16 - ஆம் தேதி எழுதிய கடிதமும், அதற்கு முன்பு எழுதிய கடிதமும் வந்தன. பார்த்து நானும், பிறரும் மிக்க ஆறுதலடைந்தோம்.

'தக்கயாகப் பரணி'யின் அகராதி வேலை நடைபெற்று வருகின்றது. 49-ஆம் பாரம் இன்றோடு முற்றுப் பெறுகின்றது. அதில் 'க' பாடம் என்பது வரையில் வந்திருக்கின்றது. மேலே அடுக்கி வருகிறார்கள்.

இடையில் சில தினங்களாக அஜீரணத்தால் ஆகாரம் செல்லவில்லை. அதனால் மெல்லிய ஆகாரத்தை உட்கொண்டு சௌக்கியமாக இருந்துவருகிறேன்.

அருமைத் தந்தையாரவர்கள் முதலியவர்களுக்கும் மற்றவர்களுக்கும் என் ஞாபகம் சொல்லவேண்டும்.

சிரஞ்சீவி அண்ணா முதலியவர்களுக்குத் தம்முடைய நமஸ்காரம் முதலியவற்றைத் தெரிவித்தேன்.

அன்பர்களிருவரும் வழக்கம்போலே உடனிருந்து இயன்ற அளவு சகாயம் செய்து வருகிறார்கள்.

அங்கே சில தினம் இருந்து தேக ஸ்திதியை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொண்டு சௌகர்யமான காலத்தில் வருவதை எதிர்பார்க்கிறேன்.

'குறுந்தொகை' வேலை சிறிது சிறிது நடைபெற்று வருகிறது.

அங்கே இருக்குங் காலத்தில் தேகத்திற்கேற்ற பேதி மருந்து முதலியவற்றை உட்கொண்டுவிட்டு வரக்கூடு மென்று நினைக்கிறேன்.

நேற்று மகாவித்வான் பெரிய ராகவையங்காரவர்கள் வந்திருந்தார்கள். இன்று மாலை முகவை செல்வார்கள்.

நெல்லை ஸ்ரீமான் சிதம்பரநாத முதலியார் அவர்கள் வந்திருந்தார்கள். தம்மை நிரம்ப விசாரித்தார்கள்.

மதுரைத் தமிழ்ச் சங்க மீட்டிங்கு இன்னும் நிச்சயிக்கப் படவில்லை என்று தெரிகிறது.

துலா மாதம் ஆதலால் அகண்ட காவேரியில் 3 தினத்திற்குக் குறையாமல் ஸ்நானம் செய்ய வேண்டுமென்றும், அப்பொழுது என் ஞாபகம் இருக்க வேண்டுமென்றும் தெரிவிக்கிறேன்.

அவ்விடத்துக் காரியங்கள் பூர்த்தியான பின்பு இங்கே புறப்படும் காலத்தைத் தெரிவிக்க. பெரியவர்கள் சொல்லிறபடி செய்க.

எப்பொழுதும் தம்முடைய ஞாபகமாகவே இருக்கிறேனென்பதை நான் எழுதுவது மிகையென்பது தெரியுமே. இனி எழுதுவதைக் கார்டில் எழுதினால் போதும்.

அன்பன்
**வே. சாமிநாதன்.**

x x x

அடுத்த இரண்டு நாட்கள் கழித்து, 19 - 10 - 29-இல் தம் குமாரரிடம் சொல்லி எழுதுவித்த கடிதத்தில் ஐயரவர்களின் கையொப்பம் உள்ளது.

உ

சிவமயம் 19 - 10 - 29

அநேக ஆசீர்வாதம். உபயத்ர குசலோபரி.

12, 16 - ஆம் தேதிகளில் அனுப்பிய கடிதங்கள் இரண்டும் வந்தன. அங்கே முகூர்த்தம் முதலியன

செவ்வையாக நடந்த விவரம் தெரிந்து சந்தோஷம் அடைந்தேன். இங்கு எல்லோரும் சௌக்கியமாக இருக்கிறார்கள். இங்கே புறப்பட்டு வரும் காலத்தைத் தெரிவிக்க. பிதா முதலியவர்களுக்கு என் ஞாபகம் சொல்லுக.

இங்ஙனம்

**வே. சாமிநாதன்.**

x x x

இவர்தாம் மோகனூரிலேயே இல்லையே! ஸ்ரீமத் ஐயரது முதல் கடிதத்தையும் இக்கடிதத்தையும் பார்க்கவில்லை. இவருடைய தந்தையே 21 - 10 - 29-இல் ஸ்ரீமத் ஐயருக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார்.

அதற்குப் பதிலாகத் தம் குமாரரிடம் சொல்லி இவரது தந்தையாருக்கும், அத்துடன் இவருக்கும் ஒரு கடிதம் எழுதுவித்தார். இரு கடிதங்களிலும் ஐயரவர்களின் கையொப்பம் உள்ளது.

உ
சிவமயம்

சென்னை
25 - 10 - 29

ஐயா,

உபய க்ஷேமோபரி.

21-ஆம் தேதி அனுப்பிய கடிதம் வந்தது.

சி. ஜகந்நாதன் வேலூருக்குப் போயிருப்பதும், மற்ற விவரங்களும் தெரிந்துகொண்டேன். இதற்குள் திரும்பி வந்திருக்கலாமென்று எண்ணுகிறேன். கடிதத்தில் கண்டபடி அவனைத் தீபாவளிக்குப் பிறகே இவ்விடத்திற்கு அனுப்பலாம்.

கடிதத்தில் கண்ட மற்ற விஷயங்களையும் கவனித்தேன். இவ்விடம் வந்த பிறகு யோசித்துக்கொண்டு வேண்டிய ஏற்பாடு செய்கிறேன். இதனுடன்

வைத்திருக்கும் கடிதத்தை அவனிடம் கொடுக்க விரும்பு கிறேன்.

இங்ஙனம்
அன்பன்
**வே. சாமிநாதன்.**

(அக்கடிதத்தோடு இவருக்கு எழுதி வைத்திருந்த கடிதம்)

உ சென்னை
சிவமயம் 25 - 10 - 29

பெற்றோர்கள் சொல்கிறபடி தீபாவளிக்கு இருந்து விட்டே வரலாம். தேக ஸ்திதியை ஜாக்கிரதையாகக் கவனித்துக்கொள்க. இதனுடன் மணியார்டரில் அனுப்பி யிருக்கும் ரூபாய் பத்தையும் தீபாவளிக்காக உபயோகித்துக் கொள்க. 'தக்கயாகப் பரணி' அகராதி நடந்து வருகிறது. 'ச'கர வர்க்கம் பூர்த்தியாகிறது. புறப்பட்டு வரும் காலத்தை முன்னதாகத் தெரிவிக்க.

இங்ஙனம்
அன்பன்
**வே. சாமிநாதன்.**

x x x

இவர் வெளியூர்களுக்கு எல்லாம் போய்விட்டு, தீபாவளியையொட்டித் தம் ஊருக்குத் திரும்பினார். தமக்கு வந்திருந்த கடிதங்களைப் பார்த்தார். தீபாவளியையொட்டித் தம் ஊருக்குத் திரும்பினார். தமக்கு வந்திருந்த கடிதங்களைப் பார்த்தார். தீபாவளிக்குப் பிறகு ஐயரவர்களுக்கு 2 - 11 - 29-இல் இவர் ஒரு கடிதம் எழுதினார்.

உ மோகனூர்,
முருகன் துணை 2 - 11 - 29

திருவடிக் கமலங்களில் அடியேன் ஜகந்நாதன் அனேக சாஷ்டாங்க நமஸ்காரம்.

உபய க்ஷேமோபரி.

இதற்குமுன் அடியேன் எழுதிய கார்டு கிடைத்திருக்குமென நம்புகிறேன். அவ்விடத்து ஆசீர்வாதத்தினால் தீபாவளி இனிதே நிறைவேறியது. காலந் தாழ்க்காது விரைவில் சென்னை மீளுங் கருத்துடையேனாயினும் சில குடும்பத் தொல்லைகள் அச்செயலைத் தகைந்தன. நிற்க...

நேற்று (1 - 11 - 29) பிற்பகலில் முருகன் திருவருளால் என்னுடைய இரண்டாம் தங்கை புஷ்பவதியானாள். மாப்பிள்ளை முதலியவர்களின் வருகையை எதிர்நோக்கி ஸ்நான தினம் 6-ஆம் தேதியாக வைத்திருக்கிறார்கள். அப்பொழுது இங்கே அடியேன் இருத்தல் நலமென்று பெற்றோர்கள் விரும்புதலின் அதுகாறும் இருந்துவிட்டு நன்னாள் ஒன்றில் புறப்பட்டுச் சென்னை வந்து சேர எண்ணியிருக்கிறேன். நான் வரும் தினத்தைப் பின்பு விண்ணப்பித்துக்கொள்கின்றேன்.

'தக்கயாகப் பரணி' 'எ' பாரங்கள் வரை வந்திருக்கிறதை அறிந்தேன். தமிழ்ச் சங்க மீட்டிங்கு எப்பொழுது நடைபெறுமோ?

என்னுடைய நமஸ்காரங்களை மகா...ஸ்ரீ. அண்ணா முதலியவர்களுக்கும், என் ஞாபகத்தை நண்பர்களாகிய சுப்பிரமணிய ஐயர், கோதண்டராமையர், சி. சுப்பிரமணியம் முதலியவர்களுக்கும் அறிவிக்கப் பிரார்த்திக்கிறேன்.

## (பாடல்கள்)

**தலையளித்த செந்தமிழ்த்தாய் தாங்கியொலி**
**மழுங்கியபல்**
**விலையளித்த கலைகள் பல மீண்டொளிரச்**
**செய்வித்தான்**
**நிலையளித்தான் மாணவர்க்கு நிலமிசைத்**
**தண்டமிழென்னுங்**
**கலையளித்தா னெனலன்றிக் கழறுவது**
**முளதேயோ.**

அகத்தியனார் பயந்தளித்த அருந்தமிழ்
இந்நாள்மிகுத்த
சகத்தியலின் பயந்தவிர்ந்தே சாருமழ கியாவுமுறத்
தகத்தழுங்கும் பலநூலும் சாமிநா தக்குரவன்
தொகத்தரையில் விளக்கானேல் தூத்தமிழின்
பெருமையெங்கே?
நாமிநாள் நற்றவஞ்செய் நாட்பயனாற் பூதலத்தே
சாமிநா தக்குரவன் சார்ந்திலனேல் — ஆமிந்நாள்
எட்டுத் தொகையெங்கே ஏய்கா வியங்களெங்கே?

இங்ஙனம்
திருவடித் தொண்டன்
ஜகந்நாதன்.*

இக்கடிதத்திற்குப் பதிலாக அயலூர் போய்வந்த தம் சிரமத்தைக்கூடப் பாராமல் ஸ்ரீமத் ஐயர் தம் கைப்பட இவருக்கு 8-11-29-இல் எழுதிய கடிதம் வருமாறு :

உ
சிவமயம்

மகாமகோபாத்யாய
வி. சாமிநாதையர்,
சென்னை.

'தியாகராஜ விலாஸ்'
திருவேட்டீசுவரன்பேட்டை
8-11-1929
மணி 4 - 30

செல்வச் சிரஞ்சீவி ஜகந்நாத ஐயர்க்கு எல்லா மங்களங்களும் உண்டாகுக.

உபயகுசலோபரி

தாம் இந்த மீ 2-ஆம் தேதி எழுதிய கடிதமும், அதற்கு முன்பு எழுதியதும் கிடைத்தன. பார்த்து எல்லாம்

---

*தேசத்தொண்டன் என்பதுபோல அந்தத் தமிழ்த் தெய்வத்தின் திருவடித் தொண்டனாகத் தம்மை ஆக்கிக் கொண்ட இவர் பாடிய பாடல்களே இவை.

தெரிந்துகொண்டேன். ஸந்தோஷமுமடைந்தேன். செய்யுட்கள் நன்றாக இருக்கின்றன. அவற்றை என் விஷயமாக எழுதியிருப்பதுதான் ஒரு குறை. நிற்க...

நான் அயலூர் போயிருந்தமையால் உடனே விடையனுப்பக் கூடவில்லை. சிரஞ்சீவி கல்யாணசுந்தரம் எழுதிய கடிதம் கிடைத்திருக்குமே! அதிற் கண்டபடி தாம் தாமதித்து வரக்கூடுமானால் 'குறுந்தொகை'யைத் தபால் மூலம் இவ்விடத்திற்கு அனுப்பிவிடுக. உரியவர்கள் கேட்கிறார்களாம். வேறு பிரதியொன்று விரைவில் அனுப்பும்படி ஒரு நண்பரிடம் சொன்னேன். சில தினத்தில் வந்துவிடும்.

மாயூரம் கடைமுக ஸ்நானத்திற்கு முன்னதாகவே வரும்வண்ணம் ஆதீனகர்த்தரவர்கள் கட்டளையிட்டமையால் சனிக்கிழமை மாலை வண்டியிற் புறப்பட்டு மாயூரம் செல்ல உத்தேசித்திருக்கிறேன். டிக்கட்டு வாங்கியாயிற்று. ஸ்நானத்திலும், ஸ்தல வாஸத்திலும் மிகுந்த ஆசையே.

கார்த்திகை மீ முதலில் அங்கிருந்து இங்கு வருவேன். ஆதலால் தாம் தந்தையாரவர்கள் விருப்பின்படி இருக்க வேண்டியளவு அங்கேயிருந்துவிட்டு அப்பால் இவ்விடத்திற்கே வந்துவிடலாம்; அதற்குள் வருவதாக இருந்தால் மாயூரத்திற்கே வந்துவிடலாம். பெரியவர்கள் சொல்கிறபடி செய்க. ஸ்ரீமான் ஐராவத உடையாரவர்களைப் பார்த்ததுண்டா? பரமஹம்ஸ ராமசந்திர யதீந்திரர்களைத் தரிசித்திருக்கக் கூடுமே!

தேக ஸ்திதி சௌகர்யமாக இருக்கிறதா? நிற்க, அகராதியில் ருஉ-ஆம் பாரம் பதிப்பிக்க உத்தரவு கொடுத்தாயிற்று. தாமதத்திற்குக் காரணம் அச்சாபீஸே.

கல்யாணசுந்தரத்தின் விலாஸத்திற்கே 'குறுந்தொகை'யை ரிஜிஸ்தர் செய்து அனுப்புவதுடன் அவனுக்கே கடிதமும் எழுதுக. நெடுந்தொகையைத் தந்தையாரவர்களுக்குத் தாம் இங்கு வந்தவுடன் அவன் அனுப்புதல்

கூடும். பிற பின் எழுதுவதாக இருக்கும். தமிழ்ச் சங்க மீட்டிங்கைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை. எல்லோருக்கும் ஞாபகம் சொன்னேன்.

இங்ஙனம்
அன்பன்
**வே. சாமிநாதன்.**

x x x

இவர் தாம் எடுத்து வந்திருந்த 'குறுந்தொகை'ப் பிரதியை ரிஜிஸ்தர் தபாலில் ஸ்ரீமத் ஐயரின் குமாரர் கல்யாணசுந்தரமையருக்கு அனுப்பினார். ஒரு கடிதமும் எழுதினார் :

அவரும் இவருக்குக் 'குறுந்தொகை' வந்து சேர்ந்தது என்றும், "ஸ்ரீமத் ஐயர் அடுத்த ஞாயிற்றுக்கிழமை முடிய மாயூரத்தில் இருப்பார்கள். அதற்குள் புறப்படுவதானால் அவர்களை மாயூரத்தில் பார்க்கலாம். அப்புறம் புறப்படுவதானால் நேரே சென்னை வந்துவிடலாம்" எனக் கடிதம் (13-11-29இல்) எழுதினார்.

இவர் 13-11-29-இல் மாயூரம் விலாசத்திற்கு ஸ்ரீமத் ஐயருக்கு ஒரு கடிதம் எழுதினார் :

மாயூரத்திலிருந்து ஸ்ரீமத் ஐயர் தம் கைப்பட இவருக்கு 15-11-29-இல் எழுதிய கடிதம் வருமாறு :

உ
சிவமயம்

மாயூரம்
15-11-1929

அநேக ஆசீர்வாதம்
உபய க்ஷேமோபரி

தாம் 13-உ எழுதிய கடிதம் இதோ வரப்பெற்று எல்லாம் தெரிந்துகொண்டேன். ஸந்தோஷமே.

இங்கே வந்துவிடக்கூடுமென்று ஒவ்வொரு வண்டியையும் எதிர்பார்த்துக்கொண்டே யிருந்தேன்.

நெடுந்தொகையைத் தந்தையாரவர்களுக்குத் குறித்த காலத்தில் அனுப்புதற்குச் சி. கல்யாணசுந்தரம் ஸித்தமாக இருக்கிறான். சென்னை வந்தபின் ஸௌகரியம்போல அனுப்பலாம். தந்தையாரவர்களுக்குச் சொல்லுக.

அவ்விடத்துக் காரியங்களை ஒழுங்காக முடித்துக் கொண்டே 21-உ க்குமேல் சென்னைக்கு வரலாம்.

முதற்பா இரண்டையும் பார்த்துச் சிலர் மகிழ்ந் தார்கள். வழக்கம் போலேதான் நான் எழுதுவேன்.

இங்கே உத்ஸவாதிகள் மிகச் சிறப்பாக நடை பெற்றன. இன்று ஸ்ரீ மாயூரநாதர் தீர்த்தங் கொடுக்கப் போகிறார். நானும் இதோ ஆடியுய்தற்குச் செல்லப் போகிறேன். அருகில் தாம் இல்லாமலிருப்பது ஏதோ எனக்கு ஸ்வாதீனத்தவரை விட்ட குறை உண்டுபண்ணு கிறது. வேறு ஒரு குறைவுமில்லை. தலைவர்கள் மிகப் பிரீதியாக நடத்துகிறார்கள்.

இதனுடன் பரமபிதா, அன்னைகளின் பிரஸாதத்தை யனுப்பியிருக்கிறேன். இரு முதுகுரவர்களுக்கும், பிறர்க்கும் கொடுத்துத் தாமும் தரித்துக்கொண்டு மகிழ்க.

தாம் சென்னைக்குப் புறப்பட்டு வரும் காலத்தினை, சி. கல்யாண சுந்தரத்திற்கு எழுதி விடுக.

நான் இங்கிருந்து புறப்படுங்காலத்தைப் பின்பு எழுதுவேன்.

இங்ஙனம்
அன்பன்
**வே. சாமிநாதன்**

x x x

இவருடைய ஆசிரியப்பிரான் ஸ்ரீமத் ஐயரது ஒவ்வொரு கடிதமும் இவர்பால் அவர் கொண்டிருந்த பெரு

மதிப்பையும், பேரன்பையும் புலப்படுத்துவதாக இருக்கிறது.

## புத்தக இரவல்பற்றி ஆசான் அறிவுரை

இவர் சென்னைக்குத் திரும்பி வந்தவுடன், "படிக்கிற காலத்தில் சொற்பொழிவு ஆற்றப் போவதில், கவிதை கட்டுரை எழுதுவதில் அளவுக்கு அதிகமாக அதே நினைவில் செயல்படுவது எல்லாம் கூடாது'' என ஸ்ரீமத் ஐயர் நேரிடையாகச் சொல்லவில்லை. எதையும் பிறர் மனம் புண்படும்படி சொல்வது அவரது இயல்பும் அன்று.

ஸ்ரீமத் ஐயரிடம் சிலபேர் வருவார்களாம். போகிற போது புத்தகம் எதையாவது எடுத்துப் போய்விடுவார் களாம். எடுத்துக்கொண்டு போனதைத் திருப்பியும் கொண்டு வந்து வைக்கமாட்டார்களாம்.

ஆகவே, தம் வீட்டிற்கு வருபவர்களிடம், "இங்குள்ள நூல்களை எடுத்துப் போய்விடாதீர்கள்'' என நேரிடை யாகச் சொல்வதற்குப் பதிலாக மறைமுகமாக ஒரு கதையைச் சொல்வாராம்.

"கிராமத்திலிருந்து ஒருவர் வந்தார். அந்த வீட்டுக்காரர் தினத்தாளை மூக்குக் கண்ணாடி போட்டுக் கொண்டு படிப்பதைப் பார்த்தார். உடனே இவரும் கடைக்குப் போய் ஒரு மூக்குக் கண்ணாடியை வாங்கிப் போட்டுக்கொண்டார். படிக்க, தினத்தாளை எடுத்துப் பார்த்தார். படிக்க முடியவில்லை.

" 'என்ன ஐயா இது! அவர் மூக்குக் கண்ணாடியைப் போட்டுக் கொண்டு படிக்கிறார். என்னால் படிக்க முடிய வில்லை' எனக் கடைக்காரரிடம் சண்டைக்குப் போனாராம்.

" 'ஐயா, உமக்கு ஏற்கனவே படிக்கத் தெரியுமா?' என்று கடைக்காரர் கேட்டார். வந்தவர், 'தெரியாது' என்றார்.

"கடைக்காரர் சிரித்துக்கொண்டே, 'படிக்கத் தெரியாது என்றால் மூக்குக் கண்ணாடி போட்டுக் கொண்டாலும் உம்மால் படிக்க முடியாது' என்றார்."

ஸ்ரீமத் ஐயர், இந்த கதையைச்* சொல்லி இவர்களைச் சிரிக்க வைப்பாராம்.

ஆயினும் இதன் உள்ளுரையாக, "படிக்கக் கற்றுக் கொள்ளாமல் நூல்களை எடுத்துக்கொண்டு போய் வைத்துக்கொள்வதால் உங்களுக்கு அது பயன்படப் போவதில்லை" என்கிற கருத்து இவர்களுக்குத் தெளிவாகப் புலப்படுமாம்.

**ஆசானிடம் கேட்டவை**

அதுபோல இவருக்கு நன்னூல், அகப்புற இலக்கண நூல்களைப் பாடம் சொல்லத் தொடங்கிய ஸ்ரீமத் ஐயர் ஒரு நாள் சில அரிய உபதேச மொழிகளை வழங்கினார். அதையும் தம் ஆசிரியப்பிரான் 'பிள்ளையவர்களது வாழ்க்கை' வரலாற்றைச் சொல்வாரைப் போலச் சொன்னார்.

x x x

சிலர் இளமையிலேயே இயல்பாகக் கவி புனைகிறார்கள். சிலர் பேசுகிறார்கள். சிலர் பாடுகிறார்கள். இவையெல்லாம் சரஸ்வதி கடாட்சத்தால் அமையக் கூடும். அதைக்கொண்டே தம்மைப் பெரிதும் வியந்துகொண்டு இருந்துவிடுபவர்கள் வாழ்க்கையில் சோபித்தது இல்லை. தம்மிடத்து அமைந்துள்ள ஆற்றல் முழு வளர்ச்சி பெற அந்த அந்தத் துறையில் வல்லுநர்களாக உள்ளவர்களை அணுகிப் பாடம் கேட்க வேண்டும். படிக்கவேண்டிய நூல்களையெல்லாம் படித்துத் தெரிந்துகொள்வதில் ஊக்கம் உடையவர்களாக இருக்க வேண்டும்.

---

* கி.வா.ஜ. சொன்னது.

கவிஞர் கோமான் பிள்ளையவர்கள் தம் இளமையிலேயே சுவையான பல தனிப் பாடல்களைப் பாடியிருக்கிறார். அற்புதமான பல அந்தாதி நூல்களை இயற்றிப் பலரது பாராட்டுதலையும் பெற்றிருக்கிறார். என்றாலும், அந்தப் புலவர்சிகாமணியின் உள்ளம் சென்னைக்கு வந்து பல தமிழறிஞர்களிடம் பாடம் கேட்க விழைந்தது. சென்னைக்கு வந்து தங்கிப் படிக்க அவரிடம் பணவசதி இல்லை.

**மேலும் ஆசான் கண்ட பழைய அநுபவங்கள் பற்றி**

அந்தச் சமயம் அவரை மிகவும் ஆதரித்து வந்த செல்வர் லட்சுமணப் பிள்ளை என்பவரது குடும்ப வழக்கு ஒன்று சென்னையில் நடந்தது. "எனக்காக உங்களால் சென்னைக்குப் போய்வர முடியுமா?" என அவர் பிள்ளையவர்களிடம் கேட்டார்.

இதுதான் சந்தர்ப்பம் என்பதாகப் பிள்ளையவர்களும், "நானே சென்னை போகிறேன். அங்கே உங்கள் காரியத்தை ஜாக்கிரதையாகக் கவனித்துக்கொள்வேன். அதோடு நானும் சென்னையிலுள்ள தமிழறிஞர்கள் சிலரிடம் பழகிப் பாடம் கேட்டுப் பயனடைவேன்" என வெளிப்படையாகச் சொல்லிச் சென்னை வந்தார்.

அப்போது புலவர் திருவம்பலத்தின்னமுதம் பிள்ளை மயிலாப்பூரில் இருந்தார். அவரது வீட்டிற்குப் போகும் போது கபாலீசுவரர் கோவிலின் வழியாகத்தான் செல்ல வேண்டும். சுவாமி தரிசனம் செய்து கொள்வதில் கவிஞர் கோமானுக்கு விருப்பம் அதிகம். 'திருவாசகம்,' 'திருச்சிற்றம்பலக்கோவை' போன்ற சைவ நூல்களைத்தான் திருவம்பலத்தின்னமுதம் பிள்ளையவர்களிடம் பாடம் கேட்டார்.

என்றாலும், பாடம் கேட்கப் போகும்போது கோவிலுக்குள் சாமி தரிசனம் செய்ய நுழைந்தால் நேரமாகிவிடுமே என்கிற கவலையில் சந்நிதிக்கு நேரே

வீதியில் நின்றபடியே இறைவனை வணங்கிவிட்டுப் போவாராம்.

இப்படி ஒருபோது இவரிடம் பாடம் கேட்பது; மற்றொரு போது காஞ்சீபுரம் மகாவித்துவான் சபாபதி முதலியாரின் வீடு சென்று அவரிடம் 'கந்தபுராணம்,' 'பெரியபுராணம்' போன்ற சைவ நூல்கள், பிரபந்தங்களைப் பாடம் கேட்பது, இரவு திருவேங்கடாசல முதலியாரிடம் வைணவக் காப்பியங்களைப் பாடம் கேட்பது என்று சென்னையில் தங்கியிருந்த ஒவ்வொரு நாளையும் அவரவர்களுக்கு வேண்டிய காரியங்களையும் செய்து கொடுத்துத் தாமும் பயனடைந்தார் பிள்ளையவர்கள்.

காரணம், காலத்தின் அருமையை உணர்ந்தவர் பிள்ளைவர்கள். அரிதின் வாய்க்கும் சந்தர்ப்பத்தை நழுவ விடுதல் கூடாது என்ற சித்தமுடையவர். இலக்கண இலக்கிய நூல்கள் பலவற்றை அவரே இடைவிடாமல் பயின்று வந்தார். ஆயினும், ஒவ்வொரு நூலையும், உரையையும் பரம்பரைக் கேள்வியினால் அறிந்து கொண்டவர்களிடத்துக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆர்வம் உடையவராகவே இருந்தார்.

கீழ்வேளூர்ச் சுப்பிரமணிய தேசிகரிடம் பாடம் கேட்க விரும்பியபோது, அவருடன் இருந்தவர் சொன்னாராம்:

"பாடம் கேட்டாலும், கேட்காவிட்டாலும் குறைந்த பட்சம் ஆறு மாதத்திற்குக் குறையாமல் மாதம் ரூ. 20 வீதம் அவரது செலவிற்குக் கொடுக்க வேண்டும். அதைத் தவிர முடிவில் தக்க சம்மானம் செய்ய வேண்டும். அவரது கைப்புத்தகத்தில் 'மாணவனாக இருந்து பாடம் கேட்டேன்' என்பதற்குப் பெயரிட்டுத் தர வேண்டும்."

அப்படியே செய்வதாகப் பிள்ளையவர்கள் ஒப்புக் கொண்டார்.

கவிஞர் சிகாமணி பிள்ளையவர்களிடம், அப்போது பணம் இல்லை. காதில் கடுக்கன் ஜோடிதான் இருந்தது.

அந்தக் கடுக்கன் ஜோடியும், புலவர் பெருமான் பிள்ளை யவர்கள் 'காந்திமதி பிள்ளைத் தமிழ்' இயற்றி, அரங் கேற்றிய காலத்து அன்பர்களால் அவருக்கு வாங்கியளிக்கப் பெற்றதாகும்.

கீழ்வேளூர்ச் சுப்பிரமணிய தேசிகரை வரவழைத்து அவரிடம் 'இலக்கண விளக்கம்,' 'யாப்பருங்கலக்காரிகை,' 'நன்னூல் விருத்தியுரை,' 'திருக்குறள் - பரிமேலழகர் உரை' போன்றவற்றைப் பாடம் கேட்க அந்தக் கடுக்கன் ஜோடியை விற்றுப் பணமாக்கிக் கொடுத்தார். தேசிகரது கைப்புத்தகத்தில் அவருடைய மாணவர்கள் பெயர் வரிசையில் தம் பெயரையும் எழுதிக் கையொப்பமிட்டுக் கொடுத்தார், பிள்ளையவர்கள்.

இவ்வளவு ஏன்? 'தமிழ் நூல்களில் பழக்கமுள்ள ஒருவர் ஏதோ வாழ்க்கையில் ஏற்பட்ட வெறுப்பினால் பரதேசியானார். அவர் அப்போதும் தாம் பயின்ற தமிழ் நூல்களிடத்து வெறுப்படையாமல் தம்முடைய சுவடி களைத் தம்மிடமே ஒரு துணியில் சுற்றி வைத்துக்கொண்டு திரிந்தார். யாரையும் மதிப்பதில்லை; எவரையும் தம்மிடம் பேச நெருங்க விட்டதில்லை. கஞ்சா அடித்து விட்டு எங்கேனும் படுத்துக் கிடப்பார். பசியெடுத்தபோது எவர் வீட்டிலாவது அன்னப்பிட்சை எடுத்து உண்பார்.

அந்தப் பரதேசி 'தண்டியலங்கார'த்தில் அதிகப் பயிற்சியுடையவர் எனத் தெரிந்துகொண்ட புலவர் பெருமான் பிள்ளையவர்கள் சில காலம் அந்தப் பரதேசி யின் பின்னாலேயே சுற்றியிருக்கிறார். அவர் பிட்சை எடுக்கப் போகும்போது அவருடன் கூடவே போயிருக் கிறார்; அவருக்கு வேண்டிய கஞ்சாவை வாங்கிக் கொடுத்து அவரது அன்பையும் பெற்று, அவரிடம் தண்டியலங்காரப் பாடம் கேட்டார். அவருடைய

கவடியை வாங்கித் தாமும் ஒரு பிரதி எடுத்துக் கொண்டார்.

இப்படி அவரவர்கள் விருப்பப்படி ஒழுகியேனும், பொருள் உதவி செய்தேனும் பிறரிடம் பல நூல்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ள மகாவித்துவான் பிள்ளையவர்கள் கொண்டிருந்த ஆர்வம், "புராணப் பிரசங்கம் செய்ய வேண்டும், கவிதை எழுத வேண்டும்" என்கிற அவரது இயல்பான ஆர்வத்தையும்விட அதிகமாக இருந்தது.

இப்படி, 'இன்று அறிந்த விஷயங்கள்' என்ற தலைப்பில் ஸ்ரீமத் ஐயரிடமிருந்து பிள்ளையவர்களைப் பற்றிய செய்திகளை அறிந்தவுடன் இவரே சிலவற்றைத் தம் நாட்குறிப்பில் எழுதினார்.

சென்னையில் தாம் தனியறையில் இருந்துவருவதால் இரவிலும் பகலிலும் அதிக நேரம் ஸ்ரீமத் ஐயர் பாடம் சொல்லுகிற நூல்களை நன்கு பயின்றார். சொற்பொழிவு ஆற்ற வேண்டும், கதை எழுத வேண்டும் என்கிற தம் சொந்த விருப்புக்கு ஆசிரியருடன் இருக்கும் காலத்தில் இனி இடமளிப்பதில்லை எனவும் இவர் உறுதி பூண்டார்.

x x x

பிற்காலத்திலும், கதை கவிதை எழுதும் ஆற்றலும், பேசும் திறனும் உடைய இளைஞர்கள் தம்மைப் பார்க்க வரும்போது, "நீங்கள் என்ன படிக்கிறீர்கள்?" என்று கேட்டு, அவரவர் விருப்பு, சமய உணர்வுக்கு ஏற்ப, "இன்ன இன்ன நூல்களைப் படியுங்களேன்! படித்துக் கொண்டே இருக்க வேண்டும்; எழுத்தாளராக விரும்புகிறவர்கள் நண்பர்களுக்காவது அடிக்கடி கடிதம் எழுதிப் பழகிக்கொண்டே இருக்க வேண்டும்" என இவர் அறிவுரை வழங்குவது உண்டு.

x x x

இவருடைய ஆசிரியப்பிரானும் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் 'சமஸ்யை' கொடுத்து இவரைப் பாடல் எழுதச் சொன்னார். தம் ஆராய்ச்சிப் பணியினால் உண்டாகும் அலுப்பைப் போக்கிக்கொள்ள, எப்போதாவது சில இடங்களுக்குப் பேசப் போகும்போது, இவரையும் தம்முடன் அழைத்துச் சென்று பேசச் சொன்னார்.

x x x

**மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு 'செந்தமிழ்' பற்றி:**

மதுரைத் தமிழ்ச் சங்கச் செயலாளராகத் திருவாளர் டி. ஸி. சீனிவாசையங்கார் இருந்தார். அவரை டி. ஸி., என்றே குறிப்பது வழக்கம். அவருக்கு ஸ்ரீமத் ஐயரிடத்தில் மிக்க ஈடுபாடு உண்டு.

ஒரு முறை டி. ஸி., தம் நண்பர்களுடன் சென்னை வந்திருந்தபோது 'தியாகராஜ விலாசம்' வந்திருந்தார். அப்போது அவருடன் பழக அன்பர் கி.வா.ஜ-வுக்கு வாய்ப்புக் கிடைத்தது.

ஸ்ரீமத் ஐயரின் கட்டளைப்படி இவர் வந்தவருக்கு ஏட்டுச் சுவடிகள், கையெழுத்துப் பிரதிகள் ஆகியவற்றை ஒவ்வொன்றாக எடுத்துக் காட்டி விளக்கினார்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்தவர் ராமநாதபுரம் பாண்டித்துரைத் தேவர் ஆவர். அவர் பல தமிழ் நூல்களை வெளியிட்டதோடு, 'செந்தமிழ்' என்னும் இலக்கியப் பத்திரிகையையும் வெளியிட்டு வந்தார்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பாக வெளி வந்துகொண்டிருந்த அந்தச் 'செந்தமிழ்' மாதப் பத்திரிகையில் வெளியிட, 'குருபரம்பரா' கையெழுத்துப் பிரதியை, தம் குறிப்புகளுடன் ஸ்ரீமத் ஐயர் அப்போது டி. ஸி., அவர்களிடம் கொடுத்தார்

மதுரைத் தமிழ்ச் சங்க ஆண்டு விழாவுக்கு வருமாறு ஸ்ரீமத் ஐயரைக் கேட்டுக்கொண்டார், டி. ஸி., அவர்கள். இவரையும் ஸ்ரீமத் ஐயருடன் வரும்படி அழைத்தார்.

8 - 12 - 1929 அன்று மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் 28 - ஆம் ஆண்டு நிறைவு விழா நடைபெற்றது. அதற்கு ஸ்ரீமத் ஐயருடன் இவரும் சென்றிருந்தார்.

கனம் நார்மன் எட்வர்டு மார்ஷ்பாங்க்ஸ் என்கிற ஆங்கிலேயர் அப்போது சென்னை மாநிலக் கவர்னராக இருந்தார். ஓரளவு தமிழ் தெரிந்தவர். அவர், முதல் நாள் விழாவுக்குத் தலைமை ஏற்றார்.

கவர்னரை வாழ்த்தி ஒரு பாடல் பாடும்படி டி. வி., அவர்கள் இவரிடம் கேட்டுக்கொண்டார். அவர் விரும்பிய படியே சந்தப் பாட்டாக இரண்டு வாழ்த்துப் பாக்களை இவர் பாடியதுடன் அந்த வரவேற்புப் பத்திரத்தை விழாத் துவக்கத்தில் இவரே வாசித்தளித்தார்.

அடுத்து, சேது சம்ஸ்தான ஆஸ்தான வித்துவான் ரா. ராகவையங்கார் வரவேற்புரை நிகழ்த்தினார்.

குட்டையும் நெட்டையும் இல்லாத உயரம்; பருமனும் ஒல்லியும் இல்லாத வடிவம்; சிவப்பான திருமேனி; காதில் கடுக்கன்; திருமேனியில் சட்டை; தலையில் சால்வையையே தலைப்பாகையாகக் கட்டிய கோலத்தோடு—கையில் குறிப்பு ஏதும் இல்லாமல், அருவிபோல வாய்மொழியாகப் பேசிய அவரது பேச்சில் இவர் சொக்கிப் போனார்.

அவரோ தமிழில் கரையைக் கண்ட புலமையை உடையவர். சோழப் பெருமன்னர்களாகிய விக்கிரம சோழன், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் ராஜராஜன் என்ற மூவருடைய அவைக்களப் புலவராகவும் ஒட்டக்கூத்தர் விளங்கினார்; 'மூவருலா', 'தக்கயாகப் பரணி' போன்ற பல நூல்கள் ஒட்டக்கூத்தரால் எழுதப்பட்டவை ஆகும்.

அதுபோலவே ரா. ராகவையங்கார் சேது சம்ஸ்தானத்தில் பாஸ்கர சேதுபதி, ராஜராஜேசுவர சேதுபதி, நாகநாத சேதுபதி என்ற மூன்று மன்னர்களின் பேரவையையும் அலங்கரித்த ஆஸ்தான மகாவித்துவான் ஆவார். ராஜராஜேசுவர சேதுபதியின்மேல், 'நாணிக் கண்

புதைத்தல்' என்ற துறையில் 400 பாடல்கள் அமைந்த ஒருதுறைக் கோவையைப் பாடியிருக்கிறார்.

தமிழ்ச் சங்கத்தின்மூலம் வெளியான 'செந்தமிழ்'ப் பத்திரிகைக்கு அவர் ஆசிரியராகவும் இருந்தார். அவரை யாவரும் 'பெரிய ராகவையங்கார்' என்றே சொல்வார்கள். தமிழ்ப் பேரகராதி அலுவலகத்தில் பணியாற்றிய மு. ராகவையங்காரைச் சின்ன ராகவையங்கார் என்பார்கள். இருவரும் உறவினர்கள்.

பெரிய ராகவையங்காருக்கு ஸ்ரீமத் ஐயரிடத்தில் அளவிடற்கரிய மதிப்பு உண்டு. அதுபோலவே ஸ்ரீமத் ஐயரும் அவரிடத்து மதிப்பு வைத்திருந்தார்.

"என் ஆசிரியர் பெருமானைத்தான் மகாவித்துவான் என்று கூறி மகிழ்வேன். இன்றுமுதல் இவரையும் மகாவித்துவான் என்று சொல்லி இன்புறுவேன்" என ஸ்ரீமத் ஐயர் ஒரு மாபெரும் சபையில்* சொன்னதிலிருந்து அவரை யாவரும் மகாவித்துவான் ராகவையங்கார் என்றே வழங்கலாயினர்.

x x x

**'பாரி காதை' பாடிய மகாவித்துவான்பற்றி :**

அன்பர் கி.வா.ஜ. அவரை ஏற்கனவே நன்கு அறிவார். சேது சம்ஸ்தான மன்னர் பட்டாபிஷேகத்திற்கு (16 - 8 - 29) ஸ்ரீமத் ஐயருடன் இவர் முகவை போயிருந்தார். அப்போது பெரிய ராகவையங்காரின் வீட்டிலே தான் தங்கினார்கள். அவர் வெண்பாக்களாலான 'பாரி காதை' என்ற நூலை இயற்றியிருந்தார். ஸ்ரீமத் ஐயர் அதைக் கேட்க வேண்டுமென்பது அவர் விருப்பம்.

முகவையில் இவர்கள் தங்கிய இரண்டு மூன்று நாட்களுக்குள் இவர் 'பாரி காதை'யை ஸ்ரீமத் ஐயருக்கு வாசித்துக் காட்டினார். ராகவையங்காரும் இவர்கள் கூடவே இருந்தார்.

---

* சிவபுரி சன்மார்க்க சபை.

இவர், அந்நூல் முழுவதையும் படித்து வந்த போது, அந்நூலில் சங்கநூற் கருத்துக்கள் வருகையில் சுட்டிக் காட்டியது அவருக்கு மிகவும் மகிழ்ச்சி அளித்தது.

ஒரு நாள் அவர் தாம் பாடியுள்ள 'ஒருதுறைக் கோவை' யிலிருந்து ஒரு பாட்டை இவரிடம் சொன்னார்; 'அம்புருப் பெற்ற (து) அரும்பென நீயும் அறிந்திலையே' என முடியும் பாடல் அது. "இதில் ஏதேனும் நயம் தெரிகிறதா?" என அப்பெரும்புலவர் இவரிடம் கேட்டார்.

ஸ்ரீமத் ஐயரிடும் பிச்சையாகத் தமிழ் கற்றுவரும் இவர் சில கோவைகளை முன்பே பாடம் கேட்டிருந்தார். ஆதலின், அவ்வடியில் அமைந்த நயத்தை உணர்ந்தார்.

"நீ கண்ணை மூடிக்கொண்டாய்; மார்பைக் காட்டுகிறாய்; கண் மலரம்பு போல வருத்தும். அதை மூடிக் கொண்டாயே! உன் நகில்கள் அரும்பின் உருவை உடையன வாக அம்புபோல முனையுடன் இருக்கின்றனவே! அவற்றை மறைக்கவில்லையே!" என்ற பொருள்பட அமைந்த பாடல் அது.

"அம்புருப் பெற்றது அரும்பு" என்ற இடத்தில் அம்பு 'உரு'ப் பெற்றது அரும்பு" என்ற நயம் உள்ளது என இவர் சொன்னவுடன் 'சபாஷ்' என்று இவருடைய முதுகில் தட்டிக் கொடுத்தார், சேது சம்ஸ்தான மகாவித்துவான் அவர்கள்.

* * *

இன்றும் அப்புலவர் பெருமான், கவர்னரது பெயருக்கு ஏற்றபடி 'தானதத்தன தானாந் தனதன' என்ற சந்தக் குழிப்பில் "நார்மன் எட்வர்டு மார்ஷ்பாங்க்ஸ் துரை முகில்" என்று வரும்படியாக இவர் பாடிய பாடலைக் கேட்டவுடன் "சபாஷ்" எனப் பாராட்டினார். எல்லோரும் மகிழ்ந்தார்கள்.

மறு நாள் நடைபெற்ற ஆராய்ச்சிக் கருத்தரங்குக்கு ஸ்ரீமத் ஐயர் தலைமை தாங்கினார். அவரது தலைமையில் புலவர் பெருமக்கள் தங்களது ஆராய்ச்சி உரைகளை

நிகழ்த்துவது என்றால் மிகவும் பெருமையாகக் கருது வார்கள்.

அன்று நடைபெற்ற கருத்தரங்கிலும், ஸ்ரீமத் ஐயர் இவரைப் பேசச் சொன்னார்.

x x x

ஞானசம்பந்தர் சமணர்களைக் கழுவேற்றினார் என்று சில நூல்களில் இருக்கிறது. ஆனால் திருவாலவாயுடையார் திருவிளையாடல் புராணத்தில், வாதத்தில் சமணர்கள் தோற்றவுடன் ஞானசம்பந்தர் அவர்களை, "நாணிலீர்! மன்னன் முன்னர் நல்ல சொல்கிறேன், கண்டீர்; பூணும் வெண்ணீறு பூசும்; போற்றி ஓயஞ்செழுத்தை யோதும்; காணொணா முத்தி இன்பம் காணலாம்" என்றுதான் அருளினார். கழுவில் ஏற்றச் சொல்லவில்லை. சமணர் களில் சிலர் சைவ சமயத்தில் சேர்ந்தார்கள். ஆனால் பலர், வாதத்தில் தோற்றாலும் சபதத்தில் தாங்கள் தோற்கத் தயாராக இல்லை என்று 'வீம்போடு தாமே கழுவேறினார்கள்' என்று வருகிறது.

தக்கயாகப் பரணியிலும் இதே கருத்து உள்ளது. "வாதத்தில் தோற்ற சமணர்களைக் கழுவேற்றுதல் ஆகாது என்று பிள்ளையார் விலக்கி அருள" என்று வருமிடத்தில் சம்பந்தப் பெருமானின் பெருங் கருணைத் திறம் நன்கு புலப்படுகின்றது.

x x x

அதுகாறும் வெளிவராத 'தக்கயாகப் பரணி' நூலை ஸ்ரீமத் ஐயர் ஆராய்ந்து பதிப்பித்துக்கொண்டிருந்தார்; அவரோடு இவரும் அந்நூலைப் படித்து, 'ப்ரூஃப்' பார்த்துக்கொண்டும் இருந்தார்.

எனவே, ஸ்ரீமத் ஐயரின் கட்டளைப்படி அந்தக் கருத்தை வைத்தே, "சம்பந்தர் சமணர்களைக் கழுவேற்றவில்லை. சைவ சமயத்தில் சேருங்கள்' என்றே அருளினார்" என

இவர் மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர்கள் கூட்டத்தில் அரை மணிநேரம் பேசினார்.

ரா. ராகவையங்கார், மு. ராகவையங்கார், மு. ரா. அருணாசலக் கவிராயர் உள்ளிட்ட பல புலவர்களும் இவரது பேச்சுத் திறனைப் பாராட்டினார்கள். ஸ்ரீமத் ஐயரும் மகிழ்ந்தார்.

சங்கத்தார் தமக்கு வழங்கிய 10 ரூபாயில் 9 ரூபாய்க்குச் சங்க வெளியீட்டு நூல்களை இவர் வாங்கிக் கொண்டார். ஸ்ரீமத் ஐயருடன் மதுரையிலிருந்து திருநெல்வேலி போய்விட்டுச் சென்னை வந்தார்.

x x x

**ஆசானிடம் உறுதியான பற்றுக்கு எடுத்துக்காட்டு:**

ஒரு நாள் பெரம்பூரிலிருந்து ஸ்ரீ வாழ்குடை வேங்கடராம சாஸ்திரிகள், ஸ்ரீமத் ஐயரைப் பார்க்க வந்திருந்தார். அவர் ஸ்ரீமத் ஐயரிடம், அவ்வூர் உயர் நிலைப் பள்ளிக்குத் தமிழாசிரியர் ஒருவர் வேண்டுமென்றும், அப்பணிக்குத் தகுதியான ஒருவரைப் பரிந்துரைக்க வேண்டுமென்றும் வேண்டினார்.

இவர், அப்போது இல்லை. இவரது ஞாபகந்தான் ஸ்ரீமத் ஐயருக்கு வந்தது. அந்த வேலையை இவருக்குப் பண்ணி வைத்தாலென்ன என நினைத்தார்.

இவரைப் பிரியவும் அவருக்கு மனம் வரவில்லை. பிற்பகல் முழுவதும் இவரால் தாம் பெற்று வரும் மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் இவரும் ஒரு வேலைக்குப் போய்விட்டால், இழந்துவிடக்கூடுமோ என அஞ்சினார்.

"இவரது நலனையும் கவனிக்க வேண்டுமல்லவா? 'தம்மால் தம் குடும்பத்தாரிக்கு அவர்கள் சிரமநிலையில் உள்ளபோது எதுவும் உதவ முடியவில்லையே!' என்கிற வருத்தம் இவருக்கும் இருக்கக் கூடும். இவரே தம் குடும்பச் சூழ்நிலை காரணமாக, அந்த வேலையை ஏற்க

விரும்பலாம். அந்த வேலையைத் தாம் இவருக்குப் பண்ணி வைக்க விரும்பவில்லை என்கிற குறை பின்னால் வரக் கூடாது'' என்கிற முடிவுக்கு வந்தார் ஸ்ரீமத் ஐயர்.

''என்னிடம் தமிழ்ப்பாடம் கேட்டுக்கொண்டு ஒரு பையன் இருக்கிறான். இந்தப் பதவிக்கு அவன் ஏற்றவனே. எதற்கும் அவனையும் கலந்துகொண்டு அவன் விரும்பினால், தங்களை வந்து பார்க்கச் சொல்கிறேன்'' என ஸ்ரீமத் ஐயர் சொல்லி அவரை அனுப்பிவிட்டார்.

அன்று வெளியிலிருந்து இவர் திரும்பி வரும்போது ஸ்ரீமத் ஐயர் சற்று ஓய்வு எடுத்துக்கொண்டிருந்தார். அவரை எழுப்பாமல், இவர் தம் வழக்கம்போல் 'தக்கயாகப் பரணி' அகராதியை எழுதத் தொடங்கினார். ஸ்ரீமத் ஐயர் உறக்கத்திலிருந்து எழுந்துவிட்டதைக்கூடக் கவனிக்கவில்லை. இவரருகில் அவர் வந்தபோதுதான் இவர் சட்டென்று கவனித்து எழுந்தார்.

''பெரம்பூர் உயர்நிலைப் பள்ளியில் தமிழ்ப் பண்டிதர் வேலை ஒன்று காலியாகிறதாம். உனக்கு அந்தப் பணியைச் செய்து வைக்கலாம் என்று உள்ளேன்'' என ஸ்ரீமத் ஐயர் இவரிடம் சொன்னார். இவரது உளநிலை அப்போது எவ்வாறு இருந்தது என்பதை விளக்குவது, பின்கண்ட பழையதோர் நிகழ்ச்சி:

சிவனடியார்களின் பெருமையைக் கூற வந்த சேக்கிழார் பெருமான், ''கூடும் அன்பினில் கும்பிடலேயன்றி, வீடும் வேண்டா விறலினர்'' என அவர்களது பண்பைச் சொல்வார்.

'இப்படியும் இருப்பார்களா?' என்று இந்தக் காலத்தில் பலருக்குத் தோன்றக் கூடும். காரணம், 'முன்னுக்கு வந்தான்' என்றால் பணத்தை லட்சம் லட்சமாகக் குறுகிய காலத்தில் எப்படி எப்படியோ சம்பாதித்துக்கொள்கிறவனைத்தான் இன்றைய உலகம் மதிக்கிறது.

அந்தக் காலத்தில் திருவாரூர் ஸ்ரீ தியாகராஜப் பெருமான் கோவிலில் ஒரு நட்டுவனார் இருந்தார்.* அவர் எப்போதும் விபூதி, ருத்திராட்சம் தரித்துக்கொண்டே விளங்குவார். தியாகேசனிடம் மிகுந்த பக்தி கொண்டவர்.

சாயங்கால தீபாராதனையைத் 'திருவந்திக்காப்பு' என்பார்கள். திருவந்திக்காப்பின் போது பலவகை வாத்தியங்களை வாசிப்பார்கள். அதில் ஒன்று சுத்த மத்தள வாத்தியம்.

ஸ்ரீ தியாகேசரின் சந்நிதியில் நடைபெறும் திருவந்திக் காப்பைக் கண்டு களிக்க அடியார்கள் ஆவலுடன் காத்திருப் பார்கள். அதைத் தரிசிப்பது மிகவும் விசேஷம். அத்தலத்து இறைவனுக்குத் திருவந்திக்காப்பழகர் என்றே ஒரு திருநாமம் உண்டு.

இந்த நட்டுவனார் திருவந்திக்காப்பின்போது சுத்த மத்தளம் வாசித்து வந்தார்.

ஒரு நாள் திருவந்திக்காப்பு நடைபெறும்போது தஞ்சை மன்னர் வந்திருந்தார். அவரை நட்டுவனார் கவனிக்கவில்லை; ஸ்ரீ தியாகேசர் சந்நிதானத்தில் தம்மை மறந்து சுத்த மத்தளம் வாசித்துக்கொண்டிருந்தார். அவருடைய கண்கள் மூடியிருந்தன. கண்களில் நீர் பெருகி வழிந்துகொண்டிருந்தது.

அவர் தாமாக வாத்தியத்தை நிறுத்தி, கண்ணைத் திறக்கும் வரையில் மன்னரும் அவரருகில் நின்று கொண்டிருந்தார்.

அந்த நட்டுவனார் ஒரு வகையாகத் தம் வாசிப்பைப் பூர்த்தி செய்த பின்பு, ஸ்ரீ தியாகராஜப் பெருமானைக் கும்பிட்டுக்கொண்டே கண்ணைத் திறந்தார்.

அருகில் அரசர் நிற்பதைக் கண்டவுடன் அவருக்கு அச்சம் உண்டாயிற்று. "பயப்படாதே! உனக்கு என்ன வேண்டுமோ கேள்" என்றார் அரசர் பெருமான்.

* ஸ்ரீமத் ஐயரவர்களின் கட்டுரை: "என்ன வேண்டும்?"

அரசருக்கு அவ்வளவு மகிழ்ச்சி! இந்த நட்டுவனார் எதைக் கேட்டாலும் அந்த நேரம் கொடுத்திருப்பார்.

நட்டுவனாரோ "ஸ்ரீதியாகராஜாவின் சந்நிதியில், திருவந்திக்காப்பின்போது நான் சுத்தமத்தளம் வாசிக்கும் தொண்டைத் தொடர்ந்து செய்துவரும்படி கட்டளையிட வேண்டும்" என்றாராம்!

x x x

## ஆசானின் திருவடியில் தொண்டு

இதுபோலத்தான் அன்று இவரும், "அந்த வேலையை வேறு எவருக்கேனும் பண்ணிவையுங்கள். எனக்குத் தங்கள் திருவடியின்கீழ் இருந்துகொண்டு தொண்டு செய்து வர அநுக்கிரகம் பண்ண வேண்டும்" என்று பிரார்த்தித்துக்கொண்டார்.

"அது மிகவும் நல்ல வேலையென்பதால் சொன்னேன். மாதம் 35 ரூபாய் சம்பளம் கிடைக்கும். 60 ரூபாய் வரை வருடத்திற்கு 2 ரூபாய் உயர்ந்து வரும். நீரும் மாதந்தோறும் உமது குடும்பத்திற்குக் கொஞ்சம் பணம் அனுப்பி வைக்கலாம்" என ஸ்ரீமத் ஐயர் திரும்பவும் சொன்னார்.

"எனக்குப் பணத்தில் நோக்கம் இல்லை. என் குடும்ப விஷயங்களைப்பற்றியும் நான் கவலைப்படுவதில்லை. முருகன் திருவருள் யாவையும் கூட்டி வைக்கும்" எனக் கொஞ்சமும் சலனமில்லாமல் இவர் கூறினார்.

ஸ்ரீமத் ஐயர் திரும்பவும், "அந்த வேலையை ஏற்றுக் கொள்ளணும்" எனச் சொன்னவுடன், "நான் இருப்பது இவ்விடத்திற்குப் பாரமாக இருக்குமானால் அவ்வேலையை ஏற்றுக்கொள்கிறேன்" என்று கண்களில் நீர் துளும்ப உரைத்தார் இவர்.

"உம்மைப் பெற நான் பெருந்தவமன்றோ செய்திருக்க வேண்டும்! நீர் எனக்கு எந்தக் காலத்திலும் பாரமேயில்லை. என் ஆயுள் முழுவதும் பின்பும் நீர் என்னுடன் இருப்பதில் எனக்கு மிகவும் மகிழ்ச்சியே.

உம் குடும்பச் சௌகர்யத்திற்காகச் சொன்னேனேயொழிய வேறில்லை'' என்றார் ஸ்ரீமத் ஐயர். பிறகு அந்த வேலைக்குப் போகும்படி அவர் இவரை வற்புறுத்த வில்லை.

இது இவருக்கு ஒரு சிறு சோதனை. இவர் அவ்வேலையைப் பெற மறுத்துவிட்டார்!

x x x

''நெஞ்சிலுள்ள காதல் பெரிது; எனக்குக் காசு பெரிதில்லை'' என்கிற தீவிர பக்தி உணர்ச்சியோடு இவர் ஸ்ரீமத் ஐயரிடம் இருந்து வந்தார்.

அந்தத் தமிழ்த் தெய்வத்திடம் இவர் காட்டிய அன்பும் வெளிப்படுத்திய மரியாதையும் ஸ்ரீமத் ஐயரது குடும்பத்தில் 'இவர் தங்களை அலட்சியப்படுத்துகிறாரோ?' என்னும் ஐயம் கொள்ள இடந்தரும் அளவுக்கு நிலைமை இருப்பதாக ஸ்ரீமத் ஐயருக்குப் பட்டதுபோலும்! உலகியலில் மிக்க அநுபவம் உடையவராயிற்றே! இந்த நிலை வளர்ச்சி பெற அவர் விடுவாரா?

ஜாடையாக இவரிடம், ''இங்கே குடும்பப் பொறுப்பை யெல்லாம் ஏற்றுச் சரிக்கட்டிக்கொண்டு போகிறவர் அண்ணா. எனவே, எதையும் அண்ணா சொல்கிறபடி செய்ய வேண்டும்; அண்ணாவிடம் சொல்லிவிட்டுப் போக வேண்டும்'' என அவ்வப்போது உணர்த்தி வந்தார்.

x x x

**மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் அறிவுரை என்ன?**

ஸ்ரீமத் ஐயர் தம் ஆசானான பிள்ளையவர்களிடம் பாடம் கேட்டு வந்த காலத்தில், அவரிடம் பஞ்சநதம் பிள்ளை என்பவர் தவசிப் பிள்ளையாக இருந்து வந்தார். ஒரு நாள் 'பஞ்சநதம்!'' என்பதாக அவரை ஸ்ரீமத் ஐயர் கூப்பிட்டுவிட்டார்.

பஞ்சநதம் பிள்ளை எதுவும் சொல்லாமல் ஸ்ரீமத் ஐயரை முறைத்துப் பார்த்துவிட்டு உள்ளே சென்றதைப் புலவர் பெருமான் பார்த்துவிட்டார் போலும்! அன்று ஐயரை அழைத்து, "இனி நீர் அவரைப் பஞ்சநதம் பிள்ளை என்று கூப்பிட வேண்டும். இல்லையென்றால், பிள்ளை என்றாவது மரியாதையாக அழைக்க வேண்டும்" என அறிவுரை வழங்கினார்.

ஐயருக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை; அப்போது பிள்ளையவர்கள் சொன்னார்களாம்:

"நானே தண்டத்திற்கு உங்களையெல்லாம் அழைத்து வைத்துக்கொண்டு பாடம் சொல்வதாகப் பஞ்சநதம் பிள்ளை என் காது கேட்கவே முணகுவார். பல காலமாக திருவாவடுதுறை மடத்தில் அவர் தவசிப் பிள்ளையாக இருந்து வருபவர். படிக்கும் மாணவர்களிடத்தில் அவருக்கு ஈடுபாடில்லை. அவரைப் போன்றவர்களிடம் நாம்தான் கொஞ்சம் மரியாதையாகவும், அன்பாகவும் நடந்துகொள்ளும் பாவனையில் பழக வேண்டும். அப்போது அவர்களுக்கும் நம்மிடம் மனத்தாங்கல் ஏற்படாது. அதற்காகத்தான் சொன்னேன். புரிகிறதா?" என்றாராம்.

x x x

### அண்ணா அவர்களின் அறிவுரை

இப்படி ஸ்ரீமத் ஐயர் கவிஞர் கோமானின் வரலாற்றைச் சொல்லி இவரை எழுதுவிக்கையில் இவருக்குத் தமிழ்க் 'காவ்ய பாவம்' மட்டுமல்ல. மனிதர்களின் மனோபாவங்களையும் கூட உணர்த்தி வந்தார்.

அன்று இரவு இவர் தம் ஜாகைக்குக் கிளம்பும்போது ஸ்ரீமத் ஐயர், "நீர் அண்ணாவைப் பார்த்துச் சொல்லிக் கொண்டு போகணும்" என்றார்.

அண்ணாவைப் பார்க்க இவர் உள்ளே சென்றபோது அவர் தம் பெண் சாவித்திரியுடனும், அவருடைய கணவர்

கணபதி ஐயருடனும் தம் மகனின் திருமணத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்.

இவரைப் பார்த்தவுடன், "என்ன வேலை நடக்கிறது?" என்று கேட்டார்.

இவர் பிள்ளையவர்களது சரித்திரம் எழுதப்பட்டு வருவதைச் சொன்னார்.

"ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் முதலியோர்களுடைய சரித்திரங்களையும், பிள்ளையவர்களின் சரித்திரத்திற்கு அங்கமாக எழுத வேண்டுமென்பது ஸ்ரீமத் ஐயரின் விருப்பம். அதனால் முதலில் அவற்றையெல்லாம் காலவரையறையாக நீர் ஒழுங்குபடுத்திக்கொண்டு அவரிடம் சொல்ல வேண்டும்" என்றார் அண்ணா.

"ஆகட்டும்" என இவர் சொன்னபோது டிசம்பர் மாதக் குளிரில் இவரது குரல் மட்டுமல்ல, உடலும் நடுங்கியதைக் கணபதி ஐயர் கவனித்தார் போலும்!

அண்ணா இதைக் கவனிக்கவில்லை. "'தமிழ் விடு தூது'கையெழுத்துப் பிரதியை அச்சகத்திற்கு அனுப்பி விடலாமா?" என்று கேட்டார்.

"இன்னும் கொஞ்சம் எழுத வேண்டியது பாக்கி இருக்கிறது. எழுதியானவுடன் ஸ்ரீமத் ஐயரைக் கேட்டுக்கொண்டு அனுப்பிவிடலாம்" என்று இவர் சொன்னார்,

"சரி; அதைச் சீக்கிரம் எழுதும்" எனச் சொல்லி, அண்ணா, "போய் வாரும்" என விடை கொடுத்தனுப்பி விட்டார்.

மறு நாள் ஸ்ரீமத் ஐயர், "அண்ணாவை நேற்றுப் பார்த்தாயா? என்ன சொன்னார்?" எனக் கேட்டபோது, இவர் அண்ணாவைப் பார்த்ததையும், அவர் சொன்னதையும் தெரிவித்தார்.

ஸ்ரீமத் ஐயர் ஏதும் சொல்லவில்லை. அன்று பிள்ளையவர்களது சரித்திரம் சம்பந்தமான வேலைகளைச் செய்தார்கள்.

ஒரு முறை, எழுதப்பட்டதுவரை படிக்கச் சொன்னார் ஆசான். பிள்ளையவர்களின் சரித்திரத்தை இவர் வாசித்து வருகையில் ஸ்ரீமத் ஐயர் உணர்ச்சி மேலீட்டால் விம்மி விம்மி அழுதுருகினார். தியாகராச செட்டியாரவர்களின் செய்தி வரும்போது அவரிடம் அடங்கா உவகை உண்டாயிற்று.

இந்நூல் வெளிவரின் தமிழுலகத்தில் இதுகாறும் இல்லாத வகையில் இது முதலாவதாகத் திகழும் என்றும், இயன்றவரையில் தெரிந்த விஷயங்களை ஒன்றும் விடாமல் மிக விரிவாக எழுத வேண்டும் என்றும் இவர், ஸ்ரீமத் ஐயரிடம் சொன்னார். ஸ்ரீமத் ஐயரும், "அப்படியே செய்ய வேண்டும்" என ஆமோதித்தார்.

இவர் பிள்ளையவர்களது சரித்திரம் சம்பந்தமாக கால வரையறைகளை ஒழுங்குபடுத்திப் பழைய கடிதங்களில் கண்ட செய்திகளை அவ்வக்காலத்தின் நிகழ்ச்சிகளோடு பதித்துக்கொண்டார். கிடைத்த பழைய பாடல்கள் பலவற்றை அங்கங்கே சேர்த்துக்கொண்டார்.

அத்தகைய மகாபுருஷருடைய - இணையற்ற கவிதா சார்வபௌமருடைய - சந்நிதியில், குருபரம்பரையில் - ஒட்டிக்கொள்ளப் பெற்றோமே என்னும் களி மிகுதியால் அப்பேற்றை அருளிய முருகப்பெருமானை நினைதார்.

x x x

**ஆசானின் உறவினர் காட்டிய அன்பும் அண்ணாவின் பரிவும்**

அன்று வீட்டிற்குக் கிளம்பும்போது அண்ணாவின் மாப்பிள்ளை கணபதி ஐயர் இவரிடம் வந்தார். "பனிக் காலத்தில் இப்படிச் சட்டை போடாமல் இருந்தீர்களானால் முடக்குவாத நோய் வராமல் என்ன செய்யும்? எனக்காகத் தயை செய்து இந்தச் சட்டைகளை இரவு நேரத்திலாவது அணிய வேண்டும்" எனச் சொல்லி இவருக்காகத் தாம் புதிதாக வாங்கி வைத்திருந்த இரண்டு 'ஃப்ளானல்' சட்டைகளை அளித்தார்.

அவரிடமிருந்து இவர் அந்த உதவியை எதிர்பார்க்க வில்லை. தம் ஜாகைக்கு வந்தவுடன், அன்பாக அவர் வாங்கியளித்த சட்டைகளில் ஒன்றை அணிந்தார். கண்களில் நீர் தாரைதாரையாகப் பெருகிற்று.

"முருகா, இதுவும் உன் கருணைச் செயல்தான். பிறர் மதிப்பதற்குத் தக்க தகுதியுடையவனாக நீதான் என்னை ஆக்க வேண்டும். உன்னை என்றும் நான் என் நினைவில் இருத்திக்கொண்டே இருத்தல் வேண்டும். எல்லாம் மறந்து உன்னுடைய தியானத்தில் ஆழ்ந்திருக்கும் நிலையை எனக்கு நீதான் அருள் புரிதல் வேண்டும்" எனப் பிரார்த்தனை செய்துகொண்டார்.

x x x

மறு நாள் பிற்பகலில் அண்ணா இவரைக் கூப்பிட்டு அனுப்பினார். இவர் அவரைப் போய்ப் பார்த்தார்.

அவர் உடனே, "உமக்குப் பணம் தேவைப்பட்டால் என்னிடம் நேரில் கேட்டிருக்கலாமே" என்று சொன்ன போது இவருக்கு என்னவோபோல் ஆகிவிட்டது.

"போன மாதம் என் தாயாரிடமிருந்து பண உதவி கேட்டுக் கடிதம் வந்தவுடன், உங்களிடந்தானே நான் ரூ. 50 கடனாக வாங்கி ஊருக்கு அனுப்பினேன். பணம் வேண்டுமென்றால் நான் உங்களிடம் நேரில் கேட்கத் தயங்கியது இல்லையே!" என இவர் சொன்னார்.

"சரி, சரி. அது இனாமாக இருக்கட்டும் என ஸ்ரீமத் ஐயர் சொல்லிவிட்டார்கள். இதை வைத்துக்கொள்" என இவரிடம் அண்ணா ரூ. 30 கொடுத்தார்.

"மாதந்தோறும் இவ்வாறு கொடுக்கும்படியாக ஸ்ரீமத் ஐயர் என்னிடம் சொல்லிவிட்டார்கள்" எனவும் சொன்னார்.

இவரது குடும்பத்திலுள்ள பொருள் முட்டுப்பாட்டை நீக்க ஸ்ரீமத் ஐயர் அண்ணாவிடம் சொல்லியதை எண்ணி மனம் உருகினார் இவர்.

இவர் எதுவும் பேசாமல் அந்தத் தொகையை வாங்கிக் கொண்டு ஸ்ரீமத் ஐயரிடம் வந்தார். அவரிடம் அந்தப் பணத்தைக் கொடுத்து, "இந்தொகையைப் பெற நான் தகுதி உடையவன் அல்ல" என்றார்.

"உமக்குத் தகுதியில்லையென யார் சொன்னது? உம்முடைய தகுதி இதைவிட இன்னும் அதிகமானதே. பிற இடங்களில் இருந்தால் இதைவிட அதிகமாகக்கூட உம்மால் சம்பாதிக்க முடியும். இனி மாதந்தோறும் நீர் உம் தாயாருக்குக் கொஞ்சம் பணம் அனுப்பிவைக்கச் சௌகர்யமாக இருக்க வேண்டுமென்பதே நம் நோக்கம்" என இவரிடம் ஸ்ரீமத் ஐயர் சொன்னார்.

"பெற்ற தாயாருக்கு உதவுவது என் கடமையே. அதனைப் பிறர்பால் சுமத்துவது அடாது. இவ்விடத்தில் கல்வி பயில எனக்குத் தாங்கள் அநுக்கிரகம் செய்ததே பெரும் பாக்கியமாகும். அதற்குக் கைம்மாறாக நான் தங்களுக்கு என்ன செய்ய முடியும்? எனக்கு இதுவரை எவ்விதக் குறையும் இங்கு இருக்கவில்லை. தங்களிடம் இப்பொழுது சகல சௌகரியங்களோடுதானே இருக்கிறேன்" என இவர் சொன்னார்.

"உமக்கு ஒருவிதக் குறைவும் இருக்கக் கூடாது என்பது தான் நமது எண்ணம். நீர் நடந்துகொள்வது ஒரு சார்பில் நியாயமே. எனினும், உமக்கு உதவி செய்ய நாங்களும் கடமைப்பட்டவர்களே. இந்தப் பணத்தை எடுத்துக் கொள்ளவேண்டும்" என ஸ்ரீமத் ஐயர் வற்புறுத்தினார்.

"பணத்தைப்பற்றிய தொடர்பு எப்பொழுதும் என்னுடைய மனத்திற்குத் துன்பத்தையே தருகிறது. நான் பணத்தைக் குறிக்கோளாகப் பெற்றிருப்பேனானால் இங்கே வந்திருக்கமாட்டேன்" என இவர் விம்மினார்.

"எனக்குத் தெரியும், உம்முடைய அருமை. உம்மைப் போன்றவர்கள் எங்களுக்குக் கிடைப்பது சிரமந்தான்; தவம் செய்துள்ளமையால்தான் உம்மை அடையப்

பெற்றோம்'' என ஸ்ரீமத் ஐயர் சொன்னபோது இவரது மனமும் நெகிழ்ந்தது.

இப்படி ஸ்ரீமத் ஐயருக்கும் இவருக்கும் ஒரு சிறு பேச்சு நடந்தது.

''உம் குறைகளை நீக்குவது என் கடமையாகும். உம் நலனுக்காக வேறு சில ஏற்பாடுகள்கூடச் செய்ய எண்ணி யிருக்கிறேன்'' என ஸ்ரீமத் ஐயர் கூறினார்.

'முருகனது திருவருளால் இந்த அன்புக்கு மாறின்றி நான் நடக்க வேண்டும். அதற்குரிய ஆற்றலை அவன் தவானாக' எனக் காந்தமலையானை நினைந்து இவரது நெஞ்சம் குழைந்தது.

''அப்படியே இருந்தாலும் மாதம் ரூ. 30 மிக அதிகம். ரூ. 15 இருந்தாலே போதும்'' என்றார் இவர்.

அதற்குமேல், ஸ்ரீமத் ஐயர், ''அண்ணாவிடம் போய்ச் சொல்லும். அவர் எப்படிச் சொல்கிறாரோ அப்படிச் செய்ய வேண்டும்'' என்று சொல்லி இவரிடம் பணத்தைத் திருப்பிக் கொடுத்து அனுப்பிவிட்டார்.

× × ×

**அன்பையே வேண்டிய அரும் பண்பு**

இவர் அண்ணாவிடம் வந்து அவர் கொடுத்த 30 ரூபாயைத் திருப்பிக் கொடுத்தார். அவர் ''ஏன்?'' எனக் கேட்டபோது, ''எனக்கு மாதம் 15 ரூபாய் இருந்தால் போதும். ரூ. 30 அதிகம்'' எனச் சொல்லி அவரிடமிருந்து பதினைந்து ரூபாயே பெற்றுக்கொண்டார்.

'பண்டைக் காலத்துப் பயித்தியத்தில் ஒன்று' என்றே இவரை அண்ணா எண்ணியிருக்கக் கூடும்.

இவரோ தம் நாட்குறிப்பில் அன்று எழுதியிருப்பது இதுதான்: ''அன்பின் சுமையைத் தாங்குதல் முடியாதன்றோ? அன்பினால் நிகழும் அனைத்திற்கும் இடையே பொருள்மதிப்பு, கடுகளவேனும் அழுக்கைப் புகுத்தி விடுமன்றோ? முருகன் நம்மைக் காப்பாற்றக் கங்கணம்

கட்டிக்கொண்டிருக்கையில் அறநெறியல்லாத வழியிற் புகுவதெற்றுக்கோ? அவர்கள் அன்பின் அறிகுறியாக இதனையும், இன்னும் பெரிய தொகையையும் வழங்கலாம். அது அவர்களுடைய அன்பைக் காட்டுகிறது. அச்செயலுக்குக் காரணமாய அன்பொன்றுக்கு எழு பிறப்பும் கடப்பாடுடையேனாக வேண்டும். அவ்வாறாக, இத்தொகை என்னால் என்றும் வகிக்க முடியாத—அதற் கெதிரன்பையேனும் செயலையேனும் காட்ட இயலாத—வகையில் என்னாற் பெறத் தக்கதாமோ? பெறுதலும் அறனா? வழங்குவார் வழங்குவவெல்லாம் பெறுபவன் பெறலாமா? அன்புடையார்பால் ஒன்று பெறினும் அதனாற் பெரும் பயன் பலவாம். அவ்வாறாகப் பலவும் வேண்டியது எற்றுக்கு? அந்த அன்பு ஒன்றே வாழ்விறுதி காறும் நல்வாழ்விலுய்க்குமன்றோ?''

இது ஆரம்ப காலத்தில் இவரது உரைநடை எவ்வாறு இருந்துள்ளது என்பதைமட்டுமா எடுத்துக்காட்டுகிறது? அந்த வயதில் இவரிடம் பொதித்து கிடந்த, சலனப்படுத்த முடியாத மனத்திண்மை, ஒருநெறிப்பட்ட மனத்தூய்மை, திட நம்பிக்கை, இறையுணர்வு ஆகிய பல சிறப்பான இயல்புகளையும் அல்லவா உணர்த்துவதாக உள்ளது!

x x x

**ஆசானின் பேரர் திருமணத்தின்போது**

ஸ்ரீமத் ஐயர், இனிமையாகப் பாடுகிறவர்களைக் கண்டால் அவர்களைப் பாடச் சொல்லிக் கேட்பார். கோபாலகிருஷ்ண பாரதியார் பாடல் என்றால் மிகவும் ரசிப்பார். முத்தையா பாகவதர் போன்றவர்களுடைய கதாகாலக்ஷேபம் என்றால் முதல் வரிசையில், கடைசி வரை அமர்ந்திருப்பார். இதுதான் அவரது பொழுது போக்கு.

மாயூரத்தில் அவர் பார்த்து நிச்சயித்த பெண்ணுக்கும், அவருடைய பேரர் சுப்பிரமணியத்திற்கும், ராமாநுஜ

கூடத்தில் 10 - 3 - 30 அன்று திருமணம் நடைபெற்றது. அன்று மாலையில் சாம்பசிவ ஐயர் புல்லாங்குழல் கச்சேரி இருந்தது. ஸ்ரீமத் ஐயர், கச்சேரி முடியும்வரையில் இருந்து கேட்டார்.

இதைத் தவிரத் தம் வீட்டுத் திருமணம் என்பதற்காக அவர் வேறு எந்த வகையிலும் ஈடுபட்டுக்கொள்வதில்லை. ஆதலால் வழக்கம் போலவே அவருடைய பணிகள் நடைபெற்றன.

தம் அன்பர்கள் வீட்டுக் கல்யாணம் என்றாலும் காலையிலோ, மாலையிலோ தவறாமல் ஒரு வேளை சென்று கல்யாணம் விசாரித்து வந்துவிடுவார்.

இப்படிச் சமூகத்துடன் ஒட்டியும், ஒட்டாமலும் தாமரை இலைத் தண்ணீர்போல உறவாடுவதில் அவர் சிறந்த மனிதராகத் திகழ்ந்தார்.

x x x

**ஆசானுடன் பயணத்தின்போது பாடிய பாடல்:**

ஒரு சமயம் மயிலைக்குக் கல்யாணம் விசாரிக்கப் போக வேண்டி இருந்தது. காலையில் தம் பணியில் ஈடுபடத் தொடங்கிய ஆசான் தம்மையே மறந்துவிட்டார். கொஞ்சம் நேரமாகிவிட்டது.

"அடடே, போய்ச் சீக்கிரம் ரிக்ஷா பார்த்து வர வேண்டும்" என இவரிடம் சொன்னார்.

இவர் சென்று ரிக்ஷாவை அழைத்து வந்தார். இரண்டு பேரும் அதில் ஏறிக்கொண்டார்கள். அடுத்த நிமிஷம் தமிழ் ஞாபகந்தான்.

"ரிக்ஷாக்காரரைக் கொஞ்சம் வேகமாகப் போகும்படி சொல்வதாக ஒரு பாடல் இயற்ற வேண்டும்" என ஸ்ரீமத் ஐயர் இவரிடம் சொன்னார்.

ஐயரவர்களே இப்படி ஒரு கருத்தைச் சொல்லிப் பாடல் இயற்றவேண்டும் என்றால் கேட்கவேண்டுமா? இவருக்கு மட்டற்ற மகிழ்ச்சி ஏற்பட்டது.

"மேவிய நன்மன்றல் விசாரிக்க எண்ணியே
ஆவலொடும் செல்ல அணைந்தேமால்—தாவித்
தரையில் படர்ரிக்ஷாக் காரரே சற்றே
விரைவில் சகடம் விடும்"

என ஒரு பாடலை இயற்றிச் சொன்னார். அதைக் கேட்டவுடன் ஸ்ரீமத் ஐயர் வாய்விட்டுச் சிரித்தார். "இன்னும் ஒரு முறை சொல்ல வேண்டும்" என்றார்.* இவரது பாடல் என்றால் ஸ்ரீமத் ஐயருக்கு அவ்வளவு ஆனந்தம்! இதுதான் அவருக்கு விளையாட்டு.

'சொற்பொழிவினும் தமிழ்த் தொண்டே சிறந்தது':

மற்றப்படி சொற்பொழிவு ஆற்றப் போகவேண்டும் என்பதில் அவர் விருப்பம் காட்டியதில்லை. "அழைக்கும் இடங்களுக்கெல்லாம் போய்க்கொண்டிருந்தால் நம் பணி தடைப்படும்" என்பார்.

என்றாலும், பல பிரபுக்கள், கனவான்கள் மிக்க ஆர்வத்தோடு அவரைத் தங்கள் தங்கள் இடங்களுக்கு வந்து பேச வருந்தி அழைப்பார்கள்; கடிதம் எழுதுவார்கள். ஸ்ரீமத் ஐயரோ மிக நாசுக்காக வர முடியாமைக்கு ஏதேதோ காரணம் சொல்லித் தட்டிக் கழித்துவிடுவார்.

ஒரு நாள் இரண்டு பேர் வந்தார்கள். வில்லிவாக்கம் அகத்தீசுவரர் கோவிலில் நடைபெறவுள்ள திருமுறை விழாவுக்கு ஸ்ரீமத் ஐயரைத் தலைமை தாங்கிப் பேச அழைத்தார்கள். தோற்றத்திலேயே அவர்களது ஏழைமை புலப்பட்டது. பேச்சிலே தமிழார்வம் நன்கு தெரிந்தது. ஸ்ரீமத் ஐயர் அவர்களது அழைப்பை உடனே ஏற்று விட்டார்.

---

* 19—3—30; உ. வே. சாமிநாதையர் குறிப்பு — திருவான்மியூர் நூலகம்.

"இவரையும் நான் அழைத்து வருகிறேன். நன்றாகப் பேசுவார். இவருடைய பெயரையும் சொற்பொழிவு ஆற்றுவோர் வரிசையில் சேர்த்துக்கொள்ளுங்கள்'' என அவர்களிடம் சிபார்சு செய்தார். வந்தவர்கள் பெரிதும் மகிழ்ச்சியுடன் சென்றார்கள். அப்புறம் ஸ்ரீமத் ஐயர் சொன்னார்:

"பெரிய பிரபுக்கள், கனவான்களுடைய அழைப்பை ஏற்றுச் சென்றாலாவது நமக்குக் காசுபணம் கிடைக்கும், இவர்களது அழைப்பை ஏற்றுப் போவதால் நமக்குத்தானே செலவு எனத் தோன்றலாம். ஆனாலும் இந்த மேடைகளில் நமக்குக் கிடைக்கிற மகிழ்ச்சியும் ஆத்ம திருப்தியும் அந்தப் பெரிய இடங்களில் எல்லாம் கிடைக்காது. கவிஞர் கோமான் பிள்ளையவர்களது வாழ்க்கை அநுபவமே போதும்'' என்று மேலும் கூறலானார்.

x x x

**ஆசானின் ஆசான் கண்ட அநுபவங்கள்பற்றி :**

ஒரு பெரிய பிரபு, தமது விசாலமான வீட்டில் இருந்து பெரிய புராணப் பிரசங்கம் செய்யப் பிள்ளையவர்களை அழைத்தார். பிள்ளையவர்களும் இசைந்தார்கள்.

அந்தப் பிரபுவின் வீட்டில் பிள்ளையவர்களது சொற்பொழிவு நடைபெற்றது. நூற்றுக்கணக்கானவர்கள் வந்து கவிஞர்கோமானின் சொற்பொழிவைக் கேட்டு மகிழ்ந்தார்கள்.

அந்தப் பிரபுவோ போவோர் வருவோரிடமெல்லாம், "பிள்ளையவர்களது பிரசங்கம் நம்ம வீட்டில் எப்படி நடக்கிறது, பார்த்தீர்களா?'' எனத் தற்பெருமையாகச் சொல்லிச் சொல்லி மகிழ்ந்தார்,

பிறரின் பெருமைகளைக் கண்டு நாமும் பூரிப்படையப் பழக வேண்டும்; அப்படிப் பழகாத ஒருவர் அந்தப் பிரபுவிடம் இப்படிச் சொன்னார்: "புராணப் பிரசங்கம் நன்றாகத்தான் இருக்கிறது.. கோவில் போன்ற பொது

இடத்தில் வைத்திருக்கலாம். வீட்டிலே வைத்திருப்பது தான் சுபகரமாக இல்லை. அந்தக் கதைகளின் முடிவிலெல்லாம் 'இறந்தார்' என்றே வருகிறதே; கவனித்தீர்களா?''

அவ்வளவுதான்; தமது செல்வம், செல்வாக்கைப் பலருக்கும் வெளிப்படுத்திக்கொள்ளத்தானே அந்தப் பிரபு பிள்ளையவர்களின் பிரசங்கத்தைத் தம் வீட்டில் ஏற்பாடு செய்தார்? தமிழ்ப்பற்றோ, தமிழ் அறிவோ உடையவர் அல்லவே! வந்த பொறாமைக்காரரின் பேச்சைக் கேட்டவுடன் பிரபுவின் முகமே வெளிறிப் போய்விட்டது. கவலையுற்ற நிலையில் இருந்தார்.

''உங்கள் கவலை புரிகிறது. இன்றோடு உங்கள் வீட்டில் பிரசங்கம் செய்வதை நான் நிறுத்திக்கொள்கிறேன்'' எனப் பிள்ளையவர்களும் அந்தப் பிரபுவின் ஆதரவில் தாம் நடத்தி வந்த பிரசங்கத்தை நிறுத்திக் கொண்டார்; அவரது மனம், பிரபுவின் அழைப்பை ஏற்றதனால் மிகுந்த வேதனைக்கு உள்ளாயிற்று.

இதுவாவது பரவாயில்லை; கும்பகோணம் அரசினர் கல்லூரித் தமிழாசிரியராகப் பிள்ளையவர்களின் மாணவர் தியாகராச செட்டியார் பணியில் சேர்ந்தார்.* அவரைப் பார்க்கப் பிள்ளையவர்களும் அடிக்கடி கும்பகோணம் போய்வருவார்.

அவ்வூரில் தாசில்தாராக இருந்த ஒரு கனவான் அப்போது தம் நண்பர்கள் சிலருடன் வந்து அத்தல புராணத்தைத் தமிழில் பாடித் தரவேண்டுமென்று பிள்ளையவர்களைக் கேட்டுக்கொண்டார். பிள்ளையவர்களும் அக்கனவானின் வேண்டுகோளை ஏற்றார்கள்.

ஒவ்வொரு நாளும் தாம் இயற்றும் பாடல்களைக் கும்பேசுவரர் ஆலயத்தில் அரங்கேற்றியும் வந்தார். அந்த அரங்கேற்றக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி வந்தவர் கனவானான கும்பகோணம் தாசில்தார்தாம்.

---

* 1865-இல்.

திடீரென்று ஒரு நாள் அந்தக் கனவான் அரங்கேற்றக் கூட்டத்திற்கு வரவில்லை. அவருக்காக நெடுநேரம் பிள்ளை காத்திருந்தார். யாரோ அவருக்கு உடம்பு சரியில்லை, வரமாட்டார் எனச் சொன்னார். பின்னர் அன்று அரங்கேற்ற வேண்டிய பகுதியைப் பிள்ளையவர்கள் அரங்கேற்றினார்.

**சில பெரிய மனிதரின் போக்குப்பற்றிப் பிள்ளையவர்கள்:**

மறு நாள் தாசில்தாரின் உடல்நலம்பற்றி விசாரிக்கப் பிள்ளையவர்கள் அவரது வீட்டிற்குச் சென்றார். அப்போது அந்தக் கனவான், தம் வீட்டிற்கு வந்த பிள்ளையவர்களிடம் கொஞ்சமும் மரியாதை காட்டாமல், கோபமே வராத குணக்குன்றாகிய கவிஞர் சிகாமணியே எரிமலைபோலக் கொதித்தெழும்படி அவரைத் தாறு மாறாகப் பேசிவிட்டார்:

"என்னை என்ன ஐயா நினைத்துக்கொண்டிருக் கிறீர்கள்? மற்றவர்களைப் போல லஞ்சம் வாங்குகிறவன் என நினைத்தீர்களா? என்னுடைய முயற்சியினால்தான் புராண அரங்கேற்றம் நடைபெற்று வருவதாகவும், நான் என் அதிகாரத்தைப் பயன்படுத்திப் பலரிடமும் நன்கொடைகள் வாங்கி உமக்கு நிறையச் சம்மானம் அளிக்க இருப்பதாகவும் ஊர் முழுவதும் சொல்லி வருகிறீராமே? பதவியிலிருந்து நான் ஒழுங்காக ஓய்வு பெற்றுப் பென்ஷன் வாங்க வேண்டுமா, வேண்டாமா? அதுபோல இனி யாரிடமும் சொல்லாதீர்! உம் சங்காத்தமே நமக்கு இனி வேண்டாம்" எனப் படபட வென்று, பணத்திற்காக அந்த அவதார புருஷர் ஏங்கி நின்றாரைப்போலப் பேசிவிட்டார்.

காரணம் ஒன்றுமில்லை; "கடைத்தெருவெல்லாம் இதே பேச்சாக இருக்கிறதே! கலெக்டர் ஆபீசிலும் கசமுசா என்று உம்மைப்பற்றிப் பேச்சு அடிபடுகிறது. இந்த ஊரில் ஆளா இல்லை?— கலெக்டரிடமே உங்கள்

பேரில் யாராவது புகார் செய்திருக்கலாம்" என அழுக்காறு கொண்ட ஒருவர் அந்தத் தாசில்தாரிடம் சொன்னவுடன், அவர் பீதி அடைந்துவிட்டார். அவரது சுயரூபம் வெளிப்பட்டது.

"இதனால் எல்லாந்தான், 'தமிழ்மொழி அறிவும். அதில் உள்ளார்ந்த அன்புமின்றி, எல்லோரும் விரும்பும் காரியத்தைத் தாமே செய்தால் தன்மதிப்பும் கவுரவமும் உயரும் எனக் கருதிச் செயல்படும் பிரபுக்கள், கனவான்கள் ஆகியோரின் அழைப்பை ஏற்றால் அவமானமே ஏற்படும், தம் செல்வச் செருக்கினால், பதவி இறுமாப்பினால் நம்மையும் அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டு மென்று விரும்புவார்கள். பிறர் கூறுவதை அப்படியே நம்பும் இயல்புடையவர்களின் சகவாசம் கூடவே கூடாது. பரம ஏழையாயினும் தமிழ்மொழியிடம் அன்புடையவர்க ளிடத்துப் பெறும் ஆதரவுதான் சிறந்தது என்று பிள்ளையவர்கள் எங்களுக்கு அறிவுறுத்துவார்கள்" என்றார் ஸ்ரீமத் ஐயர்.

சொற்பொழிவு ஆற்றுவதில் இயல்பாகவே மிக்க விருப்பமுடைய இவருக்கு இதைவிடச் சிறந்த அறிவுரை வேண்டுமா?

*  *  *

**அகத்தீசர்மீது அன்பர் கி.வா.ஜ., பாடியபோது ஊக்கியது :**

வில்லிவாக்கத்தில் 21—3—30 - இல் நடைபெற்ற திருமுறை விழாவுக்கு ஸ்ரீமத் ஐயர் இவரையும் அழைத்துச் சென்றார்.

"அகத்தியர் வில்வலன்-வாதாபியை இத்தலத்தில்தான் உண்டு புசித்தார். அகத்தியருக்கும் இங்கே பிம்பம் இருக்கிறது. நரசிங்கம்பேட்டையிலுள்ள சுவாமியின் கர்ப்பக்கிருகம் போல இங்கும் கர்ப்பக்கிருகம் வட்டமாக இருக்கும். இதனைக் 'கஜப்பிருஷ்ட விமானம்'

என்பார்கள். சுவாமியின் பெயரே அகத்தீசர் என்பதாகும். சொர்ணாம்பிகை என்பது அம்பிகையின் பெயர்'' என்பன போன்ற பல செய்திகளை வில்லிவாக்கம் போகும்போதே ஸ்ரீமத் ஐயர் இவரிடம் சொல்லிக்கொண்டு போனார்.

அதோடு, "அகத்தீச, நாயேற்(கு) அருள்'' என்ற ஈற்றடியைக் கொடுத்து ஒரு பாடல் இயற்றச் சொன்னார்.

அப்போது நம் அன்பர் பாடிய பாடல் இது:

''மன்னா வலர்சொல்வில் லிவாக்கத்து நாயகனே!
சொன்னாம் பிகைநாத தொன்றுதக்கன்—இன்னா
மகத்தீசற் றுங்காணா வண்ணம் அழித்த
அகத்தீச, நாயேற்(கு) அருள்''.*

இப்படி அடிக்கடி ஐயரவர்கள் இவரது உற்சாகத்தை அதிகப்படுத்தியதால், ஸ்ரீமத் ஐயரிடம் இவர் கொண்டிருந்த மதிப்புப் பின்னும் பன்மடங்கு பெருகியது.

* * *

## ஆசானின் அருங்குணங்கள்பற்றிய கடிதம்

"ஐயரவர்கள் ஒரு நூலை ஆராய்வதிலும், அதனைப் பதிப்பிப்பதிலும் எடுத்துக்கொள்ளும் முயற்சியும், செலவிடும் நேரமும் அளவிடற்கரியன. ஏட்டுச் சுவடிகளை ஒப்பிடும் போது தாமே ஏட்டை வைத்துக்கொண்டு பாராவிட்டால் அவருக்குத் திருப்தி பிறக்காது; ஏட்டுப் புத்தகமோ, அச்சுப் புத்தகமோ படித்துக்கொண்டு வரும்போதே, இடையில் சட்டென்று நிறுத்தி, "இங்கே பிழை இருக்கிறதா, இந்த வாக்கு இப்படி இராது. மற்ற ஏடுகளைப் பார்க்க வேண்டும்'' என்று சொல்வார். பார்த்தால், அந்த இடத்தில்

---

* மன் நாவலர் - நிலைபெற்ற நாவன்மையாளர்; வில்லிவாக்கத்து; சொர்ணாம்பிகை; தக்கனின் இன்னாத மகத் தீ (யாக அக்கினி) சற்றுங் காணா வண்ணம்; நாயேனுக்கு.

எழுதினவர்கள் அல்லது பதிப்பித்தவர்கள் செய்த பிழை ஒன்று இருக்கும்.

"ஒரு ராகத்தை ஒருவன் பாடிக்கொண்டே வரும் போது, சங்கீத வித்துவான்கள் எங்கேயாவது சிறிது அபஸ்வரம் நேர்ந்தாலும் கண்டுபிடித்து விடுகிறார்கள் இல்லையா? அதைப்போல ஐயரவர்களது காது கலப்படத் தமிழைப் பிரித்து அறிவதில் மிகவும் நுண்ணுணர்வை உடையது. 'சங்ககால வாக்கு இது; பிற்காலத்தது இது' என எடுத்தவுடனே சொல்லிவிடுவார்.

"குறிப்புரை எழுதும்போது அவர்களே எழுது கிறார்கள். இல்லாவிட்டால் எங்கள் யாரிடமாவது சொல்லி எழுதுவிப்பார்கள்.

"ஐயரவர்களின் வீட்டுக்கு நீங்கள் வந்து பார்க்க வேண்டும்; சுந்தரேசையர், வி.மு.சு., நாயகர், கோதண்டராமையர், நான் இப்படி நான்கைந்து பேர்கள் எப்போதும் அவரது வீட்டிற்குச் சென்று வருகிறோம்.

"தபால் பிரிப்பது, ஐயரவர்கள் சொல்லும் கடிதங் களை எழுதுவது, அச்சுக்கு அனுப்பப் பிரதி செய்வது, 'ப்ரூஃப்' வரும்போது ஒப்பிட்டுப் பார்ப்பது, பிழை திருத்துவது என்பதாக எங்கள்ஒவ்வொருவருக்கும் ஏதாவது பணி இங்கே இருந்துகொண்டே இருக்கின்றது. இடையில் நாங்கள் ஆசிரியரிடம் பாடமும் கேட்கிறோம்.

"தரையில் ஒரு கணக்குப்பிள்ளை மேஜைக்கருகில் அந்தத் தவமுனிவர் உட்கார்ந்திருப்பார். அந்தக் காலத்துக் குருகுலவாசம் செய்யும் மாணவர்களைப் போல நாங்கள் மேல்வேஷ்டியை இடுப்பில் கட்டிக்கொண்டு அவர் முன் உட்கார்ந்திருப்போம்.

"நூலிலுள்ள கருத்துக்கும், சொல்லமைப்புக்கும் ஒத்த பகுதிகள் இன்ன இன்ன நூலில் உள்ளனவென்று காட்டுதல் அவரது தனிப்பெருமை. 'சீவக சிந்தாமணியில் இன்ன இடத்தில் பார்; இது விளங்கும்' என்பார். இப்படியே பல ஒப்புமைப் பகுதிகள் குறித்துக்கொள்ளப்படும்.

''விளங்காத விஷயங்களுக்கு வலிந்து பொருள் கொள்வது அவர் வெறுக்கும் செயல்களுள் ஒன்று. நெடு நேரம் யோசித்தும் ஒன்றும் விளங்காவிட்டால், 'சரி, மேலே வாசியும்; பிறகு தோற்றும்' என்பார். 'சம்ஸ்கிருத வித்துவான்களைக் கேட்டால் தெரியும், விசாரிக்க வேண்டும்' என்பார்.

''அன்று மாலையே அந்த ஒரு வார்த்ஸதக்கு ஐந்து மைல் தூரத்திலுள்ள வடமொழி வித்துவானிடம் போய் அலைந்துவிட்டு வருவார்.''

இப்படித் தம் ஆசிரியரது பெருமையைப்பற்றித் தம் நண்பர் செல்லத்திற்குக் கடிதம் எழுதினார்.

**ஆசானுக்குத் 'தமிழ் விடு தூது' தந்த ஊக்கம்:**

தமிழ் . விடுதூது நூலில் 151-ஆம் கண்ணியாகிய ''இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர், விருந் தமிழ்தம் என்றாலும் வேண்டேன்'' என்பது ஐயரவர் களை நிரம்ப உருக்கிவிட்டது.

அக்கருத்தை அவ்வாறே வெளியிட வேண்டும், அதுவே தம்முடைய கருத்தைத் தமிழுலகம் அறிய வேண்டும் என்னும் மீதூர்ந்த அவா அவர்பால் எழவே, அது,

**''இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்**
**விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்—திருந்த**
**உதிப்பித்த பன்னூல் ஒளிர அடியேன்**
**பதிப்பிக்கவேகடைக்கண் பார்''**

என்ற வெண்பாவாக முகிழ்த்தது. ''இதனைத் தக்கயாகப் பரணி முகவுரையின் முதலிலே நீங்கள் காணலாம்'' எனத் 'தமிழ் விடு தூது' ஆராய்ச்சிக் கதையைத் தம் நண்பர் ச. கு. கணபதி ஐயருக்குப் பலப்பல கடிதங்களாக எழுதினார், அன்பர் கி. வா. ஜ.

x x x

''ஐயரவர்கள் தமிழாராய்ச்சிப் பணியில் ஈடுபட்டிருக்கும் போது இடையில் எவரேனும் வந்துவிடுவார்கள். அவர்களிடையே பேச்சு, பழைய வரலாறுகள் சம்பந்தமாக இருந்துவிட்டால் உண்டாகும் ஊக்கமே வேறு. நகைச் சுவை ததும்பப் பேசுவார். அவர்கள் போன பிறகு வருந்துவார். ''இன்றைக்கு வேலை குறைந்து விட்டது'' என்பார்.

''நீங்கள் எவ்வளவோ காரியங்கள் செய்திருக்கிறீர்கள்'' என்று யாராவது சொன்னால், ''என்ன செய்துவிட்டேன்? இன்னும் செய்ய வேண்டியது எவ்வளவோ பாக்கியிருக்கிறதே'' என்ற இரக்கக் குறிப்போடு விடை கூறுவார்.

வருகிறவர் எவரேனும் பிறரைப்பற்றிக் குறை சொல்லத் தொடங்கினால் ஐயரவர்கள் மறைமுகமாகப் பேச்சை வேறு விஷயத்திற்கு மாற்றிவிடுவார். ''இப்படி எல்லாம் ஏன் பிறரை அவதூறு கூறுகிறீர்கள்?'' என நேரிடையாக வந்தவர் துணுக்குற நடந்துகொள்ள மாட்டார்.

இவற்றையெல்லாங்கூடத் தம் ஆசிரியப் பிரானிடமிருந்து கூர்ந்து கவனித்துத் தம் குணமாகவும் கொள்ளத் தொடங்கினார், அன்பர் கி.வா.ஜ.

இவர் தம் நண்பர் செல்லமையருக்கு எழுதிய கடிதம் ஒன்றைப் பாருங்கள்:

'' 'ஒவ்வொரு நாளும் புதுப்புதுச் செயல்கள், பொருள்கள் தோன்றி யாவருக்கும் விம்மிதம் அளித்து வருகின்றன. அப்படி இருக்க, இந்தக் காலத்திற்குத் தேவையற்ற, பயனற்ற, வழக்கொழிந்துபோன நூல்களையும் உரைகளையும் ஸ்ரீமத் ஐயர் பதிப்பித்து வருகிறார். இதனால் நாட்டுக்கு என்ன பயன்?' எனச் சிலர் மறைமுகமாகக் கிண்டலும், கேலியும் பேசி எழுதுகிறார்கள். நமக்குக்கூட 'வழக்கொழிந்துபோன தமிழ் நூல்களுக்கு உயிர் கொடுத்துப் பழம்புலவர்களைத் தமிழ்

மக்கள் மறவாமல் இருக்க ஐயரவர்கள் இவ்வளவு சிரமப்பட வேண்டுமா?' என நினைக்கத் தோன்றுகிறது.

"நம் குருமூர்த்தியின் அபிப்பிராயம் என்ன தெரியுமா? 'பழங்காலத் தமிழ் மக்களுடைய வாழ்க்கை வரலாறுகள், பண்பாடுகள், தமிழ் மொழியினிடத்துக் கொண்டிருந்த அன்பு, புலவர்கள் அதனை வளர்த்த விதம், அவர்களுடைய மொழியறிவு, அவர்களால் பாடப்பெற்ற மன்னர்கள் - பிரபுக்கள் ஆகியோரின் இயல்பு, தெய்வபக்தி, தேசபக்தி, ஒழுக்க வழக்கங்கள், கல்விப் பரப்பு, இக்காலத்து வழங்காத அரிய செய்திகள், அக்காலத்து வழங்கிய சொற் பிரயோகங்கள், பல நூல்களின் பெயர்கள், ஆசிரியர்களின் பெயர்கள் எல்லாவற்றையும் வருங்காலச் சந்ததியினர் தெரிந்துகொள்ளப் பழங்கால நூல்களும் உரைகளும்தாமே நம் கருவூலங்கள்? வருங்கால ஆராய்ச்சியாளர்கள் ஒவ்வொரு பிரிவினரும், எவ்விதச் சிரமுமின்றி இவற்றிலிருந்து தங்கள் தங்களுக்கு வேண்டிய செய்திகளைப் பெற்றுப் பயனடையக் கூடுமே! பழமையிலும், இலக்கிய வளத்திலும் எந்த மொழிக்கும் நம் தமிழ்மொழி தாழ்ந்தது அல்ல என நம் எதிர்காலச் சந்ததியினர் உலகில் தலை நிமிர்ந்து உலா வர இந்நூல்கள் சான்றாக விளங்காவா?' என்கிறார்.

"உடனிருந்து துணை செய்தவர்கள் பெயர்களைக் குறிப்பிடுகையில், 'இவர்களுள் மோகனூர்த் தமிழ்ப் பண்டிதர் சிரஞ்சீவி கி. வா. ஜகந்நாதையர் எடுத்துக் கொண்ட உழைப்புப் பாராட்டத் தக்கது' என அவரது திருவடிதாசனாகிய எளியேனைப்பற்றியும் எழுதியிருக் கிறார்."

இந்தக் கடிதங்களிலிருந்து, எளிதில் எதையும் சொல்லலாம் என்பதுபோல, எல்லாக் காலத்தும் யாவரும் படித்துப் பயன் கொள்ளத் தக்க கருத்துக்களை எழுதும் இவரது ஆற்றல் மெருகேறி வந்தது தெரியவரும்.

x x x

**ஆசானின் துயரை ஆற்றிய நிகழ்ச்சி :**

திருப்பனந்தாள் மடத்தின் அதிபராக இருந்த ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சொக்கலிங்கத் தம்பிரான், ஐயரவர்களிடம் மிக்க மதிப்பும் அன்பும் உடையவர்; தமிழ் வளர்ச்சிப் பணி களில் அவருக்குப் பேராதரவாக இருந்தவர். 1930-ஆம் ஆண்டு மார்ச் 23-ஆம் நாள் அவர் பரிபூரணம் அடைந்த செய்தி கேட்டு ஐயரவர்கள் அயர்ந்து போய்விட்டார்.

அண்ணா பயந்தே போனார்; ஒரு நிமிஷம் யாரும் பேசவில்லை; "இன்று மேற்கொண்டு எந்த வேலையும் செய்ய வேண்டாம். தகப்பனார் கொஞ்சம் ஓய்வு எடுக் கட்டும். நீங்கள் எல்லோரும் வீட்டுக்குப் போங்கள்" என இவர்களிடம் சொன்னார்.

எல்லோரும் எழுந்திருந்தார்கள். இவரும் அந்த இடத்திலிருந்து எழுந்து அப்பால் சென்றார். ஆயினும் ஐயரவர்களது துக்கத்தைப் போக்க இவருக்கு ஒரு வழி தோன்றியது. துன்பங்கள், துயரங்கள், அபவாதங்கள் அனைத்தையுமே தாங்கிக்கொண்டு ஐயரவர்கள் வாழ்ந்து கொண்டிருப்பது தமிழால் அன்றோ?

முன்பு ஐயரவர்களால் அறிமுகம் செய்விக்கப்பட்ட போது தமக்கு உதவியவர் வள்ளல் ஸ்ரீலஸ்ரீ காசி வாசித் தம்பிரான் அல்லவா?

**" பண்ணாட்டும் புலவர்கள்தம் பசிதவிர்க்கும்**
**வண்மையொடும் பனசை மேவி**
**எண்ணாட்டும் பலஅறங்கள் மிகப்புரிந்து**
**புகழுடம்பை இங்கேநாட்டி**
**விண்ணாட்டிற்(கு) ஏகினையே நின(து)இயற்சீர்**
**விரவுதனை மேவு பாடற்**
***குண்ணாட்டப் படுவதொன்றோ சொக்கலிங்க**
**முனிவரன் என்றோது மேலோய்" .**

என்ற இரங்கப் பாடல் ஒன்றினை உடனே எழுதினார்.

---

* நினது சீர், மேவு பாடற்குள் நாட்டப்படுவது ஒன்றோ?

ஐயரவர்களிடம் சென்று எதுவும் பேசாமல், அந்தத் தாளைமட்டும் நீட்டினார். அவர் அதை வாங்கி முதலில் அரைமனத்தோடு மேலெழுந்தவாரியாகப் பார்த்தார். சட்டென்று இவரை நிமிர்ந்து பார்த்துவிட்டு மறுபடியும் ஒரு முறை படித்தார். இவரைத் தம் அருகில் உட்காரச் சொல்லி, சைகை காட்டிக்கொண்டே, 'விண்ணாட்டிற் கேகினையே' என்பதை வாய்விட்டுப் படித்தபோது அவரது தொண்டையை அடைத்துக்கொண்டிருந்த துயரம் இறங்கிவிட்டது; சோக ரசத்தில் ஆழ்ந்து போனார்கள். கண்களிலிருந்து முத்து முத்தாக நீர் உதிர்ந்தது. அவரது முகத்தில் பழைய களை வந்தது. இப்படிச் சமய சந்தர்ப் பத்திற்கு ஏற்றவாறு நடந்துகொள்ளக் கூடிய ஆற்றல் இவருக்கு இருந்தது.

x x x

**ஆராய்ச்சிக்கு நேர்ந்த தடை :**

இவர் வழக்கம் போல் அன்று 'தியாகராஜ விலாச'த் திற்குக் காலையில் போனார். ஐயரவர்கள், கூடத்தில் படுத்திருந்தார். எப்போதும் மேல்மாடியில் இருந்து தமிழ்த் தொண்டு புரிபவர் அவர்; கீழே கூடத்தில் படுத்திருப்பது அவருக்கு வழக்கமில்லையாதலால், இவர் உள்ளே புகுந்து அவரைக் கண்டவுடன் சற்றுத் திடுக்கிட்டார். அருகில் சென்று, ''ஏன் இப்படி?'' என்று கேட்டார்.

''ராத்திரி கீழே விழுந்துவிட்டேன்'' என்றார் ஆசான். அப்போது அண்ணா உள்ளேயிருந்து அங்கு வந்தார். ''ராத்திரி தொப்பென்று ஏதோ சத்தம் கேட்டது. நான் விழித்து எழுந்து வந்து பார்த்தேன். மாடிப்படியின்கீழ் இவர் விழுந்துவிட்டார். ஒருவரையும் எழுப்பாமல் எழுந்திருக்கப் பார்த்தும் முடியவில்லை. நான் எடுத்துக் கூடத்திலேயே படுக்கச் செய்தேன்'' என்றார்.

முதலில் சுளுக்காக இருக்குமென்று எண்ணெய் தடவி நீவினார்கள். பிறகு ஏதேதோ மருந்து தடவினார்கள். வலி வாங்கவில்லை. அடிபட்ட காலின் வீக்கமும் வரவர

அதிகமாயிற்று. இவர் ஐயரவர்களின் அருகிலேயே இரவு பகலாக இருந்து வந்தார்.

* * *

**பழைய நினைவு :**

ஒரு நாள் இரவு இவர் சற்றுக் கண்ணயர்ந்து இருப்பார். யாரோ ஒரு பெரியவர், "கிருத்திகை விரதத்தை விட்டு விட்டாயே!" எனச் சொல்லி மறைந்தாற்போல ஒரு கனவு கண்டார்; இவரது உடம்பெல்லாம் நடுங்கிற்று.

முன்பு ஒரு சமயம் ஐயரவர்களுடன் பெங்களூருக்கு இவர் சென்றிருந்தபோது நடந்த விருந்துபசாரம்பற்றிய நினைவு வந்தது இவருக்கு. அன்று கிருத்திகை. பல கால மாகக் கிருத்திகைதோறும் இவர் விரதம் இருந்து வருவது வழக்கம். அதனால் இவர் எதுவும் சாப்பிடவில்லை. அதைக் கண்ட ஐயரவர்கள், "எவ்வளவு சிரமப்பட்டு நமக் காக விருந்து தயாரித்திருக்கிறார்கள்! நீர் சாப்பிட வர வில்லையென்றால் நான்மட்டும் எப்படிச் சாப்பிடுவேன்? எனக்கும் சாப்பாடே பிடிக்கவில்லை" என்று சிறு குழந்தைபோல் சிணுங்கிக்கொண்டார்.

ஆசானது மனம் துன்பம் அடைவதை இவரால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

'அவரது மகிழ்ச்சியைக் காட்டிலும் விரதம் என்ன வேண்டிக் கிடக்கிறது?' என எண்ணி ஸ்ரீமத் ஐயருடன் விருந்து சாப்பிட்டார். அப்புறம் கிருத்திகை விரதத்தில் அவ்வளவு உறுதி காட்டவில்லை.

இப்போது ஐயரவர்கள் இவ்வாறிருந்த நிலையில் முற்கூறிய கனவைக் கண்டதனால் இவர் சற்று மனம் குழம்பிவிட்டார். இது பற்றித் தயங்கியபடியே ஆசானிடம் தெரிவித்தார்.

உடனே ஐயரவர்கள், "நீர் திரும்பவும் கிருத்திகை விரதத்தை மேற்கொண்டுவிட வேண்டும். அதைக் கைவிடும்படி உம்மை நான் வற்புறுத்தி இருக்கக் கூடாது"

என்று வருத்தத்துடன் கூறினார். அவரது கள்ளங்கபடமற்ற பேச்சும், இவரது வார்த்தையில் அவர் கொண்ட நம்பிக்கையும் இவரை உருக்கிவிட்டன.

மறு நாள் கிருத்திகை. நீராடியபின் இவர் நெற்றி நிறைய விபூதியைத் தரித்துக்கொண்டார். ஆசிரியப் பிரானுக்கு உடம்பு குணமாகவேண்டுமென்று முருகனை வேண்டிக்கொண்டு விரதம் இருந்தார்.

ஒரு நாள் ஸ்ரீமத் ஐயருக்கு நினைவே இல்லை; ஜுரம் அவ்வளவு கடுமையாக இருந்தது. காலில் உள்ள வீக்கமே ஜுரத்துக்கும், அதனால் உண்டாகும் ஞாபகப் பிசகு முதலியவற்றுக்கும் காரணம் எனத் தெரிய வந்தது.

தம் சுயநினைவு வரும்போதெல்லாம் ஐயரவர்கள் அலங்கமலங்க விழிப்பார். இவரைத் தம் அருகில் வருமாறு சைகை காட்டி, "பிள்ளையவர்களின் சரித்திரத்தை எழுத வேண்டும்" என ஈனசுவரத்துடன் சொன்னார்.

"மிகுந்த கவலைக்கிடமான இந்த நேரத்திலா எழுத முடியும்? ஏதோ ஆவலாய் அப்படிச் சொல்கிறார்கள். நீர் சும்மா இரும்" என்று அண்ணா இவரைத் தடுத்து விட்டார்.

கால்வீக்கம் வடியாமல் இருந்தது கண்டு மருத்துவ மேதை டாக்டர் ரங்காசாரியாரை அழைத்து வந்து காட்டினார்கள். அவர் ஐயரவர்களிடம் அன்பு உடையவர்; அவரது கை பட்டாலே நோய் தீரும் என்பார்கள்.

"இதுபற்றிக் கவலைப்பட வேண்டாம். ஆபரேஷன் செய்துவிடலாம். உங்கள் வீட்டிலேயே அதை நடத்து கிறேன்" என்று அவர் அபயம் அளித்தார்.

ஆபரேஷனுக்கு நாள் குறிப்பிட்டாயிற்று. பிற்பகல் இரண்டு மணி அளவுக்கு அது நடைபெற இருந்தது.

டாக்டர் வந்தார். ஐயரவர்கள் அவருக்கு அஞ்சலி செய்தார். "இந்தச் சரீரம் இன்னும் கொஞ்ச காலத்துக்கு இருந்தால், அரையும் குறையுமாக இருக்கிற காரியங்களை

நிறைவேற்ற முடியும்'' எனச் சொல்லும்போது ஸ்ரீமத் ஐயரின் கண்கள் கலங்கின.

தாம் இறப்பதற்குள் தம் ஆசிரியப்பிரானான பிள்ளையவர்களது சரித்திரத்தை எழுதி முடித்துவிடவேண்டுமென்ற வேகம் அவருக்கு இருந்தது.

''இது என்ன சின்ன ஆபரேஷன்தான்! பயமே வேண்டாம்! நீங்கள் இன்னும் பல பெரிய காரியங்களைச் செய்யப் போகிறீர்கள்'' என்று டாக்டர் புன்னகையுடன் சொல்லிக்கொண்டே தம் காரியத்தில் இறங்கினார்.

ஐந்தே நிமிஷத்தில் தம் வேலையை முடித்துக் கட்டுக் கட்டிவிட்டார் டாக்டர் ரங்காசாரியார்.

'அந்த மேதாவி மகான், மனிதப் பிறவி அல்ல; தேவ புருஷன்!' என்றே எண்ணி யாவரும் வியந்தார்கள்.

மெள்ள மயக்கம் தெளிந்து ஸ்ரீமத் ஐயர் கண்ணை விழித்தார். ''என்ன இது, மருந்து நெடி வீசுகிறதே! ஆபரேஷன் செய்யவில்லையா?'' என்றார்.

''ஆபரேஷன் ஆகிவிட்டது'' என்று டாக்டர் சொன்னதை ஸ்ரீமத் ஐயர் நம்பவில்லை; ''அதற்குள்ளேயா? எனக்கு ஒன்றும் தெரியவில்லையே!'' என்றார்.

''இன்னும் ஒரு வாரம் ஜாக்கிரதையாகப் படுக்கையிலேயே இருங்கள். எந்த வேலையும் செய்யவேண்டாம். சரியாகப் போய்விடும்'' என்று சொல்லி டாக்டர் ரங்காசாரியார் விடை பெற்றுக்கொண்டு போனார்.

ஐயரவர்களின் குரலைக் கேட்டபின்புதான் இவருக்கும் உயிரே வந்தது. அவர் திரும்ப அயர்ந்து உறங்குவதைக் கண்டு, 'முருகா, உனது அருட் செயலை நான் என்றும் மறக்கவே மாட்டேன்' எனக் கண்களில் நீர் பொழியக் காந்தமலையானை நினைந்து விம்மினார்.

ஐயரவர்களின் உடல்நிலை சீராகி வந்தது. அண்ணா தாம் எடுத்திருந்த லீவு முடிந்தவுடன் தம் அலுவலகம் போகத் தொடங்கினார். போகும்போது, ''இன்னது

இன்னது இன்னபடி செய்ய வேண்டும்'' என இவரிடம் சொல்லிவிட்டுப் போய்விடுவார்.

ஐயரவர்களுக்குத் தமிழ்ப் பாடல் காதில் விழாவிட்டால் உயிரே போய்விட்டது போல் இருக்கும். எனவே, தம்முடைய குமாரர் அலுவலகம் போனவுடன் இவரை விட்டுத் தேவாரம், திருவாசகத்தைப் படிக்கச் சொல்வார்.

படுக்கையில் இருந்துகொண்டே ஒரு நாள் இவரிடம் பிள்ளையவர்களின் சரிதக் குறிப்பை எடுத்து வாரும்'' என்று சொன்னார்.

''டாக்டர் எந்த வேலையும் செய்ய வேண்டாம் எனச் சொல்லியிருக்கிறாரே'' என இவர் தயங்கினார்.

அப்போது ஐயரவர்கள் கவலையுடன், ''நான் திடீரென்று போய்விட்டால் என் ஆசிரியப்பிரானின் சரித்திரம் முற்றுப் பெறாமல் நின்றுவிடுமே; ஜுரம் வந்தாலும் பாதகமில்லை; பிள்ளையவர்களின் சரிதத்தை முடித்துவிட்டேன் என்ற நினைவோடு இறந்து போனால் சாந்தியோடு இறப்பேன்'' என்றார்.

ஐயரவர்களுடைய வார்த்தைகள் உணர்ச்சி கனலில் தெறித்துவிழும் சுடர்ப்பொறிகளாக வந்தன. அவர், தம் குருவிடம் கொண்டுள்ள பக்தி இவருடைய கண்களில் நீரை வருவித்தது. 'முருகன் காப்பாற்றுவான்' என்ற நம்பிக்கையோடு பிள்ளையவர்களின் சரித்திரக் குறிப்புகளை எடுத்து வந்தார். 'அண்ணா என்ன சொல்வாரோ?' என்கிற பயம் போய்விட்டது.

கவிஞர் பெருமானான பிள்ளையவர்கள் தேக அசௌக்கியம் அடைந்திருந்த பகுதிவரை அவரது சரித்திரம் உருவாகியிருந்தது. அன்றும் மறுநாளும் தொடர்ந்து இப்படி எழுதினார்கள்; அதுவும்; டாக்டர் வராத பிற்பகலில் அண்ணாவும் அலுவலகம் போன பிறகு யாரும் கண்டுகொள்ளாத நேரத்தில் பிள்ளையவர்களின்

சரித்திர கைங்கரியம் படுவேகமாக, திருட்டுத்தனமாக நடந்து வந்தது.

"புலவர் பெருமான் சில கடிதங்களை எழுதச் செய்கிறார். அக்னிலிங்க சாஸ்திரிகள் என்ற வடமொழி வித்துவான், சங்கராசார்யர் செய்த சிவானந்தலஹரியிலுள்ள 'ஸதா மோஹாடவ்யாம்' (எப்போதும் மோகம் என்னும் அடவியில்) என்ற சுலோகத்தைச் சொல்லிப் பொருளையும் சொல்கிறார். கவிஞர்பிரான் அதை அப்பொழுதே செய்யுளாக மொழிபெயர்க்கிறார்...."

இப்படி வரும் நிகழ்ச்சிகளை ஐயரவர்கள் சொல்லச் சொல்ல இவர் எழுதி வந்தார்:

"பிள்ளையவர்களது வாழ்க்கையின் இறுதி நெருங்கிக் கொண்டிருக்கிறது. பிரக்ஞை தவறுகிறது. மறுபடியும் சிறிது தெளிவு ஏற்படுகிறது. அப்போது அவர் 'திருவா' என்று மாத்திரம் குறிப்பிக்கிறார். அக்குறிப்பை அறிந்து நான் திருவாசகத்தை எடுத்து வந்து அடைக்கலப் பத்தை வாசித்தேன்.

"பிள்ளையவர்கள் கண்ணை மூடிக்கொண்டே கேட்டு வந்தார். அப்போது அவருக்கு உடலில் ஓர் அசைவு உண்டாயிற்று. உடனே நாங்கள் சமீபத்தில் சென்ற பொழுது வலக் கண்ணைத் திறந்தார். அதுதான் ஸ்ரீ நடராஜ மூர்த்தியினுடைய குஞ்சித சரணத்தை அடைந்த..."

இப்படிச் சொல்லிக்கொண்டே வந்த ஸ்ரீமத் ஐயருக்கு மேலே பேச முடியவில்லை. அப்பொழுது அவர் 'தியாக ராஜ விலாச'த்தில் இருக்கவில்லை. திருவாவடுதுறையில் பிள்ளையவர்களது நல்லுடலத்திற்கு அருகில் இருந்தார்; தாரை தாரையாகக் கண்ணீர் பெருகியது.

"வடமொழி வித்துவான்களாகிய அந்தணர்களின் கூட்டத்திலிருந்து 'தமிழ்க் காளிதாசா, தமிழ்க் காளிதாசா' என்ற சப்தமும், தமிழ் வித்துவான்கள் வாக்கிலிருந்தும் அயலூரிலிருந்து வந்திருந்த பிள்ளையவர்களின் மாணாக்

கர்களின் கூட்டத்திலிருந்தும், 'தமிழ்க் கடலே, எங்களுக்கு அரிய விஷயங்களை இனி யார் அன்புடன் சொல்வார்கள்? யாரிடத்தில் நாங்கள் செல்லுவோம்? எங்களைக் கவனிப்பார் யார்?' என்ற ஒலியும், வேறொரு சாராரிடமிருந்து, 'குணக்கடலே! சாந்த சிரோமணி' என்ற ஒலியும் உண்டாயின. உடன் சென்ற அபிஷிக்தர்கள் 'திருவாசகம்' சொல்லிக்கொண்டு போகையில், 'இனிமேல் திருவாசகத்திற்கு மிகத் தெளிவாகவும், அழகாகவும் யார் பொருள் சொல்லப் போகிறார்கள்?' என்று என் தந்தையார் முதலிய பலர் சொல்லி மனம் உருகினார்கள்.''

இப்படி ஐயரவர்கள் இந்தப் பகுதியைச் சொல்லி வருகையில் இவரும் விசிக்கவே ஆரம்பித்துவிட்டார்.

அந்தப் பகுதி இவர் மையில் தோய்த்து எழுதியது அன்று; கண்ணீரில் தோய்த்து எழுதியதாகும்.

இவர் அந்த அத்தியாயத்தை எழுதி முடித்தவுடன் ஐயரவர்கள் சீராக வெளியிட்ட மூச்சு, அவருக்கு ஏற்பட்ட மனநிறைவை உணர்த்தியது. நோவு நீங்கிய களையை இவர் அவரது முகத்தில் கண்டு மகிழ்ந்தார்.

x x x

**ஆசானின் பலதரமான புகழ்:**

ஐயரவர்களின் உடம்பு படிப்படியாக குணமாகி வந்தது. என்றாலும், வெளியிடங்களுக்குப் போக முடியவில்லை. 1931-ஆம் ஆண்டு ஜனவரியில் கும்பகோணம் கல்லூரியின் வைர விழாக் கொண்டாட்டமும் திருவாவடுதுறை மடத்துக் குருபூஜையும் வந்தன.

ஐயரவர்கள் இவரையே கும்பகோணத்துக்கும் திருவவாடுதுறைக்கும் போகச் சொன்னார்.

இவர் முதலில் கும்பகோணம் சென்றார்.

கல்லூரி விழாக்குழுவினருக்கு, முன்னதாகவே தம் உடல்நிலை குறித்துக் கடிதம் எழுதியதோடு, இவரைப் பற்றியும் குறிப்பிட்டு இவரை அனுப்பி வைப்பதாக எழுதி

யிருந்தார். அவர்களும் இவரை மிக்க அன்புடன் நடத்தினார்கள்.

ஐயரவர்களின் படத்தை உயர் நீதிமன்ற நீதிபதி கே. சுந்தரம் செட்டியார் அந்த விழாவில் திறந்து வைத்தார்.

ஸ்ரீமத் ஐயரது தமிழ்த் தொண்டினைப்பற்றி அதே கல்லூரியில் தமிழ்ப் பண்டிதராகப் பணியாற்றிய எம். வி. ராமாநுஜாசாரியார் பேசினார்.

"ஐயரவர்களின் தகப்பனார் பெயர் தமிழ் நாட்டின் எல்லை வேங்கடத்தைத் தழுவி, அகத்தியனாருக்குத் தமிழ் உபதேசித்த சுப்பிரமணியனின் பெயரோடு இணைந்த வேங்கடசுப்பையர்; தாயாரின் பெயர் கல்விக்கு அதிதேவதை சரஸ்வதி; இவர் பெயர் சாமிநாதன்; இனிய குணமுடைய இவருக்கு வாய்த்த துணைவியார் பெயர் மதுராம்பாள்; இவரது வீட்டில் வழிபடும் தெய்வம் மீனாட்சிசுந்தரேசுவரர்!- மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர்களோடு தாமும் ஒரு புலவராக இருந்து தமிழாராய்ந்த மீனாட்சிசுந்தரப் பெயருடையவரே ஐயரவர்களின் ஆசிரியரும் ஆவார். இவர் செய்து வரும் உத்தமமான பணிக்கேற்ப இவர் பிறந்ததும் உத்தமதானபுரம்; நம்மையெல்லாம் ஆனந்த வெள்ளத்தில் மிதக்கச் செய்துகொண்டிருக்கும் இவர் தோன்றியது 'ஆனந்த' வருஷம்" என இப்படி வரிசையாக எடுத்துக் காட்டிய பொருத்தங்கள் அவையில் இருந்தவர்கள் அனைவரையும் மகிழ்ச்சிக் கடலில் மிதக்கச் செய்தன.

அன்பர் கி.வா.ஜ.வும் அப்போது, "மாணாக்கர்களை நோக்க ஐயரவர்கள் ஒரு பேராசிரியர் என்றாலும், இந்த வயதிலும் நூலாராய்ச்சியில் ஊக்கம் குன்றாமல் படிப்பதிலும் தெரியாதவற்றை மற்றவர்களிடமிருந்து கேட்டுத் தெரிந்துகொள்வதிலும் அவர் இன்றும் ஒரு சிறந்த மாணாக்கராகவே இருந்து வருகிறார்" என்பதைச் சில

உதாரணங்களோடு எடுத்துக் காட்டி, "ஸ்ரீமத் ஐயரது படத்தைக் கல்லூரியில் திறந்து வைப்பது மாணவர்கள் கல்வியில் ஊக்கம் பெற வழிகாட்டுவதாக அமையும்" என்றார். விழாக் குழுவினரை நன்றியோடு பாராட்டும் சிறப்புரையாக இது அமைந்தது.

இவர் திருவாவடுதுறை சென்றபோது ஸ்ரீலஸ்ரீ ஞானாசிரியர், ஐயரவர்களைக் கவுரவிப்பது போலவே இவரையும் கவுரவித்தார்.

இவற்றையெல்லாம் இவர் ஐயரவர்களுக்கு எழுதினார்:

'போன காரியத்தை முடித்துக்கொண்டு இவர் நல்ல படியாகச் சென்னை திரும்ப வேண்டுமே' என அண்ணாவுக்குக் கவலைதான். என்றாலும், இவரது கடிதம் கிடைத்ததும், அதற்கு முந்திய நாள் காலை இவ்விடம் வந்த மணலூர் சி. ராஜகோபாலாசாரியார் குடந்தையில் நடந்த வைபவத்தைப்பற்றி விவரமாகச் சொன்னதும் எல்லாருக்கும் மிகவும் திருப்தியாக இருந்தன. "அங்கே குருபூஜை மிகவும் சிறப்பாக நடைபெற்றிருக்கக் கூடுமென்று எண்ணுகிறேன். அங்கே ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்திடமிருந்து சமயோசிதத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு இவ்விடம் வந்து சேர விரும்புகிறேன்" என்று அண்ணா பதில் கடிதத்தில் தெரிவித்திருந்தார்.

திருவாவடுதுறையிலிருந்து இவர் திருப்பனந்தாள் மடத்திற்கும் சென்றார். காசிமடாலயத் தலைவராக ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிநாத சுவாமிகள் இருந்தார்கள். இவரைக் கண்டவுடன் அவருக்கும் மகிழ்ச்சி உண்டாயிற்று. ஐயரவர்களின் உடல்நலம்பற்றி விசாரித்து அறிந்தார். 'தமிழ் விடு தூது' நூலினைப் பதிப்பிப்பதற்குச் சிறிதும் பொருட்கவலை அடையாதபடி சுவாமிகளே உதவி புரிந்தார்.

"இது போல இன்னும் வெளிவராத பிரபந்தங்களை ஐயரவர்கள் பதிப்பிப்பதற்கு நீங்கள்தாம் அவருக்கு

உறுதுணையாக இருக்க வேண்டும். பொருட்செலவைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். நாம் உதவி செய்வோம்'' என மிக்க பெருமிதத்தோடு தெரிவித்தார் சுவாமிகள். பிறகு, "கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகரின் பிரபந்தத்தைக் கொஞ்சம் பார்க்கலாமா?'' என இவரிடம் கேட்டார்.

இவருக்கு மிகவும் மகிழ்ச்சி. அவருக்குப் பாடம் சொல்வாரைப் போல, இவர் அவருடன் சேர்ந்து அந்த நூலைப் படித்தார். ஆசான் தமக்குச் சொன்ன நுட்பங்கள் அனைத்தையும், மறக்காமல் சுவாமிகளுக்கு இவர் எடுத்து விளக்கினார்.

அப்போதுதான் தம்பிரான் அவர்கள், சிவக்கொழுந்து தேசிகரின் பிரபந்தங்களை அவ்வாண்டு பதிப்பிக்க வேண்டும் எனத் தாம் விரும்புவதாக ஐயரவர்களிடம் தெரிவிக்கச் சொன்னார்.

இத்தகைய ஆசானிடம் பயிலக் கொடுத்து வைத்தது பற்றி மிக மகிழ்ச்சி அடைந்தார் அன்பர் கி.வா.ஜ.

### நாட்குறிப்பு எழுதும் பழக்கம்

இவருடைய கடந்தகால நிகழ்ச்சிகள், நிகழ்காலக் கடமைகள், எதிர்காலத் திட்டங்கள் ஆகியவற்றைத் தெளிவாக அறிவதற்கு இவருடைய நாட்குறிப்பு எழுதும் பழக்கந்தான் காரணம்.

'எப்படியும் வாழலாம்' என்கிற கொள்கையுடையவர்களின் வாழ்க்கை, பாய்மரம் இல்லாத படகு போல் பலநேரம் சிதறுண்டு போகக் காண்கிறோம். இவரோ, 'இப்படித்தான் வாழவேண்டும்' என்கிற உயரிய லட்சியத்தோடு தம்மை இணைத்துக்கொண்டுவிட்டார். அதனால் இவரது வாழ்வு சீராக முன்னேறி வந்தது.

### திரு.வி.க-விடம் ஈடுபாடு

"பரத்துக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பை உணர்த்துவதே சமயம். இத்தொடர்பை உணர்ந்து

நடப்பவனது வாழ்க்கைக்கும் மற்றவனது வாழ்க்கைக்கும் வேற்றுமை உண்டு. முன்னவனின் வாழ்க்கை உலகுக்கு நலன் செய்யும்; பின்னவனின் வாழ்க்கை கேடு செய்யும்'' என்ற திரு.வி.க-அவர்களின் நல்லுரை இவரைப் பெரிதும் ஈர்த்தது.

பரம்பொருளாகிய முருகக் கடவுளின் நினைவு அகலாமல் ஆசானின் திருவடிதாசனாக இருந்தபடி நோற்று வந்த நோன்பு இவரது ஆற்றலையும், சக்தியையும் உலகுக்குப் பயன்படத் தக்க அளவு பெருக்கியது; நல்ல பல தமிழ்ப் பெரியோர்களின் அன்பையும் தொடர்பையும் கூட்டி வைத்தது.

1931 - செப்டம்பரில் ஐயரவர்கள் இவரைத் திருவிடை மருதூருக்கும் திருப்பனந்தாளுக்கும் அனுப்பி வைத்தார். அங்கிருந்து மோகனூர் சென்று தம் தாய்தந்தையர்களை இவர் பார்த்துவிட்டுச் சென்னை வருவதாகச் சொல்லி ஐயரவர்களிடம் அநுமதி பெற்றுக்கொண்டு சென்றார்.

மோகனூர் சென்று காவிரியையும், காந்தமலை யானையும் பார்த்துவிட்டால் உடனே சென்னை திரும்ப மனம் வருமா? நவராத்திரி வரை மோகனூரில் தங்கிவிட்டார்.

அப்போது ஐயரவர்களே இவருக்குப் பல கடிதங்கள் எழுதியுள்ளார்; அவற்றுள் ஒன்றில், ''எனக்கு எழுதிய கடிதத்தின் தலைப்பில் வரம்பு கடந்த முகமன் எழுதப் பெற்றிருந்தது. இனி அங்ஙனம் எழுத வேண்டாம். நான் பெரிய மடாதிபதியல்லன்'' எனச் சற்றுக் கடிந்து கொண்டுமிருக்கிறார்.

அடுத்த கடிதத்திலேயே, "இதுகாறும் பதில் வராமை யால் மெத்தக் கவலை அடைந்துகொண்டிருக்கிறேன் - முன் கடிதத்தின் தலைப்பில் 'திருவடித் தாமரைகளில்' என நீர் பாராட்டி எழுதியிருந்ததை எண்ணித்தான்...'' எனச் சமாதானமும் கூறியிருக்கிறார், ஐயரவர்கள்.

"உமக்குச் சௌகரியமில்லையாயின் தகப்பனாரவர்களைக் கொண்டாகிலும் கடிதம் எழுதக் கூடாதா?" என வேண்டியிருக்கிறார், ஐயரவர்கள்.

"யாருடைய கண்ணாவது பட்டிருக்க வேண்டுமென்று எண்ணுகிறேன். இரண்டாம்பாலாறிய முதியவர்கள் யாரேனும் இருந்தால் உம்மைத் திருஷ்டி சுற்றிப் போடச் சொல்ல வேண்டும்" என இவருக்கு உடம்பு சரியில்லையென அறியும்போது மனம் துடித்திருக்கிறார்.

யாரோ ஒரு பெரியவர் 'கிருத்திகை விரதத்தை விட்டு விட்டாயே' எனச் சொல்லி மறைந்தாற்போல தாம் ஒரு கனவு கண்டதாக இவர் ஐயரவர்களிடம் முன்பு சொன்னதை நினைவு கூர்ந்து, "சென்ற கார்த்திகைக்கு உபவாசமிருந்தீரா?" என்று ஐயரவர்கள் கேட்கிறார், கடிதத்தில்.

"உமக்குக் கடிதம் எழுதிக்கொண்டிருந்தபோது திருச்செந்தூர் ஆண்டவன் பிரசாதம் வந்தது. எழுதுகிறவரும் அவனது திருநாமம் உடையவரே என்பதும் விளங்கும்" என முருகனை நினைவுபடுத்துகிறார்.

"நான் தனியே இருக்கிறேன் என்று எண்ண வேண்டாம். ஒன்றும் செய்ய முடியவில்லையே என மனக் கவலை துணையாக இருக்கிறது; சிறிதும் விலகவில்லை! சரணாகதி பண்ணியவர்களை விலக்கக் கூடாதென்று ஊழ்வினையாகிய நண்பன் அறிவுறுத்துகிறான்" என்பதாக ஹாஸ்யம் இழையோடத் தம் செயலற்ற நிலையைப் புலப்படுத்தியிருக்கிறார், ஐயரவர்கள்.

"காரியார்த்தமாகப் பலர் வந்து வந்து போகிறார்கள். படிப்பைப்பற்றிய பிரஸ்தாபமேயில்லை.

"எளிய நடையுள்ள திருவிளையாடலை முதலிலிருந்து பாராயணம் செய்து வருகிறேன்.

"நீர் வசனநடையாலான புத்தகங்களைப் படித்துப் பூர்த்தி செய்தல் உத்தமமே.

"நல்ல நூற்பொருளை அறியுந்தோறும் உம்முடைய ஞாபகம் அதிகப்படுகின்றது. வேறொன்றையும் பார்க்க முடியவில்லை.

"இன்று விஜயதசமி. நண்பர் சுப்பிரமணிய ஐயர் கம்பராமாயணம் தொடங்கினார். நீரும் ஈண்டு இருப்பதாகவே பாவித்துக்கொண்டேன்" என்றெல்லாம் எழுதியுள்ளார்.

இவ்வளவுக்கும் ஒரே ஒரு காரணம் இவர்கள் இரண்டு பேர் லட்சியமும் ஒன்றாகவே இருந்ததுதான்.

ஒரு கடிதத்தில் ஆசான், இடைமருதில் மால் அவதார வட்டமும்[1], பனசையில் மனுராச வட்டமும்[2] பெற்றமை தெரிந்தது.

"பனசைத் தலைவர்கள் ஸ்ரீ சாமிநாத தேசிகர் விஷயமாகச் சொன்னமையும் தெரிந்துகொண்டேன். அவ்வண்ணமே ஞாபகம் வைத்துச் செய்யவேண்டும். 'கோடீச்சுவரக் கோவை' முதலியவற்றின் குறிப்புக்கள் பனசையில் உள்ளனவா, உம் கையில் உள்ளனவா? அவர்கள் கருத்தின்படி நடப்பது நம்முடைய கடமை. 'குறவஞ்சி'யைப்பற்றி அவர்கள் உடன்பட்டது மிகவும் திருப்தியை அளிக்கின்றது.

"மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழைக் கந்தசஷ்டிக்குள்ளே பதிப்பிக்க வேண்டுமென்றார்களா, இல்லையா? அதைப்பற்றி நீர் ஒன்றும் எழுதவில்லையே! ஒரு வேளை எப்படி இருக்குமோவென்று அது சம்பந்தமாக முன்னம் எழுதி வைத்திருந்த குறிப்புக்களை ஒழுங்குபடுத்தி எழுதுவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறேன். வேறு வேலைகள் அதிகமாக நெருக்குகின்றன.

"வித்துவானுக்குக் கொடுக்க வேண்டிய மாயிருஞால வட்டத்தைக்[3] கொடுப்பதற்கு இவ்வூரிலேயே ஏற்பாடு

---

1. பத்து ரூபாய். 2. ஏழு ரூபாய். 3. ஆயிரம் ரூபாய்.

செய்யும்படி சிரஞ்சீவி—க்குத் தலைவர்கள் எழுதுவித்து விட்டார்கள். அதைப்பற்றிய முயற்சி நடந்துவருகிறது. அடுத்த மாத முதலில்தான் நடக்குமென்று எண்ணுகிறேன். சி. கணபதி ஐயரின் நண்பர் ஈரோடு திருவேங்கடாசாரியார் என்பவர் 'அகநானூறு' ஏட்டுப் பிரதியொன்று (200 பாடல் வரையில் உள்ளது. 90 பாடல்களுக்கு உரையுள்ளது) அனுப்பிக் கடிதமும் எழுதியிருந்தார். மேற்படி பிரதி மிக நல்ல பிரதி. பெற்றுக்கொண்டு கடிதமும் எழுதிவிட்டேன். மேற்படி பிரதி இருந்த இடத்தில் இன்னும் சில தக்க நூல்கள் இருக்கலாமென்று நினைக்கிறேன். நான் நேரில் சென்று பார்த்தால் நலமே. பின்பு பார்த்துக்கொள்ளலாம்.

"சி. வித்துவான் சுப்பிரமணிய ஐயர் வழக்கம் போலவே வந்துகொண்டிருக்கிறார். 'குறுந்தொகை' பார்க்கப்பட்டு வருகிறது. 180 செய்யுட்கள் ஆயின. அவருடைய ஞாபக சக்தி திருப்தியாக இருக்கிறது. நல்ல நூற்பொருளை அறியுந்தோறும் உம்முடைய ஞாபகம் அதிகப்படுகின்றது. வேறொன்றையும் பார்க்க முடியவில்லை. 'குறுந்தொகை' பார்க்கத் தொடங்கியவுடன் 'நெடுந்தொகை' வந்தது திருவருட் செயலே. பிற பின் எழுதுவேன். எல்லாருக்கும் என் ஞாபகம் சொல்லுக. தேகஸ்திதியை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்க. சௌக்கியத்திற்கு அடிக்கடி எழுதுக.

"இது எழுதிப் பூர்த்தியானவுடன் அன்பர் சி. கணபதி ஐயர் திருப்பத்தூரிலிருந்து வந்தார். மைத்துனருக்கு வேறு இடத்திற்கு மாற்றலாகிவிட்டமையால் எல்லோரையும் (இல்லாள், குழந்தைகள்) மைத்துனர் அழைத்து வந்துவிட்டதாகவும் சொல்லிவிட்டு, மற்றவர்களை உம்முடைய அறையில் தங்க வைத்துவிட்டு உடனே ஜாகை பார்க்கப் புரசப்பாக்கம் சென்றிருக்கிறார். மாலையில் இங்கு வந்து

விடுவார். எழுதும்படி சொன்னார். இங்கே இருக்கும்படியாகவும் சொன்னேன். பிற பின்...

அநேக ஆசீர்வாதம்,
அன்பன்
வே. சாமிநாதன்.

x x x

வே. சாமிநாதன், உ திருவேட்டீசுவரன்பேட்டை
சென்னை சிவமயம் 29 - 9 - 1931
8—ஏ. எம்.

அநேக ஆசீர்வாதம்
உபயகுசலோபரி.

நான் 22-உ எழுதிய கடிதம் வந்திருக்குமே! அதற்கு இதுகாறும் பதில் வாராமையால் மெத்தக் கவலையடைந்து கொண்டிருக்கிறேன். முன் கடிதத்தில் 'நான் மடாதிபதி அல்லன்' என்று நான் எழுதியது எனக்கு நீர் முன்பு எழுதிய கடிதத்தின் தலைப்பில் 'திருவடித் தாமரைகளில்' என்று பாராட்டி எழுதியதை உட்கொண்டுதான்.

அக்கடிதத்திற் சில கேள்விகள் கேட்டிருந்தேன். அவை பதில் எழுதக் கூடாத நிலைமையிலிருக்கின்றனவோ வென்று ஊகிக்கின்றேன்.

உம்முடைய தேகஸ்திதி சௌக்கியமாக இருக்கின்றதா?

உம்மைத் தேடிக்கொண்டு நான்கு தினத்திற்கு முன்பு இரண்டு சந்நியாசிகள் வந்திருந்தார்கள். அவர்களில் ஒருவர் தாடிமுதலிய சந்நியாச உடுப்புகளுடன் காஷாயமும் தரித்திருந்தார். அவருடைய குணம் மிகப் பாராட்டுதற்குரியதாயிருந்தது. நின்றுகொண்டே பேசினார். என்ன சொல்லியும் அமரவில்லை. விசாரித்தபொழுது தாம் கிருஹஸ்தரென்றும், தரித்திருப்பது காஷாயமல்ல, கதரில் சாயம் தோய்த்ததென்றும், 'குடும்பத்தோடே இருந்து புரசபாக்கத்திலுள்ள ஒரு ஸ்கூலில் இருக்கிறேன்' என்றும்,

சம்பளம் ஐம்பதென்றும் சொன்னார். சாந்த ரூபியாக விளங்கினார். ஊர் தாரமங்கலமாம். இவ்வூரில் மிகுந்த வியாபகத்தோடு இருப்பதாகத் தெரிந்தமையால், அதற்கு ஐந்து நிமிஷத்திற்கு முந்தி இங்கே வந்து புரசப்பாக்கத் திற்கு, ஜாகை வைத்துக்கொள்ளச் சொல்லிக்கொண்டு புறப்பட்ட நண்பர் கணபதி ஐயரை அவருக்குப் பழக்கம் பண்ணி வைக்கத் தொடங்கினேன். கண்டவுடன் தமக்கு அவரோடு நெடுநாளாகப் பழக்கம் உண்டென்றும், அவருடைய ஜாகை தம்முடைய ஜாகையிலிருந்து நாலைந்து வீடுகள் தூரந்தான் உள்ளதென்றும் கணபதி ஐயர் சொன்னார். வந்தவரிடம் கணபதி ஐயரைக் கவனித்துக்கொள்ளும்படி சொன்னேன். அவ்வாறே பார்த்துக்கொள்வதாகக் கூறினார். இருவரும் கலந்து பேசிக்கொண்டார்கள்.

"மற்றவர், முண்டித சந்நியாசி; முகவாட்டத்தோடும், பெருமிதத்தோடும் இருந்தார். நான் அன்புடன் விசாரிக்கையில், மற்றொருவர் (தாடி) பார்க்க விரும்பினமையால் அழைத்து வந்தேனென்றும், வேறு யாதொரு காரியமும் இல்லையென்றும் கூறினார். இந்த ஊருக்கு எந்தக் காரியத்தை உத்தேசித்து வந்திருக்கிறீர்களென்று வினாவினேன். 'முன்னமே ஜகந்நாதையர் இங்கே இருந்தபொழுது சென்ற வருஷம் மற்றொருவருடன் வந்திருந்தேன்' என்றும், 'தாங்கள் ஒரு ரூபா கொடுத்தீர்கள்' என்றும், சேந்தமங்கலத்துப் பெரியாருடைய சிஷ்யகோடிகளில் தாம் ஒருவரென்றும், அங்கே நடந்த கும்பாபிஷேகத்தில் அதிகச் செலவுகள் ஆகிவிட்டன வென்றும், இப்பொழுது ரூ. 1500 நிர்ப்பந்தக் கடனிருக்கிறதென்றும், 'அதை ஒருவர் தீர்த்து வைப்பதாகச் சொன்னமையால் இவ்வூருக்கு வந்திருக்கிறேன்' என்றும் சொன்னார். இவ்வளவு அதிகமாக ஏன் செலவழிக்க வேண்டுமென்று கேட்டபொழுது, உடன் இருப்பவர், 'உத்ஸாகத்தால் செலவழித்துவிட்டார்' என்று விடையளித்,

தார். உம்முடைய க்ஷேமத்தை நிரம்ப விசாரித்துவிட்டு அவர்கள் சென்றனர். ஆகாரத்திற்கு என்ன செய்கிறீர்கள் என்றேன். கரதல பிக்ஷையென்று விடை அளித்தபொழுது இவ்வூரில் அதற்குச் சௌகர்யப்படாதே யென்று நான் கூற, 'இவருடைய (தாடி) வீட்டில்தான் பிக்ஷை வைத்துக்கொண்டிருக்கிறேன்" என்று தாடியுள்ள வரைச் சுட்டிச் சொன்னார். இவரில் தாடியுள்ளவருடைய குணம் மிகவும் திருப்திகரமாக இருந்தது.

நேற்றுவரை வேலை அதிகமாக இருந்தமையால் இன்றுமுதல் ஏதேனும் படிக்கலாமென்று எண்ணிக் கொண்டிருக்கிறேன்.

உமக்குக் கடிதம் எழுதிக்கொண்டிருந்தபொழுது திருச்செந்தூர் ஆண்டவன் பிரசாதம் வந்தது. எழுதுகிற வரும் அவருடைய திருநாமமுடையவரே யென்பது விளங்கும்.

பணசைப் பரிசளிப்புக் கொண்டாட்டம் அடுத்த மாசம் 10-ஆம் தேதிக்குமேல் கல்வி மந்திரியாகிய ஸ்ரீமான் குமாரசாமி ரெட்டியாரவர்களின் தலைமையின்கீழ் இவ்வூரில் நடைபெறுமென்று நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்க் கல்வியில் அவர் மிக்க பாண்டித்தியமுடைய வரென்றும், மிக்க தைரியமுடைவரென்றும் தெரியுமே! பணசைப் பெரியார்களும் அங்கீகாரம் செய்துவிட்டார்கள். தேதிமட்டும் குறிப்பிடப்படவில்லை.

'குறுந்தொகை'யில் இருநூறு பாட்டுவரையில் படித்தாயின.

கணபதி ஐயரிடத்தில் பெரிய புராணத்துக்குச் செய்யுள் முதற்குறிப்பு எழுதும்படி கொடுத்திருக்கிறேன். அங்ஙனம் செய்யச் சொன்னது ஏட்டுப் பிரதிகளில் புதிய பாடல்கள் காணப்பட்டால் தெரிந்துகொள்வதற்கு அநுகூலமாயிருக்கு மென்பது உமக்குத் தெரியுமே.

சேந்தமங்கலம் சுவாமிகளையும், ராமசந்திர யோகிகளையும் தரிசித்தால் என்னுடைய வந்தனம் சொல்ல விரும்புகிறேன்.

'கௌன்சில் ஆப் ஸ்டேட்'டுக்கு ஓட்டுப்பெற உரியவர்களும், அவர்களுக்காகத் துணை புரிபவர்களும் வந்து கொண்டே இருக்கிறார்கள்.

தந்தையார் முதலியவர்களுக்கும், தங்கைக்கும் என் ஞாபகம் சொல்ல வேண்டும்.

பிணி சரணாகதி பண்ணியவண்ணமாகவே இருக்கின்றது; சிறிதும் விலகவில்லை! சரணாகதி பண்ணினவர்களை விலக்கக் கூடாதென்று ஊழ்வினையாகிய நண்பன் அறிவுறுத்துகிறான்.

உமக்கு எழுதுவதென்றால் விஷயங்கள் எனக்கு அகப்படுகின்றன.

கடிதம் வந்தால் அதற்கும் இதில் பதிலெழுதலாமென்று காத்து வைத்திருந்தேன். வாராமையால் கையெழுத்துப் போட்டுவிட்டேன்.

பதில் அண்ணாவுக்கு எழுதினாலே போதும்.

மணி—ரு
இங்ஙனம்,
அன்பன்,
வே. சாமிநாதன்.

x x x

3 - 10 - 1931

அநேக ஆசீர்வாதம். உபய குசலோபரி.

நீர் நேற்று எழுதிய கடிதம் வரப்பெற்று எல்லாம் தெரிந்துகொண்டேன்.

உம்முடைய கடிதத்தைக் காணாமையால் உண்டாகியிருந்த கவலைக்கு எல்லையே இல்லை. இன்று ஒருவாறு சிறிது தணிந்தது. தேக ஸ்திதியை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொண்டு நன்றாகச் சௌக்கியமான பின்பே வரலாம்.

ஏதாவது செலவுக்கு வேண்டியிருந்தால் அனுப்பும்படி செய்கிறேன். சங்கோசமில்லாமல் தெரிவிக்கவேண்டும். அடிக்கடி கடிதம் எழுத வேண்டும். எழுதாமல் இருந்தது தவறென்றே சொல்லுவேன். ஒரு நிமிஷப் பொழுது நான் பட்ட கவலைக்கு எல்லையேயில்லை; ஈசுவரன்தான் அறிவான். இப்போது உம் வெப்பு எம்மட்டில் இருக்கிறதோ தெரியவில்லை...சென்ற கார்த்திகைக்கு உபவாஸம் இருந்தீரா?

வரும்போது தலைவர்கள் சொல்லியபடி பணசை வந்து கவனிக்க வேண்டியவற்றைக் கவனித்துக்கொண்டும், செய்ய வேண்டியவற்றை ஒருவராகச் செய்தும், ஞாபகத்துக்குக் குறிப்பு எடுத்துக்கொண்டும் வரக்கூடுமென்று நம்புகிறேன். ஜாக்கிரதையாகப் பழகி வரக் கூடுமே...

வந்தவர்களில் தாரமங்கலத்தார் உம்மைப் பார்க்க வேண்டுமென்று தாம் வந்ததாகச் சொன்னார் பழக்கம் உண்டென்று சொல்லவில்லை.

பெரிய புராணம் வாங்கிச் சென்ற சி. கணபதி ஐயர் அப்பால் வரவேயில்லை. எல்லாரையும் தனியே விட்டு வருவதற்கு யோசித்துக்கொண்டிருக்கிறார் போலும்! அல்லது முதற் பதிப்பு முழுவதையும் எழுதி முடித்துக் கொண்டுவர எண்ணியும் இருக்கலாம். சென்று பார்த்துவர எனக்கு இயலவில்லை.

மயிலாப்பூர் மாப்பிள்ளைக்கு ஜ்வரங் கண்டு மிகவும் அசௌகரியமாக இருந்து தகுந்த சிகித்ஸைகளால் வரவர இப்பொழுது குணமாகிக்கொண்டு வருகிறது. இது விஷயத்தில் இப்போது மிகக் கவலையாகவேயிருந்தது.

பரிசுதான் குறிப்பிடப்படவில்லை. பெறுபவர் நேற்று வந்தார். சாகித்தியம் செய்யப் பழக்கம் செய்து வருவதாகச் சொன்னார். அதை இப்போது வைத்துக்கொள்ள

வேண்டாம், பேசினாற்போதுமென்று சொல்லி யனுப்பினேன்.

'குறுந்தொகை' வேலை 200 பாடல் பார்க்கப்பட்டு அப்படியே நிற்கின்றது.

சி. சுப்பிரமணிய ஐயர்க்கு நாலைந்து தினங்களாக ஜ்வரமாக இருக்கிறது. இப்போது குணந்தான். சௌக்கிய மான பின்பு வரலாமென்று சொல்லியனுப்பிவிட்டேன்.

நான் ஏகாந்தமாகத்தான் இருந்து வருகிறேன். ஒன்றும் செய்ய முடியவில்லையே யென, மனக்கவலை துணையாக இருந்து வருகிறது. தனியே இருக்கிறேனென்று எண்ண வேண்டாம். காரியார்த்தமாகப் பலர் வந்து போகிறார்கள். படிப்பைப்பற்றிய பிரஸ்தாபமே யில்லை!

சிரமமில்லாத காலத்தில் எளிய நடையுள்ள திருவிளை யாடலை முதலிலிருந்து பாராயணம் செய்து வருகிறேன். இன்றைக்குத் திருமணப் படலம் படிக்கப்பட்டு வருகிறது,

சிரமமாக இருந்தால் சேந்தமங்கலம் முதலிய வற்றிற்குப் போவதை நிறுத்திக்கொள்ளலாம். மற்றொரு சமயம் வைத்துக்கொள்ளலாம்.

சிர. கோதண்டராமையரிடமிருந்து கடிதம் வந்து கொண்டிருக்கிறது. திருப்தியாகவே இருப்பதாகத் தெரிகிறது.

ஆபீசிலிருந்து வந்த பின்பு சி. கல்யாணசுந்தரம் உம்முடைய கடிதத்தைப் பார்க்கும்படி செய்கிறேன். அவன் ஆபீசுக்குப் போன பின்புதான் கடிதம் வந்தது.

மற்றவர்களுக்கு உம்முடைய ஞாபகம் சொல்லி விட்டேன். என் 'கால்' வலி 'முழு' வலியாகவே யிருக்கிறது. பாவ கர்மாக்களை அநுபவித்துத் தொலைத்தல் உத்தமமென்றே எண்ணுகிறேன்.

பிள்ளையவர்கள் சரிதத்தை இன்றுதான் படிக்க எடுத்தேன். 50 பாராக்கள் பார்த்தாயின பின் எழுதுகிறேன்.

ஆத்தில் உள்ளார்க்கு என் ஞாபகம் சொல்லவேண்டும். இரண்டாம்பாலாறிய முதியவர்கள் யாரேனுமிருந்தால் உம்மைத் திருஷ்டி சுற்றிப் போடச் சொல்ல வேண்டும். யாருடைய கண்ணாவது பட்டிருக்க வேண்டுமென்று எண்ணுகிறேன். அடிக்கடி கடிதம் எழுதுக.

அன்பன்

**வே. சாமிநாதன்.**

(ஸ்ரீமத் ஐயர் இவருக்குக் கடிதம் எழுதியதோடு ரூ. 20 மணியார்டரும் செய்தார்.)

*7—10—31*

அநேக ஆசீர்வாதம். உபயகுசலோபரி.

இதற்குமுன் எழுதிய கடிதம் வந்திருக்குமே! சி. கல்யாணசுந்தரம் தான் ஒரு கடிதம் உமக்கு முன்பு எழுதியதாகவும், பதில் வாராமையாலும், எனக்கு வந்த கடிதத்தில் குறிப்பிடாமையாலும் அது உம்பால் வந்ததோ, வரவில்லையோ வென்று சொன்னான். வந்திருந்தால் அதற்குப் பதில் எழுதுக. அதிலேயே தேக ஸ்திதியைப் பற்றி எழுதினால் நானும் தெரிந்துகொள்வேன். வித்து வான் சுப்பிரமணிய ஐயர் சௌக்கியமடைந்து நேற்று இரவுமுதல் வந்துகொண்டிருக்கிறார்.

ஒவ்வொரு நாளும் தபாலைப் பார்த்தவண்ணமாக இருக்கிறேன். உமக்கு ஜ்வரம் என்பதைப் பனைசைக்கும் சொல்லியனுப்பினேன். பரிசளிப்பின் தேதி இன்னும் குறிப்பிடப்படவில்லை. இந்த மீ (இங்கிலீஷ்) 17-க்கு மேல் ஏற்படலாமோ என்று தோன்றுகிறது. பனைசையி லிருந்து காஷ்கீபர் சுப்பிரமணிய ஐயர் வேறு காரியமாக இவண் வந்த அன்றே ஊருக்குப் போய்விட்டார். வேறு விசேஷமொன்றுமில்லை. உமது கடிதம் வாராமையால் கவலையுற்று இதை எழுதலானேன். உமக்குச் சௌகரிய

மில்லையாயின் தகப்பனாரவர்களைக் கொண்டாகிலும் விவரம் எழுதும்.

அன்பன்
வே. சாமிநாதன்.

x x x

5—பி. எம்.
20—10—31

அநேக ஆசீர்வாதம்.

உபயகுசலோபரி.

உம்முடைய கடிதம் வந்து சில நாளானமையின் தேகஸ்திதி எவ்வண்ணமிருக்கிறதோவென்று நானும், நண்பர்களும் கவலை உள்ளவர்களாக இருக்கிறோம்.

நிற்க, விஜயதசமியின் பின் புறப்படுவதாக மூன் கல்யாணசுந்தரத்திற்கு எழுதியிருந்தபடியே புறப்பட்டுப் பனைசைக்கு வந்து பார்த்துவரவேண்டிய காரியங்களைப் பார்த்து வரக்கூடுமென்று நம்புகிறேன். வரும் காலத்தை முன்னர்த் தெரிவித்திடுக. வருங்காலத்தில் எண்ணெய் மாகாணம் முதலியவற்றின் இயல்பையும், அளவையும், செய்திகளையும் தெரிந்துகொள்ளக் கூடுமே!

இன்று விஜயதசமியாதலால் சி. பாலுவுக்கு வித்தியாப் பியாசம் செய்வித்தார்கள். நண்பர் சி. சுப்பிரமணிய ஐயர் கம்பராமாயணம் தொடங்கினார். நண்பர் வித்துவான் சி. கணபதி ஐயர் இப்பொழுது இதோ வந்திருக்கிறார். நீர் குடியிருப்பது நந்நெஞ்சமே யாதலால் நீரும் ஈண்டிருப்பதாகவே பாவித்துக்கொண்டேன். பிற பின்.

இ. வா. ஜகந்நாத ஐயர்க்கு,
(தமிழ்ப் பண்டிதர்)
மோகனூர்,
(வழி) கரூர், எஸ். ஐ. ஆர்ஓய் (S. I. RY)

அன்பன்
வே. சாமிநாதன்.

x x x

சென்னை மயிலாப்பூரில் சிம்மம்போல் வாழ்ந்து வந்த வி. கிருஷ்ணசாமி ஐயர், இவருடைய ஆசானிடம் அன்பும் மதிப்பும் உடையவர். அவர்தம் மூத்த மாப்பிள்ளை தாம் ஆர். நாராயணசாமி ஐயர். மாப்பிள்ளை என்பது விவகார நிலைக்குத்தான் சரியேயொழிய உண்மையில் அந்தப் பேருபகாரியின் மூத்த பிள்ளை என்றே நாராயண சாமி ஐயரைச் சொல்ல வேண்டும்.

நாராயணசாமி ஐயர் திருவிடைமருதூரில் 1881-ஆம் ஆண்டு பிறந்தார்.* சென்னை அரசாங்கக் கல்லூரியில் படித்துப் பி.ஏ., பட்டமும் சட்டக் கல்லூரியில் சேர்ந்து பி. எல்., பட்டமும் பெற்றார். 1908-ஆம் ஆண்டில் வழக்கறிஞர் ஆனார்.

பி.எஸ். சிவசாமி ஐயரிடத்தும், பிறகு எஸ். ஸ்ரீநிவாஸை யங்காரிடத்தும் ஜூனியராக இருந்து சட்ட அறிவை மட்டுமல்ல, சமுதாயத்தில் பழகும் முறை, பெருந்தன்மை கற்றோரை மதிக்கும் இயல்பு முதலிய நற்பண்புகளையும் பெற்றார்.

'நட்பும், தயையும், கொடையும் பிறவிக் குணம்' என்பது ஔவை வாக்கு.

நாராயணசாமி ஐயர் தம் பிறவியிலேயே இந்த மூன்று நற்குணங்களும் அமையப்பெற்ற செல்வராக விளங்கினார்.

இந்த வள்ளலுக்கு, 'இன்னாருக்கு இதைக் கொடுக்கப் போகிறேன் என்றோ, 'கொடுத்தேன்' என்றோ சொல்லத் தெரியாது, இடது கைக்குத் தெரியாது வலது கையால் வழங்கத்தான் தெரியும் என்பார்கள்.

மகாமகோபாத்தியாய எஸ். குப்புசாமி சாஸ்திரிகள், டி.எஸ். ராமசந்திர ஐயர், ஸ்ரீமத் ஐயர் போன்ற மொழி வல்லுநரும், எஸ். வரதாசாரியார் போன்ற சட்ட நிபுணர்

* 1945 டிசம்பர் 24—இல் காலமானார்.

களும், பல இசை - ஓவியக்கலைஞர்களும் இவருடைய அன்பர்களாக இருந்தார்கள்.

நாராயணசாமி ஐயர் நல்ல சுந்தர வடிவம்—ஆஜானுபாஹு—எப்பொழுதும் புன்னகை பூத்த முகம்—கல்வி, செல்வம் எல்லாவற்றுக்கும் மேலாகப் பணிவும் அடக்கமுமான இயல்பு—போதாதா? வாழ்க்கையில் வெற்றிகள் பல பெறுவதற்கு அவருக்கு வேறு என்ன வேண்டும்?

அவர் எதையும் தீர ஆலோசித்தே செயல்படுவார். அறிவு படைத்தவர்களிலும், சிறந்தவர்களைத் தேடிப் பிடித்து நட்புக்கொண்டு நல்ல பல காரியங்களை இயற்று வதிலும் வல்லவர் அவர். இடையில் எத்தகைய இடையூறுகள் நேரிடினும் கலங்கமாட்டார். முன்வைத்த காலைப் பின்வைக்காத நெஞ்சுறுதி படைத்தவர்.

'மதராஸ் லா ஜர்னல்' என்ற சட்டப் பத்திரிகையின் உரிமையை 1914 - இல் வாங்கிக்கொண்டு, அதனை நடத்தி வந்தார். அப்பத்திரிகைக்கு 1923 - இல் ஓர் அச்சகத்தையும் வாங்கினார்.

தம்கீழ்ப் பணிபுரிபவர்களிடம், தாம் முதலாளி என்ற அதிகாரத்தை அவர் காட்டியதில்லை. ஒருவரை நம்பி ஒரு வேலையை ஒப்படைத்துவிட்டால் பிறகு அநாவசியமாக அதில் தலையிடமாட்டார்.

தம்முடைய சொந்தக் காரியம் போன்ற மனோபாவத்தோடு தம்மிடம் பணிபுரிபவர்களைச் செயல்பட வைக்கும் ஆற்றல் அவரிடம் மிகுதியாக இருந்தது.

அதனால் 'லா ஜர்னல்' பத்திரிகையைச் சட்ட உலகில் தன்னிகரற்று விளங்கும்படியாகச் செய்தார். வழக்கறிஞர்களுக்கு இன்றியாமையாத பல சட்ட நூல்களை விரிவுரைகளுடன் வெளியிட்டார். அவருடைய சட்டத் தொகுப்புகள் (Law Digests) அவருக்கு உலகில் பெரும் புகழைத் தேடித் தந்தன.

x x x

நாராயணசாமி ஐயரின் பெரிய தகப்பனார் புதல்வரான டி. எஸ். ராமசந்திரையர், அவருக்கு உற்ற நண்பராகவும் இருந்தார்.

ராமசந்திரையரும் திருவிடைமருதூரைச் சேர்ந்தவர்தாம். இளமையிலேயே அவர் தம் தந்தையை இழந்தார். படிப்பில் அவருக்கு இருந்த ஆர்வத்தையும், திறமையையும் கண்டு சம்பளம் இல்லா மாணவராக அவரைக் கல்லூரியில் சேர்த்துக்கொண்டார்கள்.

தம் 20 - ஆம் வயதில் 1891 - ஆம் ஆண்டு ராமசந்திர ஐயர் பி.ஏ., பட்டம் பெற்றார். பதிவுத்துறையில் குமாஸ்தாவாகப் பணியில் சேர்ந்தார். தம் அறிவாலும், உழைப்பாலும் படிப்படியாக மாவட்டப் பதிவாளராகவும், பின்னர், பதிவுத்துறை இன்ஸ்பெக்டர் - ஜெனரலின் உதவி அதிகாரியாகவும் இருந்து ஓய்வு பெற்றவர்; அவர் வடமொழி, தமிழ் இரண்டிலும் தேர்ந்தவர்.

அந்தக் காலத்தில் ஆங்கிலத்தில் 'த்ரிவேணி' என்ற ஆங்கிலப் பத்திரிகை 'மதராஸ் லா ஜர்னல்' அச்சுக்கூடத்தில் அச்சாகி வெளியாயிற்று. அந்தப் பத்திரிகை இலக்கியத்துக்கே முதலிடம் கொடுத்துப் பேணி வந்தது.

'நமது தமிழ்மொழியிலும் அத்தகைய சிறந்த பத்திரிகை ஒன்று வேண்டும் என நாராயணசாமி ஐயர் விரும்பினார்.

இது நிற்க...1931 - ஆம் ஆண்டு பனைசைப் பரிசளிப்பு விழா அக்டோபர் மாதம் 31-ஆம் நாள் சென்னையில் நடைபெற்றது. அதற்குள் அன்பர் கி.வா.ஜ., மோகனூரிலிருந்து சென்னை வந்துவிட்டார்.

விழாவுக்குக் கல்வியமைச்சராக இருந்த குமாரசாமி ரெட்டியார் தலைமை வகித்தார்.

இவர் வரவேற்புப் பத்திரம் ஒன்று எழுதி வாசித்துப் பேசினார்.

தமிழில் நல்ல புலமையுடைய கல்வியமைச்சர், "ஏதேது, இந்தச் சிறு வயதில் இவ்வளவு அற்புதமாகப்

பாரதியாரைப் போல் பாடல்கள் எழுதுகிறாரே!'' என இவரைப் புகழ்ந்தார்.

விழா முடிந்தவுடன், ''பாரதியார் எங்கே? இவர் எங்கே? அவரோடு சேர்த்து இவரைப் பாராட்டுவதா?'' எனச் சிலர் இவரது காதில் விழும்படி கல்வியமைச்சரிடம் குறை கூறினார்களாம். ஸ்ரீமத் ஐயரின் காதுக்கும் அந்தச் செய்தி எட்டியது. அவருக்குக் கல்வியமைச்சரின் பேச்சில் எந்தக் குறையும் தோன்றவில்லை; 'ஒரு வித்தையில் நூதனமாக முன்னுக்கு வருபவர்களை அப்படிப் பேசித்தான் பிரகாசப்படுத்த வேண்டும்' என்பது ஸ்ரீமத் ஐயரது கொள்கை. அவரும் கல்வித்துறையில் பணியாற்றியவர் தாமே!

தாம் கும்பகோணத்தில் இருந்தபோது, அப்படி ஒரு முறை பேசிவிட்டுச் சிலரின் கோபத்திற்கு ஆளான வரலாற்றையும் அப்போது ஐயரவர்கள் இவரிடம் சொன்னார்:—

கும்பகோணம் போர்ட்டர் டவுன் ஹாலில் மதுரையிலிருந்து வந்திருந்த பூச்சி(ஸ்ரீநிவாஸ) ஐயங்கார் கச்சேரி நடைபெற்றது. அவர் அப்போது பெரும் புகழும் பெறாத சிறு வயதினராக இருந்தார். ஸ்ரீமத் ஐயர், கச்சேரியின் முடிவில் அந்த இளம் வித்துவானைப் பாராட்டினார்:

''சோழ நாட்டில் பரம்பரையாகச் சங்கீத வித்துவான்கள் வாழ்ந்து வரும் நகரம் இது. இன்று இங்கே பாண்டிய நாட்டிலிருந்து வந்து பாடிய இந்த இளைஞர் எங்கள் எல்லோரையும் மயக்கிவிட்டார். இந்த நகரில் 'த்ஸெளகம் ஸ்ரீநிவாஸையங்கார்' என்ற ஒரு சங்கீத வித்துவான் இருந்தார். அவரை எல்லோரும் 'சீனுவையங்கார்' என்றே அழைப்பார்கள். இந்த இளைஞராகிய ஸ்ரீநிவாஸையங்கார் இந்த நகருக்கு வந்து எல்லோருக்கும் சங்கீதத் தேனைப் புகட்டிப் புகழ்பெறப் போகிறார் என்பதாலோ என்னவோ முன்னவர் பெயர் சீனுவையங்

கார் எனக் குறைந்துவிட்டது'' என இவரைப் புகழ்ந்து பேசவேண்டும் என வேடிக்கையாகச் சொன்னார்: அவ்வளவுதான்!

மறு நாள் ஒரு முதியவர் இவரிடம் சண்டைக்கே வந்து விட்டார். ''சபையில் பேசச் சொன்னால் எதை வேண்டு மானாலும் பேசிவிடுவதா? த்ஸௌகம் ஸ்ரீநிவாஸையங் கார் எங்கே? இவர் எங்கே? அதெல்லாம் உங்க தமிழோடு வைத்துக்கொள்ளும், ஐயா! இந்தச் சபையிலே நீர் இப்படிப் பேசியது தப்பு தப்புத்தான்'' என ஐயரவர் களைக் கண்டித்தாராம்.

''ஒவ்வொரு துறையிலும் அந்த அந்தக் காலத்திற் கேற்பப் புதிதாக முன்னுக்கு வரும் இளைஞர்களை நாம் பாராட்டி ஊக்கப்படுத்தத்தான் வேண்டும். கல்வி அமைச்சர் உம்மைப் பாராட்டியது முற்றும் பொருத்தமே!'' என்று ஐயரவர்கள் இவரைப் பாராட்டியபோது இவரது மகிழ்ச்சியைச் சொல்லவும் வேண்டுமோ!

x x x

ஒரு நாள் இவர் தம் ஆசானுடன் அமர்ந்து 'குறுந் தொகை' குறித்த ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார். அப்போது சென்னை லா ஜர்னல் அச்சுக்கூட அதிபரான முற்கூறிய ஸ்ரீ நாராயணசாமி ஐயர், ஐயரவர்களைக் காண வந்தார். தம் உறவினரான ராமசந்திரையருடன் 'கலை மகள்' என்ற பெயரில் புதிதாகத் தமிழ் இலக்கிய மாதப் பத்திரிகை ஒன்றைத் தாம் ஆரம்பிக்க இருப்பதாகத் தெரிவித்தார். பிரஜோத்பத்தி ஆண்டு தை மாதம் (1932- ஜனவரி) அதன் முதல் இதழ் வெளிவர இருக்கிறது என்றும் சொன்னார். கலைமகளின் முதல் இதழுக்குக் 'கலைகள்' என்ற தலைப்பில் ஐயரவர்கள் ஒரு கட்டுரை எழுதித் தருவதோடு மாதந்தோறும் தொடர்ந்து ஒரு கட்டுரையும்

தந்து உதவ வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். ஐயரவர்களும் மகிழ்ச்சியுடன் நாராயணசாமி ஐயரின் வேண்டுகோளுக்கு இசைந்தார். அப்போது அங்கே இருந்த இவரைப் பார்த்தவுடன் வந்தவர்களுக்கு என்ன தோன்றியதோ, "எங்கள் பத்திரிகைக்கு உதவி செய்ய யாரேனும் இருந்தால் சொல்லவேண்டும்" என்று ஐயரவர்களிடம் தெரிவித்தார்கள். உடனே, "ஏன், என்னிடம் இவர் இருக்கிறார். கவிதை எழுதுவார். கட்டுரை, கதை எழுதுவார். ப்ரூஃப் நன்றாகவே திருத்துவார். முடியுமானால் இவரைப் பயன்படுத்திக்கொள்ளலாமே" என்றார்.

நாராயணசாமி ஐயர், "மிகவும் நல்லதாகப் போயிற்று. எங்களுக்கும் இப்படி ஒருவர் வேண்டியதுதான். என்னால் இயன்ற ஊதியம் தரவும் சம்மதிக்கிறேன்" என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொண்டார்.

அன்றே இவர் 'கலைமகள்' தொண்டர் ஆனார்.

நல்ல வெள்ளைக் காகிதத்தில், ஒரு தனியான வடிவத்தில் 'கலைமகள்' 1932, ஜனவரி மாதம் முதல் வெளி வரலாயிற்று, அதுபற்றிக் 'கல்கி' அவர்கள் ஆனந்த விகடனில் 'கலைமகள் விஜயம்' என்பதாக ஒரு கட்டுரையே எழுதினார். காந்தமலை முருகனின் அருள் தொண்டரான இவரது 'கலைமகள்' வாழ்த்து முதல் இதழின் முதல் பக்கத்தையே அலங்கரித்தது.

**"பார்வளரும் அறுபத்து நான்குகலை யாங்கதிரைப்**
**பரப்பி ஓவாச்**
**சீர்வளரும் நூறிதழ்சேர் வெண்கமலத் தவிசினிலே**
**சிறக்க மேவி**
**ஏர்வளரும் அறிவுயர்வு பெறஅருள்செய் கலைமகளாம்**
**எம்பி ராட்டி**
**வார்வளரும் இயலிசைநா டகத்தினைத் திசைவாழ**
**வணங்கு வோமே."**

என்பது அதில் முதல் பாடல். ஸ்ரீமத் ஐயர் எழுதிய

'கலைகள்' என்னும் கட்டுரை அந்த வாழ்த்துப் பாடலை அடுத்துச் சிறப்பாக அமைந்தது.

x x x

இவருடைய நண்பர் ச. கு. கணபதி ஐயர் திருப்பத்தூரிலிருந்து தம் குடும்பத்துடன் 2-9-1931-இல் சென்னைப் புரசைப்பாக்கம் வந்துவிட்டார். அங்கு ஜாகையும் பார்த்துக்கொண்டார். புரசைப்பாக்கம் இ. எம். எல். எஃப். உயர்நிலைப் பள்ளியில் தலைமைத் தமிழ் ஆசிரியர் வேலை அவருக்குக் கிடைத்தது.

கணபதி ஐயர் சென்னை வந்தது தெரிந்தவுடன், அன்பர் கி.வா.ஜ., அவர்களின் பால்ய நண்பர் செல்லமையருக்கும் மேட்டுப்பாளையத்தில் இருப்புக் கொள்ளவில்லை. இவரது ஒவ்வொரு கடிதத்தையும் பார்க்கும் போது, தாமும் சென்னைக்கே வந்துவிட வேண்டும் என்கிற அவா அவருக்கு எழும்.

கணபதி ஐயர் வந்தவுடன் செல்லமையரையும் சென்னைக்கு வந்துவிடும்படி இவர் எழுதவே, 1932 கோடைவிடுமுறையின்போது அவரும் இங்கே வந்தார்.

செல்லமையர், பி.ஏ.,எல்.டி., படித்தவர். ஆதலால் பெரம்பூர் உயர்நிலைப்பள்ளியில் அவருக்குச் சிரமமின்றி ஆசிரியர் வேலையும் கிடைத்தது.

அதுமுதல், வந்த இருவரும் ஐயரவர்களின் பதிப்புப் பணியில் உதவி புரியத் தொடங்கினார்கள்.

x x x

'கலைமகள்' அலுவலக வேலைநேரம் காலை பத்து மணிமுதல் மாலை ஐந்து மணியாக இருந்தது. பல நாள் பிற்பகல் இரண்டு அல்லது மூன்று மணிக்கே அலுவலகத்திலிருந்து கிளம்பி ஐயரவர்களின் வீட்டிற்கு வந்துவிடுவார், அன்பர் கி.வா ஜ அதுமுதல் இரவு பத்துமணி வரைக்கும் ஆசானுடன் இருந்து வேலை செய்வார்.

இவர் மிகவும் கவனமாகப் படித்துப் பிழை திருத்து வார் என்பதை இதோ இந்த நிகழ்ச்சியிலிருந்து அறியலாம்:

ஐயரவர்கள் தம் கட்டுரை ஒன்றில் 'மாலை நேரத்தில் சுமங்கலிகள் விளக்கேற்றினார்கள்' என்று எழுதியிருந்தார். ஆனால் ப்ரூஃபில் அந்தப் பெண்கள் 'அமங்கலிகள்' ஆகிவிட்டார்கள்! அச்சு மை, அளவுக்கு மிஞ்சிப் பதிந்து விட்டதனாலோ என்னவோ முன் ப்ரூஃபில் இது இவர் கண்ணில் படவில்லை! ஃபாரம் ப்ரூஃப்' வரைக்கும் அந்தப் பிழை வந்துவிட்டது. என்றாலும் நல்ல வேளையாகக் கவனித்து அதைத் திருத்திவிட்டார் இவர்.

அச்சுக் கோப்பவர்கள் யந்திரம்போல் வேலை செய்பவர்கள்; பொருளில் சிந்தை செலுத்தாமல் கூர்ந்து கவனியாமல் அடுக்கியபோது விளைந்தது இந்த வகைப் பிழை.

வரிகள் மிகாமல் இருக்க, நீண்ட சொற்களைக் குறைக் கவும் மற்றும் பல நுட்பங்களைக் கண்டுகொள்ளவும், அதே அச்சகத்தில் இருந்த டி. எஸ். சுப்பிரமணிய சாஸ்திரிகள் என்பவரிடத்திலிருந்து இவர் நிரம்பக் கற்றுக்கொண்டார்.

x x x

இவர் ஐயரவர்களிடம் வந்து சேர்ந்ததிலிருந்து முறை யாகத் தமிழ் நூல்கள் அனைத்தையும் கற்று வந்தார். என்றாலும், வித்துவான் தேர்வு எழுதும் வயது வரவில்லை.

ஆசிரியராகவோ, கல்லூரியில் சேர்ந்து படிக்காமலோ ஒருவர், வீட்டிலிருந்தே படித்து நேர்முகமாக வித்துவான் தேர்வு எழுத வேண்டுமென்றால் 25 வயது ஆகியிருக்க வேண்டுமென்பது சென்னைப் பல்கலைக் கழக விதியாக இருந்து வந்தது. எனவே, உரிய வயதில் ப்ரிலிமினரி என்ற முதல் தேர்வில் தேறியபின், இரண்டு ஆண்டுகள் கழித்தே வித்துவான் ஃபைனல் என்ற முழுமையான

தேர்வு எழுத முடியும். இவர் 1933-இல் வித்துவான் ஃபைனல் எழுதுவதற்கு வேண்டிய பாடங்களையெல்லாம் இரவில்கூட வெகுநேரம் திரும்பத் திரும்பப் படித்து வந்தார்.

x x x

**ஆசானின் பழைய நினைவுகள் :**

ஐயரவர்கள் பிள்ளையவர்களிடமிருந்து பாடம் கேட்டவர்; ஆகையால் பிள்ளையவர்களின் நல்லியல்புகள் பலவும் ஐயரவர்களிடமும் அமைந்திருந்தன.

ஒரு சமயம் ஆரியங்காவற்பிள்ளை என்ற மாணவர் ஒருவர் பிள்ளையவர்களிடம் இருந்து பாடம் கேட்டு வந்தாராம். அவர் அயலூரிலிருந்து வந்தவராதலால் எப்போதும் கவிஞர்கோமானான பிள்ளையவர்களிடமே இருந்தார்.

ஒரு நாள் இரவு உறங்கிக்கொண்டிருந்த பிள்ளையவர்கள் வழக்கம்போல் நடுநிசியில் விழித்துக்கொண்டார். படுக்கையில் எழுந்து உட்கார்ந்துகொண்டு ஜன்னல் வழியாக வீதிப் பக்கம் பார்த்தார்.

தம் மாணவர் ஆரியங்காவற்பிள்ளை, படுக்கையில் படுத்திராமல் தூணிலே சாய்ந்துகொண்டிருத்தலைக் கண்டார். அந்த மாணவரது வாய் அப்போது ஒரு பாடலை முணகிக்கொண்டிருந்தது. கவிதை எழுதும் பயிற்சி அவருக்கு உண்டென்பதை முன்பே பிள்ளையவர்கள் அறிவார்.

மாணவரது பாடல் தடைப்படக் கூடாது என்று, பிள்ளையவர்கள் திரும்பவும் படுத்துக்கொண்டார். உறங்கு வாரைப்போல அந்தப் பாடலைக் கேட்கலானார்.

**" விடவாளை வென்ற விழியாளைப் பூமியின் மேலதிர**
**கடவாளைப் பெண்கள்தம் நாயகமாம் ஒரு நாயகத்தை**

மடவாளை என்னுள் வதிவாளை இன்பவடிவை
என்சொற்
கடவாளை யான்தெய்வ மேயென்று போயினிக்
காண்பதுவே?''

என இப்படி ஆரியங்காவற் பிள்ளை பாடிக்கொண்டிருந்த பாடல், புலவர் சிகாமணியின் நெஞ்சைக் கவ்வியது. அது பற்றி வெகு நேரம் சிந்தித்தபின் கண்ணயர்ந்துவிட்டார்.

சில நாட்கள் சென்றபின் ஒரு நாள் பிள்ளையவர்கள் அந்த மாணவருக்கும், வேறு சிலருக்கும் பாடம் சொல்லிக் கொண்டிருந்தார். அப்போது, ''பிள்ளையவர்களின் வீடு இதுதானே?'' என விசாரித்துக்கொண்டு அந்த மாணவரின் பெற்றோர் அங்கு வந்தனர். அவர் களுடன் அந்த மாணவரின் மனைவி நாயகமும் வந்திருந்தாள்.

தம் மனைவியைக் கண்டவுடன் அந்த மாணவருக்கு என்னவோபோல் ஆகிவிட்டது. உடனே எழுந்துபோய், ''நீங்கள் எல்லோரும் இங்கே எதற்கு வந்தீர்கள்? உங்களை வரச்சொல்லி நான் எழுதவில்லையே!'' என அவர் களிடம் படபடவெனக் கோபப்பட்டார்.

அவரது கோபம் கவிஞர் கோமானுக்கு மகிழ்ச்சியையே தந்தது. அவரைத் தம்மிடம் அழைத்து, ''அவர்களைக் கோபித்துக்கொள்ளாதே! அவர்களாக வரவில்லை. நான்தான் உமது சாப்பாடு, சௌகரியத்தை முன்னிட்டு வரும்படி அவர்களுக்குக் கடிதம் எழுதினேன்'' என்றார்.

இவ்வாறு தம் மாணவர்களுக்கு எந்த எந்த வகையில் குறைகள் உள்ளனவோ அவற்றையெல்லாம் தாமே உணர்ந்துதீர்த்து வைக்கும் பிள்ளையவர்களது உயர்ந்த குணம் ஐயரவர்களிடமும் அமைந்திருந்தது.

சில மாதங்களுக்கு முன்பு இரண்டு சந்நியாசிகள் அன்பர் கி.வா.ஜா - வைத் தேடிக்கொண்டு ஐயரவர்களின் வீட்டிற்கே வந்திருந்தார்கள்; இதுபற்றி முன்பே

ஐயரவர்கள் கடிதம் எழுதினார் அல்லவா? அன்றுமுதல் ஸ்ரீமத் ஐயருக்கு அந்தச் சந்நியாசிகள், இவரையும் அந்த மார்க்கத்தில் ஈர்த்துவிடுவார்களோ என்ற கவலை மூண்டுவிட்டது.

இதுகாறும் திருமணம் செய்துகொள்ளத் தம் பெற்றோர், உற்றார் எவ்வளவோ சொல்லியும் இணங்காத இவர், தாம் சொன்னால்மட்டும் எப்படி இணங்கப் போகிறார் என்கிற ஐயமும் இருந்து வந்தது ஐயரவர் களுக்கு.

முதலில் இவருடைய மனத்தைத் தம் குமாரரின்மூலம் அறிந்துகொள்ளவேண்டும் என விரும்பினார்.

x x x

இவரது பத்திரிகை அலுவலகம் இருந்த முண்டகக் கண்ணி அம்மன் கோவில் தெருவில் வக்கீல் குமாஸ்தா கல்லூர் வி. ராமசாமி ஐயர் என்பவர் இருந்தார். அவர் வக்கீலுக்குப் படிக்கவில்லையே தவிரச் சட்ட அறிவில் மிகச் சிறந்தவராக விளங்கினார்.

அவரிடத்தில் மிகுந்த ஈடுபாடு உண்டு, ஐயரவர் களுக்கு. காரணம், ராமசாமி ஐயரின் உலக விஷயங்கள் பற்றிய அறிவே. கலலூர் ராமசாமி ஐயரின் சகோதரி ஜானகியம்மாளின் கணவர் சுந்தரப்பையர் கும்ப கோணத்தில் ஸ்ரீமத் ஐயர் இருந்தபோதே அவருக்குப் பழக்கமானவர்.

சுந்தரப்பையருக்கு ரங்கநாதையர், பாலசுப்பிர மணியன், சேதுராமன் என மூன்று குமாரர்களும், மங்களம், அலமேலு, மீனா என மூன்று பெண்களும் இருந்தார்கள். அவர் பெரிய சம்சாரி. அதனால் தம் சகோதரியின் இரண்டாம் மகள் அலமேலுவை ராமசாமி ஐயர் தம்மிடமே வைத்துக்கொண்டு வளர்த்து வந்தார். அவளுக்குப் பாட்டும், படிப்பும் சொல்லி வைத்தார். அப் போது அலமேலு மிகச் சிறிய பெண்ணாக இருந்தாள்.

ஐயரவர்கள் கல்லூர் ராமசாமி ஐயரின் வீட்டுக்குப் போகும்போதெல்லாம் உள்ளேயிருந்து காபியைக் கீழே சிந்தாமல் மெதுவாக நடந்து எடுத்து வந்து கனிவுடன் கொடுப்பாள், அந்தச் சிறு பெண்.

"ஏதாவது ஒரு பாட்டுப் பாடேன்" என அந்தப் பெண்ணிடம் ஐயரவர்கள் சொல்வார். அந்தப் பெண்ணும் சங்கோசமின்றிப் பாடுவாள். ஒருதரம், "சபாபதிக்கு வேறு தெய்வம் சமானமாகுமா-க்ருபாநிதி" என ஆபோகி ராகத்தில் அவள் பாடியதைக் கேட்டவுடன், "ஆஹா" என ஐயரவர்கள் பரவசம் அடைந்து போனார். கோபால கிருஷ்ண பாரதியார் பாடல் என்றால்தான் அவருக்கு மிகவும் பிடிக்குமே.

"ராமசாமி, இந்தப் பெண்ணுக்கு நீ வரன் ஏதும் பார்க்கக் கூடாது. இவளுக்கேற்ற மாப்பிள்ளையை நான்தான் பார்த்துத் தரப்போகிறேன்" என ஐயரவர்கள் சொன்னாராம்.

இப்போதெல்லாம் வயது முதிர்ச்சியால் ஐயரவர்களால் ராமசாமி ஐயரின் வீட்டுக்குப் போக முடிவதில்லை. கி.வா.ஜ., அவர்கள் 'கலைமகள்' அலுவலகத்துக்குத் தினமும் போகத்தொடங்கியவுடன், அதே முண்டகக்கண்ணி அம்மன் கோவில் தெருவிலே இருந்த நண்பர் ராமசாமி ஐயரின் நினைவு ஐயரவர்களுக்கு வந்துவிட்டது.

"நீர் ஆபீஸ் போகும்போது இந்தப் புத்தகங்களை ராமசாமி ஐயரிடம் கொடுத்துவிட்டுப் போக வேண்டும்" எனச் சொல்லி அனுப்பினார். ராமசாமி ஐயரும் இவரைப் பற்றி எல்லா விஷயங்களையும் தெரிந்துகொண்டு இவரிடம் மிக அன்பாக நடந்துகொண்டார்.

x x x

**கலைமகளில் தொண்டு :**

'கலைமகள்' பத்திரிகையின் ஆசிரியராக முதலில் டி. எஸ். ராமச்சந்திரையர் இருந்தார். இலக்கியம், நுண்

கலை, விஞ்ஞானம், சரித்திரம், சிறுகதை, மகளிர் பகுதி, சிறுவர் பகுதி என்று வெவ்வேறு பகுதிகளைக் கொண்டு கலைமகள் பத்திரிகை வெளியாயிற்று.

இலக்கியத்துக்குச் சென்னைப் பல்கலைக் கழகத்தில் இருந்த பேராசிரியர் எஸ். வையாபுரி பிள்ளையும், சரித்திரத்திற்குப் பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியாரும், பெண்கள் பகுதிக்கு விசாலட்சுமி அம்மாளும், சிறுவர் பகுதி, விஞ்ஞானப் பகுதி இரண்டுக்கும் வழக்கறிஞரும் தமிழன்பருமான பெ. நா. அப்புசாமி ஐயரும் பொறுப் பேற்றுப் பிரசுரத்துக்கு வரும் கட்டுரைகளைப் பார்வை யிட்டுத் தேர்ந்தெடுத்துத் தந்தார்கள். கவுரவப் பதிப் பாசிரியர்கள் என்பதாக இவர்களோடு பேரறிஞர் எஸ். அனவரதவிநாயகம் பிள்ளை, ரசிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார், வித்துவான் மு. இராகவை யங்கார், தமிழில் மிக்க ஈடுபாடுள்ள வழக்கறிஞர் கே. வி. கிருஷ்ணசாமி ஐயர், மற்றும் தி. சிவராம சேதுப்பிள்ளை போன்ற பெருமக்களும் இருந்தார்கள்.

ஐயரவர்கள் முதல் இதழில் ஒரு கட்டுரை எழுதி யிருந்தார். பின்பு இரண்டு மூன்று இதழ்களில் தொடர்ந்து எழுத இயலவில்லை.

இவரும் ஒன்றிரண்டு பாடல்களைத் தவிர எதுவும் எழுதவில்லை. அதுவும் ஏதேனும் ஒரு பக்கத்தில் இடம் மிச்சமாகி, அதை நிரப்பவேண்டுமென்று ஆசிரியர் சொன் னால் சொந்தமாகவே ஏதாவது பாடலை எழுதி நிரப்பி விடுவார்.

" பண்ணார்க்ராப்இல் தலையிற் பயனிலவே
கண்ணாடி போடாத கண்,
" விருந்தின் பயனெல்லாம் வீணாகும், காபி
அருந்தத் தராமல் விடின் "

எனக் 'கிறள்' என்பதாகக் குறள்போல் இன்றைய சமுதாயப் போக்கைச் சித்திரித்துக் காட்டும் பாடல்களாகச் சிலவற்றை எழுதி வந்தார்.

நாராயணசாமி ஐயரும் மற்றவர்களும், 'ஸ்ரீமத் ஐயரது கட்டுரை 'ஒவ்வோர் இதழிலும் முதலில் காட்சி யளிக்க வேண்டும்' என்று விரும்பினார்கள். எனவே, ஐயரிடமிருந்து எப்படியாவது ஒவ்வோர் இதழுக்கும் ஒரு கட்டுரையைப் பெற்றுவரும் பொறுப்பு இவருடைய தாயிற்று.

"இனி வெளிவர வேண்டிய பிரபந்தங்களையெல்லாம் ஒவ்வொன்றாகக் 'கலைமகள்' பத்திரிகையில் இணைப் பாகக்கூட வெளியிடப் பின்னால் வாய்ப்பு ஏற்படக் கூடும். இப்போது நீங்கள் ஏதாவது ஒரு கட்டுரை மாதந்தோறும் எழுதி வரத்தான் வேண்டும்" என இவர் அன்பு வேண்டு கோள் விடுத்தார்.

அதோடு இவர் தம்மிடம் ஐயரவர்கள் சொன்ன செய்திகளை நினைப்பூட்டி வந்தார். அவரும் 'மலரும் நினைவு'களாகத் தாம் ஏடுகளைத் தேடிப் பட்ட சிரமத்தைப்பற்றிய வரலாறுகள், ஆங்காங்கே தாம் 'கண்டதும் கேட்டது'மான செய்திகள் ஆகியவற்றைச் சொல்லலானார்.

'தமிழில் தற்காலம் அதிகம் பயன் தரத்தக்கவை நல்ல நடையும், விஷயச் சிறப்பும் கொண்ட வசன நூல்களே யாகும்' என வலியுறுத்திய மகாகவி சுப்பிரமணிய பாரதி யார் அத்துறையில் பெரிதும் அக்கறை கொண்டு உழைத்ததைத் தமிழுலகம் நன்கு அறியும்.

ஐயரவர்களும், "உரைநடை நூல்கள் எப்படி அமைய வேண்டும்?" எனச் சொல்லி வந்தார் என்பதை இவரது நாட்குறிப்பு இவ்வாறு எடுத்துக் காட்டுகிறது:

"பிழையின்றி இயன்றவரையில் யாவருக்கும் விளங்கும் சொற்களையே உரைநடையில் எழுதும் பழக்கத்தை மேற் கொள்வதே நல்ல முறையாகும். வழக்கற்ற சொற் களையும், திரிசொற்களையும் உரைநடையில் கூடியவரை விலக்குதல் நன்று. தமிழ்நாட்டினர் தம் கருத்தை எளிதில் அறிந்துகொள்ள வேண்டுமென்பதை, எழுதுபவர்கள் தம்

மனத்தில் கொண்டு எழுதுவதுதான் பயனை அளிக்கும். பேசினாலும் எழுதினாலும் கருத்தை அறிவிக்கும் நோக்கத்தை முக்கியமாகக் கொள்ளவேண்டுமேயன்றிக் கடின நடையைக் கைக்கொள்ளுதல் கூடாது.''

அதுமுதல் இவர் நாட்குறிப்பில் தாம் எழுதி வந்த நடையையே எளிய மெருகேறிய நடைக்கு மாற்றிக் கொண்டார்.

ஐயரவர்கள் சொல்வதை அப்படியே குறித்துக் கொண்டு, பின்னர்த் தொடர்பு பொருந்த எழுதி ஆசானிடம் படித்துக் காட்டினார். அவர் செய்யும் திருத்தங்களுடன், திரும்பவும் நன்றாக எழுதி, அவரது ஒப்புதலுடன் கலைமகளில் அச்சிடத் தந்தார். எத்தனை முறை படித்தாலும் தெவிட்டாது, பொருள் பொதிந்து, எளிமையுடன் கூடிய 'வண்டானம் முத்துசாமி ஐயர்,' 'வறுமைப் புலி' போன்ற ஐயரவர்களின் கட்டுரைகள் 'கலைமகள்' இதழ் ஒவ்வொன்றையும் அலங்கரிக்கத் தொடங்கின.

x x x

**பெண் பார்த்த படலம் :**

ஒரு நாள் ஐயரவர்கள் இவரிடம் கனம் கிருஷ்ணையரின் வரலாற்றைச் சொல்லிக்கொண்டிருந்தார். இவர் அவற்றை எழுதிக்கொண்டு வந்தார்.

''அப்போது அண்ணா அங்கே வந்தார்; ''ஜகந்நாதனுக்குப் பெண் பார்க்க ஏற்பாடு செய்திருக்கிறேன்'' என்று ஐயரவர்களிடம் சொன்னார்; இன்னாருடைய மகள் என்றும் தெரிவித்தார்.

'உம்' என்பதைத் தவிர ஐயரவர்கள் வேறு எதுவும் கேட்கவில்லை.

அவரது மனத்தில் என்ன இருக்கிறது என்பதை இவரால் உணர முடியவில்லை.

மறு நாள் இவரை அழைத்துக்கொண்டு பெண் பார்த்துவரப் புறப்பட்டார் அண்ணா. கட்டுக் குடுமியும் கதர் ஜிப்பாவுமாக இருந்த இவரை எல்லோருக்கும் பிடித்திருந்தாலும், "ஐயையே! அவர் குடுமி வைத்திருக் கிறாரே" என்று உள்ளே அந்தப் பெண் யாரிடமோ சொல்லிச் சிணுங்கிக்கொண்டிருப்பதும், பெரியவர்கள், "உரக்கப் பேசாதே" என்று சொல்வதும் இவருடைய காதில் விழுந்தன.

'முருகா! இது என்ன சோதனை!' என இவர் அப்படியே சமைந்து போனார். "என்ன, பெண் பிடித் திருக்கிறதா?" என அண்ணாவும், அங்கே எல்லோர் மத்தியிலும் வெளிப்படையாகக் கேட்டுவிட்டார்.

பிடிக்கவில்லை என்றால் அண்ணாவுக்குக் கோபம் வந்துவிடுமோ என்கிற அச்சத்தால் வாய்விட்டுத் தம் கருத்தைச் சொல்ல முடியாமல் தலையைமட்டும் ஆட்டினார்.

மேற்கொண்டு மற்ற விஷயங்களைப் பேச, மறு நாளே தாம் ஸ்ரீமத் ஐயரிடம் வருவதாகப் பெண்ணின் தந்தை சொன்னார்.

இவர்கள், வீட்டிற்குத் திரும்பினார்கள்.

"ஜகந்நாதன் திருமணம் செய்துகொள்ளச் சம்மதித்து விட்டான்" என்று அண்ணா சொன்ன வார்த்தையைத் தான் ஐயரவர்கள் காதில் வாங்கிக்கொண்டார். மேற் கொண்டு, "பெண்ணின் தகப்பனார் நாளை இங்கு வந்து தங்களுடன் மற்ற விஷயங்களைப் பேசிக்கொள்வதாகச் சொன்னார்" என்று அண்ணா சொன்னது எதையும் அவர் காதில் வாங்கிக்கொண்டதாகத் தெரியவில்லை.

மறு நாள் யாரும் ஐயரவர்களின் வீட்டிற்கு வரவில்லை; அப்புறமும் வரவேயில்லை!

"கல்யாணமே வேண்டாம். துறவியாகப் போகிறேன் என்று சொல்லி வந்தவன் கல்யாணம் செய்துகொள்ளச் சம்மதிக்கிறபோது, இவனது கட்டுக் குடுமியா

குறுக்கே வந்து நிற்க வேண்டும்!'' எனச் செல்லமையர் சொல்லிச் சொல்லி இவரைப் பரிகாசம் செய்தார்.

''நீங்கள் சும்மா இருங்கள். உங்கள் நண்பர் சரி என்றால் அடுத்த முகூர்த்தத்திலேயே என் தங்கையை இவருக்குத் திருமணம் செய்துவைக்க நானே ஏற்பாடு செய்கிறேன்'' என்று செல்லமையரின் மனைவி சீதா துடித்தாள்.

இவர் எதையுமே கண்டுகொள்ளாமல், வழக்கம் போலச் செயல்பட்டு வந்தார்.

x x x

## ஆசானின் ஆசி பெற்ற இளம் பெண் :

ஒரு நாள் இவர் 'கலைமகள்' அலுவலகத்துக்குக் கிளம்பிக்கொண்டிருந்தார்.

அப்போது ஐயரவர்கள், ''கல்லூர் ராமசாமி ஐயரை நான் நேரே போய்ப் பார்த்து நாளாயிற்று. ஞாயிற்றுக் கிழமை அவருடைய வீட்டிற்குப் போகலாமோ என்று இருக்கிறேன். அன்றைக்கு என அவர் எங்காவது போய் விடப் போகிறார்; நீர் ஆபீசிலிருந்து வரும்போது அவரைப் பார்த்து, நான் ஞாயிற்றுக்கிழமை அவரது வீட்டிற்கு வர இருப்பதாகச் சொல்லி வர வேண்டும்'' என இவரிடம் சொல்லி அனுப்பினார்.

இவர் அன்று அலுவலகத்திலிருந்து பிற்பகல் 3 மணிக்கே கிளம்பிவிட்டார். ராமசாமி ஐயரின் வீட்டிற்கு வந்தார். கதவு சாத்தியிருந்தது. தட்டினார்.

ராமசாமி ஐயரின் மருமாள் அலமேலு உள்ளே யிருந்து வந்து கதவைத் திறந்தாள். செக்கச் சிவந்த மேனியில் சிற்றாடை கட்டிக்கொண்டிருந்த அந்தப் பெண்ணைப் பார்த்தவுடன் இவர் அப்படியே மலைத்து நின்றுவிட்டார்.

''உள்ளே வாங்கோ'' என மெல்லிய குரலில் அந்தப் பெண் அழைத்தாள்.

தயக்கத்துடன் "மாமா இருக்கிறாரா?" எனக் கேட்டுக்கொண்டு வாசல் படியிலேயே இவர் நின்று விட்டார்.

"அவர் இன்னும் கோர்ட்டிலிருந்து வரவில்லை. மாமி இருக்கிறாள்" எனத் திரும்பவும் அந்தப் பெண் அழைத்தாள்.

'இந்தப் பெண்ணுக்கும் குடுமி என்றால் பிடிக்காதோ என்னவோ' என்கிற சந்தேகம் வந்துவிட்டது இவருக்கு.

அதற்குள், "அங்கே யாரு?" எனக் கேட்டுக்கொண்டு மாமியே வந்துவிட்டாள். இவரைப் பார்த்தவுடன். "யாரோன்னு நினைச்சேன். உள்ளே வாங்கோ" என அன்பாக, உரிமையோடு இவரை அழைத்துக்கொண்டு உள்ளே சென்றாள். காபி போடத்தான் மாமி போகிறாள் என ஊகித்த இவர், "நான் காபி சாப்பிடுவது இல்லை. ஒரு டம்ளர் தீர்த்தம் கொடுங்கள், போதும்" என்றார்.

உடனே இவருக்குத் தீர்த்தம் எடுத்துவர அந்தப் பெண் உள்ளே போனாள்.

கூடவே பின்னால் சென்ற மாமி, "அவர்தான் தீர்த்தம் கேட்டார்னா நீயும் தீர்த்தத்தையா கொண்டு போய்க் கொடுப்பது?....இரு; இப்போதான் பால் காய்ச்சினேன். இதில் கொஞ்சம் ஜீனியைப் போட்டு நன்னா ஆத்தி எடுத்துண்டு வா" எனத் தன் மருமாளிடம் சொல்லிக்கொண்டே திரும்பவும் வெளியே வந்தாள்.

ஸ்ரீமத் ஐயர் சொல்லி அனுப்பிய தகவலை இவர் மாமியிடம் சொன்னார்.

"மாமா வர்ற நேரந்தான்; நீங்களே நேரிலே சொல்லிட்டுப் போகலாமே" என மாமி சொன்னாள்.

தீர்த்தத்தை ஒரு கையிலும், மற்றொரு கையில் பாலையும் எடுத்துக்கொண்டு, சிற்பி செதுக்காத சிலை போல் அந்தப் பெண் வந்ததை இவர் கண்டார்.

கொஞ்சநேரமென்ன, எப்போதுமே மகாலட்சுமி போன்ற அந்தப் பெண்ணைப் பார்த்துக்கொண்டே இருக்கலாம்போல இவருக்குத் தோன்றியது. அதற்குள் காய்ந்துபோன தம் தொண்டையை நனைத்துக்கொள்ள முதலில் கொஞ்சம் நீர் பருகினார். பின்னர், பாலைக் குடித்தார். பாலைக் குடிக்கும்போதே அந்தப் பெண்ணும் தன்னையே கள்ளம் கபடமில்லாத அன்புடன் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டார். சட்டென்று எழுந்து கொண்டார்.

"வேலை இருக்கிறது. நான் வருகிறேன்" எனச் சொல்லிக்கொண்டு கிளம்பினார். எதையோ விட்டுவிட்டு வந்ததைப் போன்ற உணர்வு ஏற்பட்டது, இவரது மனத்தில்.

ஞாயிற்றுக்கிழமை அன்று ராமசாமி ஐயரின் வீட்டுக்கு ஐயரவர்கள் கிளம்பினார். "நீரும் வரவேண்டும்" என்று ஆசான் இவரை அழைத்தவுடன் இவருக்கு மகிழ்ச்சி உண்டாயிற்று.

இரண்டு பேரும் ராமசாமி ஐயரின் வீட்டிற்குச் சென்றார்கள். போகும்போது இவரை மஞ்சள், பூ, பழம், வெற்றிலை, சீவல் என்று வாங்கச் சொன்னார். ஆசான் ராமசாமி ஐயரின் வீட்டிற்குப்போனவுடன் ஒரு தாம்பாளம் கொண்டுவரச் சொல்லி அவற்றை எல்லாம் ஐயரவர்களே எடுத்துவைத்தார்.

ராமசாமி ஐயர் மிக்க வியப்புடன் இவர்களைப் பார்த்தார்.

"ரொம்ப நாள் கழித்து வருகிறேன். அதுவும் ஒரு சுப காரியமாக வருகிறபோது, அதற்கேற்ற சம்பிரதாயத் தோடு வரவேண்டாமா?" எனச் சொல்லிச் சிரித்துக் கொண்டார், ஐயரவர்கள். அப்போதுதான் இவருக்கு இனம் தெரியாத ஒரு மகிழ்ச்சி உண்டாயிற்று.

இவர்கள் கொஞ்சநேரம் ஏதோ பேசிக்கொண்டிருந் தார்கள். உள்ளேயிருந்து சொஜ்ஜி, பஜ்ஜி எல்லாம்

வந்தன. ராமசாமி ஐயரின் மருமாள் அலமேலு (அம்புலு) ஐயரவர்களுக்கு மிகவும் பிடித்த காபியை எடுத்து வந்தாள்; உடனே வழக்கம்போல் நமஸ்காரமும் செய்து கொண்டாள்.

"இவருக்கும் காபி கொண்டு வா, அம்மா" என ராமசாமி ஐயர் அவளிடம் சொன்னார்.

"அவர் காபி சாப்பிட மாட்டார், மாமா. பால் எடுத்து வருகிறேன்" என அந்தப் பெண் சொன்னபோது இவர் அசந்து போனார்!

"ஏதேது, இவரைப்பற்றி நீயும் எல்லாம் தெரிந்து வைத்திருக்கிறாயே!" என்று ஐயரவர்கள் சொன்னபோது எல்லோரும் சிரித்தார்கள். அந்தப் பெண் உள்ளேயிருந்து இவருக்கும் தீர்த்தத்தையும், பாலையும் கொண்டு வந்து வைத்தாள்; "இவருக்கும் நமஸ்காரம் செய்துகொள்" என்று ஐயரவர்கள் சொன்னவுடன் இவரையும் வணங்கினாள்.

முன்பு வெளியூரில் அவளைப் பாடச் சொல்லிக் கேட்டாரல்லவா? இப்போது, "எங்கே ஒரு பாட்டுப் பாடு, கேட்கலாம்" . என ஐயரவர்கள் சொன்னார். அந்தப் பெண்ணும் அப்படியே உட்கார்ந்து ஐயரவர்களுக்கு மிகவும் பிடித்த கோபாலகிருஷ்ண பாரதியாரின் பாடல் ஒன்றையே மீண்டும் பாடினாள்: "பேஷ்! பேஷ்" என்றார் ஐயரவர்கள். 'இந்தப் பெண் யார் யாருக்கு எது பிடிக்கும் என்று தெரிந்து நடந்துகொள்ளும் இயல்புள்ளவளாக இருக்கிறாளே!' என இவருக்குப் பின்னும் வியப்பு அதிகமாயிற்று.

இவரது பக்கம் திரும்பி, "உமக்கு இந்தப் பெண்ணைப் பிடித்திருக்கிறதா?" என்று கேட்டார் ஐயரவர்கள்.

இது என்ன கேள்வி?...அன்று இந்த வீட்டிற்கு வந்து போனதிலிருந்து மனத்திற்கு வேறு ஒன்றையுமே பிடிக்காமல் இவர் படுகிற அவஸ்தை இவருக்கல்லவோ தெரியும்!

இருந்தாலும், மிக நயமாக, "தங்களுக்குப் பிடித்திருப்பதால் எனக்கும் பிடித்திருக்கிறது" என்றார் இவர்.

ஐயரவர்கள், "அப்புறம் என்ன, ராமசாமி! நீர் இவரை உம் சொத்தாக ஆக்கிக்கொள்ள வேண்டும்" என ராமசாமி ஐயரிடம் சொன்னார்.

ராமசாமி ஐயரும் மறு பேச்சுப் பேசாமல் மகிழ்ச்சியோடு, "அப்படியே!" என்றார்.

இதைக் கேட்ட அந்தப் பெண் அடுத்த கணமே வெட்கத்துடன் மின்னல் போல் உள்ளே ஓடி மறைந்தாள்.

**ஆசானின் இல்லத்தில் நடந்த நிச்சயதார்த்த நிகழ்ச்சி :**

"வருகிற 5-ஆம் தேதி நாள் நன்றாக இருக்கிறது. அன்றைக்கே 'தியாகராஜ விலாச'த்தில் நிச்சயதார்த்தத்தை நடத்திவிடலாம்" என்று சொல்லிவிட்டு ஐயரவர்கள் இவரை அழைத்துக்கொண்டு அங்கிருந்து கிளம்பினார்.

மோகனூருக்குக்கூடக் கடிதம் எழுதி இவருடைய தாய் தந்தையர் வருவதற்கு நாள் இல்லை. நிச்சயதார்த்தத்திற்கு அவர்கள் யாரும் வர முடியவில்லை. அது போன்றே பெண்ணின் பெற்றோரும் வர முடியவில்லை. பெண்ணின் பெரிய தகப்பனார்தாம் வந்திருந்தார்.

நிச்சயதார்த்தம் ஐயரவர்களின் வீட்டில் ஜாம் ஜாமென்று நடந்தது. அண்ணா கல்யாணசுந்தரமையர் விருந்துக்காக மிக விமரிசையான எல்லா ஏற்பாடுகளையும் தாமே முன்னின்று செய்தார்.

இவருடைய பால்ய நண்பரான செல்லமையரும், கணபதி ஐயரும் கூடவே இருந்தார்கள். பெயர்ப் பொருத்தம் கருதியோ என்னவோ, "நீரே உட்கார்ந்து லக்கினப் பத்திரிகை எழுத வேண்டும்" என்று ஐயரவர்கள் கணபதி ஐயரிடம் சொன்னார்.

நிச்சயதார்த்தம் நடந்த மறு வாரத்திலேயே திருமணத் தேதியையும் குறித்தார்கள்: திருமணத்திற்கு.

அந்தக் காலத்தில் பத்திரிகை அச்சிடுவது பெரும்பாலும் வழக்கமில்லை. கடிதந்தான் எழுதுவார்கள்.

இவருடைய தகப்பானருக்கு, பெண்ணின் பெரிய தகப்பனார் தாம் எழுதிய முகூர்த்தப் பத்திரிகையில், முறையாக, ''ஈசுவர கிருபையை முன்னிட்டுப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு முகூர்த்தம் 13-6-32 அன்று சோமவாரம் (ஆங்கிரஸ வைகாசி 31) அன்று கன்யாவக்னத்தில் மயிலாப்பூர் முண்டகக்கண்ணியம்மன் கோவில் தெரு, 57-ஆம் நெம்பர் கிருகத்தில் நடத்துவதால் தாங்கள் குடும்ப சமேதராய் முன்னாடியே வந்திருந்து முகூர்த்தத்தை நடப்பித்துத் தம்பதிகளை ஆசீர்வதிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்'' என்று குறிப்பிட்டார்.

x x x

கடிதம் பார்த்தவுடன் இவருடைய பெற்றோர் பெரிதும் மகிழ்ந்தார்கள்; துறவியாக விரும்பிய தம் மகனுக்கு அறிவு புகட்டி, அவனை இல்லறத்தினை மேற்கொள்ளும்படி செய்த ஐயரவர்களை வாழ்த்தி, திருமணத்திற்குச் சில நாட்கள் முந்தியே சென்னை வந்து சேர்ந்தார்கள்.

திருமணம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. பிறகு ஒரு நாள், முன்பு சம்பந்தம் செய்துகொள்ள வருவதாகச் சொல்லி வாராதிருந்த பெண்ணின் தந்தையைச் சந்தித்த போது அவரை, ''ஏன் வரவில்லை?'' என்று கேட்டு விட்டார் இவர். அவர் வாய்மூலமே விஷயம் தெரிந்தது; அந்தப் பெண் மூளை வளர்ச்சி இல்லாதவள் என்பதால் ஐயரவர்களைப் பார்க்கத் தயங்கி வரவில்லையாம்.

அப்போது, 'ஏண்டா கடந்து போனதை அவருக்கு நினைப்பூட்டினோம்?' என்று இவருக்கே பட்டது; என்றாலும், தம்மைக் காப்பாற்றி வரும் தம் குருசரணத்தையும், குகன் சரணத்தையும் ஒருசேர நினைந்து மனம் நெகிழ்ந்தார்.

கலைமகளையும், தலைமகளையும் இவர் கைப் பிடித்தது 1932 - இல்தான்.

**'டாக்டர்' பட்டம் பெற்ற தமிழ்த் தாத்தா :**

3—8—'32 அன்று சென்னைப் பல்கலைக் கழகத்தினர் டாக்டர் அஃப் லிட்டரேச்சர் (Doctor of Literature) என்ற கவுரவப் பட்டத்தை ஐயரவர்களுக்கு வழங்கிச் சிறப்பித் தனர்.

ஐயரவர்கள் வேடிக்கையாக, "எனக்கு வைத்தியம் தெரியுமா, மருந்து தெரியுமா? எனக்குப் போய் டாக்டர் பட்டம் கொடுக்கிறார்களே; எனக்கு இது எதற்கு?" என்று இவரிடம் சிரித்துக்கொண்டே சொன்னார்.

அந்தப் பட்டம் ஸ்ரீமத் ஐயருக்குக் கிடைத்ததால் பெரு மகிழ்ச்சியில் திளைத்த இவர், "வைத்தியர், புலவர் என்ற பொருள் 'பண்டிதர்' என்ற சொல்லுக்கும் உண்டல்லவா? நீங்களும் பெரிய பண்டிதர்தாமே! காலும், கொம்பும், புள்ளியும் இழந்த எத்தனை எழுத்துக்களைக் கஷ்டப்பட்டுச் சரிப்படுத்திப் பாடல்களை நேராக்கி இருக்கிறீர்கள்; அதை வைத்துத்தான் டாக்டர் பட்டம் கொடுத்திருக்கிறார்கள்" என நயம்படச் சொன்னதைக் கேட்டு ஸ்ரீமத் ஐயர் மகிழ்ந்தார்.

அவ்வாண்டு இறுதியில் காமகோடி பீடத்துச் சங்கரா சார்ய மூர்த்தியாகிய ஸ்ரீமத் சந்திரசேகரேந்திர சுவாமிகள் சென்னை மாநகருக்கு முதல் முறையாக விஜயம் செய் தார். ஏற்கனவே அக்காஞ்சி முனிவர் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் 34-ஆம் ஆண்டு விழாவில் (8—6—1925) ஐயரவர்களுக்கு இரட்டைச் சால்வையும், தோடாவும் அனுப்பி, 'தாக்ஷிணாத்ய கலாநிதி' என்ற பட்டத்தையும் அளித்துக் கவுரவித்திருந்தார்.

பின்பு 1932 புரட்டாசி மாதம் காஞ்சிப் பெரியவர்கள் சென்னைக்கு வந்தபோது அவருக்குக் கோலாகலமான வரவேற்பு அளிக்கப்பட்டது. நகர மக்களின் சார்பாக வர

வேற்புப் பத்திரம் ஒன்றைப் பாடல்களாகவே எழுதி வாசித்தார் அன்பர் கி.வா.ஜ.

20—11—32-இல் பெரியவர் திருவேட்டீச்வரன் பேட்டைச் சங்கர மடத்திற்கு எழுந்தருளினார். அத்தலத்தின் பெருமையைப்பற்றி ஐயரவர்கள் பேசினார். அந்த இடத்திலும் இவர், பெரியவரைத் தரிசனம் செய்து கொண்டார். இவரது குருபக்தி பெரியவரை மிகவும் கவர்ந்தது.

பெரியவர் சென்னையில் தங்கியிருந்த காலத்தில் இவரும் நாள் தவறாமல் அந்த முனிபுங்கவரைத் தரிசனம் செய்துகொள்ளப் போய்விடுவார். மிகுந்த நினைவாற்றல், பேச்சாற்றல் படைத்தவர் காஞ்சிப் பெரியவர். மிகவும் நுட்பமான விஷயங்களையும் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்வார்.

உபந்நியாசத்தின் தொடக்கத்தில் அவர் என்ன சொல்லப் போகிறார் என்று தெரியாது. அதனால் கேட்பவர்களிடையே ஆவல் அதிகமாக இருக்கும்.

சில சமயங்களில் பெரியவர் ஒரு கருத்தைச் சொல்வதற்கு முன்னால் அதற்கு எதிரான கட்சியைத் தெளிவாகச் சொல்வார்; அதுதான் உண்மையென்று தோன்றும்படி சொல்வார். பிறகு முதலில் கூறிய அத்தனை ஆட்சேபங்களுக்கும் சமாதானம் சொல்லி முடிப்பார்.

"ஒருவன் நம்மைக் கண்டபடி திட்டுகிறான். நாம் எந்தத் தப்பும் செய்யவில்லை. அதனால் நமக்குக் கோபம் வந்துவிடுகிறது. கோபம் வருவது இயற்கைதான்; என்றாலும், அப்போது நமக்குக் கோபம் வராமல் இருக்க நாம் என்ன செய்ய வேண்டும்?" என்று நம்மையே கேட்டுச் சிறிது சிந்திக்கவிடுவார். அடுத்து அவரே சொல்வார்:

"அவன் சொல்கிற தப்பை நாம் செய்யாதிருக்கலாம். ஆனால் நாம் என்ன என்ன தப்புக்கள் செய்திருக்கிறோம்

என்பதை அப்போது நாமே ஒரு முறை நினைவுபடுத்திக் கொண்டால் போதும்; 'நாம் செய்யாத தப்புக்கே இவன் நம்மை இப்படித் திட்டுகிறானே; நாம் செய்திருக்கும் தப்புக்களை இவன் அறிந்தால் நம்மை இன்னும் எப்படி யெல்லாம் கோபித்துக்கொள்வானோ?' என்ற நினைப்பு வந்தால் போதும்...நமக்கு அப்போது கோபமே வராது'' என இப்படி நம் வாழ்வுக்குப் பயன் தரத் தக்க பல உபதேச மொழிகளை அருள்வார்,

அவரது உபந்நியாச முறையே ஒரு தனி அழகு பெற்றது. ஸ்ரீ சந்திரமௌளீசுவரருடைய பூஜையை முடித்துக்கொண்டு, உபந்நியாசம் செய்வதற்காக மேடை மீது வந்து அமர்வார். உலக நலனுக்காக அவர் செய்யும் பூஜையே பின் வரப்போகும் உபதேச மொழிகளுக்கு ஒரு முகவுரையாக விளங்கும்.

உபந்நியாசத்திற்குப் பூர்வாங்கமாக அவர் அநுசரிக்கும் மௌனமே ஒரு பெரிய உபதேசமாக அமையும்.

இந்த மௌனத்தில் லயித்த மக்கள் அவர் பேச ஆரம்பித்தவுடன், அந்தப் பேச்சில் மெய்ம்மறந்து லயிப்பார்கள்.

மயிலாப்பூர்ப் சம்ஸ்கிருதக் கல்லூரியில் தங்கியிருந்த போது, பெரியவர் பேச ஆரம்பித்துவிட்டால் போதும்; அன்பர் கி.வா.ஜ., நீளமான நோட்டை, தம் துடைமீதே வைத்துக்கொண்டு அவரது உபந்நியாசத்தை ஒரு வார்த்தை விடாமல் வடிவெழுத்திலேயே எழுதிக் கொள்வார். இரவு வீட்டிற்கு வந்தவுடன் அன்றைய பிரசங்கம் முழுவதையும் வேறு தாளில் நன்றாகத் திரும்பவும் எழுதுவார்.

**காஞ்சிப் பெரியவரின் உபந்நியாசங்கள் புத்தக உருவாதல் :**

இப்படி இவர் எழுதிய பெரியாரின் உபந்நியாசங்கள் 'நன்மொழிகள்' என்றும், 'சங்கர விஜயம்' என்றும் இரண்டு புத்தகங்களாகக் 'கலைமகள்' வெளியீடாக வந்து,

ஆறு தொகுதிகளாகிக் காமகோடி கோசஸ்தானப் பிரசுரமாக உருப்பெற்று இன்றும் நிலவுகின்றன.

அன்றுமுதல் காஞ்சி கோமகோடி பீடாதிபதி ஸ்ரீமத் சந்திரசேகரேந்திர சுவாமிகளிடம் இவருக்கு ஏற்பட்ட பக்தி மேன்மேலும் பெருகி இவருடைய உள்ளத்தைக் கொள்ளைகொண்டது.

'திருமுருகாற்றுப்படை'யில்,

**" என்(பு)எழுந்(து) இயங்கும் யாக்கையர் நண்பகல்**
**பலவுடன் கழிந்த உண்டியர் இகலொடு**
**செற்றம் நீக்கிய மனத்தினர் யாவதும்**
**கற்றோர் அறியா அறிவினர் கற்றோர்க்குத்**
**தாம் வரம்பாகிய தன்மையர் "**

என்பதாக முனிபுங்கவர்களின் இயல்பு குறிப்பிடப்பெறுகிறது. பெரியவரிடம் அத்தனை லட்சணங்களும் பொருந்தி இருக்கக் கண்டு அவரது சந்நிதானம் என்றால் இவர் மெய்சிலிர்த்து நிற்பார். அவரும் இவர்பால் காட்டிய அன்பு, கண்டோர் உள்ளத்தை நெகிழச் செய்யும்.

**'திருமுருகாற்றுப்படை அரசு', 'வாகீச கலாநிதி' ஆதல் :**

சென்னை தங்கசாலைத் தெரு சைவசமய பக்தஜன சபையில் 'திருமுருகாற்றுப்படை' பற்றி 1949 மார்ச் 16-ஆம் தேதி இவர் சொற்பொழிவு ஆற்றினார். அதைத் தொடர்ந்து கந்தசாமி கோவில் மெத்தை மண்டபத்தில் வாரந்தோறும் ஒரு நாள் 'திருமுருகாற்றுப்படை'யைப் பற்றிச் சொற்பொழிவு ஆற்ற வேண்டுமென்று பல அன்பர்கள் கேட்டுக்கொண்டார்கள்.

அதன்பேரில் 1949 ஏப்ரல் 6-ஆம் நாள் அந்தத் தொடர் சொற்பொழிவை ஆரம்பித்துக்கொண்டார். அன்றுமுதல் தொடர்ந்து 32 வாரம் புதன்கிழமைதோறும் கந்தசாமி கோவில் மெத்தை மண்டபத்தில் 'திருமுருகாற்றுப்படை' பற்றி விரிவுரையாற்றினார்.

1949 நவம்பர் 11-ஆம் தேதி மாலை 6-30 மணிக்குத் 'திருமுருகாற்றுப்படை' நிறைவு விழா நடைபெற்றது.

காஞ்சிப் பெரியவர், தம் ஆசியையும் 'திருமுருகாற்றுப் படை அரசு' என்ற பட்டம் பொறித்த மோதிரத்தையும் இவருக்கு அனுப்பினார். அதுமட்டுமல்ல; காஞ்சிப் பெரியவரின் ஆணைப்படி ஆங்காங்கே 'திருப்பாவை - திருவெம்பாவை' அறங்க மகாநாடுகள் மாயூரம், திருவிடைமருதூர், நாகப்பட்டினம், வலிவலம் ஆகிய இடங்களிலெல்லாம் நடைபெற்றபோது இவரும் சென்று அவற்றில் கலந்துகொண்டு உரையாற்றினார்.

நன்னிலம் தாலுக்கா திருப்புகலூரில் 1951 பிப்ரவரி 11, 12 தேதிகளில் நடந்த மகாநாட்டுக்கும் இவர் சென்றார். அங்கே காஞ்சிப் பெரியவரும் நேரில் எழுந்தருளினார்; அப்போதுதான் (11—2—51-இல்) இவருக்கு 'வாகீச கலாநிதி' என்ற பட்டத்தையும் வழங்கிச் சால்வை போர்த்தச் செய்தார்.

x x x

1932-ஆம் ஆண்டில் சென்னை நகருக்கு எழுந்தருளிய காஞ்சிப் பெரியவர் 25 ஆண்டுகளுக்குப் பின்னர் 1957-இல் திரும்பவும் சென்னைக்கு எழுந்தருளினார். இம்முறை தம்முடன் இளவல் ஸ்ரீமத் ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளையும் அழைத்து வந்திருந்தார்.

அன்பர் கி.வா.ஜ-விடம் நான் அப்போது தமிழ் படித்துக்கொண்டிருந்த மாணவர்களுள் ஒருவனாக இருந்தேன். காஞ்சிப் பெரியவர் சென்னை நகரத்திற்குள் நுழைந்த அன்று இவர் என்னையும் தம்முடன் அழைத்துச் சென்றார். வரவேற்பு விழாவில் இளவலுடன் எழுந்தருளியிருந்த பெரியவருக்கு இவரும் வரவேற்புப் பத்திரம் வாசித்தளித்தார்.

**மாணவனுக்குக் கிடைத்த பாக்கியம் :**

பெரியவர் பேசத் தொடங்கியவுடன் அவரது பேச்சை இவர் எழுதிக்கொள்ளத் தொடங்கினார். நான் சுருக்கெழுத்துக் கலை பயின்றவனாதலால் என்னையும்

எழுதிக்கொள்ளும்படி பணித்தார். அப்போதுதான் தாம் (லாங் ஹாண்டிலேயே) முன்பு பெரியவருடைய உபந்நியாசத்தை எழுதியதைக் குறிப்பிட்டு, "நீங்கள் தினமும் மாலையில் இங்கே வந்து பெரியவர்களின் உபந்நியாசத்தை எழுதித் தரவேண்டும். இரவு என் வீட்டிற்கு வர வேண்டாம். காலையில் உங்களுக்குத் தனியே பாடம் சொல்கிறேன்" என்றார்.

மயிலாப்பூரில் பெரியவர் (1957-58) நிகழ்த்திய உபந்நியாசங்களையும், வேறு இடங்களில் நிகழ்ந்த சிலவற்றையும், சுருக்கெழுத்தில் எடுத்துத் தட்டெழுத்தில் பிரதி செய்து கொடுக்கும் பாக்கியம் இவரது மாணவனாக நான் இருந்த காரணத்தினால் எனக்கும் கிடைத்தது. அவற்றை ஒழுங்குபடுத்தி, 'ஆசார்ய சுவாமிகள் உபந்நியாசங்கள்' என்ற தலைப்பில் நான்கு தொகுதிகளைக் 'கலைமகள்' வெளியீடாகக் கொண்டுவந்தார்.

ஒரு நாள் பிரசங்கத்தில் காஞ்சிப் பெரியவர் சொன்னார்; "நான் ஒரு வருஷம் சிவராத்திரிக்குக் காளஹஸ்தி போயிருந்தேன். சிவராத்திரிக்கு மறு நாள் சுவாமி காளஹஸ்தி மலையைச் சுற்றி வருவது உண்டு. மாசி மாதம்—கடுங்கோடை ஆரம்பம்—அந்த வெயில் காலத்தில் சுவாமி 13 மைல் சுற்றி வரவேண்டும். மலையைச் சுற்றியிருக்கும் இடம் என்றால் கேட்கவே வேண்டாம், அங்கே இருக்கும் வெயிலுக்கு! அந்த மலையைச் சுற்றிச் சுவாமி வரும்போது கடுமையான வெயில். நடுவில் ஓரிடத்தில் ஒரு தண்ணீர்ப் பந்தல் இருந்தது.

**எளிய ஆசான் கொடைவள்ளல் ஆனார் :**

"யார் வைத்திருக்கிறார்கள் என்று விசாரித்தேன். உ. வே. சாமிநாதையர் வைத்திருக்கிறார் என்றார்கள்.

"தருமமிகு சென்னை என்பார்கள்; இங்கே பச்சையப்ப முதலியார், மணலி முதலியார், கிருஷ்ணசாமி ஐயர்,

முத்துசாமி ஐயர் போன்ற இவர்களெல்லாம் பெரும் பெருந் தர்மம் செய்திருக்கிறார்கள்.

''இவர்கள் பணக்காரர்களாகவும் இருந்தார்கள்; தர்மமும் செய்தார்கள். இவர்களைப் போன்ற பணக்காரரா, சாமிநாதையர்? மிக ஏழையாக இருந்து தமிழுக்கே வாழ்க்கையை அர்ப்பணித்து, பழந்தமிழ் நூல்களை உலகத்துக் கிடைக்கும்படியாகச் செய்த தாத்தா-தாதா.* பரோபகாரம் வேறு உண்டா? தமிழ்ப்பண்டிதராக இருந்தார். அந்த உத்தியோகத்தில் அவர் என்ன சம்பாதித்திருக்க முடியும்? இருந்தாலும், தர்மத்தை விடவில்லை. அவர் சிவபக்தர் அல்லவா? கடுங்கோடையில் வருகிற சிவனடியார்களின் தாக சாந்திக்குத் தண்ணீர்ப் பந்தல் வைத்தார். இது எவ்வளவு சூட்சுமமான தர்மம், பாருங்கள்!

''இங்கே இருக்கிற உங்களுக்கெல்லாம் இது தெரியுமோ, தெரியாதோ, இன்று இங்கே கி. வா. ஜகந்நாதன் இருந்திருந்தால் இதைக் கேட்டு மிகவும் ரசித்துப் பரவசப்பட்டிருப்பான்'' என்றார் பெரியவர். ஐயரவர்களிடமும் இவரிடமும் பெரியவருக்கு இருந்த பேரன்பு எத்தகையதென இதிலிருந்தே விளங்கும்.

x x x

### வித்துவான் தேர்வில் முதலாக வந்தமை :

1933-ஆம் ஆண்டு இவர் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் வித்துவான் ஃபைனல் (முழுமைத்) தேர்வு எழுதினார். தமிழ்த் தொண்டிலேயே மூழ்கி, பக்கம் பக்கமாக அழகாக எழுதிப் பழகிப் போன இவருக்குத் தேர்வு ஜுரம் ஏற்படவில்லை. வினாக்களுக்குப் பாட நூலில் உள்ளது போன்றே விடை எழுதவும், அதிலுள்ள பாடல்களையே மேற்கோள் காட்டவும் அவற்றை மனப்பாடம்

---

* கொடை வள்ளல்

செய்துகொள்ளவும் வேண்டிய நிலை இவருக்கு இருக்க வில்லை. செய்யுளியல், அகப்பொருள் வினாக்களுக்கு எல்லாம் இவர் சொந்தமாகவே, விடைக்குப் பொருத்த மான மேற்கோள் பாடல்களை எழுதினார். விடைத் தாள்களைத் திருத்தியவர்கள் வேண்டுமானால் அந்தப் பாடல்கள், 'எந்த ஊர் முருகன் கோவையைச் சேர்ந்தவை?' என்று புரியாமல் திணறியிருக்கலாம்.

சென்னைப் பல்கலைக் கழகத் தேர்வு முடிவுகள் 18—5—33-இல் வெளியாயின. அவ்வாண்டு தமிழ் வித்துவான் இறுதித் தேர்வில் இவர் முதல் வகுப்பில், முதன்மையாகத் தேர்ச்சி பெற்றார். இது எல்லோருக்குமே மகிழ்ச்சியாக இருந்தது.

x x x

**ஆசானிடம் கேட்ட அருஞ் செய்தி :**

கவிஞர் கோமான் பிள்ளையவர்கள் 'கம்பராமாயண'த்தை முழுமையாக ஒன்றன்பின் ஒன்றாக மூன்று பிரதிகள் தம் கையினாலேயே எழுதினாராம். ஒரு பிரதியைமட்டும் தம்மிடம் வைத்துக்கொண்டு மற்ற இரண்டையும் தம் மாணவர்கள் இரண்டு பேரிடம் கொடுத்தாராம்.

அவ்விதம் பிள்ளையவர்களிடமிருந்து கம்பராமாயணப் பிரதி ஒன்றைப் பெற்றுக்கொண்டவர்களில் ஒருவர்தாம் இயல்பான இசைஞானம் உள்ள சாமிநாதக் கவிராயர் என்ற புலவர். அவர் தம் ஊரான திருவீழிமிழலையில் இருந்த தமிழ் அறிஞர்களிடம் சில நூல்களைப் பாடம் கேட்டிருந் தார். பிறகு பெரிய புராணம், கம்பராமாயணம் ஆகிய வற்றைத் திரிசிரபுரம் வந்து புலவர் சிகாமணியான பிள்ளையவர்களிடம் பாடம் கேட்டார்.

கவிராயரோ படிப்பு முடிவதற்குள் பிரசங்கத்துக்குக் கிளம்பிவிட்டார். பிள்ளையவர்களுக்குத் தெரிந்தால் சினம் கொள்வாரோ என்கிற பயம் - வெட்கம்; எனவே,

பிள்ளையவர்களிடம் ஏதோ காரணத்தைச் சொல்லி விட்டு, நடுநடுவே வெவ்வேறு இடங்களுக்குப் போய் வருவார். ஒரு முறை அவருக்குத் தெரியாமல் அவர் பிரசங்கம் செய்யும் இடத்திற்குப் பிள்ளையவர்களும் சென்றார்கள். மறைவாகவே இருந்தும் கேட்டார்கள். காப்பிய நயத்தை, கேட்பவர்கள் அநுபவிக்கும்படி தம் மாணவர் பேசியதைக் கேட்டு, தாமே அவரை இன்னும் ஊக்குவிக்க வேண்டும் என எண்ணினார்.

கவிராயருக்குச் சொல்லி வந்த கம்பராமாயணப் பாடம் முடிந்தவுடன் கவிஞர் கோமானே ஒரு கூட்டத்தைக் கூட்டினார். அக்கூட்டத்தில் பிரசங்கம் செய்யும்படி தம் மாணவரைப் பணித்தார். கவிராயரும் உற்சாகத்துடன், பயமில்லாமல் நன்கு பேசினார்.

முடிவில் பிள்ளையவர்கள் சாமிநாதக் கவிராயருக்குத் தம் கையினால் 'சால்வை' ஒன்றை வழங்கி, 'கம்ப ராமாயணப் பிரசங்க வித்துவான்' என்ற பட்டத்தையும் அளித்தார் அதுமுதல் எந்த மேடையில் பிரசங்கம் செய்தாலும் முதலில் தம் ஆசிரியரது வணக்கமாக ஒரு பாடலைச் சொல்லிவிட்டுத்தான் தம் பேச்சைத் தொடங்குவாராம் சாமிநாதக் கவிராயர்.

இந்தச் செய்தியை ஸ்ரீமத் ஐயரிடமிருந்து இவர் அறிந்திருந்தார்; அவரிடம் தாம் வராமல் இருந்திருந்தால் தம் நிலை எப்படி இருந்திருக்கும் என்று எண்ணிப் பார்த்தார். "பிறந்து மொழி பயின்ற பின்னெல்லாம் காதல் சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன்" எனக் காரைக்கால் அம்மையார் போல் இவர் காந்தமலையானிடம் வேசாறி நின்றவராயிற்றே! ஸ்ரீமத் ஐயரிடம் தம்மைக் கூட்டி வைத்த முருகன் திருவருளை நினைந்து உருகினார்.

இனிமேல் தாம் எந்தக் கூட்டத்தில் பேசுவதாக இருந்தாலும் முதலில் முருகனையும், தம் ஆசிரியப்பிரானையும் வணங்கிவிட்டே தம் பேச்சைத் தொடங்குவது எனத் தீர்மானித்துக்கொண்டார்.

"திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடாலயத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிநாத சுவாமிகள் அவர்கள் ஆண்டுதோறும் தனித்தமிழ் வித்துவான் தேர்வில் அனைவரையும் விட முதலாவதாகத் தேறியவர்களுக்கு வழங்கி வரும் ஆயிரம் ரூபாய்த் தமிழ்ப் பரிசு, இவ்வருஷம் நம் 'கலைமகள்' உதவி ஆசிரியர் ஸ்ரீமான் கி.வா. ஜகந்நாதையர் அவர்களுக்குக் கிடைத்ததுபற்றி நாம் மகிழ்ச்சி அடைகிறோம். 'கலைமகள்' நண்பர்களும் மகிழ்வார்கள் என நம்புகிறோம். இத்தகைய பெரும் பரிசு தமிழ் படிக்கும் மாணவர்களுக்குச் சிறந்த ஊக்கத்தை உண்டாக்கும்" எனப் பனசைமடாதிபதியாரின் செயலைப் பாராட்டி, அதன் ஆசிரியராக இருந்த டி. எஸ். ராமசந்திரையர் எழுதினார்.

அந்த ஆண்டு பரிசளிப்பு விழா 12-7-33-இல் திருச்சி நேஷனல் காலேஜில் நடைபெற்றது. பரிசு பெற இவர் திருச்சிக்குச் சென்றபோது, அந்தக் கல்லூரி மாணவர்களின் விடுதியில் தங்கினார்.

விழா அன்று ஐயரவர்கள் வந்தார். இவரைப்பற்றி அவர் விசாரித்தபோது, மாணவர்களின் விடுதியில் தங்கியிருப்பதாக அக்கல்லூரி முதல்வராக இருந்த சாரநாத ஐயங்கார் சொன்னாராம்.

"அவரை அங்கேயா தங்க வைத்தீர்கள்?" என ஐயரவர்கள் கேட்டபோது கல்லூரி முதல்வருக்கு ஒன்றும் புரியவில்லை.

**'சின்னப் பையன்' பெரும் பரிசு பெற்றமை :**

"அவன் என்ன, சின்னப் பையன்! மாணவர்களோடு மாணவனாக விடுதியில் இருக்கிறான். அவனைப்பற்றிக் கவலை கொள்ள என்ன இருக்கிறது?" என்கிற மாதிரி முதல்வர் பதில் சொன்னாராம்.

பரிசளிப்பு விழா வைபவம் சிறப்பாக நடைபெற்றது. விழாவுக்கு ஸ்ரீமான் திவான் பகதூர் ஸர் டி. தேசிகாசாரியார் தலைமை வகித்தார். ஐயரவர்களும் வேறு பல

தமிழ் அறிஞர்களும் பரிசு பெற்ற இவரையும், அளிப் பவரையும் அக்கூட்டத்தில் சிறப்பித்துப் பேசினார்கள். கடைசியில் இவர் நன்றியறிதலைச் சொன்னார். முதலில் முருகப்பெருமான் வணக்கம்:

"வரங்கொண்ட உமைமுலைப்பால்
மணங்கொண்ட செவ்வாயும்
பரங்கொண்ட களிமயிலும்
பன்னிரண்டு கண்மலரும்
சிரங்கொண்ட மறையிறைஞ்சும்
சேவடியும் செந்தூரன்
கரங்கொண்ட வேலும்என் றன்
கண்ணைவிட்டு நீங்காவே."

இப்பாடல் திருக்கயிலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீனத்து ஸ்ரீ சுவாமிநாத தேசிகமூர்த்திகளால் இயற்றப் பட்டது. 'திருச்செந்தில் கலம்பக'த்தில் உள்ளது.

இதனைக் கணீரெனத் தம் வெண்கலநாதக் குரலில் இவர் பாடியபோது சபையே மெய்சிலிர்த்து ஒருமுனைப் பட்டது.

அடுத்து ஆசிரியப்பெருமான் வணக்கம்:

"நவையேறும் நெஞ்சினேன்
நற்றமிழைக் கற்றே
அவையேற வைத்தருளும்
அண்ணல்—சுவையேறு
செந்தமிழ்ப்பன் னூல்விளக்கும்
சீர்ச்சாமி நாதகுரு
அந்தளிர்த்தாள் சென்னிக்(கு)அணி."

தம் குரு வணக்கமாக இந்த வெண்பாப் பாடல், இவர் சொந்தமாக இயற்றிக்கொண்டது.

அடுத்து அன்று புதன்கிழமையாதலால், "பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது என்று சொல்வார்கள்.

இன்று புதனும் கிடைத்தது. இது என்னுடைய ஆசிரியப் பெருமானுடைய ஆசியே'' என்பதாகத் தம் உரையைத் தொடங்கிக்கொண்டு பேசினார். முடிக்கும்போது தம் ஆசிரியரது தமிழ்த் தொண்டுபற்றியும், பனசைக் காசி மடாலயத் தலைவர் தமிழ் வளர்ச்சிக்குச் செய்துவரும் பணிகள் குறித்தும், விழாத் தலைவர் குறித்தும் தாம் இயற்றிய ஐந்து வெவ்வேறு பாக்களை உணர்ச்சியோடு படித்து முடித்தார்.

இவரது பேச்சைக் கேட்டு விழாவுக்கு வந்திருந்த அத்தனை பேரும் மகிழ்ந்து போனார்கள். நேஷனல் காலேஜ் முதல்வர் இவரது கையைப் பிடித்துக்கொண்டு பாராட்டினார்; ஐயரவர்களிடம், ''என்னை மன்னிக்க வேண்டும். இவரது உருவத்தைப் பார்த்து அலட்சியமாக இருந்துவிட்டேன். அடடா! இன்று இவர் பேசிய பேச்சுக்கே ஆயிரம் ரூபாய் தரலாமே!'' என இவரைப் புகழ்ந்தும் கூறினார்.

''அதனால் என்ன? இவருடைய தகுதியை முன்பே அறிந்தவன் நான்; ஆதலால்தான் வந்தவுடன் விசாரித்தேன்'' என்றார் ஐயரவர்கள்.

தம் மகன் அவையோரால் போற்றப்படுவதையும், பரிசு பெறுவதையும் கண்டு இவருடைய தந்தை பெரிதும் மகிழ்ந்தார்.

நேஷனல் காலேஜ் ஹாஸ்டலில் இவர்களுக்கு விருந்து உபசாரம் நடந்தது.

மறு நாள் ஐயரவர்களுடன் இளமைக்காலத்தில் தம் தந்தையாருடன் வசித்த அரியலூருக்கு இவரையும் அழைத்துச் சென்று, தாம் ஓடி ஒளிந்து விளையாடிய கோவில் மண்டபம் முதலியவற்றைக் காட்டி மகிழ்ந்தார்.

இவருடைய மனைவி அப்போது கும்பகோணத்தில் இருந்தாள். இவர்கள் வீட்டுக்கு அவள் வராத சமயம் அது. தம் மனைவியைப் பார்த்துவிட்டு அப்படியே

சென்னை வருவதாக ஐயரவர்களிடம் விடை பெற்றுக் கொண்டு இவர்மட்டும் கும்பகோணம் வந்தார்.

''ஐயனுக்குக் கிடைத்தது இரண்டு படி நெல்தான் என்றாலும் அதை அவர் அம்மையிடம் கொடுத்தே அறம் வளர்க்கச் சொன்னார். மனைவி விலை மதிக்க முடியாத தங்கப்பாத்திரமும், மற்றும் ஈயப்பாத்திரமும் அல்லவா? கணவன் து வீட்டில் அதிகம் தங்கப் பாத்திரமாவாள்-மனைவி;* இல்லற வாழ்வில் பிறர்க்கு ஈயப் பாத்திரமாக இருப்பாள்'' எனத் தங்கத்தையும், ஈயத்தையும் வைத்தே நயம்படச் சொல்பவர் ஆயிற்றே இவர்!

பேச்சொன்றும், செயலொன்றுமாக இருப்பவர்கள் தாமே அதிகம். இவரோ அப்போதே தமக்குப் பரிசாகக் கிடைத்த ஆயிரம் ரூபாயை எடுத்து வந்து தம் மனைவியின் கையில் கொடுத்தார். இதனால் அவருடைய உறவினர்கள் எல்லோருக்கும் ஒரே மகிழ்ச்சி. அப்பணம் செலவழிந்து போனாலும் பழைய நினைவுகளுக்கெல்லாம் அறிகுறியாக அந்தப் பை இன்றும் அருமையாகப் பாதுகாக்கப்பட்டு இருந்துவருகிறது.

கும்பகோணத்தில் இவர் ஒரு நாள்கூட முழுக்கத் தங்கவில்லை. இவர் நினைவெல்லாம் ஐயரவர்களின் நினைவாகவே இருந்தது. உடனே சென்னை திரும்பி விட்டார்.

சென்னைக்கு வந்தபின் பிள்ளையவர்களின் வரலாற்றைக் குறித்த பணிகளிலேயே இவர் முழுக் கவனமாக ஈடுபட்டு வந்தார்.

ஒருநாள் மோகனூரில் இருந்த இவருடைய அன்பரான பொ. முருகன் இவரைக் காணச் சென்னை வந்தார்.

இவரை முருகன் அருள் பெற்ற முனிவராகவே நினைந்து போற்றி வருபவர்; காந்தமலையான்மீது இவர்

---

* தங்கப் பாத்திரம் ஆவாள்—தங்கி இருப்பதற்கு உரியவள் ஆவாள் (மனைவி).

பாடியுள்ள பாடல்களைத் தொகுத்து ஒரு நூலாகக் கொண்டுவர விரும்பினார்.

"ஐயா, காந்தமலையான் அருளால்தான் தாங்கள் ஐயரவர்களிடம் வந்து சேர்ந்தீர்கள். தமிழ் வித்துவான் தேர்விலும் வெற்றி பெற்றீர்கள். அப்பெருமானுக்கு உங்களது காணிக்கையாக அவன்மீது நீங்கள் பாடியுள்ள பாடல்களையே இந்த ஆண்டு வெளியிட நாங்கள் தீர்மானித்திருக்கிறோம்" என்று இவரை வேண்டினார்.

தம் ஆசான் தப்பாக நினைக்க மாட்டார் என்றாலும், தாம் அவரிடம் இருக்கும்போது சொந்தமாக எந்த நூலையும் வெளியிடக் கூடாது; எதையாவது ஆர்வத்தில் வெளியிட்டுவிட்டால், கூட இருப்பவர்கள் ஏதாவது நினைக்கக் கூடும்; எந்தச் சுவடியையாவது தேடும்போது, உடனே கிடைக்கவில்லையெனின் தம்மையே சந்தேகிக்கத் தோன்றும்; இந்த அவதூறுகளுக்கெல்லாம் இடம் அளிக்காமல் நடந்துகொள்ள வேண்டுமென்பது இவரது எண்ணம்.

"இந்த ஆண்டு என் ஆசிரியப்பிரானின் எண்ணப்படி மகாவித்துவான் பிள்ளையவர்களது சரித்திரம் வெளிவர வேண்டும். வேறு எதிலும் என் கவனம் போகாது. அதனால் அப்பால் பார்த்துக்கொள்ளலாம்" என்றார் இவர்.

"உங்கள் விருப்பப்படி அந்தப் பணியும் நிறைவேறட்டும். நீங்கள் அதைப் பார்த்துக்கொள்ளுங்கள், உங்களுக்குச் சிரமம் எதுவும் கொடுக்காமல் நாங்களே இதைக் கவனித்துக்கொள்கிறோம்" என முருகன் சொன்னார். அதற்குமேல் இவரால் எதுவும் சொல்ல முடியவில்லை.

**இயற்றிய முதல் நூல் :**

பிறர் மனம் புண்பட இவர் பேசியதில்லை. காந்த மலை முருகனிடம் இவர் வேண்டிக்கொண்ட வரம்,

" தினையளவேனும் கொடுமை
நினையா நெஞ்சம் ஈவாய் "

என்பதே.

"நீயாக உனது சொந்தக் கருத்துடன் சொந்த வசனங்களில் உயிர் கலந்து தியானம் செய்வதே பயன்படும்" என அநுபூதி பெற, நன்னெறி காட்டியவர் பாரதி. அது போன்றே இவரும் காந்தமலை தண்டபாணி சந்நிதானத்தில் விழிநீர் மல்கி, மெய்சிலிர்த்திடப் பாடிய பாடல்கள் பலவாகும். தமக்கு இவர் எழுதிய கடிதங்களில் இருந்த பாடல்களைச் சேகரித்து அன்பர் கணபதி ஐயர் முருகனிடம் அளித்து, அவை யாவும் ஒரு சிறு நூலாக வெளிவரத் துணை புரிந்து காந்தமலையான்மீது இவர் பாடிய பாடல்களை வெளியிடும் பணியில் உதவினார்.*

இவருடைய படைப்புகள் எல்லாவற்றுக்கும் முதலாக முகிழ்த்தது இந்த நூலே.

ஸ்ரீமத் ஐயரது விருப்பப்படியே மகாவித்துவான் பிள்ளையவர்களது சரித்திரத்தின் முதல் பாகம் அந்த ஆண்டின் இறுதியில் வெளியாயிற்று. அதில், வி.மு.சு.வும், இவரும் தமக்குச் செய்த உதவிகளை ஐயரவர்கள் மறக்காமல், "இவர்களுடைய நல்லுழைப்பிற்கு ஏற்றபடி தமிழ்த் தெய்வம் தக்க பலனை இவர்களுக்கு அளிக்குமென்று கருதுகின்றேன்" என ஆசிமொழி கூறியிருப்பதைக் காணலாம்.

ஐயரவர்கள் யாருக்கு எந்தக் கலையில் வல்லமை இருந்தாலும் அவரை அணுகி, அவரிடம் தாம் அறியாதனவற்றைத் தெரிந்துகொள்வதற்கு நாணம் கொண்டதில்லை.

ஒரு முறை 'குமரகுருபர முனிவ'ரின் விழாவுக்கு ஐயரவர்கள் இவரையும் அழைத்துக்கொண்டு திருப்பனந்தாள் போனார். அப்போது மடத்தில் நிறைய மாடுகள்

---

* 'காந்தமலை முருகன் தோத்திர மஞ்சரி'

இருந்தன; "இவற்றையெல்லாம் யார் கவனித்துக் கொள்வது?" என்று கேட்டார்.

**முதிய ஆயர் தந்த பழமொழி விளக்கம் :**

அதற்கென ஓர் ஆயர் இருப்பதையும், மாட்டு இலக்கணம், மாட்டு நோய்கள், அவற்றுக்குரிய மருந்துகள் முதலிய பல செய்திகள் ஆயர்க்குத் தெரியும் என்றும் மடாதிபதி சொன்னார். அந்த ஆயரை காண விரும்பினார் ஐயரவர்கள்.

மடாலயத் தலைவர் அன்று மாலையே அந்த ஆயரை ஐயரவர்கள் தங்கியிருந்த இடத்திற்கு அனுப்பி வைத்தார். முதியோரான ஆயரை உட்காரச் சொல்லி, "ஏதாவது சாப்பிட்டு வந்தாயா?" என்று ஸ்ரீமத் ஐயர் கேட்டார். ஆயர் அப்போதுதான் சாப்பிட்டதாகச் சொன்னார்; இருந்தாலும், இரண்டு பழங்களை ஆயரிடம் கொடுத்து உண்ணச் சொன்னார் ஆசான்.

இவ்வளவு பெரியவர் தம்மை மதித்துக் கேட்கிறாரே என்ற இன்பக் கிளர்ச்சி ஆயருக்கு; மிகவும் உற்சாகத்தோடு ஆசான் கேட்டவற்றுக்குப் பதில் சொல்லி வந்தார் ஆயர்.

மாடுகளை மேய்க்கும் விதம், நோய் வந்தால் மருந்து ஊட்டும் முறை ஆகியவற்றை அந்தக் கோபாலர் விரிவாக எடுத்துச் சொன்னார். பேச்சின் இடையே, "இடையன் வெட்டு அறாவெட்டு என்ற பழமொழி உண்டல்லவா?" என்றார் அந்த ஆயர்.

"அந்தப் பழமொழிக்கு என்ன அர்த்தம்?" என்று கேட்டார் சங்கத் தமிழ் தந்த ஐயரவர்கள்; ஆவலுடன் இவரும் மற்றவர்களும் ஆயர் சொல்லப் போவதைக் கவனிக்கலானார்கள்.

"ஆடுமாடுகள் காடுகளில் மேயப் போகின்றன; அப்போது புல்லை மேய்வதோடு தழைகளையும் மேயும். மரங்களில் உள்ள தழை எட்டாது. கூடப் போகிற

நாங்கள் மரக் கிளைகளை வெட்டித் தழையை ஆடுமாடு களுக்குப் போடுவது வழக்கம்.

"ஆனால் மற்றவர்கள்போல் கிளைகளை அடியோடு வெட்ட மாட்டோம்; அப்படி வெட்டினால் மரம் மொட்டையாகிப் பட்டுப் போகும். அதனால் கிளை ஒடிந்து சாயும் அளவுக்குத்தான் வெட்டுவோம். மாடுகள் தழையை உண்ணும். அடுத்த முறை நாங்கள் அந்தப் பக்கம் வருவதற்குள் மரம் தழைதழைத்திருக்கும். மறுபடியும் மாடுகள் மேயலாம். இதனால் ஏற்பட்ட பழமொழிதான் இது" என்றார் ஆயர்.

ஆயர் விடை பெற்றுக்கொண்டு சென்றதும் ஐயரவர்கள், "'இவன் என்ன அப்படி அருமையாகச் சொல்லப் போகிறான்?' என்றுதான் நீங்கள் நினைத்திருப் பீர்கள்? இவ்வளவு வருஷ ஆராய்ச்சியிலும் தெரிந்து கொள்ளாத ஒரு நுட்பமான கருத்தைக் கள்ளங்கபடற்ற இந்தஎளிய கிராமவாசியிடமிருந்து தெரிந்துகொண்டேன்" என்னும்போது உணர்ச்சி வசப்பட்டார். அவரால் அதற்குமேல் பேச முடியவில்லை.

"இந்தப் பழமொழியை முன்பு கேட்டதில்லையோ?" என்று இவர் கேட்டார்.

"கேட்டதேயில்லை. கேட்டிருந்தாலும் அதன் உண்மைப் பொருள் விளங்கியிராது. இப்போது இவ்வாயர், பழமொழிப் பாட்டுக்குப் பொருள் சொன்னார். திவ்யப் பிரபந்தப் பாசுரத்துக்கு விளக்கம் கூறிவிட்டார்!

"இந்த நாட்டில் பச்சை மரத்தைக் காரணமின்றி யாரும் வெட்ட மாட்டார்கள். ஆயர்கள்மட்டும், ஆடு மாடுகள் தழையைத் தின்பதற்காக வெட்டுவார்கள். அதனால் அப்படிச் சொன்னார்கள் என்று எண்ணினேன். இப்போதல்லவா உண்மை தெரிந்தது! இடையன் எறிந்த மரம், முழுவதும் மரத்தினின்று வேறுபடாமல் இயல்பாக மரத்தோடு இணைந்திராமல் இரண்டுங்கெட்டான் நிலையில் இருக்கும் என்ற உண்மையை இன்றுதான்

உணர்ந்தேன். 'இடையன் எறிந்த கடைமரம் ஒத்து' என்று 'சீவக சிந்தாமணி'யில் வருகிறது. அங்கே, 'வேதனையும் தீராமல், உயிரும் போகாமல் இருக்கிறேன் என்று சொன்ன குறிப்பு இது' என்று நச்சினார்க்கினியர் எழுதியிருக்கிறார். அப்படி எழுதியும் அன்று விளங்காமல் இருந்தது இன்று விளங்கியது'' என்று ஐயரவர்கள், ஆவலுடன் கேட்டுவந்த இவர்களுக்கு அறிவுறுத்தினார்.

x x x

இதுபோன்ற நாடோடிப் பழமொழிகளையும், பாடல்களையும், கதைகளையும் தொகுப்பதில் ஐயரவர்களின் மாணவராகிய இவருக்கு ஒரு தனி ஈடுபாடு உண்டு.

''காலத்தால் மாறுபடாத தெய்வ நம்பிக்கை, சமயப் பற்று ஆகியவற்றை அவற்றில் காணலாம். எழுதப் படிக்கத் தெரியாத பாமர மக்களால் இயற்கைச் சூழ் நிலையில், கட்டுப்பாடின்றி பெருகிய உணர்ச்சி மேலீட்டால் தோன்றிய இலக்கியம் அவை. ஆதலின் அவற்றைக் 'காட்டு மல்லிகை'க்கும்; 'மலையருவி'க்கும் ஒப்பிடலாம்'' என்பதாக நாடோடி இலக்கியத்தில் உள்ள தணியாத ஆர்வமுடன் இவர் குறிப்பிடுவார்.

''தமிழ்ப் பழமொழிகள் நூல் வடிவிலே வருவதற்கு அன்பர் கி.வா.ஜ., அவர்களே முழு முதற்காரணமென்றால் மிகையாகாது. நாட்டுப்புறப் பாடல்கள் சிலவற்றைச் சிறப்பான முறையில் தொகுத்துத் தஞ்சைச் சரஸ்வதிமகால் நூல் நிலையத்திற்கு அன்பர் கி.வா.ஜ. வழங்கியிருக்கிறார். அந்தத் தொகுப்புக்கு 'மலையருவி' என்று பெயர். அந்த 'மலையருவி' நூல் இன்று பெரும்பாலான இளைஞர் களுக்கு ஊன்றுகோலாக - சிறப்பாக, திரைப் படங்களிலே நாட்டுப்புறப் பாடல்களைச் சேர்த்திட விரும்புகிறவர் களுக்குப் பேருதவியாக - உள்ளது'' எனத் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி குறிப்பிட்டுள்ளார்.

நாட்டுப்புறப் பாடல்களைத் தேடித் தொகுப்பதற்கு இவர் எடுத்துக்கொண்ட முயற்சி கொஞ்சநஞ்சமன்று.

x x x

**படையாச்சியிடமிருந்து அறிந்த அரிய செய்திகள் :**

திருவிடைமருதூரில் ஒரு மிராசுதார் இருந்தார். அவர் ஒரு முறை சென்னை வந்திருந்தபோது, "நீங்கள் நாட்டுப்புறப் பாடல்களைச் சேகரிக்கிறீராமே! எங்கள் வீட்டுக் காவல்காரர் சாமிநாத படையாச்சிக்கு நிறையப் பாடல்கள் தெரியும்" என இவரிடம் சொல்லிவிட்டார். அவ்வளவுதான்!...

இவர் சாமிநாத படையாச்சியைத் தேடிக்கொண்டு திருவிடைமருதூர் சென்றார். நல்ல மழை; நடுநடுவே உடைப்பு ஏற்பட்டதனால் மாயவரம் மார்க்கம் ரெயில் எதுவும் போகவில்லை. இவரோ தம் பயணத்தை ரத்து செய்யாமல் ஈரோடைச் சுற்றி திருவிடைமருதூர் வந்தார். சாமிநாத படையாச்சியைப் பார்த்தார்.

"எங்களது பாட்டில் என்னங்க சுவை இருக்கப் போகிறது?" என்றார் முதலில், படையாச்சி நாணியபடி.

"அதைக் கேட்கத்தானே வெள்ளத்தையும் பொருட்படுத்தாமல் இவர் ஊரைச் சுற்றிகொண்டு இங்கு வந்திருக்கிறார்? சும்மாச் சொல்லு. உன் பெயரையும் பத்திரிகையில் போடுவார்" என இவருடைய நண்பர் சொல்லவே, "உங்களுக்கு என்ன பாட்டு வேண்டும்?" என்று கேட்டார் படையாச்சி.

இவர் உடனே, "சினிமாப் பாட்டு வேண்டாம். வேறு உமக்குத் தெரிந்ததைச் சொல்லும்" என்றார். வயது முதிர்ந்த ஓரிரண்டு பிச்சைக்காரரிடமா வது நாடோடிப் பாட்டுக் கிடைக்காமலா போகும் எனப் பணம் கொடுத்துச் சிலரைப் பாடச் சொல்லியும் கேட்டவர் இவர். அவர்களிடமும் சினிமாப் பாட்டுக்களையேதான் கேட்க முடிந்தது. அந்த வெறுப்பில் சினிமாப் பாட்டு வேண்டாம்

என்றாரே தவிர, சினிமா, டிராமா, அவற்றின் பாடல் எதுவுமே பிடிக்காது என்பதில்லை. சினிமா, நாடகம் பார்க்க, முதலாவதாக இவருக்கு நேரம் இருந்ததேயில்லை. சினிமாவைக் காட்டிலும் இலக்கியத்தைப் படிப்பதிலே இவருக்கு மகிழ்ச்சி மிகுதியாக இருந்தது. ஜெமினி வாசன் அவர்களே இவரை அழைத்துப் போய்க் காட்டிய 'ஔவையார்', 'அபூர்வ சகோதரர்கள்' படங்களைக் பார்த்திருக்கிறார்; 'தேவர்' டைரக்ட் செய்த படங்களையும் பார்த்திருக்கிறார். மைய அரசின் படத் தணிக்கைக் குழு உறுப்பினராகவும் இருந்திருக்கிறார். இதனால் சென்னை, பம்பாயிலுள்ள பட இயக்குநர்கள், தயாரிப்பாளர்களுடன் பேசிப் பழகும் வாய்ப்பும் இவருக்கு இருந்திருக்கிறது. புதுக்கோட்டையில் சாந்தானந்த சுவாமிகள் என்கிற பெரியார் இருக்கிறார். அவருக்கு மிகவும் வேண்டியவர் பட இயக்குநர் ஜி. என். வேலுமணி. சேந்தமங்கலம் சுவாமிகள் இவருக்கும் மிகவும் வேண்டியவராயிற்றே! இந்தத் தொடர்பினால் ஜி. என். வேலுமணியின் 'சரவணா ஃபிலிம்ஸ்' படங்களான 'நம்மவீட்டுத்தெய்வம்,' 'அன்னை அபிராமி' ஆகிய இரண்டு திரைப் படங்களுக்கும் இவர் சில பாடல்கள் எழுதியிருக்கிறார். 'சரவணா ஃபிலிம்ஸ் - நெங்கம்பாக்கம் ஜி. பி. கணேசையர் தான் இவரை வந்து வந்து அழைத்துப் போவார். குன்னக்குடி வைத்தியநாதன் தத்தகாரம் சொல்ல, அம்பிகையைப்பற்றி அப்படங்களுக்கு இவர் பாடல்கள் எழுதியிருக்கிறார்.

அன்று சாமிநாத படையாச்சி இவரது விருப்பப்படியே முளைப் பாட்டு, கப்பல் பாட்டு, குறவஞ்சி, ஏற்றப் பாட்டு என ஒவ்வொன்றாகத் தம் சரக்கை அவிழ்த்துவிட்டார். அன்று அவற்றையெல்லாம் இவர் எழுதிக்கொண்டார். இரவு நேரம் போனதே தெரியவில்லை.

சாமிநாத படையாச்சி கூத்து வாத்தியாராகவும் இருப்பவர். எனவே, பாடல்களுக்குத் தாமே அபிநயம்

களும் செய்து காட்டினார். "இந்தப் பாட்டுக்கு ராகம் கேதாரகவுளம்; எழுதிக்கொள்ளுங்கள்" என இவரைப் பார்த்துச் சொன்னார்.

"அடி சக்கேன்னா! இவருக்குங்கூட நீ வாத்தியாரா யிட்டயா?" எனக் கூட இருந்தவர்கள் படையாச்சியைக் கேலி செய்தார்கள். அதுவும் ஒரு வகையில் உண்மை தானே!

அன்று இரவு மணி இரண்டு ஆனதுகூடத் தெரியவில்லை.

" பாவட்டஞ் சோலைக்குள்ளே நீலமயில்
வாய்விட்டுக் கூவுதையா—முருகா
வாய்விட்டுக் கூவுதையா "

என்ற அவரது பாடலின் குரல் நாதத்திலே இவர்தாம் தம்மையே இழந்திருந்தாரே!

x x x

இப்படி ஓராண்டு ஈராண்டல்ல, நாற்பது ஆண்டு களுக்கும் மேலாக நாடோடிப் பாடல்களையும் பழமொழி களையும் இவர் சேகரித்திருக்கிறார்,

வெளியில் போய்விட்டு வீட்டுக்குள் வந்தவுடன் முதல் வேலையாகத் தம் சட்டைப் பையில் சிறு சிறு தாள்களில் எழுதிச் சேகரித்து வந்த நாடோடி இலக்கியத்தை அவற்றுக்கென வைத்திருந்த நோட்டுப் புத்தகத்தில் எழுதி விட்டே மற்றக் காரியங்களில் ஈடுபடுவார்.

இவருக்கு இந்த நாடோடி இலக்கியத்தில் இத்துணைப் பற்று இருப்பதைக் கண்ட இவருடைய அன்பர்கள் சிலரும் இவருக்காக அவற்றைத் தாமே சேகரித்தும் உதவியுள்ளார்கள்.*

நாடோடி இலக்கியத்தின் சுவையைத் தமிழன்பர்கள் எல்லோரும் சுவைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இவர்

---

* ஒருசாண் வயிறு'—கி.வா.ஜ.

அந்தப் பாடல்களைத் தம் விளக்கத்தோடு சேர்த்துப் பல கட்டுரைகள் எழுதிச் 'சுதேசமித்திரன்' வாரப் பதிப்பில் வெளிவரச் செய்தார். வானொலியில் பலமுறை நாடோடி இலக்கியம்பற்றிப் பேசியுள்ளார். அவற்றைத் தொகுத்துப் பல நூல்களாகவும் வெளியிட்டுள்ளார்.

தாம் அரும்பாடுபட்டுத் தொகுத்து வைத்திருந்த 21 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பழமொழிகளை எந்த எந்த முறைகளில் ஆராய்ச்சி செய்து ஆராய்ச்சிக் குறிப்போடு அதனை வெளியிட வேண்டும் என்று நினைத்தாரோ அது முடியவில்லை. அவற்றைத் தம் இறுதிக் காலத்தில் அவசரம் அவசரமாக அகர வரிசைப்படுத்தி, எண்ணிட்டு ஒரு நூலாகப் பதிப்பிக்கத்தான் இவரால் முடிந்தது.

"இந்நூல் பன்முக ஆய்வுக்குத் துணை செய்யும். ஆய்வாளர்களுக்கும், அறிஞர்களுக்கும், மாணவர்களுக்கும் பழமொழிபோல் எடுத்துக்காட்டப் பயன்படும் என்பது உறுதி" என்பதாகத் தக்க சான்றுகளுடன், மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவரும், ஆராய்ச்சிப் பேரறிஞருமான டாக்டர் தமிழண்ணல் எழுதினார். "கி.வா.ஜ.வின் கடைசி நூல்" என 20-5-89-இல் வெளியான தமிழண்ணலின் மதிப்புரையைப் பாராட்டிப் பேராசிரியர் அ. சாம்பசிவம் முதலியோர் எழுதிய கடிதங்கள் 18-6-89 'தினமணி'யில் வெளியாயின.

இத்துணைப் புகழையும் இவருக்குத் தேடிக் கொடுத்த இந்தப் பணியை இவர் மேற்கொண்டது எதனால் தெரியுமா?

1933-ஆம் ஆண்டு டிசம்பர் 23, 24-ஆம் தேதிகளில் தமிழ் அன்பர் மகாநாடு ஒன்று சென்னைப் பச்சையப்ப முதலியார் கல்லூரியில் நடைபெற்றது. ஆந்திரம், கன்னடம், மலையாளம், தமிழ் ஆகிய அனைத்து மொழியினரையும் தழுவிய சென்னை மாநிலத்தின் தலைநகராக இருந்த சென்னையில் அப்போது எங்கும் தொன்மை

வாய்ந்த தமிழின் சிறப்புப் பேசப்பட்டது. மகாகவி பாரதியின் படைப்புகளாலும், ஐயரவர்களின் பதிப்புகளாலும் தமிழணங்கு பழம்பெருமையும், புதுச் சிறப்பும் ஒருங்கே சேரப் பொலிவுற்றாள். பிற மொழி மோகம் கொண்ட தமிழர்களுங்கூடத் தமிழ் மொழியின்பால் மதிப்பும் பற்றும் கொள்ளத் தொடங்கினார்கள். சாதி, சமய, சமூக வேறுபாடுகளுக்கிடையே பலதரப்பட்ட கொள்கையுடையவர்களும் தமிழ் அன்பர் மகாநாட்டுக்கு வந்து தங்கள் கருத்தை வெளியிட்டார்கள். அந்த மகாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவராக ஐயரவர்களை வைத்துக் கொண்டு பலரும் செயல்பட்டார்கள். இதனை ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் திறந்து வைத்தார். மகாநாட்டுக்குக் கனம் திவான் பகதூர் குமாரசாமி ரெட்டியார் தலைமை தாங்கினார். தமிழன்பர் மகாநாடு முதல் நாள் வெகு சிறப்பாக நடந்தது என்றாலும், மறு நாள் அரசியல் புகுந்துவிட்டதால் மகாநாடு குழப்பத்தில் முடிந்தது. இதனால் அம்மகாநாட்டில் கலந்துகொண்ட பலரும் ஊக்கம் இழந்தனர். மகாநாட்டின் முடிவுகளைத் தொடர்ந்து செயல்படுத்துவதில் உற்சாகம் காட்டவில்லை.

அந்த மகாநாட்டிலேதான் ஐயரவர்கள், ‘‘கறையானுக்கு இரையாகிக்கொண்டிருந்த ஏடுகளில் எழுதப்பட்டிருந்த பழந்தமிழ் இலக்கியச் செல்வங்களில் ஒரு சிலவற்றையே என்னால் பாதுகாக்க முடிந்தது. இன்னமும் எழுதப் பெறாமல் வாய்மொழியாகவே நாடோடி இலக்கியப் பகுதிகளாகிய பாடல்கள், கதைகள், விடுகதைகள், பழமொழிகள் ஆகியவை ஆங்காங்கே வழங்கி வருகின்றன. இவற்றையெல்லாம் பல இடங்களுக்கும் சென்று சேகரித்துப் பதிப்பிக்கும் பணியை உடனே திட்டமிட்டுத் தொடங்கியாக வேண்டும். இல்லையென்றால் அந்தச் செல்வங்களும் நாளடைவில் மறைந்தே போகும்’’ என மிகுந்த வேதனையுடன் குறிப்பிட்டார்.

அன்றுமுதல் இவர் நாற்பதாண்டுக் காலத்திற்கும் மேலாக, பழமொழிகளுடன்[1] நாடோடி இலக்கியங் களையும் தொகுத்திருக்கும் சாதனை தம் ஆசிரியப் பிரானின் வாக்கைச் செயல்படுத்த இவர் மேற்கொண்ட பெருந்தவமேயாகும்.

x x x

ஐயரவர்கள் 'தமிழ் விடு தூது' நூலைப் பதிப்பிக்கும் போது ஒரு நாள் இவர் அதனைப் படித்து வந்தார். அதில் 'காசு பணம் காணில் உன்னை விற்பார்; அவர்பால் நீ மேவாதே' என ஓரடி வருகிறது. அந்த இடத்தை இவர் பிடித்தபோது ஐயரவர்கள், "ஐயோ" என்று பதறிப் போனார். இரண்டு மூன்று பெருமூச்சு விட்டார்.

'இந்தக் காலம் பணத்தால் அல்லவா எண்ணப்படு கிறது! என்னுடைய நோக்கம் காசு பணம் அல்ல என்பதைப் பிரமாணமாகச் சொல்வேன். அழிந்து போகும் நிலைமையிலுள்ள நம் பழந்தமிழ் இலக்கியங் களைக் காப்பாற்ற வேண்டுமென்றே என் நெஞ்சம் சதா காலமும் துடித்துக்கொண்டிருக்கிறது. நான் என்ன செய்வேன்? மிகவும் சிரமப்பட்டு ஒரு நூலை அச்சிட்டாலும் அது விற்பனையாக முப்பது வருஷங்கள் ஆகின்றனவே! பிறரிடம் சென்று ஒன்று கேட்க மனம் கூசு கின்றதே" என வருந்தினார்கள்.[2]

தமக்காக, தமக்கு வேண்டியவர்களுக்காக என்று யாரிடமும் போய் எதையும் கேட்கும் மனோபாவம் ஐயரவர்களிடம் இருந்ததில்லை.

ஸ்ரீமத் ஐயரது வீட்டிலேயே அவர் பேத்தியின் வயிற்றுக் கொள்ளுப்பேரன் ஒருவன் வளர்ந்து வந்தான். சிறு வயதிலேயே அவனுடைய தகப்பனார் காலமாகிவிட்டார்.

---

1. தமிழ்ப் பழமொழிகள் (11586) கி.வா.ஜ.
2. அன்பர் கி.வா.ஜ., ச. கு. கணபதி ஐயருக்கு எழுதிய கடிதம்.

எனவே அவனும் அவனுடைய தங்கையும் தாயாரும் அவரது வீட்டிலேயே இருந்து வந்தார்கள். அந்தக் கொள்ளுப் பேரனிடம் ஐயரவர்களுக்கு மிக்க அன்பு உண்டு.

அவன் லயோலா கல்லூரியில் சேர்ந்து படிக்க விண்ணப்பித்திருந்தபோது இவருக்கு மிகவும் வேண்டிய சத்குணம் என்பவர் அங்கே இருந்தார். அவரிடம் அவனுக்காகக் கொஞ்சம் சிபார்சு செய்யும்படி வீட்டில் உள்ளவர்கள் சொன்னார்கள். தகப்பனார் இல்லாத பிள்ளைதானே, கொஞ்சம் சிபார்சு செய்திருக்கக் கூடாதா? அவரால் அது முடியாத காரியம்; பிறரிடம் போய் எதையும் கேட்க அவர் கூசுவார். தம்முடைய கடைசிக் காலத்தில் அவருக்கு இருந்த ஆசையெல்லாம், தம் ஆசிரியரான பிள்ளையவர்களைப் போல் தம் இறுதி மூச்சு உள்ளவரை யாருக்காவது தமிழ்ப் பாடம் சொல்லிக்கொண்டே இருக்கவேண்டும், முடிந்த அளவு அரிய பழைய தமிழ் நூல்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதாகத்தான் இருந்து வந்தது.

கல்லூரிகள் எல்லாம் வந்த பிறகு தனித் தமிழை மட்டும் எடுத்துப் படிக்க யார் முன்வருகிறார்கள்? தெய்வ அருள்போல, தமிழார்வமும், கவிபாடும் திறனும் ஒருங்கே பெற்ற இவர் ஐயரது லட்சியத்திற்கு உதவியாக வந்தார். இவரிடம் அவருக்கு அலாதியான அன்பு இருந்தது.

இவர் போன்றோர்க்குத் தமிழ்ப் பாடம் சொல்வதிலும், இவர்களை வைத்துக்கொண்டு தமிழ் நூல்களை ஆராய்வதிலும், சதா சிவநாம ஜபத்திலுமே அந்தத் தமிழ் முனிவரின் எஞ்சிய வாழ்வு மணந்துகொண்டிருந்தது.

x x x

**அவதூறுகளை உறுதியுடன் தாங்கும் ஆசான் :**

தமிழன்பர் மகாநாட்டின் தொடர்ச்சிபோல ஒரு பத்திரிகையில் கட்டுரை ஒன்று வெளிவந்தது.

இவர் பத்திரிகை அலுவலகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்ததால் பெரும்பாலும் எல்லாப் பத்திரிகைகளையும் ஒரு முறை புரட்டிப் பார்ப்பது வழக்கம். அப்படிப் பார்க்கும்போது அந்தக் கட்டுரை இவருடைய கண்ணில் பட்டுவிட்டது. உடனே அதைப் படித்துப் பார்த்தார்; அதில் இவருக்கு ஆயிரம் ரூபாய் பரிசு கிடைத்ததுபற்றி அவதூறாக எழுதப்பட்டிருந்தது.

அப்போது இவர் அடைந்த வேதனை சொல்லி முடியாது. இவரால் தம் உணர்ச்சியை அடக்க முடியவில்லை. கட்டுரையைக் கொண்டுபோய்த் தம் ஆசிரியரிடம் காட்டினார்.

ஐயரவர்கள் அதை மெதுவாகப் படித்துப் பார்த்தார். அவருடைய முகத்தில் எந்தவிதமான மாறுதலையும் இவர் காணவில்லை.

இவர் வித்துவான் தேர்வு எழுதிய ஆண்டு இவரோடு தேர்வு எழுதியவர் ஒருவரையும் இவரையும் இணைத்து, "அவர் ஆயிரம் ரூபாய்க்காக ஏங்கி இருக்கவில்லை; சாதி உணர்வின்றித் தகுதி அடிப்படையில் வழங்கி இருந்தால் அந்தப் பரிசு அவருக்குத்தான் கிடைத்திருக்க வேண்டும்" என்பதாக எழுதப்பட்டிருந்த கட்டுரைப் பகுதிதான அது.

இவரது முகத்தில் காணப்பட்ட வேதனைக் குறியைக் கண்டு, "இதில் என்னைப்பற்றித்தானே குறை கூறியிருக்கிறார்கள்? சொன்னால் சொல்லிவிட்டுப் போகட்டும்! நீ ஏன் வருந்துகிறாய்?" என்றார் ஐயரவர்கள்.

"இவ்விடத்துப் பெயருக்கு என்னால் அல்லவா இந்தக் களங்கம் உண்டாகிவிட்டது?" எனச் சொல்லும்போது இவர் அழுதுவிட்டார்.

"இதற்கு நீ எப்படிப் பொறுப்பாவாய்? நான்தான் உனக்கு முதல் மார்க் கொடுக்க வேண்டுமென்று சிபார்சு செய்து, உனக்கு ஆயிரம் ரூபாயைக் கொடுக்கச் செய்ததாக என்மீதுதானே இந்தக் குற்றச்சாட்டு?'' என ஐயரவர்கள் சொன்னபோது இவர் விசிக்க ஆரம்பித்துவிட்டார்.

"நீ ஒன்றும் வருத்தப்படாதே! இதுபோன்ற அபவாதங்களுக்கு உள்ளாவது எனக்கு ஒன்றும் புது அநுபவம் இல்லை. ஒரு முறை விக்கிரமசிங்கபுரம் போயிருந்தபோது அவ்வூர்ப் பள்ளிக்கூட ஆசிரியர் ஒருவரைச் சந்தித்தேன். 'நீங்கள் எந்த ஊர்?' என்று கேட்டேன். 'கடையநல்லூர்' என்றார். 'உங்களுடைய வீட்டில் தமிழ் இலக்கியச் சுவடிகள் இருக்கின்றனவா?' என்று கேட்டேன். 'நிறைய இருந்தன. ஒருவர் வந்து எல்லாவற்றையும் தூக்கிக் கொண்டு போய்விட்டார்' என்றார். 'யார் வந்து தூக்கிக்கொண்டு போனது?' என்று விசாரித்தேன். 'கும்பகோணம் சாமிநாதையர் வந்து தூக்கிக்கொண்டு போய்விட்டார்' என்றார்.

"எனக்குப் பகீரென்றது. என்னுடன் சிலபேர் இருந்தார்கள். அந்த வாத்தியார் என்னை அறிந்துகொள்ளவில்லை என அறிந்தேன். 'நான் இங்கே இல்லை, விடுமுறைக்கு ஊர் போயிருந்தேன். அப்போது, வீட்டில் இருந்தவர்கள் சொன்னார்கள்; வந்தவர்தாம் எல்லாவற்றையும் எடுத்துச் சுருட்டிக் கொண்டு போய்விட்டார்' என்றார்.

"அப்போது என்கூட இருந்தவர்களிடம் நான் நடந்த விஷயத்தைச் சொன்னேன்; 'இவர் என்னை இன்னார் என்று தெரிந்துகொள்ளாமல் வீணாக அபவாதம் சுமத்தியிருக்கிறார். ஒரு முறை நான் கடையநல்லூர் போனது உண்டு. ஒரு வித்துவான் வீடு இங்கே உண்டு என்று தெரிந்து, ஒரு நண்பருடன் அங்கே போய் விசாரித்தேன். அதுதான் இவர் வீடுபோலும்! 'ஏடுகள் மச்சில் இருக்கின்றன' என்று அந்த வீட்டில் இருந்தவர்கள் சொன்னார்கள். ஏறிப்

பார்த்தபோது பல காலமாகக் கவனிக்கப்படாத இரண்டு பெட்டிகளில் ஏடுகள் இருந்தன. உள்ளே கையை விட்டால் ஒரே எலிப் புழுக்கை! எலிகளால் ஜீரணிக்க முடியாத சுவடித் துண்டுகளே தூள்தூளாக இருந்தன. எல்லா வற்றையும் கீழே கொட்டித் தட்டிப் பார்த்தபோது அரையும் குறையுமாக இருந்த 'சிந்தாமணி' ஏடு ஒன்று கிடைத்தது. அந்த ஒன்றை மாத்திரம் அந்த வீட்டில் இருந்தவர்களிடம் காட்டி, சொல்லிவிட்டு எடுத்து வந்தேன். எல்லாவற்றையும் எடுத்துவர வேறு எதுவும் இல்லை; எலிப்புழுக்கைகள்தாம் இருந்தன! இப்படிப் பழைய தமிழ்ச் சுவடிகளைத் தேடி அலைந்த காரணத் தினால், தெரிந்தோ தெரியாமலோ என்மீது சுமத்தப் பட்ட அபவாதங்கள் எத்தனையோ? மிகவும் சிரமப்பட்டுச் 'சிந்தாமணி'யை நான் பதிப்பித்தவுடன் பலரும் பாராட்டினார்கள். பிறரைக் கண்டிப்பதிலேயே இன்பம் காணும் சிலர், பல வகையான பிழைகள் அதில் மலிந்துள்ள தாகக் கண்டனப் பத்திரிகையே அச்சிட்டு விநியோகித் தார்கள்! நூற்பதிப்பு விஷயத்தில், எடுத்த எடுப்பிலேயே முற்றத் திருத்திய பதிப்பை வெளியிடுவது சாத்தியமா? பிழையல்லாதனவற்றையும் பிழைகளாக அதில் கூறி யிருந்தது எனக்கு மிகவும் வருத்தம் அளித்தது. ஒரு நாள் இரவெல்லாம் உட்கார்ந்து அதற்குப் பதில் எழுதினேன். காலையில் என் நண்பர் சாது சேஷையரிடம் கொண்டு போய் அதைக் காட்டினேன். அவர் நான் எழுதியிருந்ததை வாங்கி முழுக்கப் படித்துப் பார்த்தார். உடனே அதைச் சுக்குச்சுக்காகக் கிழித்து எறிந்தார். அப்போது அவர் எனக்குச் சொன்ன புத்திமதி என்ன தெரியுமா? 'யார் என்ன வேண்டுமானாலும் உம்மைப்பற்றி அவதூறாக எழுதிப் பேசிக்கொண்டிருக்கட்டும். அவற்றையெல்லாம் பொருட்படுத்தக் கூடாது. இவைபோன்ற கண்டனங்கள் இன்று தோன்றும்; நாளைக்குப் போய்விடும். இவற்றுக் கெல்லாம் சமாதானம் கூறிக்கொண்டு நீங்கள் இந்தக்

கண்டனப் போரில் இறங்க வேண்டாம்! அதனால் உங்கள் தமிழ்ப் பணிதான் தடைப்படும். நீங்கள் தமிழ்த் தொண்டு செய்துகொண்டே இருங்கள். தெய்வம் காப்பாற்றும்' என்றார். அவர் சொற்படியே, 'இனி என்னை யார் எப்படித் தூற்றினாலும் பதில் எழுதுகிறதில்லை' என அவருக்கு வாக்குறுதி கொடுத்தேன். பிறரைக் கண்டனம் செய்வதிலேயே சிலர் திருப்தி அடைகிறார்கள்!'' என்றார் ஐயரவர்கள்.

அன்பர் கி.வா.ஜ-அவர்களோ பதில் எதுவும் சொல்ல வில்லை. கொண்டுபோன பத்திரிகையை ஐயரவர்களிட மிருந்து திரும்ப வாங்கி வரக் கையை நீட்டினார்.

அதை ஐயரவர்கள் இவரிடம் திருப்பித் தரவில்லை. அதைத் தூக்கி அப்பால் வைத்துக்கொண்டுவிட்டார்.

அதோடு, "இதை நீர் மறந்தேவிடவேண்டும். இந்தக் கட்டுரை ஆசிரியர் மிகவும் நல்லவராகக்கூட இருப்பார். யாரோ கொடுத்த தவறான தகவலை வைத்துக்கொண்டு எழுதியிருக்கலாம். கிடைத்த தகவல் சரியானதா என்பதை அவர் ஆராயாமல் எழுதியதுதான் பிழையாகிவிட்டது. பிழையை உணரும்போது வருந் தினாலும் வருந்துவார். இதனால் அவர்மீது உங்களுக்கு வெறுப்பு இருக்கக் கூடாது'' என்றார்.

ஆசான் சொன்னது அப்படியே உண்மையானதைச் சில காலம் கழிந்த பின்னர் இவரும் உணர்ந்தார்.

x x x

**முழுமை பெற்ற மகாவித்துவானின் வரலாறும் பாராட்டும் :**

1934-ஆம் ஆண்டு மகாவித்துவான் பிள்ளையவர்களது சரித்திரத்தின் 2-ஆம் பாகமும் வெளியாயிற்று. தம் ஆசிரியரது வரலாற்றை எழுதிவிட்ட முழு நிறைவு ஐயரவர்களுக்கு ஏற்பட்டது.

வாழ்க்கை வரலாறு என்பது வசன நூல்களில் முக்கிய மான அம்சம். உண்மையை உள்ளபடியே கூறவேண்டும்.

படிப்பவர்களுக்குச் சலிப்புத் தட்டாமல் ரசமாக இருக்கும்படி அமைந்தால்தான் அந்த முயற்சியும் பயனுடையதாக இருக்கும்.

இத்தகைய தகுதி வாய்ந்து கவிஞர்கோமான்டு பிள்ளையவர்களது சரித்திரம் அமைந்தது. தமிழ்நா எங்கிலுமிருந்து ஐயரவர்களுக்குப் பாராட்டுகள் வந்து குவிந்தன.

தஞ்சையில் கரந்தைத் தமிழ்ச் சங்கம் தமிழ் வளர்ச்சிக்குச் சிறந்த பணியாற்றிக்கொண்டிருந்தது. திருவாளர் சீனிவாச பிள்ளை, உமாமகேசுவரம் பிள்ளை போன்றோர் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் 23-ஆம் ஆண்டு விழாவோடு மகாவித்துவான் பிள்ளையவர்களது பிறந்தநாள் விழாவையும் சேர்த்து, ஐயரவர்களை அவ் விழாக்களுக்குத் தலைமை தாங்க அழைத்தனர்.

பிள்ளையவர்களது விழா என்பதால் ஐயரவர்கள் இவரையும் அழைத்துக்கொண்டு தஞ்சை சென்றார். விழாக்கள் சிறப்பாக நான்கு நாட்கள் நடந்தன.

இதற்கு முன்னால் எழுதப்பெற்ற தமிழ்ப் புலவர் வரலாறுகளில் தெய்விக அம்சத்தை அதிக அளவு ஏற்றியே சொல்லி வந்திருக்கிறார்கள். அப்புலவர்களுக்குப் பெருமை உண்டாக்க வேண்டும் என்பது ஒன்றனையே கருத்தாகக் கொண்டு எழுதப்பெற்றவை அவை. எனவே, முற்றும் அவற்றை நம்பும்படி இல்லை.

"உள்ளது உள்ளபடியே அமைந்த பிள்ளையவர்களது சரித்திரமே தமிழில் முதல் வாழ்க்கை இலக்கியமாக மிளிர் கிறது. ஆசிரிர்பால் கொண்டிருந்த பெருமதிப்போடும், உள்ளன்போடும் தம் அன்னாரது சரித்திரத்தை ஐயரவர்கள் எழுதியிருப்பதே அதற்குக் காரணம்" எனப் பலரும் இவருடைய ஆசானைப் பாராட்டினார்கள்.

விழாக்கள் முடிந்தபின் இவர்கள் ரெயிலேறி மறுநாள் காலை இருள் பிரிவதற்குள் சென்னை வந்து சேர்ந்தார்கள்.

ஸ்ரீமத் ஐயர் தம் அறைக்குள் சென்று உட்கார்ந்தார். அவருடைய சாமான்களை எல்லாம் இவர் அந்த அறையில் வைத்துவிட்டுப் தம் ஜாகைக்குப் போகக் கிளம்பினார்.

"கொஞ்சம் இருக்கவேண்டும்" என்றார் ஸ்ரீமத் ஐயர். இவர் தயங்கியபடியே நின்றார்.

ஸ்ரீமத் ஐயர் தம் பெட்டியைத் திறந்தார். தமக்குப் போர்த்தப்பட்ட பொன்னாடையை எடுத்தார்.

"என் நீண்ட நெடுநாளைய ஆசைகளை நீங்கள் அல்லவா பூர்த்தி செய்து வருகிறீர்கள்! உங்களுக்கல்லவா இந்தப் பொன்னாடையைப் போர்த்த வேண்டும்" என்று சொல்லிக்கொண்டே அந்தப் பொன்னாடையைத் தம் திருக்கரத்தால் இவருக்குப் போர்த்தினார். இவர்கள் இரண்டு பேர்களின் விழிகளிலும் கண்ணீர் துளித்தது. இவரையும், அவரையும் தவிர வேறு யாரும் அங்கே இல்லை. சுவரிலே இருந்த கடிகாரம் 'டங்'கென அரை மணிக்கு ஒருதரம் அடிக்கும் ஓசையை எழுப்பிற்று.

"நல்ல சகுனம்! மணி அடிக்கிறது. மேலும் மேலும் நிறையப் பொன்னாடைகள் பெற வேண்டும்" என ஸ்ரீமத் ஐயர் தழுதழுத்த அன்புக் குரலில் இம் மாணவரை வாழ்த்தினார்.

இவருக்கு ஒரு கணம் உடம்பெல்லாம் புல்லரித்தது. பேச்சு எழவில்லை. ஸ்ரீமத் ஐயரது பாதத்தில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினார்.

"எழுந்திருக்கவேண்டும்" என மெல்லக் குனிந்து இவரைத் தொட்டு ஸ்ரீமத் ஐயர் எழுந்திருக்கச் செய்தார்; "வீட்டில் பெண்கள் இருக்கிறார்கள் இல்லையா? இந்தப் பூவையும் பழத்தையும் எடுத்துக்கொண்டுபோகவேண்டும்" எனச் சொல்லி, அவற்றைக் கொடுத்து இவரை அனுப்பி வைத்தார்.

இந்த நிகழ்ச்சி பலருக்கும் தெரியாது; இவரும் இதைப் பற்றி எவரிடமும் வெகு காலம் வரை சொல்லிக்கொண்ட

தாகத் தெரியவில்லை. பின்னால், காந்தமலை ஆண்டவன் தான் இந்த நிகழ்ச்சியைப் பலரும் அறியும்படியாகச் செய்தான்.

## 60-ஆம் ஆண்டு நிறைவு :

1966 - ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 9-ஆம் தேதியன்று இவருக்கு 60-ஆம் பிராயம் நிறைந்து 61-ஆம் ஆண்டில் இவர் அடியெடுத்து வைத்தார். இவருக்கு இதைப்பற்றிய எண்ணம் எழுவதற்குச் சில மாதங்களுக்கு முன்பே இவருடைய அன்பர்களான 'மாயாவி'யும், அகிலனும் இவரது வீட்டிற்கு வந்தார்கள். "உங்களுக்கு அறுபதாம் ஆண்டு நிறைவு வருகிறது. அதை நாங்கள் கொண்டாடப் போகிறோம்" என்ற போது, இவர், "வேண்டாமே" என்ற போதிலும் அவர்கள் அந்த முயற்சியைக் கைவிடுவதாக இல்லை.

இவருடைய குழந்தைகள் இவரது அறுபதாம் ஆண்டுக் கல்யாணத்தை மிகச் சிறப்பாக மயிலை நாராயணியம்மாள் கல்யாண மண்டபத்தில் நடத்தி வைத்தனர்.

சென்னை அன்பர்களுக்கும் முன்னதாகக் கல்கத்தா தமிழ் எழுத்தாளர் சங்கத்தார் இவரது 'மணி விழா'வை அங்கே கொண்டாடுவதில் முந்திக்கொண்டார்கள். அன்பர் ப.ந. தியாகராஜன் இந்த விழாவைக் கல்கத்தாவில் நடத்துவதில் முனைந்து நின்றார்.

சென்னை அன்பர்கள் விழாக் குழு ஒன்றை அமைத்தார்கள். பொருட் செல்வரும், சமரச சன்மார்க்க அருட் செல்வருமாகிய தொழிலதிபர் நா. மகாலிங்கம் அவர்களைத் தலைவராகக் கொண்டு சிறந்த முயற்சியுடன் 1966 ஜூலை 10-ஆம் தேதியன்று இவருடைய மணி விழாவை நடத்தினார்கள். 'கலைமகள்' அதிபர் நா.ராமரத்தினத்தின் துணையுடன் 'வாழும் தமிழ்' என்கிற மலரையும் வெளியிட்டார்கள். இந்த விழாவுக்கு இலங்கையிலிருந்து இவருடைய நண்பர்கள் சிலர் வந்திருந்தார்கள்; "நீங்கள் உங்கள் துணைவியாருடன் இலங்கைக்கு வந்து எங்களது

உபசாரத்தையும் பெறத்தான் வேண்டும்'' என்று வேண்டிக்கொண்டார்கள்.

அவர்களது விருப்பப்படி இவர் தம் துணைவியாருடன் இலங்கை சென்றார். இவர்களுடன் ஃபோட்டோக் கலைஞர் என். ராமகிருஷ்ணாவும், கரூர் அன்பர் கண்ணனும் சென்றனர்.

இவருடைய உடன்பிறவாத சகோதரர் திரு. சு. இராசேந்திர குருக்கள் யாழ்ப்பாண நகரிலும், திரு. நடராசன் மட்டக்களப்பிலும், திருவாளர்கள் தனபாலசிங்கமும் சுந்தரலிங்கமும் கொழும்புவிலும், செய்திப் பொறுப்பாசிரியராக இருந்த திரு. நாகலிங்கம் கண்டியிலும் முன்நின்று இவருடைய மணிவிழவை நடத்தி வைத்ததுடன், 'கி.வா.ஜ., மணிவிழா மலர்' ஒன்றையும் வெளியிட்டனர்.

அந்தச் சமயத்தில் மதுரைப் பல்கலைக் கழகத் துணை வேந்தராக இருந்த பேரறிஞர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் குறிப்பிட்டார்கள்:*

''சில ஆண்டுகளுக்கு முன்னே அன்பர் கி.வா ஜ., அவர்களுக்கு அவரது ஊரிலேயே ஒரு பாராட்டு விழா நடந்தது. ஏதோ என்னுடைய நல்ல காலம் அதில் தலைமை பூணும் வாய்ப்பினைப் பெற்றேன். அப்போதுதான் அவருடைய இளமையினைப்பற்றியெல்லாம் அறிய முடிந்தது. அங்குள்ள மலைமேலே வீற்றிருக்கும் முருகனிடத்திலே ஈடுபட்டுச் சில நாட்களில் இரவெல்லாம் ஆண்டவனோடு அவர் மன்றாடி நின்ற வரலாற்றினையெல்லாம் உணர்ந்தேன். அதன் பயனாகத் தமிழ்ப் பாடல்களைப் பேசுவது போலவே மிக விரைவாக இயற்றும் திறமை அவருக்கு இயல்பாகவே அமைந்துவிட்டதாம்.

''பின்னர், பழைய சங்க காலத் தமிழ்க் கருவூலத்தைத் தமிழ் நாட்டுக்கும் உலகத்துக்கும் தேடித் தந்த மகாமகோபாத்தியாய சாமிநாத ஐயரது தொடர்பு கிடைத்ததால், தமிழில் பேரறிவு படைக்கும் பெருமை

---

* கலைமகள் மே, 1966.

அன்பர் கி.வா.ஜ-வுக்குக் கிடைத்தது. அன்பர் கி.வா.ஜ., எழுதிய 'கலைஞன் தியாகம்' என்ற சிறு கதையை நான் எப்போதும் மறப்பதில்லை. டாக்டர் ஐயரவர்கள் புதிய இலக்கிய வகைகளில் தொடக்கக் காலத்தில் ஈடுபட்டதில்லை; ஆனால் யாரையும் அதிலே ஈடுபட வேண்டாமென்று சொன்னதும் இல்லை.

"இருந்தாலும் அன்பர் கி.வா.ஜ., அவர்கள், ஐயரவர்களின் உள்ளத்தின் போக்கை அறிந்து, புதிய இலக்கிய வகைகளைப் படைக்கும் திறனைத் தமக்குள்ளேயே அடக்கிக்கொண்டு ஐயரவர்களை வழிபட்டு வந்தார். இது ஒரு பெரிய தியாகந்தான். இதன் பயனாக ஒரு பெரிய புரட்சியே நடைபெற்றது எனலாம்.

"பையப் பைய ஐயரவர்கள், புதிய இலக்கியப் படைப்பின் இன்பத்தையும், சிறப்பினையும் தம்முடைய சீடருடன் அமர்ந்து, அதனை வாழ்த்தி வளர்க்கவும் தொடங்கிவிட்டார். புறநானூற்றிற்கு ஐயரவர்கள் எழுதிய முன்னுரையினையும் பின்னர் ஐயரவர்கள் எழுதிய 'என் சரித்திரம்' முதலியவற்றையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இந்த உண்மை நன்கு விளங்கும். ஐயரவர்களே இந்தப் புது முயற்சியில் ஈடுபட்டதால் இந்த முயற்சிக்கு எங்குமிலாத ஒரு புகழ் வந்து சேர்ந்தது.

" 'மணிமேகலை'யைப்பற்றி ஐயரவர்கள் எழுதிய ஆராய்ச்சிக் குறிப்புகளை ஒப்பு நோக்கினாலும் இந்த உண்மை நன்கு புலனாகும். இவ்வாறு பழந்தமிழே புதிய தமிழை வாழ்த்துமாறு செய்த ஒரு பெருமை அன்பர் கி.வா.ஜ-வுக்கு உண்டு. அதுமட்டுமல்லாமல், ஆழ்ந்து அகன்று பழந்தமிழ் இலக்கிய அறிவு படைத்த கி.வா.ஜ-அவர்கள் இந்தப் புதுவகை இலக்கியப் படைப்பில் ஈடுபட்டதால், பழந்தமிழ் அறிஞர் கூட்டமே இந்த முயற்சியை வாழ்த்தவும், வளர்க்கவும் முன்வந்தது. இல்லையானால், புதிய வகை இலக்கியப் படைப்புகள் எல்லாம் தமிழுக்குப் புறம்பானவை என்றும்,

தமிழறிஞர்கள் ஒப்புக்கொள்ளாதவை என்றும் புறக்கணிக்கப் பெற்றிருக்கும்; தமிழுக்கே பெருங்கேடு வராமல் தடுத்தவர்களில் அன்பர் கி.வா.ஜ., அவர்களும் ஒருவர். இந்த வகையில் எழுந்த அவர் படைப்புகள் எங்கும் பரவி எல்லோராலும் வரவேற்கப் பெறுவது யாவரும் அறிந்ததே.

"நான் முன்னே கூறிய பாராட்டு விழாவில், ஐயரவர்களிடம் கி.வா.ஜ. அவர்கள் எழுதுவித்த புதிய நுணுக்க உரைக் குறிப்புகளைக் கேட்டு, 'நச்சினார்க்கினியனே!' என்று இவரை அவர் புகழ்வதுண்டு என்றும் அறிந்தேன். கி.வா.ஜ- அவர்கள் இலக்கியங்களைப்பற்றி முறையாகவும், முன்னேற்பாடாகவும் குறித்துக்கொண்டு வந்து, கருத்துக்களைப் புதிய புதிய கோணத்திலிருந்து கவனித்துப் பழைய பாடல்களின் ஆழத்தை விளக்கும்போது கூட்டத்திலுள்ள எல்லோரும் வியந்து நிற்பதைப் பலமுறை நான் கண்டிருக்கிறேன். பழைய தமிழ் அறிஞர்போல் எந்தப் பாடலையும் விரித்துப் பொருள் சொல்லும் ஆற்றலையும், அவற்றையெல்லாம் நினைவிலே வைத்துக் கொண்டிருக்கும் திறனையும் அடிக்கடி இரட்டுற மொழிந்து, கூடியிருப்பவர்களையெல்லாம் இன்பத்தில் ஆழ்த்தும் சிறப்பினையும் அன்பர் கி.வா.ஜ., அவர்களிடந்தான் எப்போதும் நாம் கண்டு மகிழலாம். அவரைப் பழந்தமிழின் விளக்கமாகவும், புதிய தமிழின் உயிர் நிலையாகவும் கண்டு நானும், 'கி.வா.ஜ. வாழ்க! வாழ்க! வாழ்க' என்று வாழ்த்திப் பெருமகிழ்ச்சிகொள்கிறேன்."

இப்படிப் பேரறிஞர் தெ பொ. மீ., அவர்கள் குறிப்பிடுகையில், "சில ஆண்டுகளுக்கு முன்னே கி.வா ஜ - அவர்களுக்கு அவர் ஊரிலேயே ஒரு பாராட்டு விழா நடந்தது. ஏதோ என்னுடைய நல்ல காலம் அதில் தலைமை பூணும் வாய்ப்பினைப் பெற்றேன்" எனக் குறிப்பிட்ட சம்பவம் 1957-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 30-ஆம் தேதிதான் நடைபெற்றது. அதுவும் காந்தமலையான் திருவருள் போலும்!

வாரப் பத்திரிகையான 'குமுதம்' 1971-இல் 'அபூர்வச் சந்திப்பு' என்னும் ஒரு தொடரை ஆரம்பித்தது. வாசகர்களிடையே இத்தொடர் உள்ளக் கிளுகிளுப்பை உண்டாக்கியது. அதில் இலக்கிய - சமயத் துறையைச் சேர்ந்த இவரும், சினிமாத் துறையைச் சேர்ந்த செல்வி ஜயலலிதாவும் உரையாடியது இரு மாறுபட்ட வாழ்க்கை அமைந்தவரின் அநுபவங்களை உணர்த்தியது.

**இருபெரும் பக்திச் சொற்பொழிவாளரின் பரஸ்பர அன்பு :**

மோகனூர்க் காந்தமலையானிடம் இவரைப் போன்றே அன்பு கொண்டு அவனது கோவிலுக்கு மாதந்தோறும் தவறாமல் சென்று தங்கி அருணகிரிநாதரின் பெருமையையும், அவர்தம் திருப்புகழின் இனிமையையும் எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தார் சிறந்த சமயச் சொற்பொழிவாளரான முருகபக்தர் ஒருவர். நாளடைவில் அந்த வட்டாரத்திலேயே அவருக்குத் தனிமதிப்பு ஏற்படலாயிற்று. அதனைப் பயன்படுத்திக் காந்தமலைக் கந்தன் கோவிலின் நிர்வாகம் திறம்பட நடைபெறுவதற்கு அவர் வழிகோலினார். அந்தச் சிறிய குன்றின் அடிவாரத்தில் அருணகிரிநாதருக்கு நினைவுச் சின்னமாக அருணகிரிநாதர் அறச் சத்திரம் ஒன்றினைக் கட்டினார். அந்தக் காந்தமலைப் பக்தர்தாம் 'திருப்புகழ் அமிர்த' அருள்மொழியரசு திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்.*

இரண்டு பேர்களுமே முருகன் அடியார்கள் அல்லவா? தமிழ் இலக்கியத்துறை நண்பர்கள் என்பதைவிட முருக பக்தர்கள் என்பதிலேதான் இருவருக்கும் தொடர்பு அதிகம்.

**வாரியார் சுவாமிகளின் நட்பு :**

வாரியார் சுவாமிகளுக்கும் இவருக்கும் நெருங்கிய பாசப் பிணைப்பு உண்டு. தாம் சென்று வந்த தலங்களின் பிரசாதங்களை அனுப்பி வைப்பார் அவர்; பல

---

* கரூர் பொன்னுசாமி: ஆனந்த விகடன் 21-10-70 இதழில்.

ஊர்க் கோயில் கும்பாபிஷேகம் போன்ற திருவிழாக்களில் இவரும் கலந்து கொள்ளவேண்டி அழைப்பும் அனுப்புவார். இவரும் அங்கெல்லாம் சென்று இனிய கவியமுதமன்ன விரிவுரை புரிவார்.

ஏன், இவர் கடைசியாக நோய்வாய்ப்பட்டிருந்த காலத்தில் இவரைத் தனியார் மருத்துவமனை ஒன்றில் சேர்த்திருந்தார்கள். தம்முடைய தள்ளாமையையும் பொருட்படுத்தாமல் வாரியார் சுவாமிகள் இவரைப் பார்க்கத் தனியார் மருத்துவமனைக்கு வந்தார்.

இருவரும் ஒருவரையொருவர் கண்களினாலேயே தழுவிக்கொண்டனர். இவர், தம் கையைப் படுக்கையில் இருந்தபடியே உயர்த்தியபோது வாரியார் சுவாமிகள் அதைப் பற்றித் தொட்டு நீவிவிட்டார். தம் கழுத்தில் அணிந்திருந்த ருத்திராட்ச மாலையைக் கழற்றி இவருடைய கையில் கொடுத்தார். அதனை வாங்கி இவர் தம் கண்ணில் ஒற்றிக்கொண்டார். வாரியார் சுவாமிகள் தம்மிடம் இருந்த திருநீற்றை எடுத்து, ''ஆண்டவனுக்குத் திருநீறு அணிவிப்பது போல அணிவிக்கிறேன்'' எனச் சொல்லிக் கொண்டே இவருக்குப் பூசிவிட்ட காட்சி அந்த இடத்தையே தெய்வசந்நிதானமாக ஆக்கியது.

இப்படி இவர்கள் இரண்டு பேர்களுமே காந்தமலை யான்மீது பல காலமாகப் பக்தி கொண்டவர்கள்.

22-4-57-இல் யாரோ ஒருவன் காந்தமலை முருகன் விக்கிரகத்தை உடைத்துவிட்டான் என்று வந்த செய்தி இவர்கள் இரண்டு பேர்களையுமே துடிதுடிக்க வைத்தது. உடனே அந்த மலைக் கோவிலில் திரும்பவும் முருகன் சிலை பிரதிஷ்டை செய்து குடமுழுக்குச் செய்துவைக்க வாரியார் சுவாமிகள் செய்த ஏற்பாட்டில் இவரும் ஈடுபட்டு நல்ல படியாக அது நிறைவேறியது

இடையில் ஒரு நாள் காந்தமலை முருகனையே நினைந்து பாடி மகிழ்ந்து வரும் அந்த ஊர்க்காராகிய இவருக்கு, காந்தாலையான் திருவடியின்கீழ் 30-8-57-இல்

பொன்னாடை போர்த்திக் கவுரவிக்க வேண்டுமென்ற எண்ணம் சிலருக்கு உண்டாயிற்று.

ஸ்ரீலஸ்ரீ வடகுமரை அப்பண்ண சுவாமிகள் இம்முயற்சிக்குப் பின்னணியில் இருந்தார். அப்பண்ண சுவாமிகளின் வாக்கையே வேதமாக மதிக்கும் பாலப்பட்டி ஜமீன்தாரிணி செளந்தரா கைலாசம் அம்மையார் இந்த ஏற்பாடுகளைக் கவனிக்கத் தொடங்கினார்.

விழாவுக்கு, சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சிவ ஞானம் தலைமை வகிப்பதாக இருந்தது. தமிழக ஆந்திர எல்லை குறித்து முடிவு செய்ய மைய அரசால் நியமிக்கப் பட்ட 'படாஸ்கர் குழு'வின் முன் அந்தத் தேதியில் அவர் சாட்சி சொல்ல வேண்டியிருந்ததால் அவரால் வர இயலாத நிலை ஏற்பட்டது.

கடைசி நேரத்தில் செளந்தரா கைலாசம் அம்மையார், தொலைபேசிமூலம் பேரறிஞர் தெ. பொ. மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களைச் சந்தித்து அந்த விழாவுக்குத் தலைமை தாங்க அழைத்தார். அவரும் உடனே இவரது ஊராகிய மோகனூருக்கு வந்தார். காவேரி சென்று நீராடினார். காந்தமலைக்குச் சென்று தண்டபாணிக்கு அன்று நடைபெற்ற அபிஷேக ஆராதனைகளைக் கண்டு களித்தார்.

இவர்கள் அனைவரையும் செளந்தரா அம்மாள் பிற்பகல் விருந்துக்குத் தம் பாலப்பட்டி வீட்டிற்கு அழைத்துச் சென்றார்; திரும்ப மாலையில் மோகனூர் கொண்டு வந்தார்.

கன்யகாபரமேசுவரி மடத்திலிருந்து இவர்கள் அனை வரும் அருணகிரிநாதர் அறச்சாலைக் கட்டிடத்திற்கு ஊர் வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்கள். விழாவுக்கு, தெ. பொ. மீ., அவர்கள் தலைமையேற்று இவருக்குப் பொன்னாடை போர்த்திப் பேசினார். "கி.வா.ஜ-வின் புலமையை நான் அறிந்திருக்கிறேன். ஆனால் இங்கே வந்த பிறகுதான் உண்மை முழுவதையும் உணர்கிறேன்.

இங்கே பக்தர்கள் எல்லாம் அவரிடம் வைத்திருக்கும் மதிப்பைக் கண்டு ஆச்சரியப்படுகிறேன். பெரும்பாலும் உள்ளூரில் பலருக்கு மதிப்பு இருப்பது அரிது. ஆனால், இவரோ அதைப் பெற்றிருக்கிறார். அதற்கு இவருடைய நற்பண்புகளே ஸ்ரீமத் ஐயரிடம் சென்று கல்வி பயில்வதற்கு முன்னாலே இவர் செய்யுள் இயற்றுவார் என்று அன்பர்கள் சொல்ல அறிந்தேன்'' என்பதாகப் பேசினார்.

பின்னர், சௌந்தரா அம்மாள், வே. சிவசுப்பிரமணியன், ராமராஜன், ராஜாராம், அடியேன், தமிழ்மணி முதலிய பலரும் பேசினோம். முருகனாகவே பலருக்கும் காட்சி தந்துகொண்டிருந்த மகானான ஸ்ரீ அப்பண்ண சுவாமிகள் மந்தகாசப் புன்னகையுடன் அன்று மேடையில் அமர்ந்திருந்தார்.

இவர் நன்றியுரை கூறும்போது, ''இன்று காலண்டரைப் பார்த்தேன்; தருமிக்கு மீனாட்சிசுந்தரேசர் பொற்கிழி கொடுத்த நாள் என்று இருந்தது. இன்று எனக்கு மீனாட்சி சுந்தரனாரே பொன்னாடை போர்த்தினார்கள். என்றதுடன் ஸ்ரீமத் ஐயர் முன் ஒரு நாள் அவருடைய இல்லத்தில் யாரும் இல்லாத சமயம் தமக்குப் பொன்னாடை போர்த்திய நிகழ்ச்சியையும் யாவரும் மெய்சிலிர்த்திடும் படி தெரிவித்தார்.

வித்துவான் தேர்வில் முதலாக வந்த பின்பும் படிப்பில் இவருக்கு இருந்த ஆர்வம் அடங்கவில்லை. சென்னைப் பல்கலைக்கழக ஆராய்ச்சி மாணவராகச் சேரவேண்டும், ஸ்ரீமத் ஐயரையே தமக்கு வழிகாட்டும் பேராசிரியராகக் கொள்ள வேண்டும் என இவர் விரும்பினார். அதற்கு விண்ணப்பமும் செய்தார்.

1934-ஆம் ஆண்டு மே மாதக் கடைசியில் பனசைக் குரு பூஜைக்கு ஸ்ரீமத் ஐயர் சென்றபோது இவரும், அன்பர் வி.மு.சு-வும் உடன் சென்றார்கள். இவர் தம் மனைவியை அழைத்துக்கொண்டு சென்றார்; கும்பகோணத்தில்

மாமனார் வீட்டில் அவளை விட்டுவிட்டு உடனே பனைசை சென்றார்.

குருபூஜை ஆனவுடன் இவர்மட்டும் தனியே கும்பகோணம் வந்து, தம் மனைவியை அழைத்துக்கொண்டு மோகனூர் சென்றுவிட்டார். காந்தமலை அடிவாரத்தில் அருணகிரிநாதர் ஜயந்தி விழா நடைபெற்றது. காந்த மலைக் கோவிலிலும் மயூரபவனம் கோவிலிலும் முருகனுக்கு அபிஷேகம் செய்வித்தார்.

சேந்தமங்கலம் சுவாமிகளையும், அவருடைய சீடர்களான நிஜானந்தர், சங்கரானந்தர் ஆகியோரையும் தரிசித்து வரச் சேந்தமங்கலம் சென்றார்.

திருமணமாகி ஜாகை வைத்த பின்பும் இவர் ஞானபண்டிதனையும், ஞானிகளையும் தேடியோடும் நாட்டம் தணியப் பெறாதவராக இருந்தது ஸ்ரீமத் ஐயருக்கு வியப்பை அளித்தது.

இவர் மோகனூர் சென்றிருந்தபோது ஸ்ரீமத் ஐயர் இவருக்கு எழுதிய இரண்டு கடிதங்களுள் ஒன்றில் ஸ்ரீமத் ஐயர் இவருக்கு, 'அகத்தே நோக்குவதுபோல் புறத்தே நோக்கிக்கொண்டிருக்க வேண்டுமென்பது எனது கருத்து' என உலகியலை மென்மையாக எடுத்துரைக்கிறார்.

இவர் 22-6-34-இல் சென்னை திரும்பினார். 'கலைமகள்' பத்திரிகை தோன்றுவதற்குக் காரணமாகவும், அதன் ஆசிரியராகவும் இருந்த டி. எஸ். ராமசந்திரையர் 23-7-34-இல் காலமானார். பத்திரிகை தோன்றியதிலிருந்து - 'சர்க்குலேஷன்' அதிகரிக்காமல் - பாலாரிஷ்டம் என்பார்களே அதிலிருந்து மீள முடியாத நிலையில் தவித்துக்கொண்டிருந்தபோது அவரது மறைவு பதிப்பாளருக்கு ஒரு பேரிழப்பாகத் தோற்றியது.

'நாடி வைத்தியர்' என்ற ஒரு கதையை அந்த ஆண்டு ஆடி மாத இதழில் எழுதியிருந்தார், அமரரான ராமசந்திரையர். அப்போது, "அடுத்த மாதம் என்ன எழுதப் போகிறீர்கள்?" என்று இவர் கேட்டிருக்கிறார்.

"அழுகையைப்பற்றி எழுதப் போகிறேன். எல்லாம் அழுகையில்தானே முடிகின்றன? எல்லா ரசங்களுக்கும் அதுவே பிரதானம். சிருங்காரத்தில்கூட விப்ரலம்ப சிருங்காரத்தையே - சோகச் சுவையைத்தான் - உயர்வாகக் கருதுகிறார்கள், இல்லையா?'' எனச் சிரித்துக்கொண்டே சொன்னாராம் அவர். வருவதை யாரால்தான் முன்கூட்டி அறிய முடிகிறது?

கி.வா.ஜ-வோ பெரும்பகுதி நேரம் ஆசானுடனிருந்து வந்தார். முழுநேரமாக இப்பொறுப்பை இவரால் ஏற்க முடியுமா என்கிற மலைப்புக் காரணமாகவோ என்னவோ நாராயணசாமி ஐயர் இவரை அதுபற்றிக் கேட்கவில்லை போலும்! இவராவது அவரிடம் போய் அந்தப் பதவியை தமக்குக் கொடுக்கும்படி கேட்டிருக்கலாம்; இவரும் கேட்கவில்லை.

ஒரு சமயம், ''கலைமகளில் கொடுக்கும் சம்பளத்தைப் போல இரண்டு பங்கு சம்பளம் கொடுக்கிறோம்; இங்கு வந்துவிடுங்கள்'' எனத் 'தினமணி'யிலிருந்து இவருக்கு அழைப்பு வந்தது. முழுநேர ஊழியராக வேறு ஒரு நிறுவனத்தில் சேருவதால் ஸ்ரீமத் ஐயரிடம் தாம் செய்து கொண்டிருக்கும் பணிக்கு இடையூறு ஏற்படும் என்பதால் அவ்வழைப்பை இவர் மறுத்திருக்கிறார்.

முழுநேர ஆசிரியர் ஒருவர் தேவைப்பட்டதால் நாராயணசாமி ஐயர் மற்ற நிர்வாக உறுப்பினர்களையும் கலந்து பேசினார். அவருடைய நெருங்கிய உறவினராகிய திரு. கி. சந்திரசேகரன் 'ஹரிஜன் சாஸ்திரி' எனப் பெயர் பெற்ற ஆர். வி. சாஸ்திரியிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைக்கலாம் எனக் 'கல்கி' சொல்வதாக நாராயண சாமி ஐயரை வற்புறுத்தியதோடு, சாஸ்திரியை அவரிடம் அழைத்தும் வந்துவிட்டார்.

ஆர். வி. சாஸ்திரி 'கலைமகள்' ஆசிரியர் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். அதுபற்றியும் இவருக்கு வருத்தம் ஏற்படவில்லை.

x x x

அதே சமயம் சென்னைப்பல்கலைக்கழகத்தார் இவரது விண்ணப்பத்தைப் பரிசீலித்து இவரை ஆராய்ச்சி மாணவராக ஏற்றுக்கொண்டனர்; ஐயரவர்களது தமிழ் ஆராய்ச்சிப் பணிக்கு உதவியாக இருந்துகொண்டு, அவரையே வழிகாட்டும் பேராசிரியராகவும் கொண்டு ஆராய்ச்சி செய்யவும், அதற்காக இவருக்கு மாத ஊதியம் ரூ. 75 வழங்கவும் இசைவு தெரிவித்தனர்.

x x x

**'வளையாபதி'யைத் தேடி அலைந்த ஆசானுடன் :**

தமிழில் ஐம்பெருங்காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி என்பவற்றுள் முதல் மூன்றையும் ஐயரவர்கள் வெளியிட்டார். வளையாபதியும், குண்டலகேசியும் கிடைக்கவில்லை.

'நீலகேசி' என்ற ஜைன நூலில் குண்டலகேசியைப் பற்றிய செய்திகள் வருகின்றன. அது பௌத்த நூல் என்றும், குண்டலகேசி என்பவள் புத்த பிட்சுணியாகி வாதம் செய்தவள் என்றும் தெரிகிறது. ஆனால், 'வளையாபதி'யைப்பற்றி ஒரு செய்தியுமே தெரியவில்லை. புறத்திரட்டில் உள்ள சில பாடல்களைக் கொண்டு 'வளையாபதி' என்ற நூல் இருந்திருப்பது தெரிகிறது.

ஐயரவர்கள் இளமைக் காலத்தில் திருவாவடுதுறை மடத்தில் 'வளையாபதி'யின் ஏட்டுச் சுவடியைப் பார்த்தது உண்டாம். அப்போது அவரது கவனம் படிப்பில்தான் இருந்தது; ஏட்டுச் சுவடிகளைச் சேகரிப்பதில் செல்லவில்லை. பிற்காலத்தில் சுவடிகளைப் பொன்னாகத் தொகுத்துப் போற்றும் உணர்வு வந்தபோது அந்தச் சுவடி கிடைக்கவில்லை. கண்ணுக்கு எட்டியது கைக்கு எட்டவில்லையே என்ற வருத்தம் ஐயரவர்களுக்கு இருந்து வந்தது.

1934-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், கோவையில் நடை பெற்ற இவருக்குரிய வித்துவான் பரிசளிப்பு விழாவுக்கு ஐயரவர்கள் சென்றிருந்தார். விழா முடிந்தவுடன் அவர் அங்கிருந்து பழையகோட்டைக்கு வந்தபோது இவரும் அவருடன் சென்றார்.

காலையில் நீராடிவிட்டுச் சிற்றுண்டி அருந்திய பிறகு அவ்வூர்ப் பட்டக்காரராகிய நல்லதம்பி சர்க்கரை மன்றாடியாருடன் ஐயரவர்கள் பேசிக்கொண்டிருந்தார். அப்போது மணி 10 இருக்கும்; அவ்வூருக்குப் பக்கத்தில் ஒரு புலவரிடம் 'வளையாபதி' இருப்பதாக மன்றாடியார் சொன்னார்.

''இப்போது அந்தப் புலவர் இருக்கிறாரா?'' என்று மிக்க ஆர்வத்தோடு கேட்டார் ஐயரவர்கள்.

''அவர் இறந்துவிட்டார். அவரும் நிறையப் பாடியிருக்கிறார். அவர் வீட்டில்தான் அந்த நூல் இருக்கிறது. அங்குள்ள சுவடிகளையெல்லாம் நான் இங்கேயே கொண்டு வரச் சொல்கிறேனே!'' என்றார் பட்டக்காரர்.

அதற்கு ஸ்ரீமத் ஐயர் சம்மதிக்கவில்லை; ''நாங்கள் அங்கேயே போய்ப் பார்க்கிறோம்'' என்றார்.

''அது சின்ன ஊர். அவர்கள் வீட்டில் பரணிலே சுவடிகளைப் போட்டிருப்பார்கள். நீங்கள் இந்த வயதில் அங்கெல்லாம் போய் அலைய வேண்டாமே!'' என பட்டக்காரர் அன்பு ததும்பச் சொன்னார்.

''இவர் இப்போது தமிழ்க் காப்பியங்கள்பற்றி ஆராய்ச்சி செய்து வருகிறார். இவரும் என்னுடன் இருப்பதால் அவசியமானால் இவரைப் பரண்மீது ஏறிப் பார்க்கச் சொல்கிறேன்'' என்றார் ஐயரவர்கள்.

இந்த வயதிலும் அவருக்கு இருந்த தமிழார்வத்தைக் கண்டு பட்டக்காரர் வியந்து போனார். தம் காரிலேயே பட்டக்காரர் அந்த ஊருக்கு இவர்களை அனுப்பி வைத்தார்; வழிகாட்ட, தம் தம்பியையும் உடன் அனுப்பினார்.

வழியில், "நான் சோழநாட்டுக்கும், பாண்டி நாட்டுக்கும் சென்று ஏடுகளைத் தேடியிருக்கிறேன். திருநெல்வேலி மாவட்டக் கவிராயர்கள் வீட்டில் நான் கண்ட சுவடிகள் திருத்தமாக இருந்தன. கொங்கு நாட்டிற்கு வந்து நான் ஏடு தேடினதில்லை. 'நன்னூல்' இந்தப் பக்கத்தில் உண்டானதுதான். 'பெருங்கதை' முழுமையும் கிடைக்கவில்லை. கொங்கு நாட்டிலே தோன்றிய அதன் ஏடுகள் இந்தப் புலவர் வீட்டில் எங்காவது ஒளிந்து கொண்டும் இருக்கலாம். 'பதிற்றுப்பத்'தின் முதல் பத்தும் கடைசிப் பத்தும் கிடைக்கவில்லை. சேரநாடும், கொங்கு நாடும் அடுத்தடுத்து உள்ளவை. ஆகையால், சேர வேந்தர்களைப்பற்றிய அந்த நூல்கூட இங்கே கிடைக்கலாம். 'வளையாபதி' இங்கு இருக்கிறது என எனக்கு யாருமே சொல்லவில்லையே!" என ஐயரவர்கள் இவரிடம் சொல்லிக்கொண்டே போனார்; ஒரு கணங்கூடக் காரில் நன்றாகச் சாய்ந்துகொண்டு சும்மா உட்காரவில்லை. நடுவில், "நேரே அந்தப் புலவர் வீட்டுக்கே போகிறீர்களா?" என்று பட்டக்காரரின் தம்பியைக் கேட்டார்.

"இல்லை...அந்த வீடு எனக்குத் தெரியாது. அந்த ஊரில் எங்களுக்குத் தெரிந்த ஒருவர் வீட்டுக்குப் போய் விசாரித்துக்கொண்டு போகவேண்டும்."

"அந்த அன்பர் ஊரில்தானே இருப்பார்?"

"ஆம்."

ஐயரவர்களின் ஆதுரத்தைக் கண்ட பட்டக்காரரின் தம்பி, காரை மிக வேகமாக விடச் செய்தார். வண்டி அந்த ஊருக்குள் புகுந்தது. அவருக்கு வேண்டியவரும், நல்ல வேளை, வீட்டில் இருந்தார். எல்லோரும் புலவரின் வீட்டுக்குப் போனார்கள்

புலவரின் மகன் அந்த ஊரில் சிறிய திண்ணைப் பள்ளிக்கூடம் வைத்திருந்தார். இவர்களையெல்லாம் கண்டவுடன் அவருக்கு ஒரே திகைப்பாகிவிட்டது.

உள்ளூர்க்காரர் அவரைப் பார்த்து, "உங்கள் அப்பன் 'வளையாபதி' வைத்திருந்தானாமே, இருக்கிறதா?" என்று கேட்டார்.

"ஏதோ ஒரு புத்தகம் அச்சுப் போட்டார். அதன் ஒரு பிரதியை நான் வைத்திருந்தேன். தேடிப் பார்க்கிறேன்" என்று புலவருடைய குமாரர் சொன்னார்.

"வேறு ஏட்டுச் சுவடிகள் இருந்தாலும், அவற்றைக் கொண்டு வாருங்கள்" என ஐயரவர்கள் வேண்டினார்.

புலவரின் மகன், வீட்டுக்குள் சென்று தேடினார். அச்சுப்பிரதி உடன் கிடைக்கவில்லை. முதலில் இருபது, முப்பது ஏட்டுச் சுவடிகளைக் கொண்டுவந்து கொடுத்தார்.

சில சுவடிகள் கறுப்பு நூலால் கட்டப்பட்டிருந்தன; மற்றவை மஞ்சள் நூலால் கட்டப்பட்டிருந்தன. இவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை.

"என் தகப்பனார் கவி பாடுவார். கறுப்பு நூல் கட்டின ஏடுகள் எல்லாம் பல பேர்மீது அவர் பாடின வசைக் கவிகள். மஞ்சள் கயிறு எல்லாம் சில பேர்மீது அவர் பாடிய இசைக்கவிகள்" எனப் புலவருடைய குமாரர் விளக்கினார்.

"வேறு ஏட்டுச் சுவடிகளே இல்லையா?" என ஐயரவர்கள் கேட்டார்.

"எல்லாம் இவ்வளவுதான்."

"உள்ளே போய் உன் அப்பனே அச்சிட்ட புத்தகம் எங்கே இருக்கிறது என்று பார்த்து எடுத்து வா" என ஊர்ப் பெரிய மனிதர் அவருக்குக் கட்டளையிட்டார். அவரும் வீட்டிற்குள் சென்றார்.

ஐயரவர்கள் ஒவ்வொரு சுவடியாக எடுத்துப் படித்துப் பார்க்கத் தொடங்கினார். இவரும் பார்த்தார். உள்ளே ஒன்றையும் படிக்கவில்லை. தலைப்பில், 'வளையாபதி' என எழுதப்பட்டிருக்கும் சுவடி இருக்கிறதா என்று தேடிப் பார்த்தார்.

'வளையாபதி' என்கிற பெயரில் ஒரு சுவடி அகப்பட்டது. புலவர் தம் கையினாலேயே எழுதியிருந்தார்; சிறிய சுவடி.

"இதோ 'வளையாபதி' கிடைத்துவிட்டது!" என உள்ளக் களிப்போடு இவர், ஐயரவர்களிடம் கொடுத்தார். ஆசானும் ஆவலோடு அதனை வாங்கிப் பிரித்துப் பார்க்கலானார். 'பட்ட சிரமம் வீண் போகவில்லை' என இவருக்கு மகிழ்ச்சி.

அடுத்த கணமே ஐயரவர்கள் புளி தின்றவரைப்போல முகத்தைச் சுளித்துக்கொண்டு, "இதுதானா?" என அதனைத் தூக்கி அப்பால் வைத்தார்.

"இந்தச் சுவடிகளில் வேறு ஏதாவது உபயோகமாவதாக இருக்கிறதா, பாரும்" என்றார் ஐயரவர்கள். இவர் எதுவும் பேசாமல் அந்தச் சுவடிகள் ஒவ்வொன்றையும் ஆழ்ந்து படித்துப் பார்த்தார். ஒன்றும் உருப்படியாகக் கிடைக்கவில்லை. எல்லாம் அந்தப் புலவரே எழுதிய இசைக் கவிகளும், வசைக் கவிகளுமாகவே இருந்தன.

ஐயரவர்கள் சொன்னார்: "'இந்தப் புலவர் வியாபாரம் செய்யும் ஒரு சாதியினரை இழிவாகப் பேசி விட்டாராம். அதற்காக இந்தப் புலவரின்மேல் வழக்குப் போட்டிருக்கிறார்கள். இவர் அந்தக் கேஸில் மாட்டிக் கொண்டுவிட்டார். நானாகச் சொல்லவில்லை, வளையாபதி காப்பியத்தில் அப்படி இருக்கிறது என்று சொல்லி இவர் வாதாடியிருக்கிறார். தாம் சொன்னதற்கு ஆதாரமாக 'வளையாபதி' ஏட்டுச்சுவடி எங்கிருக்கிறது என்று தேடினார்; கடைசியில் மதுரையில் இருப்பது தெரிந்தது. அங்கே போய் அதை வாங்கி வந்தார். 'அதை இவரே அச்சுப் போட்டார்' என்று பட்டக்காரர் சொன்னாரே, அது இந்த 'வளையாபதி' தான் போலும்!"

"அப்போது இது 'வளையாபதி' இல்லையா?" என மிகுந்த ஏமாற்றத்துடன் கேட்டார் இவர்.

"இது 'வளையாபதி'யும் இல்லை; ஒரு மண்ணும் இல்லை; இதில் 49 விருத்தங்களே உள்ளன. எல்லாம் மிகச் சாமானியமான பாடல்கள். 'வளையாபதி' எங்கே, இவை எங்கே!"

"இதற்கு 'வளையாபதி' என்று ஏன் பெயர் வைத்தார்?"

"ஊரை ஏமாற்றத்தான்! அப்படி ஒரு கதையைக் கட்டிவிட்டு இந்தப் புலவரே இந்தப் பாடல்களை எழுதி 'வளையாபதி' என்று பெயர் வைத்து அச்சிட்டிருக்க வேண்டும். தம் வழக்கில் இதைக் காட்டியே அவர் வெற்றி பெற்றார் போலும்! நமக்கு இதனால் ஒன்றும் பயனில்லை. நமக்கு இது வெறும் கானல் நீர்தான்!" என்றார் ஐயரவர்கள்.

அதற்குள் புலவரின் புதல்வர் கையில் ஒரு புத்தகத்தை எடுத்துக்கொண்டு வந்தார். "இதோ கிடைத்துவிட்டது" என்றார்.

"என்ன, மாய மானா?" என விரக்தியோடு கேட்டுக் கொண்டே ஐயரவர்கள் அதனை வாங்கிப் பார்த்தார். வெங்காயத்தோல் போல மெல்லிய சிவப்புக் காகித அட்டையுடன் முப்பது முப்பத்திரண்டு பக்கங்களில் அது அச்சிடப்பட்டிருந்தது. ஏட்டுச் சுவடியில் இருந்த பாடல்களே 'வளையாபதி' என்கிற பெயரில் அச்சாகி இருந்தன.

அப்போது பிற்பகல் இரண்டு மணி இருக்கும். நல்ல வெயில்; இவருக்கோ மிகவும் பசித்தது.

"ஒன்றுமே சாப்பிடவில்லையே! இந்த ஊரில் ஐயர் வீடு ஒன்றும் இல்லை. நான் சாமான்கள் தரச் சொல்கிறேன். இந்தத் தம்பியைச் சமைக்கச் சொல்லிச் சாப்பிட்டுவிட்டுப் போகலாம்" என்று அந்த ஊர்ப் பெரிய மனிதர் சொன்னார்.

இவருக்குத் 'திக்'கென்றது. எப்போதோ தாமே சமைத்து ருசிகூடப் பார்க்காமல் சேந்தமங்கலத்தில் வாசம்

செய்திருக்கிறார். அந்தப் பழக்கமும் விட்டுப் போய் விட்டது;...இப்போது போய்த் தாம் சமைப்பதாவது!

"அதற்குள் பழையகோட்டைக்கே போய்விடலாம்" என்றார் இவர். ஐயரவர்கள் சிரித்துக்கொண்டே, "அதுவும் சரி" என்றார்.

அந்தப் பட்டிக்காட்டில் பழங்கூடக் கிடைக்கவில்லை. பால் கொஞ்சம் வாங்கித் தந்தார்கள். இருவரும் அதை அருந்தினார்கள்.

ஐயரவர்களுக்கு அப்போது மிகவும் தளர்ச்சி ஏற்பட்டது. பசியும், வெயிலின் தாபமுமே அதற்குக் காரணம் என மற்றவர்கள் எண்ணினர். அதோடு 79 வயதுநிறைந்தவர் இல்லையா?

ஆனால் அதுமாத்திரம் காரணம் அன்று என இவருக்குத் தெரியும். 'வளையாபதி' கிடைக்காமல் வெறும் கானல் நீராகவும்,*மாய மானாகவும் போனது தான அவர் தளர்ந்து போனதற்கு முக்கியமான காரணம்.

திரும்பும்போது ஐயரவர்கள் காரில் நன்றாகச் சாய்ந்து உட்கார்ந்திருந்தார்.

"இப்படி எவ்வளவோ அநுபவங்களை நான் அடைந் திருக்கிறேன். இதனாலெல்லாம் நாம் மனம் தளர்ந்து போய் நம் முயற்சியை விட்டுவிடக் கூடாது" என இவருக்கு ஸ்ரீமத் ஐயர் அறிவுரை வழங்கலானார்.

**பிறர் மனத்தைப் புண்படுத்ததா ஆசான் :**

"உங்கள் ஊர் நாகஸ்வர வித்துவான் மிகுந்த பக்தி யுடன் வாசிக்கிறாரே, இந்தமாதிரி பக்தியோடு வாசிப்ப வரை நான் எங்கும் பார்த்ததே இல்லை" என ஐயரவர்கள் சொன்னவுடன் அங்கிருந்த அனைவருமே மகிழ்ந்தார்கள்.

நாகஸ்வர வித்துவானும் ஐயரவர்கள் தம்மைப் புகழ் வதைக் கேட்டு அவரை வாத்தியத்துடன் கும்பிட்டுக் கொண்டார். "ரொம்ப சிரமம்; போதும்" என

* 1955 மார்ச்—மஞ்சரி; கி.வா.ஜ-வின் 'மாயமான்.'

ஐயரவர்கள் சொன்னவுடன் அவர் மிக மகிழ்ந்து வாசிப்பை நிறுத்திக்கொண்டு அப்பால் சென்றார்.

ஒரு முறை சுவாமி தரிசனம் செய்துகொள்ள ஐயரவர்கள் ஒரு தலத்திற்குச் சென்றார். அப்போது அக்கோவில் தர்மகர்த்தா மேளவாத்தியத்துடன் ஐயரவர்களைக் கோவில் வாசலிலேயே வரவேற்றபோது நடந்த நிகழ்ச்சி இது. தர்மகர்த்தாவும் உள்ளம் பூரித்தவராக ஐயரவர்களைக் கோபுரவாசலிலிருந்து ஆலயத்திற்குள் அழைத்துச் சென்றார்.

ஐயரவர்களோ பெரிய சங்கீத பரம்பரையில் வந்தவர். அவ்வூர் நாகஸ்வர வித்துவானோ ஸ்வரசுத்தமாக வாசிக்க இன்னமும் பழகாதவர். "என்ன, இப்படித் தப்பும் தவறுமாக வாசிக்கிறான்" எனச் சொல்லி அந்த நேரம் தம்முடைய சங்கீத ஞானத்தை ஐயரவர்கள் வெளிப்படுத்திக்கொள்ளவில்லை. எல்லோருக்கும் மத்தியில் அந்த வித்துவானது மனமும் புண்படாமல் ஐயரவர்கள் அப்படிச் சொன்னாராம். இப்படி எதையும் நயமாகவும், மறைமுகமாகவும் சொல்வதே அவரது வழக்கம்.*

இவரும் அவரிடமிருந்துதான் அந்தப் பழக்கத்தைக் கற்றுக்கொண்டார்.

தாம் அந்தப் பழக்கத்தை உயர்நீதி மன்ற நீதிபதியாக இருந்த மதுரை மணி ஐயரவர்களிடமிருந்து கற்றுக் கொண்டதாக ஐயரவர்கள் சொல்வது உண்டு.

**ஆசானின் நினைவுக்கு வந்த பழைய சம்பவம் :**

ஒரு சமயம் அவர் ஒரு சம்ஸ்தானத்திற்குச் சென்றார். அந்தச் சம்ஸ்தானத்தில் ஒவ்வோர் ஆண்டும் நவராத்திரியின் போது ஆயிரக்கணக்கானவர்களுக்கு அன்னதானம் செய்வது வழக்கம்.

"இந்த ஆண்டு யாரையும் உட்கார வைத்து அன்னம் போட வேண்டாம். சாதத்தை உருட்டி வேண்டுமானால் கையில் கொடுத்து அனுப்பிவிடலாம். அதனால் செலவு

* சதாபிஷேக மலர்—உ. வே. சாமிநாதையர்.

குறையும்'' என்று புதிதாக வந்திருந்த சம்ஸ்தான திவான் சொல்லிவிட்டார். அவர் சொன்னதை மகாராஜாவும் ஏற்றுக்கொண்டு, ''அப்படியே செய்யுங்கள்'' என்றார்.

இந்தச் செய்தியைக் கேட்டு நவராத்திரி விழாவுக்கு வந்திருந்த பலரும் வருத்தம் அடைந்தார்கள். வழக்கம் போல் அன்னதானத்துடன் விழா நடைபெற வேண்டும் என்பது அவர்களது விருப்பம். விழாவுக்கு வந்திருந்த சில முக்கியமான பிரமுகர்களிடம் முறையிட்டிருக்கிறார்கள்.

''திவானும் மகாராஜாவும் முடிவு செய்த பின் அதில் நாம் போய்த் தலையிடுவது உசிதமாக இருக்காது'' என அந்தப் பிரமுகர்கள் நாசுக்காக நழுவிக்கொண்டார்கள்.

காரியம் நடந்தாக வேண்டும். யாரிடம் சொன்னால் காரியம் நடக்குமென்று கேட்க எண்ணி ஐயரவர்களிடமே சிலர் வந்து சொன்னார்கள்.

''மகாராஜா அப்படியெல்லாம் செய்ய மாட்டார். நவராத்திரி விழா வழக்கம்போல் நடைபெறும். நான் பார்த்துக்கொள்கிறேன். நீங்கள் கவலைப்படாமல் போகலாம்'' என்று அவர்களுக்குத் தைரியம் சொல்லி அனுப்பினார் ஐயரவர்கள்.

''கொடை வள்ளல்களின் மரபிலே வந்துள்ளவர் நீங்கள். போன ஆண்டின்போது செலவைப் பார்க்காமல் இரண்டாயிரம் பேருக்கு மேல் நவராத்திரியின்போது அன்னதானம் அளித்தீர்கள். இந்த ஆண்டு அதையும்விட அதிகமான பேர் வந்திருப்பதால் வழக்கம்போல் உணவு அளிக்க ஏற்பாடு செய்திருப்பதாக அறிந்தேன். மிக்க மகிழ்ச்சி'' என்று மகாராஜாவை புகழத் தொடங்கினார்.

அதைக் கேட்டவுடன் மகாராஜாவின் மனம் குளிர்ந்து விசாலமானது. புதிய திவானை உடனே கூப்பிட்டு, ''வழக்கம்போலவே எல்லோருக்கும் அன்னதானம் செய்ய ஏற்பாடு செய்யுங்கள்'' எனச் சொல்லிவிட்டாராம்!

இப்படிப் பெரிய இடத்தில் பழகும்போது அவர்களது கோபத்திற்கு ஆளாகாமல் இங்கிதமாகவும், அதே சமயம்

நன்மை விளையும்படியாகவும் எப்படிப் பேசிப் பழக வேண்டும் என்பதை ஐயரவர்கள் இவருக்கு உணர்த்தினார்.

x x x

**கணிகண்ணன் பின் சென்ற ஆழ்வாரை நினைவு கூர்தல் :**

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவராக இருந்தவர் ஓய்வு பெறும் சமயத்தில் அந்த இடத்திற்கு யாரை நியமிக்கலாம் என்று ஆலோசிக்கிறபோது, வழக்கறிஞரும் இலக்கிய ஈடுபாடும் உள்ள கே. வி. கிருஷ்ணசாமி ஐயரின் கருத்தையும் கேட்டிருக்கிறார்கள். அவருக்கு உடனே, புலமையும் எழுத்தாற்றலும் மிக்க இவரது நினைவுதான் வந்தது. இவரைக் கூப்பிட்டு அனுப்பினார். இவரிடம் விவரத்தைச் சொல்லி, "நீ அங்கே போகிறாயா? ஐயரவர்களையும் கேட்டுக்கொண்டு உன் கருத்தைச் சொல்" என்றார்.

இவருக்குத் தம் ஆசானை விட்டுப் போக மனமில்லை. ஆசானிடமே போய், கே. வி. கே. அவர்கள் தம்மிடம் சொன்ன தகவலைத் தெரிவித்தார்.

ஆசானுக்கு இரண்டு மனசு: இவருக்கு நல்ல வேலை கிடைக்கிறது என்பது ஒன்று; இவர் தம்மைவிட்டுப் பிரியும் படி நேரிடுமே என்கிற வருத்தம் மற்றொன்று. ஆசான் சிந்தையில் ஆழ்ந்திருப்பதைக் கண்டதும், "அது எவ்வளவு பெரிய வேலையாக இருந்தாலும் எனக்கு வேண்டாம். தங்களைவிட்டுப் பிரிந்துபோக எனக்குக் கொஞ்சமும் விருப்பமில்லை. நானே அவரிடம் இதைச் சொல்லிவிடுகிறேன்" என்றார் இவர்.

"அவ்வளவு பெரிய மனிதர், உனக்கு நலம் செய்ய வேண்டுமென்று நினைந்து உன்னைக் கூப்பிட்டுச் சொல்லியிருக்கிறார். பிற்காலத்திலும் உன்னிடம் அவர் அன்பு உடையவராக இருக்கும்படி நடந்துகொள்ள வேண்டும். என்னுடன் வா. அவரைப் போய்ப் பார்த்துப் பேசிவிட்டு வருவோம்" என்றார் ஆசான்.

இவர் உடனே போய் ஒரு ரிக்ஷா பார்த்து வந்தார். ஆசான் இவரையும் அழைத்துக்கொண்டு கே. வி. கே-அவர்களின் வீட்டிற்குச் சென்றார்.

மிக்க மகிழ்ச்சியுடன் இவர்களை வரவேற்ற கே.வி.கே-அவர்களிடம், ''இந்தப் பையனிடம் உங்களுக்கு இவ்வளவு அபிமானம் இருப்பது தெரிந்து எனக்கும் சந்தோஷந்தான். அந்த வேலையைப் பார்க்கக் கூடிய தகுதி உடையவன் தான் இவன். இவனுக்கு அந்த வேலையைப் போட்டுத் தாருங்கள்'' எனச் சொல்லிக் கொஞ்சம் தயங்கினார் ஐயரவர்கள்.

அதற்குள் கே. வி. கே - அவர்கள், ''இவரிடம் நீங்கள் வைத்திருக்கும் அன்பு எவ்வளவு என்று எங்களுக்குத் தெரியாதா? இவரது தகுதிக்கும், திறமைக்கும் இவரே கேட்காவிட்டாலும் நாங்களே செய்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறோமே! இதைச் சொல்வதற்கு நீங்கள் நேரில் வர வேண்டுமா?'' எனச் சொல்லும்போது அவரது குரல் தழுதழுத்தது.

திருவெஃகாவில் எழுந்தருளியிருக்கும் பெருமாள், திருமழிசையாழ்வார், 'கணிகண்ணன் போகின்றான்... நானும் போகின்றேன்' எனப் பாடிய செய்யுளைக் கேட்டவுடன் தம்முடைய பாயலையும் சுருட்டிக்கொண்டு அவர் பின்னே சென்றாராம். அது போல் ஐயரவர்கள், "அதற்கு மட்டும் நான் வரவில்லை. இவனுக்கு அந்த வேலையைப் பண்ணி வையுங்கள். அப்படியே எனக்கும் அங்கே ஒரு வேலை போட்டுத் தந்தால் மிகவும் சந்தோஷமாக இருக்கும். நானும் இவனோடு அங்கே போகிறேன்'' என்றார்.

உடனே கே. வி. கே-அவர்கள் வாய்விட்டுச் சிரித்து விட்டாராம்; இவரைவிட்டுப் பிரிந்திருக்க ஐயரவர்களுக்கு விருப்பமில்லை எனத் தெரிந்துகொண்டார். இவர்மேல் அவருக்கிருந்த மதிப்பும் அன்பும் பன்மடங்கு பெருகின.

தமிழ் நாட்டிலே தரமான தமிழ்ப் பத்திரிகை ஒன்று வேண்டுமென்ற ஆவலில் தாம் தொடங்கிய பத்திரிகைப் பிரதிகளின் எண்ணிக்கை குறைந்து வருவது குறித்து கவலையுற்றார் 'கலைமகள்' அதிபர் நாராயண சாமி ஐயர். நெருங்கிய உறவினர் சிலர் அதை நிறுத்தி விடும்படி யோசனை கூறினார்கள்.

சட்டென்று ஐயரவர்களின் நினைவு வரவே, நாராயண சாமி ஐயர் 'தியாகராஜ விலாசம்' சென்று ஐயரவர்களிடம் கலந்து பேசினார். "பத்திரிகையைமட்டும் நிறுத்திவிட வேண்டாம்! இப்படி இப்படியெல்லாம் செய்தால் வரவர நன்மையே உண்டாகும்" என ஐயரவர்கள் அவருக்குச் சில யோசனைகளைக் கூறி அனுப்பி வைத்தார்.

ஐயரவர்களிடம் பேசி வந்தபின் நாராயணசாமி ஐயர், பத்திரிகையைத் தொடர்ந்து நடத்துவதில் உறுதி கொண்டார்.

பத்திரிகையின் சிறப்பை எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும், அன்பர் கி. வா. ஜ-அவர்களே அதன் ஆசிரியராகத் தகுதி பெற்றவர் என்ற நம்பிக்கை தளிர்த்தது, நாராயணசாமி ஐயருக்கு. ஆரம்பம்முதல் 'கலைமகள்' பத்திரிகையின் உதவி ஆசிரியராக இவர் இருந்து வருகிறார்; இதன் வளர்ச்சியில் மிக்க அக்கறை உடையவர்; சம்பளத்திற்கு வேலை செய்கிறோம் என்கிற மனோபாவமே இவரிடம் துளிக்கூட இருந்ததில்லை - இது அடிப்படையான தகுதி இல்லையா?

மற்றொன்று: ஒரு பத்திரிகை அலுவலகத்தில் வேலை செய்வது என்றால் அதற்குச் சில தனித் திறமைகள் வேண்டும்.

'மூட்' (Mood) சமாசாரம் எல்லாம் சிலருக்குஇருக்கலாம். இவரிடம் அது இருந்ததில்லை. எழுத உட்கார்ந்தால் முடித்துவிட்டுத்தான் மறு வேலை பார்ப்பார். 'யாரேனும் வந்தால் இடையில் பலமுறை தடை ஏற்படுமே! கற்பனை தடைப்பட்டால் என்ன செய்வது?' என்று

சொல்ல இவருக்குத் தெரியாது. பெரும்பகுதி எழுதப் பட்டிருந்தால் அதையே தொடர்ந்து எழுதி முடிப்பார். கற்பனை தானே வந்து கோத்துக்கொள்ளும். ஆரம்பித் திருந்தால் எழுதியதைக் கிழித்துப் போட்டுவிட்டுத் திரும்பவும் ஒரே மூச்சில் எழுதி முடிப்பார். போதுமே; பத்திரிகை ஆசிரியராக இருப்பதற்கு இதுவே ஒரு முக்கிய மான திறமையாயிற்றே!

ஒரு பத்திரிகையின் ஆசிரியர் என்றால் சில நேரங்களில் முக்கியமான பிரமுகர்கள் சிலரை நேரில் பேட்டி கண்டு அவர்கள் சொல்வனவற்றைக் கோவையாக, படிக்கச் சுவை யாக எழுத வேண்டி வரும். அந்தத் திறமையும் இவரிடம் அதிகமாக இருந்தது. மற்றொரு திறமை, மாதந்தோறும் தம் ஆசானின் கட்டுரைகளை - அவர் கண்டதையும் கேட்டதையும் - அவர் சொல்லச் சொல்ல இவர் அவ் வாறே தெள்ளத் தெளிவாக எழுதி வந்தது. வாசகர்கள் விரும்பிப் படித்ததும், பாராட்டியதும் அந்தப் பகுதியைத் தானே!

பிற்காலத்தில் பல பிரமுகர்களை நேரில் பேட்டி கண்டு சுவையான கட்டுரைகள் பலவற்றை 'அநுஷம்' என்ற பெயரில் எழுதி வந்தவர் இவர்தாம்.

இப்படிப் புலமையிலும், தோற்றத்திலும் பழமையைத் தழுவியவராக இருந்தாலும் புதிய வகை எழுத்தாளர் பலருக்கும் சிறந்த நண்பராகவும் இருந்தார். இப்படி இரு தரப்பினருக்கும் ஒரு பாலம்போல இவர் இருந்தது பத்திரி கைக்கு நல்லதுதானே?

ஐயரவர்களிடம் இருந்துவந்ததால், புதிய இலக்கிய வகைகளில் இவர் அப்போது அதிக ஈடுபாடு காட்டிக் கொண்டதில்லையே தவிர, அது இவருக்கு வராது, தெரியாது என்பதில்லையே!

இவர் 1933-இல் 'கலைமக'ளில், ஒரு கதை எழுதி யிருந்தார்.

முதலில் தன் மருமகள் படிப்பதில் விருப்பம் காட்டாமல் இருந்து அவளை வேலை வாங்கி வந்த மாமியார், தன் மகன் நாராயணனின் சமயோசித யுக்தியால் மருமகளையே படிக்கச் சொல்லி ஆவலுடன் கேட்கும் அளவுக்கு மாறியதை, மனத்தத்துவ ரீதியில் ஆய்ந்து அற்புதமாக எடுத்துக் காட்டும் இவரது அரிய ஆற்றலை அதில் காணலாம்.

இதைக் காட்டிலும் பற்பல வகைகளிலும் சிறப்பான கதைகளை இவர் பின்னர் எழுதியிருக்கிறார். பொதுவாக, இவர் காந்தி யுகத்துடன் கலந்து வாழ்ந்தவராதலால் இவருடைய இயல்பில் சத்தியமும், அஹிம்சையும் இணைந்துவிட்டன. இவருடைய கதைகளில் மனிதத் தன்மையுடன் பொருந்திய அன்புதான் உயிராக விளங்கும். தர்மந்தான் வெல்லும்; அதர்மம் முதலில் ஓங்கினாலும் இறுதியில் அது வெல்லாது. கெட்டவன் நல்லவனாக மாறுவான்; நல்லவன் கெட்டவனாகி அழிய மாட்டான்.

'கலைஞன் தியாகம்,*' 'நீலமணி,' 'அறுந்த தந்தி' என்பன போன்ற இவருடைய பல கதைத் தொகுப்புகளைப் படித்தால் இவரது கற்பனைத் திறன் புலனாகும். ருஷிய, ஆங்கில, ஜெர்மன் மொழிகளைப் போன்ற பிற மொழிகளிலும் இவருடைய சிறப்புமிக்க பல கதைகள் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன.

என்றாலும், இவரது முதல் கதையான 'ருசி கண்ட பூனை'யில் வரும் பாத்திரமான நாராயணன், மனைவிக்காகத் தாயையோ, தாய்க்காகத் தாரத்தையோ பகைத்துக் கொள்ளாத குணநலம் உடையவனாக இருக்கிறான்; பெண்கள் படிக்க வேண்டுமென்ற மனநலம் உடையவனாக விளங்குகிறான். தன் லட்சியம் தடைப்படுகிறபோது அதில் வெற்றி காண, பண்பட்ட அறிவோடு நிதானம் இழக்காமல் செயல்படுகிறான்.

---

* தமிழ் வளர்ச்சிக் கழகப் பாராட்டுப் பத்திரம் பெற்றது : 28 - 8 - 1952

இவை அனைத்தும் இவரது உலக அநுபவ ஞானத்தைத் தெளிவுறக் காட்டுகின்றன என்றால் மிகையாகாது.

**ராஜாசர் அண்ணாமலைச் செட்டியார் நினைவுப் பரிசு:**

1982 - ஆம் ஆண்டு செப்டம்பர் 30 - ஆம் தேதி அண்ணாமலைச் செட்டியாரின் 102 - ஆம் பிறந்த நாள் விழா, சென்னை அண்ணாமலை மன்றத்தில் நடைபெற்றது. அப்போது இவருக்கு அந்த ஆண்டுக்கான 'அண்ணாமலைச் செட்டியார் நினைவுப் பரிசு' வழங்கிக் கவுரவித்தார்கள்.

அப்போது, "தமிழ் வளர்ந்து வருவது உண்மைதான். எனினும், தமிழ்ப் பேச்சுக்கும் எழுத்துக்கும் பண்பாட்டு வரையறை அவசியமாகும். மனம் போனபடி பேசுதலும், எழுதுதலும் கூடாது" என்றார் இவர்.

'பெண்களும் படிக்க வேண்டும், அடுப்பங்கரையே கதி என இருக்கக் கூடாது' என்கிற எழுச்சிமிகு புதுமைக் கருத்தை நெஞ்சில் தாங்கியவர் இவர். யாரையும் பகைத்துக்கொள்கிற சுபாவம் இவரிடம் இருந்ததில்லை.

ஒரு முறை ஓர் அன்பரின் வீட்டில் தங்கியிருந்தபோது அவர் இவரிடம், "இன்று உங்களுக்குப் பலகாரமா? சாப்பாடா?" என்று கேட்டார்.

"ஏன் என்ன விஷயம்?" என்றார் இவர்.

"இல்லை. இன்று திருக்கணிதப் பஞ்சாங்கப்படி ஏகாதசி. வாக்கியப் பஞ்சாங்கப்படி துவாதசி. நீங்கள் எந்தப் பஞ்சாங்கப்படி விரதம் இருப்பீர்களோ எனக்குத் தெரியாது. அதனால்தான் கேட்டேன்" என்றார் அவர்.

"நான் யாரையும் விரோதித்துக்கொள்வதில்லை. ஆகவே, இரண்டையும் போடுங்கள்" என்றார் இவர். கேட்ட அன்பர் உள்பட அனைவருமே சிரித்து விட்டார்கள்.

## 'கலைமகள்' மைந்தன்

இப்படி எவரையும் தழுவிக்கொண்டு போகும் இயல்புடன் பழந்தமிழ் இலக்கியங்களிலும், புது வகை இலக்கியப் படைப்பிலும் அறிவும் ஆர்வமும் உடைய இவரை 1937 - வாக்கில் நாராயணசாமி ஐயர் மிக்க மகிழ்ச்சியுடன் 'கலைமகள்' ஆசிரியராக நியமித்தார். மாதம் ரூ. 50 ஆகச் சம்பளம் உயர்ந்தது.

'கலைமகள்' முகம் மலர்ந்தாள்.

x x x

**ஆசானின் 60, 80-ஆம் ஆண்டுவிழா நினைவு :**

ஐயரவர்களுக்கு 20-2-1915-இல் 60-ஆம் ஆண்டு நிறைவுற்றபோது பல அன்பர்களும், உறவினர்களும் அதனைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டுமென்று விரும்பினார்கள். ஆடம்பரமான செயல்களில் சிறிதும் விருப்பமில்லாத அவரோ அதற்குச் சிறிதும் உடன்பட வில்லை.

துணைவியாருடன் காளஹஸ்திக்குப் போய் அங்கிருக்கும் சிவபெருமானுக்கு அபிஷேகம் முதலியன செய்வித்து, கிரிப்பிரதட்சிணம் செய்துவிட்டு வந்து விட்டார். இப்படி அவரது அறுபது ஆண்டு நிறைவு எளிய முறையில் நடைபெற்றது.

ஐயரவர்களின் மாணாக்கரான கி.வா.ஜ-அவர் களின் அறுபது ஆண்டு நிறைவு விழா 1966-இல் பல இடங் களிலும் மிக விமரிசையாகக் கொண்டாடப்பெற்றது. 80-ஆண்டு நிறைவை 1-6-87-இல் எளிய முறையில் பேரன் குகனது உபநயனத்தோடு சேர்த்து மயிலை, கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில் இவர்தம் குடும்பத்தினர் கொண்டாடினார்கள் என்பதை இங்கே நினைவு கூர்வோம்.

1955-ஆம் ஆண்டு மார்ச் 6-ஆம் தேதி ஐயரவர்களுக்கு 80-ஆம் ஆண்டு பூர்த்தியாவதை முன்னிட்டு அவரது சதாபிஷேகத்தை மிகச் சிறப்பாகக் கொண்டாட வேண்டும் எனத் தமிழன்பர்கள் பலரும் நினைத்தார்கள். கே. வி. கே - அவர்கள் பொருளாளராக இருந்தார். அமைச்சர் சர்பி. டி. ராஜன் அவர்களின் தலைமையில் ஒரு விழாக் குழு அமைக்கப்பட்டது. அதில் திருவாளர் சிவராமசேதுப் பிள்ளை, எஸ். வையாபுரிப் பிள்ளை, பெ. நா. அப்புஸ்வாமி ஆகியோர் செயலாளர்களாக இருந்தார்கள்.

"ஐயரவர்களது பேருழைப்பின் பயனாகத் தமிழுலகில் தோன்றிய புது யுகத்தில், தமிழ்த் தாயின் கொண்டாட்டமாக ஐயரவர்களது சதாபிஷேகத்தை நாம் சிறப்புறக் கொண்டாடுதல் வேண்டும்" எனக் கலைமகளில் இவர் எழுதினார்.

இவரிடம் அப்போது காணப்பட்ட உற்சாகத்திற்கு அளவே இல்லை. இவருக்கு உறுதுணையாக வி.மு.சு., கணபதி ஐயர், செல்லமையர் ஆகியோர் இருந்தனர். ஸ்ரீமத் ஐயரின் அன்பர்களுடைய விலாசங்களை எல்லாம் இவர்கள் தொகுத்தார்கள். யாவருக்கும் விழாக் குழுவினரின் அறிக்கை அனுப்பப்பட்டது.

அந்த மாதத்தில் வெளியாக வேண்டிய கலைமகள் இதழோடு ஐயரவர்களது சதாபிஷேகச் சிறப்பு மலர் ஒன்றையும் கொண்டுவர இவர் திட்டமிட்டார்.

ஏற்கனவே ஐயரவர்களைப்பற்றித் தமிழ்ப் பேரறிஞர்கள் குறிப்பிட்டிருந்த தகவல்களைத் திரட்டினார்.

ஆசானின் சதாபிஷேக விழா சிறப்புற நடைபெற அனைத்துப் பத்திரிகையாளரின் ஒத்துழைப்பையும் கோரினார். 'சுதேசமித்திரன்', 'ஆனந்த விகடன்', 'சுதந்திரச் சங்கு,' 'தினமணி', 'ஜனமித்ரன்,' 'லோகோபகாரி,' 'தாருல் இஸ்லாம்,' 'இந்து சாதனம்,' 'மதுர மித்ரன்,'

'பாரத ஜோதி' போன்ற பல தமிழ்ப் பத்திரிகைகளிலும், சில ஆங்கிலப் பத்திரிகைகளிலும் அவ்வைபவம்பற்றிய தகவலும் வெளியாகியது.

ஆயிரம் பிறை கண்ட ஐயரவர்களின் சதாபிஷேக விழா, கொண்டாட்டமாக, தேசீய விழாப் போன்று கும்பகோணம், உத்தமதானபுரம், மோகனூர், ஈரோடு, சத்தியமங்கலம், திருச்சி, மதுரை, புதுக்கோட்டை, திருநெல்வேலி, திருச்செந்தூர், வாணியம்பாடி, வாலாஜாபாத், பாலக்காடு, மங்களூர், திருவனந்தபுரம், யாழ்ப்பாணம், ரங்கூன் எனத் தமிழகத்தில் மட்டுமின்றித் தமிழ் மக்கள் வாழும் பல இடங்களிலும் சிறப்பாக நடைபெற்றது.

நினைத்தால் தங்களால் எதையும் சாதிக்க முடியும் என்பது போல மக்களிடையே தமிழ்ப் பற்றை, தமிழ் விழிப்புணர்ச்சியை உண்டாக்கி இத்தகையதோர் அற்புதச் சாதனையைப் படைக்கப் பத்திரிகையாளர்கள் பெரிதும் உதவினார்கள்.

**ஆசானுக்குக் 'கல்கி' வழங்கிய பட்டம் :**

இவருடைய நண்பரான 'கல்கி'யும் 'ஆனந்தவிகட'னில் தொடர்ந்து சில வாரங்கள் ஐயரவர்களின் சதாபிஷேகம் குறித்து எழுதினார்.

"என்னுடைய நண்பர் என்பதற்காகச் சொல்லவில்லை; தமிழில் எதனையும் தெளிவாகவும், சுவையாகவும் எழுதலாம் என எழுதிக் காட்டினவர் கல்கி. எதை எழுதினாலும் பளிச்சென்று தெளிவாக விளங்கும் நடையில் எழுதினார். ஆவலைத் தூண்டும் வகையில் எழுதினார். ஒரு முறை படித்ததையே திரும்பத் திரும்பப் படித்துச் சுவைக்கும்படி எழுதினார். பெரிய புள்ளிகளைப்பற்றிய சித்திரங்கள் அவருடைய எழுத்தில் வண்ணமும் வடிவமும் பெற்று மலர்ந்தன.

"எதையும் தாம் நன்றாகப் புரிந்துகொண்டு யாருக்குச் சொல்கிறோமோ அவர்களின் மனநிலையையும் புரிந்து

கொண்டு அவர்கள் உளங்கொள்ளும் வகையில் எழுதும் உத்தி கைவரப் பெற்றவர் கல்கி'' என இவர் 'கல்கி'யைப் புகழ்வது உண்டு.

''எங்களுடைய ஆசிரியப்பிரானின் சதாபிஷேக வைபவம் குறித்து 'ஆனந்தவிகட'னில் கல்கி அவர்கள் எழுதியதைப் படித்துப் பாருங்கள். அவருக்குத் 'தமிழ்த் தாத்தா' என்ற பட்டத்தையே கல்கி தாம் அப்போது வழங்கினார்'' என இவர் பலமுறை பெருமையாகச் சொன்னதும் உண்டு. 'கல்கி' வழங்கிய 'தமிழ்த் தாத்தா' என்ற பட்டப் பெயரே நிலைத்துவிட்டது.

இவர் பிற்காலத்தில் தம் ஆசிரியப்பிரானின் 'வாழ்வு - இலக்கியப் பணிகள்' என்பதாகச் சுருக்கமாய் ஒரு நூல் எழுதினார். அது சாகித்திய அகாதமி வெளியீடாக வந்துள்ளது.

ஐயரவர்களின் சதாபிஷேக விழாவுக்கு முன்னும் பின்னும் 'விகடன்' என்று முடிவில் கையெழுத்திட்டுக் 'கல்கி' எழுதிய பாராட்டுரை தனிச் சிறப்புள்ளது:

''ஐயரவர்கள் தம் இளமைப்பிராயத்தில் அரும்பாடு பட்டுப் படித்ததனால்தான் தமிழ் மொழிக்கு வேறு எவராலும் செய்யப்பெறாத மகோபகாரம் செய்தல் சாத்தியமாயிற்று.

''தமிழ்ச் செல்வம், தமிழ்ச் செல்வம் என்றெல்லாம் நாம் பெருமையடித்துக்கொள்கிறோம். ஐயரவர்களின் அரிய முயற்சி இல்லாமற் போயிருந்தால், 'உங்களுடைய தமிழ்ச் செல்வம் எங்கே?' என்று கேட்பவர்களுக்கு, 'எங்கேயோ பூமியில் புதையுண்டு கிடக்கிறது. தோண்டிப் பார்த்தால் ஒருவேளை அகப்படலாம்' என்றே பதில் சொல்ல வேண்டியிருந்திருக்கும்.

''தமிழ் மொழிக்கும், தமிழ் நாட்டுக்கும் அத்தகைய பரமோபகாரம் செய்திருக்கும் - இன்னமும் செய்துவரும் -

பெரியாருக்குச் சமீபத்தில் 80-ஆம் வயது பூர்த்தியாகப் போகிறது.

"இந்த விசேஷ வைபவத்தை நாளது மார்ச் 6-ஆம் தேதியன்று சிறப்பாகக் கொண்டாடுவதற்காகத் தமிழன்பர்கள் சிலர் ஏற்பாடு செய்து வருகிறார்கள். அன்றைய தினம் ஐயரவர்களுடைய உருவப்படம் ஒன்றைப் புதிய சர்வகலாசாலை மண்டபத்தில் திறந்து வைக்கவும், ஐயரவர்களுக்கு ஓர் உபசாரப் பத்திரம் படித்துக் கொடுக்கவும் உத்தேசித்திருக்கிறார்கள். மேற்படி வைபவத்துக்கு இஷ்டமித்ர பந்துக்களுடன் உம்மை அழையாவிட்டாலும் நீர் வந்து சேர வேண்டியது.

"ஆமாம். சந்தேகம் என்ன? தமிழ் யார் வீட்டுச் சொத்து? தமிழ்த் தாய் நம் எல்லோருக்குந்தான் தாய். எனவே, ஐயரவர்கள் விஷயத்திலும் நம் எல்லோருக்கும் சமமான பாத்தியதை உண்டு.

—இப்படிக்கு, அன்பன் விகடன்!"

அடுத்த இதழில் சதாபிஷேக விழாவுக்கு ஏற்பாடு செய்திருந்த தமிழன்பருக்கு 'விகடன்' எழுதிக் கொண்டது போல் 'கல்கி' எழுதிய கடிதம்:

"உயர் திருவாளர் தமிழன்பர் அவர்களுக்கு 'விகடன்' வரையும் விகிதமானது:

"தங்களுடைய அழைப்புக் கடிதம் பெற்றேன். மெத்த மெத்த சந்தோஷம். ஐயரவர்களுடைய 80-ஆம் வயது பூர்த்தியைத் தாங்கள் விமரிசையாகக் கொண்டாட எண்ணியிருப்பது மிகவும் பொருத்தமானதே.

"நம்முடைய காலத்தில் நம் கண் முன்னால், தமிழ் மொழிக்குப் பெருமையளித்தவர்களுள் இரண்டு பேர் சிறந்து விளங்குகிறார்கள். ஒருவர் தேசிய கவி சுப்பிரமணிய பாரதி; மற்றவர் மகாமகோபாத்தியாய

சாமிநாதையர். இரண்டு பேரும் ஒவ்வொரு வகையில் தமிழ்த்தாய்க்கு மகத்தான சேவை செய்திருக்கிறார்கள்.

"ஆனால் பாரதியார் ஒரு தவறு செய்தார். திடீரென்று யாரிடமும் சொல்லிக்கொள்ளாமல் அவர் பாட்டுக்கு இறந்துபோய்விட்டார்; என்ன அவசரமோ தெரியவில்லை?

"ஏதடா, நாம் செய்த சேவையைத் தமிழர்கள் அறிந்து பாராட்டுவதற்குக் கொஞ்சம் அவகாசம் கொடுக்க வேண்டாமா என்று அவருக்குச் சற்றும் தெரியாமல் போயிற்று.

"ஆனால் ஐயரவர்கள் அத்தகைய தவறு செய்ய வில்லை. அவர்கள் தமிழர்களின் மதாந்த குணத்தை நன்கு அறிந்தவர்போல் இருக்கிறது.

"நம்முடைய தொண்டின் பெருமையை இந்தத் தமிழர்கள் அறிய வேண்டுமானால் 80 வயதுக்குமேல் ஜீவித்தே தீர வேண்டும் என்று இளம்பிராயத்திலேயே தீர்மானித்திருப்பார்போல் இருக்கிறது.

"எப்படி இருந்தாலும் நம்முடைய அதிர்ஷ்டந்தான் அவருடைய 81-ஆம் வயதிலாவது அவரைக் கவுரவப் படுத்த வேண்டுமென்று நமக்குத் தோன்றியது பெரிய காரியமல்லவா?

"ஏதோ இவ்வளவு தாமதமாகத் தொடங்கியிருக்கும் காரியத்தை அதற்கேற்ற பெருமையுடன் சிறப்பாக நடத்தி வைப்பீர்களென்று எதிர்பார்க்கிறேன் - இப்படிக்கு, நண்பன், விகடன்."

சதாபிஷேகச் செய்தியைப் பனிச்செனை எல்லோர் உள்ளமும் கொள்ளுமாறு அலாதியான பாணியில் 'கல்கி' எழுதியது பலரையும் விழிப்புறச் செய்தது.

அப்போது எம்.எல்.ஏ., ஆக இருந்த பெருந்தலைவர் திருமையம் எஸ். சத்தியமூர்த்தி அவர்கள்;

"ஆனந்த விகடன் சொல்வதுபோல், காலஞ்சென்ற சுப்பிரமணிய பாரதியார் அவர்களும், டாக்டர் சாமி நாதையர் அவர்களும் தற்காலத் தமிழ் வானில் உதயமான இரண்டு பெரிய நட்சத்திரங்களாவார்கள். அந்த இரண்டில் ஒரு நட்சத்திரமாவது இன்னும் ஒளி வீசிக் கொண்டிருப்பது நமது பாக்கியமாகும்" எனச் சொல்லி மகிழ்ந்தார்கள்.

அடுத்த இதழில் ஸ்ரீமத் ஐயருக்கே 'விகடன்' எழுதிக் கொண்டது போல் 'கல்கி' எழுதியிருந்த கடிதம்:

"தமிழ்த் தாத்தா ஸ்ரீ உ. வே. சாமிநாதையர் அவர்கள் சமூகத்துக்குப் பேரன் பரிவுடன் எழுதிக் கொள்வது:

"பெரியவாள் என்ன யோசிக்கிறீர்கள்? இது என்ன புதிய பட்டமாயிருக்கிறது, இவன் யார் கொடுப்பது என்றா? இதனைத் தாங்கள் நிராகரிக்க மாட்டீர்கள் என்று நம்பு கிறேன். சகலமும் அறிந்த பெரியாராகிய தாங்கள், நான் அளித்திருக்கும் பட்டத்தின் பொருத்தத்தை அங்கீகரிக் காமல் இருக்க முடியாது.

"முதலாவது, ஒளவையாருக்கு எப்படித் 'தமிழ்ப் பாட்டி' என்னும் பட்டம் பொருந்துமோ அதுபோலவே, தங்களுடைய பிராயத்தினாலும், தமிழுக்குத் தாங்கள் செய்திருக்கும் தொண்டினாலும் 'தமிழ்த் தாத்தா' என்னும் பட்டம் தங்களுக்குப் பொருந்தும்.

"இரண்டாவதாக மேற்படி பட்டத்திலுள்ள இரண்டு 'த்'களையும் நீக்கிவிட்டால், தாங்கள் தமிழ் 'தாதா' (வள்ளல்) ஆகிறீர்கள். நமது நாட்டின் பரம்பரை வழக் கத்தை அநுசரித்து அகப்பட்ட நூல்களையெல்லாம் ஒளித்து வைக்காமல், அச்சிட்டு வெளியாக்கிப் பதினாயிரக்கணக் கானவருக்குப் பயன்படும்படி செய்த தங்களைத் 'தமிழ் தாதா' என்று சொல்லாமல் வேறு யாரைச் சொல்வது?

"மூன்றாவதாக, 'ருசி கண்ட பூனை உறியைத் தாவும்' என்பதுபோல் தமிழன்பர்கள் இன்னமும் தங்களை

நோக்கி, 'தமிழ் தா தா - தமிழ் நூல்களைத் தா தா' என்று கேட்டுக்கொண்டுதான் இருக்கிறார்கள் (மேற்படி சிலேடை என் சொந்தமல்ல; இரவல்தான் என்பதையும் பெரியவாளிடத்தில் தெரிவித்துக்கொண்டுவிடுகிறேன்).

"இவ்வளவு பொருத்தமான பட்டத்தைத் தாங்கள் அங்கீகரிக்காவிட்டாலும் நான் என்னவோ இந்தப் பட்டத்தால்தான் தங்களை அழைப்பேன். ஏனென்றால், 'மகாமகோபாத்தியாய, தாக்ஷிணாத்ய கலாநிதி' முதலியவை வாயில் நுழைவதே கடினமாயிருக்க, 'தமிழ்த் தாத்தா' என்பதோ தங்கள் தமிழ் வசன நடையைப்போல் எளிதாயிருக்கின்றது.

"கடைசியாக ஒன்று; மார்ச் 6-ஆம் தேதி வைபவங்கள் முடிந்து 7-ஆம் தேதி பிறந்ததோ இல்லையோ, உடனே இந்த வயது விவகாரங்களையெல்லாம் மறந்துவிடுங்கள். தப்பித் தவறி வயதைப்பற்றிய ஞாபகம் வந்தால் 81 என்பதை திருப்பி வைத்து 18 என்று எண்ணிக் கொள்ளுங்கள்.

"எங்களுக்குக் கதை கேட்பதில் மிகவும் பிரியம், தங்கள் சொந்தக் கதையை முழுதும் பூரணமாய்க் கேட்க வேண்டுமென்று ஆவல் கொண்டிருக்கிறோம்...."

அதற்கு அடுத்த வாரம் 'கல்கி' அவர்கள், ஐயரவர்களைப்பற்றிய கட்டுரைகள் அடங்கியதாகவே ஆ. வி. இதழ் வெளிவரும்படி செய்தார்.

இவரும் டாக்டர் ஐயரின் சதாபிஷேக மலர் என்பதாகக் 'கலைமகள்' தனிப்பிரசுரத்தை 6-3-35-இல் வெளியிட்டார். அதன் பிரதிகள் விழா மண்டபத்திற்கு வந்திருந்த அனைவருக்கும் வழங்கப்பட்டன.

1935-ஆம் ஆண்டு மார்ச் 6-ஆம் தேதி ஸ்ரீமத் ஐயரது சதாபிஷேக விழா சென்னைப் பல்கலைக் கழக மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இதுபற்றி 17-3-35-இல் 'தமிழ்த் திருவிழா' என்கிற தலைப்பில் 'கல்கி' இப்படி எழுதியிருந்தார்:

"சென்ற 6-ஆம் தேதி புதன்கிழமை ஸெனேட் மண்டபத்தில் நடந்த வைபவத்தை யாராவது 'டாக்கி'யில் எடுத்திருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும் என்று 'விகடனு'க்குத் தோன்றிற்று. நூறு வருஷத்திற்குப் பிறகு 'டாக்கி' காட்டப்பெறுமானால் அக்காலத்தில் வரப்போகும் நம் சந்ததிகள் நம்முடைய தமிழபிமானத்தைக் குறித்துப் பெரிதும் பாராட்டிப் போற்றுவார்கள். 20-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தமிழ்நாட்டில் தமிழ் புறக்கணிக்கப்பட்டது என்றால் நம்பவே மாட்டார்கள்.

"மகாமகோபாத்தியாய சாமிநாத ஐயரவர்களின் எண்பதாம் ஆண்டு நிறைவு விழா இவ்வளவு சிறப்பாக நடைபெற்றதுகுறித்து விகடனுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவில்லை. வைபவம் முடிந்ததும் வெளிவந்த பிரபல அட்வொகேட் ஒருவர், மூன்று வருஷத்திற்கு முன்பு இத்தகைய வைபவம் ஒன்று நடக்கக் கூடுமென்று யாரும் எதிர்பார்த்திருக்க முடியாது" என்றார். சமீப காலத்தில் தமிழ்நாட்டில் தமிழ் அபிமானம் அவ்வளவு அபிவிருத்தி அடைந்திருக்கிறது என்பது அவருடைய கருத்து.

"அரசியல் பிரச்னைகள், சமூகப் பிரச்னைகள் முதலியவற்றில் தமிழர்கள் எவ்வளவு சண்டை பிடித்துக் கொண்டாலும் தமிழ்த் தாயைப் போற்றுவதிலாவது எல்லோரும் ஒன்றுபட இடமிருக்கிறது என்பதற்கு மேற்படி வைபவம் நிதரிசனமாயிருந்தது.

"கனம் பொருந்திய ஸர் முகம்மத் உஸ்மான் அக்கிராசன பீடத்தை அலங்கரித்தார். திருவாளர் சிவராம சேதுப்பிள்ளை ஓலைச்சுவடியில் எழுதிய உபசாரப் பத்திரத்தைப் படித்துக் கொடுத்தார் (இதைப் படிக்கும்போது அவர் பட்ட கஷ்டம், ஐயரவர்கள் கறையான் அரித்த பழைய ஓலைச்சுவடிகளைப் படிப்பதற்கு எவ்வளவு கஷ்டப்பட்டிருக்க வேண்டுமென்பதை ஒரு தமிழ்ப் பண்டிதருக்கு ஞாபகப்படுத்திற்று).

மந்திரி ஸ்ரீமான் பி. டி. ராஜன் ரூ. 3001|-அடங்கிய பண முடிப்பைத் தமிழன்பர்களின் சார்பாகச் சமர்ப்பித்தார்.

"திருப்பனந்தாள் பண்டார சந்நிதியவர்களால் ஐயரவர்களின் பெரிய உருவப்படம் யூனிவர்ஸிட்டிக்கு அளிக்கப்பட்டது (இதுகுறித்து 'மடாதிபதி' அவர்கள் ஐயரவர்களைப் படாதிபதி ஆக்கிவிட்டார்கள் என்று பிரம்மஸ்ரீ முத்தையா பாகவதர் ஒரு பிராஸத்தைப் போட்டார்). உருவப்படத்தை யூனிவர்ஸிட்டியின் சார்பாக மிஸ்டர் விட்டில் ஹெயில்ஸ் ஏற்றுக்கொண்டு ஓர் அழகான பிரசங்கம் செய்தார். இன்னும் பதினொரு சபைகளின் சார்பாகவும் உபசாரப் பத்திரங்கள் அளிக்கப் பெற்றன. ஐயரவர்கள் எளிய சில சொற்களில் மனமுருகித் தம் மகிழ்ச்சியையும், தம்மை ஆதரித்தவர்களிடம் நன்றியறிதலையும் தெரிவித்துக்கொண்டார்.

"பாண்டுவாத்திய கோஷத்துடன் ஐயரவர்களுடைய ஏக புதல்வரான ஸ்ரீமான் கல்யாணசுந்தரமையர் அவர்களால் அளிக்கப்பட்ட சிற்றுண்டி விருந்து, எல்லாவற்றையும்விட முதல்தரமாயிருந்தது.

"பொதுவாக அன்றைய வைபவம் தமிழரசியை அவளுக்குரிய சிம்மாசனத்தில் மீண்டும் இருத்தி மகுடாபிஷேகம் செய்வித்ததுபோலவே தோற்றம் அளித்தது."

x x x

இப்படி இவருடைய ஆசானின் வைபவம் பற்றிக் 'கல்கி' எழுதியதைப் படித்துப் படித்து மகிழ்ந்தவர் அன்பர் கி.வா.ஜ. நாட்டு மக்களுக்குப் பத்திரிகை படிக்கும் ஆர்வத்தையே அதிக அளவில் தூண்டிவிட்டவர் கல்கி தாம்" என இவர் 'கல்கி'யைப் புகழ்வார். எனினும், 'கல்கி' இதற்கு முன்னதாக, "கலைமகள் பத்திரிகையில் ஆசிரியராக இருப்பதற்கு இவருக்குத் தகுதி இல்லை" என்று சொன்னதாக யாரோ ஒரு புரளி கிளப்பிவிட்டிருந்தார்கள்.

ஐயரவர்களின் சதாபிஷேக சமயத்தில் கலைமகள் வெளியீடாக இவர் கொண்டு வந்த சிறப்பு மலரைத் தமிழறிஞர் பலரும் பாராட்டினதோடு 'கல்கி'யே அதைப் பார்த்து மகிழ்ந்து இவரைப் பல இடங்களில் பாராட்டினார். இதனைத் தம் ஆசிரியப்பிரானின் ஆசியே எனச் சொல்லி இவர் உளம் நெகிழ்ந்தார்.

இவர் கலைமகளின் ஆசிரியராகப் பொறுப்பேற்றவுடன் கதை நாவல்களுக்கு முதலிடம் தந்து பிரசுரிக்கலானார்.

பிரசுரிக்கப்படும் கதைகளுக்கு அன்பளிப்புக் கொடுப்பது என்பது அப்போது கலைமகளில் வழக்கம் இல்லை. அன்பளிப் பின் அவசியத்தை இவர்தாம் உணர்த்தி முதன்முதலில் 5 ரூபாய் வழங்க ஏற்பாடு செய்தார். கலைமகளின் வளர்ச்சிக்கேற்ப அன்பளிப்புத் தொகையும் உயர்ந்தது.

அதிபரான நாராயணசாமி ஐயர் 'தொடர்ந்து பத்திரிகை நடந்து வந்தால் சரி' என இவரிடமே எல்லாப் பொறுப்பையும் விட்டு மனநிம்மதி பெற்றார்.

இவரே கட்டுரை, கதைகளைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பை மேற்கொண்டார். சிலர் தங்கள் படைப்புகளை நாராயணசாமி ஐயரிடம் நேரில் சென்று கொடுப்பார்கள். அவரிடம் கொடுத்தால் பிரசுரமாகிவிடும் என்று நம்பிக்கை. அவரோ அவற்றில் எந்தவிதக் குறிப்புங்கூட எழுதாமல் அப்படியே இவரது முடிவுக்கு அனுப்பிவிடுவார்' இவரிடம் முழு நம்பிக்கை கொண்ட அதிபரின் இந்தப் பெருந்தன்மை, கலைமகள் தமது சொந்தப் பத்திரிகை என்ற மனோபாவத்தோடு இவரைச் செயல்பட வைத்தது.

'அடுத்த இதழில் என்ன வரப்போகிறது?' என்று பதிப்பாளர் என்கிற முறையில்கூட நாராயணசாமி ஐயர் இவரிடம் கேட்க மாட்டார்.

அக்காலத்தில் சிறந்த சிறுகதை எழுத்தாளராக விளங்கிய கு. ப. ராஜகோபாலன், ந. பிச்சமூர்த்தி, புதுமைப்பித்தன், த. நா. குமாரசாமி, சிதம்பர சுப்ரமணியன், சி. சு. செல்லப்பா போன்ற பலர் இவருடைய நண்பர்களாக இருந்தார்கள். அவர்களின் சிறந்த படைப்புகளைக் கலைமகளில் வெளியிட்டுப் பெரிதும் ஊக்கம் அளித்தார். இவரது முயற்சி பலனளிக்கத் தொடங்கியது. டாக்டர் ஐயரவர்களும் தம் இறுதிக் காலம் வரையில் கலைமகளுக்குக் கட்டுரைகள் வழங்கி நலம் செய்தார்கள்.

தேசிகவிநாயகம் பிள்ளையிடமிருந்தும் பாடல்களைப் பெற்றுக் கலைமகளில் இவர் வெளியிட்டார். பாரதியாரைப்பற்றியும் பல கட்டுரைகளை வெளிவரச் செய்தார்.

இவர் மொழிப்பகை அற்றவர். அதனால் பிற மொழி வல்லுநர்களான கா. ஸ்ரீ. ஸ்ரீ. த. நா. குமாரசாமி, த. நா. சேனாபதி, சீதாதேவி, செல்லம் போன்றவர்களுக்குத் தமிழ் இலக்கியச் செல்வங்களைப் பிற மொழிகளில் பெயர்க்க உதவினார். அவர்களைப் பயன்படுத்திக்கொண்டு இந்தி, மராட்டி, வங்காளி, தெலுங்கு போன்ற பிற மொழிகளிலுள்ள இலக்கியச் செல்வங்களைத் தமிழில் மொழிபெயர்க்கச் செய்து கலைமகளிலும் வெளியிடலானார்.

தமிழில் சொந்தமாக எழுதிய நாவல்களையும் கலைமகளில் வெளியிடுவது நலம் என்று நினைத்தார். அதற்காக நாவல் பரிசுப் போட்டி ஒன்றைத் துவக்கினார். அந்தப் போட்டியில் பரிசு பெற்றதுதான் 'அகிலன்' எழுதிய 'பெண்' என்ற நாவல். கலைமகள் பரிசைப் பெற்ற திருமதி ராஜம் கிருஷ்ணன், ஆர். சூடாமணி போன்ற பெண் எழுத்தாளர்களும் பலர் உண்டு.

தமிழ் மக்கள் இந்த முயற்சிகளையெல்லாம் வரவேற்றனர். கலைமகள் பத்திரிகையின் பிரதிகள்

விநியோகம் மாதத்திற்கு மாதம் அதிகரிக்கத் தொடங்கியது.

நாராயணசாமி ஐயருக்குப்பின் அவ்ருடைய புதல்வர் நா. ராமரத்தினம் பதிப்பாளரானதும் மேலும் உற்சாகத்துடன் செயல் பட்டார். அவர் 'மஞ்சரி' பத்திரிகையைத் தொடங்கினார். மொழிபெயர்ப்புக் கதைகளை அதில் பிரசுரம் செய்தார்கள்; அதேபோல் 'கண்ணன்' பத்திரிகையை ஆரம்பித்தார். கலைமகளில் இருந்த சிறுவர் பகுதி அதில் முற்றும் இடம் பெற்றது.

இப்படி ஒவ்வொன்றாகத் தரமான கதைகளுக்காகவே 'கலைமகள்' என்று சொல்லும் அளவுக்குக் கதைகளை அதில் அதிகம் இடம் பெறச் செய்தார் இவர்.

சிறுகதைகள் எழுதும்படி எழுத்தாளர்களைத் தூண்ட இவர் புதுப் புது முறைகளைக் கையாண்டார். இரட்டைக் கதைகள், கிழமைக் கதைகள், இரட்டைமணி மாலை என்ற பல தலைப்புகளில் சிறுகதைகள் வெளியாயின.

பல இடங்களுக்குப் போகும்போது, ''நீங்கள் கதை எழுதுவதாகச் சொல்கிறார்களே; கலைமகளுக்கு எழுதலாமே'' எனப் பலரையும் ஊக்குவித்து, எழுதவும் வைத்திருக்கிறார்.

அவர்களுக்கெல்லாம் இவர் காட்டிய சலுகை ஒன்றே ஒன்றுதான்: இவரே அந்தக் கதைகளைப் படித்துப் பார்ப்பார்.

''தமக்கு வேண்டியவர் என்பதற்காக எந்தக் கதையையும் கி.வா.ஜ - வெளியிடுவார் என்று எதிர் பார்ப்பதோ, எண்ணுவதோ தவறு. கலைமகளுக்கு ஏற்றதாக இல்லையென்று கருதினால் இன்னொரு கதை எழுதச் சொல்லி அவரை நயமாக வேண்டுவார். சில சமயம் இப்படி ஒருவரிடமே மூன்று நான்கு கதைகள் கூட வாங்கித் திருப்பிக் கொடுத்து, சிறந்ததாகத்

தேர்ந்தெடுத்ததை அன்பர் கி.வா.ஜ., வெளியிட்டிருப்பது எனக்குத் தெரியும். பத்திரிகையின் தரத்தை உயர்வாக வைத்திருக்க வேண்டுமென்பதில் அவர் மிகுந்த ஆர்வம் உள்ளவர்'' எனக் கால் நூற்றாண்டுக்கும் மேலாக இவருடன் சேர்ந்து 'கலைமகள்'ளில் பணியாற்றியிருக்கும் அன்பர் கா.ஸ்ரீ.ஸ்ரீ குறிப்பிடுவார்.

பிரசுரத்துக்குத் தேர்ந்தெடுத்ததை இரண்டு தடவை இவரே 'ப்ரூஃப்' பார்ப்பார். தவறு நேரக் கூடாது என்பது இவரது கொள்கை.

'கல்பனா' (ரகுநாதன்) எழுதிய 'ஞானப் பூ' என்கிற கதையை இவர் வெளியிட்டபோது, "இந்தக் கதையைப் படித்தபின் மீண்டும் மீண்டும் இவர் எழுதமாட்டாரா என்ற ஏக்கந்தான் உங்களுக்கு வரும்'' எனக் கதாசிரியரைப் பற்றிய அறிமுகத்தில் இவர் குறிப்பிட்டார்.

இவரது எழுத்தோவியம் கண்ணில் பட்டவுடன் யாரால்தான் அந்தக் கதையைப் படித்துப் பார்க்காமல் இருக்க முடியும்?

கலைமகளில் தங்களது படைப்பு பிரசுரமாவதை ஒரு கவுரவமாகவே எழுத்தாளர்கள் பலரும் கருதினார்கள்.

இவரது நாட்டம் எல்லாம், பழைய பண்பாடுகளைத் தொடர்பற்றதாகச் செய்யாமல், புதியதை விலக்காமல் என்றும் நிலைத்திருக்கும் இலக்கியப் படைப்புகளிலேயே இருந்தது.

"ஜனங்களுக்கு எதைக் கொடுக்க வேண்டுமோ அதை அவர்கள் விரும்புகிற முறையில் கொடுக்க வேண்டும். ஆபாசம், விரசம் இல்லாமல் யாவரும் விரும்பிப் படிக்கும் முறையில் கொடுக்க வேண்டும்'' என்கிற உறுதியோடு இவரது பத்திரிகைத் தொண்டு நடைபெற்றது.

இதனால் சிலரின் கோபதாபங்களுக்கும், வசைமொழிகளுக்கும் இவர் ஆளாகியிருக்கிறார்.

கலைமகளில் வெளியிடும் சிலரின் கதைகளை இவர் கொஞ்சம் 'எடிட்' செய்து வெளியிடுவதும் உண்டு.

இதைக் கண்டித்து ஒருசமயம் ஒரு பெரிய எழுத்தாளர் நாராயணசாமி ஐயருக்கே காரசாரமாகக் கடிதம் எழுதினார். அவரோ அந்தக் கடிதத்தை அப்படியே ஒதுக்கி வைத்துவிட்டார்; இவரிடம் ஒரு வார்த்தைகூடக் கேட்கவில்லை.

இவருக்கு நிறையச் சுயமரியாதை உண்டு. சின்ன மனக் கஷ்டம் வந்திருந்தால்கூடக் கலைமகள் பத்திரிகையை விட்டுவிட்டுப் போயிருப்பார்; ஆனால், அப்படி ஒரு சிறு கஷ்டங்கூட ஏற்படாமல் கலைமகள் பதிப்பாளர் இவரைச் சுயமாகச் செயல்பட அநுமதித்தார் என்றால் பாருங்கள்!

x x x

'ஆனந்த விகடன்' வாசன் அவர்கள் அடிக்கடி இவரைக் கூப்பிட்டனுப்புவது உண்டு. இவரது வீட்டிற்கும் வருவார். அவரது வீட்டிற்கு இவர் போகும்போதெல்லாம் மிகுந்த உபசாரம் செய்வார்.

ஒரு நாள் அவர் சொன்னார்: "நாங்கள் ஒரு விஷயத்தை உங்களிடம் எதிர்பார்த்தவர்களாக இருக்கிறோம். நீங்கள் 'ஆனந்த விகட'னில் சேர்ந்தால் நல்லது என்று தோன்றுகிறது."

இவர் சொன்னார்: "டாக்டர் ஐயரவர்களின் வேலையையும் கவனித்துக்கொண்டு, 'கலைமகள்' வேலையையும் பார்க்கிறேன். அந்த மாதிரியான வாய்ப்பு 'ஆனந்த விகட'னுக்கு வந்தால் எனக்கு இருக்காதே" என்றார்.

"ஆம்; உண்மைதான். ஆ.வி-க்கு வந்தால் முழு நேரமும் அங்கேதான் பணி புரியும்படி இருக்கும். ஐயரவர்களது பணி தடைப்படக்கூடும்" என்றார் வாசன். அதில் தமக்கு விருப்பமில்லை என்று இவர் சொல்லிவிட்டார்.

**பரந்த மனப்பான்மை :**

கலைமகளிலோ இவர் எப்போது வந்தாலும் சரி, எப்போது போனாலும் சரி கண்டுகொள்ளாத அளவுக்குச் சுதந்திரம் கொடுத்திருந்தார்கள்.

"ஏன் தம்மிடம் உதவி ஆசிரியர்களாக இருந்தவர்களையும், 'இதை அப்படிச் செய்யலாமே, அதை இப்படிச் செய்யலாமே' என்று சொல்லித் துன்புறுத்த மாட்டார். நாராயணசாமி ஐயரோ, பிறகு ராமரத்தினம் அவர்களோ என்னைக் கூப்பிட்டால் என்னவென்று கேட்க ஐயரின் அறைக்குப் போவேன். இதுபோலவே கி. தாமோதரனும் அவருக்குப் பின்பு எஸ்.வி. ரமணியும் செல்வதுண்டு. 'நாங்கள் ஐயரிடம் ஏன் போனோம், ஐயர் என்ன சொன்னார்?' என்று கி.வா.ஜ., கேட்க மாட்டார். நாங்களாகச் சொன்னால் காதில் போட்டுக்கொள்வார். எங்களுக்குச் சம்பள உயர்வு கிடைக்கும்போது, 'எவ்வளவு கிடைத்தது?' என்று கேட்பார். நாங்களாகச் சொன்னால் மகிழ்வார். அந்த மகிழ்ச்சியின் மேன்மையைக் கண்டு அண்ணனுக்கு உண்டாகும் பெருமிதம் தோன்றும்" என எதையும் ஒளி மறைவு இல்லாமல் சொல்லக் கூடிய கா.ஸ்ரீ.ஸ்ரீ., குறிப்பிட்டிருக்கிறார்.

இளமையிலேயே துறவு நெறியில் தோய்ந்துவிட்ட கி.வா.ஜ-வின் உள்ளத்தில் சுபாவமாகவே அந்தக் குணம் அமைந்துவிட்டது. நீரிலே இருந்தும் நீர் ஒட்டாத தாமரையிலையினைப்போல வாழ்ந்த இவரது குணம் சிலரது வெறுப்புக்கு இவரை ஆளாக்கியிருக்கத்தான் வேண்டும்.

இவர் எவரையும் தமக்கு எதிரியாகக் கருதியதில்லை. மற்றப் பத்திரிகை எதையும் தாக்கி எழுதவும் மாட்டார். 'கல்கி', 'தேவன்' போன்ற மற்றப் பத்திரிகை ஆசிரியர்களின் கதைகளையும் வாங்கிக் 'கலைமக'ளில் வெளியிடுவார். அதேபோல் இவரும் பல பத்திரிகைகளுக்கு எழுதுவார்.

இவரை ஆசிரியராகப் பெற்ற பின் 'கலைமகள்' பெருமையும் பூரிப்பும் அடைந்தாள்.

இவரால் உருவான எழுத்தாளர்கள் கணக்கில் அடங்கார். இவர்களில் சிலர், கலைமகள் பரிசுகளும் சாகித்திய

அகாதமிப் பரிசுகளும் பெற்று இன்று எழுத்துலகில் முன்னணியில் இருப்பவர்கள் ஆவர்'' என்று விமர்சன வித்தகராகிய கி. சந்திரசேகரனே மனநிறைவோடு இவரைப் பாராட்டியிருக்கிறார்.

'அகிலன்', 'மாயாவி', பி. வி. ஆர்., பூவாளூர் சுந்தர ராமன், ராஜம் கிருஷ்ணன், அநுத்தமா, ஆர். சூடாமணி, ஆர் வி., எல்லார்வி, லட்சுமி சுப்பிரமணியன் போன்ற பல ஆண் பெண் எழுத்தாளர்கள் 'கலைமகள்' குடும்பத்தில் உருவானவர்களே.

1957-இல் 'கலைமகள்' வெள்ளிவிழாக் கொண்டாடினாள்; 82-இல் யாவரும் தன்னைப் போற்றிப் புகழப் பொன்விழாக் கொண்டாடிப் பொலிவுற்றாள். இதனைக் கலைமகளின் பொற்காலம் என்றே சொல்லலாம்.

நாராயணசாமி ஐயர் 'கலைமகள்' பத்திரிகையை ஆரம்பித்தார். அவருக்குப் பின் அவர் புதல்வர் ராமரத்தினம் அதை வளர்த்தார். இன்று பேரர் நாராயண சாமி அதனைக் காப்பாற்றி வருகிறார்.

அரை நூற்றாண்டுக்கும்மேல் இந்த மூன்று தலைமுறைகளோடும் சேர்ந்து, பாரம்பர்யம் மிக்க 'கலைமகள்' பத்திரிகையின் ஆசிரியராகத் தம் கடைசிக் காலம்வரை பணியாற்றிய பெருமை கி.வா.ஜ-வுக்குக் கிடைத்தது.

**ஆசானின் அரவணைப்பு**

ஐயரவர்களது சதாபிஷேக விழா சிறப்புற நடைபெற எல்லோரும் பாராட்டும்படியாக இவர் எழுத்துப் பணி முதலியவற்றைச் சிறப்பாகக் கவனித்துக்கொண்டார் அல்லவா? இது ஆசானுக்கு மகிழ்ச்சியை அளித்தது. இவருக்கும், இவருக்கு உறுதுணையாக இருந்தவர்களுக்கும் அவர் தனியே ஆடைகள் வழங்கி ஆசி கூறினார். இவருக்கே தனியாகவும் சிறப்புச் செய்ததை, இவர் பிற்காலத்தில் பலரிடமும் சொல்லி மகிழ்ந்திருக்கிறார்.

இவரது திறமையில் ஆசானுக்கு முழு நம்பிக்கை அப்போது ஏற்பட்டுவிட்டது. சதாபிஷேகத்தை அடுத்து அவரது உடம்பும் தளர்ந்து, முன்பு அடிபட்ட பாதம் சுரந்து கொண்டு உடல் சுகவீனம் ஏற்பட்டது. அதிக நேரம் உட்கார்ந்து வேலைகளை எல்லாம் முடித்துவிட வேண்டு மென்ற தாபம்மட்டும் அவருக்கு அதிகரித்துக்கொண்டே இருந்தது. எனவே, பதிப்புப் பணிகள் எல்லாவற்றையும் இவரிடமே ஒப்புவித்து, இலேசாகக் கண்காணித்து வரத் தொடங்கினார்.

காலையில் ஐயரவர்களுடன் இருந்து பதிப்பு வேலை களைக் கவனிப்பது, பிற்பகலில், பத்திரிகை அலுவலகம் போய் அங்குள்ள பணிகளைக் கவனிப்பது, மாலையில் மறுபடியும் ஐயரவர்களுடன் இருப்பது, இரவில் தம்முடைய ஆராய்ச்சிப் படிப்பில் ஈடுபடுவது என இப்படி மூச்சு விடக் கூட நேரம் இல்லாமல் இவருக்கு வேலைகள் பெருகி விட்டன. வேலைகளில் எதனையும் குறைத்துக்கொள் ளாமல் எல்லாவற்றையும் இவர் எப்படிச் சமாளித்தார் என்பது நமக்கு ஆச்சரியமாக இருக்கலாம்.

1935-ஆம் ஆண்டு மே மாதம் ஸ்ரீமத் ஐயர் திருப்பனந் தாள் சென்றபோது இவரும் உடன் சென்றார்; 'கலை மகள்' பத்திரிகை சம்பந்தமாக, குருபூஜையான மறு நாளே மட்டும் தாம் சென்னை வந்துவிட்டார்.

திருப்பனந்தாளில் சில நாள் தங்கியிருந்து ஐயர வர்கள் இவருக்குத் தம் ஆசியுடன் எழுதிய ஒரு கடிதத்தில், இன்ன இன்ன பணிகளைச் செய்திட வேண்டுமென்பதைக் குறிப்பிடும்போது, "பாடலின் விசேடக் குறிப்பு முற்றும் எழுதி உரிய இடத்தில் சேர்த்தல்; நான் அதற்குள் சென்னை வராவிட்டால் அதன் 'க்ஷீன் ப்ரூஃபை' நான் இருக்குமிடத்திற்கு அனுப்பும்படி அண்ணாவிடம் சேர்ப் பித்தல்; அதன் பின்பு அகராதியைச் சேர்த்தல்; அதன் முகவுரையில் சேர்க்க வேண்டியவற்றை உரிய இடங்களில் சேர்த்து முதலில் பதிப்பிப்பதுடன், அதன் பின்பு கூடுமா

னால் முன்பு யோசித்தபடி திருமால், வைகை, மதுரை, முருகன், திருப்பரங்குன்றம், அழகர் மலை இவற்றின் விசேடக் குறிப்புகளைச் சுருக்கமாக அமைத்துச் சேர்த்தல்; திருமலையின் பாடல் மேற்படி கோவிலின் சிலாசாசனத்திற் செதுக்கப்பட்டுள்ளதென்பதை முகவுரையில் சேர்த்தல்: 'பெருங்கதை'யின் எஞ்சிய மூலம், உரை இவற்றை அடுக்குவித்து, 'ப்ரூஃப்' பார்த்து அண்ணாவையே உத்தரவு கொடுக்கும்படி செய்தல். 'பெருங்கதை'யின் அரும்பத அகராதி முதலியவற்றை 'டெக்ஸ்'டில் 'மார்க்' செய்து கொண்டு எழுதல்; எழுதுவித்தல்; புறநானூற்றை வழக்கப்படி செய்தல். எல்லாம் காலவரையறை செய்து கொண்டு அதன்படி முறையே செய்து வந்தால் எவ்வளவு கடினமான வேலையும் எளிதில் முடியுமென்பது தெரியுமே! நான் முன்னமே இவ்வாறுதான் செய்து வந்தேன்....மருந்து இரண்டு வேளையும் போட்டுக் கொண்டு வருகிறேன். குணமாகலாமென்று தோன்றுகிறது'' என்று எழுதியிருந்தார்.

ஆசானின் அறிவுரையின்படி காலவரையறை செய்து கொண்டு தம் பணிகளையெல்லாம் முறையாக இவர் செய்து வந்ததால் கடினமான வேலையையும் எளிதில் முடித்துச் சிறப்பாகத் தமிழ்த் தொண்டாற்ற இவரால் முடிந்தது.

x x x

**'திருக்குறள்' ஆராய்ச்சிப் பதிப்பில் ஈடுபட்டமை:**

'திருக்குறள்' ஆராய்ச்சிப் பதிப்பு ஒன்றைக் கொண்டு வரவேண்டும் என்கிற எண்ணம் ஐயரவர்களுக்கு இருந்ததை இவர் கூறுவார். ஆனால் அவரது காலத்தில் அது நிறைவேறவில்லை.

பின்னால் 1950-இல் இவருடைய நண்பரும், முன்னாள் கல்வி அமைச்சருமான தி.சு.அவிநாசிலிங்கம், 'திருகுறள்க்

சம்பந்தமாக ஒரு பெரிய நூலை வெளியிட வேண்டும்" என விரும்பினார். அந்தப் பேருபகாரியிடம் இவர் ஐயரவர்களின் எண்ணப்படி செய்யலாமே என யோசனை சொன்னவுடன், ''அப்படியே செய்யுங்கள்'' என இவரையே பணித்தார் அவிநாசிலிங்கம்.

கோவை ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்தியாலய வெளியீடாக அதனைக் கொண்டுவரும் பணியைத் துவக்கியவர் நம் குடியரசின் முதல் தலைவராக இருந்த டாக்டர் ராஜேந்திரப் பிரசாத் அவர்களே.

அப்பணியைப் பூர்த்தி செய்ய, கி.வா.ஜ., தொடர்ந்து 12 ஆண்டுகள் உழைத்தார்.

நம் நாட்டின் மறுமலர்ச்சிக்கும், விடுதலைக்கும் அடிகோலிய சுவாமி விவேகானந்தரின் நூற்றாண்டு விழா 1963-ஆம் ஆண்டு நாடெங்கும் கொண்டாடப்பட்டது. அந்த ஆண்டு மார்ச் 29-ஆம் நாள் நம் குடியரசுத்தலைவராயிருந்த டாக்டர் ராதாகிருஷ்ணன் அந்நூலைக் கோவையில் வெளியிட்டார். பெரிய அளவில் ஆயிரம் பக்கங்களுக்கும் மேற்பட்ட அளவரிய 'திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு' நூலை நா. மகாலிங்கம் பெற்றுக்கொண்டார். தமிழக ஆளுநராக இருந்த விஷ்ணுராம் மேதி இவருக்குப் பொன்னாடை போர்த்தினார்.

x x x

**பாடம் சொல்லும் ஆற்றல் :**

இப்படி இவர் மேற்கொண்ட பல பணிகளிடையே தம் வீட்டில் எவரிடமும் எதையும் எதிர்பார்க்காமல் பலருக்கும் தமிழ் சொல்லிக் கொடுத்தும் வந்தார்.

1941-43-இல் த.நா. சேனாபதி போன்றவர்களுக்கும், பின்னால் அருணாசலம், வாணீசரணன், த.நா. குருசாமி, கா. ஸ்ரீ. ஸ்ரீ., பூவாளூர் சுந்தரராமன், பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையின் புதல்வி சரோஜினி,

முத்துக்கண்ணப்பர், ராமாநுஜம் சிங்காரம் பள்ளி ஆசிரியரான லோகநாதன் போன்ற பலர் இவரிடம் படித்துப் தமிழ்ப் பண்டிதர்களாகத் தங்கள் தகுதியையும் உயர்த்திக்கொண்டார்கள். எம். ஏ. டாக்டர் பட்டம் பெற்றவர்களும் உண்டு.

தங்கராஜன், ராஜகோபாலன், தர்மாம்பாள் போன் போன்றோர் படித்துக்கொண்டிருந்தபோது ஒரு நாள்; அன்று தேர்வு எழுதிவிட்டு வந்த சிலர் தங்களது வினாத் தாளை இவரிடம் காண்பித்துப்பேசிக்கொண்டிருந்தார்கள்.

வினாத்தாளில் இரண்டு மூன்று தலைப்புகள் கொடுத்து ஏதேனும் ஒரு தலைப்பின்கீழ்க் கட்டுரை எழுதும்படி சொல்லப்பட்டிருந்தது.

"நீர் எதைப்பற்றிக் கட்டுரை எழுதினீர்?" என இவர் ஒருவரிடம் கேட்டார்.

நூலகம் என்கிற தலைப்பில் எழுதி வந்துள்ளதாக அவர் சொன்னார். பள்ளி ஆசிரியராக அவர் பணியாற்றிக் கொண்டிருந்தவர்.

"என்ன எழுதினீர்கள்?" என்று இவர் அவரைக் கேட்டார். அவர் சொல்லச் சொல்ல அங்கிருந்த எங்களுக்குச் சிரிப்பு வந்தது.

"வினாத்தாளுக்கு விடையளிக்கு முன் கொஞ்சமும் யோசித்துப் பார்ப்பதில்லை; சட்டென்று தோன்றுவதை அது சரிதானா என்பதை யோசிக்காமல்கூட எழுதிவிட்டு வந்துவிடுகிறீர்கள். அன்றைக்கும் சரி, இன்றைக்கும் சரி, தேர்வு என்று எழுதுகிறவர்கள் செய்கிற தப்பு இதுதான்" என இரக்க உணர்வோடு இவர் சொன்னார்.

நூலகம் என்றவுடன் குறிப்பிட்ட நண் பருக்குப் பருத்தி நூல் நினைவுக்கு வந்துவிட்டது! நூலகம் என்றால் பஞ்சாலை என நினைத்து முன்பு எப்படித் தக்ளி, சர்க்காவில் நூலாக்கினார்கள், இன்று நவீனப் பஞ்சாலைகளில் எப்படி நூலாக்கப்படுகிறது, துணி

நெய்யப்படுகிறது என்பனபற்றி மிக விரிவாக எழுதிவிட்டு வந்தவரைப் பார்த்து இரங்காமல் வேறு என்ன செய்வது?

இவருடைய கோபிசெட்டிப்பாளையம் நண்பரும் அமுத நிலைய நிர்வாகியுமான ரா.ஸ்ரீ.ஸ்ரீகண்டன் அப்போது அங்கு இருந்தார்; "இவர் எப்போதும் எதையாவது எழுதிக்கொண்டே இருக்க வேண்டும்" என்பது ஒன்றே அவரது குறிக்கோள்.

"இவர்களுக்குப் போய்த் தமிழ் சொல்லிக் தருகிறேன் என உங்கள் பொன்னான நேரத்தை வீணடிக்கிறீர்களே! பேசாமல் உட்கார்ந்து எதையாவது எழுதுங்கள்" என வழக்கம்போல் அறிவுரை சொல்லிச் சென்றார்.

இதுபற்றி இவர் அப்போது என்ன சொன்னார், தெரியுமா? "நான் என் ஆசிரியப் பெருமானிடம் தமிழ் கற்றேன். கவிஞர் கோமான் பிள்ளையிடம் தமிழ் கற்ற அவர் தம் வாழ்நாள் முழுக்கச் சிலருக்காவது தமிழ் சொல்லிக்கொண்டே வாழ்ந்தார். 'தமிழ் ஆசிரியர் பணியை ஏற்கவில்லை என்றாலும் நீரும் யாருக்காவது தமிழ்ப் பாடம் சொல்லிக்கொண்டே இருக்க வேண்டும். எனக்கு இளமையில் பாடம் சொன்ன சடகோபையங்கார், கம்பத்தை வைத்துக்கொண்டாவது பாடம் சொல்ல வேண்டும், கேட்பவனை உத்தேசித்துச் சொல்லக் கூடாது. பாடம் சொல்வதனால் உண்டாகும் முதல் லாபம் நம்முடையது, பாடம் சொல்லச் சொல்ல நம் அறிவு உரம் பெறும் எனச் சொல்வார்' என்று எனக்கு உணர்த்தியிருக்கிறார். இந்த அநுபவ வாக்கு எவ்வளவு தூரம் உண்மையானது என்பதை நானல்லவா உணர்வேன்? இவர்களுக்கு என்ன தெரியும்? திடீர் திடீரென்று பள்ளிகளிலிருந்தும், கல்லூரிகளிலிருந்தும், சபைகளிலிருந்தும் பேச அழைப்புகள் வருகின்றன. அதற்காக என்று தயார் செய்துகொள்ள எனக்கு எங்கே நேரம் இருக்கிறது? பலருக்குத் தமிழ் சொல்லித் தந்துகொண்டிருப்பதால்

ஓரிடத்தில் பேசியதையே கூறாமல், புதுபுதுக் கருத்துக்களை வெளியிட எனக்கு விஷயங்கள் கிடைக்கின்றன'' என இவர் தாம் செய்து வரும் தொண் டினால் அடைகிற பயனைச் சொன்னார்.

x x x

**ஆசானின் அடிச் சுவட்டில் :**

ஐயரவர்களுடன் இவர் ஒரு முறை அரியலூர் சென் றிருந்தார். தமக்கு இளமைக்காலத்தில் தமிழ் கற்பித்த சடகோபையங்காருடைய மனைவியாரை அவரது முதிய பிராயத்தில், ஐயரவர்கவள் தரையில் படிந்து வணங்கிய போது இவரும் அவ்வாறே வணங்கிக்கொண்டார்.

ஒரு முறை விக்கிரமசிங்கபுரத்தில் இருந்தபோது ஐயரவர்களுக்கு வந்த ஒரு கடிதத்தை ஒருவர் வாங்கி வந்து அவரிடம் கொடுத்தார். நீண்ட வெண்மைத் தாடியோடு கூடிய அந்த முதியவரிடமிருந்து கடிதத்தைப் பெறும்போது அவருக்குச் சாஷ்டாங்கமாக் கீழே விழுந்து ஆசான் வணங்கியதையும் இவர் பார்த்திருக்கிறார்.

ஒரு முறை தம் ஆசானுடன் இவர் திருவண்ணாமலை சென்றார். அப்போது ரமண பகவான் இருந்தார். முன்பும் ஒரு முறை ரமணாசிரமம் சென்று பகவானை ஐயரவர்கள் தரிசனம் செய்துகொண்டது உண்டு.

இந்த முறையும் இவர்களைக் கண்டவுடன் அங்கிருந் தவர்கள் பெருமகிழ்ச்சியுடன் வரவேற்றுப் பகவானிடம் அழைத்துச் சென்றார்கள். பழுத்த பழமாகிய ஐயரவர்கள் பகவானுக்குமுன் வீழ்ந்து வணங்கி எழுந்தார். ரமண முனிவரின் அருளாசியைப் பெற்ற பின்பு அருணாசலே சுவரரைத் தரிசனம் செய்துகொள்ளத் திருக்கோயிலுக்குச் சென்றார்.

அப்போது உடன் வந்த அன்பர் பேச்சினிடையே ஒரு பரதேசியைப்பற்றிச் சொன்னார்; ''அவர் நாள்தோறும்

ஆலய வெளிப்பிராகாரத்தைச் சுற்றி ஒரு முறை அங்கப் பிரதட்சிணம் செய்கிறார்'' என்றார்.

''அவருக்கு எவ்வளவு வயசு இருக்கும்?''

''கிட்டத்தட்ட 70 வயசு இருக்கும்.''

''அவரை நான் பார்க்கவேண்டுமே! எங்கே இருக்கிறார் தெரியுமா?'' என்று ஐயரவர்கள் கேட்டார்.

''இந்தக் கோயிலின் பக்கத்தில்தான் இருப்பார். சொல்லி அனுப்பினால் வருவார்'' என்றார் அன்பர்.

''சொல்லி அனுப்புவதா? அவர் இருக்கும் இடத்துக்கு நாமே போகவேண்டும். சுவாமி தரிசனங்கூடப் பிறகு செய்துகொள்ளலாம்.'' —ஐயரவர்களுக்கு இருந்த இந்த வேகத்தைக் கண்டு, 'அவரை ரமண பகவானைப் போன்ற பெரிய ஞானி, மகான் என்று ஐயர் எண்ணிக்கொண்டார் போலும்!' என்று அந்த அன்பர் நினைத்தார்; ''அவர் சாதாரணப் பரதேசிதான். படிப்போ, வேறு மகிமையோ அவரிடம் இல்லை'' என்றார்.

''எனக்கு இப்படி அங்கப்பிரதட்சிணம் செய்ய வேண்டுமென்று எவ்வளவோ ஆசை. அது முடிகிற காரியமா? இந்த உடம்பை நாம் எவ்வளவு கவனித்துப் பாதுகாக்கிறோம்! இந்த வயசில் இவ்வளவு பெரிய கோயிலைச் சுற்றிப் புரண்டு நாள்தோறும் அவர் அங்கப் பிரதட்சிணம் செய்து வருகிறார் என்றால், அது என்ன எளிய காரியமா? அவரைப் போய்ப் பார்க்கத்தான் வேண்டும்'' என மிகுந்த உணர்ச்சியோடு சொன்னார் ஐயரவர்கள்.

அந்த அன்பர் இவர்களை அழைத்துக்கொண்டு போகும்போது, எதிரே அந்தப் பரதேசியே வந்தார்.

''இவர்தாம் நான் சொன்னவர்'' என்று அந்த அன்பர் கூறினாரோ இல்லையோ ஐயரவர்கள் அவரெதிரில் சென்றார்.

கோயிலுக்குப் போகும் கோலத்தில் இடுப்பில் அங்க வஸ்திரத்தைக் கட்டிக்கொண்டிருந்த ஐயரவர்கள்

அப்படியே அந்தப் பரதேசியின் காலில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினார். இவர்களுக்கு அந்தக் காட்சி புல்லரிப்பை உண்டாக்கியது

மெல்ல எழுந்திருந்து அவரிடம், "தேகாபிமானத்தை விட்ட நீங்கள் பெரிய பாக்கியசாலிதான்" எனச் சொன்ன போது ஐயரவர்களுக்கு நாத் தழுதழுத்தது; கண்களில் நீர் துளும்பியது.

"படிக்காதவர்கள் என்றாலும் வயசானவர்களிடம் மிகவும் மரியாதையாக நடந்துகொள்ளும். அதனால் நமக்கு நன்மையே உண்டாகும்" என அறிவுறுத்துவது ஐயரவர்களின் வழக்கம்.

அதன்படியே தமது வயது முதிர்ந்த காலத்திலும் அவர் நடந்து வந்தார். அவருடன் இருந்த இவரிடமும் அந்தப் பழக்கமே குடிகொண்டது. அகந்தையின்றி ஏழையரினும் ஏழையாக இருப்பதையே இவர் தம் பாக்கியமாகக் கருதினார்.

வெளியிடங்களுக்குப் போகும்போது தாம் தங்கும் வீட்டில் உள்ள முதியவர் யாராக இருந்தாலும் அவரைச் சாஷ்டாங்கமாகக் கீழே விழுந்து வணங்கும் பழக்கத்தை இவர் கைவிட்டதேயில்லை.

**இரு துறைகளிலே இவரது வல்லமை :**

இவர் இலக்கியம், சமயம் ஆகிய இரண்டு துறைகளிலும் உரையாற்றுவதில் வல்லவர். இலக்கியம்பற்றிப் பேச இவர் தயாராக இருந்தாலும் அதிகமாகச் சமயம் பற்றிப் பேசவே அழைத்தார்கள். பாரதி விழா, கம்பன் விழா என்பதாக நடைபெறும் சில இலக்கியக் கூட்டங்களில்மட்டும் அல்ல, இவர் அதிகமாகக் கலந்துகொண்ட சமயக் கூட்டங்களிலும் இலக்கிய நயம் சொட்டச் சமயம்பற்றிப் பேசுவார்.

கோபிசெட்டிப்பாளையத்தில் வழக்கறிஞர் ஜே. சுப்பிரமணிய ஐயர் என்கிற செல்வர் இருந்தார்; எம்பெருமான்

ராமசந்திரமூர்த்தியிடம் அதிக ஈடுபாடு கொண்டவர். வடமொழி, தமிழ் இலக்கியங்களிலும், சங்கீதத்திலும் நல்ல பரிசயம் உள்ளவர். சங்கீத வித்துவான்களையும் ஆதரித்து வந்தார்.

அவரும் சரி, அவருடைய மனைவி ராஜம்மாளும் சரி, தங்களுக்குக் குழந்தையில்லையே என்று வருந்தியதில்லை. ஊரில் உள்ள குழந்தைகள் அனைவரையும் தங்கள் குழந்தைகளாகவே எண்ணி வாழ்ந்தார்கள். ஆப்பிள் பழங்களை நறுக்கினால் வீட்டின் கொல்லைப்புறத்தி லிருந்து வாசல்வரை யார் யார் இருந்தாலும் - பணி யாளர்கள் உள்பட - யாவருக்கும் இரண்டிரண்டு துண்டுக ளேனும் கொடுத்துவிட்டுத்தான் அவர்களும் இரண்டு துண்டுகளைத் தம் வாயில் போட்டுக்கொள்வார்கள்.

அமுத நிலையமெனும் புத்தக நிலையத்தைத் துவங்கு வதற்கு நம் அன்பர் கி.வா.ஜ-வுக்கு உதவியாக இருந்தவர் களில் ஜே. சுப்புவும் ஒருவர். இவரிடத்தில் அவருக்கு அளவற்ற அன்பு உண்டு.

ஒளவையாருக்கு நெல்லிக்கனி ஈந்த அதியர் கோமான் போல், தம் வீட்டில் முதன்முதலாகப் பழுத்த நாவற் பழத்தை இவருக்கு ஈந்து மகிழ்ந்தவர் அவர்.

**''மேனி கருநிறத்தால் மேவுமுன்வாய்ச் செந்நிறத்தால்**
**ஆனவித்தை உள்ளே அடக்குதலால் —வானளந்த**
**தேவர்கோன் கண்ணபிரான் ஜேசுப்பு வீட்டிலுதிர்**
**நாவற் கனியா நவில்.''**

எனக் கண்ணபிரானுக்கும், நாவற்கனிக்கும் சிலேடையாக இவர் பாடிய பாடலைக் கேட்டு மகிழ்ந்தவர் அவர்.

**கி.வா.ஜ-வின் சொல்நயமும் சிலேடை ஆற்றலும் :**

ஜே.சுப்பு அவர்களின் ஆதரவில் படித்து, பட்டம் பெற்று, இன்று சேலம் பாரதி வித்யாலயத்து மேல்நிலைப் பள்ளி முதுகலைப் பட்டதாரி ஆசிரியராகப் பணியாற்றி

வரும் D. நாராயணமூர்த்தி அவர்கள் 5-3-86-இல் எழுதியது இது:

"என் தாயார் ஜே. சுப்பு அவர்களது வீட்டில் பணி செய்துகொண்டிருந்தார்கள். நானும் என் தாயாருடன் அவர்களது வீட்டிலேயே வளர்ந்து வந்தேன்.

"கி.வா.ஜ., தம் இளமைக்காலம்தொட்டே கோபி செட்டிப்பாளையம் வந்தால் ஜே.சுப்பு அவர்களின் வீட்டிலேதான் தங்குவார்.

"சாதாரண நூறு வாட் பல்பு விளக்கொளியில், நடு வீதியில், அமைதியான இரவில் கி.வா.ஜ., கோதண்டராம கவுண்டர், வேம்பு ஐயர், ராமநாத ஐயர் இவர்களெல்லாம் கம்பராமாயணத்தைப் பல கோணங்களில் சுவை ததும்ப ஆராய்ந்து அலசுவார்கள். அதுவே தற்போது ஊர்தோறும் தோன்றிச் சிறப்புற நடைபெற்று வரும் கம்பன் கழக விழாக்களுக்கு முன்னோடியாக இருந்தது எனலாம். "கி.வா.ஜ., கோபி வரும் நாட்கள் எங்கள் யாவருக்கும் இனிமையான நாட்களாகும். அவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதில் நான் மகிழ்ச்சி கொள்வேன். ஒரு நாள் சந்தியாவந்தனத்திற்குக் கி.வா.ஜ., உட்கார ஒரு கையில் பலகையும், மற்றொரு கையில் தண்ணீர்ப் பாத்திரமும் எடுத்து வந்தேன். அப்போது கி.வா.ஜ., சுப்பு அவர்களிடம், 'நாராயண மூர்த்தி நல்ல திறமைசாலி. ஒரு கையில் பல கை கொண்டு வருகிறான், பாருங்கள்' என்றார். எல்லோரும் என்னைப் பார்த்துச் சிரித்தார்கள்; நானும் மகிழ்ந்தேன்."

"சிலேடை என்பது, காவிய ரசனைக்கு எடுத்தது என்று சொல்ல முடியாது. ஆனாலும், மிக்ஸ்சரைக் கொறிப்பது போல ஒரு வகையான சுவையைத் தரும்" என்று இவரே சொல்வார். டாக்டர் ஐயரவர்கள் பேச்சிலே சுவையான சிலேடைகள் அவ்வப்போது துள்ளி விழும். அவருடைய மாணாக்கராகிய இவருக்கும் அந்த வாசனை போனதில்லை!

ஒரு முறை ஈரோடு வழக்கறிஞர் சேஷண்ணாவின் வீட்டில் இவர் தங்கியிருந்தார். அப்போது அயலூரிலிருந்து ஒரு நண்பர் இவரைப் பார்க்க வந்தார். அவரோடு இவர் பேசிக்கொண்டிருக்கையில், ''மறுபடியும் அடுத்த மாதம் இங்கே வருவேன். அப்போது பார்க்கலாம்'' என்று இவர் சொன்னார்.

''அப்போது எங்கே தங்குவீர்கள்?'' என்று வந்தவர் கேட்டார்.

''நான் எப்போதும் இங்கேதான் தங்குவேன். மற்ற வீடுகள் எல்லாம் செங்கல் வீடு, மச்சு வீடு. ஈரோடில் சேஷண்ணா வீடு எனக்கு எப்போதும் 'தங்க' வீடு'' என்றார்கள்.

சேஷண்ணாவின் துணைவியார் பெயர் தங்கம். 'தங்க வீடு' என்பது தங்குகின்ற வீடு, தங்கை வீடு, தங்கம் போன்ற வீடு என அவரவர்கள் விருப்பப்படி பொருள் தரும் சிலேடையாயிற்றே! யாவரும் மகிழ்ந்தார்கள்.

இப்படி நாமக்கல் சென்றால் கிருஷ்ணசாமி ஐயரின் வீட்டிலும், திருச்சியில் நடராஜன் வீட்டிலும், தஞ்சையில் ராமசந்திரையர் வீட்டிலும் தங்குவார். எந்த ஊருக்குப் போனாலுங்கூட அங்கங்கே குறிப்பிட்ட ஒரு வீட்டில்தான் தங்குவார்.

காலையில் எழுந்து நீராடித் தியானம் செய்வதற்கும், பல நண்பர்கள் வந்து பார்த்துப் போவதற்கும் வசதியாக இருப்பதற்காக வெவ்வேறு இடமாக இருந்தால் சங்கடமாக இருக்குமென்று ஒரே இடத்தில் தங்குவார்.

''இவர் வரமாட்டாரா?''[2] எனச் சிறியவர்முதல் பெரியவர்வரை இவரது வரவு நோக்கி எதிர்பார்த்திருக்கவைத்தது இவரது விநயமும், நயமிக்க இனிமையான பேச்சுமே யாகும்.

x x x

**பல நூல் வெளியீடுகளில் ஈடுபட்ட புலமை :**

ஐயரவர்கள் 'தக்கயாகப் பரணி' நூலை அச்சிடும் போது இவர் ஒருமுனைப்பான ஆர்வத்தோடு அதில் ஈடுபட்டார். அதனால் அம்பிகையைப்பற்றிப் பல நுட்பமான செய்திகளை இவரால் அறிந்துகொள்ள முடிந்தது.

காசிமடத்துத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தி சுவாமிகள், 'அபிராமி அந்தாதி' நூலை உரையுடன் வெளியிட வேண்டுமென்று பணித்தபோது இவர் அந் நூலுக்கு உரையெழுதி அளித்தார். 1944-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 4-ஆம் தேதி ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளின் குருபூஜை நன்னாளில் அதனை வெளியிட்டார்கள்.

தஞ்சாவூர் பங்காரு காமாட்சியம்மன் கோவிலில் தேவி உபாசகராகிய 'அபிராமிபட்டர் விழா' 13—2—60-இல் நடந்தது. அப்போது 'அபிராமி அந்தாதி'க்கு உரை எழுதிய இவரை அழைத்திருந்தார்கள்:

**" பைந்தமிழ்க் கடலில் மூழ்கிப் பருவரல் சிறிதும் இன்றி**
**ஐந்திணை நெறியளாவி அக்கடல் தந்த முத்தம்**
**ஐந்தையும் எடுத்துக் கோத்த அந்தணப்**
**புலவர் தொண்டில்**
**மைந்தனைப் போல ஊக்கம் காட்டிடு மைந்த**
**வாழ்க!"—**

**" காந்தமலை என்றலுமே கண்ணருவிதனைக் காட்டும்**
**ஏந்தலுனைக் காண்பதுவே எங்கள்பெருந் தவமாகும்"**

எனத் தஞ்சைக் கவி கே.எஸ். ராமசந்திரன் வரவேற்பிதழ் வாசித்துக் கொடுத்தார். அப்போது தஞ்சைவாசிகள் அன்பர் கி.வா.ஜ-வுக்குத் தங்கத் தோடா அணிவித்துச் சால்வை போர்த்தி மகிழ்ந்தார்கள்.

இவரது வரவை எதிர்பார்த்து முன்கூட்டியே தஞ்சை ரெயில் ஜங்க்ஷனில் காத்திருந்த அன்பர்கள் இவரை மாலையிட்டு வரவேற்றார்கள்.

"அடடே, என்ன இது? காலையிலே மாலை வந்து விட்டதே" என இவர் சிரித்துக்கொண்டு சொன்னபோது டி.எஸ். நடராஜன் போன்ற இளைஞர்கள் அனைவருமே கிளுகிளுத்துப் போனார்கள்.

**பர்மா அநுபவம்**

இவர் பர்மா போயிருந்தபோது இவருக்குச் சில பிரமுகர்கள் அறிமுகமானார்கள். இவருடைய சொற் பொழிவுகளைத் தொடர்ந்து கேட்டு இன்புற்றார்கள்.

அவர்களில் ஒருவர் தம் பேச்சினிடையே எடுத்ததற் கெல்லாம், சரியாய்ப் போச்சா என்பார். அனைவரையும் சேர்த்துப் புகைப்படம் எடுக்க ஏற்பாடு செய்தார்கள். எல்லோரையும் வரிசைப்படுத்தியபின் படமெடுத்தவர் "சற்றே சிரித்தமுகமாக இருங்கள்" என்று கேட்டுக் கொண்டார். ஆனால் யாரிடமும் சிரிப்பு மலரவில்லை. படமெடுப்பவர் பல முறைகள் வேண்டினார். பயன் சிறிதும் இல்லை.

இவரோ, "இப்பொழுது நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்கிறீர்கள்?" என்றார்.

"எல்லோரும் சிரித்த முகமாக இருக்க வேண்டும்" என்றார் அவர்.

"சரியாய்ப் போச்சு" என்று இவர் சொன்னவுடன் அந்தச் சொற்களை உபயோகிக்கும் அன்பர் உட்பட் பலரும் குப்பென்று சிரித்தார்கள். படமெடுப்பவரும் தம் பணியை நிறைவேற்றிக்கொண்டார்.

இப்படி எவரையும் மகிழ வைக்கும் இவரது இனிமை யான பேச்சுக்கு ஆசைப்பட்டு ஐயரவர்களும் இவரை விட்டுப் பிரிய மனமில்லாமல் தவித்திருக்கிறார்.

பங்களூரில் இவருடைய முதல் சகோதரி தம் கணவருடன் வசித்து வந்தாள். மாப்பிள்ளை மூர்த்திக்கு உடல் சிறிது நலமில்லை எனக் கடிதம் வந்தது. அதைச் சொன்னால் ஐயரவர்கள் வருந்துவாரே என எண்ணித் தம் சகோதரியைப் பார்த்து வருவதற்குச்

சொல்லி இவர் தம் மனைவியுடன் பங்களூர் சென்றார். அப்போது ஐயரவர்கள் இவருக்கு எழுதிய கடிதங் களிலிருந்து ஆசான் இவரிடம் வைத்திருந்த அன்பின் பெருமை புலனாகும்:

உ தியாகராஜ விலாஸ்
சிவமயம் 17 - 6 - 1935

14-ம் தேதி அனுப்பிய கார்டு 16-ம் தேதி பன்னிரண்டு மணிக்குக் கிடைத்தது. நானும், அன்பர்களும் எல்லாம் தெரிந்துகொண்டோம். என்னுடைய கால் பிணி சிறிது குணமாகி வருகிறது. சி. அண்ணா சென்ற வெள்ளிக் கிழமை காலையில் குழந்தைகளுடன் சௌக்கியமாக வந்து சேர்ந்தார். துணைவியாருடன் நீர் பங்களூருக்குச் சென்றிருப்பதைத் தெரிவித்தேன். சரியென்று சொன்னார். உமக்கு வரும் கடிதங்களை அவ்விடம் அனுப்பும்படி சி. வித்துவான் கணபதி ஐயரிடம் சொன்னேன். அவரும் இதோ இருந்து வேலை பார்த்து வருகிறார். உம்முடைய ஞாபகத்தைக் குறிப்பிட்ட எல்லோருக்கும் தெரிவித்தேன். அவர்களும் தங்கள் நலன் பற்றி விசாரித்தார்கள்.

அச்சாபீஸ் வேலைகள் வழக்கம்போல் நடைபெற்று வருகின்றன. 'ஆற்றூர்ப் புராணம்' குறிப்புரையுடன் இன்று அடுக்கிவரக் கொடுக்கப்பட்டிருக்கிறது. 'பெருங்கதை'ப் பதங்கள் குறிக்கப்பட்டுச் சீட்டில் எழுதப்பெற்று வருகின்றன.

பங்களூரில் பார்க்கக் கூடிய இடங்களைப் பார்க்கக் கூடுமே? மகா...ஸ்ரீ சர்மா அவர்களைப் பார்த்து இருக்கக் கூடுமே? அங்கே பார்க்க வேண்டிய காட்சிகளைப் பார்த்து விட்டு இங்கு நீர் வரும் காலத்தை அன்பர் எதிர் பார்க்கிறார்கள். சி. சுப்பிரமணிய ஐயருக்கு 19-ஆம் தேதி முதல் பள்ளிக்கூட ஆரம்பம்.

இடைவிடாமல் உடனிருந்து இனிமையாகப் பேசிக் கொண்டிருந்த நீர் பிரிந்திருப்பது எனக்கு வருத்தமா யிருக்கிறதென்பதை நான் எழுத வேண்டியதில்லை.

அங்கே உம்முடைய மாப்பிள்ளை முதலியவர்களுக்கு என் ஞாபகம் சொல்ல விரும்புகிறேன். இக்காலம் அங்கே மிகவும் குளிர்ச்சியாக இருக்குமென்று எண்ணுகிறேன்.

அன்பன்,
வே. சாமிநாதன்.

அடுத்த கடிதம் 25—6—35-இல் எழுதப்பட்டது:
...இதற்கு முன் நீர் அனுப்பிய இரண்டாம் கடிதம் வந்தது.

வருகிற வெள்ளிக்கிழமை காலை நீர் வருவதாகச் செல்லமையர் சொன்னார். கேசரி பிரெஸ் வேலை ஏனையோர் பதிப்புகளால் விரைவாக நடைபெறவில்லை.

வெயில் சிறிது மட்டமாக இருந்தது. ஆனாலும் மனத்தாபம்மட்டும் அதிகரித்துக்கொண்டே வருகிறது.

கோவில்களுக்குச் சென்று தரிசனம் பண்ணி வந்ததாக எழுதிய கடிதத்தில் தன்மைப்பன்மை* கண்டு உண்மைப் பொருள் தெரிந்துகொண்டேன். சிர. முதலானவர்களுக்கு ஞாபகம் கூற வேண்டும். பிற நேரில் அல்லது பின்.

இங்ஙனம், அன்பன்:
வே. சாமிநாதன்.

**குடும்பக் கவலைக்கு நடுவே ஆராய்ச்சிப் பணி :**

இவர் சென்னைக்கு வந்த பிறகும் நிம்மதியாக இருக்க முடியவில்லை. மாப்பிள்ளையின் உடல்நிலை குறித்துச் சகோதரியிடமிருந்து, இவர் கவலைப்படும்படியாகவே கடிதங்கள் வந்தன.

இவருக்கோ சென்னை ஆராய்ச்சி மாணவர் இரண்டாண்டுக் காலக்கெடுமுடியச் சில மாதமே இருந்தன. இவர் தேர்வு எழுத வேண்டும்; காவியம்பற்றிய தம்

* மனைவியுடன் தாமும் சென்றதால், 'நாங்கள் போயிருந்தோம்' என அன்பர் கி.வா.ஜ. எழுதியிருப்பார்போலும்!

ஆராய்ச்சி நூலைச் சமர்ப்பித்தாக வேண்டும். எழுதவும், படிக்கவும் இவர் மனம் பொருந்தவில்லை. இவர் படுகிற மன உளைச்சலை இவருடைய நண்பர் செல்லமையர் உணர்ந்தார்.

இவரிடம் அவர் ஒரு நாள், "நீ போய் மாப் பிள்ளையையும் சகோதரியையும் இங்கே அழைத்து வந்து விடேன். அவருக்கு இங்கேயே வைத்தியம் செய்யலாம்" என்று சொன்னார். அந்த எண்ணம் இவருக்கும் இருந்தது.

சகோதரிக்கு அப்போது இரண்டு புதல்வர்கள் (குழந்தைகள்) இருந்தனர்; மனைவி, இந்த இரண்டு பிள்ளைகள் தவிர மாப்பிள்ளைக்குச் சொத்தோ உறவினரோ இல்லை. அவர்களைச் சென்னைக்கு அழைத்து வந்து வைத்துக்கொள்வது என்றால் மோகனூரில் இருக்கும் தம் பெற்றோர்களும் இவருடன் இங்கு இருந்தால்தான் சாத்தியமாகும். இவர்கள் யாவரையும் சென்னையில் வைத்துக்கொண்டு குடும்பம் நடத்தத் தம்முடைய சொற்ப வருமானத்தால் முடியுமா என்கிற மலைப்பு இவருக்கு இருந்தது.

நண்பர் செல்லமையர் உயர்நிலைப்பள்ளி ஒன்றில் வேலை பார்த்து வந்தார்; இவரைவிட அவருக்குச் சம்பளம் அதிகம்; அதோடு தாத்தா சொத்தும் வைத்திருந் தார்; இளமைமுதல் இவரது குடும்பத்தோடும் நெருங்கிப் பழகியவர். அதனால், "நீ செலவைப்பற்றிக் கவலைப் படாதே! பார்த்துகொள்ளலாம். ஐயரவர்களிடம் விஷயத்தைச் சொல்லிவிட்டு, பங்களூர் போய் அவர்களை அழைத்து வந்துவிடு" என வற்புறுத்தினார்.

இவர் இந்தக் கருத்தை ஐயரவர்களிடம் சொன்ன போது அவரும், "அதுதான் சரி" என்று இவருக்கு அறிவுரை கூறினார்.

இவர் பங்களூர் போய் அவர்களைச் சென்னைக்கு அழைத்து வந்தார். மோகனூரிலிருந்து தாய் தந்தை யரும் சென்னை வந்தார்கள்.

உடல்நலமில்லாத மாப்பிள்ளைக்கு இங்கே தீவிர மருத்துவச் சிகிச்சை அளித்தனர் என்றாலும், வந்த சில நாட்களுக்குள் அவர் காலமானார். இது இவருக்கு ஏற்பட்ட பெருந் துன்பமாகும்.

நிராதரவான தம் சகோதரியின் குடும்பப் பொறுப்பும் இவருடையதாயிற்று.

திருவல்லிக்கேணி, சுபத்திராள் தெருவில் கொஞ்சம் அதிக இடமுள்ள ஒரு வீட்டில் ஜாகையை மாற்றிக் கொண்டார். தம் தம்பியையும், மூத்த மருமானையும் இங்கே பள்ளிக்கூடத்தில் சேர்த்தார். தாய் தந்தையரும் இவருடன் தங்கினார்கள்.

இவ்வளவு இன்னல்களுக்குமிடையில் முகம் சுளிக்காமல் இவர் தம் வீட்டிற்கு வந்து பாடம் கேட்பதும், தாம் சொன்னபடி மகாவைத்தியநாதையரின் வரலாற்றை எழுதி வந்ததும் ஆசானுக்கு வியப்பை அளித்தன. தம் தாய் தந்தையரிடமும், சகோதரியிடமும் இவர் காட்டிய அன்பு, ஆசானது நெஞ்சை உருக்கியது.

"ஜகந்நாதனைப் பார்த்தீர்களா? அவனைப் பிள்ளையாகப் பெற அவன் பெற்றோர் தவம்தான் செய்திருக்க வேண்டும்" எனத் தம் குடும்பத்தாரிடம் சொல்லிச் சொல்லி மகிழ்ந்தார்.

சென்னைப் பல்கலைக் கழக ரெஜிஸ்திராருக்கு அனுப்பும் தமது அறிக்கையில், "இவர் என் வேலைகளையும் கவனித்துக்கொண்டு நல்ல முறையில் ஆராய்ச்சிப் பணியில் ஈடுபட்டு வருகிறார். இவரது ஆராய்ச்சி திருப்திகரமாக உள்ளது. இவரது ஆராய்ச்சி மாணவர் காலம் மேலும் ஓராண்டு நீடிக்கப் பெறலாம்" எனக் கடிதம் எழுதினார் ஐயரவர்கள்.

**ஆசானுடன் பல இடங்களுக்குச் செல்லுதல் :**

அதன்பேரில் 27—8—36 முதல் மேலும் ஓராண்டுக்கு இவரது ஆராய்ச்சி மாணவர் காலத்தைச் சென்னைப் பல்கலைக் கழகம் நீட்டித்துக் கொடுத்தது.

புதுக்கோட்டை மகாராஜா கல்லூரி விழாவுக்கு 17—9—36 - இல் தலைமை தாங்க ஐயரவர்கள் இசைந்தார். முன்கூட்டியே அதற்கு அவர் திருச்சி போய், புதுகோட்டை சென்றபோது இவரையும் உடன் அழைத்துச் சென்றார்.

கல்லூரித் தலைவராக அப்போது இருந்த அன்பர் தியாகராஜையரின் வீட்டில்தான் இவர்கள் தங்கினார்கள்.

தமிழ் தந்த பெருமானாகிய ஸ்ரீமத் ஐயர் ஏடு தேடும் யாத்திரையில் போகாத இடங்களே இல்லை எனலாம்.

ஒரு முறை குன்றக்குடி சென்றிருந்தார். அப்பாப் பிள்ளை என்பவர் அப்போது அந்த ஆதீனத்தில் கணக்க ராக இருந்தார். அவர் ஐயரவர்களிடம் ஒரு சுவடியைக் கொண்டுவந்து கொடுத்தார். 'சிலப்பதிகார'மும் 'மணி மேகலை' மூலமும் அதில் இருந்தது. திருத்தமான பிரதி களாக இருந்தன.

"இந்தச்சுவடி எங்கே கிடைத்தது?" என்றார் ஆசான்.

"இங்கே அருகில் முதலைப்பட்டி என்ற ஊரில் அழகிய சிற்றம்பலக் கவிராயர் வீடு இருக்கிறது, அங்கே நூற்றுக் கணக்கான ஏடுகள் உள்ளன. அங்கிருந்து எடுத்து வந்தேன்" என்றார் கணக்கர்.

அன்று பிற்பகலே குன்றக்குடி ஆதீனகர்த்தரின் உத்தரவு பெற்று அப்பாப் பிள்ளையுடன் ஐயரவர்கள், கவி ராயரின் வீட்டுக்குச் சென்றார். அதுமுதல் முதலைப்பட்டி யைக் கலைமகள் திருக்கோயில் கொண்டுள்ள தலம் என்றே அவர் குறிப்பிடுவார்.

புதுக்கோட்டைப் பக்கம் போகும் சந்தர்ப்பம் வாய்க்கும்போதெல்லாம் முதலைப்பட்டிக்கும் போய்க் கவிராயர் வீட்டைப் பார்த்துவிட்டு வருவது ஐயரவர்களின் வழக்கம்.

முதலைப்பட்டி என்று பேச்சு வழக்கில் வழங்கு கிறார்கள்; அதன் இயற்கையான பெயர் மிதிலைப்பட்டி. ஐயரவர்கள் மிதிலைபட்டி என்றே எழுதினார்.

மிதிலைப்பட்டியிலிருந்த கவிராயரின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் செவ்வூர், காரைச்சூரான்பட்டி முதலிய ஊர்களில் இருந்தார்கள். செவ்வூருக்கு ஆசான் போயிருக் கிறார்; காரைச்சூரான்பட்டி என்ற ஊருக்கு அவர் சென்றதில்லை.

"எனக்கோ தளர்ச்சி அதிகமாகிவிட்டது. சிற்றம் பலக் கவிராயர் குடும்பத்தின் ஒரு கிளை அந்த ஊரில் வாழ்ந்திருந்ததை அறிவேன். அங்கே சென்று பார்த்தால் சில நல்ல ஏடுகள் கிடைக்கலாம். நான் காரைச்சூரான் பட்டிப் புலவரின் வீட்டுக்குப் போனதில்லை. அது பெருங் குறையாகவே இருக்கிறது. மறுபடி இந்தப் பக்கம் வரும் சந்தர்ப்பம் எங்கே கிடைக்கப் போகிறது? இந்த முறை அங்கே போய் ஏடுகளைப் பார்த்து வர வேண்டும்" என்று இவரிடம் சொன்னார் ஆசான்.

"அங்கே போவதற்குப் பாட்டை வசதி இல்லை என்கிறார்களே?" என்றார் இவர்.

**எண்பத்திரண்டு வயதிலும் ஆசானின் துணிவு :**

"ஒற்றையடிப் பாதை இருந்தால் போதும்; நாம் நடந்தே போய் வரலாம்" என்றார் ஆசான். எண்பத்திரண்டு வயசுக் கிழவர் பேசும் வார்த்தையாக அது இருக்கவில்லை!

"இந்த வயசில் அந்தப் பட்டிக்காட்டுக்கு எப்படிப் போய் வருவது?" என்று, கூட இருந்த ஓர் அன்பரும் சொன்னார்.

"ஏன்? அங்கேயும் மக்கள் வாழ்கிறார்கள் இல்லையா? என்னைப் போன்ற கிழவர்களும் இருப்பார் களே! அவர்கள் யாரும் புதுக்கோட்டைக்கு வந்து போகிறதே இல்லையா?" என்றார் ஆசான்.

காரைச்சூரான்பட்டிக்குப் போவதென்று ஆசான் தீர்மானம் செய்துவிட்டபடியால், ரகுநாதையர் என்கிற அன்பர் கார் கொடுத்தார்.

ஒரு நாள் காலையில் புதுக்கோட்டையிலிருந்து இவர்கள் புறப்பட்டார்கள். அந்த ஊருக்குப் போவதற்குச் சரியான சாலை இல்லை. எப்படி எப்படியோ சுற்றிப் போனார்கள். கடைசியில் ஒரு பரந்த வெளியில் போய் நின்றது கார். அதற்குமேல் போகப் பாதையே இல்லை!

"என்ன செய்வது?" என்று டிரைவர் கேட்டார்.

"இதுவரையில் கொண்டு வந்து சேர்த்ததில் ஸந்தோஷம். இனிமேல் கால் இருக்கவே இருக்கிறது" எனச் சொன்ன ஸ்ரீமத் ஐயர் காரிலிருந்து இறங்கினார்.

"இந்தக் கிழவருக்கு என்ன மனோதைரியம்?" என்று டிரைவரும் வியந்திருக்க வேண்டும்.

"எங்கள் முதலாளியிடம் என்ன சொல்வது?" என்று டிரைவர் கேட்டார்.

"ஊருக்குப் பக்கத்தில் கொண்டுபோய் விட்டு வந்தேன் என்று சொல்லுங்கள்" என்று கூறிக்கொண்டே ஸ்ரீமத் ஐயர் நடக்கலானார்.

"திரும்பிப் போக வேண்டாமா?" என்றார் இவர்.

"பேசாமல் பின்னே வா. அதைப்பற்றி அந்த ஊருக்குப் போய் நம்முடைய காரியங்களை முடித்துக் கொண்டு யோசித்தால் போகிறது" என்று நிதானமாக விடையளித்தார் ஆசான்.

காரைச்சூரான்பட்டியை நோக்கி இரண்டு பேரும் நடக்கத் தொடங்கினார்கள். இரண்டு மூன்று மைல் வெறும் பொட்டல் காட்டில் ஒற்றையடிப் பாதையில் நடந்தார்கள். ஊர் வந்ததும் கவிராயரைப் போய்ப் பார்த்தார்கள்.

அவரும் வயசானவராகக் காணப்பட்டார். ஐயரவர்களின் சதாபிஷேகம் அந்த ஆண்டுக்கு முந்தி தான் நடை பெற்றது; எனவே, உடனே ஆசானை இன்னார் எனத்

தெரிந்துகொண்டு, "வரவேண்டும்" என மிகுந்த அன்போடு வரவேற்றார்.

"தங்களிடம் இருக்கும் ஏட்டுச் சுவடிகளைப் பார்க்க வந்திருக்கிறேன்" என்றார் ஆசான்.

"அதற்கென்ன, தாராளமாகப் பார்க்கலாம்; முதலில் நீராடி, உணவு அருந்திக் கொஞ்சம் இளைப்பாறுங்கள். பிறகு ஏட்டுச் சுவடிகளைப் பார்க்கலாம்" என்றார் கவிராயர்.

அப்போது மணி பதினொன்றுக்குமேல் ஆகிவிட்டது. காலையில் நீராட இவர்கள் புதுக்கோட்டையி லிருந்து புறப்பட்டுவிட்டார்கள் இல்லையா? ஐயரவர்கள் மிகவும் களைத்துப் போயிருந்தார்.

**கி.வா.ஜ, தம் ஆசானுக்குப் படைத்த உணவு:**

முன்பு இதுபோல் பழையகோட்டைக்குப் போயிருந்த போது ஆசானுக்குத் தம் கையினால் சமைத்து உணவு அளிக்கத் தக்க சந்தர்ப்பம் கிடைத்தும் தாம் அதை நழுவவிட்டது இவருக்கு அன்றுமுதல் ஒரு மனக் குறை யாகவே இருந்தது. அந்தக் குறையை இந்த முறை எப்படி யாவது போக்கிக்கொள்ள வேண்டுமென்று நினைத்தார்.

அதற்கேற்றாற் போல் கவிராயரும், "பண்டங்க ளெல்லாம் தருகிறேன். இந்தப் பிள்ளை சமையல் செய்து விடுவாரில்லையா? முதலில் நீங்கள் போய் நீராடிவிட்டு வந்துவிடுங்கள்" என்றார்.

கவிராயரின் வீட்டிலிருந்து அரைமைல் தூரம் சென்று கண்மாயில் (கண்வாயில்) ஆசானும் இவரும் நீராடி வந்தார்கள்.

வேப்ப மரம் ஒன்றின் நிழலில் கவிராயர் ஒரு கயிற்றுக் கட்டிலைக் கொண்டு வந்து போட்டார். வெயில், நடந்த அலுப்பு, பசி எல்லாம் சேர்ந்துகொண்டதால் ஐயரவர்கள் கட்டிலில் படுத்துக்கொண்டார்.

கவிராயரின் வீட்டுப் பெண்கள் அரிசி, பருப்பு, எண்ணெய், காய்கறி எல்லாம் கொண்டு வந்து தந்தனர்.

அங்கேயே இவர் அடுப்பை மூட்டினார். பனஞ்சிராயைக் கொண்டுதான் மூட்ட வேண்டியிருந்தது.

இவருக்குத் தம் ஆசான் பசியோடு இருக்கிறாரே என்கிற கவலை, ஒரு பக்கம்; அடுப்போ நன்றாக எரிய வில்லை. அடுப்புக்கு முன் குனிந்து ஊதினார். புகை கண்ணை அவித்தது.

''நானும் உதவிக்கு வரட்டுமா?'' என்று கேட்டார் ஆசான். கண்ணைக் கசக்கிக்கொண்டிருந்த இவருக்குச் சிரிப்புத்தான் வந்தது.

''எனக்குச் சமைக்கத் தெரியாதென்று நினைக் கிறீரோ?'' என்றார் ஆசான். இவர் என்ன பதில் சொல்வார்?

கவிராயரோ அடிக்கு ஒரு முறை உள்ளே இருந்தபடி, ''ஒன்றும் குறைவில்லாமல் நன்றாகச் சாப்பிட வேண்டும்'' என்று, குரல் கொடுத்துக்கொண்டிருந்தார்.

எப்படியோ இவர் ஒருவாறு சமையல் பண்ணி முடித்தார். இவரது மானத்தைக் காக்க நல்ல வேளையாக நெய்யும் தயிரும் இருந்தன.

மணி பன்னிரண்டுக்கு மேல் ஆகிவிட்டது. இலையைப் போட்டு ஐயரவர்களைச் சாப்பிட அழைத்தார்.

''இரண்டு பேரும் ஒன்றாகவே உட்காரலாமே?'' என்றார் ஆசான்.

''இல்லை, இல்லை'' என்று இவர் பரிமாறத் தொடங் கினார்.

இலையில் சாதத்தை எடுத்து வைத்தார். அது வெறும் களியாக இருந்தது!

ஆசானோ சிரித்துக்கொண்டே, ''குழைவாக இருக் கிறது, உன் மனசுபோல'' என்றார். யாரையும் உற்சாகப் படுத்திப் பேசுவதில் அவருக்கு நிகர் அவரே!

'' அவ்வைக்குச் சுட்டபழம் தந்தமைந்தன்
அவதரித்த தமிழ்நாட்டில் பிறந்தசெல்வன்
செவ்வையுடன் ஏடுகளைத் தேடும்போது
செகந்நாதன் சமைத்திட்ட குழைந்தசோறு

"பவ்வியமாய் உண்டு'தமிழ் இனிக்கு'தென்று
பலகாலும் சரிபார்த்து அரும்பதங்கள்
திவ்வியமாய் எழுதியவுடன் அச்சிலேற்றித்
திருப்பணிகள் செய்ததமிழ்த் தாத்தாவாழ்க"*

எனப் பாடல் பெற்ற நிகழ்ச்சியாக இதுவே அமைந்து விட்டது.

எப்படியோ அன்று இவர் குழைத்துவைத்த சோற்றையும், கொதிக்க வைத்த புளிச்சோற்றையும், "பேஷ்! நன்றாக இருக்கிறது" என்று சொல்லி ஐயரவர்கள் உண்டார். பிறகு இவரும் சாப்பிட்டார். எஞ்சியவற்றைக் கவிராயரின் வீட்டுப் பெண்கள் உள்ளே எடுத்துச் சென்றனர்.

உண்ட பின் ஆசான் சிறிது நேரம் துயின்றார். வந்த அலுப்பினால் தூங்கினாரேயன்றி வேறு சமயமாக இருந்தால் ஏட்டுச் சுவடிகளைப் பார்த்துவிட்டுத்தான் மறு காரியம் பார்ப்பார். தூங்கி எழுந்தபின் கவிராயர் சில ஏட்டுச் சுவடிகளைக் கொண்டு வந்து வைத்தார். கிடைத்தவற்றில் 'புறத்திரட்டு' ஒன்றும், 'புல்வயல் குமரேசர் பணவிடுதூது' ஒன்றும் விசேஷமானவை.

"வேறு சுவடிகள் இல்லையா?" என்றார் ஆசான்.

"பரணியில் ஏதேனும் ஒன்றிரண்டு இருக்கலாம். ஏறி எடுக்கத்தான் ஆளைத் தேடவேண்டும்" என்றார் கவிராயர், தயக்கத்துடன்.

"இதோ, இவர் சிறு பிள்ளைதானே! இவர் ஏறி எடுப்பார். இருக்கிற இடத்தை நீங்கள் காட்டுங்கள்" என்று இவரை அனுப்பினார் ஆசான்.

பரண்மீது இவர் ஏறிப் பார்த்தும் உருப்படியாக எந்த ஏடும் அங்குக் கிடைக்கவில்லை.

"சிறந்த புகழ் பெற்ற இந்தப் புலவரின் வீட்டுக்கு நான் அந்தக் காலத்திலேயே ஏடு தேடி வந்திருக்க வேண்டும்"

---

* டில்லித் தமிழ்ச்சங்க உ.வே. சாமிநாதையர் மலர்
—ஏ. டி. என். ராமசாமி

என்று ஆசான் கூறும்போது அவரது குரலில் ஏமாற்றம் தொனித்தது.

கவிராயரின் வீட்டுப் பெண்பிள்ளைகளோ இவரைப் பார்த்து, "ஏன் ஐயரே, உங்க சமையல் நல்லா இருக்கும் என்றல்லவா நாங்களும் சாப்பிடாமல் இருந்தோம், பெரிய ஐயா இதை எப்படிச் சாப்பிட்டாக?" எனக் கேலி செய்தார்கள்.

இவருக்கோ அடுத்த கணமே, புதுக்கோட்டை போனால் போதும் என்றாகிவிட்டது!

ஓர் இரட்டை மாட்டு வண்டியை அமர்த்திக்கொண்டு இவர்கள் புதுக்கோட்டை வந்து சேர்ந்தபோது பொழுது சாய்ந்துவிட்டது.

மறு நாள் காலை ஐயரவர்களைக் காண ரகுநாதையர் வந்தார். அவர் புதுகோட்டையில் நீதிபதியாக இருந்து ஓய்வு பெற்றவர். அவரது காரில்தான் ஐயரவர்கள் ஒரு நாள் ஆத்தங்குடி போயிருந்தார். அங்குள்ள சநாதன தர்ம சபை விழாவுக்குத் தலைமை தாங்கிப் பேசினார்; சநாதன தர்மம்பற்றி இவரையும் அங்கே பேசப் பணித்தார்.

ஒரு நாள் பலவான்குடி போயிருந்தார்கள். 'அம்மையப்பர்' என்பதுபற்றி இவரை அங்கே பேசச் சொன்னார் ஆசான். புதுக்கோட்டை மகாராஜா கல்லூரி விழாவிலும் ஐயரவர்கள் தாம் தலைமை தாங்கிப் பேசிய அன்று இவரையும் அங்கே பேச அழைத்தார். இது ஆசானின் வழக்கம்.

**ஆசானைப் போன்றதே இவரது பண்பும் :**

இந்த நல்ல முறையைப் பின்பற்றி இவரும் தாம் பிற்காலத்தில் மேற்கொண்ட தொடர் சொற்பொழிவுக் கூட்டங்களிடையே தம் மாணவர்களையும் பல இடங்களில் பேசச் சொல்லியிருக்கிறார். "இதனால், படித்து வரும் மாணவர்களுக்குத் தாம் கற்றதைப் பிறர்க்கு எடுத்துரைக்கும் திறன் வளரும்; அவர்களை

உலகமும் அறிந்துகொள்ள அதுவே வாய்ப்பாக அமையும்'' என்பார் இவர்.

x x x

புதுக்கோட்டையில் ஆசானுடன் தங்கியிருந்த சமயம். காலையிலேயே நீராடிவிட்டு ஐயரவர்கள் ஜபம் செய்து கொண்டிருந்தார்.

''குடுமியாமலை போய்த் தரிசனம் செய்துவிட்டு வரலாமா?'' என ரகுநாதையர் கேட்டார்.

''கரும்பு தின்னக் கூலியா? அவசியம் தரிசித்து வருவோம்'' என்றார் தமிழ்த் தாத்தா.

''அது தெரிந்துதானே கேட்கிறேன். தங்களை எங்காவது அழைத்துக்கொண்டு போகவேண்டுமென்றால் இரண்டு தந்திரங்கள் செய்யவேண்டும்; ஒன்று, 'இன்ன இடத்தில் தமிழ்ச் சுவடிகள் இருக்கின்றன; போய்ப் பார்க்கலாம்' என்றால் உடனே வந்துவிடுவீர்கள்; அல்லது, 'இன்ன ஸ்தலம் பழமையானது; வாருங்கள் பார்க்கலாம்' என்றாலும் வந்துவிடுவீர்கள்'' என்று ரகுநாதையர் சொன்னவுடன் ஏல்லோரும் சிரித்து விட்டனர்.

x x x

தமிழ் நாட்டிற்கு வரும் பிற நாட்டார் இங்குள்ள திருக்கோயில்களைக் கண்டு பிரமித்துப் போகிறார்கள். ஊருக்கு ஊர் கோயில்கள் இருக்கின்றன. சமயாசாரியர்களாகிய நால்வர் அவதாரம் செய்த தலங்கள், அவர்களுக்கு இறைவன் அருள் பாலித்த இடங்கள், அவர்கள் இறைவனோடு ஒன்றிய புண்ணிய பூமிகள் என்பதாகப் பதின்மூன்று தலங்களைப்பற்றி அன்பர் கி.வா.ஜ., பிற்காலத்தில் எழுதினார்.

வெறும் தல மாகாத்மியங்களாக இராமல் பயணக் கட்டுரைகளைப் போல அமைத்துத் தம்முடைய உணர்ச்சிகளையும் அவற்றில் இவர் வெளிப்படுத்தினார். இந்த

நூலுக்கு இவர் சூட்டிய பெயர், 'வாருங்கள் பார்க்கலாம்' என்பதுதான்.

குடுமியாமலையில் இரண்டு சந்நிதிகள் இருக்கின்றன. சிவபெருமானுக்குச் சிகாகிரீசர் என்பது திருநாமம். குடுமியார்மலை என்பதே குடுமியாமலை ஆயிற்று. பழைய பல்லவர்காலத்து இசைக் கல்வெட்டும் சிற்பமும் உள்ள திருக்கோயில் அது.

இவருடன் ஐயரவர்கள் இறைவனைத் தரிசனம் செய்துகொண்டு கோயில் சிற்பங்களையும், கல்வெட்டுக் களையும் கண்டு களித்தார். "இந்தப் பெருமானுக்கு சிகா கிரீசர் என்று ஏன் பெயர் வந்தது?" என்று அங்கிருந் தவரின் வாயைக் கிண்டினார்,

கோவிலைச் சேர்ந்தவர்கள் சொன்னார்கள்:

"கோவிலில் பூஜை செய்யும் ஆதிசைவர் ஒரு கணிகையிடம் நட்புப் பூண்டிருந்தார். ஒரு நாள் இறை வனுக்கு அணியும் மாலையை அவளுடைய வீட்டுக்கு எடுத்துச் சென்று சிறிது நேரம் அங்கே தங்கியிருந்தார். அப்போது அவள் அதைச் சூடிக்கொண்டு மறுபடியும் கழற்றிப் பூக் கூடையில் வைத்துவிட்டாள்.

"அர்ச்சகர் அதைக் கொண்டு வந்து இறைவனுக்குச் சாத்திவிட்டார். யாரோ ஒரு பெரிய மனிதர் அப்போது சுவாமி தரிசனத்திற்கு வந்திருந்தார். அவர் தமக்கு அளித்த பிரசாதத்தில் அந்தக் கேசம் இருப்பதைக் கண்டு திடுக்கிட்டார். 'என்ன குருக்களே, இந்தப் பிரசாதத்தில் தலைமுடி இருக்கிறதே!' என்றார். அர்ச்சகர் சிறிதும் தயங்காமல், 'ஆண்டவன் தலையில் குடுமி இருக்கிறது உங்களுக்குத் தெரியாதா?' என்றார்.

"அப்படியா? எங்கே மறுபடியும் கர்ப்பூர ஆரத்தி எடுங் கள்; நானும் அதைத் தரிசித்துக்கொள்கிறேன்" என்றார் வந்த பெரிய மனிதர். அர்ச்சகர் திரும்பவும் தீபாராதனை செய்தபோது இறைவனின் திருமுடியில் கேசம் இருப்பதை அங்கிருந்த பலரும் கண்டு வியந்தார்களாம். அதனால்

இறைவனுக்குச் சிகாநாதர் என்ற திருநாமம் வந்தது'' என்றார்கள்.

கணிகை, அர்ச்சகர் என்றெல்லாம் அவ்வூர்க்காரர் சொல்லி வரவே, ''இந்தக் கோவிலுக்கு என்று கணிகையர் இருக்கிறார்களா?'' என்று ஐயரவர்கள் கேட்டார்.

திருக்கோவிலில் கணிகையர் தொண்டு புரிந்து வந்ததைத் தடுக்கச் சட்டம் வராத காலம் அது. ஆகவே, சிவாசாரியார், ''இருக்கிறார்கள்'' என்றார்

''வயசானவர்களா? இளையவர்களா?''

சிவாசாரியார் சிரித்தபடியே, ''இளம் பெண்களும் இருக்கிறார்கள். முதியவர்களும் இருக்கிறார்கள்'' என்றார்.

''அப்படியா? நான் பார்க்கவேண்டுமே; முதியவர் யாரையேனும் வருவியுங்கள்'' என்றார். நம் ஆசான்.

அருகில் இருந்தவர்கள், 'ஏன் இவ்வாறு கேட்கிறார்?' என்று தெரியாமல் விழித்தார்கள்.

சிறிது நேரத்தில் ஒரு முதிய கணிகை வந்தாள். நாணிக் கோணிக்கொண்டு கம்பத்தின் ஓரமாக நின்றாள்.

ஐயரவர்கள் அந்த மாதைப் பார்த்து, ''நீ இந்தக் கோவிலில் எவ்வளவு காலமாகப் பணி செய்கிறாய்?'' என்று கேட்டார்.

ஏதோ பழைய செய்தியைப்பற்றித்தான் ஐயரவர்கள் கேட்கப் போகிறார் என்பதை அன்பர் கி.வா.ஜ. உணர்ந்து அவள் சொல்வதை எழுதிக்கொள்ளத் தயாரானார்.

''பரம்பரை பரம்பரையாக நாங்கள் இந்தக்கோவிலிலே தான் தொண்டு செய்து வருகிறோம்'' என்று அவளிடமிருந்து விடை வந்தது.

''நீ தட்டெடுப்பது உண்டா?''

''உண்டு.''

''உனக்கு இந்த ஊர் உலா வருமா?''

''அப்படி ஒன்றும் எனக்குத் தெரியாதே!''

''தெரியாவிட்டால் குற்றம் இல்லை. தட்டு எடுக்கும் போது பாட்டுப் பாடுவாயே; அதைச் சொல்'' என்று கேட்டார் நம் ஆசான்.

முதலில் மெல்லிய குரலில் பாடிய அந்த மாது பிறகு மிடுக்காகவே பாடினாள். அந்தத் தலத்தைக் குறித்து அவள் பாடிய பாடல்கள்பற்றிய குறிப்புகளை இவர் எழுதிக் கொண்டார்.

அவள் போகும்போது ஐயரவர்கள் அவளுக்குப் பணம் கொடுத்து அனுப்பி வைத்தார்.

''பல இடங்களில் சுவாமி பெயர், அம்மன் பெயர் தமிழில் தெரிவதில்லை. இவர்கள் பாடும் பாடல்களிலே தான் நல்ல தமிழ்ப் பெயர்களைத் தெரிந்துகொள்ள முடிகிறது. தேவார, தலபுராணப் பிரபந்தப் பாடல்களில் வரும் குறிப்புகளும் நுட்பங்களும் இவர்களுடைய வாய் மொழிப் பாடல்களால்தான் தெளிவாகின்றன. இங்கே வந்ததன் பயனாகச் சுவாமிதரிசனம் கிடைத்தது; பழம் பாட்டுக்கள் சில கிடைத்தன'' என்றார் ஐயரவர்கள்.

காரில் திரும்ப வருகையில் அத்தல இலைவனுக்குச் சிகாநாதர் என்ற திருநாமம் வந்ததுகுறித்துப் பேச்சு எழுந்தது.

உடனே ஐயரவர்கள், ''இந்த நாட்டில் ஒரேமாதிரிக் கதைகள் பல இடங்களில் இப்படியே வழங்குகின்றன. சவரிராஜப் பெருமாள் கோவிலிலும் இப்படி ஒரு கதை வழங்குகிறது. பழங்காலத்தில் மலையின் சிகரத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமானைக் குடுமித்தேவர் என்று வழங்குவது உண்டு. காளத்தி மலையின்மேல் உள்ள இறைவனைக் குடுமித்தேவர் என்று பொதுமக்கள் வழங்கினார்கள் என்பதைச் சேக்கிழாரின் பெரிய புராணத் தால் தெரிந்துகொள்கிறோம். அதுபோன்றே இதுவும் வந்திருக்க வேண்டும். குடுமி என்பது மலைச் சிகரத்துக்குப் பெயர்'' என்றார்.

அவரைத் தமக்கு வழிகாட்டும் பேராசிரியராகக் கொண்டிருந்த காரணத்தினால் அதே பழக்கம் இவரிடமும் இருந்தது.

சமயச் சொற்பொருளாற்றும்போதுகூட இவர் புராணக் கதைகளையும் அறிவுக்கண் கொண்டே அணுகுவார்.

**விசித்திரமான அநுபவங்கள் :**

ஒரு நாள் இவர், 'கலைமகள்' ஆபீசில் இருந்தபோது சிலபேர் வந்தார்கள். அதில் நடுநாயகமாக ஒருவர் இருந்தார். அவர் பெரிய மகான் என்றும், அவரைப் பற்றிப் பத்திரிகையில் எழுத வேண்டுமென்றும் வந்தவர்கள் சொன்னார்கள்.

இவர் சிறிது நேரம் அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தார். திடீரென்று அந்த மகான், "நான் இன்னார் என்று உனக்கு இன்னும் தெரியவில்லையா? முட்டாள்! நானேதான் ஈசுவரன், என்னை வணங்கி ஆசீர்வாதம் பெற்றுக்கொள்" என ஆவேசம் வந்தவர்போல ஆணையிட்டார்.

அவருடன் வந்தவர்கள் எல்லாம் பக்தி பரவசத்தோடு அவருடைய காலைத் தொட்டுக்கும்பிட்டுக் கொண்டனர். இவரோ அசையவில்லை. சிரித்துக்கொண்டே பர்ஸைத் திறந்து ஐந்து ரூபாய் எடுத்துக் கொடுத்தார். "இந்த மாதிரி விஷயங்களையெல்லாம் எங்கள் பத்திரிகையில் எழுதுவதில்லை. நீங்கள் போய் வாருங்கள்" எனச் சொல்லி அனுப்பினார்.

x x x

மற்றொரு சமயம் ஒரு வைஷ்ணவர் வந்தார்; "நான் தான் விஷ்ணு. உங்களுக்கு வேண்டிய வரம் தருகிறேன். இப்போது கேளுங்கள்; உடனே தருகிறேன்" என்றார்.

இவர் சிரித்துக்கொண்டே, "இப்போது எனக்கொரு நெல்லிக்காய் வேண்டும்" என்று கேட்டார்.

வந்தவரால் கொடுக்க முடியவில்லை. திருதிருவென விழித்தார்; "உங்களிடம் என் ஜம்பம் பலிக்குமா?" எனச் சொல்லிக்கொண்டு போய்விட்டார்!

இதுபோல் மற்றொரு நிகழ்ச்சி: பிற்காலத்தில் இவரிடம் மிகவும் அன்பு கொண்ட கணேசன் என்பவர் டாக்ஸியில் மோகன் என்கிற பையனை அழைத்து வந்தார். கூடச் சிலர் வந்திருந்தார்கள். அந்தப் பையனிடம் முருகன் அற்புதம் நிகழ்த்துவதாகச் சொன்னார்கள்.

கொஞ்சம் தியானம் செய்வதுபோல இருந்த அந்தப் பையன் திடீரென ஒரு லட்சுமி விக்கிரகத்தைக் கக்கினான்.

"பார்த்தீர்களா, இவரது பெருமையை? உங்களுக்கு லட்சுமியே வந்திருக்கிறாள். வாங்கிக்கொள்ளுங்கள்" என்று அவனுடன் வந்தவர்கள் சொன்னார்கள்.

இவருக்குக் கோபம் வந்துவிட்டது; "உங்கள் சுயலாபத்திற்கு இந்தப் பையனுடைய வாழ்வைக் குலைத்து விடாதீர்கள்" என்று அவர்களைக் கடிந்துகொண்டார். அவன் கக்கிய விக்கிரகத்தையும் எடுத்துப் போகும்படி சொன்னார். வண்டிச் சத்தமும் கொடுத்து அனுப்பினார். அன்று இவருக்கு இருபது ரூபாயாவது தண்டமாயிருக்கும்.

**மன நெகிழ்வு :**

இவர் எப்போதுமே நெகிழ்ந்த மனம் உடையவர். தாயில்லாப் பூனைக் குட்டி ஒன்று இவருடைய வீட்டில் இறந்துவிட்டது. இவர் அதைத் திருப்புகழ் ஓதித் தம் வீட்டுக்குமுன் அடக்கம் செய்தார்.

தம்மிடம் ஊழியம் செய்யும் கோவிந்தன் என்பவரின் தாயில்லாப் பெண்ணுக்குத் தாமும் தம் மனைவியும் மணையில் அமர்ந்து திருமணம் செய்து வைத்தார்.

இவருக்குக் கொஞ்சமும் பிடிக்காதது பொய். அதுவும் மதத்தின் பெயரால் தெரிந்தோ, தெரியாமலோ மக்களிடம் சில கொரக்களி வித்தைகளைக்காட்டி அச்சம்

உண்டாக்கி, தவறான எண்ணங்களைத் தூண்டுகிறவர்களிடம் இவர் நெருங்கினதில்லை.

**செப்பிடுவித்தையில் ஈடுபாடற்ற தன்மை :**

ஒரு நாள், நெருங்கிய நண்பர்கள் சிலர் இவரிடம் வந்தார்கள். கீழை நாடுகளுக்கெல்லாம் போய்ப் புகழுடன் சென்னை திரும்பிய சுவாமிகள் ஒருவருக்கு மயிலை ரசிக ரஞ்சனி சபாவில் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் இவரைப் பேச அழைத்தார்கள்.

"நான் அந்தச் சுவாமிகளை ஒரு முறைகூடப் பார்த்ததில்லை. வேறு யாரையேனும் அழையுங்கள்" என்றார் இவர்.

அந்தச் சுவாமிகள் செய்யும் சித்து விளையாட்டுகளை எல்லாம் எடுத்துச் சொல்லி, "அவரைப் பார்க்க நாங்கள் உங்களுக்கு ஏற்பாடு செய்கிறோம்" என்றார்கள் சிலர்.

சாதகராக இருக்கும் நிலை மாறிச் சாத்தியத்தை அடைந்த அநுபூதி மகான்களோடு இவர் நிறையப் பழகியிருக்கிறார்.

"இந்தச் சித்து விளையாட்டுக்களை நான் மதிப்பதில்லை. உள்ளே இருப்பதுதான் வரும். ராமகிருஷ்ண பரமஹம்ஸரும் இதைக் காலணா வித்தை என்றுதான் நகையாடியிருக்கிறார்" என்று எவ்வளவோ சொன்னார். வந்தவர்கள் இவரை விடுவதாக இல்லை.

அன்றைய தினம் மாலையே அந்தச் சுவாமிகளின் சீடர் ஒருவரது வீட்டுக்கு இவரை அழைத்துச் சென்றார்கள்.

அந்தச் சீடர் இவரிடம் தம் பூஜையில் இருந்த ஒரு வேலினை எடுத்துக் காட்டினார். "இது இறைவனே எனக்குத் தந்த வேல்; இது தங்க வேல்" என்றார்.

"இது தங்கந்தான் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று இவர் கேட்டார்.

"தட்டானை அழைத்து வந்து உறைத்துப் பார்த்தேன்" என அவர்சொன்னதும் இவருக்குக் கோபம் வந்து விட்டது; "இறைவன் கொடுத்த வேலையே உறைத்துப்

பார்க்க உங்களுக்கு நெஞ்சில் அவ்வளவு உரம் இருந்ததா?'' என்று கேட்டார்.

அந்தச் சீடரின் முகம் என்னவோபோல் மாறிவிட்டது. சமாளித்துக்கொண்டு, ''இங்கு வருகிறவர்கள் நான் சொல்வதெல்லாம் பலிக்கிறது என்கிறார்கள். நான் அழைக்கும்போதெல்லாம் எந்த எந்த ஊர் சாமியோ வருகிறது. இதுபற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?'' என்று கேட்டார்.

''சாமி வந்து ஆடுகிறது என்பதெல்லாம் ஆசாமி ஆடுகிற ஆட்டந்தான்.—இப்படியெல்லாம் சொல்லி உங்களால் என்னைப் பயமுறுத்த முடியாது. உங்கள் சாமியையே வரவழையுங்கள், கேட்கலாம்'' என்றார் இவர்.

அந்தச் சீடரும் பெரிய மணி ஒன்றை அடித்துக் கொண்டு, 'செங்கேழ் அடுத்த சினவடிவேலும்' என்ற பாடலைச் சொல்லிக்கொண்டு கர்ப்பூரம் கொளுத்தினார்.

அந்தக் கூட்டத்திலிருந்த ஒரு பையனின்மேல் சாமி வந்து ஆடியது. பையன் சென்னைக் கல்லூரி ஒன்றில் பி.எஸ்ஸி., இறுதி ஆண்டு வகுப்பில் படித்துக்கொண் டிருந்தான்.

பலரும் பயந்து மயிர்க் கூச்சிடும்படி வீலெனக் கத்தினான். எல்லோர் பார்வையும் அவன் பக்கம் திரும்பியது.

அவனுக்குக் கர்ப்பூரம் காட்டி, திருநீறு இட்டு, ''சுவாமி, நீர் யார்?'' என்று சீடர் கேட்டபோது, ''நான்தான் திருப்போரூர் முருகனடா'' என்று அந்தப் பையன் சொன்னான்.

''அவனிடம் நான் கேள்வி கேட்கட்டுமா?'' என்றார் இவர்.

''என்னைச் சோதிக்கிறாயா? கேள்வி கேளடா!'' என்றான் வாலிபன்.

"போரூர் ஆண்டவனே, உன்பேரில் சிதம்பர சுவாமிகள் பாடியிருக்கிறாரே, அந்தப் பக்தர் பாடிய பாடலொன்றைச் சொல்ல வேண்டும்" என்றார் இவர்.

திருப்போரூர்மாலையைப் படித்திருந்தாலாவது அவன் அதைச் சொல்லியிருக்கலாம். "நான் போகிறேனடா" எனச் சொல்லி அந்த வாலிபன் தொப்பெனக் கீழே உட்கார்ந்துவிட்டான். கூட்டத்தினர் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

"இதற்காகத்தான் நான் முன்பே சொன்னேன்; இப்படியெல்லாம் செய்து சாதாரண மக்களைப் பயமுறுத்தாதீர்கள். தன்னம்பிக்கையை அவர்கள் இழந்துவிடுவார்கள். முருகனின் நாமத்தைச் சொல்ல வேண்டும். அவனது திருவுருவை நினைந்து தியானம் செய்ய வேண்டும். தியானத்தினால் அகத்தூய்மை ஏற்படும். இன்ப துன்பங்களைத் தாங்கிக்கொள்ளும் மனப் பண்பு வளரும். இதுதான் மெய். இதைச் சாதிக்கும் பணியில் இனி மேலாகிலும் ஈடுபடுங்கள்" என்று ஒரு சிறிய சொற்பொழிவையே ஆற்றிவிட்டு வந்தார்.

இவருடைய நண்பர் பெரிய சுவாமிகளையும் பார்த்துவர இவரை அன்று இரவே அழைத்துச் சென்றார்.

ஓர் அறையில் கீழே விரிக்கப்பட்டிருந்த ஜமக்காளத்தில் இவர்கள் உட்கார்ந்தார்கள். சுவாமிகள் உட்கார அந்த அறையில் ஒரே ஒரு நாற்காலிதான் போடப்பட்டிருந்தது. அதில் சுவாமிகள் அமர்ந்திருந்தார்.

அவருடைய கை கால்களைச் சீடர்கள் பிடித்துவிடத் தொடங்கினார்கள்.

சுவாமிகள் தம்முடைய சித்து விளையாடல் எதையும் இவரிடம் செய்துகாட்டவில்லை. "இவன் கலைமகளில் நம்மைப்பற்றி எழுதியிருக்கிறானோ?" என்று தம் அருகில் இருந்தவரிடம் அவர் கேட்டது பலரது காதிலும் விழுந்தது.

"இவர் எம்.ஏ., படித்திருக்கிறார். தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாதையரிடம் படித்தவர்" என இவரது

பெருமையைச் சுவாமிகள் உணரவேண்டுமென்பதுபோல இவரை அழைத்துச் சென்றவர்கள் சொன்னார்கள்.

"சாமிநாதையன் நம்மிடம் வந்திருக்கிறானோ?" என அவரிடமே சுவாமிகள் கேட்டவுடன் சாமியாரது பொது அறிவு பலருக்கும் வெட்டவெளிச்சமாகியது!

"எங்கள் ஆசான் மகாபாக்கியசாலி. 1942-இலேயே காலமாகிவிட்டார். நான்தான் மகாபாவியாகத் தடுமாறிக்கொண்டிருக்கிறேன்!" என்று சொன்ன இவர், அப்புறம் அதிக நேரம் அங்கே தங்கவில்லை.

நண்பர்களின் வற்புறுத்தலின் பேரில், 4-12-1958-இல் நடைபெற்ற சுவாமிகளின் பாராட்டுக் கூட்டத்தில் இவர் கலந்துகொண்டு பேசினார்; என்றாலும், அன்றைய கூட்டத்தில், "அற்புதத்தைப் பாராட்டுவதைவிட அன்பையே சுவாமிகள் பாராட்ட வேண்டும்" என்பதையே மையமாகக் கொண்டு இவர் பேசினார்.

**'தமிழ்த் தென்றல்'விடம் பேரன்பு :**

நமது சமுதாயத்திற்குப் பலவகையிலும் தொண்டாற்றியுள்ள தமிழ்த் தென்றல் திரு. வி. கல்யாணசுந்தர முதலியாரை யாரும் எளிதில் மறந்துவிட முடியாது.

இணையாதவற்றை யெல்லாம் இணைத்தவர் திரு. வி. க; வேதாந்திகளின் தொடர்பு உடையவர். மேல்நாட்டுத் தத்துவ நூல்களின் கருத்தையெல்லாம் உணர்ந்தவர்; உலக சமய சாத்திரங்கள் அனைத்தையும் கற்றவர்.

மார்க்ஸீயத்தில் நல்ல பற்று உடையவர்; எனினும் காந்தியத்தில் ஊறியவர். ஒல்லியாய், குடுமியும், கதராடையும் துலங்க, நெற்றியில் திருநீறு நிலவ ஒரு வைதிகரைப் போல இருப்பார். அவரது உள்ளமோ சீர்திருத்தத்தை விரும்பியது. வேண்டியவர், வேண்டாதவர் என்று பார்க்காமல் யாவருக்கும் உதவிய வள்ளலாராகவே அவர் விளங்கினார்.

அவரிடம் இவருக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு. அவர் எழுதியுள்ள 'இளமை விருந்து', 'உள்ளொளி' போன்ற பல நூல்களைப் படித்து அவரைப் போலவே எழுத இவர் தமது ஆரம்பகாலத்தில் முயன்றது உண்டு.

ராயப்பேட்டை பாலசுப்பிரமணிய பக்தசபையின் ஆண்டு விழாக்களில் இவரும் கலந்துகொண்டு பேசியிருக்கிறார். "உங்கள் பேச்சு மிகமிக நன்றாக இருக்கிறது. இந்தக் காலத்துக்கு உங்களுடைய பேச்சுத்தான் மிகவும் இன்றியமையாதது. இப்படிக் கடவுள் உணர்ச்சியை மக்கள் உள்ளத்தில் வளர்க்கும் கூட்டங்கள் மூலைக்கு மூலை நிகழ வேண்டும். தெய்வபக்திப் பிரசாரந்தான் எங்கும் நடக்க வேண்டும். அதையும் உங்களைப் போல் நன்றாகப் படித்தவர்கள் செய்யவேண்டும்" என்று மனமாரப் பாராட்டியிருக்கிறார், திரு. வி. க.

"திருமுகாற்றுப்படையை வழிகாட்டி என்றவர் யார்? அறிமுகம் என்று உள்ளுறையை உணர்த்தினவர் யார்? விளக்கம் கூறிக் கூறி உரைகண்டவர் யார்?" எனத் திரு. வி. க., அவர்களே இவர் எழுதிய 'வழிகாட்டி' என்ற நூலுக்குச் சிறப்புரை வழங்கியுள்ளார்கள்.

**நச்சுக் காய்ச்சலில் படுத்தது :**

1964-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஒரு நாள் இவர் ஜுரத்துடன் வீட்டிற்கு வந்தார். உடம்புக்கு ஏதாவது வந்தால் இவர் மருந்து சாப்பிடுவது முன்பு வழக்கமில்லை; பிறர் சொல்லையும் கேட்கமாட்டார். ஜுரம் அடித்தாலும் பச்சைத் தண்ணீரை மொகந்து தலையில் விட்டுக்கொண்டு நீராடி, விபூதியைப் பூசித் திருப்புகழ் பாடுவார்.

இம்முறை இவரது இந்தத் துணிச்சல் பலிக்கவில்லை, சேர்ந்தாற்போல ஐந்தாறு நாட்கள் ஜுரம் போவதும், வருவதுமாகக் கண்ணாமூச்சியாடியது; விடவில்லை.

டாக்டர் வந்து 'டைஃபாய்டு' என்று கண்டுபிடித்து மருந்து கொடுத்தார். இவர் மெலிவுற்றுப் படுக்கையிலேயே இருந்தார். சதா முருகனுடைய தியானந்தான்,

யாழ்ப்பாணம் உருப்பராயில் இருக்கும் சிதம்பர சுப்பிரமணியப் பெருமானே இவர் நினைவில் இருந்தார். இலங்கைக்கு இவர் பலமுறை சென்றிருக்கிறார். அங்கே இவருக்குப் பல அன்பர்கள் உண்டு. திரு. செ. தனபாலசிங்கம் என்பவர், "எங்கள் சிதம்பர சுப்பிரமணியன்மேல் நீங்கள் நூறு பாடல்களேனும் எழுதி அளிக்க வேண்டும்" என்று அங்கே சென்றபோது இவரிடம் கேட்டிருந்தார். அந்த நினைவே இவருக்கு மேலோங்கி நின்றது.

நச்சுக் காய்ச்சலால் நலிவுற்றுச் சாத்துக்குடிச் சாறும், பார்லித் தண்ணீருமே அருந்திப் பாயலில் கிடந்த இவர் அப்போது பாடியதுதான், 'சிதம்பர சுப்பிரமணியன் புகழ்க் கதம்பம்.'

தந்தையாரின் மறைவுக்குப் பிறகு தாயார் இவருடன் தான் இருந்து வந்தார். 1946-இல் அவர் நோய்வாய்ப் பட்டார்.

இவருக்குத் தம் அன்னையாரிடத்தில் அளவற்ற பக்தியும் பாசமும் உண்டு. எனவே, வெளியில் அதிகம் போகாமல் அன்னையாரின் படுக்கையின் அருகிலேயே இருந்தார். அப்போதுதான் 'வழிகாட்டி' என்ற நூலை இவர் எழுதத் தொடங்கினார்.

**பண்புமிக்க பதிப்பாளருடன் பழக்கம் :**

'வழிகாட்டி'யை எழுதுவதற்கு இவருக்கு மிகவும் உற்சாகமூட்டியவர் மயிலை அல்லயன்ஸ் கம்பெனி உரிமையாளரான ஸ்ரீ வி. குப்புசாமி ஐயரவர்கள்.

அவர் நான்கு முழத் துண்டோடு சென்னைக்கு வந்தவர். தம்முடைய நற்பண்புகளாலும், அயரா உழைப்பினாலும் கொஞ்சங் கொஞ்சமாக முன்னேறித் தமிழ்ப் பிரசுகர்த்தர்களின் முன்னோடி எனப் புகழையும் பெற்றார். 1895-ஆம் ஆண்டில் ஸ்டேஷனரி சாமான் விற்கும் கம்பெனியைத் துவக்கியவர், தம்முடைய அல்லயன்ஸ் கம்பெனியின்மூலம் 1907-ஆம் ஆண்டி லிருந்து ஏராளமான தமிழ் நூல்களை வெளியிட்டுள்ளார்.

ராஜாஜி எழுதிய 'உபநிஷவப் பலகணி', 'கண்ணன் காட்டிய வழி' ஆகியவை அல்லயன்ஸ் பிரசுரமாகவே வெளிவந்துள்ளன. தமிழ் நாட்டுச் சிறுகதைகள் என்ற வரிசையில் ராஜாஜி, வ.வே.சு.ஐயர், த-நா. குமாரசாமி, கு ப.ரா. கி.வா.ஜ., போன்ற கதாசிரியர்களின் புத்தகங்ளைக் குப்புசாமி ஐயர் வெளியிட்டிருக்கிறார். பங்கிம்சந்திரர், டாகுர், சரத்சந்திரர், பிரேம்சந்த், காண்டேகர் போன்ற பல வங்காள, ஹிந்தி, மராட்டி எழுத்தாளர்களையும் தமிழில் அறிமுகம் செய்து வெற்றி கண்டிருக்கிறார்.

அக்காலத்தில் அவர் 'விவேக போதினி' என்ற சிறந்த தமிழ் மாதப் பத்திரிகை ஒன்றையும் நடத்தி வந்தார். அதில் தமிழ்த் தாத்தாவின் கட்டுரைகள் வெளியாகியிருக்கின்றன,

அல்லயன்ஸ் குப்புசாமி ஐயர் ஸ்ரீமத் ஐயரைப் பார்க்கத் 'தியாகராஜ விலாசம்' போகும்போதெல்லாம் இவரையும் சந்தித்திருக்கிறார்; ஐயரவர்களிடம் அவர் வைத்திருந்த மதிப்பும் அன்பும் இவரிடமும் உண்டு.

அல்லயன்ஸ் குப்புசாமி ஐயரின் வீடு மயிலையில் கபாலி கோவிலைப் பார்த்தாற்போல, மேற்கு மாடவீதியில் அமைந்துள்ளது, அதனால், "நான் கபாலிக்கு எதிரில் இருக்கிறேன். நான் பிரசுரிக்கும் புத்தகங்களில் எந்தத் தப்பும் ஏற்பட்டுவிடக்கூடாது" என அடிக்கடி அவரே சொல்லிக்கொண்டு, ஒரு முறைக்கு இருமுறை ப்ரூஃப் பார்ப்பாராம்.

'வழிகாட்டி' நூலை அன்பர் கி.வா.ஜ - எழுதியபோது ஒவ்வொரு நாளும் இவரது வீட்டிற்கு வந்து இவர் அன்றாடம் எழுதியிருக்கும்வரை வாங்கிப் போய் அச்சிடவும் தொடங்கினார், அல்லயன்ஸ் ஐயர். இப்படி தம் அன்பர், 'வழிகாட்டி'யை எழுதி வருகையில் இவருடைய தாயார் கடுமையான ஈளை நோயால் படுத்தபடுக்கையாகக்கிடந்தார். அருணகிரிநாதப் பெருமான் அருளியுள்ள 'திருப்புகழ்', 'கந்தர் அலங்காரம்'

ஆகிய பாடல்களை அவரருகில் உட்கார்ந்து இவர் பாடுவார். நோயினால் உண்டான துன்பம் கொஞ்சம் குறைந்தவுடன், "நீ எழுது, போ. நான் கொஞ்சம் தூங்குகிறேன்" என்பார் தாயார்.

1946 ஆகஸ்ட் 16-ஆம் தேதி இரவு தாயாரின் உடல் நிலை மோசமாயிற்று. இவரை அழைத்துப் பிராயச்சித்தம் செய்யச் சொன்னார். தாயார் தாமே எழுந்து உட்கார்ந்து அந்தணர்களுக்குத் தட்சிணை முதலியவை கொடுத்தார்.

மறு நாள் இரவு ஒரு மணிக்கு நினைவு தப்பியது. இவர் தம் அன்னையாரின் வாயில் கங்கை நீரை விட்டுக் கொண்டே, "முருகா, முருகா" என்று சொல்லிக் கதறலானார். அன்னையாரின் உடம்பு அப்படியே விறைத்துப் போய்விட்டது, மூச்சும் நின்றது. இவரோ அன்னையின் உடம்பில் திருநீற்றைப் பூசித் திருப்புகழ் பாடினார்.

இரண்டு நிமிஷம் அப்படியே இருந்த அன்னையாரின் உடம்பில் மீண்டும் உயிர் வந்துவிட்டது. மறுபடியும் கண்ணை விழித்துக்கொண்டார். மிக அற்புதமான நிகழ்ச்சி; திருப்புகழின் பெருமை என்றுதான் இவர் நினைத்தார்.

இவருடைய அன்னையார் அன்று பிழைத்துக் கொண்டார்.

அடுத்த ஒரு வாரம் இவருடைய அன்னையாரின் உடல் நிலை ஒருமாதிரி இருந்து வந்தது; என்றாலும், உடல் தேறவில்லை. ஆகஸ்ட் 23-ஆம் தேதி மாலை 7 மணி முதல் சுவாசம் வாங்கத் தொடங்கியது, ஆனால் நினைவு தப்பவில்லை. அன்னையார் மெல்லப் பேசினார்; திருப் புகழ் பாடினார்; இவர் முருகனுக்குத் தீபாராதனை செய்யும்போது தாமே கை குவித்துக்கொண்டார்.

மறு நாள் காலை. இவரும் இவருடன் குடித்தனம் இருந்த நண்பரும் குடித்தனக்கார நண்பரும் பேப்பரைப்

படித்துக்கொண்டும் பேசிக்கொண்டும் வெளித் திண்ணையில் உட்கார்ந்திருந்தார்கள்.

உள்ளேயிருந்து, "இங்கே வாருங்களேன். அம்மாவுக்கு என்னவோ போல் இருக்கிறது" எனக் கூப்பிடும் குரல் கேட்டது.

இவர் உள்ளே போவதற்குள் அன்னையாரின் கண், முருகனின் படத்தைப் பார்த்தபடியே நிலை குத்தியது. ஆவியும் பிரிந்துவிட்டது.

அன்றுமுதல் தம் தாயாரின் காரியங்கள் முடியும்வரை இவர் எங்கும் போகவில்லை. அன்னையைப் படுக்க வைத்திருந்த இடத்தில் தீபத்தை ஏற்றிவைத்துவிட்டு, 'வழிகாட்டி' நூலை எழுதி முடித்தார்.

செப்டம்பர் 6-ஆம் தேதி கிருகயக்ஞம். சம்ஸ்கிருத காலேஜின் தலைவராக இருந்த பாலசுப்பிரமணிய சாஸ்திரிகள் 'பார்வதி பஞ்சகம்' என்பதாக ஐந்து சுலோகங்கள் வாசித்து உபந்நியசித்தார். இரவு 2 மணி வரை அன்பர் ஐயராமன் முதலியோரின் திருப்புகழ் பஜனை நடைபெற்றது. அப்போது இவரும் ஒரு வெண்பா பாடினார்.

**"பேச்சடங்கு மட்டும் முருகன் பெயர்சொன்னாள்**
**முச்சடங்கு மட்டு(ம்)நெஞ்சில் முன்னினாள்-பூச்சடலம்**
**போக்கிஅவன்அடிக்கே புக்காள்என் அன்னைஅவட்(கு)**
**ஆக்கினன்இந் நூல்அர்ப் பணம்"**

எனத் தாம் எழுதி முடித்த 'வழிகாட்டி' நூலைத் தம் அருமை அன்னையாருக்கே சமர்ப்பணம் செய்தார்.

**மனத் திட்பம் :**

"ஸ்ரீமத் ஐயரிடம் எத்தனையோ பேர் படித்தார்கள். நீண்ட காலம் நிலையாயிருந்து அவரிடம் கல்வி பயின்று பதிப்பு முறைகளை முற்றும் தெரிந்துகொண்டவர் கி.வா.ஜ. இந்தப் பயிற்சிக்குப் பணிவு, ஊக்கம், இடைவிடா முயற்சி - ஏன், எல்லாவற்றுக்கும் மேலாகத் தம்மையே

இழந்துவிடும் மனவலிமை இத்தனையும் வேண்டும். இத்தகைய மனத் திட்பம் சிறப்பாக, நம் கி.வா.ஜ., அவர்களிடமே இருந்தது'' என இவருடைய நண்பர் ச. கு. கணபதி ஐயர் குறிப்பிட்டுள்ளார்.*

''எழுத அமர்ந்தால் கி.வா.ஜ - வின் மணிமணியான எழுத்து, தட்டுத் தடங்கலின்றி, அடித்தல் திருத்தமின்றி ராஜதானி எக்ஸ்பிரஸ் வேகத்தில் செல்லும்'' என இவரது எழுத்தாற்றலைப்பற்றிக் கா. ஸ்ரீ. ஸ்ரீநிவாசாசாரியார் சொல்வார்.

இதற்கான காரணங்களில் மிக முக்கியமானது ஒன்று உண்டு: இவர் தினமும் காலையில் எழுந்தவுடன் குறைந்தபட்சம் இரண்டு மணி நேரமாவது தியானம் செய்வார்: இந்தப் பழக்கத்தால் மனவொருமைப்பாடு இவரிடம் அதிகம் காணப்பட்டது. ஸ்ரீமத் ஐயரது 'குறுந்தொகை'ப் பதிப்பில் இவர் ஈடுபட்டு வந்தபோது அத்தகைய மனப்பாங்கு இவரிடம் காணப்பட்டது. ஏன், சென்னைப் பல்கலைக் கழக ஆராய்ச்சி மாணவராக இருந்த இவர், தாம் எழுதியாகவேண்டிய ஆராய்ச்சி நூல் 'காவியம்' பற்றிக்கூடத் துளியும் கவலைப்படவில்லை.

'குறுந்தொகை'யை பதிப்பிக்கச் சென்னைப் பல்கலைக் கழகத்தார் ஸ்ரீமத் ஐயருக்கு ஆயிரத்தைந்நூறு ரூபாய் பொருளுதவியில் ஐந்நூறு ரூபாயை முன்தொகையாகக் கொடுத்துவிட்டார்கள். இவ்வளவு ஆண்டுகளாக ஸ்ரீமத் ஐயர் பதிப்பித்து வந்த நூல்களுக்கு இதைப்போன்ற நிதி உதவி கிடைத்ததே இல்லை. தமிழ்ப் பாடப் புத்தக சபையின் தலைவராக அப்போது இருந்த டி.சிவராமசேதுப் பிள்ளை அவர்களின் முயற்சியினால்தான் ஸ்ரீமத் ஐயருக்கு இந்த உதவி கிடைத்தது.

ஸ்ரீமத் ஐயர் எப்போதோ 'குறுந்தொகை'யைப் பதிப்பித்திருக்க முடியும். 'சிந்தாமணி'யை முதன்முறை பதிப்பிக்கும்பொருட்டு அவர் ஆராய்ந்துகொண்டிருந்த

* வாழும் தமிழ், 1966.

போதே 'குறுந்தொகை'யைக் கண்டுகொண்டார். சங்க நூல்களைப்பற்றிய உண்மையே பலருக்கும் தெரியாமல் இருந்த காலம் அது. எனினும், 'குறுந்தொகை'யை நன்கு படித்தறிந்தார். நச்சினார்க்கினியரும், பேராசிரியரும் 'குறுந்தொகை'க்கு எழுதியிருந்த பழையவுரை கிடைக்காதபோதுங்கூட அவர் மனந் தளரவில்லை. தொகை நூல்களில் ஒரே புலவர் பாடிய செய்யுட்கள் பலவற்றையும் தாம் படித்தறிந்த அநுபவத்தால், 'குறுந்தொகை'ப் பாடல்களின் பொருள் அவருக்கு விளங்கியது. தாமே உரையெழுதி வெளியிடலாம் என ஸ்ரீமத் ஐயர் முன்பு முயன்ற சமயத்தில் எல்லாம் அவரது எண்ணம் ஈடேறக் கூடிய சூழ்நிலை அமையவில்லை.

தம் பிராய முதிர்ச்சியாலும், சரீரத் தளர்ச்சி முதலியவற்றாலும் முன்போல எந்தக் காரியத்தையும் தாம் கருதியபடி தனியே இருந்து நிறைவேற்ற இயலாமல் இருந்த காலத்தில், இவர் அவரிடம் போய்ச் சேர்ந்து அவருக்குப் புதுத் தெம்பை அளித்தாற்போல் இருந்தது.

அவரது கருத்திற்கிணங்க இவர் 'குறுந்தொகை'ப் பதிப்புப் பணியில் ஈடுபட்டார். ஐயரவர்கள் கருதி இருந்ததற்கும் மேலாகச் சிறப்பான பல புதுப் புது விஷயங்களும் அடங்கியதாகக் 'குறுந்தொகை'ப் பதிப்பு 12-8-37-இல் வெளியாயிற்று.

தமிழ் நாட்டில் கதாசிரியர்கள் பலர்; சிறந்த கட்டுரை எழுதுகிறவர்கள் சிலர்; தீவிர இலக்கிய விமர்சனம் செய்பவர் சிலர்; இலக்கணப் புலிகள் சிலர்; ஆனால் இவ்வளவு துறைகளிலும் வல்லவரான கி.வா.ஜ-வுக்கு நிகர் எவருமில்லை.

"ஐயரவர்களுடன் தமிழ் ஆராய்ச்சி செய்கிறவர்களில் கி.வா.ஜ-வையும் மிஞ்சியவர்கள் சிலர் உண்டு. அவர்கள் அந்த ஒரே துறையில் வல்லுநர்கள். அதனால், அவர்களில் எவரும் கி.வா.ஜ-வுக்குச் சமமாக விளங்கவில்லை" என்று புலமைமிக்க மொழியறிஞரான கா. ஸ்ரீ. ஸ்ரீ.,

குறிப்பிட்டுள்ளார். வேதத்தைப்பற்றி ஆராய்ந்து ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். அவர், பிறப்பால் வைணவர்; தமிழர். என்றாலும், எங்கெங்கே அறிவு உண்டோ அதை ஏற்றுக்கொள்பவர். சைவ சித்தாந்த நூலையும் மொழி பெயர்த்திருக்கிறார்; பௌத்த மத நூலையும் தமிழாக்கி யிருக்கிறார். பரந்த மனப்பான்மை உடையவர்; ஆனால் பிழையைக் கண்டால் பொறுமையை இழந்துவிடுவார்'' என அன்பர் கி.வா.ஜ.* கலைமகளில் 1973-இல் கா.ஸ்ரீ.ஸ்ரீ. ஓய்வு பெற்றபோது பாராட்டியிருக்கிறார்.*

தமிழிலிருந்து பிற மொழிகளுக்கும் பிறமொழி களிலிருந்து தமிழுக்கும் இலக்கிய இறக்குமதி ஏற்றுமதி வியாபாரத்தில் சிறந்து விளங்கியவர் கா.ஸ்ரீ.ஸ்ரீ. அவரைத் தம் நண்பராகப் பெற்றதில் இவருக்குப் பெருமிதம் உண்டு.

**காந்திதாத்தாவும் தமிழ்த் தாத்தாவும்**

'பாரதீய ஸாஹித்ய பரிஷத்' மகாநாடு ஒன்று, சென்னை ஹிந்திப் பிரசார சபையில் 1937-ஆம் ஆண்டு மார்ச் 27-ஆம் கூடியது. அதோடு அகில ஹிந்தி ஸாஹித்ய ஸம்மேளனமும் நிகழ்ந்தது. தேசபிதா மகாத்மா காந்தி அவர்கள் அம்மகாநாட்டிற்குத் தலைமை தாங்கினார். காந்திஜியுடன் காகா சாகேப் காலேல்கர் போன்ற பெரிய தலைவர்களும், பலமொழிப் புலவர்களும் விஜயம் செய்தனர்.

அம்மகாநாட்டிற்கு வரவேற்புக் குழு ஒன்றை அமைத்தார்கள். மகாத்மா காந்தி அடிகள் தலைமை தாங்கும் அம்மகாநாட்டில் அவருக்குத் தக்க வகையில் வரவேற்பளிக்க ஒரு தலைவர் வேண்டும்.

இந்திய இலக்கிய மகாநாடு அது. அரசியல் சம்பந்தம் இல்லாத இலக்கியப் பெரும்புலவர் ஒருவரையே வரவேற்புத் தலைவராக அமைக்க வேண்டுமென்று ராஜாஜி, 'கல்கி' போன்ற பலரும் கருதினார்கள். ஸ்ரீமத் ஐயரைத் தலை

*கலைமகள், மார்ச்' 73

வராக இருக்கும்படி கேட்டுக்கொள்வது என்று முடிவில் தீர்மானித்தார்கள்.

தட்சிண பாரத ஹிந்திப் பிரசார சபையின் செயலாளராக இருந்த ஹரிஹர சர்மாவும், 'கல்கி'யும் ஒரு நாள் ஸ்ரீமத் ஐயரைப் பார்க்கத் 'தியாகராஜ விலாசம்' வந்தார்கள். ஐயரவர்கள் 'குறுந்தொகை'ப் பதிப்பில் முழு மூச்சுடன் ஈடுபட்டிருந்த நேரம் அது.

'கல்கி' தாம் வந்த காரணத்தை ஸ்ரீமத் ஐயரிடம் தெரிவித்தார். அவர் இவரைத் திரும்பிப் பார்த்தார். இவர் காந்தியத்தில் மிக்க ஈடுபாடு உடையவர். எப்போதும் கதரையே உடுத்துவரும் இவரது முகத்தில் அப்போது பெருமகிழ்ச்சி காணப்பட்டது. மகாத்மா காந்தியை நேரில் தரிசனம் செய்துகொள்ள இவருக்கு இருந்த ஆர்வத்தை ஸ்ரீமத் ஐயர் உணர்ந்துகொண்டார்.

அவரிடம் 'கல்கி', "நீங்கள் தமிழ்த் தாத்தா; அவர் காந்தி தாத்தா. உங்கள் இரண்டு பேரையும் ஒரே மேடையில் பார்க்கும் பாக்கியத்தை எங்களுக்குத் தர வேண்டும்" என்றார்.

"மகாத்மா எங்கே, நான் எங்கே?" என்று ஸ்ரீமத் ஐயர் பணிவுடன் சொன்னார்.

"தமிழ் உலகத்தில் நீங்களும் சத்திய சோதனை செய்யும் மகாத்மா அல்லவா?" என்று 'கல்கி' கூறினார். ஸ்ரீமத் ஐயர் சிரித்துக்கொண்டே இசைவு தெரிவித்தார்.

தமிழின் பழமை, சங்க கால இலக்கியத்தின் பெருமை, இன்றும் வளர்ந்து வரும் தன்மை ஆகியவற்றைத் தமது வரவேற்புரைக் கருப்பொருளென ஸ்ரீமத் ஐயர் கூறினார். மகாத்மா காந்தியின் பெருமையைச் சொல்லி வரவேற்கும் வகையில் இவர் அந்தக் குறிப்புகளை வைத்துக்கொண்டு வரவேற்புரையை எழுதினார். தமிழிலுள்ள அந்த இனிய சொல்விருந்தை, வடநாட்டுக்காரர்களும் உணர்ந்து ரசிக்க வேண்டுமானால் அதன் அழகு குன்றாமல் ஹிந்தியில் மொழிபெயர்க்க வேண்டுமே!

ஒரு நாள், ஹரிஹர சர்மா, அன்பர் கா.ஸ்ரீ.ஸ்ரீ-யை அனுப்பி வைத்தார். அவருக்கு அப்போது வயது இருபத்து மூன்றுதான் இருக்கும். தட்சிண பாரத ஹிந்திப் பிரசார சபையில் வேலை பார்த்து வந்தார்; மிகவும் மெலிந்த உடலும், எளிய உடையும், அடக்கமான தோற்றமும் உடையவராக இருந்தார். ஸ்ரீமத் ஐயரை வணங்கிவிட்டு அவரது உரையை ஹிந்தியில் மொழிபெயர்க்கத் தம்மை அனுப்பியிருப்பதாக அவர் சொன்னார். அதிகம் பேச வில்லை.

ஸ்ரீமத் ஐயர் அவருடன் சிறிது நேரம் பேசினார். முடிவில் அன்பர் கி.வா.ஜ-வுடன் இருந்து தம்முடைய வரவேற்புரையை மொழிபெயர்க்கும்படி அவருக்குச் சொன்னார்.

பொதிய மலை போன்ற ஆஜாநுபாகுவான தமிழ்த் தெய்வம் ஸ்ரீமத் ஐயரது உருவத்துக்கு நேர் எதிராக அகத்திய முனிவரைப்போல் இருந்த இவரைப் பார்த்த போது, இவரிடம் கா.ஸ்ரீ.ஸ்ரீ-க்கு முதலில் மதிப்பு உண்டாகவில்லை; 'இவரது முகத்தில் புலவர்களுக்குரிய காம்பீரியமோ, பெருமிதமோ இல்லையே! இவரா பெரும்புலவர்?' எனத் திகைத்தார்.

இவர் அவரைத் தம் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு வந்தார். அப்போது திருவல்லிக்கேணி, சுபத்திரான் தெருவில் இவர் ஜாகை இருந்தார். அந்தச் சிறிய வீட்டில், இவருடைய தாய், தந்தை, மனைவி, தம்பி, தங்கையர் இருவர், மருமான்கள் இரண்டு பேர் இத்தனை பேரும் இருந்தனர்.

இவர் கா.ஸ்ரீ.ஸ்ரீ-யைத் தம் வீட்டிலேயே சாப்பிடச் சொன்னார்; அன்றைய பிற்பகலுக்குள் அவர் ஹிந்தி மொழிபெயர்ப்பை முடித்துவிடுவதற்கு உதவியாக இருந்தார். ஹரிஹர சர்மாவும் மறு நாளே அதை அச்சிட்டுவிட்டார்.

* * *

பாரதீய ஸாஹித்ய பரிஷத் மகாநாடு துவங்குவதற்குச் சற்று முன்னதாக ராஜாஜி ஸ்ரீமத் ஐயரை மகாத்மா காந்தியிடம் அழைத்துச் சென்றார்.

**'பிச்சைப் பாட்டு'ம் ராஜாஜியும்:**

ராஜாஜிக்கு எப்போதுமே ஸ்ரீமத் ஐயரிடம் தனி மதிப்பு உண்டு.

ராஜாஜியைப் பெரிதும் கவர்ந்தது கலைமகளில் ஐயரவர்களின் கட்டுரை ஒன்று; அது பிச்சைக்காரன் பாடிய ஒரு பாட்டுப் பற்றியது. சந்திரசேகர கவிராஜ பண்டிதர் என்பவருக்குச் சுவையான தமிழ்த் தனிப் பாடல்களில் விருப்பம் அதிகம். யார் எந்தப் பாடலை எங்கே சொன்னாலும் அதைப் பொறுமையோடு கேட்டு எழுதிக்கொள்வார். அவற்றையெல்லாம் ஒன்று சேர்த்துத் 'தனிப்பாடல் திரட்டு' என்ற நூலைப் பதிப்பித்தும் இருக்கிறார்.

சென்னை வண்ணாரப்பேட்டையிலே சந்திரசேகர கவிராஜ பண்டிதர் வசித்துக்கொண்டிருந்தார். இராப் பிச்சைக்காரன் ஒருவன் தினந்தோறும் வெண்ணிலாப் பாட்டு, தெம்மாங்கு, பராபரக்கண்ணி முதலியவற்றில் ஏதேனும் ஒன்றைச் சொல்லிக்கொண்டுதான் அவர் வசித்து வந்த தெரு வழியே பிச்சை வாங்கிப் போவான்.

ஒரு நாள் இரவு நிலா நன்றாகக் காய்ந்துகொண் டிருந்தது. "ஊரைச் சுடுமோ, உலகம் தன்னைச் சுடுமோ?" என்கிற பாட்டின் அடியைச் சொல்லிக்கொண்டு அந்தப் பிச்சைக்காரன் வந்தான்.

கவிராஜ பண்டிதர் மகிழ்ச்சியோடு துள்ளிக் குதித்தார் அவன் சொன்ன வரியை எழுதிக்கொண்டு மேலே என்ன சொல்லப் போகிறான் என்பதைக் கேட்க ஆவலுடன் இருந்தார்.

அவன் அந்த ஓரடியையே திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டே போனான். ஒரு தெரு முழுவதற்கும் அவனுக்கு அந்த ஒரு கண்ணியே போதுமானதாக

இருந்தது. கவிராஜ பண்டிதருக்கோ இருப்புக் கொள்ள வில்லை. அவனுக்குப் பின்னால் சென்றார்.

அவன் அடுத்த தெரு நோக்கித் திரும்புவதற்குள் அவனைக் கூப்பிட்டார். "உனக்கு இந்தப் பாட்டை யார் சொல்லிக் கொடுத்தது?" என்று கேட்டார்.

"ஒரு கிழவனார் சொல்லிக் கொடுத்தார்" என்றான் அந்தப் பிச்சைக்காரன். "எங்கே, அந்தப் பாட்டு முழுவதையும் சொல்லேன்" எனக் கவிராஜர் அவனை வேண்டினார். அவன் முதலில் சொன்ன அடியையே திரும்பச் சொன்னான். மேற்கொண்டு வரவில்லை.

"சாமி, என்னை விடுங்க! பாட்டு தானாக வந்தால் வரும்; நானாக நினைத்தால் வருவதில்லை" என அவன் அழமாட்டாக் குறையாகச் சொன்னான்.

"இன்று நீ மேற்கொண்டு எங்கும் போகவேண்டாம். உன் சாப்பாட்டிற்கு நான் வழி பண்ணுகிறேன். கொஞ்சம் நினைத்துப் பார்த்து, அந்தப் பாட்டு முழுவதையும் சொல்லேன்" எனக் கவிராஜர் அவனை வேண்டினார். அவன் சொன்ன பாடல் இதுதான்:

"ஊரைச் சுடுமோ உலகம் தனைச் சுடுமோ
ஆரைச் சுடுமோ அறியேனே—நேரே
பொருப்புவட்ட மானகில் பூங்கொடியீர் இந்த
நெருப்புவட்ட மான நிலா."

இந்தப் பாடலை வைத்துப் 'பிச்சைப் பாட்டு' என்ற தலைப்பில் ஸ்ரீமத் ஐயர் 'கலைமகளில் எழுதிய அக் கட்டுரையைப் படித்துவிட்டு, ராஜாஜி அவர்கள், ஆனந்தம் தாங்காமல், "என்ன ரசம், என்ன அழகான கதை!" என்பதாக ஸ்ரீமத் ஐயருக்கு ஒரு கடிதமே எழுதியிருந்தார். ஸ்ரீமத் ஐயரிடம் எப்போதுமே அவருக்கு ஒரு தனி மதிப்பு உண்டு.

x x x

பாரதீய ஸாஹித்ய பரிஷத்தின் மகாநாடு துவங்குவதற்குச் சற்று முன்னதாக ராஜாஜியே ஸ்ரீமத் ஐயரை மகாத்மா காந்தியிடம் அழைத்துச் சென்றார். ஸ்ரீமத் ஐயருடன் இவரும் சென்றார்.

"தமிழுக்காகப் பணியாற்றிவரும் பெரியவர்களில் முக்கியமானவர் கி.வா.ஜகந்நாதன் அவர்கள்" என்பதாக இவரைப் பிற்காலத்திலும் ராஜாஜி பாராட்டியிருக்கிறார்.*

முன்பு ஒரு சமயம் ஸ்ரீமத் ஐயர் ராஜாஜிக்கு இவரை முதன் முறையாக அறிமுகப்படுத்தி வைத்தபோது, "மிக நல்ல பையன். எனக்கு இவன் செய்துவரும் தொண்டு விலையற்ற தொண்டு" என்றாராம். அந்த நிகழ்ச்சியை ராஜாஜி மறக்கவில்லை.

அன்று ஸ்ரீமத் ஐயர் மகாதேவ தேசாயியைக் காட்டி, "இவர் யார்?" என்று கேட்டபோது, ஐயரிடம் இவரைக் காட்டி, "இவர் உங்களுக்கு எப்படியோ, அப்படி மகாத்மா காந்திக்கு இவர். இவர்தாம் மகாதேவ தேசாய்" என்று சிரித்துக்கொண்டே சொன்னாராம் ராஜாஜி.

ஸ்ரீமத் ஐயரின் முகம் மலர்ந்தது. திரும்பிப் பார்த்து, இவரது கையைப் பிடித்துக்கொண்டு மகாத்மா காந்தி அமர்ந்திருந்த இடத்திற்குச் சென்றார். அந்த ஒரு கணம் இவரது உடம்பெல்லாம் புல்லரித்தது. தம் ஆசிரியப் பிரானின் அருளால் தமக்குக் கிடைத்த பாக்கியத்தை நினைத்தவுடன் இவருடைய விழிகளில் கண்ணீர் முட்டியது.

மகாநாடு துவங்கியவுடன் ஸ்ரீமத் ஐயர் வாய்மொழியாகச் சிலவற்றைப் பேசிவிட்டு, "என்னுடைய வரவேற்புப் பிரசங்கத்தை இவர் படிப்பார்" என இவரை ஏவினார்.

இவர் அதை மிடுக்குடன் படித்தார். தமிழ் புரிந்தவர் அங்கங்கே கைதட்டினார்கள். ஹிந்தி மொழிபெயர்ப்பை ஹரிஹர சர்மா வாசித்தார். ஹிந்தி தெரிந்தவர்ளெல்

* கலைமகள்' ஏப்ரல் 1966

லோரும், "ஹாஹா" என்று தம் உவகையைப் புலப் படுத்தினர். மகாத்மாவும் மிக்க கவனமாகக் கேட்டு வந்தார். இடையிடையே புன்முறுவல் பூத்தார்.

**நல்ல மொழிபெயர்ப்புக்கு ஆசானின் நன்றி :**

வரவேற்புரை முடிந்தவுடன் ஸ்ரீமத் ஐயரிடம், "தங்கள் திருவடியின்கீழ் அமர்ந்து எனக்குத் தமிழ் படிக்க ஆசை எழுகிறது" என்றார் காந்தி.

"மகாத்மா காந்திக்கும் நூற்றுக்கணக்கான பிற மொழிப் புலவர்களுக்கும் உங்களால் எனது அறிமுகம் விளைந்தது" என ஸ்ரீமத் ஐயர், அன்பர் கா.ஸ்ரீ.ஸ்ரீ-யைப் பாராட்டினார்.

மூலச் சொற்பொழிவில் இருந்த உயிரும் மூச்சும் உருவமும் சுவையும் அந்த இளைஞரின் மொழிபெயர்ப் பிலும் அமைந்திருந்தமையால்தான் தமிழறியாதவர்களும் அநுபவிக்க முடிந்தது என்ற உண்மையை இவர் உணர்ந்து கொண்டார்.

இவர்தாம் யாரிடம் என்ன திறமை இருக்கிறதோ அதைக் கண்டு பாராட்டும் குணமுடையவராயிற்றே! அன்றுமுதல் கா.ஸ்ரீ.ஸ்ரீ-யை இவர் தம் நண்பராகப் பார்த் தார். அதுவரை தம் துணையாசிரியராகப் பணியாற்றி வந்த அன்பர் சேனாபதி, உடல்நலம் இல்லாமையால் விலக நேரவே, அன்பர் கா.ஸ்ரீ.ஸ்ரீயின் ஆற்றல் தமிழ் மக்களுக்குப் பயன்பட வேண்டி அவரைக் 'கலைமகள்' அலுவலகத்தில் இணைத்துக்கொண்டார். அவரது தமிழ்ப் பணியை ஊக்கினார்.

"கி.வா. ஜ-வைச் சந்திக்க நேர்ந்த அந்த வைகறையே என் வாழ்வின் சுப்ரபாதமாக அமைந்தது. அவருடைய அன்பும் எளிமையும் பரிவும் பணிவும் என்னை அவருக்கு அடிமையாக்கின. கி.வா.ஜ., என்னைத் தம் தம்பியாகவே ஏற்றார்" என்று கா.ஸ்ரீ.ஸ்ரீ-யும் குறிப்பிட்டுள்ளார்.

x x x

**'இதயம் பேசுகிறது' முதலாண்டு விழாவில் சிறப்புரை**

"உலகத்தில் இதயத்தினுடைய பேச்சை இரண்டுபேர் கேட்கிறார்கள். ஒருவர் மருத்துவர்; மற்றொருவர் எழுத்தாளர். "மருத்துவர் நாடி பிடித்துப் பார்க்கிறார்; குழாயைப் பயன்படுத்துகிறார். அவர் சொல்வதை அச்சத்துடன் கேட்கிறோம். ஆனால் ஓர் எழுத்தாளர் சொன்னால் ஆர்வத்துடன் கேட்கிறோம். எழுத்தாளர், பிறருடைய இதயம் பேசுகிறதைத் தெரிந்துகொண்டு அப்படி யாருடைய இதயம் பேசுகிறதோ அந்த இதயம் உள்ளவரும் ஒப்புக்கொள்ளும்படியாக - 'ஆம். அதுதான் என்னுடைய எண்ணம்' எனச் சொல்லும்படி எழுதுவார்" என்பதாக எழுத்தாளரையும் மருத்துவரையும் ஒப்பிட்டு அன்பர் கி.வா.ஜ., 1979-ஆம் ஆண்டு 'இதயம் பேசுகிறது' முதலாண்டு விழாவில் பேசினார்.

இவரது நினைவாக மருத்துவர்கள் பணிபுரியும் மாம்பலம் 'பப்ளிக் ஹெல்த் சென்டரின் பேரிலான 'ஜானகி - நாராயணன் டிரஸ்ட்மூலம் ஒரு ப்ளாக்கைக் கட்டி, 'அல்ட்ரா சவுண்ட் லாபை' இவருடைய அன்பர் என். எஸ். வி. மணி இயங்கச் செய்தார்.

**பேராசிரியர் ஞானசம்பந்தத்தின் பாராட்டு :**

பேராசிரியர் அ.சா. ஞானசம்பந்தம் 24—4—1989 அன்று அக்கட்டிடத்தில் இவரது படத்தைத் திறந்து வைத்தபோது இவருடைய பழைய இலக்கியப்பற்றுடன் புதுமையில் இவரது ஈடுபாட்டையும்பற்றிக் குறிப்பிட்டார்.

**நண்பர் கேட்ட கேள்விக்குக் கி.வா.ஜ-வின் பதில் :**

"கடவுளை நினைத்து வழிபடுகிறவர்களுக்கு வாழ்வின் துன்பங்கள்தாம் வருமா? அவர்கள்தாமே உலகில் அதிகமான வேதனைக்கு உள்ளாகிறார்கள்! இதற்குக் காரணம் என்ன?" என இவருடைய நண்பரான ப. சிங்காரம்

இவரிடம் ஒருமுறை கேட்டார்; இவரிடம் மிக நெருங்கிப் பழகியவர் அவர்.

"நீங்கள் இன்பம் என்பதை ஆண்டவனுடைய பிரசாதமாகக் கருதுகிறீர்களே; துன்பம் என்பதையும் அவனுடைய பிரசாதமாகக் கருதினால் இரண்டிலும் என்ன வேறுபாடு காண இயலும்? அழுக்குத் துணியை அணிந்திருக்கும்போது அதில் கொஞ்சம் காபி சிந்திவிட்டது என்றால், யாரும் கவலைப்படுவதில்லை. சலவைத் துணியில் சிறிது சிந்திவிட்டால் உடனே அதைக் கழுவ நீர்தேடி அலைகிறோம். இப்படித்தான் இறைவனும் மறு பிறப்பில்லாத அன்பரிடம் கொஞ்சம் அழுக்கு இருந்தால் தன்னுடைய பரம கருணையினால் துடைத்துவிடுகிறான். அதைப் போய்த் துன்பம் என்று நினைக்கிறீர்களே!" என்றார் இவர்.

"கையில் குடையுடன் மழை பெய்கிறதே என்பதற்தாக அஞ்சி எங்கும் ஒதுங்கி நிற்பதில்லை. அதுபோல் தெய்வ பக்தியுடையவர்களது வாழ்க்கைப் பயணமும், எதிர்ப்படும் இடர்களால் தடைப்படுவதில்லை" என அன்று பெருமிதத்துடன் இவர் குறிப்பிட்டார்.

x x x

அது என்னவோ உண்மைதான். பி. ஓ. எல். தேர்வுக்காகப் படித்துக்கொண்டிருந்தபோது இவருக்குப் பலவிதமான சோதனைகள் வந்தன.

தாய் தந்தையர், சகோதரியர், தம்பி என அனைவரும் இவருடன் இருந்து வந்ததால் ஒரு வகையில் மனநிம்மதி இருந்தது. அதே சமயம் ஒருவரது வருமானத்தைக் கொண்டு பலரும் ஜீவனம் செய்ய வேண்டிய நிலை இருந்ததால் குடும்பத்தில் பொருள் முட்டுப்பாடு அதிகமாக இருந்தது.

எனினும் இவர், "என்னைத் தாங்கும் முருகன் அவர்களையும் தாங்காமலா போவான்?" என எதனைப் பற்றியும் கவலை கொள்ளவில்லை.

**ஆசானின் பரிவு :**

இந்த நிலைமையில் இவர் சென்னையில் தம் சிறிய தங்கைக்கு ஒரு வரன் பார்த்தார். பிள்ளைவீட்டார் சைதாப்பேட்டையில் இருந்தார்கள். நல்ல குடும்பத்தைச் சேர்ந்த வரன் சீனிவாசன் என்பவர் (ராம்ராம் என்று பிற்காலத்தில் சொல்லிக்கொண்டேயிருந்தவர்).

ராமகிருஷ்ணா பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார் அவர். எல்லோருக்கும் அவரைப் பிடித்திருந்தது. முகூர்த்த நாள் குறித்தார்கள். அதே சமயம் சென்னைப் பல்கலைக் கழகத்திலிருந்து மேலும் ஓராண்டுக்கு இவரது ஆராய்ச்சி மாணவர் காலமும் நீட்டித்துக் கொடுக்கப்பட்டது. இவரும் தாய் தந்தையர் மகிழத் தம் மருமான் ராமுவுடன் கொஞ்சி விளையாடி மகிழ்ந்து வந்தார்.

தங்கைக்கு 12 - 5 - 37 அன்று திருமண முகூர்த்தம் வைத்திருந்தார். மாப்பிள்ளை அழைப்புக்கு முன் தினம் சின்ன மருமான் ராமுவுக்கு உடம்பு சரியில்லாமல் போயிற்று. நச்சுக் காய்ச்சலில் குழந்தை கண்ணைத் திறக்கவில்லை.

செல்லமையரும் இவரும் குழந்தையை ராயப்பேட்டை மருத்துவ மனைக்குத் தூக்கிச் சென்றார்கள். பயனில்லை. வீட்டில் கல்யாணம் நடக்க இருந்ததால் குழந்தையின் சவத்தைச் செல்லமையர் தம் தோளில் சுமந்து சென்று அடக்கம் செய்துவிட்டு வந்தார்.

அன்பர் கி வா. ஜ-வுக்குத் துயரம் தாங்க முடியவில்லை. எனினும் கடமை மறவாமல் மண ஏற்பாடுகளைக் கவனிப்பதில் ஈடுபட்டார். மனித குலப் பண்பாடுகளின் சிகரமாக விளங்கிய ஸ்ரீமத் ஐயர், அந்த நேரம் தம் தள்ளாமையைப் பொருட்படுத்தவில்லை; ''தனியாக அவன் என்ன செய்வான்?'' எனச் சொல்லிக்கொண்டு

இவருடைய தங்கையின் திருமணம் முடியும்வரை இவருடன் கூடவே இருந்து வந்தார்; பொருளுதவியும் செய்தார்.

x x x

**ஒரு சிறு சம்பவம் :**

திருமணத்திற்குப்பின் ஒரு நாள் காலை இவர் ஸ்ரீமத் ஐயரின் வீட்டில் படித்துக்கொண்டிருந்தார்.

அலுவலகம் போவதற்குமுன் அண்ணா அங்கு வந்தார். அவர் கையில் 'பதிற்றுப்பத்து' நூல் கட்டு இருந்தது. "இதைப் பதிப்பிக்க வேண்டும். குறிப்புகள் எழுது" என அதனை இவரிடம் கொடுத்தார்.

"பரீட்சை முடிந்தபின் எடுத்துக்கொள்கிறேனே" என இவர் சொன்னபோது, குடும்பக் கவலை காரணமாகவோ என்னவோ அண்ணா, சலிப்புடன் தம் கையிலிருந்த 'பதிற்றுப்பத்து'ப் புத்தகக் கட்டை அப்பால் போட்டு விட்டுப் போய்விட்டார்.

தரையில் கிடந்த 'பதிற்றுப்பத்து'க் கட்டை எடுத்துத் திரும்ப அடுக்கி வைத்துவிட்டுத் தம் ஜாகைக்கு வந்தார். கி.வா.ஜ. அன்று அலுவலகம் போகவில்லை.

பரீட்சைக்குப் படிக்கவும், தாம் எடுத்துக்கொண்ட 'காவியம்' பற்றிய ஆராய்ச்சி நூலை எழுதி முடிக்கவும் இவருக்குத் தனிமையும் நேரமும் தேவைப்பட்டன.

இதற்கிடையில் தம் தாய்தந்தையர் மோகனூர் போகத் துடித்துக்கொண்டிருந்த நினைப்பு வந்தது. இவருக்கும் காந்தமலையானை உடனே தரிசித்தாக வேண்டுமென்ற தாகம் எடுத்தது.

"இன்று நாம் எல்லோரும் மோகனூர் போகிறோம்" என்றார். வீட்டில் இருந்தவர்களுக்கு ஒரு பக்கம் மகிழ்ச்சி; மறு பக்கம் இந்தத் திடீர்ப் பயணத்துக்குக் காரணம் தெரியாத குழப்பம். ஏதாவது கேட்டால் பயணம் தடைப் பட்டுவிடப் போகிறதே என்று, யாரும் எதுவும் இவரிடம் கேட்கவில்லை. சாமான்களைக் கட்டலானார்கள்.

பிற்பகலில் ஸ்ரீமத் ஐயரிடம் போய்ச் சொல்லிக் கொண்டும் வந்தார்கள். இவருடன் கூட அன்றைய இரவே மோகனூர் கிளம்பினார்கள்.

மோகனூர் போவதற்குமுன் இவர் செய்ய வேண்டிய பணி ஒன்று இருந்தது: 'தினமணி' ஆண்டு மலருக்கு இவரை ஏதாவது எழுதித் தரும்படி கேட்டிருந்தார்கள். இவரும் ஒப்புக்கொண்டிருந்தார்.

இந்த அவசரத்தில் எதை எழுதுவது என யோசித்தார். துன்பத்தில் இவர்களை ஆழ்த்திவிட்டுச் சென்ற சின்ன மருமான் ராமுவே நினைவுக்கு வந்தான். அவனது கள்ளச் சிரிப்பே இவரது உள்ளத்தைத் துளைபோட்டது, இவருடைய உடம்பில் அவன் கை பட்டிருந்த இடமெல்லாம் சுட்ட புண்போல எரிச்சலெடுத்தது. இவருடைய காதில் அவன் பேசிய மழலை மொழி ஒலித்தது. சாந்தி பிறக்கவில்லை. இவற்றையே ஒரு கவிதையாக்கினார்:

'என்றும் இளமை' என்கிற தலைப்பில் இவர் அந்தக் கவிதையைத் 'தினமணி'க்கு அனுப்பி வைத்தார்.

"வெட்ட வெளியினில் தோன்றியழியும்
மின்னலைப் போலே ஒளிவிட்டு மறைந்தான்;
பொட்டை யமனுக்கொரு கருணையில்லையோ?
பூவா அரும்பை அந்தோ கிள்ளிவிட்டான்!"

என இவர் எழுதிய அந்தக் கவிதை குழந்தை ராமுவின் நினைவாக, உள்ளவாறே அமைந்த கற்பனையே எனினும் அதிலும் கலைத் தன்மை இருக்கத்தான் செய்கிறது,

அன்றைய தினம் இரவு அண்ணா தம் அலுவலகத்தி லிருந்து வரும்போதே நேரமாகிவிட்டது. கணபதி ஐயர் மட்டும் இருந்தார். இவரைக் காணவில்லை. தம் தாய் தந்தையர்களை அழைத்துக்கொண்டு இவர் மோகனூர் போயிருப்பதாகக் கணபதி ஐயர் சொன்னார்.

"என்னிடம் ஒன்றும் சொல்லவில்லையே என்றார்?" அண்ணா.

"எங்களுக்கும் தெரியாது. ஸ்ரீமத் ஐயரிடம் வந்து சொல்லிக்கொண்டு போனாராம்."

"கலைமகள் ஆபீஸ் வேலை?"

"மாத இதழ்தானே! இரண்டு மூன்று இதழ்களுக்கு வேண்டிய கதை கட்டுரைகளைத் தேர்ந்தெடுத்துக் கொடுத்திருக்கலாம். கவனிக்க, சேனாபதி இருக்கிறார்" என்றார் கணபதி ஐயர்.

"நம்முடன் நெருங்கிப் பழகிக்கொண்டிருப்பவர் ஏதோ ஒரு நாள் எந்தக் காரணத்தினாலோ நம்மிடம் கோபம் கொள்ளலாம் அதனால் நமக்கும் கோபம் வரலாம். அப்படி வராமலிருக்க அந்தச் சமயம் நாம் என்ன செய்ய வேண்டும்?

"அவர் நமக்குச் செய்திருக்கும் உபகாரங்களை முதலில் நினைந்து பார்க்க வேண்டும். எதிர்காலத்திலும் நாம் அவரது உதவியை நாடிப் போக வேண்டிய சந்தர்ப்பம் வந்தால் என்ன செய்வது எனச் சிந்திக்க வேண்டும். அப்படிச் செய்தால் அந்தச் சமயம் நமக்குக் கோபமே வராது." —இப்படிக் காஞ்சிப் பெரியவர் உபதேசம் செய்வார். அந்தத் தவமுனிவரோடும், ஸ்ரீமத் ஐயரோடும் பழகிப் பேசும் நிலைக்கு உயர்ந்திருந்த இவர், அண்ணா சலித்துக்கொண்டதற்காக அதை மனசில் வைத்துக் கொள்ளவில்லை.

மோகனூர் போய்ச் சேர்ந்த அன்றே அண்ணாவுக்குக் கடிதம் எழுதினார்; 'பெற்றோர் மோகனூர் போக வேண்டுமென்றதால் தங்களிடம் முன்கூட்டிச் சொல்லிக் கொள்ள முடியவில்லை. தாங்கள் ஆபீசிலிருந்து வந்தபின் சொல்லிக்கொண்டு வருவதென்றால் ரெயிலுக்கு நேரமாகி விடும். எனவே, ஸ்ரீமத் ஐயரவர்களிடம்மட்டும் சொல்லிக்கொண்டு தங்களிடம் சொல்லாமல் வரும்படி நேர்ந்ததற்கு மன்னிக்கவேண்டும். நாங்கள் சௌகரியமாக வந்து சேர்ந்த விவரத்தை ஸ்ரீமத் ஐயரவர்களுக்குத் தெரிவிக்கவேண்டுகிறேன்."

பொதுவாக, இவர் சதா முருகனின் நாமத்தை மனத்திற்குள் ஜபித்துக்கொண்டிருப்பார். ஆதலால் மற்ற

வர்களின் செயல்கள் இவரது உள்ளத்தை வெகுவாகப் பாதித்ததில்லை. யாரிடத்தும் எவ்விடத்தும் இவர் நல்லதையே பார்க்கப் பழகியிருந்தார்.

**சென்னைக் கம்பர் கழகத் தொடக்கம் :**

சென்னையில் 'கம்பன் கழகம்' தொடங்கியதிலிருந்து இவர் அதன் உறுப்பினராக இருந்திருக்கிறார்.

கம்பன் விழாவில் பட்டி மண்டபம் என்றால் அதற்கு நடுவராகப் பெரும்பாலும் நீதிபதி மு. மு. இஸ்மாயீல் தாம் இருப்பார்.

ஓராண்டு கம்பன் விழாவில் நடக்கவிருந்த பட்டி மண்டபத்திற்கு நீதிபதி மு. மு. இஸ்மாயீலை நடுவராக இருக்க ஏற்பாடு செய்திருந்தார்கள். கடைசி நேரத்தில் உடல்நிலை சரியில்லாததால் அவரால் வர முடியாது போயிற்று.

அந்த நிலையில் இவர் ஒருவரே அன்றைய பட்டி மண்டபத்துக்கு நடுவராக இருக்க முடியும் என்பதைக் கம்பன் கழக நிர்வாகிகள் உணர்ந்து, இவரை நடுவராக இருக்க வேண்டினார்கள். உடனே இவரும் இசைந்தார்.

கம்ப ராமாயணத்தில், போர் தொடங்குவதற்கு முன் ராவணனிடத்துத் தூது ஒன்று அனுப்ப வேண்டுமென்று ராமன் கூறுகிறான். அநுமனை அனுப்பலாம் என்கிறார்கள். திரும்பவும் அநுமனையே அனுப்பினால் அவனைத் தவிர ராவணனிடம் சென்று மீளக் கூடிய வீரர் நம்மிடம் வேறு யாருமில்லை என்று எதிரிகள் நினைத்து விடக் கூடும் என்ற காரணத்தினால், ராமன் அங்கதனை அனுப்புகிறான்.

"மாருதி அல்லன் ஆகின், நீ எனும் மாற்றம் பெற்றேன், யார் இனி என்னோடு ஒப்பார்?" என்பதாக அங்கதன் இன்பமுற்றான் எனக் கம்பர் பாடியிருக்கிறார்.

அன்று இவர் பட்டி மண்டப நடுவரிடத்தில் அமர்ந்து இந்தப் பாடலைச் சொல்லி, நீதிபதி இஸ்மாயீல் நடுவராக

இருக்க முடியாத நிலையில் தமக்கு அந்த வாய்ப்புக் கிடைத்தது பெருமையளிப்பதாகக் கூறினார்.

இந்த நிகழ்ச்சியை, பின்பு நினைவுபடுத்திய நீதிபதி மு. மு. இஸ்மாயீல் "கி.வா.ஜ., தம் முன்னுரையில் சொன்னது அவருடைய பெருமையையும் பெருந் தன்மையையும் ஒளிவீசிக் காட்டும். இது ஒன்றிலிருந்தே அவருடைய பல பெருமைகளைத் தெரிந்துகொள்கிறோம். ஒன்று, அவருடைய எளிமை. இலக்கியப் பயிற்சியிலும், நினைவாற்றலிலும் நான் எங்கே? அவர் எங்கே? எனினும் நான் இல்லாத இடத்தில் தாம் இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டதும் அதற்கு இசைந்தார்; இரண்டாவது, நடப்பதோ கம்பன் விழா; அவர் கம்பனிலிருந்தே இந்தப் பாடலை எடுத்துக் காட்டியதாகும். இது அவரது இலக்கியப் பயிற்சியோடு, பேச்சுத் திறனையும், தக்க சமயத்தில் பொருத்தமானதை எடுத்துக் காட்டும் தனித் தன்மையையும் ஒருங்கே தெளிவாக்குகிறது" என எழுதினார்.*

நீதிபதி மு. மு. இஸ்மாயீல் தம் மாணவப் பருவத்திலிருந்து சுமார் நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக இவருடன் பழகியவர்; இவரிடம் பெரிதும் ஈடுபாடு கொண்டவர்.

x x x

மோகனூர் போய்ச் சேர்ந்த இரண்டொரு நாட்களுக்குள் தாமே தன் நண்பர்கள் அனைவரையும் சென்று பார்த்து வந்தார்.

அப்புறம் எங்கும் போகவில்லை. தினமும் காவேரியில் நீராடுவது, காந்தமலையானைச் சென்று தரிசித்து வருவது, மற்ற நேரங்களில் தாம் எடுத்துச் சென்ற புத்தகங்களைப் படிப்பதும், சேகரித்து வைத்திருந்த குறிப்புகளைக் கொண்டு 'காவியம்' பற்றிய கட்டுரைகளை எழுதுவது மாகவே மோகனூரில் இருந்தபடி பொழுதைக் கழித்தார்.

---

* 'கலைமகள்' நவம்பர் 1988.

**ஆராய்ச்சி நூல் முற்றுப்பெறுதல் :**

சென்னைப் பல்கலைக் கழக ஆராய்ச்சி மாணவராக இருந்த இவரது வேலையைக் கவனிக்கும் பொறுப்பு ஸ்ரீமத் ஐயருக்கு இருந்தது. அண்ணாவுக்கும் இவர் இல்லாதலால் 'பரூஃப்' பொறுப்புகளை முற்றும் ஏற்றுக் கவனிக்க இயலவில்லை. அவரும் முதியவர்தாமே? மோகனூர் போய் இவரைத் தம்முடன் அழைத்து வந்துவிட வேண்டும் என்று நினைத்தார். அந்தச் சமயம் நாகப்பட்டினம் போக வேண்டியிருந்ததால் போய்விட்டு அப்படியே திருச்சி சென்று மோகனூர்போய்வரத் திட்டமிட்டார். இவருக்கும் கடிதம் எழுதினார். திருச்சியில் தாம் இன்ன தேதி, இன்னார் வீட்டில் இருக்கக் கூடும் என்று எழுதினார்.

அண்ணாவின் கடிதம் பார்த்தவுடன் இவர் உடனே திருச்சிக்குச் சென்று அண்ணாவைப் பார்த்தார்.

ஸ்ரீமத் ஐயரது கவலையை உணர்ந்து இவர் அவருக்கும் உடனே கடிதம் எழுதினார். அப்போது ஸ்ரீமத் ஐயர் இவருக்கு எழுதிய கடிதத்தில் 'காவியம்' பற்றிய ஆராய்ச்சி நூலை விரைவில் முடித்துத் தருமாறு கேட்டிருந்தார்.

அடுத்த ஒரு வாரத்திற்குள் தம் ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதி முடித்தவுடன், இவர் தன் மனைவியையும், சகோதரியையும்மட்டும் அழைத்துக்கொண்டு சென்னை வந்து சேர்ந்தார்.

இவர் எழுதிக் கொண்டுவந்திருந்த காவியம்பற்றிய கட்டுரைகளை முழுக்கப் படிக்கச் சொல்லிக் கேட்டு ஸ்ரீமத் ஐயர் மகிழ்ந்தார்.

தமிழிலுள்ள காப்பிய இலக்கிய நூல்களை மட்டுமின்றி வடமொழி அலங்கார சாஸ்திரங்களிலும், ஆங்கில நூல்களிலுமுள்ள அருமையான விவரங்களை இவர் தம் நூலில் ஆங்காங்கு ஒப்புமையாகக் காட்டியிருந்ததைச் சுட்டிக் காட்டி, ஸ்ரீமத் ஐயர் எழுதிய தம் முகவுரையில் "இந்தப் புத்தகத்தைப் படித்துப் பார்த்தால் ஜகந்நாதையருடைய பலதிறப்பட்ட பேராற்றலும், நூலாராய்ச்சி

வன்மையும், வடமொழி, தமிழ் இலக்கண-இலக்கிய நூல்களில் இவருக்குள்ள பரந்த ஞானமும் ஞாபக சக்தியும் நன்கு புலனாகும்'' எனக் குறிப்பிட்டார்.

இவர் பி.ஓ.எல்., தேர்விலும் நன்கு தேறினார். பின்னால் சென்னைப் பல்கலைக் கழகத்தினர் இதுபோல் பி.ஓ.எல்., தேர்வில் தேறியவர்களுக்கு, பி.ஓ.எல்., (ஆனர்ஸ்) என்பதாக எம்.ஏ., பட்டத்தையும் வழங்கினார்கள்.

விரைவிலேயே இவரது 'காவியம்' பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரை நூல் சென்னைப் பல்கலைக் கழக வெளியீடாக வந்தது.

**திருப்பனந்தாள் சுவாமிகளின் அவா :**

திருப்பனந்தாள் காசிமடத் தலைவராக 10-ஆம் பட்டத்தில் நிரம்பிய புலமை உடைய ஸ்ரீ காசிவாசி சாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் இருந்தார். குமரகுருபரருடைய பிரபந்தத் திரட்டை முன்பே அவர் அச்சிட்டிருந்தார்.

முன்பு தாம் பிறந்த குலத்துப் பெரியாராகிய சிவக்கொழுந்து தேசிகரின் பிரபந்தங்களை ஸ்ரீமத் ஐயரைக் கொண்டு குறிப்புரையுடன் பதிப்பித்து உதவிய அவருக்கு மற்றுமோர் ஆசை எழுந்தது.

தாம் புகுந்த இடத்துப் பெரியாராகிய ஸ்ரீகுமரகுருபர சுவாமிகளுடைய பிரபந்தங்களையும் ஸ்ரீமத் ஐயரைக் கொண்டே குறிப்புரைகளுடன் பதிப்பித்து வெளியிட நினைத்தார்; ஸ்ரீமத் ஐயரிடமும் விண்ணப்பித்துக் கொண்டார்:

x x x

ஐந்து வயதுவரை பேசாமல் இருந்து பின்பு செந்திலாண்டவன் அருளால் கவித்துவம் பெற்றவர் குமர குருபரசுவாமிகள். ஸ்ரீமத் ஐயருக்கு இளமைமுதலே

ஸ்ரீ குமரகுருபர முனிவர்வாக்கில் மிகுதியான ஈடுபாடு இருந்து வந்தது.

கவிஞர் கோமான் பிள்ளையவர்களிடம் வந்து சேர்ந்த பின்பும் ஐயரவர்கள் தினம் தவறாமல் குமரகுருபரின் 'முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழைப் பாராயணம் செய்து வந்ததை நிறுத்தவில்லை. பிள்ளையவர்களுக்கும் இது தெரியவந்தது. ஸ்ரீமத் ஐயர் காலையில் தம் பாராயணத்தை முடித்துக்கொண்டு பாடம் கேட்க வரும் வரை மற்றவர்களுக்கும் பாடம் சொல்ல ஆரம்பிக்காமல் பிள்ளையவர்கள் காத்திருப்பார்களாம்.

**முருகனைப்பற்றி இவருடைய சொற்பொழிவுகள் :**

அன்பர் கி.வா.ஜ-வும் ஆசானைப் போல் முருகனிடத்தில் ஈடுபாடுள்ளவர் என்பது யாவரும் அறிந்ததே. சென்னை தேனாம்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிர மணியர் ஆலயத்தில் அறப்பாதுகாப்பாளராக இருந்த திரு. சந்திரசேகரனும் பிறரும் ஏதேனும் ஒரு நூலைப்பற்றி வாரந்தோறும் அக்கோவிலில் சொற்பொழிவாற்ற வேண்டுமென்று இவரை வற்புறுத்தி வந்தார்கள். எனவே, இவரும் 25 - 1 - 56-இலிருந்து மூன்றாண்டுகள் தொடர்ந்து வியாழக்கிழமைதோறும் 'கந்தர் அலங்கார' விரிவுரை யாற்றினார்.

மேலும் அந்த ஆலயத்திலேயே 1959-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 5-ஆம் தேதிமுதல் இரண்டாண்டு களுக்கும் மேலாகக் 'கந்தர் அநுபூதி' விரிவுரையையும் ஆற்றினார். அதன் நிறைவு விழா 13 - 4 - 61 - இலிருந்து 21 - 4 - 61 வரை சிறப்பாக நடைபெற்றது.

**"கொண்டலெனக் கவிமாரி பொழிந்தெங்கள்**<br>
**உள்ளத்தின் குறைகள் தீர்த்து**<br>
**வண்டமிழின் வளங்கொழிக்க வண்டிசைக்கும்**<br>
**தமிழ்ச்சோலை வலமுங்காட்டித்**

தொண்டருக்குத் தொண்டரெனத் தூயமனப்
பண்பதனின் தொன்மைகாட்டி
விண்டஅநு பூதியுரைத் தண்மழையால்
நெஞ்சத்தின் வெம்மைதீர்த்தாய்''

என இவரைப் பலரும் பாராட்டிப் புகழ்ந்தார்கள்.

x x x

கச்சியப்ப சிவாசாரியர் பாடிய 'கந்த புராணம்' சொற்சுவை, பொருட்சுவை நிரம்பியது; அத்திறத்தில் கம்பராமாயணத்துக்கு அடுத்தபடியாக இதைச் சொல்லலாம்.

தூத்துக்குடி தேசபக்தரும், முன்னாள் எம். எல் ஏ-யுமான வள்ளல் ஏ. பி. சி. வீரபாகு தம் மணிவிழாத் தொடர்பாகக் 'கந்த புராணம்' பற்றி விரிவுரையாற்ற வேண்டுமென்று இவரைக் கேட்டுக்கொண்டார். இவரும் 6-5-75முதல் இருபது நாட்கள் தூத்துக்குடியிலேயே தங்கியிருந்து 'கந்த புராணம்' பற்றிச் சொற்பொழிவு செய்தார்.

ஸ்ரீ குமரகுருபர முனிவர் அருளிய 'கந்தர் கலி வெண்பா'வில் முருகவேள் வரலாறு சுருக்கமாக வருகிறது. இந்நூல் சைவ சித்தாந்தச் சுருக்கமும், கந்த புராணச் சுருக்கமும், கந்தன் கவசச் சுருக்கமுமாக விளங்குவது என இவர் சொல்வார்.

வள்ளி திருமணமும், தேவசேனையின் திருமணமும் வருவதால் இந்தச் சிறு நூலைப் பாராயணம் செய்து வந்தால் வீட்டிலும் சுபகாரியங்கள் நடைபெறும் என்பதாக இவர் சொல்வதுண்டு.

1969-ஆம் ஆண்டு மார்ச் 5-முதல் 20-தேதி முடியப் பதினாறு நாட்கள் தொடர்ந்து சென்னை யானைக்கவுனி குமரக்கோட்டத்தில் இவர் 'கந்தர் கலிவெண்பா'ப் பற்றி விரிவுரையாற்றினார்.

இவருக்கு ஒரு மகளும் மூன்று புதல்வர்களும் உண்டு. இவருடைய மகள் செள. உமாமகேசுவரிக்குத் திருமணம் நிச்சயமாயிற்று. 'கந்தர் கலிவெண்பா' விரிவுரையைப் பூர்த்தி செய்த கையுடன் இவர் உமாவின் திருமணத்தை 7—5—69 - இல் மயிலைக் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில் நடத்தினார்.

ஸ்ரீமத் ஐயர் இதற்குமுன் இவரிடம் ஸ்ரீ குமரகுருபரருடைய பிரபந்தம் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபடவேண்டுமென்று சொன்னபோது இவரது உள்ளம் மகிழ்ச்சியில் துள்ளியது. அதே சமயம் திருப்பனந்தாள் காசி மடத்துத் தலைவருக்கும் ஸ்ரீமத் ஐயரின் வாயிலாக முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழும், சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தங்களும் வெளியிடும் அவா இருந்தது. அப்பணியைச் செய்ய இசைந்த ஐயரவர்களுடன் இவரும் இருந்து ஏட்டுச் சுவடி காண்பதும் அவர் சொல்வதை மனத்தில் வாங்கிக் கொண்டு அவரது நடையிலேயே எழுதுவதும், அவரிடமே படித்துக் காட்டுவம் உண்டு. பின்பு கலைமகளிலும் வெளியிடத் தொடங்கினார்,

அநேகமாக இந்தப் பதிப்புப் பணி முற்றுப்பெறும் நிலையில் இருந்தபோது 1939-இல் திருப்பனந்தாளில் ஸ்ரீ குமரகுருபரருடைய குருபூஜை விழா வந்தது. ஸ்ரீமத் ஐயரும் அதற்குப் போனார், அவருடன் இவரும், அன்பர் வி.மு.சு-வும் சென்றனர்.

குளத்தங்கரையில் வழக்கம்போல் ஒரு தனி வீட்டை ஏற்பாடு செய்து, அந்த வீட்டின் வாசலில் பந்தல் போட்டு, வாழை, கமுகு முதலியவற்றையும் திரைச்சீலைகளையும் கட்டச் செய்திருந்தார் தம்பிரான் சுவாமிகள்.

விழாவுக்கு வந்திருந்த அத்தனை புலவர்களும், பிரபுக்களும் ஸ்ரீமத் ஐயரை வந்து பார்த்துப் பேசி மகிழ்ந்தார்கள். தம்பிரானும் இவர்களுக்கு எந்தவிதக் குறையும் இராமல் பார்த்துக்கொண்டார்.

குருபூஜைக்கு மறு நாள், மாலை நேரம்; கையெழுத்து மறையும் தருணம். ஸ்ரீமத் ஐயர் தம் ஜாகையில் சாய்வு நாற்காலியில் சாய்ந்தவண்ணம் பேசிக்கொண்டிருந்தார். இவரும் அன்பர் வி.மு.சு-வும் உடன் இருந்தனர்.

அப்போது அரசுப்பிள்ளை என்பவர் அந்த ஜாகையின் பின்பக்கத்திலிருந்து வந்தார். திருநாவுக்கரசுப் பிள்ளை என்பது அவருடைய முழுப் பெயர். தம்பிரானுக்கு மிகவும் வேண்டியவர். ஸ்ரீமத் ஐயரிடம் பக்தி உடையவர்.

'அவர்கள் வருகிறார்கள்' என்று அரசுப் பிள்ளை அரைகுறையாகச் சொன்னது இவர் காதில் விழுந்தது. இவருடன் மற்றும் பலர் எழுந்துகொண்டார்கள். அதற்குள் அரசுப் பிள்ளையோடு வந்தவர் ஸ்ரீமத் ஐயருக்கு அருகிலுள்ள முக்காலியில் உட்கார்ந்துகொண்டார்.

ஸ்ரீமத் ஐயர், "யார்?" என்று கேட்டுக்கொண்டே திரும்பிப் பார்த்தார்.

"எசமான் சுவாமிகள் வந்திருக்கிறார்" என்று அன்பர் கி.வா.ஜ., அவர்காதருகில் சொன்னார். அந்த மடத்து அதிபர்களை எசமான் சுவாமிகள் என்று வழங்குவது மரபு.

ஸ்ரீமத் ஐயருக்குத் தூக்கிவாரிப் போட்டது. அவர் அப்படியெல்லாம் வருவது வழக்கம் இல்லை. அவர் இருக்குமிடத்தில் மற்றவர்கள் போய்ப் பார்ப்பார்கள்.

"என்ன இது? சொல்லி அனுப்பினால் நான் வந்திருக்க மாட்டேனா?" எனச் சொல்லிக்கொண்டு ஸ்ரீமத் ஐயர் மெல்ல எழுந்திருக்க முயன்றார்.

**தம்பிரான் சுவாமிகளின் பரிவு :**

"தாங்கள் அப்படியே வசதியாக உட்கார்ந்திருக்க வேண்டும்" என்று சுவாமிகள் கூறிய போதிலும் சாய்வுநாற்காலியில் இருந்த ஸ்ரீமத்ஐயர் காலை மடக்கிக்கொண்டார்.

சுவாமிகளோ, "நான் தகாத காரியம் ஒன்றும் செய்துவிடவில்லையே! சொல்லாமல் வரவேண்டுமென்றுதான் வந்தேன்" என்று சொல்லி அரசுப் பிள்ளையை நோக்கி, "எங்கே எடும்?" என்றார்.

அரசுப் பிள்ளை ஒரு வெள்ளித் தாம்பாளத்தில் வெற்றிலை பாக்கை வைத்து நீட்டினார். பின்பு பத்து நூறு ரூபாய் நோட்டுக்களையும் நீட்டினார். அவற்றைத் தட்டிலே வைத்துத் தம்பிரான் ஸ்ரீமத் ஐயருக்கு அளித்தார்.

ஸ்ரீமத் ஐயரோ, "என்ன இது?" என நாத் தடுமாறக் கேட்டார்.

"லட்சக்கணக்கில் கொடுக்கும் பாக்கியம் எனக்கு இல்லை. தங்கள் திருக்கரத்தால் சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தமும், குமரகுருபர சுவாமிகள் பிரபந்தமும் வெளி வரும்படியான பாக்கியம் கிடைத்தது. அதற்கு நான் என்ன செய்யப் போகிறேன்? என்னுடைய அன்பைக் காட்ட எனக்கு வேறு வழி தெரியவில்லை" என மன முருகச் சுவாமிகள் பேசினார்.

"மடத்துக்கே அழைத்து இதை வழங்கியிருக்கலாமே?"

"என் இடத்துக்கு அழைத்து ஏதோ கூலி கொடுப்பது போல அளிக்க எனக்கு மனம் வரவில்லை. நீங்கள் இருக்குமிடத்தில் நீங்கள் செய்த உபகாரத்துக்காக என் சிறு காணிக்கையைச் சமர்ப்பிக்கவே வந்தேன்" என்று தம்பிரான் சொன்னபோது அவருடைய நாக்குப் பேசவில்லை; இதயமே பேசியது. எனினும், தம்பிரான் வந்தபோது தாம் உட்கார்ந்திருந்தது ஸ்ரீமத் ஐயருக்கு மனவுறுத்தலாகவே இருந்தது.

"அன்பர் ஜகந்நாதையரின் பேருழைப்பே இப்பதிப்பிலுள்ள ஆராய்ச்சியும், குறிப்புரையும் இம்முறையில் அமைந்திருப்பதற்கான காரணமென்பதை இதன்முகமாகத் தமிழன்பர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்" என ஸ்ரீமத் ஐயர் தம் முகவுரையில் குறிப்பிட்டிருந்தார்.

**தம்பிரான் கி.வா.ஜ-வுக்கு அளித்த நன்கொடை :**

சாமிநாதத் தம்பிரான், இந்நூல் வெளியான சில நாட்களுக்குள் ஏதோ ஒரு காரியமாக இவரைத் திருப்பனந்தாளுக்கு ஒரு முறை அனுப்பி வைக்கும்படி ஸ்ரீமத் ஐயருக்கு எழுதவே, ஆசானும் இவரைத் திருப்பனந்தாள் சென்று

வரப் பணித்தார். இவர் திருப்பனந்தாள் சென்ற போது, சாமிநாதத் தம்பிரான் ஆயிரம் ரூபாய் இவருக்கும் வழங்கி, "குமரகுருபரர் பிரபந்தத்தைப் பதிப்பிக்க நீங்கள் எடுத்துக்கொண்ட பேருழைப்பை ஸ்ரீமத் ஐயரவர்களே சொன்னார்கள். அன்றே உங்களுக்கும் சம்மானம் செய்ய வேண்டுமென்று நினைத்தேன். வேறு சிலரும் உங்களுடன் இருந்தார்கள். அதனால்தான் உம்மை இப்போது தனி யாக வருவித்தேன். இந்த விஷயம் நம்மோடு இருக்கட்டும்; யாருக்கும் தெரிய வேண்டாம்! உம் நன்மையை உத் தேசித்தே சொல்கிறேன்: ஐயரவர்களிடங்கூடச் சொல்ல வேண்டாம்" என்றார்கள்.

அதைக் கேட்டு இவர் திடுக்குற்றார். "என்னை ஆட் கொண்ட தெய்வமாகிய அவர்களிடங்கூடத் தெரிவிக் காமல் நான் எப்படி இருப்பது?" என்று இவர் வாய் குழறினார்.

"நான் இப்படிச் சொல்வதற்குக் காரணம் உண்டு; உமக்குக் கிடைக்கும் நன்மையினால் ஐயரவர்களுக்கு எவ்வளவு மகிழ்ச்சி உண்டாகும் என்பது எனக்கும் தெரியும். அவர்களுக்கு இந்தச் செய்தி தெரிந்தால் உடனே அவர் இதைத் தம் குமாரரிடம் சொல்லக் கூடும். அவரும் பெருமகிழ்வுற்று மற்றவர்களுக்குத் தெரிவிப்பார். இதனால் உங்கள்மேல் சிலருக்குப் பொறாமை உண்டாக லாம். மற்றவர்கள் நம்மைக் கண்டு பொறாமைப்பட இடம் அளிக்காமல் அடக்கமாகவும் வாழவேண்டுமல்லவா? அதனால்தான் அப்படிச் சொன்னேன்" என்று கூறினார்.

அதன் பிறகு இவர் எதுவும் கூறவில்லை.

**ஆசானின் ஆசி :**

சென்னை வந்ததும் இதை ஸ்ரீமத் ஐயரிடம் கூறாமல் இருக்க இவரால் முடியவில்லை. அந்த ஆயிரத்தையும் அவரது திருவடியில் வைத்துவிட்டுத் திருப்பனந்தாளில் நடந்ததைச் சொன்னார்.

ஸ்ரீமத் ஐயருக்கு அளவில்லாத மகிழ்ச்சி உண்டாயிற்று. அந்தப் பணத்தை எடுத்து இவரது கையிலேயே கொடுத்தார்; "என்னிடம் சொன்னதோடு இருக்கட்டும். சாமிநாதத் தம்பிரான் மிகுந்த அநுபவசாலி. அவர் சொன்ன படியே நடந்துகொள்ள வேண்டும். அதனால் நன்மையே உண்டாகும். பல வருடங்கள் கழித்து இப்போதுதான் உமக்கும் பிள்ளை பிறந்திருக்கிறான். அவனுக்கு ஏதாவது ஆபரணம் செய்துபோட இதைப் பயன்படுத்த வேண்டும்" எனச் சொல்லி ஆசீர்வதித்து அனுப்பினார்.

இவருடைய மூத்த புதல்வர் 26-8-'39-இல் பிறந்ததும் இவர் தம்முடைய ஆசிரியப்பிரானின் பெயரையே அக்குழந்தைக்குச் சூட்டியிருந்தார்.

அந்தக் காலத்தில் வ. த. சுப்பிரமணிய பிள்ளை என்பவர் மாவட்ட முன்சீஃபாக இருந்தார். முருகனிடத்தில் மிகுந்த பக்தி உடையவர்.

தாம் திருப்புகழைப் பதிப்பித்தபோது ப்ரூஃபை ஸ்ரீமத் ஐயருக்கே அனுப்பி வைப்பார். ஸ்ரீமத் ஐயரும் திருத்தி அனுப்புவார்.

"அந்தத் திருப்புகழ்க் கைங்கர்ய பலன்தான் முருகன் உம்மை என்னிடம் அனுப்பி வைத்திருக்கிறான்" என்று அருணகிரிநாதருடைய வாக்கிலே அதிக ஈடுபாடு கொண்டிருந்த இவரிடம் ஸ்ரீமத் ஐயர் சொல்வாராம்.

தந்தை திருப்புகழ்ப் பாடல்களைமட்டும் தொகுத்து வெளியிட்டார் என்றால், அவருடைய குமாரராகிய வ.சு. செங்கல்வராய பிள்ளை திருப்புகழ்ப் பாடல்களுக்கு உரையெழுதி அவற்றை உரையோடு பிற்காலத்தில் பதிப்பித்திருக்கிறார்கள். நம் அன்பர் கி.வா.ஜ அதற்குச் சிறப்புப்பாயிரம் வழங்கியிருக்கிறார்.

செங்கல்வராய பிள்ளைக்குத் தம் சிறு வயதுமுதலே ஸ்ரீமத் ஐயரிடத்தில் ஒரு மதிப்பு உண்டு. ஒரு முறை ஸ்ரீமத் ஐயருக்கு, "ஜான்சனின் சரிதத்தை அவருடன் பழகி எழுதிய பாஸ்வல் போல நான் தங்கள்

வாழ்நாள் சரிதத்தை எழுதும்படி பாக்கியம் பெற வில்லையே என்று வருந்துகிறேன். மகாத்மா காந்தியைப் போல் தாங்கள் தங்கள் சரிதத்தை எழுதித் தனி நூலாக வெளியிடின் தமிழுலகம் மிகக் கடமைப்படும்'' எனக் கடிதம் எழுதியிருந்தார்.

ஸ்ரீமத் ஐயருக்கு அப்போதெல்லாம் தம் ஆசிரியப் பிரான் பிள்ளையவர்களது சரிதத்தை எழுத வேண்டு மென்ற மனோவேகந்தான் இருந்தது. தம்மைப் பற்றிய எண்ணமே இருந்ததில்லை; அன்பர் கி. வா. ஜ., இதனை நினைப்பூட்டிய போது, ''நான் மேலைநாடுகள் போயிருக்கிறேனா? வேற்று மொழிகள் கற்றிருக்கிறேனா? தமிழைத் தவிர வேறு எனக்கு என்ன தெரியும்? பெரும்பாலோர் சுவையாகக் கருதக் கூடிய நிகழ்ச்சி என் வாழ்வில் என்ன இருக்கப் போகிறது?'' என்றே இவரிடம் சொல்லி வந்தார் ஆசான்.

என்றாலும், ஸ்ரீமத் ஐயர் கவிஞர்கோமான் பிள்ளை யவர்கள் சரித்திரத்து 2-ஆம் பாகத்தில், தம்தந்தையாருடன் தாம் முதன்முதலாக அவரை மாயூரத்தில் கண்டது, அவரிடமே பாடம் கேட்கத் தொடங்கியது, பட்டீச்சுரம் ஆறுமுகத்தா பிள்ளையிடம் அகப்பட்டுக்கொண்டு அழமாட்டாக் குறையாகத் தவித்தது என்பதாகப் பிள்ளையவர்களின் இறுதிக் காலம்வரை தாம் அவருடன் இருந்துவந்த நிகழ்ச்சிகளை மிகச் சுவைபட எழுதியிருந் தார். ஸ்ரீமத் ஐயரது 17-ஆம் பிராயம்முதல் ஐந்தாறு ஆண்டுகள் வரையிலான அவரது வாழ்க்கைக் குறிப்புகளே அவை.

அவற்றைப் படித்தவர்கள் பலருக்கும் ஸ்ரீமத் ஐயரது முழுக்கதையையும் தெரிந்துகொள்ளும் பேரார்வம் மிகுதியாகிவிட்டது இயல்புதானே?

ஐயரவர்களின் நண்பரான மகாமகோபாத்தியாய ம. வீ. ராமானுஜாசாரியரும் இதுபற்றி ஐயரவர்களுக்கு வேண்டுகோள் விடுத்துவந்தார். மகாபாரதத் தமிழ் மொழிபெயர்ப்பை வெளியிட்டவர் அந்தப் பேரறிஞர்.

'ஆனந்த விகடன்' சார்பில் 'கல்கி'யவர்கள் ஸ்ரீமத் ஐயரது சதாபிஷேகம் நடந்த ஆண்டிலிருந்தே இதுபற்றி எழுதியும், சொல்லியும் வந்தார்.

ஸ்ரீமத் ஐயரது வாழ்க்கை வரலாறு - தமிழ் இலக்கிய வரலாறாக - தமிழ் மக்களின் பண்பாட்டுக் களஞ்சியமாக அமையும் என்பது இவருக்கும் தெரியும்; அதனை எழுத ஸ்ரீமத் ஐயரை இணங்க வைக்கவும் இவரால் முடியும். எனினும், மற்றப் பதிப்புப் பணிகளுக்குத் தடையாக இருக்கும் என அண்ணா எண்ணிவிட்டால் என்ன ஆவது என இவர் அஞ்சினார். எனவே, தம் ஆவலை வெளிக் காட்டாமல் இருந்து வந்தார்.

'ஆனந்த விகடன்' ஆசிரியராக இருந்த 'கல்கி' இவரை விடுவதாக இல்லை. அடிக்கடி நினைவுபடுத்தி வந்தார். ஒரு நாள் இவர் மெல்ல, பேச்சுவாக்கில், "தமிழகம் உங்கள் வரலாற்றைத் தெரிந்துகொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும். இளந் தலைமுறையினருக்குப் பயன்படக் கூடிய இலக்கியமாக அது இருக்கும். தாங்கள் ஏற்கனவே பலபல சந்தர்ப்பங்களில் சொன்னவற்றையெல்லாம் நான் குறித்து வந்திருக்கிறேன். தாங்கள் அங்கங்கே தொடர்பு படுத்திப் பழைய நிகழ்ச்சிகளைச் சொன்னால் போதும். நானே எழுதுகிறேன்" என்றார், ஸ்ரீமத் ஐயரிடம் இவரை நிமிர்ந்து பார்த்துச் சிரித்துக்கொண்டார் அவர். ஆட்சேபம் எதையும் சொல்லவில்லை.

அடுத்த நாளே இவர் 'கல்கி'யிடம் போய், "ஐயரவர் களைத் தாங்கள் நேரில் ஒரு முறை வந்து பார்த்து இது குறித்துப் பேசுவது நலம்" எனத் தெரிவித்து வந்தார்.

1939-ஆம் ஆண்டின் இறுதியில் நடந்த நிகழ்ச்சி இது. ஸ்ரீமத் ஐயரைப் பார்க்கக் 'கல்கி'யும் 'தியாகராஜ விலாசம்' வந்தார். அப்போது அண்ணாவும், இவரும் அங்கே இருந்தனர். 'கல்கி' தம் கோரிக்கையை மீண்டும் வற்புறுத்தி வேண்டியதோடு, புது வருஷம் முதல்

வாரத்திலிருந்து 'என் சரித்திர'க் தொடரை ஆரம்பித்துக் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். இதனை ஐயரவர்களிடம் இவர் தெரிவித்தபோது, 'கல்கி' அவர்களுக்கு தம்மிடம் இருந்த ஆழ்ந்த பக்தி சிரத்தை காரணமாக அதனை ஆசானால் மறுக்க முடியவில்லை; அவர் இணங்கினார்.

ஸ்ரீமத் ஐயரைக் கேட்டுக்கொண்டு இவர் அவரது சுயசரிதம் முதல் அத்தியாயத்தை எழுதி அண்ணாவிடம் கொடுத்தார். அண்ணாவுக்கும் அதைப் படித்துப் பார்த்ததும் மனநிறைவு உண்டாயிற்று. "நீயும் வா. இதை நாமே கொண்டுபோய்க் 'கல்கி'யிடம் கொடுத்து வருவோம்" என இவரையும் அழைத்துக்கொண்டு 'கல்கி' யிடம் போய் 15—12—39-இல் முதல் கட்டுரையைக் கொடுத்து வந்தார்.

1940 ஜனவரிமுதல் ஸ்ரீமத் ஐயரது வாழ்க்கை வரலாறு 'என் சரித்திரம்' என்ற தலைப்பில் ஆ.வி-இல் வெளிவரத் தொடங்கியது.

**கவலை தந்த உடல்நிலையில் ஆசான் :**

ஸ்ரீமத் ஐயருக்குச் சிறுநீர் துவாரத்தில் ஏதோ ஒரு சிறு புண் சில மாதங்களாகவே இருந்திருக்கிறது போலும்; தம் உடம்பைப்பற்றி அவர் அதிகம் கவலைப்பட்டதே யில்லை. முதல் நாள் இரவு ஜுரம் வந்திருக்கிறது ஐயரவர்களுக்கு; அதனால்தான், அண்ணாவுக்கே இது தெரிந்தது.

இவர்கள் போய் டாக்டர் திரிமூர்த்தியை அழைத்து வந்தார்கள். அவர் வந்து பார்த்தார். அது கான்சர் நோய் எனத் தெரிய வந்தது. அறுவைச் சிகிச்சைதான் நல்லது. இல்லையென்றால் அது படர்ந்து அவரது உயிருக்கே ஆபத்தை உண்டாக்கலாம்" என்று சொன்னார் டாக்டர்.

எல்லோருக்கும் கவலை உண்டாயிற்று. "இந்த வயதில் அறுவைச் சிகிச்சை எல்லாம் வேண்டாம். மருந்துகளின்மூலமே குணப்படுத்த முயற்சி செய்வோம்" என்று அண்ணா சொன்னார்.

டாக்டர் கொடுத்து வந்த மருந்துகளுக்கெல்லாம் அது குணமாகவில்லை. தொல்லைகள் அதிகரித்தன; ஆகாரம் உட்செல்லவில்லை.

எனவே, திரும்பவும் 1940-ஆம் ஆண்டு ஜனவரி 23-ஆம் தேதி மாலையில் ஸ்ரீமத் ஐயரை டாக்டர் வந்து பார்த்தார்.

''இவ்வளவு தூரம் வளரவிடாமல் முன்பே கவனித்திருக்கலாம். இனி உடனே அறுவைச் சிகிச்சை செய்யத்தான் வேண்டும்'' என்றார்.

அண்ணா சிறிது யோசித்தார்; ''இதைத் தாங்கிக் கொள்ள அவருக்குப் பலம் இருக்கிறது. இருதயம், நாடி எல்லாம் நன்றாக உள்ளன. ஏன் கவலைப்படுகிறீர்கள்?'' என்று டாக்டர் சொன்னார்.

டாக்டர் கொடுத்த தைரியத்தில் ஸ்ரீமத் ஐயரை ராயபுரம் அரசு மருத்துவ மனையில் கொண்டு போய்ச் சேர்த்தார்கள்.

1940 ஜனவரி 30-ஆம் தேதி ஸ்ரீமத்ஐயருக்கு அறுவைச் சிகிச்சை நடந்தது. அதை டாக்டர் கனகசேபசன் என்பவர் செய்தார். அன்றிலிருந்து அன்பர் கி.வா.ஜ., அலுவலகம் போகவில்லை. பகலும் இரவும் மருத்துவ மனையில் தம் ஆசிரியரின் அருகிலேயே இருந்தார்

அலுவலகம் போக ஆரம்பித்தவுடன் இரவு நேரங்களில் மருத்துவ மனைக்குப் போய் ஸ்ரீமத் ஐயருக்குத் துணையாகத் தங்கி வந்தார்.

இந்த நேரந்தான் மோகனூரிலிருந்து இவருடைய தந்தையாருக்கும் உடம்பு சரியில்லை எனக் கடிதம் வந்தது. ஸ்ரீமத் ஐயர் மனம் தளரவில்லை. மருத்துவ மனையில் இருக்கும்போது அவரை விட்டு மோகனூர் போக இவருக்கு மனம் வரவில்லை.

தம் சகோதரி மதுகரத்தைமட்டும் மோகனூர் அனுப்பி வைத்தார் கி.வா.ஜ..

இவர் தினந்தோறும் மருத்துவ மனைக்குக் காலையும், மாலையும் சென்று வந்தார். அங்கேயே ஸ்ரீமத் ஐயரது 'என் சரித்திரம்' சம்பந்தமாகப் பல தகவல்களைக் கேட்டுக்கொள்வார். அவற்றைப் படித்துக் காட்டுவார். ஸ்ரீமத் ஐயர் சிலவற்றைத் திருத்திக்கொள்ளும்படி சொல்வார். திரும்ப நல்ல பிரதி எடுத்து, அதை ஆ. வி., அலுவலகத்துக்குப் போய் இவரே கொடுத்து வருவார்.

'விகட' னில் வாரந்தோறும் ஸ்ரீமத் ஐயரது சரித்திரம், வந்துகொண்டிருந்தது விறுவிறுப்பான தொடர்கதையை விரும்பிப்படிப்பது போல் அடுத்த வாரம் எப்போது வரும் என எதிர்பார்த்திருந்து வாங்கிப் படித்துவந்த மக்களிடையே அவருக்கு உடல்நலம் சரியில்லையென்கிற செய்தி நாட்டிலே ஒரு பரபரப்பை ஏற்படுத்தியது.

பல அன்பர்கள் அவரைப் பார்க்க மருத்துவ மனைக்கே வந்தார்கள். ஏராளமான கடிதங்கள் வந்து குவிந்தன.

கொஞ்சம் கொஞ்சமாக அவரது உடம்பு குணமாகி வந்தது. மார்ச் 2-ஆம் நாள் ஸ்ரீமத் ஐயரை வீட்டிற்கு அழைத்து வந்தார்கள். அதற்கு முன்பாக அன்று 'விகட' னி லிருந்து வந்த புகைப்படக்காரர் மருத்துவ மனையிலே ஸ்ரீமத் ஐயரை படம் எடுத்துச் சென்றார். அவர் பூரண மாகி வீடு திரும்பிவிட்டதுகுறித்து இவர் எல்லாப் பத்திரிகைகளுக்கும் எழுதி அனுப்பினார்.

ஸ்ரீமத் ஐயர் எழுதி வந்த 'என் சரித்திர' த்தைத் தமிழ் மக்கள் ஒருவருக்கொருவர் அதைப்பற்றியே புகழ்ந்து பேசிக்கொண்டார்கள். பாராட்டிப் பலர் கடிதங்களும் எழுதினார்கள்.

'விகட' னில் 'என் சரித்திரம்' தடைப்படாமல் தொடர்ந்தது.

த. நா. சேனாபதி பல வருஷங்களுக்கும் மேலாக அன்பர் கி. வா. ஜ.-வுடன் பழகியிருக்கிறார். அவர் முதலில் 'கலைமகள்' பத்திரிகையின் உதவி ஆசிரியராகவும், பின்னர் 'மஞ்சரி'யின் நிர்வாக ஆசிரியராகவும் பணியாற்றியவர்.

"ஏற்கனவே பள்ளி ஆசிரியராகப் பயிற்சி பெற்றிருந்தாலும் நான்முறையாகத் தமிழ்பயின்றது கி.வா.ஜ-விடமே. எனக்கு இவர் தமிழ் கற்றுத் தருவதைக் 'கலைமகள்' அதிபர் பார்த்து ரசித்துக்கொண்டே இருப்பார்" என்று சொல்வார் திரு. சேனாபதி.

**எவர்க்கும் பாடங் கூறும் பண்பின் காரணம் :**

இளமையில் ஸ்ரீமத் ஐயர் அரியலூரில் இருந்தபோது அவ்வூருக்கு ஒரு கவிராயர் வந்திருக்கிறார். அவர் 'திருவரங்கத்தந்தாதி'யிலிருந்து ஒரு பாடலைச் சொல்லிப் பொருளும் கூறினார். அதைக் கேட்டவுடன் அந்நூல் முழுவதையும் அவரிடமே பாடம் கேட்கவேண்டுமென்ற ஆசை ஸ்ரீமத் ஐயருக்கு எழுந்தது. உடனே தலைதெறிக்கத் தம் வீட்டிற்கு ஓடிச் சென்று அந்நூலை எடுத்து வந்தார். அவரது ஆர்வத்தைக் கவிராயரும் தெரிந்துகொண்டார்.

"திருவரங்கத்தந்தாதி எளிதில் எல்லோருக்கும் விளங்காது. நான் எவ்வளவு சிரமப்பட்டு இந்நூலின் பாடல்களுக்குப்பொருள் தெரிந்துகொண்டேன் தெரியுமா? ஒவ்வொரு பாட்டும் ஒரு புதையலுக்குச் சமானம்" எனக் கவிராயர் சொல்லி வந்தபோது பாடம் சொல்லத் துவங்கு முன் நூலின் சிறப்பியல்புகளை அவர் சொல்வதாக ஸ்ரீமத் ஐயர் நினைத்திருக்கிறார். ஆனால், அந்தக் கவிராயரோ, "நான் கஷ்டப்பட்டுத் தேடிய புதையலை அவ்வளவு எளிதில் வாரிவீசுவேனா?" எனச் சொல்லிப் போய் விட்டாராம்! இந்தச் செய்தியை ஸ்ரீமத் ஐயரிடமிருந்து இவர் அறிந்திருந்தார். "இப்படித் தாம் கற்ற கல்வியைப் பிறருக்குச் சொல்லித் தராமல் அதைக் காக்கும் பூதமாக இருந்து என்ன பயன்?" என்று இவர் சொல்வது உண்டு.

"தமக்கு எவ்வளவு வேலை இருந்தாலும் என் போன்றோர்க்குப் பாடம் சொல்வதில் ஆர்வம் உடையவர் கி.வா.ஜ., பத்திரிகைத் துறை அன்பர்களும் வேறு பலரும் எந்தச் சந்தேகம்குறித்து எப்போது தொலைபேசிமூலம் விளக்கம் கேட்டாலுங்கூட அவர்களுக்கு உடனே விளக்கம்

அளிப்பதிலும் சலிப்புக் காட்டியதில்லை'' என அன்பர் சேனாபதி குறிப்பிட்டார்.

டாக்டர் முத்துக்கண்ணப்பரும் இந்தக் கருத்தை மியூசிக் அகாடமி கஸ்தூரி சீனிவாசன் அரங்கில் நினைவு படுத்தி* மனம் நெகிழ வைத்தார்.

**மொழிபெயர்ப்பாளருக்குத் தந்த ஊக்கம் :**

'செப்புமொழி பதினெட்டுடையாள் எனில் சிந்தனை ஒன்றுடையாள்' என்பதாக மகாகவி பாரதியார் நம் இந்தியத் தாயைப் புகழ்வதன்மூலம் இளந் தலைமுறையினருக்குத் தேசிய ஒருமைப்பாட்டுணர்ச்சியை ஊட்டினார். அவரே மகாகவி ரவீந்திரநாதரின் கவிதைகளை மொழிபெயர்த்துமிருக்கிறார். பங்கிம்சந்திர சட்டோபாத்தியாயரின் வந்தே மாதர கீதத்தையும் மொழிபெயர்த்திருக்கிறார். 'பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்' என்னும் அறிவுரையையும் வழங்கியுள்ளார்.

''அரசியல், வர்த்தகம் போன்ற துறைகளுக்குமட்டுமன்றி, கலை கலாசாரப் பரிவர்த்தனைக்கும் பெரிதும் உதவுவது மொழிபெயர்ப்புக் கலையே. இதை ஓர் அற்பமான விஷயமாகக் கருதிவிட முடியாது. இது ஒரு தனிக் கலை'' என்று அன்பர் கி.வா.ஜ., அடிக்கடி சொல்வது உண்டு.

1930-32-இல் பாடியில் உப்புச் சத்தியாக்கிரகத்திலே ஈடுபட்ட சகோதரர்கள் திரு. குமாரசாமி, குருசாமி, சேனாபதி இவர்களுக்குப் பாரதியாரின் வாக்கிலே மிக்க ஈடுபாடு உண்டு. இவர்கள் சம்ஸ்கிருதத்தையே விருப்பப் பாடமாக எடுத்துப் படித்திருக்கிறார்கள்; கூடவே சொந்த முயற்சியால் வங்காளியும் கற்றார்கள்.

த. நா. குமாரசாமியும், சேனாபதியும் மொழிபெயர்ப்புக் கலையில் வல்லுநர்கள். ஸாஹித்ய

* 1—12—1988 - கி. வா. ஜ., நினைவு அஞ்சலிக் கூட்டம்.

அகாதமி, மற்றும் பிற நிறுவனங்கள் தோன்றி இப்பணியில் ஈடுபடுவதற்கு முன்பிருந்தே 'இலக்கிய இரட்டையர்'களான இவர்கள் வங்காளி இலக்கியங்களைக் 'கலைமகள்', 'ஆனந்த விகடன்', 'கல்கி' வாயிலாகத் தமிழில் மொழிபெயர்த்துத் தந்திருக்கிறார்கள்.

அதோடு தமிழிலுள்ள ஆழ்வார், நாயன்மார் வரலாற்றையும் 'திருக்குறள்', 'சிலப்பதிகாரம்' போன்றவற்றையும் வங்கமொழியாக்கம் செய்து வருகிறார் அன்பர் சேனாபதி.

x x x

**தமிழ்த் தாத்தாவும் மகாகவி ரவீந்திரரும் :**

"ஒரு மொழியினர் பிற மொழிகளைக் கற்பதனால் தங்கள் தங்கள் மொழிகளின்மீது அவர்களுக்குள்ள பற்றுதல் அதிகப்படுகிறதேதவிரக் குறைவதில்லை. ஒரு மொழி வேறு ஒரு மொழியின் தொடர்பினால் விரிவிலும் அதனால் அம்மொழியின் அழகு குன்றுவதில்லை" என்கிற நுட்பமான கருத்தை ஸ்ரீமத் ஐயர் பல முறை வெளியிட்டிருக்கிறார்.

ஸ்ரீமத் ஐயரும், ரவீந்திரநாதரும் கிட்டத்தட்டச் சமகாலத்தவர்கள். ரவீந்திரர் சென்னைக்கு வந்திருக்கிறார். தமிழகத்துப் பழம்பெரும் புலவர்களின் பாடல்களை உயிர்ப்பித்து வந்த ஸ்ரீமத் ஐயரும், வங்காளியில் அரிய கவிதைகளைப் படைத்தளித்து வந்த ரவீந்திரரும் ஒருவரை யொருவர் சந்தித்து அளவளாவியிருக்கிறார்கள். ரவீந்திரர் 'தியாகராஜ விலாசம்' வந்து, ஸ்ரீமத் ஐயர் சேகரித்து வைத்திருந்த ஏட்டுச் சுவடிகளைப் பார்வையிட்டு வியந்திருக்கிறார்.

"பாராட்டுக்குரிய பெரியோரே, அகத்திய முனிவரைப் போன்றோரே! தமிழ் நாட்டின் பழம்பெரும் இலக்கியச் செல்வங்கள், காலங் காலமாக இருளில் எங்கோ பனையோலைகளில் ஒளிந்து கிடக்க, 'நிலவில் மலர்ந்த

முல்லை'யாக, சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற ஐம்பெருங் காப்பியங்களையும், சங்க இலக்கியங்களையும் வெளிப்படுத்தித் தமிழன்னைக்குச் சூட்டி, அவளுக்குரிய சிம்மாசனத்தில் பெருமைப்படுத்தி இருத்திய வரே! பேராசானே, உமக்கு என் வணக்கம்.''

இவ்வாறு ரவீந்திரநாதர் வங்காளியில் ஸ்ரீமத் ஐயரது பெருமையைப் பாடியுள்ளார். இந்தப் புதையலைத் தேடித் தந்திருப்பவர் திரு. த. நா. சேனாபதிதான்.

**பகைவரற்ற பெரியவர் :**

''தர்மபுத்திரரை அஜாதசத்ரு அல்லது பகைவனே இல்லாதவர், பகைமையே பாராட்டாதவர் என்பார்கள். எந்த விதத்தில் பார்த்தாலும் அமரர் கி.வா.ஜ.-அவர்களும் அத்தகையவரே'' எனச் சேனாபதி குறிப்பிட்டுள்ளார்.

''இது சாத்தியமானதா?'' எனச் சிந்தித்தபோதுதான் ஒரு சிறு சம்பவம் எனக்குத் தெளிவை உண்டாக்கியது.

ஒரு நாள் அகில இந்தியக் கண் பார்வையற்றோர் சங்க உப தலைவர் பி. வி. சுப்பிரமணியன் ஓர் அலுவலாக என் வீட்டிற்கு வந்தார். நல்ல வெயிலில் டொக்டொக்கென்று தம் கைக் குச்சியைத் தட்டிக்கொண்டு, தடுமாறாமல் அவர் வந்தது எனக்கு வியப்பாக இருந்தது.

''உங்களால் எப்படி என் வீட்டைத் தேடிக்கொண்டு வர முடிந்தது?'' என்று கேட்டேன். அப்போது அவர் சொன்னார்:

''பஸ்ஸை விட்டு இறங்கியவுடன் ஒருவரிடம் கேட்டேன். அவர், 'இப்படி வாங்க' எனக் கையைப் பிடித்துச் சாலையின் மறு புறம் என்னைக் கொண்டு வந்து விட்டு, 'இந்த ரோடிலே போகவேண்டும்' எனச் சொல்லிப் போனார்.

''கொஞ்ச தூரம் வந்தவுடன் வேறொருவரிடம் கேட்டேன். 'இரண்டு கண்ணும் இல்லாத நீங்களெல்லாம் ஏன் இப்படித் தெருவிலே கிடந்து அலையறீங்க?' என

என்னைத் திட்டிக்கொண்டே போனார் அவர். பேசாமல் மேலும் கொஞ்சதூரம் வந்தபின் மற்றொருவரிடம் கேட்டேன். 'என்னோடு வாங்க' என அவர் என் கையைப் பிடித்து உங்கள் வீடு வரைக்கும் அழைத்துக் கொண்டுவந்துவிட்டுப் போனார்.

"இப்படிப் பலதரப்பட்ட மக்கள் வாழும் உலகம் அல்லவா இது! ஆனால் ஒன்று பாருங்கள்: 'இரண்டு கண்ணும் இல்லாத நீங்க ஏன் இப்படித் தெருவிலே கிடந்து அலையறீங்க?' என்று என்னை ஏசினாரே அவரைப் போன்றவர்களது செயலையே நாமும் வாழ்நாள் முழுவதும் மறக்காமல் நினைந்து பலரிடமும் சொல்லி வருத்தப்படுகிறோம். சாலையின் மறு புறம் என்னைக் கொண்டுவந்து விட்டவர், இந்த வீடு வரைக்கும் என்னை அழைத்து வந்து விட்டவர் போன்ற நல்ல குணமுடைய உபகாரிகளை மறக்காமல் யாரிடமேனும் சொல்லி மகிழக் கற்றுக் கொண்டோமா?" என்று என்னையே கேட்டார்.

x x x

அன்பர் கி.வா.ஜ., தம்மை ஏளனம் செய்தவர்களைப் பற்றியோ, அவதூறு பேசித் துன்பம் இழைத்தவர்களைப் பற்றியோ பகைமை பாராட்டிச் சொன்னதில்லை. அவற்றை அப்போதே மறந்து, மனத் துன்பமின்றி வாழ்ந்தார்.

தமக்குச் சிறிய உபகாரம் செய்தவரையுங்கூடப் பல படியாகப் பாராட்டிப் பேசியது உண்டு. அவர்களை எப்போதும் மறக்காமல் மன மகிழ்வோடு இருந்தார். பிறருக்கும் அந்தப் பண்புகளையே அறிவுறுத்தினார்.

**பண்புற் சிறந்த பெரியோர் இருவர்:**

ஸ்ரீமத் ஐயர், 'என் சரித்திரம்' சம்பந்தமாக எழுதத் தொடங்கியவுடன் தம் பேருழைப்புக்கு உதவியாக இருந்தவர்களைப்பற்றி அவர் சொல்லி வந்த நிகழ்ச்சிகள் மிக அதிகமாகும்.

தியாகராச செட்டியாரைப்பற்றி ஏற்கனவே பிள்ளையவர்கள் சரித்திரத்தில் ஐயரவர்கள் குறிப்பிட்டிருந்தார்.

தியாகராச செட்டியார் கும்பகோணம் அரசுக் கல்லூரியில் தமிழ்ப் பண்டிதராக இருந்து வந்தார். அங்கு மற்றப் பேராசிரியர்களுக்கு இருந்த மதிப்பு அவருக்கும் இருந்தது.

இயற்கையறிவு, கம்பீரமான குணம், பிள்ளையவர்களுடைய பழக்கம், திருவாவடுதுறை மடத்துச் சார்பு இவையே அவர் பெருமை அங்ஙனம் விருத்தியாவதற்குக் காரணங்களாக அமைந்தன எனலாம்.

பிள்ளையவர்களுடன் பட்டீச்சுரம் போகும் போதுதான் ஸ்ரீமத் ஐயர் முதல் முறையாக தியாகராச செட்டியாரைப் பார்த்திருக்கிறார்.

"பளபளவென்றிருந்த அவரது மேனி நல்ல சிவப்பு. அதிக உயரமும் இல்லை; குட்டையும் இல்லை. நல்ல பலம் பொருந்திய உடற்கட்டு. அவரது நடையில் கம்பீரமும், பார்வையில் தைரியமும், பேச்சில் துணிவும் காணப்பட்டன. பிள்ளையவர்களின் முன் அவர் சாஷ்டாங்கமாகப் பணிந்து எழுந்தபோது பிள்ளையவர்களின்பால் அவருக்கிருந்த அன்பும் பணிவும் நன்றாக வெளிப்பட்டன" என்பதாகத் தியாகராச செட்டியாரைப்பற்றி ஸ்ரீமத் ஐயர் விரிவாக 'என் சரித்திர'த்திலும் எழுதியுள்ளார். என்றாலும், அவரது மனம் நிறைவு கொள்ள வில்லை. வாழ்வில் நமக்குச் சிலர் செய்த உதவிகள் சில நேரமே பயன்படும்; சிலர் செய்தனவோ ஆயுள் முழுவதும் பலனளிக்கும். தம் உத்தியோகத்தையே அவருக்கு அளித்துப் பிறர் கையை எதிர்பாராத நிலைமையைச் செய்வித்தமையால் அந்தம் கோபகாரியான செட்டியாரை, ஸ்ரீமத் ஐயர் மறந்ததேயில்லை. எனினும், ஏதோ காரணத்தினால் முதன் முதலாகத் தாம் பதிப்பித்த 'சிந்தாமணி' முகவுரையில் தியாகராச செட்டியாரின் பெயரை ஸ்ரீமத் ஐயர் எழுதாமல் விட்டுவிட்டார்.

**தம் பிழை உணர்ந்து பண்புடன் நடந்த ஆசான் :**

"சிந்தாமணி முகவுரையில் பலருடைய பெயர்களைச் சொல்லியிருப்பதால் என் பெயரும் வந்திருக்குமென்று நான் எதிர்பார்த்தேன். நீங்கள் எழுதாதது எனக்கு வருத்தம்தான்" என ஒருமுறை தம்மைப் பார்க்க வந்த ஸ்ரீமத் ஐயரிடமே தியாகராச செட்டியார் சொன்னார். அதைக் கேட்டவுடன் ஸ்ரீமத் ஐயர் பெரிதும் வருந்தினார். "நான் செய்தது தவறுதான்" என அவரிடமே ஒப்புக் கொண்டார்.

இப்படித் தவறு நேர்ந்துவிட்டதற்கு ஈடாகத் தம்முடைய 'ஐங்குறுநூற்று'ப் பதிப்பைத் தியாகராச செட்டியாருக்கு உரிமையாக்கினார். இரண்டாவதாக, கும்பகோணம் கல்லூரி பி.ஏ., தமிழ் வகுப்பில் படிக்கும் மாணாக்கர் ஒருவருக்குத் தியாகராச செட்டியார் பெயரால் ஆண்டுதோறும் உபகாரச் சம்பளம் வழங்க நிதி உதவினார். மூன்றாவதாக, செட்டியார் ஞாபகம் தமக்கு என்றும் இருக்கவேண்டி' தாம் வாழும் இல்லத்திற்குத் 'தியாகராஜ விலாசம்' என்ற பெயரை வைத்தார்.

அப்படியும் ஸ்ரீமத் ஐயரது மனம் அமைதியுறவில்லை. "இவ்வளவும் அவர் உயிரோடு இருந்த காலத்தில் செய்யும் பாக்கியம் எனக்கு இல்லாமல் போயிற்றே" என இவரிடம் சொல்லிச் சொல்லி வருந்தியும் வந்தார்.

**கவிஞர் கோமானின் முதல் சீடர்பற்றிய பழைய நிகழ்ச்சி :**

எதையும் உள்ளே வைத்துக்கொண்டு புறமொன்று பேசத் தெரியாது செட்டியாரவர்களுக்கு. பிற மொழி நூல்களிலுள்ள அரிய செய்திகளை யாரேனும் சொன்னால் அதனைக் கேட்டு, "ஆஹா" என இன்புற்றுப் பாராட்டுவார்.

ஒருமுறை கும்பகோணம் கடைவீதி வழியே தியாகராச செட்டியார் இரவு போய்க்கொண்டிருந்தார். ஒருவரது வீட்டுத் திண்ணையில் இருபது, முப்பது பேர் உட்கார்ந்

திருந்தார்கள். ஒரு சிறிய விளக்கு எரிந்துகொண்டிருந்தது. அந்த வெளிச்சத்தில் ஒரு கிழவரின் கழுத்தில் இருந்த ருத்திராட்சம், உடம்பிலும் நெற்றியிலும் இருந்த விபூதி, கயிற்றினால் கட்டிக் கண்ணில் போட்டிருந்த வெள்ளெழுத்துக் கண்ணாடி யாவும் தெரிந்தன.

'ஹாலாஸ்ய மகாத்மிய'த்திலுள்ள 'பழியஞ்சின படல'த்தைப்பற்றி அந்தப் பௌராணிகர் சொல்லிக் கொண்டிருந்தார்.

" 'மதுராபுரியின் எல்லைக்கு வெளியேயுள்ள இடத்தில் நடக்கும் திருமணத்திற்கு வா' என அசரீரி எழுந்தது" என்று சொன்னவர், "அந்த அசரீரி மதுராபுரியின் எல்லைக்குள்ளே' என்று ஏன் சொல்லவில்லை?" எனக் கேட்டு நிறுத்தினாராம்.

கேட்பவர்கள் மனசுக்குச் சிறிது வேலை கொடுத்து, பின்னர் அதனைத் தாமே விளக்குவது சொற் பொழிவாளர்கள் கையாளுகிற உத்தி அல்லவா?

தியாகராச செட்டியாரும் அந்தக் கேள்வியைக் கேட்டுக்கொண்டார்.

அதற்குள், "கருணையே சொருபமான சோமசுந்தர மூர்த்தியும், மீனாட்சியம்மையும் ஆட்சி புரியும் தெய்வத் தலம் மதுராபுரி. அது பூலோக சிவலோகம் எனப் பெயர் பெற்றது. அதன் எல்லைக்குள் அச்செயல் நடைபெறலாமா?" என அந்த முதியவரே சொன்ன போது, "என்ன அருமை! என்ன ரசம்! ஆஹா!" என்று செட்டியார் உள்ளம் நெகிழ்ந்து போனார். அந்தப் பௌராணிகருக்கும் தம்மால் இயன்ற உதவிகளைத் தியாகராச செட்டியார் செய்தார்.

இதுபோன்று ஸ்ரீமத் ஐயருக்குத் தியாகராச செட்டியார் நினைவு வரும்போதெல்லாம், தளர்ந்த தம் முதிய வயதிலும் முத்துமுத்தாகக் கண்ணீர் சிந்துவார்.

"என் சரித்திரம் முடிந்தாலும் சரி, முடியா விட்டாலும் சரி, அந்த மகோபகாரி தியாகராசர்

சரித்திரத்தை எழுதியாக வேண்டும்'' என மிகுந்த உணர்ச்சியோடு ஒரு நாள் இவரிடம் ஸ்ரீமத் ஐயர் சொன்னார்.

'கலைமக'ளில் மாதந்தோறும் ஸ்ரீமத் ஐயரது கட்டுரை ஒன்று வந்தது. 'தமிழ் நெறி விளக்கம்', 'சிவ சிவ வெண்பா மாலை', 'திருமலையாண்டவர் குறவஞ்சி' என்பனவாக ஸ்ரீமத் ஐயர் திரட்டி வைத்திருந்த சிற்றிலக்கியங்கள் பலவும் ஒவ்வொன்றாக வெளிவந்து கொண்டிருந்தன. இதோடு வாரந்தோறும் ஆ.வி.க்கும் 'என் சரித்திர'த் தொடர் எழுத வேண்டியிருந்ததால் அன்பர் கி.வா.ஜ-வுக்கு மூச்சு விடக்கூட நேரமில்லை.

## தந்தை உடல் நிலைப்பற்றிய கவலையிடைத் தமிழ்ப் பணி:

தந்தைக்கு உடம்பு சரியில்லையென மோகனூர் சென்ற இவருடைய சகோதரி அங்கேயே ஆறு மாதங்களுக்கும் மேலாகப் பெற்றோருக்கு உதவியாகத் தங்கியிருந்தாள். தந்தையாரின் உடம்பு நாளுக்கு நாள் மோசமாகி வந்ததே தவிரக் குணமாகவில்லை. அங்கிருந்து கடிதம் வந்துகொண்டிருந்தது. இவரால் அந்த நேரம் ஸ்ரீமத் ஐயரைவிட்டு எங்கும் நகர முடியவில்லை.

மோகனூர் ஜாகையைக் கலைத்துக்கொண்டு எல்லோரையும் சென்னைக்கே வந்துவிடும்படி தம் சகோதரிக்கு இவர் எழுதினார். அவர்களும் சென்னை வந்தார்கள். இவர் தம் தந்தைக்கு, டாக்டர் ரிஷியிடம் வைத்தியம் பார்த்தார். இத்துணைத் தொல்லைகளுக்கு மிடையில் தம் ஆசிரியப்பிரானின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யத் தியாகராச செட்டியாரைப்பற்றி ஸ்ரீமத் ஐயர் சொன்ன தகவல்களை வைத்துக்கொண்டு அவரது சரித்திரத்தை இவர் எழுதினார். ஸ்ரீமத் ஐயரிடம் அவ்வப்போது படித்துக் காட்டித் தியாகராசசெட்டியாரின்

சரித்திரத்தைக் 'கலைமக'ளில் மாதந்தோறும் வெளிவரும்படி செய்தார்.

**உலகப் போரினால் நேர்ந்த இடமாற்றம் :**

இரண்டாவது உலக மகாயுத்தம் தீவிரமாக நடந்து கொண்டிருந்த காலம் அது. சிங்கப்பூர், பர்மாவரை யுத்தம் வந்துவிட்டதால், சென்னை நகரமும் குண்டினால் தாக்கப்படும் அபாயம் அதிகரித்து வந்தது.

சென்னையில் இருந்த பெரும்பாலான குடும்பத்தினர் பாதுகாப்பான இடங்களைத் தேடிக் குடியேறினார்கள். சென்னையைவிட்டுப் போக முடியாதவர்கள் தங்கள் குடும்பத்தை வெளியூர்களுக்கு அனுப்பிவிட்டுத் தாங்கள் மட்டும் இங்கே தங்கினார்கள்.

ஸ்ரீமத் ஐயர் ஒரு நாள் தம் வீட்டில் விடியற்காலம் படுக்கையிலிருந்து எழுந்தபோது கீழே விழுந்துவிட்டார். வலப்பக்கம் நல்ல அடி. எக்ஸ்-ரே எடுத்துப் பார்த்ததில் எலும்பு முறிவு இருப்பது தெரிந்தது. அதனால் படுத்த படுக்கையிலிருந்து அவர் நகரக்கூடாது என்று டாக்டர் சொல்லிவிட்டார்.

இந்தச் சமயத்தில் யுத்தபயமும் சேர்ந்துகொண்டதால் ஸ்ரீமத் ஐயரைத் திருக்கழுக்குன்றத்துக்கு எடுத்துச் செல்ல உத்தேசித்தார்கள். அங்கே திருவாவடுதுறை மடத்துக்குச் சொந்தமான ஒரு வீடு உள்ளது. அதில் ஸ்ரீமத் ஐயரைத் தங்க வைக்க ஏற்பாடாயிற்று.

ஒரு நாள் அவரை அங்கே அழைத்துப் போகக் கார் வந்தது. கிளம்புவதற்கு முன் ஸ்ரீமத் ஐயர் தம் வீட்டில் தாம் சேகரித்து வைத்திருந்த புத்தகங்களையெல்லாம் ஒரு முறை கண்ணோட்டமாகப் பார்த்தார்.

தம்மைச் சுற்றியிருந்தவர்களின் வருத்தந் தோய்ந்த முகங்களையெல்லாம் ஆறுதலாக நோக்கினார். சிறிது நேரம் தம் கண்ணை மூடிக்கொண்டு தம் குலதெய்வமும் உபாசனா மூர்த்தியுமான ஸ்ரீ மீனாட்சிசுந்தரரைத் தியானித்தார்.

**மின் விளையப்போவதன் அறிகுறியா?**

"அறிவில் சிறந்த மகாபுருஷர்களைப்பற்றிய சரித்திரங்களில் அவர்கள் தங்கள் மரணத்தைக் குறித்து முன்னரே அறிந்திருப்பார்கள் என்று படிக்கிறோம். உட்காரக்கூட முடியாத நிலையில் ஸ்ரீமத் ஐயர் திருக்கழுக் குன்றத்தை நோக்கிப் புறப்பட்டபோது தம் அருகிலிருந்த ஆத்மார்த்த சிஷ்யர் கி. வா. ஜகந்நாதையரவர்களிடம் மாணிக்கவாசகர் பாடிய,

**'ஞாலமே கரி ஆக நான் உனை நச்சி நச்சிட வந்திடும்**
**காலமே உனை ஓதநீ வந்து காட்டினாய்**
**கழுக்குன்றிலே'**

என்ற பாடலைக் கூறி, 'இறைவன் எனக்கும் அப்படியே அத்தலத்தில் ஒரு வழிகாட்டி அருள்வான் போலும் என்றாராம்'" எனப் பின்பு சேனாபதி இதுபற்றி எழுதினார்.*

அந்தச் சமயம் அன்பர் கி.வா.ஜ-வுக்குத் தம் குடும்பத்தை எங்கே அனுப்பி வைப்பது என்கிற கவலைதான் இருந்தது.

**இடமாற்றம்:**

இவர் தம் தாய், தந்தையரிடம் வைத்திருந்த அன்பும் பாசமும் இவருடைய நண்பரான சேனாபதியின் உள்ளத்தை உருக்கியது. "நீங்கள் கொஞ்சமும் கவலைப் படாதீர்கள். என் தாயாரின் ஊர் மோசூர் தான். அங்கே பத்திரமாக உங்கள் குடும்பத்தை இருக்கச் செய்யலாம். நீங்கள் எங்களது ஊருக்கே வந்துவிடுங்கள்" என இவரை அழைத்தார். மோசூர் அரக்கோணத்திற்குப் பக்கத்திலுள்ளது. அங்கே நல்லதொரு வீட்டையும் இவருக்குப் பார்த்துக் கொடுத்தார்.

மோசூர் சென்னைக்கு அருகில் இருந்ததால், தாம் தம் தந்தையைப் போய் அடிக்கடி பார்த்துவர வசதியாக

* 'தினமணி—28—4—1942

இருக்குமென்று அப்படியே இவரும் தம் குடும்பத்தாரை மோரூருக்கு அனுப்பி வைத்தார்.

x x x

திருக்குழுக்குன்றம் போன பிறகு ஸ்ரீமத் ஐயரது உடல் நலத்தில் கொஞ்சம் முன்னேற்றம் ஏற்பட்டது. மெதுவாகத் தாமே எழுந்து உட்காரவும் தொடங்கினார்.

சென்னையில் தங்கிக்கொண்டிருந்த இவர், அடிக்கடி திருக்கழுக்குன்றம் போவார். அங்கேதான் 'என் சரித்திர'த்தின் சில அத்தியாயங்கள் எழுதப்பட்டன.

வாரந்தோறும் சனி, ஞாயிறு என்றால் அன்பர் கி.வா.ஜ., மோரூருக்குப் போவார். அந்த நாட்களில் அங்குள்ளவர்களோடு ஏரியில் போய்க் குளிப்பது, தாங்கலுக்குப் போய்க் கூழாங்கற்களைப் பொறுக்கி வருவது, உவர் நிலத்துக்குப் போய் உப்பு எடுத்து வருவது போன்ற செயல்களால் தாம் மகிழ்ந்ததோடு, மற்றவர் களையும் மகிழ்வித்திருக்கிறார்.

ஸ்ரீமத் ஐயரைப் பார்க்க இவர் திருக்கழுக்கன்றம் போகும்போதெல்லாம், "உம் தந்தையாருக்கு எப்படி உள்ளது? அவரைக் கவனித்துக்கொள்ளும். அங்கே போம்" என்று அவர் சொல்வார்.

இவர் மோரூருக்கு வந்தால், "ஆசிரியருக்கு உடம்பு எப்படி இருக்கிறது? அவரைவிட்டு நீ ஏன் இங்கு வந்தாய்? அவரிடம் போய் இரு" எனத் தந்தையார் இவரிடம் சொல்வார்.

**பெற்ற தந்தை, ஆசான் இருவரின் பிரிவு:**

1942 ஏப்ரல் 20-ஆம் தேதி இவர் திருக்குழுக்குன்றம் சென்றார். ஸ்ரீமத் ஐயரோடு நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தார்.

"கம்பராமாயணம், தேவாரம் ஆகிய இரண்டையும் நல்ல முறையில் பதிப்பிக்க வேண்டும், அதற்கு நீ

உடனிருந்து உதவி செய்வாயா? கையைக் கொடு'' என ஸ்ரீமத் ஐயர் சொன்னபோது அவருக்கு வயது 88.

''கண்டிப்பாக, தாங்கள் இட்ட பணியைச் செய்வேன்'' எனச் சொல்லி, புழுதியைப் பொன்னாக்கிய தம் ஆசிரியப் பிரானின் திருக்கரத்தைத் தம் கண்களில் இவர் ஒற்றிக் கொண்டபோது இவருக்கு ஒரு புத்துணர்ச்சி பிறந்தது.

குருதேவரின் திருக்கரத்தை ஸ்பரிசிக்கும்போது அதுவே கடைசி முறையாக இருக்குமென இவருக்கு அப்போது தெரியவில்லை!

21-ஆம் தேதி ஸ்ரீமத் ஐயரிடம் விடை பெற்றுக் கொண்டு திருக்கழுக்குன்றத்திலிருந்து இவர் புறப்பட்டு அரக்கோணம் வழியாக மோகூர் வந்தார்.

இவருடைய தந்தையாரின் உடம்பு மிக மோசமாக இருந்தது. இவரைக் காணோமே என இவருடைய வீட்டார் மிகவும் கவலைப்பட்டுக்கொண்டிருந்தார்கள்.

''எல்லாம் உரிய சமயத்தில் வந்துவிடுவான்'' என்று தகப்பனார் சொல்லிக்கொண்டிருந்தாராம்.

இவர் வீட்டிற்குள் நுழைந்தபோது தந்தையாருக்குச் சுய நினைவு தப்பிவிட்டது. ஏதேதோ பிதற்றிக் கொண்டிருந்தார். இவருக்கு அழுகை அழுகையாக வந்தது. தந்தையை இந்த நிலையில் தனியே விட்டுவிட்டு இவருக்கு அலுவலகம் போக மனம் வரவில்லை; சேனாபதிக்கும், அதிபர் ராமரத்தினத்திற்கும் கடிதம் எழுதி அனுப்பினார். செல்லம்மையருக்கும் ஒரு கார்டு எழுதிப் போட்டார்.

முருகனது நாமத்தையும், திருப்புகழையும் சொல்லிக் கொண்டே மோகூரில் தம் தந்தையின் அருகில் இருந்து வந்தார். 25-4-42-ஆம் தேதி தந்தையார் உலக வாழ்வை நீத்தார் தந்தையாருக்கு அப்போது வயது அறுபதுதான்.

மோகூர் மயானம் திருவாலங்காட்டு எல்லையில் அமைந்துள்ளதால் அவ்வூர் வழக்கப்படி இவருடைய தந்தையாரின் சடலத்தைச் செல்வதற்குள் அவ்வூர்

அந்தணர்களே பரிவுடன் தூக்கிச் சென்று, சிதை அடுக்கி எரியூட்டினார்கள்.

"எங்கள் அப்பன் இடம் மோகூர்—திருவாலங்காடு" என இவரும் சொல்லிச் சொல்லி விம்மினார்.

மறு நாள் ஸஞ்சயனம் நடைபெற்றது.

மோகனூரிலுள்ள காவேரியிலே அஸ்தியைக் கரைக்க வேண்டுமென்று எடுத்து வைத்தார்; அன்று இரவே தம் குடும்பத்துடன் இவர் மோகனூர் சென்றார்.

சேலம் வந்து, நாமக்கல் வழியாக மோகனூரை இவர்கள் அடைந்தபோது 28-ஆம் தேதி பிற்பகல் ஒன்றரை மணியாகிவிட்டது. அதன் பின்னர்க் காவேரியில் தம் தந்தையாரின் அஸ்தியைச் கரைத்துவிட்டு மற்றக் காரியங்களை அன்றைய தினமே ஆரம்பித்துக் கொண்டார்.

திருக்கழுக்குன்றத்தில் அன்று (28-4-'42) மாலையில் ஸ்ரீமத் ஐயர் ஸ்ரீ மீனாட்சிசுந்தரேசுவரருடைய திருவடியை அடைந்தார். அன்றைய தினம் இரவே மோகனூரிலிருந்த இவருக்கும் தந்திமூலம் அச்செய்தி கிடைத்தது. அதைப் பார்த்தவுடன் இடிமேல் இடிவிழுந்தாற்போல இவர் அதிர்ந்து போனார்!

தந்தையாரின் கர்மாவைத் துவங்கிக்கொண்டதால் இவரால் உடனே திருக்கழுக்குன்றம் போக முடியவில்லை. "I' ve really lost my Father" என்று தந்தி கொடுத்தார்.

ஒரே வருடம், ஒரே மாதம், ஒரே வாரத்தில் மூன்று நாள் இடைவெளியில் இவர் தம்முடைய ஜனக பிதாவையும் ஞான பிதாவையும் ஒருசேர இழந்த அநாதையானார்.

❋

# முடிவுரை

ஸ்ரீமத் ஐயர் காலமானபோது அவரருகில் இருக்கக் கூடிய பாக்கியம் அவர்தம் பேத்தி வயிற்றுக் கொள்ளுப் பேரர் சங்கரனுக்குத்தான் கிடைத்தது. ஐயருடைய குமாரரும் அப்போது தம் தந்தையின் அருகில் இருக்க வில்லை.

ஸ்ரீமத் ஐயரது மறைவுகுறித்த செய்தியைக் கேட்டுத் தமிழகமே துயரத்தில் ஆழ்ந்தது.

'தினமணி' ஆசிரியரிடமிருந்து, டாக்டர் ஐயரைப் பற்றி உடனே ஒரு கட்டுரை தேவை எனக் 'கலைமகள்' அலுவலகத்துக்கு ஃபோன் வந்தது. இவர் தாம் மோகனூரில் இருந்தாரே; இவருடைய மாணவரும் 'கலை மகள்' உதவி ஆசிரியருமான சேனாபதிதான் சமீபத்தில் இவர் தம்மிடம் சொன்ன நிகழ்ச்சியை மையமாகக் கொண்டு ஐயரவர்களைப்பற்றி ஒரு கட்டுரையை எழுதி அனுப்பினார்.

'தினமணி'யில் வெளியான அந்தக் கட்டுரையை அன்பர் கி.வா.ஜ., படித்தவுடன், மோகனூரிலிருந்தே சேனாபதிக்கு ஒரு கடிதம் எழுதினார். ''ஏற்கனவே என் தந்தையை இழந்த நிலையில், என் குருநாதரையும் இழந்து தவிக்கும் என்னால் ஏதும் எழுத முடியவில்லை. உங்கள் கட்டுரையைப் படித்ததும், உங்களை என் துணைவ ராகக் கொண்டதுபற்றிப் பெருமை கொள்கிறேன்'' என்பதாக இவர் எழுதிய கடிதமே, மற்றவர்களின் பாராட்டுதல்களையும்விட மேலானதாகச் சேனாபதிக்குத் தோன்றியது.

மோகனூரில் தந்தையாரின் காரியங்கள் முடிந்தவுடன் காந்தமலை ஆண்டவனுக்கு அபிஷேகம் செய்வித்தார். அடுத்த தினமே திருக்கழுக்குன்றம் வந்துவிட்டார்.

ஸ்ரீமத் ஐயர் இருந்தபோது அவரது குடும்பத்தில் ஒருவராக இருந்து வந்த இவர், அவரது மறைவுக்குப்பின்

வெறிச்சென்றிருப்பது போன்ற சூழ்நிலையை அங்கே கண்டார்.

அண்ணா சிறு வயதுமுதலே தம் தந்தையாரின் காலடி நிழலிலேயே வளர்ந்தவர். பெரிய மரத்தை யொட்டியே வளர்ந்த கன்று ஒன்று அம்மரம் சாயும்போது தானும் வேர் பெயர்ந்து சாய்ந்தாற்போல் தந்தையாரின் இழப்பினால் மிகவும் பாதிக்கப்பட்ட மனநிலை உடையவராக ஆனவர் ஸ்ரீமத் ஐயரின் குமாரர்தாம்.

அதே சமயம், பத்திரிகையின் பக்கங்களைக் கொஞ்சம் குறைக்க உத்தேசித்துக்கொண்டிருப்பதாகவும், அதனால் ஸ்ரீமத் ஐயரவர்களே சொல்லி எழுதுவித்த இரண்டு மூன்று அத்தியாயங்களைப் போட்டுவிட்டு அத்தொடரை நிறுத்திவிட இருப்பதாகவும் 'ஆனந்த விகடன்' அலுவலகத்தார் சொல்லி விட்டார்கள்.

இவர் மேலும் ஒரு வாரம் அலுவலகத்துக்கு 'லீவ்' போட்டுவிட்டுத் திரும்ப மோகனூருக்கே போய்விட்டார். மோகனூரிலிருந்து திரும்பி வந்தவுடன் இவருடன் பழகிய சிலர், ஸ்ரீமத் ஐயரது வரலாறுபற்றி இவர் எழுதி வைத்திருந்த குறிப்புகள் அனைத்தையும் அண்ணா வேறு யாரிடமோ கொடுத்து அவ் வரலாற்றைப் பூர்த்தி செய்யச் சொல்லியிருப்பதாகத் தெரிவித்தார்கள்.

**மனத்தை வருத்திய நிகழ்ச்சி :**

அண்ணா ஜூன் 19-ஆம் தேதிதான் திருக்கழுக் குன்றத்திலிருந்து சென்னை திரும்பினார். அவர் சென்னை வந்தது தெரிந்தவுடன் அவரைப் போய் இவர் பார்த்தார்.

இவரைக் கண்டவுடனேயே, "நான் என்ன சந்தா அனுப்புகிறேனா, எனக்குக் 'கலைமகள்' அனுப்பிவைக்க!" என்று அண்ணா சொன்னதும் இவருடைய மனம் துணுக் குற்றது. 'கலைமகள்' பத்திரிகை திருக்கழுக்குன்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கப்படவில்லை என்பதே இதற்குக் காரணம். பிறகு அண்ணா, "வேறொருவரை வைத்துக்கொண்டு நானே பாக்கி வரலாற்றை எழுதி

முடிக்கப் போகிறேன். நீர் எழுத வேண்டாம்!'' என்று சொல்லிவிட்டார்.

'என் சரித்திரம்' 1898-ஆம் ஆண்டு முடிய ஸ்ரீமத் ஐயரைக் குறித்த நிகழ்ச்சிகளை மையமாகக் கொண்டு எழுதப்பட்டிருந்தது. ஸ்ரீமத் ஐயரிடம் இவர் வந்து சேர்ந்தது 1927-இல். 1899 முதல் 1927 வரையிலான வரலாற்றுக் குறிப்புகளை ஸ்ரீமத் ஐயரே இவரிடம் பல்வேறு சந்தர்ப்பங்களில் சொல்லியும் வந்திருக்கிறார். 1942 வரை இவர் அவருடன் கூடவே இருந்து வந்திருப்பதால் ஸ்ரீமத் ஐயரது 'சரித்திர'த்தை அப்போதே பூர்த்தி செய்வது இவருக்கு எளிதாக இருந்திருக்கும்; அதை எழுதி முடித்துவிட வேண்டுமென்ற மனோவேகமும் இவருக்கு இருந்தது. மேற்கொண்டு எதுவும் அண்ணாவிடம் பேச்சுக் கொடுக்காமல் தம் ஜாகைக்கு வந்துவிட்டார் கி.வா.ஜ.

மனக்கசப்பு வளராமல் இருக்கத் தாம் கொஞ்சம் மவுனமாகத் தள்ளியே இருப்பது நல்லதாக இருக்கு மென்று இவருக்குத் தோன்றியது.

ஓராண்டுக்குப்பின் திருவல்லிக்கேணி வீட்டைக் காலி செய்தார். பதினைந்து வருஷங்களாக வசித்து வந்த திருவல்லிக்கேணியைவிட்டு, மந்தைவெளி செயின்ட் மேரீஸ் ரோடில் ஒரு வீட்டை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு மயிலாப்பூருக்கே ஜாகை வந்துவிட்டார்.

முருகப்பெருமானையும், தம் குருநாதரையும் நினைந்து நினைந்து சில நாட்கள் மவுனத்தைக் கடைப் பிடித்து வந்தார்.

'கலைமகள்' அலுவலகம் போவார். இரவு வீட்டிற்கு வந்தவுடன் தம்மிடம் வரும் அன்பர்களுக்கு இலவசமாகத் தமிழ்ப் பாடம் சொல்லுவார்.

திருவல்லிக்கேணியில் இருந்த சமயம் தம் ஓய்வு நாட்களில் 'தியாகராஜ விலாசம்' போய்வந்தார். அரைகுறையாக இருந்துவந்த பதிப்பு வேலைகள்

சிலவற்றை ஸ்ரீமத் ஐயருடைய குமாரரோடு இருந்து முடித்தும் கொடுத்தார். இதில் இவர் சுயகவுரவும் பார்க்கவில்லை.

x x x

**அனைவருடனும் பழகும் பாங்கு :**

''இவரது எழுத்தை அலங்கரிக்காத தமிழ்ப் பத்திரிகைகள் இல்லை எனலாம். ஒருபுறம் கதை, கட்டுரை, கவிதை ஆகியவற்றை இலக்கிய ஏடுகளில் எழுதி வந்தார் என்றால், மறு புறம் 'திருப்புகழ் அமிர்தம்', 'அமிர்த வசனி', 'ராமகிருஷ்ண விஜயம்', 'சங்கரக்ருபா' ஆகியவற்றில் பக்திநெறிக்கு உரமூட்டும் சமய - இலக்கியக் கட்டுரைகள் பலவற்றையும் எழுதி வந்தார்.

குழந்தைகள்முதல் பல வயசினரிடையே—செல்வர்-ஏழையர், படித்தவர் - படிக்காதவர், கட்சித் தொடர்பு கொண்டோர் - இல்லாதோர், எல்லாச் சாதியினர் - மதத்தினர் அனைவரிடத்தும் அவரவர் நிலைக்குத் தகுந்தவாறு இவர் பேசியும் பழகியும் வந்த அன்புமுறை போற்றத் தக்கது.

**அண்ணாவின் அவா :**

ஸ்ரீமத் ஐயருடைய வரலாற்றின் பிற்பகுதியை எழுதி முடித்துவிட வேண்டுமென்ற எண்ணம் ஸ்ரீமத் ஐயருடைய குமாரருக்கு இருந்தது.

ஆ.வி. - இல் வெளியான 'என் சரித்திர'த்தின் 122 அத்தியாயங்களைமட்டும் அப்படியே ஒரு நூல் வடிவில் அவர் கொண்டு வந்தபோது அதன் முகவுரையில், ''திருவருள் துணை கொண்டும், அன்பர்கள் உதவி கொண்டும் தந்தையாரின் 'என் சரித்திர'த்தின் தொடர்ச்சியாக அவர்கள் வரலாற்றைப் பூர்த்து செய்து வெளியிடலாமென்று கருதியுள்ளேன்'' என எழுதினார்.

'என் தந்தையார்' என்ற பெயரில் அதை எழுதிப் பூர்த்தி செய்யும் பேறு அவருக்குக் கிடைக்கவில்லை. தந்தைக்குப் பின் அவரும் அதிக ஆண்டுகள் இருக்கவில்லை *

* மறைவு 1—10—1950

தம் தந்தையாரிடத்தில் அவர் கொண்டிருந்த அன்பும் மரியாதையும் எல்லையற்றனவாக இருந்தன. தந்தையார் காலமானதுகுறித்து இரங்கற் செய்தி அனுப்பி வைத்த பலருக்கும் தம் நன்றியைத் தெரிவித்து வந்தார். புகழுரை வழங்கிய பெரியவர்கள் பலரையும் நேரில் சென்று கண்டு நன்றி கூறி வந்தார்.

"The passing away of Mahamahopadhyaya Pandit Swaminatha Iyer has removed from India another great influence so closely following the passing away of Poet Rabindranath Tagore. It is a great misfortune for our country, though perhaps only South India would know of such a loss. If the Mahamahopadhyaya had written in English and had travelled around the world, he certainly would have been recognised as one of the greatest contributors to the cultural renaissance of the world. But his contribution to the Tamil language and learning, whether it is in English or not, makes no difference to the greatness of his personality"

என்பதாக ஸ்ரீமத் ஐயரைப்பற்றி அடையாறு கலாக்ஷேத்திரத்தை நிறுவிய ருக்மிணி தேவி 'யங் சிட்டிசன்' என்ற ஆங்கிலப் பத்திரிகையில் எழுதியிருந்தார். இதைப் படித்தவுடன் ஸ்ரீமத் ஐயருடைய குமாரர் தம் தந்தையாரின் பெரும் புகழை நினைந்து கண்ணீர் சொரிந்தார். அடையாறு பிரம்மஞான சங்கத்தில் உயர்நிலை தாங்கி வந்த ருக்மிணி தேவியை முதல் முறையாகத் தாமே நேரில் சென்று பார்த்து நன்றி கூறி வந்தார்.

இடையில் ஐயரது மறைவுக்காகச் சென்னை நகர மக்களின் இரங்கல் கூட்டம் ஒன்று சென்னை ஒய்.எம்.ஸி.ஏ., மண்டபத்தில் நடைபெற்றது. நகரப் பிரமுகர்கள் பலரும் அன்று பேசினார்கள்; ஐயரது தமிழ்த் தொண்டைப் பாராட்டினார்கள். இரண்டொருவர், "ஐயரவர்களை ஒரு தேசிய மகானாகக் கொண்டாட

வேண்டும். அவருடைய இல்லத்தையும், அவர் தேடி வைத்திருந்த சுவடிகளையும், பதிப்பித்த நூல்களையும், குறித்து வைத்திருந்த குறிப்புகள் பலவற்றையும் நாட்டின் பொதுவுடைமையாக்கி அவற்றைப் பலருக்கும் பயன்படும் படி செய்ய வேண்டும்'' என்றும், ''இதுவே அவர்பால் நாடு கொண்டுள்ள கட்டுப்பாட்டுக்கு கைம்மாறாகும்'' என்றும் மிக உருக்கமாகப் பேசினார்கள்.

ஐயருடைய குமாரரும் அந்தக் கூட்டத்தில் பங்கு கொண்டார். அச்சமயம் தாம் நோயினால் பாதிக்கப் பெற்றிருக்கவே, கி.வா.ஜ-வினால் அங்கே போக இயலவில்லை. சேனாபதியை அனுப்பியிருந்தார். மேடை அநுதாபமும், அன்பும் மேடையோடே என்ற உண்மையை அண்ணா உணரவில்லை; தந்தையார் மிகுந்த பாடுபட்டுத் தேடிவைத்த அரிய பொக்கிஷத்தை நாட்டின் பொது வுடைமையாக்கினால், அதன் அருமை தெரியாதவர்களின் கையில் அகப்பட்டுச் அது சீரழிய நேருமோ என்று அவர் ஏங்கலானார்.

தம் தந்தையாரை உலகப் பெரியாராகப் பெற்றதன் பயன் அவர் வாழ்ந்த இல்லத்திலே தாமும், தம் குடும்பமும், பரம்பரையும் வாழக் கொடுத்து வைக்காமல் போய்விடுமோ என்கிற திகிலும் அவருக்கு ஏற்பட்டது. அனைவர்க்கும் அவருடைய சுவடிகள் பயன் படும்படி என்ன செய்யலாம் என யோசித்தபோதுதான், இறைவனது திருவருள் கூட்டலாலோ, ஸ்ரீமத் ஐயரது திருவுள்ளப்பணித்தலாலோ, தமிழன்னைக்கு விருப்பம் விளைந்தமையாலோ கலாக்ஷேத்திர ருக்மிணி தேவியார் எழுதியிருந்த குறிப்புப்பற்றிய நினைவு அண்ணாவுக்கு வந்தது.

அடுத்த நாளே ருக்மிணி தேவியிடம் போய்ப் பேசினார். அவரும் உதவ முன்வந்தார். ஸ்ரீமத் ஐயரவர் களின் தொகுப்புகளாகிய சுவடிகளைக் கொண்டு அவர் து

பெயரால் ஒரு தனி நூல் நிலையம் நிறுவுவது என்று தீர்மானித்தார்கள், கலாக்ஷேத்திரத்தினர்.

அவ்வாறே மகாமகோபாத்தியாய ஐயரவர்களுக்குச் சொந்தமான 939 அரிய ஓலைச்சுவடிகளுடன் அடையாறு பிரம்மஞான சபை மண்டபத்தில் ஒரு பெரிய அறையில் ஸ்ரீமதி ருக்மிணி தேவியாரை அத்யக்ஷகராகவும், ஸ்ரீ கல்யாணசுந்தரமையரைக் கவுரவச் செயலாளராகவும், பேராசியர் விசுவநாதையரின் மேற்பார்வையில் வித்துவான் ச. கு. கணபதி ஐயரையும், சிரோமணி இராமாநுஜ ஐயங்கார் அவர்களையும் பண்டிதர்களாகவும் கொண்டு 5—3—1943 அன்று நீதிபதி என். சந்திரசேகர ஐயரவர்களால் அந்த நூல் நிலையம் திறக்கப்பெற்றது.*

**துறவியரிடம் கி.வா.ஜ., பற்று :**

துறவு மனப்பான்மை கொண்ட அன்பர் கி.வா.ஜ., தம் இளமையில் பல துறவிகளோடு பழகி வந்திருக்கிறார்.

சைவ மடங்களின் தலைவர்களோடு மட்டுமன்றிச் சங்கர மடங்களின் தலைவர்களோடும் ராமகிருஷ்ண மடங்களின் தலைவர்களோடும் இவருக்குத் தொடர்பு அதிகரித்து வந்தது. சேந்தமங்கலம் சுவாமிகளின் சீடரான துரியானந்தர் ஆகியோருடன் நெருக்கிப் பழகியிருக்கிறார்.

ரமண பகவானையும் பல முறை தரிசித்திருக்கிறார். அவரைப்பற்றிய நூலும் எழுதியிருக்கிறார். இவருடைய அன்பரான முருகனார் பகவானுடனேயே இருந்து வந்தார். அதனால் திருவண்ணாமலை போனால் இவர்

* இதுபற்றிக் கி.வா.ஜ., "டாக்டர் ஐயரவர்கள் சேகரித்து வைத்த ஏட்டுச் சுவடிகள் தமிழர்க்குச் சிறந்த நிதி போன்றவை. இனி இடம், பொருள், ஏவல் சிறக்கச் சிறக்கக் அவற்றால் உண்டாகும் பயனும் சிறக்கும். நல்ல இடம் கிடைத்துவிட்டது. மற்ற உதவிகளும் கிடைக்கும்படி செய்வது, தமிழர் கடமை" எனக் 'கலைமக'ளில் குறிப்பிட்டிருந்தார்.

ரமணாசிரமம் போகாமல் இருந்ததில்லை. பின்பு அங்கே 'கங்கைக் கரையில் முளைத்த கற்பக விருட்சம்' என இவர் போற்றிய தவயோகி ராம் சுரத் குமாரரையும் தரிசிப்பது வழக்கம். வள்ளிமலைத் திருப்புகழ் சுவாமிகள், ஸ்ரீ சரவண பவானந்தர் ஆகியோரோடும் பழக்கம் இருந்தது.

சென்னை வானொலியில் 'அருள் வாக்கு' என்கிற நிகழ்ச்சியில் இவரும் பல நாட்கள் பேசியிருக்கிறார். அதைக் கேட்டு இவரோடு தொடர்பு கொண்ட பெரியவர்கள் பலர். அண்மையில் மறைந்த ஆண்டவன் பிச்சி' என்று காஞ்சிப் பெரியவர் அழைத்த எளிய முருகபக்தையான மரகதம்மாளின் அருட் பாடல்களைக் கேட்டு வியந்த இவர் அந்த அம்மையாரை நேரில் 1952 - இல் சென்று வணங்கியதுண்டு.

"நான் இன்ன சந்தேகத்தைக் காஞ்சி பரமா சார் சுவாமிகளிடம் கேட்டேன். அவர், 'ஜகந்நாதனிடம் போய்க் கேட்டுக்கொள்; சொல்வான்' என உங்களிடம் என்னை அனுப்பினார்" என்பதாகச் சில இளந்துறவிகளும் இவரோடு தொடர்பு கொண்டிருக்கிறார்கள்.

**வடகுமரைச் சுவாமிகளின் அன்பர் ஆதல் :**

தமிழ்நாட்டில் இருந்த எல்லா ஞானியருக்கும், பெரிய வர்களுக்கும் வடகுமரை சுவாமிகளைத் தெரியும். ஒரு முறை காஞ்சி பரமாசார்யர் ஆத்தூரில் முகாமிட் டிருந்தபோது வெங்கலூர் போனார்கள். மேனா போய்க்கொண்டிருக்கும்போது, ஓரிடத்தில் அதை நிறுத்தும்படி சொல்லி, அருகிலிருந்த வரிடம், "இவ்விடம் வைஷ்ணவ குலத்து அதிவர்ணாச்ரமி ஒருவர் இருக்கிறாரே, அவரை அழைத்து வாருங்கள், பார்க்கவேண்டும்" என்றாராம்.

ஸ்ரீ அப்பண்ண சுவாமிகளைக் காஞ்சி முனிவரிடம் அழைத்து வந்தார்களாம். சிறிது நேரம் இவர்கள் இரு வருமே ஒருவரை யொருவர் கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டார்களாம். காஞ்சி முனிவர் தம் கழுத்திலிருந்த

மலர் மாலையை எடுத்து ஸ்ரீ அப்பண்ணா சுவாமிகளுக்கு அணிவித்தாராம். ''நல்ல அநுபூதிமான்'' என அருகில் இருந்தவரிடம் சொன்னாராம்.

x x x

அப்பண்ணா சுவாமிகள் 28-9-62-ஆம் நாள் வெள்ளிக் கிழமை மஹாலய அமாவாசைப் புண்ணிய தினத்தில் வடகுமரையில் தம் ஐம்பதாம் பிராயத்திலேயே உடற்சிறையினின்றும் விடுதலை பெற்றார்கள்; என்றாலும், தம் அடியார்களின் உள்ளங்களில் எல்லாம் இன்றைக்கும் கொலுவிருந்து நலம் பாவித்து வருகிறார்.

x x x

ஸ்ரீ அப்பண்ணா சுவாமிகளுடன் இவர் பலகாலம் பழகியிருக்கிறார்.

தாம் வாழ்ந்த மந்தைவெளிப் பகுதியில் 1956-இல் கட்டிய தம் இல்லமான 'காந்தமலை'யில் இருந்தபடி மயிலை பக்தஜன சபா என்ற ஸ்தாபனத்தைத் தம் அன்பர்களோடுசேர்ந்து அமைத்துக்கொண்டு 'வள்ளி கல்யாணம்', 'ராதா கல்யாணம்', 'சீதா கல்யாணம்' என்பனவாகக் கல்யாண வைபவங்களை இவர் பலகாலம் நடத்தி வந்தார். அப்போது சுவாமிகளை சந்திக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. இன்று அந்தப் பகுதிக்கே 'கல்யாண நகர்' என்று பெயர் வந்துவிட்டது.

நாட் அண்ணாஜி ராவ், அவருடைய குமாரர் ஹரிதாஸ ஸ்வாமிகள், குஞ்சுமணி, ஜெமினி பாலகிருஷ்ணன் போன்ற பல பாகவதர்களின் கோஷ்டியுடன் கலந்து கொள்வார், கி.வா.ஜ. வீதியை அடைத்துப் பந்தல் போட்டிருப்பார்கள். உஞ்ச வ்ருத்தி எடுத்துக்கொண்டு வீதிகளைக் கடந்து பஜனை செய்து வருவார்கள். இரவு முழுவதும் அகண்ட பஜனை நடைபெறும். அப்போதெல்லாம் வடகுமரை சுவாமிகளும் சில சமயம் அதில் பங்கு பெறுவார்.

ஆண்டுதோறும் திருக்கல்யாணம் முடிந்து பாகவ தோத்தமர்களின் பந்தி போஜனம் நடக்கும்; அவர்கள் உண்ட கலங்களின்மீது இவர் உருண்டு அங்கப் பிரதட்சிணம் செய்துகொள்வார்.

இவருடைய மனவுறுதிக்கும், பக்திக்கும் ஓரே ஓர் எடுத்துக்காட்டு: இது இவரது 1952-ஆம் ஆண்டு நாட் குறிப்பில் உள்ளது.

"ஸ்ரீ அப்பண்ண சுவாமிகள் முன்கூட்டியே தைப் பூசத்திற்கு வடகுமரை வரவேண்டுமென்று சொல்லி யிருந்தார். குழந்தை முருகனுக்கு உடம்பு சரியில்லை. ஜெனரல் ஆஸ்பத்திரியில் சேர்த்திருந்தேன். இந்நிலையில் ரத்தம் ஏற்ற வேண்டியிருக்கவே வடகுமரை போகலாமா என்று யோசித்தேன். எல்லாம் முருகன் திருவருள் என உறுதியாக நினைந்து செல்லம்மையருடன் தூத்துக்குடி எக்ஸ் பிரஸ்ஸில் கிளம்பிவிட்டேன். காலையில் விருத்தாசலத்தில் இறங்கி வேறு ரெயிலேறிச் சார்வாயில் இறங்கி வடகுமரை வந்தேன்.

"பூஜ்யஸ்ரீ அப்பண்ண சுவாமிகளைக் கண்டேன். தைப்பூச விழா, மத்தியான்னம் முருகனுக்கும், பிற்பகலில் பெருமாளுக்கும் நடைபெற்றன. பெரம்பலூர் அங்கப்பன் நாயனம். இரவு அபிஷேகம். பஜனை விடிய விடிய நடை பெற்றது. வடகுமரை ஸ்ரீ அப்பண்ண சுவாமிகளின் சந்நி தானத்தில் என் துன்பங்களை எல்லாம் மறந்து இருந்தேன். சென்னையில் அன்றுதான் 'குழந்தை முருகனுக்கு இனி ஆபத்து இல்லை. வீட்டிற்கு எடுத்துக்கொண்டு போகலாம்' என டாக்டர்கள் சொன்னார்களாம்.

**"காந்த மலையான் கழலே துணையென்று**
**போந்த துயரெல்லாம் போக்கினேன்—தீந்தமிழில்**
**பாடிப் பரவிப் பணிந்தினிது வாழ்வதன்றி**
**நாடுஞ் செயலேது நமக்கு?"**

ஸ்ரீ அப்பண்ண சுவாமிகள் செருக்களை ஸ்ரீ வைஷ்ண வர்கள் மரபில் கொங்குப்பிராட்டியார் என்னும் வகையில்

திருவவதாரம் செய்தவர். தந்தை கொரக்கவாடி ராமசாமி ஐயங்கார் வடமொழிப் புலவர்.

சிறு வயதிலேயே அவர் வீட்டை விட்டு வெளியேறிப் பித்துப் பிடித்தவர்போல் திரிவாராம். சில சமயம் அன்ன தானம் நடக்கும் இடத்தில் தொண்டராகப் பணி புரியவும் செய்வாராம்.

பின்பு ஒரு நாள் வடகுமரையில் பிரக்ஞையற்று அவர் கிடந்தபோது வேளாண் தம்பதிகளான அருணாசலமும் அகிலாண்ட அம்மாளும் அவரை மகனாகவே கருதிப் பாசத்துடன் நடந்துகொண்டார்களாம்.

'சுவாமிகள்' என்று சொல்வதற்கு அவரிடம் தனி அடையாளம் ஏதும் இருந்ததில்லை. எளிய கிராமவாசி போல்தான் இருப்பார்.

''அவருக்குக் குடும்பம் இல்லை; சாதி இல்லை; குலம் இல்லை; சமயம் இல்லை'' என்று அன்பர் கி.வா.ஜ., வடகுமரை ஸ்ரீ அப்பண்ண சுவாமிகளைப்பற்றிச் சொல்வார்.

இவரும் சாதி சமயப் பிணக்கு அறுக்கும் சோதியைக் கண்டவர்தாமே? அப்பண்ணா வந்துவிட்டால் பல இடங்களுக்குப் போவார். இவர் ஆற்றும் 'கந்தர் அலங்கார'ச் சொற்பொழிவுக்கு அப்பண்ணா வருவார். அப்போதெல்லாம் சுவாமிகளும் என்னுடன் சகஜமாகப் பேசிப் பழகிய காரணத்தினால் ஒரு முறை, ''உங்களுக்கு 'வெறி அப்பண்ணா' என் பெயர் எப்படி ஏற்பட்டது?'' என்று அவரிடமே கேட்டுவிட்டேன்.*

சற்றே மவுனமாக இருந்த சுவாமிகள் லேசாகச் சிரித்தார்; கண்களில் நீர் துளும்பியது. பிறகு, ''தென்னை மரம் ஏறத் தெரியாதவன் ரொம்பச் சிரமப்பட்டு மார்பு தேயக் கைகால்களால் மரத்தை அணைத்துக்கொண்டு மேலே ஏறிவிட்டான். இறங்கவேண்டுமே! மரத்தின்

உச்சியில் எத்தனை நேரம் உட்கார முடியும்? என்ன செய்வான்? அவனுடைய கைகால்கள் வெடவெடவென நடுங்கும். 'செத்தே போய்விட்டேன்' என்று அலறுவான்; ஆரம்பத்தில் என் நிலையும் அப்படித்தான். முருகன் என்னை எங்கோ சுற்றவிட்டான். யாரோ கல்லெறியப் போக, நானே எதிர்பார்க்காத நேரத்தில், என் கைக்கு வந்தான்.

"பல சமயம் மண்டையெல்லாம் கொதிக்கும். 'செய்வதறியாமல் ஓடுவேன். நினைவற்று வீழ்ந்து விடுவேன். ஏதோ ஒரு சப்தம் என் காதில் கேட்டுக் கொண்டே இருக்கும். பிறர் சொல்வது என் காதில் விழாது. யார் எதைக் கொடுத்தாலும் தூக்கி எறிவேனாம். சோற்றைத் தலையிலும் உடம்பிலும் பூசிக் கொள்வேனாம். குடிக்கத் தண்ணீர் கொடுத்தால் தலையில் கொட்டிக்கொள்வேனாம். யாரும் என் அருகில் வர முடியாதாம். அதனால்தான் 'வெறி அப்பண்ணா' என்ற பெயர் வந்தது" என்ற சுவாமிகள் கடகடவெனச் சிரித்தார்.

ராமகிருஷ்ண பரமஹம்சரின் படத்தைப் பலமுறை பார்த்திருக்கிறேன். ஸ்ரீ அப்பண்ண சுவாமிகளின் முகமும், தாடியும் எனக்கு அப்படிக் காட்சி தந்தன. அவர் உட்கார்ந்திருந்த தன்மை என் உயிரையே ஜிவ்வெனப் பிடித்து இழுத்தது.

**அன்பர் கி.வா.ஜ-வின் அநுபூதிபற்றிச் சுவாமிகள் :**

"காந்தமலைக் குன்றுடையோன் சமூகம் சேர்க; சோர்வு தீரும்—தெளிவு பிறக்கும் என்ற உந்தல் ஏற்பட்டது. காந்தமலைக்கு வந்தேன். கி.வா.ஜ., பாற்குடம் எடுத்து வந்தார். அன்று முருகனது சொரூப மாகவே இவர் எனக்குக் காட்சி தந்தார். என் மனம் இவரைப் போய்த் தாவித் தழுவிக்கொண்டது இவர் பேசினார்; இவர் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் என்

காதில் விழுந்தது. நான் சாதாரண மனிதன்; இவர் என் அநுபவத்தையே படிப்படியாக நானே எடுத்துச் சொல்வது போல உணர்ந்தேன். தமிழ்ப் பாண்டித்தியம்மட்டும் இருந்தால் அப்படிப் பேசிவிட முடியுமா? நிஷ்டாநுபூதி பெற்ற காந்தமலைச் செல்வர் இவர் என்பதை இவரது பேச்சே எனக்குக் காட்டிக் கொடுத்துவிட்டது. நீந்தத் தெரியாத குழந்தை போல அருளநுப மடுவில் தவறி வீழ்ந்து தத்தளித்துக்கொண்டிருந்த என்னைக் கரையிலே இழுத்துப் போட்டார். நானும் இவருடன் பேசிப் பேசி இப் போது, வருகிறவர்கள் நிலைக்கேற்ப என் நிலையிலிருந்து இறங்கி வந்து பேசுகிறேன் என்னை இப்போது யாரும் 'வெறி அப்பண்ணா' என்பதில்லை. பல கற்றேன் இவரிடம். இப்போது என்னை உட்காரச் சொல்லிப் பேசவிட்டுவிட்டு இவர் துரியாதீத நிலைக்கே போய்விடுகிறார்....'' என்றார் சுவாமிகள்

**ஆசான் மறைந்த பின்னும் அன்னாருக்குத் தொண்டு:**

கலாக்ஷேத்திரத்தில் ஸ்ரீமத் ஐயரின் பெயரால் அமைந்த நூல் நிலையத்தினர் ஸ்ரீமத் ஐயரின் பிறந்த தினத்தை ஆண்டுதோறும் கொண்டாடி வரலானார்கள். அன்பர் கி. வா. ஜ., அதில் கலந்துகொள்ளாமல் இருந்ததில்லை.

தந்தையாரான கல்யாணசுந்தரம் ஐயரின் மறைவுக்குப்பின், மைய அரசின் தபால்துறை அதிகாரி யாகப் பணியாற்றி வந்த அவருடைய புதல்வர் சுப்பிரமணியம் அவர்கள் உ.வே. சாமிநாதையர் நூல் நிலையத்தின் மேற்பார்வையாளர் ஆனார். நிறையத் தமிழ் நூல்களை அழுத்தமாகப் படித்தவர் அவர். இருந்தும் அடக்கமாகப் பேசிப்பழகும் இனிய சுபாவம் உடையவர்,

'ஸ்ரீமத் ஐயரையும் இவரையும்பற்றித் தமிழுலகம் எவ்வாறு அறிந்துகொண்டிருக்கிறது?' என்பதை நன்கு உணர்ந்தவர் அன்பர் க. சுப்பிரமணியம். இவரைக்

கொண்டே ஸ்ரீமத் ஐயருடைய பாடல்களைத் 'தமிழ்ப்பா மஞ்சரி' என தொகுத்ததை வெளியிடவும், பாதியில் நின்று போன ஸ்ரீமத் ஐயரது 'சுய சரிதை'யின் பிற்பகுதியை 'என் ஆசிரியப்பிரான்' என்கிற தலைப்பில் இவரைவிட்டே பூர்த்தி செய்யச் சொல்லியும் இவரைப் பெருமைப்படுத்தியிருப்பது ஸ்ரீமத் ஐயரின் பேரர் க. சுப்பிரமணியத்தின் சாதனையே யாகும்.

அன்பர் கி.வா.ஜ-வும் தம் இறுதி நாள் வரை டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல் நிலையத்தின் ஆராய்ச்சித்துறை இயக்குநராக இருந்து, தமிழ்த் தொண்டாற்றியுள்ளார்.

**அன்பர் கி.வா.ஜ., மறைவு :**

'விபவ வருஷம் ஐப்பசி மாதம் கிருஷ்ண பட்ச ஏகாதசி யன்று (4—11—1988) இவர் தம் வாழ்வை நிறைவு செய்து கொண்டார். பலரது உள்ளத்தையும் அன்பால் ஈர்த்து, இன்பமூட்டி வந்த காந்தமலை ஜோதி, 'பழகிய ஐவரையுமே' கைவிட்டு, மெய்விட்டு எல்லையற்ற பெருஞ் சோதியுள் கலந்தது.

முருகனது திருவடியை இவர் அடைந்த செய்தி, வானொலி, தொலைக்காட்சிகள்மூலம் அன்றே எங்கும் பரவியது. பலரும் துயரத்துள் ஆழ்ந்தனர். பத்திரிகைகள் இவரது மறைவைப்பற்றி வருந்தி எழுதின.

''தமிழ் இலக்கியப் பேரறிஞர் ஒருவரைத் தமிழ் உலகம் இழந்துவிட்டது'' என நம் குடியரசுத் தலைவரும் வேறு பல அறிஞர்களும் இரங்கல் செய்தி விடுத்தனர்.

'எத்தொழிலைச் செய்தாலும், ஏதவத்தைப் பட்டாலும் முத்தர் மனமிருக்கும் மோனத்தே' என்கிற பாட்டின் உண்மைப் பொருளை இவரிடத்துத்தான் கண்டேன்.

இவர் உடம்புக்கு வந்த நோய் என்ன?

ஒரு நாள் தம் இதயத்தில் கை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார்.

"மார்பு வலிக்கிறதா?" என்று மனைவியார் கேட்டார்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை" என்றார் இவர்.

"சும்மா மூடி மறைக்காதீர்கள்! டாக்டரிடம் போகலாம்" என்றார் மனைவியார். இவர், "வேண்டாம்" என்றாலும் இவரை அவர்கள் விடுவதாக இல்லை. இதய நோய் நிபுணரிடம் அழைத்துப் போனார்கள்.

"நல்ல ஓய்வு வேண்டும்" எனச் சொல்லி டாக்டரும் சிகிச்சையைத் தொடங்கிக்கொண்டார்.

இவரும் சொற்பொழிவாற்ற வெளியூர்களுக்குப் போவதை நிறுத்திக்கொண்டார். சாப்பாட்டைக் குறைத்துக்கொண்டார். பார்க்க வருகிறவர்களிடமும் முன்போல உரையாடுவதில்லை.

ஆனால் இவரோ தம் தலையில் வெம்மை வரும் போதெல்லாம் புற இருளைப் போக்குகின்ற செங்கதிரோன் போல மாக்களது மன இருளை நீக்கும் 'பெரிய புராண'த்தை எடுத்து வைத்துக்கொண்டு படித்துக் கொண்டிருந்தார்.

திருத்தொண்டர் புராணத்திலே தம் மனத்தை லயப் படுத்திக்கொண்டார் என்றுகூடச் சொல்லலாம்.

'கூடும் அன்பினில் கும்பிடலே யன்றி வீடும் வேண்டா விறலினர்' களான நாயன்மார்களின் வரலாற்றைப் பகலிரவு அற்ற நிலையில் எழுதிக்கொண்டே இருந்தார்.

மோட்சம் என்றால் என்ன? அகப்பட்டுக் கொண்டவன் எந்த இடத்தில் அகப்பட்டுக் கொண்டானோ அதிலிருந்து விடுபடுவதுதானே! பிரச்னை

இல்லாத வாழ்வு துறவிகளுக்குமட்டும் இருக்கிறதா, என்ன? எந்த நிலையில் இருந்தாலும் எப்போது மனம் பக்குவம் அடைந்துவிடுகிறதோ—எவ்வளவு துக்கம் வந்தாலும், துயரம் வந்தாலும், கஷ்டம் வந்தாலும், அவமானம் வந்தாலும் அவற்றால் துயரமோ, கோபமோ கொள்ளாத ஆனந்தத்தில் சதா இருக்கும்படியான மனப்பக்குவம் எப்போது ஏற்பட்டு விடுகிறதோ—அப்போது கட்டுகள் விடுபட்டுப் போகின்றன. அதே நிலையில் இருந்தார் நம் அன்பர் கி.வா.ஜ.

''வெள்ளரிப் பழத்துக்கு 'உர்வாருகம்' என்று பெயர். த்ரயம்பக மந்திரத்தில் 'வெள்ளரிப் பழம் போல மோட்சம் தரவேண்டும்' எனச் சொல்லப்படுகிறது. மற்றப் பழங்களைப் போலல்லாமல் வெள்ளரிப்பழம் பழுத்து விட்டது என்றாலும், இருக்கிற இடத்தில்தான் இருக்கும். காம்புதான் அதை விட்டுவிடுகிறது. என்றைக்குக் காம்பு அதை விட்டது என்றே சொல்ல முடியாது; அந்தக் கொடி காய்ந்து நகரும்போதுதான் காம்பு அதை விட்டுவிட்டது எனத் தெரியும்'' என்பதாகக் காஞ்சிப் பெரியவர் ஸ்ரீமத் சந்திரசேகரேந்திர சுவாமிகள் சொல்வார்.

அமரர் கி.வா.ஜ., பெற்ற அந்த மோட்ச நிலையே—ஸ்கந்த சாம்ராஜ்யம் என நாங்கள் நம்புகிறோம்.

**இறுதிவரை குருபக்தியில் திளைத்த உத்தமர் :**

1966-இல் காஞ்சிப் பெரியவர் சென்னை வந்தார்கள். கல்யாண நகரைச் சேர்ந்த இவர், அந்தப் பெரியவருக்குக் கனகாபிஷேகம் செய்ய வேண்டுமென்று ஆசைப்பட்டார். 4—3—66 அன்று பெரியவரையே நேரில் போய்த் தரிசித்துக்கொண்டு விண்ணப்பித்துக் கொண்டார். மற்ற அன்பர்களுடன் கனகாபிஷேகம் செய்யலாமென்று உத்தரவாயிற்று.

இவர்கள் தங்கம், பணம் எல்லாவற்றையும் கொண்டு போய் மாம்பலம் ஜுவல்லர் ராமநாதனிடம் காசுகள் பண்ணக் கொடுத்து வந்தார்கள்.

கனகாபிஷேகத்திற்கு முதல் நாள் மேலும் 50 காசுகள் தேவையென அறிந்தார்கள். இரவோடு இரவாக மாம்பலம் சென்று மேலும் 75 காசுகளுக்கான தங்கமும் பணமும் கொடுத்து, எப்படியாவது மறு நாள் காலைக்குள் காசுகளை அடித்துத் தரும்படி ராமநாதனின் 'காலில் விழுந்து கெஞ்சாத குறையாக வேண்டிக்கொண்டார்கள். 9-3-66 அன்று காலை ஐந்தரை மணிக் கெல்லாம் காஞ்சிப்பெரியவர் புறப்பட்டுக் கல்யாண நகர் வந்தார்கள். புதுப்பெரியவர் முன்பே வந்துவிட்டார். கல்யாணநகர் சங்கத்தில் ஆயிரக் கணக்கான பேர்கொண்ட கூட்டம். புதுப் பெரியவர் முதல்கால பூஜை செய்தார்.

பெரியவர் பத்தரை மணிக்கே பூஜையை ஆரம்பித்து விட்டார் தாரா பாத்ர அபிஷேகம் செய்த பிறகு கனகாபிஷேகம் ஆரம்பமாயிற்று. முதல் நாள் போய் 'ஆர்டர்' கொடுத்த காசுகள் இன்னும் வந்து சேரவில்லை!

பிற்பகல் 1 மணிக்கு, இருந்த காசுகளைக் கொண்டு புதுப் பெரியவர் பெரியவருக்குக் கனகாபிஷேம் செய்தார். பெரியவர் பிட்சை செய்த பிறகு பிரசாதம் தர அழைத்தார்கள். அப்போது மணி மூன்று இருக்கும்.

அந்த நேரந்தான் மாம்பலம் ராமநாதன் 75 தங்கக் காசுகளை எடுத்துக்கொண்டு வந்து கொடுத்தார். அவற்றைப் பெரியவரின் முன்வைத்து, "இப்போதுதான் வந்தது" என்று இவர் சொன்னார்.

இவரை நிமிர்ந்து பார்த்த காஞ்சி முனிவர், புன்சிரிப் போடு, "நீ அபிஷேகம் செய்துவிடு. ஏகாந்த அபிஷேகமாக இருக்கட்டும்" என்று சொன்னார்.

பக்தி உள்த்தே பொங்கிட விம்மியபடி அந்தக் காசு களை இவர் தம் திருக்கரத்தால் காஞ்சிப் பெரியவருக்கு அபிஷேகம் செய்தார். ஆனந்தம் தாங்க முடியவில்லை.

அந்த ஆண்டுதான் இவரது மணி விழாவும் நடைபெற்றது.

நாராயணியம்மாள் கல்யாண மண்டபத்தில் ஏராளமான கூட்டம். எல்லோரும் இவரைப் பாராட்டிப் பேசினார்கள். இவர் நன்றியுரையின்போது, "உயர்ந்தவன், உயர்ந்தவன் என்று நீங்கள் எல்லாம் என்னைப் பாராட்டினீர்கள். நான் உயர்ந்தவன் இல்லை; உங்களையெல்லாம் விடத் தாழ்ந்தவன் நான். ஆனாலும் உங்கள் எல்லோருக்கும் நான் உயர்ந்தவனாகத் தெரிவதற்குக் காரணம், என்னுடைய ஆசிரியப்பிரான் என்னைத் தூக்கித் தம் தோள்களில் வைத்துக்கொண்டதே. அதனாலேதான் நான் உங்களுக்கெல்லாம் உயர்ந்தவனாகத் தெரிகிறேன்" என்று, கேட்டவர் உள்ளம் எல்லாம் பரவசப்படும்படி இவர் கூறினார்....உண்மைதானே!

இவரது வாழ்வின் சீருக்கும் சிறப்புக்கும் இவருடைய குருபக்தியே காரணம்; குருசரண மகிமையே இவருக்குச் சித்தியையும் முக்தியையும் அளித்தது எனலாம். ❋